
ஏப்ரல் 200



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் திருச்சி மாவட்டத்தில் நடைபெற்ற
அரசு விழாவில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2034
பங்குனி – சித்திரை
ஏப்ரல் 2003
மலர் : 34 இதழ் : 19 & 20
விலை ரூ.10

இந்த இதழில்...


- நிதிநிலை அறிக்கை 2003–2004 ______ 2
- தொழில் முதலீட்டைக் கவரும் நகரமாக சென்னையை மாற்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழக அரசு திட்டம் ______ 37
- தமிழகத்தில் ஒரு சிலிகான் பள்ளத்தாக்கு ______ 43
- விளையாட்டு மூலம் இளைஞர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த முடியும் ______ 45
- மக்கள் வாழ்வில் வளர்ச்சியை உருவாக்கவே உங்கள் அரசு பாடுபட்டு வருகிறது ______ 49
- பள்ளி வாசல்கள் மற்றும் தர்காகளில் அன்னதானத் திட்டம் ______ 56
- பெண்களை வலிமையானவர்களாக ஆக்கவேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை ______ 57
- சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு தொடர்ந்து இலவச மின்சாரம் கிடைக்க ஆண்டுக்கு ரூ.1000 வீதம் பணஉதவி ______ 65
- உலக ஒற்றுமை – பாரதிதாசன் கவிதை ______ 68
- பெண்மையைப் போற்றுவோம்! பெண் சிசுவதையைத் தடுப்போம்! ______ 69
- புதுயுகம் நோக்கித் தமிழகம் – குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க புரட்சிகர நடவடிக்கை ______ 72
- ஃபுளோரோசிஸ் நோயிலிருந்து பாதுகாப்பும், நலவாழ்வும் ______ 75


**முதல் பக்க அட்டையில்...**

2003–2004ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினை
சட்டப்பேரவையில் சமர்ப்பிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சருடன்
வரும் மாண்புமிகு நிதியமைச்சர்.

**கடைசிப்பக்க அட்டையில்...**

பள்ளிவாசல்கள் மற்றும் தர்காகளில் அன்னதானத் திட்டம்.

220658

# நிதிநிலை அறிக்கை

# 2003-2004

தமிழக அரசின் நிதியமைச்சர்
திரு. சி.பொன்னையன் அவர்கள்,
2002–2003 ஆம் ஆண்டிற்கான
திருத்த மதிப்பீடுகளையும்,
2003–2004 ஆம் ஆண்டிற்கான
வரவு–செலவுத் திட்டத்தையும்,
2003ஆம் ஆண்டு மார்ச் திங்கள்
21 ஆம் நாளன்று
சட்டமன்றப் பேரவை முன்வைத்து
ஆற்றிய உரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசின் 2002–2003 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 2003–2004 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டச் செயற்குறிப்பு–களையும் இந்த மாமன்றத்தின் முன் வைக்க நான் விழைகிறேன். தமிழ்நாட்டு மக்கள், நம்முடைய தொலைநோக்குப் பார்வை கொண்ட, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆற்றல்மிக்க தலைமையின்பால் கொண்டுள்ள தங்களின் அளவிலா நம்பிக்கையையும், அசைக்க முடியாத உறுதிப்பாட்டையும் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியுள்ளனர். சிக்கலானதாகவும், வெல்லற்கரியதாகவும் தோன்றும் இடர்ப்பாடுகளைச் சமாளித்து சரிசெய்யவும், நாட்டிலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்குவதற்கான புதியதோர் வளர்ச்சிப் பாதையை வகுக்கவும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொள்ளும் துணிவான முயற்சிகளுக்கு ஒன்றுதிரண்டு உறுதுணையாக நம்முடைய மக்கள்





நிற்கிறார்கள் என்பதை அண்மையில் நடைபெற்ற சாத்தான்குளம் இடைத்தேர்தலில் பெற்றுள்ள மகத்தான வெற்றி, மிகத் தெளிவாக விளக்கிக் காட்டுகிறது.

2. இந்த அரசு, 2001 மே திங்களில் ஆட்சிப் பொறுப்பேற்ற நாளிலிருந்து, எதிர்கொள்ள வேண்டியிருந்த பல்வேறு சிக்கலான பிரச்சினைகள் குறித்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கறிவர். எளிதில் தீர்வுகாண முடியாத, மிகக் கடுமையான, நிதிநெருக்கடி நிலையைச் சமாளிக்க வேண்டியநிலை, பருவமழை தொடர்ச்சியாகப் பொய்த்ததால் ஏற்பட்ட பரவலான வறட்சிநிலை மற்றும் காவிரி ஆற்றில், கர்நாடக அரசு நீரைத் திறந்துவிடாததால், காவிரி டெல்டா பகுதியில் பயிர்கள் கருகிவிட்டமை ஆகியவற்றை நாம் எதிர்கொள்ள நேர்ந்தது. இத்தகைய மோசமான நிலைமைகள், ஏனைய எந்த ஓர் அரசின் உறுதிப்பாட்டையும் தகர்த்து, வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும் நிலைகுலையச் செய்திருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின், எஃகினையொத்த உறுதியினாலும், எதற்கும் தளராத அவருடைய உறுதிப்பாட்டினாலும் தான், இம்மாநிலம், கடும் இடர்ப்பாடுகள் இருந்த போதிலும், வளர்ச்சிக்கான புதியதொரு செயல்திட்டத்தினை வகுத்துக்கொண்டு, வளர்ச்சி இலக்குகளை எய்துவதற்கான உறுதிகொண்ட நடவடிக்கைகளை எடுக்க முடிந்துள்ளது.

## வறட்சி நிவாரணப் பணிகள்

3. தமிழ்நாடு, அதன் வரலாற்றிலேயே, இதற்கு முன் காணாத மிகவும் கடுமையானதொரு வறட்சியின் பிடியில் சிக்கித் தவிக்கிறது. தென்மேற்குப் பருவமழைக் காலத்தில், நமது மாநிலத்தில் (–)45.8 சதவீதம் குறைவாக மழை பெய்தது. வடகிழக்குப் பருவமழை நன்கு பெய்யத் தொடங்கிய போதிலும், 2002 டிசம்பர் வாக்கில் இந்த பருவமழைக் காலத்தில் ஏற்பட்ட மழைக் குறைவின் அளவு (–)14.7 சதவீதமாகும். 2002 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த மழைக் குறைவின் அளவு (–)25.4 சதவீதம். தொடர்ச்சியாகப் பருவமழை பொய்த்துப்போனதால், பாசனத்திற்கும் குடிநீருக்கும் கடுமையான நீர்ப் பற்றாக்குறை நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்குச் சேரவேண்டிய நீரின் பங்கைக் கருநாடக அரசு, காவிரியிலிருந்து மேட்டூர் அணைக்குத் திறந்துவிடாதது, பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கியுள்ளது. குறுவை பயிரிடப்படாத நிலையில், விவசாயிகள், தற்போது, சம்பா மற்றும் தாளடிப் பயிர்களையும் இழந்துள்ளார்கள்.

4. உருவாகிவரும் வறட்சி நிலையைக் கருதி மாநில அரசு சென்னை மாவட்டத்தைத் தவிர 28 மாவட்டங்களை, வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்து, உரிய நேரத்தில் தக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதனை அடுத்து,




நிலைத்திருக்கக் கூடிய சமுதாயச் சொத்துக்களை உருவாக்குவதன் மூலம் பயனுள்ள வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்; கூடுதலாகச் சத்துணவு வழங்குதல், குடிநீர் வசதி செய்துகொடுத்தல், விவசாயிகளுக்கு ஏனையவகையில் நிவாரணம் அளித்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி அளிக்க இந்த அரசு எடுத்துள்ள குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் குறித்து எடுத்துக்கூற விழைகின்றேன்:–

- ❖ வறட்சியின் கடுமையையும் குறுவைப் பயிருக்குக் காவிரி நீர் திறந்துவிடப்படாததையும் டெல்டா மாவட்டங்களில் உணரத் தொடங்கிய உடனேயே, தஞ்சாவூரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜூன் 2002ல் ஒரு சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி மூன்று டெல்டா மாவட்டங்களுக்கும் ரூ.164.18 கோடி மதிப்பிலான சிறப்புத் துயர் துடைப்புத் திட்டங்களை அறிவித்தார்கள். இத்திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டன.

- ❖ அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர்ப் பற்றாக்குறை பிரச்னைகளைச் சமாளிக்கும் பொருட்டு, ரூ.149.48 கோடிக்கு அரசு ஏற்பளித்துள்ளது. இத்தொகை, ஆழ்துளைக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், சிறிய அளவிலான விசைப் பம்புகளை நிறுவுவதற்கும், கிணறுகளைத் தூர்வாரி ஆழப்படுத்துவதற்கும், குடிநீர் வசதி இல்லாத பகுதிகளுக்குக் குடிநீர்க் குழாய் இணைப்புகளை நீட்டிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நகராட்சி களில், லாரிகள் மூலம் குடிநீர் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ❖ தமிழ்நாட்டில், தென்னை பயிரிடும் விவசாயிகள் பருவ மழை தொடர்ந்து

பொய்த்ததன் விளைவாக, தென்னை மரங்கள் காய்ந்து போய்விட்டதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தகுதிவாய்ந்த பயனாளிகளுக்கு மரக்கன்றுகளை மீண்டும் நடுவதற்கு நிதியுதவி வழங்க அரசு ரூ.30.50 கோடிக்கு ஏற்பளித்துள்ளது.

❖ 2002-ஆம் ஆண்டு தீபாவளியையொட்டி, காவிரி டெல்டா மாவட்டங்களில், 10 இலட்சம் நிலமற்ற வேளாண் தொழிலாளர் குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றுக்கு, ரூ.210 மதிப்புள்ள பரிசுப் பொருள்களைக் கொண்ட பைகளை வழங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திட்டம், நல்ல வரவேற்பைப் பெற்றது. இத்திட்டம், ரூ.21 கோடி மொத்தச் செலவில் செயல்படுத்தப்பட்டது.

❖ மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் உணவுப் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்தை உறுதி செய்ய, டெல்டா மாவட்டங்களில், நிலமற்ற வேளாண் தொழிலாளர் குடும்பங்களுக்காக, சிறப்பு மதிய உணவுத் திட்டத்தையும் தொடங்கிவைத்தார்கள். சமைக்கப்பட்ட உணவிற்குப் பதிலாக, அரிசி வழங்குவது உகந்ததாக இருக்குமென கோரிக்கைகள் வரப்பெற்றதன் அடிப்படையில், இலவச




உணவிற்காக ஏற்கெனவே பதிவு செய்துகொண்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 1.2.2003-ஆம் நாள் முதல், மாதம் ஒன்றுக்கு 30 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இது செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேலைக்கு உணவுத் திட்டம் முழுமையாகச் செயலாக்கத்திற்கு வரும்வரை இது தொடரப்படும்.

❖ சம்பாப் பயிர் பொய்த்ததையொட்டி ரூ.217.09 கோடி செலவில், காவிரி டெல்டா பகுதியின் 9 மாவட்டங்களில் வேலைவாய்ப்பு உருவாக்குவதற்கான சிறப்பு நிவாரணத் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட 28 மாவட்டங்களிலும், ரூ.341.92 கோடி செலவில் வேலைவாய்ப்பு உருவாக்கும் பெருந்திட்டம் ஒன்றை அரசு செயற்படுத்தும் என்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். வேலைக்கு உணவு வழங்கும் இந்தச் சிறப்புத் திட்டத்தில், ரொக்கத் தொகையும் அரிசியும் சேர்த்து ஊதியமாக வழங்கப்படும். ரொக்கத் தொகை வழங்குவதற்கான மொத்த ஒதுக்கீடு ரூபாய் 85.48 கோடிகள் ஆகும். மேலும் ரூ.256.44 கோடி மதிப்புள்ள அரிசியும் பயனாளிகளுக்கு வழங்கப்படும். பயிர்ச்சேதம் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள்பற்றிய மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது. மைய அரசினால் அறிவிக்கப்படும் நிவாரண உதவி வகைப்பாடு மற்றும் தொகையின் அளவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கான நிவாரணத் திட்டம் விரைவில் அறிவிக்கப்படும்.

5. 2002-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தென்மேற்கு பருவமழை பொய்த்துப் போனது, அதனால் ஏற்பட்ட பாதிப்பு, அதற்கான நிவாரண உதவி ஆகியவை பற்றிய விரிவான அறிக்கை ஒன்றினை மைய அரசிடம் தமிழ்நாடு அரசு சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில், ரூ.1434 கோடிக்கான ரொக்க உதவி, வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஊதியமாக வழங்க 5.5 இலட்சம் டன் அரிசி ஆகியவற்றை வழங்குமாறு மைய அரசை தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டிருந்தது. 2002–2003-ஆம் ஆண்டு தொடக்கத்தில் இடர் நிவாரண நிதியில் எஞ்சியிருந்த தொகையை உள்ளடக்கிய ரூ.228.30 கோடிக்கு மைய அரசு ஏற்பளித்தது. நிகரமாக மைய அரசு வழங்கியது ரூ.133.06 கோடி ரொக்கத் தொகையும் 50,000 டன் அரிசியும் மட்டுமே.

6. வடகிழக்குப் பருவமழை பொய்த்துப்போன உடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வறட்சி நிலையின் கடுமையினை மாண்புமிகு பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். அவரது கோரிக்கையை ஏற்று, வறட்சியின் கடுமை மற்றும் பாதிப்பு அளவு குறித்து மதிப்பீடு செய்வதற்காக, நான்கு உறுப்பினர் கொண்ட மற்றொரு மத்தியக் குழுவை, 2003, பிப்ரவரியில் மத்திய அரசு அனுப்பியது. இவ்வரசு அளித்த வறட்சி குறித்த விரிவான அறிக்கையில், சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்குவதற்கான ரூ.54.69 கோடியுடன் சேர்த்து, தமிழ்நாட்டிற்கு ரூ.2093.92 கோடி அளவிற்கு நிதியுதவி வழங்க வேண்டுமென மைய அரசை நாம் கேட்டுள்ளோம். வறட்சியின் தாக்கத்தைத் தணிப்பதற்காக, கூடுதலாக 9 இலட்சம் டன் அரிசி வழங்குமாறு மத்திய அரசை நாம் கேட்டுக்கொண்டுள்ளோம். இதில் 75,000 டன் அரிசியை இதுவரை மைய அரசிடமிருந்து பெற்றுள்ளோம். ஆக நாம்



இதுவரை பெற்றுள்ள அரிசியின் மொத்த அளவு 1.25 இலட்சம் டன் ஆகும். மற்ற அனுமதிகளை எதிர்நோக்கியுள்ளோம். இவ்வாறு, இரண்டு அறிக்கைகளில் மொத்தம் ரூ.3527.92 கோடி ரொக்க உதவியையும் 14.5 இலட்சம் டன் அரிசியையும் மைய அரசிடம் நமது அரசு கேட்டுள்ளது. மாநில அரசு பல்வேறு நிவாரணப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள இயலும் வகையில், 2003–2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.276 கோடி நிதியொதுக்கியுள்ளோம்.

## நிதி நிலைமை

7. இந்த அரசு எதிர்நோக்கிய சிக்கலான நிதிப் பிரச்சினைகள் குறித்தும், நாம் செயல்படுத்திய நிதிச் சீர்திருத்தம் குறித்த துணிவான திட்டங்கள் பற்றியும், இனி மேற்கொள்ள வேண்டிய முன்னேற்ற நடவடிக்கைகள் பற்றியும் இந்த உரையுடன் கூடிய இணைப்பில் கோடிட்டு காட்டப்பட்டுள்ளது. இவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்ட மிகத் துணிவான மற்றும் தொலைநோக்குடைய இந்தச் சீர்திருத்தங்கள் மட்டும் இல்லாதிருந்தால், தமிழ்நாடு, மீள முடியாத நிதிச் சீரழிவுப் பாதாளத்தில் தள்ளப்பட்டு, வளர்ச்சிப் பணிகளைக் கைவிட நேர்ந்திருக்கும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

8. தமிழ்நாட்டில் முன்னெப்போதும் இருந்திராததும், பெருமளவிலுமான, இன்று நாம் காண்கிற இந்தப் பொது நிதிநிலைச் சீரழிவுக்கு, முந்தைய அரசு பிரச்சினையின் கடுமையை உணராததும் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்காததுமே காரணங்கள் ஆகும். எனவே இப்பிரச்சனைகளுக்கு எளிதான உடனடித் தீர்வுகள் எவையுமில்லை. மாநிலத்தின் சீர்திருத்தத்தின் முன்னுரிமைகளையும் வளர்ச்சிப் பணிகளின் இன்றியமையாமையையும் ஒருங்கிணைக்கும் பெரும் பொறுப்பு இவ்வரசுக்கு உள்ளது. ஏழை மற்றும் வறியோரின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் வழிசெய்யும் வகையில் முதலீடுகளையும், சமன்பாட்டுடன் கூடிய வளர்ச்சியையும் ஊக்குவிக்க வேண்டியுள்ளது. மாநில அரசின், பொதுக் கடன் பற்றிய முறையான நிருவாகம், கடன்திருப்புகை மற்றும் வட்டிச் செலவுகளையும், ஓய்வூதியப் பொறுப்புகளையும் கட்டுப்படுத்துதல் தொடர்பான முக்கியமான பிரச்சினைகளும் நம்மை எதிர்நோக்கி உள்ளன. முந்தைய அரசு முடக்கி வைத்துள்ள அரசுப் பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதிய நிலுவைத் தொகைகளை வழங்குவது குறித்த பிரச்சினை, நிதிநிலை சீரமைப்பு பற்றிய நடவடிக்கைகள் மற்றும் செயலாக்கத்தின் வேகத்திற்கு ஒரு பெரும் சவாலாக இருக்கிறது. இதனால், நிதிச் சீர்திருத்த நடவடிக்கைகளை ஒரு நடுத்தரக் காலத் திட்டமாகச் செயல்படுத்தும் தேவை ஏற்பட்டுள்ளது.

9. வளர்ச்சிப் பணிகளை அரசு செயல்படுத்த, நிலையான நிதி நிலைமை அத்தியாவசியத் தேவை என்பதனால் நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமை (Fiscal Responsibility) பற்றிய சட்ட முன்வடிவு ஒன்றை நடப்புக் கூட்டத் தொடரில் கொண்டுவர நாங்கள் முடிவு செய்துள்ளோம். இது, மாநில அளவிலான நிதி நிர்வாகம் குறித்த முக்கியமான கொள்கைகளையும், இனி வரும் காலங்களில் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டிய கட்டுப்பாடுகளையும் கொண்டதாக இருக்கும். நாங்கள் எதிர்கொண்டது போன்ற மிகமோசமான நிதிப் பிரச்சினைகளை, எதிர்கொள்வதிலிருந்து வருங்கால அரசுகளை இது காப்பாற்றும்.

10. நிதிச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான தக்க உறுதிப்பாடு முந்தைய அரசிடம் இல்லாமலிருந்ததால், உலக வங்கி போன்ற வெளிநாட்டு நிதியுதவி முகவரமைப்புகள் தமிழகத்தை ஒதுக்கத் தொடங்கின என்பதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். அண்டை மாநிலங்கள் இத்தகைய அமைப்புகளிடம் இருந்து நிதியுதவி பெற்று பெரிய அளவிலான திட்டங்களை மேற்கொள்ளும் அதே வேளையில் தமிழ்நாடு பின்தள்ளப்பட்டது. தமிழ்நாட்டின் நிதிவளத்தை மீளப் பெறுவதற்கும் மாநிலத்தை உயர் வளர்ச்சிக்கேற்ற பாதையில் இட்டுச் செல்லவும் ஏற்ற தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான உறுதிப்பாட்டினை இவ்வரசு காட்டியுள்ளது. நமது வளர்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவு நல்க உலகவங்கி இப்போது ஆர்வம் தெரிவித்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பொருளாதார மறுசீரமைப்பு உதவிக்கான, உலக வங்கியிடம் வைத்துள்ள நம்முடைய கோரிக்கைக்கு மத்திய அரசு அதன் ஆதரவைத் தெரிவித்துள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையில் இந்த உதவிக்கான முதல் கட்டமாக, ரூ.1000 கோடி நிதி விடுவிக்கப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில், நீண்ட காலமாக ஏற்பளிக்கப்படாமல் நிலுவையிலுள்ள பல்வேறு துறைகளிலான வளர்ச்சித் திட்டங்களை பரிசீலிக்கவும் உலக வங்கி இப்போது முன்வந்துள்ளது. தமிழ்நாடு சாலைத் துறை திட்டம் (ரூ.2118 கோடி), நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டம் II (ரூ.2900 கோடி), வறுமை ஒழிப்புத் திட்டம் (ரூ.1156 கோடி), மருத்துவ அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டம் (ரூ.650 கோடி), தமிழ்நாடு ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கல்–துப்புரவுத் திட்டம் (ரூ.2300 கோடி) மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்–III (ரூ.750 கோடி) ஆகியவை இதில் அடங்கும். சென்னைப் பெருநகர் போக்குவரத்துத் திட்டம், தமிழ்நாடு முதன்மைத் துறை (Primary Sector) மேம்பாட்டுத் திட்டம் போன்ற பிற புதிய திட்டங்களும் உலகவங்கியின் பரிசீலனைக்கு எடுத்துச் செல்லப்படும். ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank) மற்றும் பன்னாட்டு கூட்டுறவுக்கான ஜப்பான் நாட்டு வங்கி (Japan Bank for International

Cooperation) போன்ற ஏனைய வெளிநாட்டு முகவரமைப்புகளின் பரிசீலனைக்கு எடுத்துச்செல்லக் கூடிய ஏனைய திட்டங்களையும் நாங்கள் வடிவமைத்து வருகிறோம். தமிழ்நாடு மீண்டும் வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டுவரப்பட்டதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் உறுதியான நடவடிக்கையும் தெளிவான தொலைநோக்குமே காரணமாகும் என்பதை எதிர் காலம் நினைவு கூறும்.

### பன்னிரண்டாவது நிதி ஆணையம்

**11.** பன்னிரண்டாவது நிதி ஆணையம் ஏற்படுத்தப் பட்டுள்ளதை இவ்வரசு வரவேற்கிறது. பதினோராவது நிதி ஆணையத்தின் நிதிப் பகிர்மானத் தீர்வுகளின் குறைபாடுகளினால்தான் பெரும்பாலான மாநிலங்கள் கடுமையான நிதிநிலைமையை எதிர்கொண்டுள்ளன. அனைத்து மாநிலங்களின் குறைகளைப் பன்னிரண்டாவது நிதி ஆணையம் தீர்க்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**12.** பெருவாரியான மாநிலங்கள் தற்போது சந்தித்துவரும் தொடர்ச்சியான நிதி இடர்ப்பாடுகள் தீவிரமாகக் கவனிக்கப்பட வேண்டும். பன்னிரண்டாவது நிதி ஆணையம், மத்திய வரி வருவாயில் பகிர்ந்தளிக்கப்படக்கூடிய தொகுப்பில் மாநிலங்களின் தற்போதைய அளவான 29.5 சதவீதத்தைக் கணிசமாக உயர்த்த வேண்டும். வளர்ச்சித் திட்டங்களை பெருமளவில் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை மாநிலங்களுக்கு ஒப்படைக்கப் பட்ட இத்தருணத்தில், இதைக் கண்டிப்பாக நிறைவேற்றி ஆகவேண்டும். மாநிலங்களுக்கிடையே உள்ள பகிர்வு குறித்து வழங்கப்படும் பரிந்துரைகளில், பன்னிரண்டாவது நிதி ஆணையம் புதிய முன்னேற்றமான கோட்பாடு ஒன்றை வகுக்க வேண்டும். கடந்த காலத்தில் அமைக்கப்பட்ட பல நிதி ஆணையங்கள், நன்கு செயல்படும் மாநிலங்களின் பங்கை எடுத்து, பின்தங்கிய மாநிலங்களுக்கு அப்பங்கை அளிக்க வகைசெய்தன. இந்தச் செயல்முறை நிறுத்தப்பட வேண்டும். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2002-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தேசிய வளர்ச்சிக்குழு கூட்டத்தில் ஆற்றிய தமது உரையில், இப்பொருள் தொடர்பான சிந்தனையில் முழுமையானதொரு மாற்றம் வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுத்திறன் மற்றும் திறமையான நிதி நிருவாகம் ஆகியவற்றுக்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். பொருத்தமான நிதி மேலாண்மையைக் கையாண்டு வரும் மாநிலங்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், பொருந்திய கடன் நிவாரணத் திட்டம் ஒன்றினை பன்னிரண்டாவது நிதி ஆணையம் வெளியிட வேண்டும், விரிவாக முன்மதிப்பீடு செய்து, பன்னிரண்டாவது நிதி ஆணையத்திடம், குறிப்பிட்ட காலத்தில், நாங்கள் மாநிலத்தின் அறிக்கையை அளிக்கவுள்ளோம்.

### பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம்

**13.** 2002–2007-ஆம் ஆண்டு இடையிலான பத்தாவது ஐந்தாண்டு திட்டகாலத்திற்கு, தமிழ்நாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் ரூ.40,000 கோடி ஒதுக்கீடு பெற்று வந்துள்ளார்கள் என்பதை அறிந்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். 2002 ஜூன் திங்களில், மத்திய திட்டக்குழு துணைத் தலைவருடன் நடைபெற்ற விவாதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்துக் கொண்ட அயராத முயற்சியின் பலனாகத்தான் இது கிட்டியுள்ளது. புதுடில்லியில், 2002, டிசம்பர் திங்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி குழுக் கூட்டத்தில் இது உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு ஏற்கெனவே குறைந்து மேலும் தடுமாறும் நிலையிலிருக்கும்போது, வறுமை ஒழிப்பு, முதன்மைத் துறையில் விரைந்த வளர்ச்சி, உற்பத்தித் துறையில் வளர்ச்சியின் வேகத்தை மீண்டும் கொண்டுவருதல், பணிகள் துறையில் ஒரு புதிய எழுச்சி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பதால் தமிழ்நாடு ஒரு புதிய வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்வதை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் உறுதி செய்துள்ளார்கள். சென்ற வரவு–செலவுத் திட்ட அறிக்கையில் நான் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டம் முழுமையாக மாநிலத்தின் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளது. பத்தாவது திட்டம் 8 சதவிகித ஒட்டுமொத்த வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த இலக்கை எய்துவதற்கு நிதிநிலை வலுப்படுத்தலும் தீவிர வளர்ச்சி வேகமும் இன்றியமையாதனவாகும்.

### ஆண்டுத் திட்டம் - 2003-2004

**14.** 2001–2002-ஆம் ஆண்டில், ரூ.6040 கோடி என்று ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவை முழுமையாக எய்த முடியாமல், அதனை ரூ.5200 கோடி என்று குறைக்க வேண்டிய கட்டாயத்திற்கு அரசு உள்ளாக்கப்பட்டது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இத்தகைய நிலைமையைத் தவிர்க்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான், 2002–2003-ஆம் ஆண்டில், நிதிச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால்தான், நடப்பாண்டிற்கான ரூ.5750 கோடி அளவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டு அளவை, முழுமையாக எய்த முடியும் என்று, இப்போது உறுதிபட அறிவிக்க நம்மால் முடிந்துள்ளது. இந்தப் புதிய நம்பிக்கையுடன்தான் 2003–2004-ஆம் ஆண்டிற்குப் பெரிய அளவிலான திட்ட ஒதுக்கீட்டை நிறைவேற்றக் கருதியுள்ளோம். 2003–2004 ஆம் ஆண்டிற்கு, ரூ.7000 கோடி என்ற திட்ட ஒதுக்கீட்டை எய்த நாம் இலக்கு நிர்ணயித்துள்ளோம் என்பதை அறிந்து, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவருடன் விவாதித்த பிறகு இது உறுதி செய்யப்படும்.



### காவல், சிறைச்சாலைகள் மற்றும் தீயணைப்புப் பணிகள்

**15.** சட்டம் ஒழுங்கை உரியவாறு பராமரிப்பது, விரைவான சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். மாநிலக் காவல் துறைக்குப் புதிய தொரு தொலைநோக்குப் பார்வை, இலக்கு மற்றும் செயல் நோக்கத்தை அளிப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன் எப்போதும் இராத முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

**16.** காவல் படையை நவீன மயமாக்கும் திட்டத்தின்கீழ், ஆயுதங்கள் மற்றும் படைக்கலன்கள், சாதனங்கள், வண்டிகள், தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காகவும், காவலர் குடியிருப்புகள் மற்றும் ஏனைய கட்டிடங்கள் கட்டுவதற்காகவும் 2001–2003 என்ற இரண்டாண்டு




கால அளவிற்கு ரூ.271.84 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 188 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் தொடங்க நாம் பொறுப்பேற்றுக் கொண்டதையொட்டி, 148 புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்படத் தொடங்கிவிட்டன.

**17.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நல நடவடிக்கைகள் காரணமாக, மாநிலக் காவல் படையின் கட்டுக்கோப்பு குறிப்பிடத் தகுந்த அளவுக்கு மேம்பட்டுள்ளது. முன் எப்போதும் இல்லாத வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஐந்து முழு நாட்கள், மாநில காவல் துறையின் அதிகாரிகள் மற்றும் ஆண், பெண் காவலர்களின் குறைகளைக் கேட்டறிந்து அவர்களின் குறிப்பிட்ட குறைகளைத் தீர்த்துவைத்தார்கள். குறைதீர்க்கும் அமைப்பு முழுமையாகச் சீரமைக்கப்பட்டு, காவலர்களின் கட்டுக்கோப்பை மேம்படுத்துவதில் அக்கறை உள்ள அமைப்பாக ஆக்கப்பட்டது. தனி நேர்வுகளில் நிதி நிவாரணம் வழங்குவது மட்டுமின்றி, காவல்துறைப் பணியாளர்களின் குழந்தைகள் உயர் கல்வியைத் தொடர இயலும் வகையில், நடப்பாண்டில், தமிழ்நாடு காவலர் நல நிதியிலிருந்து ரூ.1.38 கோடி மானியம் வழங்கப்பட்டது. 2002–2003 ஆம் ஆண்டில், காவல் துறையினர் களுக்கும், அவர்தம் குடும்பத்தினர்களுக்கும், சிறந்த மருத்துவ வசதிகளை அளிப்பதற்காக, தமிழ்நாடு காவலர் சுகாதாரத் திட்டத்தின் கீழ் ரூ.1.75 கோடி செலவிடப்பட்டது. மகளிர் காவல் பணியாளர்களின் குழந்தைகள் முறையாகப் பேணி வளர்க்கப்படுவதை உறுதிசெய்ய, அவர்களின் பயனுக்காக, ஆறு காவல் துறை ஆணையாளர் அலுவலகங்களில் மழலையர் காப்பகங்களை அரசு தொடங்கியுள்ளது. காவலர் வீட்டு வசதித் திட்டம், நாட்டிலேயே மிகச் சிறந்த திட்டமாகத் திகழ்கிறது. இதன் பயனாகத் தமிழ்நாட்டில், காவலர்களுக்கிடையே, வீட்டு வசதி குறித்த மன நிறைவு வீதம், நாட்டிலேயே மிகச் சிறப்பான அளவில் தேசிய வீதத்தைக் காட்டிலும் அதிகமாக உள்ளது.

**18.** மாநில காவல் துறைக்கான மொத்த ஒதுக்கீடு, நடப்பாண்டில், திருத்த மதிப்பீடான ரூ.1291.49 கோடியிலிருந்து, 2003–2004 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1391.14 கோடியாக உயர்ந்துள்ளது. காவல் படையை நவீன மயமாக்குவதற்கு நாங்கள் உயர் முன்னுரிமை அளித்துள்ளோம். அடுத்த நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ், ரூ.130.98 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**19.** சிறைவாசிகள் விரைவில் திருந்தி மறுவாழ்வுபெற்று மீண்டும் சமுதாய நீரோட்டத்தில் கலந்து வாழ்வதற்கு சிறைகளில் உகந்த வாழ்க்கை வசதிகள் இருக்க வேண்டியது மிகவும்



அவசியமானதாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ள பெரியதொரு திட்டத்தின்கீழ் சென்னையில் உள்ள மத்தியச் சிறை, மிக நவீன வசதிகளுடன் அதிக பரப்பளவில், புழலில் அமைந்துள்ள வளாகத்திற்கு மாற்றப்படும். 2003–2004 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில், விரிவான சிறைத்துறை சீர்திருத்தங்களுக்கான ஒரு தொலை நோக்குத் திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசின் இசைவை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

20. தீயணைப்பு–மீட்புப் பணித் துறையிடம் உள்ள வசதிகளைப் பெருக்க அரசு கருதியுள்ளது. தீயணைப்பு–மீட்புப் பணித் துறை நல்கிவரும் பணிகளை மேம்படுத்துவது குறித்து ஆய்வு செய்து பரிந்துரைக்க சென்னை உயர் நீதிமன்ற ஒய்வுபெற்ற நீதிபதி தலைமையில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி ஆணையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ரூ.4.20 கோடி செலவில், ஏனையவற்றுடன் தீயணைப்பு வண்டிகள் (fire tenders) வாங்குதல்போன்ற புதிய கொள்முதல் திட்டத்தை அடுத்த நிதியாண்டிலிருந்து செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## 2003-2004 ஆம் ஆண்டிற்கான இன்றியமையாத வளர்ச்சித் தேவைகள்

21. மனத்திண்மையுடனும், துணிவுமிக்க வகையிலும் இந்த அரசால் வகுக்கப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டப் பொருள்நிரல், 2003–2004-ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தின் மையக் கருத்தாக அமையும். இவற்றின் முக்கிய கூறுகள் பின்வருமாறு அமையும்.

- ❖ வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலரியல் போன்ற துணை வேளாண்மைப் பணிகள், கால்நடை வளர்ப்பு, மீனளம், பாசனம், ஊரக வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய முதன்மைத் துறைக்குப் புத்துணர்வு அளித்தல்,



- ❖ இரண்டாம் நிலை சீர்திருத்தங்களை தீவிரமாகச் செயற்படுத்துவதன் மூலம் உற்பத்தித் துறைக்குச் சிறப்பான உந்துதல் அளித்தல்.
- ❖ சென்னைப் பெருநகர் பகுதிக்குச் சிறப்புக் கவனத்துடன் கூடிய விரைவான, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மாநிலத்தில் உருவாக்குதல்.
- ❖ வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்குவதற்காக, தகவல் தொழில்நுட்பவியல், சுற்றுலா ஆகியவற்றை உள்ளடக்கிய பணிகள் துறைகளுக்குச் சிறப்புக் கவனம் செலுத்துதல்.
- ❖ மனித வள மேம்பாட்டிற்குப் புதிய முக்கியத்துவம் அளித்தல்.
- ❖ ஏழைகளுக்கும் வறியவர்களுக்கும் ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்புறுதியும் சமூக உத்திரவாத ஏற்பாடும் அமைத்தல்.

இந்த அடிப்படைக் கொள்கைகள் 2003–2004 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தின் அடிப்படையாக அமைந்துள்ளன. இந்த விரிவான பின்னணியில் இவ்வரசின் குறிப்பான திட்டங்கள் மற்றும் திட்டப்பணிகள் குறித்து எடுத்துரைக்க நான் விழைகிறேன்.

### முதன்மைத் துறை

22. 1960-ஆம் ஆண்டுகளில், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில், முதன்மைத் துறையின் பங்கு, 50 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்த நிலையிலிருந்து. 2000–2001 ஆம் ஆண்டில் 17 சதவீதமாகக் குறைந்துவிட்டது. ஆனால் முதன்மைத் துறையைச் சார்ந்திருக்கும் மக்கள் தொகை சதவீதமோ, 62 சதவீதம் என்ற உயர் அளவில் இருந்துவருகிறது. ஒன்பதாவது திட்டக்கால அளவில் (1996–2001) வேளாண்மைத் துறையில் தேக்கநிலை ஏற்பட்டதாலும் அதனைத் தொடர்ந்து பருவமழை பொய்த்துப் போனதாலும் புதிய வளர்ச்சி அணுகுமுறை ஒன்றை வகுக்க வேண்டியது அவசியமாகியுள்ளது. தரிசு நில மேம்பாட்டில் தனிக் கவனம், நீர்வள ஆதாரங்களைச் சரியான முறைகளில் பயன்படுத்துதலுடன் இணைந்த நீர்வள ஆதாரமேம்பாடு, நீரை ஒருங்கிணைந்த முறையில் பயன்படுத்துதல், விளைச்சலைப் பெருக்குவதற்கும் நோய்ப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் ஏற்ற நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், தோட்டக்கலை, மலரியல் போன்றவற்றை மேம்படுத்தி, மதிப்புக்கூட்டிய பயிர்வகைகளைச் சாகுபடி செய்யுமாறு பயிரிடு முறைகளை மாற்றி அமைத்தல் ஆகியவை இதனுள் அடங்கும்.

23. இத்துறையில் புதிய வளர்ச்சி வேகம் உருவாகும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்



ஒட்டுமொத்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டமொன்றை அறிவித்துள்ளார்கள். இத்திட்டம் மூன்று அம்சங்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக, அனைத்து கிராமங்களிலும் உள்ள தனிப்பட்ட உழவர்களுக்குச் சொந்தமான நிரந்தரமான மற்றும் நடப்பு நிலவரப்படியான தரிசு நிலங்களை, வேளாண்–ஆய்வு அடிப்படையிலான (Agri-clinical) அணுகுமுறைமூலம் ஆதாயம் தரத்தக்க பொருளாதார நடவடிக்கைகளின் கீழ் கொண்டு வரவேண்டும். இத்திட்டம், 2003–2004-ஆம் ஆண்டில் தீவிரமாக்கப்படும். கூட்டு நிறுவனங்களையும், சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளையும், தரிசுநில மேம்பாட்டுப் பணிகளிலும், அவற்றோடு இணைந்த ஊரகத் தொழில்களிலும் ஈடுபடச் செய்வது இதன் இரண்டாவது அம்சமாகும். இம்மாநிலத்தைச் சேர்ந்த 385 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும், குறைந்தது ரூபாய் ஒரு கோடி மொத்த முதலீட்டுடன், வேளாண்மை அடிப்படையில் அமைந்த தொழில்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களை மேம்படுத்துவதற்கு, தனிக் கவனம் செலுத்துவது, மூன்றாவது அம்சத்தின் நோக்கம் ஆகும். வரும் ஆண்டில், இம் மூன்று அம்சங்கள் தொடர்பான பணிகளிலும் தீவிரமான கவனம் செலுத்தி முன்னேற்றம் காண நாங்கள் திட்டமிட்டுள்ளோம். வேளாண்மை–ஆய்வு அணுகுமுறை மற்றும் பங்கேற்பு அடிப்படையில் அமைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூபாய் 25 கோடி வழங்க, இந்த வரவு–செலவுத் திட்டம் வகை செய்கிறது. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்படும் புதிய தொழில் பிரிவுகளுக்கு, மூலதன உதவித் தொகையாக, ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யவும், இந்த வரவு–செலவுத் திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ், இது வரையில், ரூ.267 கோடி திட்டச் செலவில், 220 வளர்ச்சி வட்டாரங்களை உள்ளடக்கிய 320 செயற்குறிப்புகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை ரூ.23.14 கோடி அளவிலான 33 தொழில் பிரிவுகளைத் தொடங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

24. புதிய தொழில்நுட்பத்தை ஈர்த்துத் தக்கவைத்துக் கொள்வது, வேளாண்மை வளர்ச்சியில் ஒரு முக்கிய அம்சமாக உருவாகி வருகிறது. நுட்பமான சாகுபடி முறைகளைக் (Precision farming) கையாளுவது தற்போதைய முக்கிய குறிக்கோளாக அமையவேண்டும். இலாபகரமான நீர் பயன்பாட்டு உத்திகளைக் கையாண்டு, வெற்றி கண்டுள்ள இஸ்ரேல் நாட்டு அனுபவத்தின் அடிப்படையில், திட்டம் ஒன்றை வரும் ஆண்டில், தருமபுரி மாவட்டத்தில், ரூபாய் 2 கோடி செலவில் செயல்படுத்தக் கருதியுள்ளோம். இதில் கிடைக்கும் அனுபவத்தின் அடிப்படையில், பிற மாவட்டங்களுக்கும், தக்க திட்டங்களைத் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் உருவாக்கும்.




25. தோட்டக்கலை மேம்பாடு, முதன்மைத் துறைக்கு வளர்ச்சி இயந்திரமாக அமையும். தோட்டக்கலை வளர்ச்சி இயக்ககத்தின் தொடர் நடவடிக்கையாக, மா, வாழை, முந்திரி, வீரிய ஒட்டுவகை காய்கறிகள், மூலிகை மற்றும் வாசனைச் செடிகள், மலர்கள் ஆகியவற்றின் உற்பத்தியையும், உற்பத்தித்திறனையும் பெருக்கும் வகையில் தனித்




தனியான பயிர்வளர்ச்சி இயக்ககங்களை நிறுவ இவ்வரசு முடிவெடுத்துள்ளது. ஜட்ரோபா (Jat-ropha) பாரடைஸ் (Paradise) மரம் போன்ற உயிரி எரிபொருள் தாவர வகைகளுக்கான சிறப்பு இயக்கத்தையும் தொடங்குவோம். ஓசூர், நீலகிரி மற்றும் தேனி மாவட்டங்களில், மூன்று வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை அமைக்கிறோம் என்பதை, மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில், ரூ.15.89 கோடி செலவிலும், தேனி மாவட்டத்தில் ரூ.24.60 கோடி செலவிலும் மேற்கொள்ளப்படும்.

26. நிலமேற்பரப்பு நீர் ஆதாரங்கள் அனைத்தும் முழுமையாக பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில், பாசன நீர்ப்பிடிப்புப் பகுதிகளை மேலும் விரிவாக்குவதற்கு புதிய உத்திகளை வகுக்க வேண்டியுள்ளது. தற்போது உறுதி செய்யப்பட்டுள்ள, பாசன வசதிகளின் அளவைக் கூட தொடர்வது பெரும் பிரச்சினையாகி வருகிறது. ரூ.2900

கோடி செலவிலான நதிநீர்ப் பிடிப்புப் பகுதியை ஆதாரமாகக் கொண்ட நீர்த்தேக்கங்கள், நதிகள் மற்றும் நீர்ப்பாசன அமைப்புகளை மேம்படுத்தும் நீர் ஆதார தொகுப்புத் திட்டம் II-க்கு நிதியுதவி அளிக்குமாறு உலக வங்கியை இவ்வரசு அணுகியுள்ளது. உலக வங்கியின் ஏற்பினைப் பெறுவதற்கு மேலும் சில காலம் ஆகுமென எதிர்பார்ப்பதால், ரூ.100 கோடி ஒதுக்கீட்டில் நடைமுறையிலுள்ள நீர் ஆதார தொகுப்புத் திட்டம் I க்கு ஓராண்டுக்கு நீட்டிப்பு நல்குமாறு உலக வங்கியை நாங்கள் கேட்டுள்ளோம். இந்த நீட்டிப்பிற்கு உலக வங்கியின் ஒப்புதல் கிடைக்குமென நாங்கள் நம்புகிறோம்.

27. மாநிலத்தில் பாசன வளத்தை அதிகரிப்பதற்கு 2003–2004 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டம் உயர் முக்கியத்துவத்தை அளிக்கிறது. சொட்டுநீர் பாசனத் திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.11.79 கோடி அளவிலுள்ள ஒதுக்கீடு 2003–2004–ஆம் ஆண்டில் ரூ. 30 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. பண்ணை பம்புசெட்டுகளின் எரிசக்தி–சிக்கன–செயல்திறனைப் பெருக்கிக் கொள்வதற்கும், பாசன நிலப்பரப்பை




அதிகரித்து நல்ல மகசூலைப் பெறும்வகையில் தக்க தொழில்நுட்ப உதவிகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கும், ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் புதியதொரு திட்டம் வருமாண்டில் செயல்படுத்தப்படும். சிறு மற்றும் குறு விவசாயிகள், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்துள்ளபடி, தமிழ்நாடு மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய மின்கட்டணத்தைச் செலுத்த உதவி செய்யும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளதையொட்டி, 2003–2004–ஆம் ஆண்டில் அவர்களுக்கு நேரடியாக பண உதவி அளிக்கும் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். வருமாண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இந்நோக்கத்திற்காக ரூ.100 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகளின் நலன் எப்போதும் பாதுகாக்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும்.



28. வறட்சி நிவாரண நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக வேலைக்கு உணவு அளிக்கும் சிறப்புத் திட்டம், அரசால் தொடங்கப்பட்டுள்ளது. 2003–2004–ஆம் ஆண்டில், பொதுப் பணித்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பாசனத் தொகுப்புக்கு உட்பட்ட மற்றும் அவ்வாறு உட்படாத நீர்நிலைகளைத் தூர்வாரி புதுப்பிப்பதற்கு, ரூ.100 கோடி மொத்த ஒதுக்கீட்டுடன் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் ரொக்க உதவி அளிப்பதற்கு, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது, ஊதியத்தின் மறுபகுதியாக ரூ.75 கோடி அளவில் அரிசி வழங்கும் திட்டத்துடன் இணைந்திருக்கும். கிராம ஊராட்சிகளில் சிறு குளங்கள் மற்றும் 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டினைக் கொண்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிகள் ஆகியவற்றை தூர்வாரி மேம்படுத்த, வருமாண்டில் ரூ.50 கோடி செலவிலான திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டம் ரூ.37.50 கோடி மதிப்பிற்கு ஒரு பகுதியாக அரிசியை ஊதியமாக வழங்கும் வகையில் அமையும். மறு பகுதியாக ரொக்கத் தொகை வழங்குவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.12.50 கோடி ஒதுக்கப் பட்டிருக்கிறது. 2003–2004 ஆம் ஆண்டில், ரூ.24.36 கோடி திட்டச் செலவில், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏரிகளிலும், ஏனைய நீர் நிலைகளிலும், தூர்வாருவதற்கான திட்டம் வரும் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

29. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் நகர்ப்புறங்களிலும் கிராமப் புறங்களிலும் மழை நீர் சேகரிப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். மாபெரும் தண்ணீர் தட்டுப்பாட்டை மாநிலம் எதிர்நோக்கியுள்ள சூழலில் மழை நீரை நாம் முறையாகப் பயன்படுத்துவதை உறுதி செய்யவேண்டும். பாசனத்திற்காக மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை மேம்படுத்த தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது. மொத்தம் உள்ள 1.59 இலட்சம் பயன்படுத்தப்படாத கிணறுகளை நாம் மழை நீர்




சேகரிப்பிற்காகப் பயன்படுத்த முடியும். வரும் ஆண்டில் அதற்கான திட்டத்தை நாம் செயல்படுத்துவோம். வேளாண் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் விவசாயிகளின் கூட்டு முயற்சியோடு இது நிறைவேறும். இதுபோலவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவிரி டெல்டா பகுதிகளில் கடந்த குறுவைச் சாகுபடியின் போது தொடங்கிய பண்ணைக் குட்டைகள் திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

30. காவிரி டெல்டா பகுதிகளில் குறிப்பாகக் கடைக்கோடிப் பகுதிகளில் பண்ணைப் பாசனத்தைச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தும் வகையில் பாசனக் கட்டுப்பாடு அமைப்புகளின் மறுபயன் திட்டத்தை நாம் தொடங்க உள்ளோம். டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் கிடைக்கும் தண்ணீரை, சிறப்பாகப் பயன்படுத்திக்கொண்டு சிறந்த விளைச்சலைப் பெற தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் உருவாக்கி உள்ள எளிய முறைகள் பிரபலப்படுத்தப்படும். கடைக்கோடிப் பகுதிகளில் ஆழ்குழாய் மூலம்நீர் இறைக்கும் திட்டம் மேலும் சிறப்பாகச் செயல்படுத்தப்படும்.

31. பாசனம் குறித்த ஒதுக்கீடு, நடப்பாண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ.668.94 கோடியாக இருக்க, 2003–2004 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ.748 கோடியாக இருக்கும்.

32. கால்நடை வளர்ப்பு, ஊரக மக்களின் வாழ்க்கையில் ஓர் இன்றியமையாத அங்கமாகத் திகழ்கிறது. ஊரகப் பொருளாதாரத்தில் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்துவதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது. கால்நடை வளர்ப்பை, வேளாண்மையுடன் ஒருங்கிணைத்து, பண்ணை வீட்டுப்பயிர் வளர்ப்பு முறையை வரும் ஆண்டில் புதிய வேகத்துடன் செயல்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். வேளாண்மையை, கால்நடை வளர்ப்புடன் ஒருங்கிணைத்து ஊக்குவிப்பதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1 கோடி தொடக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பண்ணைவீட்டு பயிர் வளர்ப்பு முறையுடன் ஆடு வளர்க்கும் திட்டத்தையும் இணைத்து முன்னோடித் திட்டமொன்று வருமாண்டில் துவக்கப்படும்.

33. இம்மாநிலத்தில் வறட்சியினால் கால்நடைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டதன் கடுமையைத் தணிப்பதற்காக, அரசு, நடப்பாண்டில் ரூ.20 கோடி அனுமதித்துள்ளது என்பதை அறிந்து மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். நீர் வழங்குதல், தடுப்பூசி மற்றும் மருந்துகள் வாங்குதல், கால்நடை சுகாதார நிலையங்களில் உள்ள அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளின் நிலை உயர்த்துதல், கால்நடைத் தீவனம் கிடைப்பதை உறுதி செய்தல் ஆகியவற்றிற்காக இத்தொகை பயன்படுத்தப்பட்டு வருகிறது. நடைமுறையில் உள்ள கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 2002–2003 ஆம் ஆண்டில் 4494 கால்நடை சுகாதார முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இத்திட்டம், 2003–2004–ஆம் ஆண்டிலும் தொடர, ரூ.2.14 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




34. 'டேனிடா' நிதியுதவி பெறும் கால்நடை மேம்பாட்டுத் திட்டம் 45 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கால்நடை பாதுகாப்பிற்காகவும், அனைத்து விவசாயிகளுக்கும் அதிக அளவில் வருவாய் கிடைக்கும் வகையிலும், கால்நடை வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு பற்றிய பல்வேறு செயல்முறைகளை கையாளுவதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுடன் அவர்களோடு இணைந்து செயல்படும் தொழிலாளர் தம்பதியினருக்கும் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டம் மேலும் 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். மாநிலத்தில் கால்நடை நலம் காக்கும் பணிகளை விரிவுபடுத்த, ஒரு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், கால்நடை மருத்துவப் பட்டதாரிகளும் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.

35. நமது மாநிலத்தில் ரூ.20 கோடி மொத்தச் செலவில் கால்நடை மற்றும் எருமை இனப் பெருக்கத்திற்கான தேசியத் திட்டத்தைச் செயல்படுத்த, மத்திய அரசு அனுமதியளித்துள்ளது பற்றி இந்த அவையில் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். கால்நடைகளின் தரத்தை மேம்படுத்துவதும், உள்நாட்டு கால்நடை இனங்களைப் பாதுகாப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தை முன்னின்று நடத்துவதற்காக, தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகவரமைப்பை நாங்கள் ஏற்படுத்தியுள்ளோம்.

36. கடல்சார் மற்றும் உள்நாட்டு மீன்வளப் பெருக்கத்தை அதிகப்படுத்துவதற்கும், அவற்றின் உயிர் மரபு விரிவாக்கத்தைப் பாதுகாப்பதற்கும், அறுவடைக்குப் பின்னர் தக்க முறையில் சேமித்து சந்தையில் விற்பதற்கும்

தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள மீனள மேம்பாட்டு இயக்கம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 18.7.2002 ஆம் நாளன்று துவக்கிவைக்கப்பட்டதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். இந்த இயக்கத்தின் நடவடிக்கைகள் வரும் ஆண்டில் மேலும் தீவிரப்படுத்தப்படும்.

37. மீன் பிடிக்க இயலாத பருவ காலத்தில் கடல்சார் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க, 2003–2004-ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.25.13 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீனவர்களுக்கான வீட்டுவசதித் திட்டம் அடுத்த நிதியாண்டில் பெருமளவில் முடுக்கிவிடப்படும். இதற்காக, ரூ.10.21 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். ரூ.48.84 கோடி செலவில் இராமேஸ்வரத்தில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றும், ரூ.10.60 கோடி செலவில் பழையார் நிலை–II ல் மீன்பிடித் துறைமுகம் ஒன்றும் அமைக்கும் திட்டச் செயற்குறிப்புகள் நிதியுதவி கோரி மைய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளன. மொத்தம் ரூ.13.23 கோடி செலவில் 10 இடங்களில் மீன் இறங்குதளங்கள் ஏற்படுத்த ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஆறு இடங்களில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

## ஒட்டுமொத்த ஊரக வளர்ச்சி

38. இவ்வரசு, முதன்மைத் துறையில் விரைந்த வளர்ச்சி காண்பதன் மூலம் பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதோடு, ஒட்டுமொத்த ஊரக வளர்ச்சிக்கு அதிக முன்னுரிமை அளிக்கிறது. ஊரகப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு மட்டுமின்றி, அவர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பினையும் அளிக்கும் வகையில், இன்றியமையாத ஊரகக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் உரிய கவனம் செலுத்துவோம்.

39. ஊரகக் கட்டமைப்பு வசதிகளின் பல்வேறு பணிகளுக்கு நிதி ஒதுக்குவதற்காக, 2003–2004-ஆம் ஆண்டில், "நபார்டு" (NABARD) வங்கியிடமிருந்து ரூ.400 கோடி அளவிற்கு கடன் நிதியுதவி பெறுவோம். ஊரகச் சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுதல், ஊரகப் பள்ளிகளில் வசதிகள் செய்து கொடுத்தல், ஊரக சுகாதார வசதி கட்டமைப்புகளை மேம்படுத்துதல், பாசனத்திட்டங்கள், மழைநீர் சேகரிப்புப் பணிகள், ஊரக மின்வசதி மற்றும் ஏனைய திட்டங்கள் இதில் அடங்கும். இந்தப் பெருந்திட்டம், ஊரக வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கும் போதிய அளவிற்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் பேருதவியாக இருக்கும்.

40. 2003–2004-ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளுக்கு மின்வசதி அளிக்கப்படுவதற்கு புதிய முக்கியத்துவம் அளிக்கப்படும். ஊரகப் பகுதிகளில் மொத்தம் ரூ.232.30 கோடி திட்ட மதிப்பீட்டில் மின் பகிர்மானப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஊரகப் பகுதிகளில் 35 புதிய துணை மின்நிலையங்களை அமைத்தல், 39 துணை மின்நிலையங்களிலுள்ள மின்னழுத்த மாற்றிகளின் திறனை மேம்படுத்துதல், 2313 புதிய மின் விநியோக மின்னழுத்த மாற்றிகளை நிறுவுதல் ஆகியவற்றுக்காக இந்த முதலீடு பயன்படுத்தப்படும். 149 தொலைதூர மற்றும் சிறிய குடியிருப்புகளுக்கு, சூரிய ஆற்றலை அடிப்படையாகக் கொண்ட, மின் இணைப்புகளை வழங்குவதற்கான சிறப்புத் திட்டம் ஒன்று, 2003–2004-ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக செயல்படுத்தப்படும் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். பெருமளவிலான இந்த முதலீடுகள், ஊரகப் பகுதிகளில் தரமான மற்றும் நம்பகமான மின் வழங்கலை மேம்படுத்த மிகப் பெரிய அளவில் உதவும். தமிழ்நாடு மின்வாரியத்திற்கு கட்டணங்களைச் செலுத்துவதற்காக, குடிசைவாழ் மக்களுக்கு ரூ.14 கோடி வழங்க வரவு–செலவுத் திட்டம் வகை செய்கிறது.

41. மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், ஊரகப் பணிகளின் முக்கியமானதொரு திட்டமாகும். 2002–03-ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 79,111 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2003–2004-ஆம் ஆண்டில், ஊரகப் பகுதிகளில் 1,00,000 பணிகளை மேற்கொள்வதென்று நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்தின்படி, வழங்கவேண்டிய ஊதியத்தின் ஒரு பகுதி, ரொக்கத் தொகையாக மாநில அரசால் வழங்கப்பட வேண்டியதற்கு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.55.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஊதியத்தில் மறுபகுதி அரிசியாக வழங்கும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

42. கிராம தன்னிறைவுத் திட்டத்தை, கிராம மக்கள் பங்கேற்புடன் அவர்களின் தேவைக்கேற்ப வகுக்கப்பட்ட புதுமையானதொரு திட்டமாக இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்காக ரூ.20 கோடி நிதியொதுக்கீடு, வரவு – செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

43. ஊரகச் சாலைகளை நிலையுயர்த்துவதற்கும், பராமரிப்பதற்கும், 2003–2004-ஆம் ஆண்டில் தனிக்கவனம் செலுத்தப்படும். ரூ.267.22 கோடி மதிப்பீட்டில் ஊரகப் பகுதிகளிலுள்ள 2937 கி.மீ. நீளமுள்ள சாலைகளின் நிலையை உயர்த்துவதற்கு, பிரதமரின் கிராமப்புற சாலைத் திட்டத்தின் (PMGSY) கீழ் கிடைக்கப்பெறும் நிதிகள் பயன்படுத்தப்படும். 500 மற்றும் அதற்கு மேற்பட்ட மக்கட்தொகை கொண்டுள்ள அனைத்து குடியிருப்புப் பகுதிகளையும் இணைக்கும் வகையில், ஊரகச் சாலைகளை அமைப்பதற்காகப் பெருந்திட்டம் ஒன்றை அரசு அறிவித்துள்ளது. தற்போதைய நிலவரப்படி, இன்னும் 2102 குடியிருப்புப் பகுதிகளுக்கு இந்த வசதி செய்துகொடுக்கப்பட வேண்டியுள்ளது. பத்தாவது திட்ட



கால அளவிற்குள், அனைத்துப் பருவ நிலைக்கும் ஏற்ற சாலைகளின் மூலம் இக்கிராமங்கள் இணைக்கப் படுவதை நாங்கள் உறுதி செய்வோம்.

44. நெடுஞ்சாலைத் துறையினாலோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களினாலோ பராமரிக்கப்படாத ஏறத்தாழ 12,000 கி.மீ. சாலைகள் எந்தப் பிரிவிலும் வகைப்படுத்தப்படாமல் இருந்து வருகின்றன. இந்தச் சாலைகள் அனைத்தையும் பராமரிக்கும் பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. 2003–2004-ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்களுக்காக மாநில அரசின் நிதிப் பகிர்மானத்திலிருந்து ரூ.50 கோடி, இவ்வகைச் சாலைகளைப் பராமரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும்.

45. சுகாதாரம், தூய்மை, துப்புரவு ஆகியவற்றுக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் சீரிய முக்கியத்துவத்தை அளித்து வருகிறார்கள். ஊரகப் பகுதிகளில் மகளிருக்கும், சிறார்களுக்கும் பயன்படும் வகையில் 12,618 ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் கட்டும் பெருந்திட்டம் ஒன்றை அரசு துவக்கியுள்ளது. 6309 வளாகங்களைக் கட்டும் முதல் கட்டப்பணி முடிவுற்றுள்ளது. மேலும் 6309 துப்புரவு வளாகங்களைக் கட்டும் இரண்டாம் கட்டப்பணி, ரூ.104.42 கோடி மதிப்பீட்டுச் செலவில் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். 16 மாவட்டங்களில் தற்போது நடைமுறையில் உள்ள முழுமையான துப்புரவுத் திட்டத்தை எஞ்சியுள்ள 12 மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த தக்க நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம். "துப்புரவு கிராம முகாம்" தொடங்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் கிராம அளவில் திடக் கழிவை அகற்றும் பணியில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். துப்புரவு கிராம முகாமின் கீழ் சிறந்த கிராமங்களுக்குப் பரிசுகள் வழங்க, ரூ.75 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

46. வரும் நிதியாண்டில், ஊரக வீட்டுவசதித் திட்டத்திற்கு சிறப்பு கவனம் அளிக்கப்படும். 2003–2004-ஆம் ஆண்டில் இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 31,453 வீடுகள் கட்டப்படும். இத்திட்டத்திற்கு மாநில அரசின் பங்காக வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.28.37 கோடி நிதியொதுக்கீடு சேர்க்கப்பட்டுள்ளது. 2003–2004-ஆம் ஆண்டில், 16,164 கச்சா வீடுகள் நிலையுயர்த்தப்படும். இதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.4.11 கோடி நிதியொதுக்கீடு சேர்க்கப்பட்டுள்ளது.

47. 1.4.2002 நிலவரப்படி, மாநிலத்தில் ஊரக குடிநீர் வழங்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வு, மொத்தமுள்ள 80,421 குடியிருப்புப் பகுதிகளில், 28,623 குடியிருப்புப் பகுதிகளுக்கு உறுதியாக குடிநீர் வழங்கப்படுகிறது எனவும், 51,294 குடியிருப்புப் பகுதிகளுக்கு ஓரளவு மட்டுமே குடிநீர் வழங்கப்படுகிறது எனவும் 504 குடியிருப்புப் பகுதிகள் குடிநீர் வழங்கலுக்கான நம்பத்தகுந்த ஆதாரம் எவற்றையும் இதுவரையில் பெறவில்லை எனவும் காட்டுகிறது. நடப்பாண்டில் இந்த 504 குடியிருப்புப் பகுதிகளில், 465 குடியிருப்புப் பகுதிகளுக்கு உறுதியாக குடிநீர் வழங்கப்பட்டுள்ளது என்று இந்த அவையில் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். எஞ்சியுள்ள 39 குடியிருப்புப் பகுதிகளுக்கு 2003–2004-ஆம் ஆண்டில் குடிநீர் முழுமையாக வழங்கப்படும். முன்னர் ஓரளவே குடிநீர் வழங்கப்பட்டு தற்போது உறுதியாகக் குடிநீர் வழங்கப்பட்டுவரும் குடியிருப்புப் பகுதிகளின் எண்ணிக்கையில் வியக்கத்தக்க முன்னேற்றம் உள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில், ஊரகக் குடிநீர் வழங்கலுக்காக, குறைந்தபட்ச தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டத்தின் கீழ் (Minimum Needs Programme) ரூ.411 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

48. மத்திய அரசால் 2002-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் துவக்கப்பட்ட புதிய ஸ்வஜல்தாரா (Swajaldhara) திட்டம் வரும் நிதியாண்டில் மிகவும் முனைப்பாக நமது மாநிலத்தில் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் கீழ், குடிநீர் வசதி ஏற்படுத்தப்படும். மேலும் வரும் நிதியாண்டில் உலக வங்கியின் உதவி பெறும் ரூ.2300 கோடி செலவிலான தமிழ்நாடு ஊரகப் பகுதி குடிநீர் மற்றும் துப்புரவுத் திட்டம் செயல்படுத்தப்படுவதற்காக அவ்வங்கியின் ஒப்புதலைப் பெறவுள்ளோம் என்பதை அறிவதில் மாண்புமிகு அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

49. சட்டமன்றப் பேரவையின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் ரூ.82 இலட்சம் என்ற அளவில் சட்டமன்றப் பேரவை தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது என்பதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். 2001–2002-ஆம் ஆண்டில், கடுமையான நிதி இடர்ப்பாடு காரணமாக, இத்தொகையில் 50 சதவீதத்தை வழங்க இயலவில்லை. நடப்பு ஆண்டில், ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.82 இலட்சம் வழங்கப்படுவதை நாங்கள் உறுதி செய்துள்ளோம். இந்த நிலுவைத் தொகையான ரூ.96.35 கோடியில் நடப்பு நிதி ஆண்டில் 50 சதவீதத்தை வழங்குவதற்கும், எஞ்சியிருக்கும் 50 சதவீதத் தொகையை 2003–2004-ஆம் ஆண்டில் வழக்கமான ஒதுக்கீட்டோடு வழங்குவதற்கும் நாங்கள் முயற்சி மேற்கொள்வோம். இதன் அடிப்படையில், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.240.88 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## இரண்டாம் நிலைத் துறை

50. இரண்டாம் நிலைத் துறையில், உற்பத்தி, மின்சாரம், கட்டுமானத் தொழில் ஆகியவை முக்கியமானவை. தமிழ்நாட்டில், உற்பத்தித்துறையில் சாதனை 1996–2001 ஆம் கால அளவில் போதிய அளவில் இல்லை. 1999–2000-ஆம் ஆண்டு நீங்கலாக, மற்ற ஆண்டுகளில் வளர்ச்சி வீதம் பின்னடைவுடனோ அல்லது

இதனால், இத்தொழிற்பேட்டைகளில், சாலைகள், விளக்குகள், கழிவுநீர் அகற்றும் வசதி, வடிகால் போன்ற நிலையான கட்டமைப்பு வசதிகளுக்கு வகைசெய்ய இயலும். இத்தொழிற்பேட்டைகள் வரும் ஆண்டில், மீண்டும் முதன்மை நிலைக்கு திரும்பும் வகையில் அவை சீரமைக்கப்படும். இத்தொழிற்பேட்டைகளில் புதிய தொழில் பிரிவுகள் நிறுவுவதை நாங்கள் ஊக்குவிப்போம். பொதுத்துறை மற்றும் தனியார் துறை பங்கேற்கும் வகையில் இத்திட்டங்கள் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தை செயல்படுத்த, தொழிற்பேட்டையின் கூட்டமைப்பு மற்றும் சிட்கோ ஆகியவற்றிற்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும், இடையே "வருவாய் பகிர்வு ஏற்பாட்டு முறை" வகுக்கப்படும்.

64. துணித் தொழில் குறித்து இப்போது நான் எடுத்துரைக்க விழைகிறேன். துணித் தொழிலுக்காக தனியான இயக்கம் ஒன்றை நாங்கள் பின்பற்றுவோம். தமிழ்நாடு, நெய்தல் மற்றும் பின்னலாடை ஆகிய இரு பிரிவுகளைக் கொண்ட இத் தொழில் பாரம்பரிய வல்லமையை பெற்றதாக இருந்துவருகிறது. இந்தத் தொழில், மிக இடர்பாடான கால கட்டத்தை எதிர்கொண்டு வருகிறது. எதிர்காலத்தில் கிடைக்கும் வாய்ப்புகளைத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ள முற்போக்கு சிந்தனையுடன் நம்மை மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். புதியதாக துவக்கப்பட்ட துணித் தொழில் இயக்கம் இந்த தொழிலில் உள்ள அனைத்து அம்சங்களையும் ஆய்வு செய்து, இந்த தொழிலுக்குப் புத்துயிர் அளிக்கத் தேவையான திட்டங்களை மேற்கொள்ளும். குறிப்பாக, பின்வரும் புதிய முயற்சிகளை கருத்தில் கொண்டுள்ளோம்.




- ❖ தரமான பருத்தி உற்பத்தியைப் பெருக்கு வதற்கும், துணித் தொழிலை அதன் இடுபொருள்களுக்கான தொழிற் பிரிவு களுடன் ஒருங்கிணைப்பதற்கும் தனிக் கவனம் செலுத்துதல்.

- ❖ பயிற்சித் திட்டங்கள் குறித்தும், நவீன, நிலை உயர்த்தப்பட்ட உற்பத்தி ஏற்பாட்டு முறைக்கான உத்திகள் குறித்தும் கவனம் செலுத்துவதற்காக, தென்னிந்திய ஆலைகள் சங்கத்தின் (SIMA) ஒத்துழைப்புடன் துணித் தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துதல். தொழிலாளர்களுக்கு மறு பயிற்சி அளித்து மீண்டும் இந்த தொழிலில் அவர்களை ஈர்த்துக்கொள்ள இயலும் வகையில் இந்தவசதி பயன்படுத்திக் கொள்ளப்படும்.

- ❖ நவீனமயமாக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு, பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் கிடைக்கும் வகையில் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனங்களுடன், தொழிலாளர் மறுபயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்த தக்க ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுதல்.

- ❖ புதிய தொழில் நுட்பத்தின் அடிப்படையில் அமைந்த நெசவு முறையை மேற்கொள்ளுமாறு தொழில் முனைவர்களை ஊக்குவித்தல்.

- ❖ தற்போதுள்ள நூற்புத் திறனை நவீன மயமாக்குதல்;

- ❖ நெசவுத்தறிநாடா இல்லாத விசைத்தறி வளாகங்களை ஊக்குவித்தல்.

- ❖ சென்னை மற்றும் திருப்பூர் அருகே ஆடைப் பூங்காக்கள் அமைத்தல்.

65. 2005-ஆம் ஆண்டில் உலக வர்த்தக அமைப்புக் கோட்பாடுகள் செயல்முறைக்கு வருவதற்கேற்ப தம்மை தயார்செய்துகொள்ள உதவும் வகையில், துணித் தொழிலுக்கு ஏற்ற முக்கியத்துவம் அளிக்கும் வண்ணம் இத்தொழில் தொடர்பான பெரும்பாலான பிரச்சினைகளுக்கு வருமாண்டில் மனநிறைவளிக்கும் வகையில் தீர்வுகாண இயலும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

66. தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர்களின் நிலைமையைச் சீர்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த முயற்சிகளை இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். குறைந்த விலை சேலைகள் மற்றும் வேட்டிகள் விற்பனைக்கான புதிய சந்தை அடிப்படையிலான முயற்சியினால் தேங்கிக்கிடந்த துணிகளின் இருப்பு அளவு கணிசமாகக் குறைந்துள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில் நெசவாளர்கள் தங்களது உற்பத்தி முறைகளை நவீனப்படுத்திக் கொள்வதற்கும் மதிப்பு கூட்டிய பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் ஏற்ற பெரியதொரு திட்டத்தை செயல்படுத்த உள்ளோம். 2003–2004-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சந்தை ஊக்கத்



தொகை மற்றும் கைத்தறித் தள்ளுபடி ஆகியவற்றிற்கு ரூ.83 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

67. பொருளாதார வளர்ச்சியில் கட்டுமானத் தொழில் பெரும் பங்கு வகிக்கிறது என்பதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். கட்டுமானப் பொருட்கள் எளிதாகக் கிடைப்பது இத்தொழில் பெரிதும் வளர்ச்சி அடைவதற்கு வகை செய்யும். கட்டுமானப் பொருட்கள் கிடைப்பதை அதிகரிப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தக்க ஆணைகள் பிறப்பித்துள்ளார்கள். இதனால் அவற்றின்விலை கட்டுப்படுத்தப்பட்டு இப்பொருட்களுக் கான தேவை அதிகரிக்கும் வாய்ப்பு உருவாகும். மணல் மற்றும் ஏனைய பொருட்கள் கிடைக்கப் பெறுவதில் இன்னும் சில இடர்ப்பாடுகள் உள்ளன. கட்டுமானப் பொருட்களை வழங்குதல், கட்டுமானத் தொழிலை உரியவாறு முறைப்படுத்துதல் ஆகியவை தொடர்பான அனைத்து அம்சங்களையும் பரிசீலிப்பதற்காக தலைமைச் செயலாளரின் தலைமையில் உயர்நிலைக்குழு ஒன்றை நாங்கள் அமைப்போம். 3 மாத கால அளவில் அறிக்கையை அளிக்கும்படி இக்குழு கேட்டுக் கொள்ளப்படும். அதன் பின்னர், நாங்கள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

68. தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும் என்று இந்த அரசு உறுதியாக நம்புகிறது. தொழிலாளர்களது உற்பத்தித் திறன் மேம்பாடு மற்றும் உயர் வருவாய் மூலமாக இது எய்தப்பட வேண்டும். 2002–2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் 4889 பயனாளிகளுக்கு ரூ.2.56 கோடி உதவித் தொகை வழங்கியது. தொழில்துறையுடன் இணைந்து நவீன உற்பத்தி முறைகளுக்கேற்ற வகையில் தொழிலாளர் களுக்கு மறுபயிற்சி அளிப்பதற்கான பயிற்சித் திட்டங்களை வகுக்க முனைந்துள்ளோம். வரும் நிதியாண்டில் பீடித் தொழிலாளர்களுக்காக, 2000 புதிய வீடுகள் கட்டத் திட்டமிட்டுள்ளோம் என்பதை அறிவதில் மாண்புமிகு அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். தமிழ்நாடு தொழில் அமைதியின் பெட்டகமாகத் திகழ்ந்து வருகிறது. 2003–2004 ஆம் ஆண்டில் தொழில்துறையில் இணக்கமான சூழல் அமையப் பெறுவதை நாங்கள் உறுதி செய்வோம். துணித்துறை தொழிலாளர்களது ஊதியப் பிரச்சினைகளைத் தீர்க்க சிறப்புத் தொழில் தீர்ப்பாயம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளோம்.

## கட்டமைப்பு வசதி மேம்பாடு

69. 2003–2004 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், முக்கியத்துவம் அளிக்கப்பட்ட அம்சங்களில், தரமான கட்டமைப்பு வசதிகளை மிக விரைவில் மேம்படுத்துவதும் ஒன்றாகும். தரமான கட்டமைப்பு வசதிகள் முழுமையான பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என்பது தற்போது வெகுவாக ஏற்கப்பட்டுள்ள கருத்தாகும். தரத்தில் எந்த அளவிலும் குறைவின்றி கட்டமைப்பு வசதிகள் ஏற்கத்தக்க செலவில் கிடைக்கச் செய்வதை நாம் உறுதி செய்யவேண்டும். கட்டமைப்பு மேம்பாடு மற்றும் அதற்கான நிதி ஆதாரங்கள் பற்றிய முழுமையான ஓர் அறிவார்ந்த நுண்நோக்கம் இதற்குத் தேவைப்படுகிறது. எனது முந்தைய நிதிநிலை அறிக்கையில் வணிக வரியின் மீதான மேல்வரி கட்டமைப்பு மேம்பாட்டு நிதி ஒன்றை உருவாக்கப் பயன்படுத்தப்படும் என்று கூறியிருந்தேன். மாநில மதிப்புக்கூட்டு வரி (State VAT System) முறையில் இத்தகைய மேல்வரி விதிக்க இயலாது. ஆகையால் வரவு–செலவுத் திட்டத்திலிருந்து ஒரு தனி ஒதுக்கீடு மூலமாக இந்தக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியை ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம். இதற்காக வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

70. தரமான கட்டமைப்பு வசதிகளை விரைவாக வழங்குவதற்கு, அதிக அளவில் மூலதனம் தேவைப்படுகிறது. இந்த பிரம்மாண்டமான பணியை அரசு மட்டுமே தானாக மேற்கொள்வது சாத்தியமில்லை. நிதி ஆதாயம் மிகக் குறைவாக இருந்ததால், கட்டமைப்பு வசதிப் பணிகளுக்கு, தனியார் மூலதனம் முன்னர் கிடைக்கப் பெறாமல் இருந்தது. சலுகை ஒப்பந்தங்கள், பயனாளிகளின் பங்கேற்பு, ஏற்கத்தக்க அளவிலான பயன்பாட்டு கட்டணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில்




பொதுத் துறையும் தனியார் துறையும் பங்கேற்கும் கொள்கை வடிவில் இந்தப் பிரச்சினைக்கு உலகம் முழுவதிலும் தீர்வு காணப்பட்டு வருகிறது. மைய அரசின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், கட்டமைப்பு வசதிகளில் உயரிய அளவிற்கு மூலதனம் கிடைக்கச் செய்ய ஆதாய இழப்பை ஈடுசெய்யும் வகையில் நிதி உதவி செய்யும் கொள்கை முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையையும், தற்போதுள்ள பிற ஏற்பாடுகளையும் ஆராய்ந்து தமிழ்நாட்டில் கட்டமைப்பு வசதித் திட்டங்களில் பொதுத் துறை, தனியார் துறை பங்கேற்பிற்கு வகை செய்யும் தக்கதொரு சட்டமுன் வடிவை சட்டப் பேரவையின்

நடப்புக் கூட்டத் தொடரில் நிறைவேற்றக் கருதியுள்ளோம். சலுகை ஒப்பந்தங்கள், எதிர்பாராது எழும் பொறுப்புகளை பகிர்ந்துகொள்ளுதல், திட்ட வடிவாக்கம் மற்றும் செயலாக்கம் போன்றவை இந்தச் சட்டத்தில் இடம்பெறும்.

71. எரிசக்தித் துறை மேம்பாட்டிற்கு நாங்கள் தனிக் கவனம் செலுத்தி வருவதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், மாநிலத்தில், புதிதாக மின் உற்பத்தித் திறனைப் பெருக்க சிறப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளார். 1000 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான கூட்டு முயற்சியாக, தமிழ்நாடு மின்வாரியத்திற்கும், தேசிய அனல் மின் நிறுவனத்திற்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று 2002-ஆம் ஆண்டு ஜூலையில் கையெழுத்தானது. இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.4000 கோடியாகும். இத்திட்டம் வட சென்னைப் பகுதியில் அமையும். இத்திட்டம் குறித்த விரிவான அறிக்கை, தயாரிக்கப்பட்டு வருகிறது. நிறைவேற்றப்பட்டபின் இது, மாநிலத்தில் மின் உற்பத்தித் திறனை மிகப் பெரிய அளவில் அதிகரிக்கச் செய்யும். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், தமிழ்நாடு மின் வாரியம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக, ரூ.4000 கோடி செலவில், தூத்துக்குடியில், 1000 மெகாவாட் மின்திறன் கொண்ட கடற்கரையோர மின் உற்பத்தி நிலையம் ஒன்று புதிதாக அமைக்கப்படும் என்று நான் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கூடங்குளத்தில், 2000 மெகாவாட் திறன்கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை விரைவில் ஏற்படுத்துவதற்கு, நாங்கள் மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம். இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு, ரூ.13000 கோடியாகும். இந்த இடத்தில், மேலும் கூடுதலாக 2000 மெகாவாட் மின் உற்பத்தித் திறனை சேர்ப்பதற்கு, மைய அரசினை கேட்டுக் கொள்வோம். காற்று எரிசக்தி, சூரிய வெப்ப எரிசக்தி, உயிரினக் கழிவு எரிசக்தி போன்ற மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்துவதற்கும் நாங்கள் போதிய முக்கியத்துவம் அளிப்போம். மைய மின் கூட்டமைப்பிலிருந்தும் தனியார் மின்சக்தி நிலையங்கள் (IPPs) ஆகியவற்றிலிருந்தும் கிடைக்கும் மின்சக்தியையும் கணக்கில் கொண்டால் வருங்காலத்திலும், மின் சக்தியில் தன்னிறைவு பெற்றதாகத் தமிழ்நாடு தொடர்ந்து விளங்கும்.

72. இரண்டு பருவமழைகள் பொய்த்து அதன் விளைவாக புனல் மின்சக்தி உற்பத்தியில் தொய்வு ஏற்பட்டாலும், தமிழ்நாட்டில் மின்வெட்டு இல்லாதிருப்பது பேரவை உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். தற்போது வழங்கப்படும் எரிசக்தியின் தரம் குறித்து அதிக கவனம் செலுத்துகிறோம். வழங்கப்படும் எரிசக்தியின் மின்அலை அளவு அதிகரிக்கப்பட்டு அதன் மூலம் எரிசக்தியின் தரமும் கணிசமான அளவிற்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. மின் வழங்கலில் நல்ல தரத்தை உறுதிசெய்ய மின் ஏற்பாட்டு முறை மற்றும் மின்கட்டமைப்பு மேம்பாட்டில் கணிசமான அளவிற்கு நாங்கள் தொடர்ந்து முதலீடு செய்வோம். 2003-2004-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்வாரியத்தின் திட்ட முதலீடு ரூ.1287 கோடி ஆகும்.

73. 2007-ஆம் ஆண்டுக்குள் அனைத்து கிராமங்களுக்கும் 100 சதவீதம் மின்வசதி செய்து கொடுப்பது என்பது மத்திய அரசின் இலக்காக இருக்க, இந்த இலக்கினை 1992-ஆம் ஆண்டிலேயே, தமிழ்நாடு எய்திவிட்டது. எங்களது அரசு ஆட்சியில் இருந்தபோது தான் இந்தச் சாதனை நிகழ்ந்தது. 2007-ஆம் ஆண்டுக்குள் நிலையான மற்றும் தரமான மின்சக்தி வழங்கப்படும் என்ற உறுதிப்பாட்டுடன், வீடுகள் அனைத்திற்கும் 100 சதவீதம் மின்வசதியளிப்பதை தற்போது நாம் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறோம். இந்த இலக்கை அடைவதில் தமிழ்நாடு தான் முதன் மாநிலமாக இருக்கும்.

74. இந்த அரசு, 1995-ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது தயாரிக்கப்பட்டு, நீண்ட காலமாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த தமிழ்நாடு சாலைத்துறைத் திட்டம், தற்போது ரூ.2118 கோடி செலவில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். பிற மாநிலங்கள், சாலைத் துறை மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளடக்கிய வெளிநாட்டு உதவிபெறும் பல திட்டங்களைப் பெற்றபோது, முந்தைய அரசு இவ்வாறான திட்டங்களை இழந்தது உண்மையிலேயே




துரதிர்ஷ்டம்தான். இத்திட்டத்தைச் செயலுக்குக் கொண்டுவருவதில் நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், உறுதியான மற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்துள்ளார்கள். உலக வங்கியுடன் இத்திட்டம் குறித்த பேச்சுவார்த்தை முடிவடையும் நிலையில் உள்ளது. 2003-ஜூன் திங்களில் இது தொடர்பான ஒப்பந்தம் முடிவுறும் என்று நாங்கள் நம்புகிறோம். 732 கி.மீ. நீளச் சாலைகள் இத்திட்டத்தின் மூலம் மேம்படுத்தப்படும். இதன் முக்கியப் பகுதிகள், நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரையிலான கிழக்கு



கடற்கரையோர நெடுஞ்சாலை, ஆற்காடு முதல் திருவாரூர் வரையிலான மாநில நெடுஞ்சாலை மற்றும் 14 முக்கிய புறவழிச் சாலைகள் ஆகியனவாகும்.

75. சாலை மேம்பாட்டில் பொதுத் துறையும் தனியார் துறையும் பங்கு பெறுவதை எவ்வாறு ஊக்குவிக்கலாம் என்பது குறித்து நாம் விரிவாகப் பரிசீலித்துள்ளோம். மத்திய நிதியமைச்சர், 2003-2004-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையில், நாடு முழுவதிலும் தேசிய நெடுஞ்சாலைகளின் விரைந்த மேம்பாட்டிற்காக தனியார்துறை முன்வந்தால், ஆதாயத்தில் இழப்பு ஏற்படுகையில் அதனை ஈடுசெய்யும் (Viability Gap Funding) நிதியுதவித் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளார். ஏற்புடைய பயனாளிக் கட்டணத்திற்குப் பிறகும் பற்றாக்குறை நீடித்தால், ஈடுசெய்து கொள்வதற்காக அரசு அளிக்கும் நிதி ஆதரவுடன், சாலை மேம்பாட்டில் தனியார் மூலதனத்தைப் பயன்படுத்தும் அடிப்படையில் இது அமைந்ததாகும். மாநில நெடுஞ்சாலைகள் பலவற்றையும், முக்கியமான மாவட்டச் சாலைகளையும் மேம்படுத்தும் பணியை, இந்த அடிப்படையில் நிறைவேற்ற நாம் மேற் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

76. மாண்புமிகு முதலமைச்சரின் நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஏறத்தாழ 1800 கிலோ மீட்டர் நீளத்திற்கு மாநில நெடுஞ்சாலைகளும் முக்கியமான மாவட்டச் சாலைகளும் விரைந்த மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 3 ஆண்டு கால அளவில் முடிக்கப்படும். இந்தச் சாலைகளில் தனிப்பட்ட பிரிவுகளை இனங்கண்டறிந்து, விபத்து மற்றும் உடனடி சிகிச்சைக்கான சிறப்பு வசதி, நெடுஞ்சாலை காவல் பணி மற்றும் நடைபாதை வசதிகள் ஆகியவற்றுடன் இருவழிப் பாதைகளாக இந்தச் சாலைகளை நிலை உயர்த்துவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்திற்கான மதிப்பீடு, ரூ.1500 கோடி ஆகும். தேவையான அளவுக்கு அரசு நிதியுதவி அளிக்கும். எஞ்சிய தொகை, தனியார் பங்கேற்பின் மூலம் பெறப்படும். மத்திய அரசு அறிவித்துள்ள இழப்பு ஏற்படுகையில் அதனை ஈடுசெய்துகொள்ளும் ஏற்பாட்டு முறையாக அரசின் நிதியுதவி அளிக்கப்படும். தமிழ்நாட்டில் சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளுக்குப் புதிய மெருகேற்றி உலகளவில் ஒப்புநோக்கும் தரத்துடன் அவைகள் மேம்படுத்தப்படும் என்று நான் நம்புகிறேன்.

77. 2003-2004-ஆம் ஆண்டில் சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைப் பராமரிப்புப் பணிகள் சிறப்புக் கவனம் பெறும். 2003-2004-ஆம் ஆண்டில் 5000 கி.மீ. நீளச் சாலைகளை புதுப்பிக்க வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.180 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இனி வரும் ஆண்டுகளில், ஒதுக்கீட்டு அளவு மேலும் அதிகரிக்கப்படும். மாநில நெடுஞ்சாலை மற்றும் முக்கியமான மாவட்டச் சாலைகளை உள்ளடக்கிய சாலைக் கட்டமைப்பைப் பராமரிப்பதை உறுதி செய்யும் வகையில், அரசுப் பொது கணக்குப் பிரிவில் ரூ.120 கோடி ஒதுக்கீட்டுடன் சாலைப் பராமரிப்பு நிதி ஒன்றை ஏற்படுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். இந்த நிதி, மாநிலத்திலுள்ள முக்கியமான சாலைக் கட்டமைப்பைப் பராமரிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.

78. தமிழ்நாடு கடல்சார் வாரியம், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் சிறு துறைமுகங்களுக்கான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்துள்ளது. சென்னை பெட்ரோலிய நிறுவனம், ரூ.100 கோடி திட்டச் செலவில், நாகப்பட்டினம் துறைமுகத்தை அண்மையில் விரிவுபடுத்தியுள்ளது. இது, 0.5 மில்லியன் டன் கச்சா எண்ணெய் வந்து சேர்வதற்கு உதவியாக இருக்கும். பொதுத் துறை - தனியார் துறை பங்கேற்புடன், ரூ.250 கோடி செலவில் கடலூர் துறைமுகத்தை மேம்படுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. சேது சமுத்திரம் திட்டத்திற்கான பணி இனியும் தாமதமின்றி உரிய நேரத்தில் தொடங்கப்பட வேண்டும் என்று மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துவோம்.

79. சென்னை துறைமுகத்திற்கான மேம்பாடு மற்றும் சென்னையில் இரண்டாவது விமான நிலையம் அமைப்பது ஆகியவை மத்திய அரசின் 2003-2004-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இடம்பெறாததைக் கண்டு நாங்கள் ஏமாற்றம் அடைந்துள்ளோம். நம்முடைய ஏற்றுமதி நோக்கிலான வளர்ச்சி இலக்கினை எய்திட சென்னை துறைமுகத்தின் செயல்பாடு முழுமையாக நவீனப்படுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது. சென்னைத் துறைமுகத்தை நவீனப்படுத்தும் பணியை விரைந்து நிறைவேற்றுமாறு மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும். சென்னையில் இரண்டாவது விமான நிலையம் கட்டுவது குறித்து மத்திய அரசு விரைந்து முடிவெடுக்க வேண்டும்.

## நகர்ப்பகுதி மேம்பாடு

80. நகர்ப்பகுதிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளின் தரம் மக்கள் நல்வாழ்விற்கு இன்றியமையாத தோடல்லாமல், ஒரு மாநிலத்தின் வளர்ச்சி நிலையினை எடுத்துக்காட்டும் முக்கிய அளவுகோலாகவும் திகழ்கிறது. இத்துறைக்கு முன்னுரிமை அளிப்பதென்று நாங்கள் தீர்மானித்துள்ளோம். மாநகராட்சிப் பகுதிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றில் தரமான அடிப்படைக் கட்டமைப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தக்க முதலீடு செய்ய முன்னுரிமை அளிக்கப்படும்.

81. நமது அரசு முன்னர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தமிழ்நாடு நகர்ப்பகுதி கட்டமைப்பு வசதி மற்றும் நிதிப் பணிகள் நிறுவனத்தை அமைக்க (Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited - TNUIFSL) நடவடிக்கைகள் மேற்கொண்டது. இந்த நிறுவனம் பொதுத் துறை மற்றும் தனியார் துறை பங்கேற்பிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். கழிவு நீரகற்றும் திட்டங்கள், சாலை மேம்பாட்டுத் திட்டங்கள், பேருந்து நிலையங்கள் அமைத்தல் முதலியன போன்ற நகர்ப்பகுதித் திட்டங்களுக்கு நிதியுதவியளிக்கும்

பணியை இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில், இந்த நிறுவனம் ரூ. 200 கோடி அளவிற்கு நகர்ப்பகுதி கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கும். நகர்ப்பகுதி குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் திட்டங்களுக்கு தனி நிதி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில், ரூ.200 கோடி அளவுக்கு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவியளிக்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்பகுதி நிதியுதவி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகம் (Tamil Nadu Urban Finance and Infrastructure Development Corporation Limited - TUFIDCO) முடுக்கிவிடப்படும்

82. நடப்பாண்டில் கடும் நிதி நெருக்கடி இருந்தபோதிலும், மாநில வரி வருவாயிலிருந்து, உள்ளாட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய பங்குகள், மாதந்தோறும் வழங்கப்பட்டு வருவதை அறிந்து அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள், தங்களுடைய சொந்த நிதியாதாரங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். நகர்ப்பகுதி வசதிகளைச் செய்து கொடுக்க, பொதுத் துறையுடன் தனியார் துறையின் பங்கேற்பு ஊக்குவிக்கப்பட வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் தங்களது வளர்ச்சித் திட்டங்களுக்குத் தக்க நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தொழில் வரி வீதங்கள் 1.10.2003 அன்று முதல் மாற்றியமைக்கப்பட இருக்கின்றன. சட்டப்படி உள்ளாட்சி அமைப்புகளே இந்த மாற்றங்களைக் கொண்டு வரலாம்.

83. திருப்பூர் நகராட்சி மற்றும் வழியிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் ரூ.1026 கோடி செலவிலான குடிநீர் வழங்கல் பெருந் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். பொதுத் துறையுடன் தனியார் துறை பங்கேற்பிற்கு இது தன்னிகரற்ற முன் மாதிரியாகும். இத்திட்டத்திற்கான நிதி ஏற்பாடுகள் வரையறுக்கப்பட்ட நிலையில், 2003 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் நிதி நிறுவனங்கள் தேவையான கடன் தொகைகளை விடுவிக்க நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ.40.17 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இந்த அரசின் மிகப் பெரிய சாதனையோடல்லாமல், இந்தியாவிலேயே தனித் தன்மைப் பெற்ற திட்டமாகவும் அமையும்.

84. நகர்ப்பகுதிகளின் ஒட்டுமொத்த மேம்பாட்டில் தரமான எரிசக்தி முக்கியப் பங்குபெறுகிறது. 11 புதிய துணை மின் நிலையங்களை நிறுவுதல், 8 துணை மின்நிலையங்களின் எரிசக்தி மாற்றிகளின் திறனை அதிகரித்தல் மற்றும் மாநிலத்தில் நகர்ப் பகுதிகளில் 696 புதிய மின் பகிர்வு மாற்றிகளை நிறுவுதல் ஆகிய பணிகளுக்கு, ரூ.155.50 கோடி முதலீடுசெய்ய இவ்வரசு முடிவு செய்துள்ளது.

85. நகர்ப் பகுதிகள் அனைத்திலும் அறிவியல் அடிப்படையிலான திடக்கழிவு மேலாண்மை மற்றும் திடக்கழிவு அகற்றுதல் ஆகியவற்றுக்கான அத்தியாவசியத் தேவைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனி முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். ஆரம்ப நிலையிலேயே பிளாஸ்டிக் கழிவுகளைப் பிரித்து அகற்றுவதற்கு முக்கியத்துவம் அளித்து, குப்பையை அகற்றுவதற்கு தனி நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. திடக்கழிவைக் கொட்டி நிரப்பும் வகையில் தகுந்த இடங்களைத் தேர்வு செய்து இதற்குத் தீர்வுகாணும் வகையில் நகராட்சி மன்றங்கள் ஊக்குவிக்கப்படும்.

86. வேலைவாய்ப்பிற்கு ஆதாரமாக இருந்துவருகிற வீட்டுவசதித் துறைக்கு அரசு சிறப்பான முறையில் ஊக்கம் அளிக்கும். பொதுத்துறையுடன் தனியார் துறை பங்கேற்பின் அடிப்படையில் வீட்டுவசதித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏற்ப, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சீரமைக்கப்படும். சென்னை பெருநகர் பகுதியிலும் ஏனைய நகர்ப்பகுதிகளிலும், முறையான உறைவிடப் பகுதிகளை மேம்படுத்த வேண்டியது இன்றியமையாத தேவையாகும். தமிழ்நாடு வீட்டுவசதிவாரியம், தனியார் துறை முதலீட்டாளர்களின் உதவியுடன், புதிய உறைவிடப் பகுதிகளை, விரைவில் மேம்படுத்த இயலும் வகையில், இந்தப் பகுதிகளில் தேவையான நிலங்கள் கையகப்படுத்தப்படும். வீட்டுவசதித் துறையின் நடவடிக்கைகளை துரிதப்படுத்தப்படுவதற்காக, சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளை நாங்கள் ஆய்வு செய்யவிருக்கிறோம்.

87. பதினோராம் நிதிக்குழு ஒதுக்கீடு செய்த தனிப் பிரச்சினை குறித்த மானிய உதவியுடன் (Special Problem Grants), ரூ.20 கோடி செலவில், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 2116 குடியிருப்புப் பகுதிகளைக் கட்டும் பணியை மேற்கொள்ளும். மத்திய அரசின் நிதியுதவியுடன், வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், நகர்ப்பகுதிகளிலுள்ள குடிசைப் பகுதிகளில், மொத்தம் ரூ.20 கோடி செலவில் 5000 தனி வீடுகள் கட்டப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், சென்னை மாநகரில் ஆற்றுக்கரைகளில் அமைந்துள்ள 3000 குடிசை வீடுகளை வேறு இடங்களுக்கு மாற்றும் முழுமையான திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி 2003–2004 ஆம் ஆண்டில் முடிவடையும். ஆற்றின் கரைகளில் வசிக்கின்ற எஞ்சியுள்ள குடும்பங்களை வேறு இடத்தில் குடியமர்த்துவதற்காக, மேலும் 8164 குடியிருப்புகள் கட்டப்படும்.

88. சென்னை பெருநகரப் பகுதியில், பல்லாண்டு காலமாகத் தக்க முதலீடுகள் இல்லாமல் போனதால் இப்பகுதி மிகப்பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது. தென் இந்தியாவின் முதன்மை மாநகர் என்ற பழம்பெருமையை மீண்டும் நிலைநாட்ட



வேண்டுமென்றால், இம்மாநகரில் உள்ள கட்டமைப்பு வசதிகளை நிலையுயர்த்துவதற்குத்தக்க முதலீட்டுத் திட்டம் ஒன்றை நாம் தயாரிக்க வேண்டியுள்ளது. பெருமழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கு, சாலைப் பராமரிப்பு மற்றும் நிலையுயர்த்துதல் போதிய அளவில் இல்லாமை, குடிநீர் பற்றாக்குறை, திடக் கழிவுகளை அகற்றும் பிரச்சினைகள் போன்றவை சென்னைப் பெருநகரப் பகுதி எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினைகளில் அடங்கும். அடிப்படைப் பணிகளில் தரமான மேம்பாடுகளை, சென்னைப் பெருநகர்ப் பகுதி குடிமக்கள் கோரி வருகின்றனர். சென்னைப் பெருநகர்ப் பகுதி, நிறுவனங்கள் தங்களது தொழில்முறைத் தேவைகளை, வெளிக்கொள்முதல் வாயிலாகப் பெறும் பணிகளுக்கும் (Business Process Outsourcing) மற்றும் பல உற்பத்தித்துறை நடவடிக்கைகளுக்கும் உலகளவில் முக்கியமான மையப்பகுதியாக உருவாகி வருகிறது.

89. கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளுக்குப் பின்னர், இப்பகுதியில் கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கான ஒட்டுமொத்தத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அலுவல் முறையிலான பணிக்குழு ஒன்று தற்போது, சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான, கட்டமைப்பு வசதி முதலீட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்திற்காக, பத்தாண்டு காலத்தில் ரூ.18,000 கோடி முதலீடு தேவைப்படுமென கணக்கிடப்பட்டுள்ளது. நடுத்தர கால அளவில், அதாவது வரும் 5 ஆண்டுகளில், திட்ட முதலீடு ரூ.10,000 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வகையில் கட்டமைப்பு வசதிகளுக்கு நிதி ஆதாரங்களைத் திரட்டும் திட்டமொன்றை வடிவமைக்க தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட கட்டமைப்பு மேம்பாடு நிதியுதவிக் கழகத்துடன் (Infrastructure Development Finance Corporation) புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஒன்றைச் செய்து கொண்டுள்ளது. இந்த முதலீட்டுத் திட்டத்தை, ஆண்டுச் செயல் திட்டமாக (Annual Action Plan) மாற்றுவதில், அவர்களுடைய ஒத்துழைப்பை நாடுவோம்.

90. இத் திட்டத்திற்காக 2003–2004 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட நிதிநிலைக் குறிப்பில் ரூ.1780.75 கோடி செலவு மதிப்பீட்டிலான செயல் திட்டம் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. இந்த முதலீடு, அரசு, இப்பகுதியில் உள்ளடங்கிய உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் இப்பகுதியில் இயங்கும் மின்வாரியம் போன்ற பொது சேவை நிறுவனங்களால் மட்டுமின்றி பொதுத்துறை – தனியார்துறை பங்கேற்பின் மூலமும் மேற்கொள்ளப்பட வேண்டும். இச்செயல் திட்டத்தின் செயலாக்கத்தை மேற்பார்வையிட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், சென்னைப் பெருநகர் கட்டமைப்பு மேம்பாட்டுக்குழு எனும் உயர்நிலை அமைப்பு ஒன்றினை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர்ப் பகுதி தென்னிந்தியாவிலேயே சிறந்த நகரம் எனும் தனக்கே உரித்தான பழம் பெருமையை மீளப் பெறுவதை இது உறுதி செய்யும்.

## பணிகள் துறை

91. மாநிலத்தின் மொத்த மாநில உற்பத்திக் குறியீட்டில் (GSDP) பணிகள் துறையின் பங்கு, ஏறத்தாழ 50 சதவீதமாக அமைந்துள்ளது. இத்துறை, ஒட்டுமொத்த வளர்ச்சி இலக்கை எய்துவதற்கும் வேலைவாய்ப்பு வசதிகளை அளிப்பதற்கும் இன்றியமையாததாகும். இத்துறையில் பெரும் வளர்ச்சியைப் பெறுவதற்கேற்றவாறு தகுந்த கொள்கைகளை உருவாக்கவேண்டும்.

92. தகவல் தொழில்நுட்பவியல், நமது அன்றாட வாழ்க்கை முறையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தகவல் தொழில்நுட்பப் புரட்சியில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், 19.9.2002-ஆம் நாளன்று மாநிலத்தின் தகவல் தொழில்நுட்பக் கொள்கையை அறிவித்தார்கள் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இந்த விரிவான கொள்கையில், தகவல் தொழில்நுட்பத் தொழிலில் வளர்ச்சியை எய்துவதற்கு எடுக்கப்பட்டுவருகிற அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெற்றிருக்கின்றன. சென்னை பெருநகரப் பகுதி, தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகள் (ITES) துறைக்கான முக்கியமான விருப்பத் தேர்வு இடமாக மேம்படுத்தப்படும். இதில், நிறுவனங்கள், தங்களது தொழில்முறைத் தேவைகளை வெளிக்கொள்முதல் வாயிலாகப் பெறும் (BPO) பணிகளும் அடங்கும். தகவல் தொழில்நுட்பவியலை கையாளும் நடவடிக்கைகள் மற்றும் நிறுவனங்கள் தங்களது தொழில்முறை தேவைகளை கொள்முதல் வாயிலாகப் பெறும் பணிகளுக்கான உலகளாவிய மையமாகச் சென்னை உருவாகியுள்ளது. உலக வங்கி (World Bank), "ஏபிஎன் ஆம்ரோ (ABN Amro) வங்கி, ஸ்டேண்டர்டு சார்ட்டர்டு (Standard Chartered) வங்கி போன்ற முன்னணி வங்கிகளும், கவனமான தேர்வின் அடிப்படையில் சென்னையில், தங்களுடைய தொழில் முறை தேவைகளை கொள்முதல் செய்யும் மையங்களை (Business Process Centres) அமைத்துள்ளன. இந்த வலுவான கொள்கைத் திறன்களின் அடிப்படையில் நாம் மேலும் செயல்படுவோம். சென்னை பெருநகரப் பகுதியைத் தகவல் தொழில் நுட்பத்துறை சார்ந்த பேரிடரிலிருந்து மீட்கும் வசதிகளுடன் கூடிய முதல் அடுக்கு மையமாகவும், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாநகரங்களை இதற்குத் தக்க பக்கபலமாக இரண்டாம் அடுக்கு நிலை மையங்களாகவும் நாங்கள் உருவாக்குவோம்.

93. சென்னைக்கு அருகில் உள்ள சிறுசேரியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா உருவாக்கப்பட்டு வருகிறது என்பதை அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். சர்தார் பட்டேல் சாலையில் (காந்தி மண்டபம்) மத்திய கைலாசத்திற்கும், கிழக்கு கடற்கரை சாலைக்கும் இடையில் உள்ள நெடுஞ்சாலையை ஒரு விரைவுப் பாதையாக மாற்ற வேண்டும் என்பது, தகவல்

தொழில்நுட்பத் தொழிலின் ஒரு நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து வந்துள்ளது. ரூ.70 கோடி செலவில், உலகத்தரம் வாய்ந்த 6 வழி விரைவுப் பாதைத் திட்டத்தைச் செயற்படுத்த, தகவல்தொழில்நுட்ப எக்ஸ்பிரஸ் (ITEL) பாதை நிறுவனம் என்ற பெயரில் சிறப்பு நோக்க அமைப்பு ஒன்றை (Special Purpose Vehicle) ஏற்படுத்துவோம். இத்திட்டம், வருமாண்டில், பொதுத்துறை–தனியார் துறை பங்கேற்கும் வகையில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் (TNRDC) நிறைவேற்றப்படும். இந்தப் பெரு முயற்சி, தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பின்(IT Corrider) விரைந்த வளர்ச்சியை உறுதி செய்யும்.

**94.** இந்தத் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பின் ஓர் அங்கமாக, அறிவுத் திறன் சார்ந்த தொழில் நகரியம் (Knowledge Industry Township) ஒன்றை உருவாக்க இந்தியத் தொழில் குழுமத்துடன்(CII) இணைந்து செயல்பட்டு வருகிறோம். இந்த கருத்துருவின் மீதான முதல்நிலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்காக, இந்திய தொழில் குழுமம், உலகத் தரம்வாய்ந்த கலந்தாலோசனை நிறுவனம் ஒன்றை நியமித்துள்ளது. இந்தத் திட்டம் முழுவடிவம் பெற்றபின்னர் வருமாண்டில் இதற்கான பணிகளை மேற்கொள்வோம்.

**95.** தற்போதுள்ள டைடல் பூங்காவிற்கு அருகில் இரண்டாவது தகவல் தொழில்நுட்பப் பூங்காவை ஏற்படுத்துவதற்காக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், சிங்கப்பூரைச் சேர்ந்த திருவாளர்கள் ஆஸ்செண்டாஸ் (M/s. Ascendas) நிறுவனத்துடன் விரைவில் சேர்ந்து செயல்படவுள்ளது. இத்திட்டம், 15 ஏக்கர் பரப்பில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படும். மூன்று கட்டங்களில் மொத்தம் 1.5 மில்லியன் சதுர அடி கட்டமைப்பு இடவசதி ஏற்படுத்தப்படும். சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் ஒருங்கிணைந்த மேம்பாடு குறித்தும் நாங்கள் கவனம் செலுத்துவோம். இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவிற்கு ஒரு துணைத் திட்டமாக, இப்பகுதியில் தேவைக்கேற்ற உயர் தரமுள்ள வீட்டுவசதிகளை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. இந்த இடத்தில் சிப்காட் நிறுவனம் சிங்கப்பூரிலுள்ள ஒரு கூட்டமைப்பின் துணையுடன் ஒருங்கிணைந்த வணிக மற்றும் வீட்டுவசதித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதனால், இவ்விடத்தில் நிறுவனங்கள் தங்களது தொழில்முறைத் தேவைகளை வெளிக்கொள்முதல் செய்யும் மையங்களை (BPO) நிறுவுவதற்கும், தகவல் தொழில்நுட்பவியலைச் சார்ந்த பணி நிறுவனங்களை (ITES) துவக்குவதற்கும் வழி வகுக்கும்.

**96.** பணிகள் துறையில் சுற்றுலா முக்கியப் பங்கினை வகிக்கிறது. தமிழ்நாட்டை பெரியதொரு சுற்றுலா மையமாக தக்கமுறையில் விளம்பரப்படுத்த வேண்டும். தமிழ்நாட்டை இத்தகைய சுற்றுலா மையமாக மாற்றுவதற்கு, புகழ்பெற்ற விளம்பர நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்புகிறோம். பல்வேறு சுற்றுலா மையங்கள் மற்றும் தலங்களில் தக்க பொது கட்டமைப்பு வசதிகளை அரசு உருவாக்க வேண்டும். வரவு–செலவுத் திட்டத்தில் சுற்றுலாத் துறைக்கென, ரூ.26.79 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேவை அடிப்படையில் இது மேலும் உயர்த்தப்படும்.

**97.** மத்திய அரசின் நிதியுதவியுடன், மாமல்லபுரத்தை மேம்படுத்துவதற்காக ரூ.19 கோடி செலவிலான ஒரு பெரும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். எங்கள் திட்டத்தில், மாமல்லபுரம், கன்னியாகுமரி, ஊட்டி, ஏற்காடு, கொடைக்கானல் போன்ற முக்கியமான சுற்றுலா இடங்களைக் கண்டறிந்து, அவைகளை விரிவான முறையில் மேம்படுத்தும் பணிகளும் அடங்கியுள்ளன. குறிப்பிட்ட சுற்றுலாத் தடங்களின் (Tourist Circuit) மீது ஒருமித்த கவனம் செலுத்தப்படும். ஏனைய சுற்றுலா தலங்களில் அனைத்து வசதிகளையும் மேம்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படும்.

**98.** சுற்றுலா மேம்பாட்டிற்குத் தக்க வசதிகளைச் செய்து கொடுக்கும் முக்கிய அமைப்பாக அரசு செயலாற்ற வேண்டும். 31.12.2002 முதல் விடுதிகளில் தங்கியிருப்பவர்கள் செலுத்த வேண்டிய ஆடம்பர வரியை அதிகபட்சமாக 12.5 சதவீதம் அளவிற்குக் குறைத்துள்ளோம். 31.12.2002 முதல் கேளிக்கைப் பூங்காவிற்கான நுழைவுக் கட்டணம் மீது விதிக்கப்படும் ஆடம்பர வரியை, 10 சதவீதமாகக் குறைத்துள்ளோம். தமிழ்நாட்டில் சுற்றுலாத்துறையைப் பெருமளவில் ஊக்குவிப்பதே இவற்றின் நோக்கமாகும்.

**99.** இந்தியாவிலேயே முதல்முறையாக, சுற்றுலா குறித்த பன்னாட்டு (SKAL) எஸ்கேஏஎல் மாநாடு, 2003 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெறும். சென்னைப் பெருநகர்ப் பகுதி உலகளவில் தொழில் முறை தேவைகளை வெளிக் கொள்முதல் மூலம் பெறும் மையமாக (Outsourcing Hub) உருவாகி வரும் அதே நேரத்தில், சுற்றுலாத் துறையும் பெருமளவு முன்னேற்றத்தை எய்தும் என்று நாங்கள் உறுதியுடன் நம்புகிறோம்.

## மனிதவள மேம்பாடு

**100.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மனிதவள மேம்பாட்டிற்குச் செய்யப்படும் முதலீடு, பொருளாதார மாற்றங்களுக்கும், அனைத்து குடிமக்களுக்கும் உற்பத்தித் திறனுடன் கூடிய வாழ்க்கையை உறுதி செய்வதற்கும், இன்றியமையாதது ' என்பதை உணர்ந்துள்ளார்கள். கல்வி, நுட்பத்திறன் பெறுதல், தகவல்களை அறிதல் ஆகியவை, அறிவுத்திறனுள்ள சமுதாயத்தை உருவாக்க அடிப்படையாக அமைகின்றன. முறையாகத் திட்டமிட்ட முதலீடுகள் மற்றும், கல்வி, சுகாதாரம், குடும்பநலன், சமூக மேம்பாடு குறித்த பல்வேறு திட்டங்களை ஒருமுகப்படுத்தி செயற்படுத்துதல் ஆகியவை, விரைவான, தரமான மனிதவள மேம்பாட்டை உறுதி செய்ய முக்கிய பங்காற்றுகின்றன.



**101.** அனைவருக்கும் கல்வி என்ற வகையில் 2001–2003 க்கான கால அளவில், 756 தொடக்கப்பள்ளிகளையும் 676 நடுநிலைப்பள்ளிகளையும் தொடங்கியுள்ளோம். 15க்கும் குறைவாக பள்ளி செல்லும் சிறார்கள் உள்ள சிறு குடியிருப்புப் பகுதிகளுக்குப் பயன் அளிக்கும் வகையில், 356 கல்வி உத்தரவாதத் திட்ட மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. முறையாகப் பள்ளிக்குச் சென்று பயிலும் வசதியற்ற சிறார்களையும் இத்திட்டத்தின் மூலம் முழுமையாக பயன்பெறச் செய்ய முடியும். தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலும் பள்ளிக்கூடம் ஒன்று அமையப் பெறவேண்டும் என்ற இலக்கு 2003–2004-ஆம் ஆண்டில், எய்தப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**102.** இடைநிலைக் கல்வி, இப்போது உயர் முன்னுரிமையை பெற்றுள்ளது. இந்த அரசு, 2001–2003 கால அளவில், 220 உயர் நிலைப் பள்ளிகளையும், 260 மேனிலைப் பள்ளிகளையும் ஏற்கெனவே தொடங்கியுள்ளது. 30 புதிய உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 30 மேனிலைப் பள்ளிகள் 2003–2004-ஆம் ஆண்டில் தொடங்கப்படும். உயர்நிலை மற்றும் மேனிலை பள்ளிகளின் வசதிகளை நிலை உயர்த்துவதற்கான திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, வரும் ஆண்டில், ரூ.80.64 கோடி திட்டச் செலவில், 19 மாவட்டங்களில் 250 பள்ளிகள் எடுத்துக்கொள்ளப்படும். உயர்நிலைப் பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகளின் தரமேம்பாடு, கல்வி நிறுவனங்களில் அதிக அளவில் மாணவர்களைத் தக்கவைக்க வழிவகுக்கும்.

**103.** தமிழ்நாட்டை, அறிவுத் திறன்பெற்ற, கணினி அறிவு மிக்க சமுதாயமாக மாற்ற வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையினை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் கொண்டுள்ளார்கள். பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் கட்டாயக் கணினி கல்வி அளிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. 2003–2004-ஆம் ஆண்டில், கணினி மயமாக்கும் திட்டத்தின் கீழ், 200 மேனிலைப் பள்ளிகளைக் கொண்டு வரவேண்டுமென இந்த அரசு கருதுகிறது. வரும் ஆண்டில் 50 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 75 மேனிலைப் பள்ளிகளுக்கும், அறிவியல் சாதனங்கள் வழங்கப்படும். புதிதாக உதயமாகும் துறைகளில் (Sunrise Sectors) தக்க வேலைவாய்ப்புகளைப் பெற ஆங்கிலம் மிக இன்றியமையாத ஒன்றாக இருப்பதால், ஆங்கில மொழி கற்பிப்பதில் தனி முக்கியத்துவம் அளிக்கப்படும். வரும் ஆண்டில் ரூ.1.69 கோடி செலவில், 300 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேனிலைப் பள்ளிகளில், ஆங்கில மொழி கற்பிப்பு ஆய்வகங்கள் தொடங்கப்படும்.

**104.** அரசு உறுதி அளித்தவாறு, வேலூரில், திருவள்ளுவர் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



நடப்பு ஆண்டில், தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக் கழகம் பணிகளைத் தொடங்கியுள்ளது. மாநிலத்திலுள்ள அரசுக் கல்லூரிகள் பல்வேறு பல்கலைக் கழகங்களுக்கு மாற்றப்பட்டதையடுத்து, அந்தக் கல்லூரிகளுக்கென, விரிவான வளர்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்லூரிகளில், வேலை நோக்குடைய பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுவதும் இதில் அடங்கும். இந்தக் கல்வி நிறுவனங்களை நிலை உயர்த்த தேவையான நிதியுதவிக்காக, பல்கலைக்கழக மானியக் குழுவை அணுகியுள்ளோம்.

**105.** சுயநிதிக் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில், இது குறித்து உச்சநீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பின் அடிப்படையில், இந்த அரசு ஒரு தெளிவான கொள்கையை வகுத்துள்ளது. நம்முடைய மாநிலம் நாட்டிலேயே அதிக அளவில் பொறியியல் கல்லூரிகளையும் அதிக அளவில் மாணவர் சேர்க்கையையும் கொண்டுள்ளது. நம்முடைய அறிவியல் மனித ஆற்றல், உலக அளவில் பெருமளவில் விரும்பிக் கேட்கப்படும் வகையில், தொழில்நுட்பக் கல்லூரிகள் தங்களது கட்டமைப்பு வசதிகளையும், பயிற்சித் தரத்தையும் மேம்படுத்திக் கொள்ளச் செய்வதே நம்முடைய முக்கியமான முயற்சி ஆகும். தமிழ்நாட்டிலுள்ள 240 பொறியியல் கல்லூரிகளை ஒரே இணையமைப்பின் கீழ் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் நல்வாழ்வு - குடும்ப நலன்

**106.** தொடக்க நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைகளில் சிறந்த சுகாதாரக் கவனிப்பு வசதிகளை அதிகரிப்பதன் மூலம் மக்களின் சுகாதார நிலையை மேம்படுத்த இவ்வரசு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. 2003–2004-ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மக்கள் நல்வாழ்வு–குடும்ப நலனுக்காக ரூ.1380.48 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



107. தொடக்க நிலையில், கிராமங்களில் 8682 சுகாதார துணை நிலையங்கள் உள்ளன. இவற்றில், 6052 சுகாதார துணை நிலையங்களுக்குக் கட்டிட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில், 385 புதிய சுகாதாரத் துணை நிலையங்களுக்குக் கட்டடம் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. வரும் நிதி ஆண்டில், மேலும் 300 நிலையங்களுக்குக் கட்டட வசதி செய்து தரப்படும். தொடக்கச் சுகாதார மையங்களை 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைகளாக மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது குறித்து இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இதுவரையிலும், 58 தொடக்கச் சுகாதார நிலையங்கள் நிலை உயர்த்துவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 2003–2004–ஆம் ஆண்டில், மேலும் 35 தொடக்கச் சுகாதார நிலையங்களை நிலை உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. இவ்வகையில் இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 100 ஆகும். வட்ட மருத்துவமனைகள், அவ்வாறு அல்லாத ஏனைய மருத்துவமனைகள் மற்றும் நிலை உயர்த்தப்பட்ட 100 தொடக்கச் சுகாதார மையங்கள் ஆகியவற்றின் பணி வசதிகளைக் கொண்டு, இம்மாநிலத்திலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் சிறந்த மருத்துவக் கவனிப்பு வசதிகள் எளிதாகக் கிடைப்பதை உறுதி செய்வதே எங்களுடைய நோக்கம் ஆகும்.

108. தொடக்கச் சுகாதார கவனிப்பு குறித்து, தொடர்ந்து எங்களுடைய தனிக் கவனம் செலுத்தப்படுகின்ற அதே நேரத்தில், இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைகளில் உள்ள மருத்துவ வசதிகளை வலுப்படுத்தவும் நாங்கள் செயல்படுவோம். ரூ.2.62 கோடி செலவில், தெரிந்தெடுக்கப்பட்ட மருத்துவ மனைகளில், கூடுதல் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வரவு–செலவுத் திட்டம் வகை செய்கிறது. அடுத்த நிதியாண்டில் ரூ.6.20 கோடி செலவில் மூன்றாம் நிலை மருத்துவமனைகளில் நவீன நோயறி வசதிகளை ஏற்படுத்தத் தனிக் கவனம் செலுத்தப்படும். இதில் சென்னையில் உள்ள மகளிர் நோயியல் மற்றும் மகப்பேறு மையம், மேலும் மகளிர் – குழந்தைகளுக்கான அரசினர் மருத்துவமனையில் ரூ. 2 கோடி செலவில் பிரசவப் பிரிவிற்கு இடவசதி அளிப்பதற்காகப் புதிய கட்டடங்கள் கட்டுவதும் அடங்கும். சென்னை அரசினர் மருத்துவமனையில் உள்ள பொன்னாட்டு கதிர்வீச்சியல் மையம், ரூ. 50 இலட்சம் செலவில் முழுமையாக நிலை உயர்த்தப்படும். கரூர் அரசினர் தலைமையிட மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக் கூடத்துடன் கூடிய 24 படுக்கை வசதிகள் கொண்ட பிரசவப் பிரிவிற்குக் கட்டடம் கட்டுவதற்கும் வரவு–செலவுத் திட்டத்தில் நிதியொதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலையில் உள்ள அரசினர் தலைமையிட மருத்துவமனையில் 48 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவச் சிகிச்சைப் பரிவு ஒன்று கட்டப்படும்.




109. ஏற்கத்தக்க பயனீட்டாளர் கட்டணங்களின் மூலம் தரமான மருத்துவக் கவனிப்பும், பணி வசதியும் கிடைக்குமாறு செய்யும் கொள்கை மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. சந்தை நிலவர கட்டணத்துக்கும் குறைவாக, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் வழங்கும் சி.டி. ஸ்கேன் (CT Scan) மற்றும் எம் ஆர்ஐ (MRI) மருத்துவ வசதிகளுக்கான கேட்பு மற்றும் அவை பெற்றுள்ள பிரபலத்தன்மை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். மாவட்ட மருத்துவமனைகளில் படிப்படியாக கட்டணம் வழங்கி சிகிச்சை பெறும் பிரிவுகளைக் கொண்டுவருவதன் மூலம் இந்த அணுகுமுறையை நாங்கள் மேலும் விரிவுபடுத்துவோம். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள அனைவருக்கும் முற்றிலும் இலவசமாக, மருத்துவ வசதிகள் அளிப்பதே எங்களுடைய கொள்கை ஆகும். ஏற்கத்தக்க செலவில் தரமான மருத்துவச் சிகிச்சை பெற விரும்புகின்ற, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் தொகுதியினருக்கு சந்தை நிலவர கட்டண விதங்களுக்கும் குறைவாக மருத்துவப் பணிகளை நாங்கள் அளிப்போம். தமிழ்நாடு, அதிலும் குறிப்பாக சென்னை மாநகரம், மருத்துவப் பணி வசதிகளுக்கு பெரும் பெயர் பெற்றுள்ளது. சென்னை மாநகரம் இந்தியாவின் மருத்துவ வசதித் தலைநகரம் என சரியாகவே அழைக்கப்படுகிறது. உலகெங்கிலும் மருத்துவப் பணியாளர்களைப் பயிற்றுவிப்பதில் இங்குள்ள நிறுவனங்களை ஈடுபடுத்துவதற்கான திட்டமொன்றைத் தீட்ட உள்ளோம்.



110. தமிழ்நாட்டில் தோராய குழந்தை பிறப்பு வீதம் (Crude Birth Rate) 1996 -ஆம் ஆண்டில் 1000 மக்கள் தொகைக்கு 19.5 என்ற அளவில் இருந்தது. இது, 2000 ஆம் ஆண்டில் 1000 மக்கள் தொகைக்கு 19.2 என்ற அளவில் முடங்கியுள்ளது. எனவே, குடும்ப நலத் திட்டங்களை நாம் தீவிரப்படுத்த வேண்டியுள்ளது. வரும் நிதியாண்டில் இதற்குத் தனிக் கவனம் செலுத்தப்படும். குழந்தை இறப்பு வீதம், வளரிளம் பெண்களில் இரத்த சோகை, எடைக் குறைவான குழந்தைகள் பிறப்பது ஆகியவை போன்ற முக்கியமான உயிர் ஆதாரமான பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியுள்ளது. குழந்தை இறப்பு வீதம், 1996 -ஆம் ஆண்டில் 53 ஆக இருந்தது. அது, 2000 -ஆம் ஆண்டில் 51 ஆக மட்டுமே குறைந்துள்ளது. நமது அடிப்படை சுகாதாரக் குறியீடுகளில், விரைந்த முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கு, சிறப்புத் திட்டங்களை நாம் செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தை இது தெளிவுபடுத்துகிறது. மொத்தம் ரூ. 650 கோடி செலவில், உலக வங்கி நிதியுதவியுடன் மருத்துவ அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டம் (Health Systems Development Project) 2003–2004 -ஆம் ஆண்டில் செயல்படுத்த ஒப்புதல் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

## ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்

111. மனிதவள மேம்பாட்டில், தனிப்பட்ட சமூகத் தொகுதியினரைச் சேர்ந்தவர்களின் நலத் தேவைகளுக்குத் தனிக்கவனம் செலுத்துவதும் அடங்கும். இத் தொகுதியினர், வளர்ச்சிப் பணியின் முக்கிய நீரோட்டத்தில் கலந்து பயன்பெறும் வகையில், அவர்களுடைய நலனுக்கான திட்டங்களைச் செயற்படுத்துவது எங்களுடைய முயற்சியாக இருக்கும்.

112. 2003–2004 -ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்கான ஒதுக்கீடு ரூ.439.05 கோடி ஆகும். ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர உதவும் வகையில், முந்தைய கடன் படிப்புதவித் தொகை திட்டத்திற்குப் பதிலாக, சிறப்புப் படிப்புதவி மானியத் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை அறிந்து இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். வரவு–செலவுத் திட்டத்தில், சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ், பள்ளிக் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் ரூ.18.28 கோடியும் அடங்கும். வரவு – செலவுத் திட்டத்தில், 2003–2004-ஆம் ஆண்டில் ரூ..47.25 கோடி செலவில், 150 புதிய மாணவர் இல்லக் கட்டடங்கள் கட்டுவதற்கும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிமுகப்படுத்தப் பட்ட, மேனிலைப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கும் உன்னதமான திட்டம், பெரிதும் வரவேற்கப் பெற்றுள்ளது. நடப்பாண்டில், 47,980 மிதிவண்டிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. மேனிலைப் பள்ளிகளில் XI ஆம் வகுப்பில் புதிதாகச் சேரும் மாணவியர்களுக்குப் பயனளிக்கும் வகையில், இத்திட்டத்திற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.7.49 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவியர்களிடையே எழுத்தறிவை மேம்படுத்துவதற்கான சிறப்பு ஊக்கத் திட்டங்களுக்காக ரூ.6 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

113. வருமாண்டில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் (தாட்கோ) வறுமை ஒழிப்புச் செயல்திட்டத்தின்கீழ் 1.59 இலட்சம் பயனாளிகள் பயன்பெறுவர். இத்திட்டம், ஆதிதிராவிடர் / பழங்குடியினரிடையே வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்கு சுயவேலைவாய்ப்பு அளிக்க உதவும். இத்திட்டத்தின் செயல்பாடு முழுவதும் பரவலாக்கப்பட்டு தற்போது மாவட்ட ஆட்சியாளர்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பில் உள்ளனர். வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதில் உள்ள தடைகளை நீக்கி, கடன்கள்பெறுவது எளிதாக்கப்பட்டுள்ளது. இதில், வருமாண்டில் நல்ல முன்னேற்றம் காணப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.




114. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், சீர்மரபினர் ஆகியோருக்கான பல சிறப்புத் திட்டங்களும்



226155

இந்த வரவு–செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. ரூ.31.50 கோடி செலவில் 100 மாணவர் இல்லக் கட்டிடங்கள் புதிதாகக் கட்டப்படும். வருமாண்டில் 48 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

115. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளிப்பதற்கான பல திட்டங்களை மேற்கொண்டுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த பல நபர்கள் சுய வேலைவாய்ப்புப் பெற உதவி அளிப்போம். சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த நபர்களுக்கும் நடப்பாண்டில் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் 2003–2004 ஆம் ஆண்டில் தீவிரப்படுத்தப்படும்.

## சமூகப் பாதுகாப்புறுதித் திட்டம்

116. இந்த வரவு – செலவுத் திட்டத்தில் மேம்பாட்டிற்கான ஆறு விரிவான கொள்கைகளை நான் குறிப்பிட்டுள்ளேன். இவைகளுள் சமூகப் பாதுகாப்புறுதித் திட்டத்திற்கு வகை செய்வது ஒரு முக்கியமான கொள்கையாகும். இந்தியப் பொருளாதார தாரளமாயமாக்கல் நடவடிக்கைகள், 1991 ஆம் ஆண்டில் தொடங்கின. அதிலிருந்து, தேசிய பொருளாதாரத்தில், பல அமைப்பு ரீதியிலான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பொருளாதார சீரமைப்பு நடவடிக்கைகளின் பாதகமான விளைவுகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க, போதிய அளவிற்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டியது அவசியமாகிறது. ஏழை மற்றும் வசதிவாய்ப்பற்ற மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இத்தகைய தொலைநோக்கு சிந்தனையுடன்தான், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், அமைப்பு ரீதியான சரிக்கட்டல் சீர்திருத்த நடவடிக்கைகளின்போது, ஏழைகள் மற்றும் வறியோர்களைப் பாதுகாக்க, தம்முடைய முந்தைய ஆட்சியின்போது, சமூகப் பாதுகாப்புறுதித் திட்டத்தைத் தொடங்கினார்கள். தமிழ்நாட்டில், சமூகப் பாதுகாப்புறுதித் திட்டத்தை மேலும் வலுப்படுத்த, இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். நிதிநிலைக் குறிப்பில், ஒரு தனி இணைப்பு சமூகப் பாதுகாப்புறுதி திட்டத்திற்கான ஒதுக்கீட்டு அளவுகளை எடுத்துக் காட்டும் வகையில் சேர்க்கப்பட்டுள்ளது. சமூகப்பாதுகாப்புத் திட்டத்திற்கு, 2003–2004 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.4232.29 கோடி ஆகும். இதில், பொருளாதார சீர்திருத்த மாற்ற காலத்தில், ஏழைகள் மற்றும் வறியோர்களைப் பாதுகாப்பதற்கான செலவினங்களும் அடங்கும். இந்தச் சமூகப் பாதுகாப்புறுதித் திட்டத்தை காத்து அதை மேலும் விரிவு படுத்துவதில், எங்களது நிலைமாறாத முயற்சிகளை இது எடுத்துக் காட்டுகிறது.

## மகளிர், சிறார், முதியோர் மற்றும் ஏலாமையுற்றோர் நலன்

117. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மாநிலத்தில் மகளிருக்கு அதிகாரம் அளித்தல் மற்றும் சிறார் நிலை உயர்வு பெறுதல் ஆகியவற்றிற்கான அரசின் கொள்கை நோக்கங்களை கொண்ட 18 அம்ச திட்டத்தை வகுத்துள்ளார்கள். திட்டச் செயல்பாட்டில், பெண்சிசுக் கொலை ஒழிப்பு, பேறுகாலத்தின்போது தாய், சேய் இறப்பு வீதத்தைக் குறைத்தல், பச்சிளம் குழந்தைக்காப்பு மற்றும் மேம்பாடு, குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல், கட்டாயப் பள்ளிப்படிப்பு, நுட்பத் திறன் பெறுதல் மற்றும் சுய உதவிக்குழு அமைத்தல்மூலம், பொருளாதாரத் தன்னிறைவுக்கான சிறப்பு உதவி அளித்தல் ஆகியவை முக்கிய அம்சங்களாகும். 18 அம்சங்கள் அடங்கிய இத்திட்டத்தின் அனைத்து இனங்களிலும் நாங்கள் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளோம்.



118. தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைப்பதை ஊக்குவிப்பதில், வியக்கத்தக்க அளவில் நாம் முன்னேற்றம் அடைந்துள்ளதை நான் குறிப்பிட விரும்புகிறேன். தற்போது 20.84 இலட்சம் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட 1.22 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இக்குழுக்களின் தற்போதைய சேமிப்பு ரூ.277.54 கோடி ஆகும். வரும் ஆண்டில் 5 இலட்சம் கூடுதலான மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட புதிய 25,000 சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்துவது நம்முடைய நோக்கமாகும். இத்திட்டத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.22.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். மகளிருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் வரும் ஆண்டில் 1 இலட்சம் மகளிர் பயனடையும் வகையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். அடுத்த ஆண்டில் சுமார் 50,000 மகளிருக்குத் தொழில் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும்.

119. தமிழ்நாட்டிலும், வெளிமாநிலங்களிலும் பெரும் பாராட்டைப் பெற்றுள்ள மாண்புமிகு முதலமைச்சரின் தொட்டில் குழந்தைத் திட்டம், 2003–2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். புதுமையாகவும் வெற்றிகரமாகச் செயல்படுத்தும் வகையிலும் திருத்தியமைக்கப்பட்ட பெண் குழந்தைப் பாதுகாப்பிற்கான புதிய திட்டம் ரூ.14 கோடி ஒதுக்கீட்டில் 2003–2004 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். பழைய திட்டத்தின் கீழ், நிலுவையாகவுள்ள விண்ணப்பங்களுக்கு, ஏற்பளிப்பதற்கு ரூ.6.17 கோடி ஒதுக்கீடும், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் செய்யப்படுகிறது.




120. சமூகப் பாதுகாப்புறுதித் திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாக விளங்கும், சத்துணவு திட்டச் செயல்பாடுகளில், தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டை பசிப் பிணியற்ற, சத்துணவுக் குறைவற்ற மக்களைக் கொண்ட மாநிலமாக ஆக்குவதற்கு, இந்த அரசு மனித வாழ்க்கையின் அனைத்து நிலைகளுக்கும் பொருந்திய அணுகு முறையைப் (Life Cycle Approach) பின்பற்றி வந்துள்ளது. இத்திட்டத்தில், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், பச்சிளங்குழந்தைகள், பள்ளி செல்லும் சிறார்கள், வளர் இளம் பெண்கள், வயது முதிர்ந்த பயனாளிகள் ஆகியோர் அடங்குவர். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், தேசிய சத்துணவு இயக்கம், அன்னபூர்ணா மற்றும் அந்த்யோதயா(Anna Poorna and Antyodaya Schemes) திட்டங்கள் மற்றும் திருக்கோயில்களில் மேற்கொள்ளப்படும் உன்னதமான அன்னதானத் திட்டம் போன்ற பல திட்டங்கள் இவற்றை மெய்ப்பித்துக் காட்டுகின்றன. கடுமையான நிதி நெருக்கடியிலும் வழங்கப்படும் சத்துணவின் தரத்தில் தக்க மேம்பாடு இருக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதனைக் கருத்தில் கொண்டு, குழந்தை ஒன்றுக்கு, காய்கறி மற்றும் சுவையூட்டும் பொருளுக்கான, ஒதுக்கீட்டு அளவு 23 பைசாவிலிருந்து 35 பைசாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் கூடுதலாக ரூ.20.98 கோடி நிதியொதுக்கீடு சேர்க்கப்பட்டுள்ளது. மதிய உணவுத் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு எவர்சில்வர் டம்ப்ளர்கள் மற்றும் தட்டுகளை வழங்குவதற்காக ரூ.1 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாலர் பள்ளி மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான மதிய உணவு மையங்களின் செயல்பாட்டில் கிராம சமுதாயத்தினரையும் நாம் ஈடுபடுத்த வேண்டும். இதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும்.

121. தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகையில் முதியோரின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளதாக 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு காட்டுகிறது. மூத்த குடிமக்கள் கண்ணியமாக வாழ வகைசெய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும். பல்வேறு முதியோர் உதவித் தொகைத் திட்டங்களுடன், முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கு இலவசச் சேலை, வேட்டிகள் வழங்குவதற்காக, 2003–2004 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், ரூ.16.80 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நமது மாநிலத்திலுள்ள முதியோரை, தற்போதுள்ள சத்துணவு மற்றும் சிறார் பாதுகாப்பு மையங்களில் பயனுள்ள வகையில் ஈடுபடுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி பரிசீலிக்க அரசு கருதியுள்ளது. ஏற்கத்தக்க கட்டண அடிப்படையில் முதியோர் இல்லங்களை அமைக்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை நாங்கள் தொடர்ந்து ஊக்குவிப்போம்.

122. ஏலாமையுற்றோரின் நலனுக்கு அரசு தொடர்ந்து உயர் முன்னுரிமை அளிக்கும். நமது மாநிலத்திலுள்ள ஏலாமையுற்றோரின் எண்ணிக்கை குறித்த விரிவான ஆய்வு, தற்போது நடத்தப்பட்டு வருகிறது. மாநில வாய்ப்புவள மையம் (State Resource Centre) ஒன்று விரைவில் அமைக்கப்படும். ஏலாமையுற்றோரின் தனித் தேவைகளை நிறைவு செய்வதற்காக மறுவாழ்வுப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பது குறித்து நாங்கள் கவனம் செலுத்துவோம். தேவைக்கேற்ப உடலூனமுற்றவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான தற்போதுள்ள பல்வேறு திட்டங்கள் சீரமைக்கப்படும். கடுமையாக ஏலாமையுற்றோரின் பராமரிப்பிற்காக, 2003–2004 வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1.38 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏலாமையுற்றோரின் மறுவாழ்விற்கான தேசியத் திட்டத்தின் கீழ் ரூ. 2 கோடி நிதியொதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

## சமூகப் பாதுகாப்பு

123. அமைப்புச்சாரா தொழிலாளர்கள் உள்ளடங்கிய பல்வேறு தொகுதியினருக்கு ஆதரவு அளிப்பது சமூகப்

பாதுகாப்புத் திட்டங்களில் அடங்கும். ஏனையோருடன், மீனவர்கள், நெசவாளர்கள், கைவினைஞர்கள் ஆகியோரும் இதில் அடங்குவர். இந்தத் தொகுதியினர் அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பு அளிப்பது குறித்து விரிவாகப் பரிசீலிக்க வேண்டியுள்ளது. குறைந்தபட்ச ஓய்வூதியம் பெறுதல் மற்றும் போதிய மருத்துவ வசதிகளைப் பெறுதல் ஆகியவைகளும் இவற்றுள் அடங்கும்.

**124.** இலவச மருத்துவ வசதி பெற விரும்புகிற அனைவருக்கும், குறிப்பாக, வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு, அரசின் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை மருத்துவ வசதி ஏற்பாடுகள் வகை செய்கின்றன. இவைதவிர வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்களுக்கான புதிய மருத்துவக் காப்புறுதித் திட்டம் ஒன்றையும் மத்திய அரசு அறிவித்துள்ளது. அரசு, இத்திட்டம் குறித்த விவரங்களைப் பரிசீலித்து, பாதிப்புக்குள்ளாகும் அனைத்துத் தொகுதியினரும் விரைவில் பயன் பெறும் வகையில் இதை விரிவு படுத்தும். இந்திய ஆயுள் காப்புறுதி நிறுவனம் தொடங்கவுள்ள புதிய ஓய்வூதியத் திட்டம் ஒன்றை மத்திய அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், மாதாந்திர ஓய்வூதியம், குறைந்தபட்சத் தொகையாக ரூ.250 ஆகவும் அதிகபட்சத் தொகையாக ரூ.2000 ஆகவும் இருக்கும். வேண்டியவர்க்கு சமூகப்பாதுகாப்புத் திட்டப் பயன் சென்றடையும் வகையிலும், அமைப்புசாரா தொழிலாளர்கள் அனைவரையும் இத்திட்டத்தில் சேர்க்கும் வண்ணமும், தக்க நடவடிக்கைகளைப் பரிசீலிக்க பணிக்குழு ஒன்று ஏற்படுத்தப்படும்.

**125.** பாதிப்புக்குள்ளாகும் பல்வேறு தொகுதி யினருக்கு தமிழ்நாடு அரசு நேரடியாக வரவு–செலவுத் திட்டத்திலிருந்து உதவித் தொகை வழங்கிவருகிறது. இத்திட்டங்களின் கீழ் 12.92 இலட்சம் பயனாளிகள் பயன் பெறுகின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.325.61 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### தமிழ் வளர்ச்சி

**126.** தமிழ்நாட்டின் வளமான பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணிக்காக்க, இவ்வரசு, பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. தமிழை மைய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்குமாறு மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம். நம்முடைய வரலாற்றுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாக்க நாம் தொடர்ந்து முயற்சிகள் எடுத்து வருகிறோம். வரும் நிதியாண்டில் இதற்கென வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.3.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### அரசுப் பணியாளர் நலன்

**127.** அரசின் வளர்ச்சி மற்றும் நலப் பணிகளில் அரசுப் பணியாளர்கள் முக்கியமான பங்காற்றுகிறார்கள் என்பதை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. தீவிரமான நிதி நெருக்கடி நிலவும் நேரத்தில் அரசுப் பணியாளர்கள் தாங்களும் அந்த நிலையை சமாளிப்பதில் பங்கேற்க முன்வரவேண்டும். தனது பணியாளர்களின் நலனை உறுதிசெய்வதே இவ்வரசின் கொள்கையாகும். தீவிரமான நிதி நெருக்கடி நிலையில் சம்பளம் மற்றும் படிகளில் உயர்வு வேண்டும் என்ற அரசுப் பணியாளர்களின் கோரிக்கைகளை ஏற்பது மிகக் கடினம் எனினும், 1.4.2003 முதல் கூடுதல் அகவிலைப்படித் தவணை ஒன்றை அரசுப் பணியாளர்களுக்கு வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்துள்ளார்கள். 3 சதவீத அகவிலைப்படி உயர்வினைக் கொண்ட இந்த கூடுதல் தவணையை வழங்குவதற்கு, ஓராண்டுக்கு ரூ.200.91 கோடி செலவாகும். 1.10.2002 முதல் 4 சதவீத அகவிலைப்படி உயர்வு கொண்ட தவணையில், 3 சதவீதம் ரொக்கமாகவும் 1 சதவீதம் பொது வருங்கால வைப்பில் வைக்கப்பட்ட கூடுதல் அகவிலைப்படித் தவணையை 1.4.2003 முதல் முழுவதும் ரொக்கமாக வழங்கப்படும் எனவும் இவ்வரசு முடிவு செய்துள்ளது. மிகமோசமான நிதி நிலைமையிலும் இவ்வரசு கூடுதல் அகவிலைப்படித் தவணையை வழங்க முடிவு செய்துள்ள இந்த அறிவிப்பை அரசுப் பணியாளர்கள் வரவேற்பார்கள் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

**128.** பெருத்த வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு அதனை நிறைவேற்றாமல் கைவிடுவது மிக எளிது. ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்திய பின்னர் நிலுவைத் தொகைகள் வழங்கப்படும், என்று பகட்டாக அறிவித்துவிட்டு பின்னர், அதில் 60 சதவீதத்தை எதிர்காலத்தில் பொறுப்பேற்கும் ஓர் அரசு கொடுக்கும் என்று முந்தைய அரசு முடக்கிவைத்ததை நான் இங்கு குறிப்பிடுகிறேன். நடப்புக்காலப் பொறுப்புகளை ஏற்பதற்கும், ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட சலுகைகளை அளிப்பதற்கும் போதிய நிதி ஆதாரங்களற்ற நிலையில்தான் நாங்கள் பொறுப்பேற்றோம். அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும், சமூகப் பாதுகாப்புறுதித் திட்டத்தையும் முற்றிலுமாகக் கைவிட்டாலன்றி, ரூ.1800 கோடி அளவிற்கான இந்த நிலுவைத் தொகைகளை வழங்குவது இயலாது. நம்மால் இதனைச் செய்ய இயலாது. அதே நேரத்தில், அரசு இந்த நிலுவைத் தொகைகளை வழங்கும் நிலையில் இல்லை என்பதை அரசுப் பணியாளர்களும் அறிவர். நாங்கள் இதனை வெகு கவனமாகப் பரிசீலித்துள்ளோம். கீழ்க்காணும் முடிவுகளை நான் அறிவிக்கிறேன்.

- 1.1.1996 முதல் 31.3.1998 வரை ஓய்வுபெற்ற பணியாளர்களின் ஓய்வூதியங்களை ஒப்படை செய்து பணம் பெறும் திட்டத்தின் (Commutation) கீழான நிலுவைத் தொகைகள் 2003–2004 ஆம் நிதியாண்டில் தொடங்கி மூன்று ஆண்டுத் தவணைகளில் வட்டியுடன் வழங்கப்படும்.



- 1.1.1996 முதல் 31.3.1998 முடிய ஓய்வுபெற்ற பணியாளர்களைப் பொறுத்தமட்டில் பணிக் கொடை (Gratuity) நிலுவைத் தொகையும் 2003–2004 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டு காலத்தில் ஆண்டுத் தவணைகளில் சிறுசேமிப்புப் பத்திரங்கள் மூலம் வழங்கப்படும்.

- 1.1.1996 முதல் 31.3.2003 வரையிலான காலத்தில் ஓய்வுபெற்றோருக்கு சம்பளம் மற்றும் படிகள் ஆகியவற்றில் நிலுவைத் தொகையில் 60 சதவீதத் தொகை வட்டியுடன் 1.4.2003 முதல் வட்டி இல்லாத வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு 2003–2004 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டு காலத்தில் ஆண்டுத் தவணைகளில் சிறுசேமிப்புப் பத்திரங்கள் மூலம் வழங்கப்படும்.

- தற்போது பணியிலிருப்பவர்களுக்கு 60 சதவித சம்பளம் மற்றும் படிகள் நிலுவைத் தொகை 1.4.2003 முதல் வட்டி இல்லாத வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும்பொழுது சிறுசேமிப்புப் பத்திரங்களாக மூன்றாண்டு காலத்தில் ஆண்டுத் தவணைகளில் வழங்கப்படும். உதாரணமாக, 2003–2004 ஆம் ஆண்டில் ஓய்வுபெறுவோருக்கு, நிலுவைத் தொகை மற்றும் 31.3.2003 வரை அத்தொகை மீதான வட்டி ஆகியவற்றின் மொத்தத் தொகையில் முதல் தவணை 2003–2004 ஆம் ஆண்டில் வழங்கப்படும். இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணைகள் அடுத்த இரண்டு ஆண்டுகளில் வழங்கப்படும்.

**129.** வரவு–செலவுத் திட்டத்தைச் சமன் செய்வதில் உள்ள பெரும் இடர்ப்பாடுகளை கருதிப்பார்க்கும்போது சம்பள நிலுவைத் தொகைகளை ஒருக்காலும் வழங்க இயலாது என்பதை அரசுப் பணியாளர்கள் அறிவர். எனினும் நல்லெண்ண நோக்கில், நான் மேலே குறிப்பிட்ட வகையில் நிலுவைத் தொகையை வழங்கலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்துள்ளார்கள். முந்தைய அரசு அளித்த வெற்று வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், நிலுவைத் தொகைகளை வழங்குவதற்கு இவ்வரசு எடுத்த மிகத் துணிச்சலான இந்த முடிவை, அரசுப் பணியாளர்கள் பெரிதும் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

**130.** செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியதற்கு அரசுப் பணியாளர்கள் தங்களை தயார்செய்து கொள்ளவேண்டும். ஒரு துறையிலிருந்து வேறொரு துறைக்கு பணியாளர்கள் மாற்றப்படும் வகையில் நிருவாக சீரமைப்பை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. எனவே, ஒருதுறையில் பணியாளர்கள் தேவைப்பட்டால், வேறு ஒரு துறையில் உபரியாக உள்ள பணியாளர்களைத் தக்கவாறு மறுபயிற்சி அளிப்பதன் மூலம் பெறுவது சாத்தியமாக்கப்படும். 2003–2004-ஆம் ஆண்டில் இவ்வகையிலான பணியாளர் ஏற்பாடு செயல்படுத்தப்படும்.

### நல்லாட்சி முறை

**131.** ஒளிவு மறைவற்றதும், வெளிப்படையானதும், ஊழலற்றதும், பங்கேற்பு அடிப்படையில் அமைந்ததும் ஆகிய நிருவாக முறையே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் செயல்படும் இவ்வரசின் வழிகாட்டுதல் நெறியாக அமைந்துள்ளது. பல்வேறு திட்டப்பணிகள், மக்களுக்குச் சென்றடைவதில் முன்னேற்றம் காணவும், மக்களது தேவைக்கேற்ப செயல்படும் திறன் பெறவும் நல்லாட்சி முறையே தக்கதொரு தீர்வாக அமையும். பொதுமக்கள் அரசுடனும், தொழில்கள் அரசுடனும் தொடர்பு கொள்ள, தற்போதுள்ள ஏற்பாடுகளை மேம்படுத்தத் தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இதுமேலும் வலுப்படுத்தப்படும். தகவல் தொழில்நுட்ப உத்திகளைக் கையாளுவதன் மூலமும், நடைமுறைகளை எளிதாக்குவதன் மூலமும், மக்கள் நேரடித் தொடர்பு கொள்ளும் நிர்வாக நிலைகளின் செயல்பாடுகளை மேம்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**132.** மின் ஆட்சி முறை (e-Governance) பற்றி தற்போது எடுத்துக் கூற விழைகின்றேன். அரசுக்கும் மக்களுக்குமிடையே உள்ள தொடர்பு எளிதாகவும், சிக்கலற்றதாகவும், தடையற்றதாகவும் அமைய தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.. அரசு அலுவலகங்களில் உள்ள பல்வேறு நடைமுறைகளைச் சரிவர புரிந்துகொள்ளுதல், அரசு பொதுமக்கள் தொடர்புகளை நன்கு அறிந்து கொள்ளுதல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்வாகத்தில் தக்க மேம்பாடுகளைச் செய்தல் ஆகியவை மின் ஆட்சி முறையின் அம்சங்களாகும். மாநிலத்தில் உள்ள 206 வட்டங்களிலும் முழுநேரத் தொடர்பு (online) வசதிகளை வரும் ஆண்டில் அளித்துவிடுவோம் என்பதை அறிவதில் அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர்.

**133.** மாநிலத்தில் 600 சார் பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் 50 மாவட்ட பதிவு அலுவலகங்கள் அனைத்தையும் கணினி மயமாக்குவதற்கு பெரும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 350 அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு இயங்கி வருகின்றன. ஏனைய அலுவலகங்களும் வரும் ஆண்டில் கணினிமயமாக்கப்படும். தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் அமைந்த "ஸ்டார்" (STAR) திட்டம் (எளிமையானதும் ஒளிவு மறைவற்றதுமான பதிவு நிர்வாகத் திட்டம்) துவங்கப்பட்டுள்ளது. முன்னதாக பல நாட்களும் வாரங்களும் எடுத்துத் தாமதமாக முடிக்கப் பெற்ற பதிவுப் பணிகளை, இதனால் ஒரே மணி நேரத்தில் முடிக்க ஏதுவாகும். உடனுக்குடன் வில்லங்க சான்றிதழ்,

சான்றளிக்கப்பட்ட படிகள் முதலியவற்றைத் தற்போது வழங்குவது சாத்தியமாக உள்ளது. சென்னை பெருநகர்ப் பகுதியிலும் ஈரோடு மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலும் உள்ள பல்வேறு பதிவு அலுவலகங்களுக்கு இடையே தகவல் மற்றும் புள்ளி விவரங்கள் பரிமாற்றுதலுக்கு "ரெஜிநெட்" (REGiNET) என்ற இணைய ஏற்பாடு வழிவகை செய்துள்ளது. மாநிலத்தின் மற்ற பகுதிகளில் உள்ள சார் பதிவாளர் அலுவலகங்களிலும் வில்லங்க சான்றிதழ் அளிக்கும் வகையில் முழுநேரத் தொடர்பு (online) வசதிகளை விரிவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

134. மின்வாரியம் போன்ற பொதுச் சேவை நிறுவனங்களுக்கு நுகர்வோர்கள் செலுத்தும் கட்டணங்களை, மின் அனுப்புகை வழியாக செலுத்துவது மற்றும் ஒரு முக்கியமான வசதியாகும். சென்னைப் பெருநகர்ப் பகுதியில் தனியார் துறை பங்கேற்புடன் இந்தச் சேவையை வரும் ஆண்டில் துவங்க இருக்கிறோம்.

## நிதி நிலைமை கணிப்புகள்

135. 2002–2003-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள் உங்கள் முன்னிருக்கின்றன. நிதிச்சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் பயனாக 2002–2003-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டின்படி ரூ.6233.21 கோடியாக இருந்த வருவாய் பற்றாக்குறையை திருத்திய மதிப்பீட்டில் ரூ..5917.31 கோடியாகக் குறைக்க நம்மால் முடிந்துள்ளது. 2002–2003-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படியான ரூ.1359.78 கோடி ஒட்டுமொத்த பற்றாக்குறையையும் 2002–2003-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ரூ.254.59 கோடியாக குறைக்க நம்மால் முடிந்துள்ளது. 2002–2003-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.20,628.32 கோடியாக இருந்த வருவாய் வரவுகள் 2002–2003-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ரூ.20,686.86 கோடியாக உள்ளன. 2002–2003-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டதில் ரூ.26,861.53 கோடியாக இருந்த ஒட்டுமொத்த வருவாய்ச் செலவுகள் 2002–2003-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ரூ.26,604.17 கோடியாக உள்ளன.

136. வருவாய் பற்றாக்குறையின் அளவை வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்குள் நம்மால் கட்டுப்படுத்த முடிந்தபோதிலும் ஒட்டு மொத்த நிதி நிலைமை இன்னமும் சுமுகமாக இல்லை என்பதைக் காணலாம். 2001-ஆம் ஆண்டில் நாங்கள் பதவியேற்றபோது எங்களுக்குக் கிடைக்கப்பெற்ற குழப்பமான நிலைமைகள் இன்று ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது என்ற நிலையை உருவாக்கியதற்கான நற்சான்று எங்களையே சாரும். தொகை விடுவிக்கப்படாமல் இருந்த பட்டியல்கள் குறித்த பெரும் பிரச்சினையை சமாளித்து, தக்கவகையில் அவைகளை குறைத்துவிட்டோம். இவையனைத்துக்கும் அசாதாரணமான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான இவ்வரசு தமிழ்நாட்டில் நிதிநிலை சமன்பாட்டை மீளப்பெற சிறப்பான முயற்சி எடுத்துள்ளதை அவை உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டுவர்.

137. ரூ 3000 கோடி அளவு மானிய உதவிக்கான முழு அளவிலான ஒருகட்ட உதவித் திட்டமொன்றை வழங்குமாறு மாண்புமிகு பிரதமர் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள் என்பதை அவை உறுப்பினர்கள் நினைவு கூறலாம். இதனைத் தொடர்ந்து நிதி சீரமைப்புகளை எடுத்துக்கொள்ள மாநில அரசிற்கு நிதி உதவி அளிக்குமாறு மைய நிதியமைச்சரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். நடப்பாண்டில் ரூ.500 கோடி அளவிற்கு வெளிச்சந்தை கடனாகக் கூடுதல் உதவியை மைய அரசு அளித்துள்ளது. ஆனால், *மைய அரசின்* வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டபடி *மைய வரி* வருவாயில் மாநிலத்தின் பங்கை சரிக்கட்டவே இத்தொகை பெருவாரியாகப் போய்விட்டது. 2002–2003-ஆம் ஆண்டிற்கான இறுதி நிலவரப்படி மைய அரசின் வரிவருவாயில் தமிழ்நாட்டின் பங்கு ரூ.274.50 கோடி குறைந்துவிட்டது. பற்றாக்குறையை ஈடு செய்ய மிகச்சிறு தொகைதான் இதில் நிகரமாகக் கிடைக்கிறது. 2002–2003-ஆம் ஆண்டில் மைய அரசின் வருவாய்ப் பங்கில் மாநிலத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பைச் சரி செய்துகொள்ள கூடுதல் வெளிச்சந்தை கடன் திரட்ட அனுமதிக்குமாறு நாங்கள் மைய அரசை வலியுறுத்துகிறோம்.

138. 2003–2004-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் அவைமுன் இருக்கிறது. 2003–2004-ஆம் ஆண்டிற்கான வரவுகள் ரூ.22,665.90 கோடியாக இருக்க, மொத்த வருவாய்ச் செலவு ரூ.26,599.37 கோடி என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ.3933.47 கோடியாக இருக்கும். மொத்த வருவாய் வரவுகளில் வருவாய்ப் பற்றாக்குறையின் பங்கு 17.4 சதவீதம் ஆகும். 2003–2004-ஆம் ஆண்டிற்கான நிதிப் பற்றாக்குறை ரூ.6944.46 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. 2003–2004-ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்தப்பற்றாக்குறை ரூ.1295.15 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

139. ரூ. 7000 கோடி அளவிற்கு உத்தேச மதிப்பீட்டாலான ஆண்டுத்திட்டத்திற்கு இந்த வரவு செலவுத் திட்டம் வழிவகை செய்யும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மையத் திட்டக் குழுவின் துணைத் தலைவருடன் மேற்கொள்ளவிருக்கும் விவாதத்தில் ஆண்டுத் திட்டத்தின் அளவு உறுதி செய்யப்படும்.

140. 2003–2004-ஆம் ஆண்டிற்கான வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ஆகிய இரண்டுமே கவலை அளிப்பதாகவே உள்ளன. 2003–2004-ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிலையை திருத்தி அமைக்க ஏதுவாக 2003–2004-ஆம் ஆண்டில் வருவாயை மேலும் அதிகரிக்கவும், செலவுகளைக் கட்டுப்படுத்தவும் ஏற்றதொரு நிதிநிலை நிறுத்தக் கொள்கையை இவ்வரசு பின்பற்றும். இதைச் செயல்படுத்தமுடியும் என நாங்கள் நம்புகிறோம். இந்த நிதிநிலைநிறுத்த முயற்சிகளில் அவையின் ஒத்துழைப்பை நான் வேண்டுகிறேன். அரசின் வருவாயை அதிகரிப்பதற்கான சில நடவடிக்கைகளைப் பற்றி இப்போது கூற விழைகிறேன்.

## வணிகவரிகள்

141. மதிப்புக் கூட்டு வரி அறிமுகம் செய்வது நீண்டகாலமாக தேசிய அளவில் கொள்கையாக இருந்து வருகிறது. பொருளாதார சீர்திருத்த நடவடிக்கையின் ஒரு பகுதியாகவும், விற்பனை வரி கட்டமைப்பினை எளிமைப்படுத்துவதன் அவசியத்திற்காகவும் மதிப்புக் கூட்டுவரிமுறை பரிந்துரைக்கப்படுகிறது. உள்நாட்டில் சீரான ஒரு பொது சந்தையினை உருவாக்குவதும், அதன் மூலம் இந்திய உற்பத்தியாளர்கள், அவர்களின் உற்பத்திச் செலவினைக் குறைத்து, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் போட்டியிடுவதற்கு வகை செய்வதும் இதன் முடிவான குறிக்கோளாகும். மதிப்புக்கூட்டு வரித் திட்டத்தில், தொழில்துறையின் போட்டியிடும் தன்மை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வணிகர்கள், அவர்களின் விற்பனையில் மதிப்புக்கூட்டப்பட்ட பகுதியின் மீது மட்டுமே வரி செலுத்துவதால், அது அவர்களுக்கு நன்மை பயக்கும். பொது மக்கள் மற்றும் நுகர்வோர் நிலையில் பார்க்கும்போது, மதிப்புக்கூட்டு வரி முறையை நாட்டின் வரிகட்டமைப்பினை மேலும் ஒளிவுமறைவு அற்றதாக மாற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

142. தேசிய அளவில், நீண்ட விவாதங்களுக்குப் பின்னர், தற்போது அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள், மதிப்புக்கூட்டு வரியினை 2003–2004 –ல் இருந்து அறிமுகம் செய்யும் நிலையில் உள்ளன. தமிழ்நாட்டில் மதிப்புக்கூட்டு வரி சட்டமுன்வடிவு, தமிழ்நாடு அரசிதழில் 13.3.2003 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின், விதி 130–ன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது. வரைவு சட்டமுன்வடிவினை அறிமுகம் செய்வதற்காக குடியரசுத் தலைவரின் முன் அனுமதி வேண்டி மத்திய அரசுக்கு இச்சட்ட முன்வடிவு அனுப்பபட்டுள்ளது. இச்சட்டமுன்வடிவின் அனைத்துப் பிரிவுகளும் வணிகவரித் துறையின் இணைய தளமான www.tnsalestax.com–ல் வெளியிடப்பட்டுள்ளன. வணிக மற்றும் தொழில் துறையினர் மதிப்புக்கூட்டு வரியினை பற்றி முன்கூட்டியே, தெரிந்து கொள்ளவும், அதற்காக தங்களை தயார் செய்வதை உறுதிப் படுத்துவதற்கும் இதனால் வகை செய்யப்பட்டுள்ளது. மதிப்புக்கூட்டு வரி விதிமுறைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவை துறையின் இணையதளத்தில் விரைவில் வெளியிடப்படும். சட்டமுன்வடிவிற்கு இந்திய குடியரசுத் தலைவரின் முன் அனுமதி பெற்ற பின்னர், அது சட்டமன்றப் பேரவையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவினை ஏற்ற பின்னர், இது சட்டமாக்கப்பட்டு புதிய சட்டம் நடைமுறைக்கு வரும். இதன் மூலம் தமிழ்நாடு 2003–2004ல் இருந்து மதிப்புக்கூட்டு வரியினை நடைமுறைப்படுத்தும் என்பது தெளிவாகும். எனவே, இந்த மாமன்றம் இதனை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். மதிப்புகூட்டு வரித் திட்டத்திற்கு எளிதாக மாறுவதற்கு வகை செய்வதற்காக, மார்ச், 2003–ல் புதுப்பிக்கப்பட்ட வணிகப் பதிவுகள் அல்லது 5 ஆண்டுகளுக்கு ஏற்கனவே புதுப்பிக்கப்பட்டப் பதிவுகள், மதிப்பு கூட்டு வரி திட்டத்தில் செல்லுபடியாகும்.

143. மதிப்புக்கூட்டு வரி திட்டத்திற்கு தயாராவதின் ஒரு பகுதியாக, வணிகவரித் துறையினை 100 விழுக்காடு கணினி மயமாக்கும் பணி நடைபெற்றுவருகிறது. இத்திட்டம், சோதனைச் சாவடிகளில் தொடங்கி வணிகவரி ஆணையர் அலுவலகம் வரை கணினி முறையின் மூலமாக இணைக்கப்பட்டு சேர்ந்து செயல்பட வகை செய்கிறது. தவிர, துறையின் அலுவலர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களிலுள்ள தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளுக்கு பல பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி வகுப்புகள், தொழில் மற்றும் வர்த்தகப் பிரதிநிதிகள், துறையின் அலுவலர்களோடு மதிப்புக்கூட்டு வரி பற்றி, தேவையான விவரங்களை, கலந்துரையாடல் மூலம் பெற்றிட வகை செய்கிறது.

144. பொருட்களின் வகைப்பாடு மற்றும் மதிப்புக்கூட்டு வரியின் வரி விகிதங்கள், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கும் பொதுவானதாக இருக்கும். மதிப்புக்கூட்டு வரி சட்ட முன்வடிவில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு அட்டவணைகளில் இடம்பெறக்கூடிய பொருட்கள் மற்றும் வரி விகிதங்கள், இச்சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்போது வைக்கப்படும். அகில இந்திய அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி மதிப்புக்கூட்டு வரி சட்டத்தில், இரண்டு வித வரி விகிதப் பட்டியல்கள் பெரும்பாலும் இருக்கும். அதாவது, தொழிற்சாலைகளுக் குரிய இடுபொருட்கள் மற்றும் அன்றாட/பொது பயன்பாட்டிற்கான பொருட்களின் மீது 4 விழுக்காடு வரி; மேலும், ஏனைய பொருட்களுக்கு 12.5 விழுக்காடு வரி விகிதம். மேற்கூறப்பட்டவை தவிர, வரிவிலக்களிக்கப் பட்ட பட்டியல் ஒன்றும் இருக்கும். தங்கம் மற்றும் வெள்ளி கட்டிகள் மற்றும் ஆபரணங்களுக்கு 1 விழுக்காடு மற்றும் பெட்ரோல், டீசல், இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகள் போன்ற பொருட்களுக்கு 20 விழுக்காட்டிற்கு குறையாமல் சிறப்பு வரி விகிதம் இருக்கும். 1 விழுக்காடு மற்றும் சிறப்பு வரிவிகிதத்திற்கு உட்படும் பொருட்கள், மதிப்பு கூட்டு வரிக்குட்படாது.

ஒப்பந்தப் பணிகள் மீது வரி விதிப்பு, குத்தகை மீதான வரி விதிப்பு மற்றும் உணவகங்களில் விற்பனையாகும் உணவு மற்றும் பானங்கள் மீதான வரி விதிப்பு ஆகியவை மதிப்புக்கூட்டு வரிக்கு உட்படாது.

145. தமிழ்நாட்டிற்குள் கொள்முதல் செய்யப்பட்டு, தமிழ்நாட்டிற்குள் மதிப்புக்கூட்டு வரி செலுத்தப்பட்ட பொருட்களுக்கு உள்ளீட்டு வரி தள்ளுபடி/வரி கழித்தல் செய்துகொள்ள வரைவுசட்ட முன்வடிவு வகை செய்கிறது. மேலும், தமிழ்நாட்டில் விற்பனையாகும் பொருட்களின் மீது செலுத்தப்பட்ட மதிப்புகூட்டுவரி அல்லது மத்திய விற்பனை வரி எவ்வளவு செலுத்தப்பட்டதோ அந்த அளவிற்கு மட்டும் இந்த வரிக் கழிப்பு உண்டு. முதலீட்டு சரக்குகளின் மீது செலுத்தப்பட்ட வரியினை 3 ஆண்டுகால அளவில் வரிக் கழிப்பு செய்து கொள்ளலாம். ஏற்றுமதி நேர்வுகளைப் பொறுத்த வரையில், ஏற்றுமதி விற்பனைக்கு வரி விலக்கு தொடரும். அதே நேரத்தில், இடுபொருட்கள் மீது செலுத்தப்பட்ட வரி, திரும்பக் கொடுக்கப்படும். அதாவது, ஏற்றுமதி மீது வரி பூஜ்யம் விழுக்காடாக இருக்கும். பிற மாநிலங்களுக்கு கிளை மாற்றம் செய்யும் நேர்வுகளுக்கு இந்த வரிக் கழிப்பு வழங்கப்படமாட்டாது. மதிப்புக்கூட்டு வரி இணைப்பில், தொடர்ந்து வரியை கழித்துக்கொள்ளும் சலுகையினைப் பெறுவதற்கு தற்போது விற்பனை வரித் தள்ளுபடி அனுபவித்து வரும் தொழிற்சாலைகள், வரித்தள்ளிவைப்பு திட்டத்திற்கு மாற்றப்படும்.

146. மதிப்புக்கூட்டுவரி, விற்பனை வரிக் கட்டமைப்பினை எளிமையாக்குதல் மற்றும் பல்வேறு வணிகச் சட்டங்களை தவிர்த்திடுதல் ஆகிய நோக்கங்களை எய்த விழைவதால், தற்போதுள்ள மறு விற்பனை வரி, கூடுதல் விற்பனை வரி மற்றும் உள்கட்டமைப்பு மேல்வரி ஆகியன மதிப்புக்கூட்டு வரி அறிமுகம் செய்யப்படும்போது திரும்பப் பெறப்பட்டதாக கருதப்படும். எனினும், மதிப்புக்கூட்டு வரிக்குட்படாத இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை மற்றும் அயல்நாட்டு மதுவகை மீதான கூடுதல் விற்பனை வரி தொடரும். பெட்ரோல், டீசல் முதலிய பொருட்களைப் பொறுத்தவரை, கூடுதல் விற்பனை வரி மற்றும் மேல்வரி ஆகியன அடிப்படை வரி விகிதத்துடன் ஒருங்கிணைக்கப்படும்.

147. வணிக முறை மாற்றம் (Diversion of trade) மற்றும் வரி ஏய்ப்பு ஆகியவற்றைத் தடுப்பதற்கு, சில குறிப்பிட்ட பொருட்களுக்கு இம்மாநிலத்தில் நுழைவு வரி விதிக்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். பதிவு செய்துகொள்ளாமலும், கணக்குகள் பராமரிக்காமலும் வணிகத்தில் ஈடுபடுவோரைக் கண்டறிவது அடிப்படை நோக்கமாக இருந்தது. மதிப்புக்கூட்டு வரி திட்டம், முழுமையாக நிலைப்படுத்தப்படும் வரை, மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள் தொடரக்கூடும் என்பதால், மோட்டார் வாகனங்கள் மற்றும் பொருட்கள் மீது விதிக்கப்பட்ட நுழைவு வரியினைத் தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது. எனினும், நுழைவு வரி செலுத்தப்பட்டிருந்தால் உள்ளூர் விற்பனைகள் அல்லது இடைமாநில விற்பனை மீது செலுத்த வேண்டிய வரிகளுக்கு, முழுவரிக்கழிப்பு உண்டு. இதன் மூலம் பொருட்கள் தமிழ்நாட்டிற்குள் கொண்டுவருவது, நுழைவுவரி விதிப்பின் மூலம் கண்காணிக்கப்பட்டாலும், அப்பொருட்கள் இரட்டை வரிவிதிப்பிற்குள்ளாவதைத் தடுக்க உறுதி செய்யப் படுகிறது.

148. மதிப்புக்கூட்டு வரி, இறுதியில் மாநில அரசுக்கு அதிக வருவாயினை ஈட்டித்தரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் தொடக்க ஆண்டுகளில் மதிப்புக்கூட்டு வரித் தொடரில் மதிப்புக்கூட்டப்பட்ட பகுதி அனைத்தும் வரி விதிப்பிற்கு உள்ளாகும் வரை வருவாய் இழப்பு ஏற்படலாம். தொடக்கத்தில் ஆண்டொன்றுக்கு வருவாய் இழப்பு ரூ.2,500 கோடிக்கு அதிகமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு உள்பட அனைத்து மாநிலங்களும் வற்புறுத்தியதைத் தொடர்ந்து, முதலாண்டில் 100 விழுக்காடு, இரண்டாமாண்டில் 75 விழுக்காடு மற்றும் மூன்றாம் ஆண்டில் 50 விழுக்காடு வரை வருவாய் இழப்பினை ஈடு செய்ய மத்திய அரசு முன்வந்துள்ளது. மத்திய அரசின் 2003–2004 நிதி நிலை அறிக்கையில் மத்திய விற்பனை வரி படிப்படியாக நீக்கப்படும் என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழ்நாடு மற்றும் வேறு சில மாநிலங்கள் மத்திய விற்பனை வரியை நீக்குவதால் ஏற்படும் வருவாய் இழப்பினை 100 விழுக்காடு அளவிற்கு நிரந்தரமாக ஈடு செய்ய வேண்டுமென்று ஏற்கனவே மத்திய அரசை வலியுறுத்தியுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் குறிப்பாக இது தொடர்பாக மத்திய நிதியமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார். மத்திய விற்பனை வரியை நீக்குவதால் ஏற்படும் வருவாய் இழப்பு வேறு முறையில் ஈடு செய்து வழங்கப்பட வேண்டும் என்ற இந்த அரசின் வாதத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது என்று அறிவதில் நமக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. மத்திய அரசு, மத்திய விற்பனை வரி வருவாய் இழப்பை 100 விழுக்காடு ஈடு செய்வதைத் தொடக்க ஆண்டுகளுக்கு மட்டும் வழங்காமல், நிரந்தர அடிப்படையில் வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

149. வருவாய் இழப்பை ஈடு செய்யும் நடவடிக்கைகளில் ஒன்றாக, சில குறிப்பிட்ட சேவைகள் மீது மாநிலங்களே வரி விதித்து வசூலித்துத் தக்கவைத்துக்கொள்ளும் வகையில் சட்டத்திருத்தங்கள் கொண்டுவர மத்திய அரசு விருப்பம் தெரிவித்துள்ளது. இதற்கான சட்ட முன் வடிவு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கு அதிக வருவாய் ஈட்டித் தரும் அளவில் உள்ள சேவைகளின் பட்டியலை மத்திய அரசு வழங்கிட வலியுறுத்துகிறோம். அதே போன்று கூடுதல் ஆயத்தீர்வைக்குட்பட்ட சர்க்கரை, துணி வகைகள் மற்றும் புகையிலை போன்ற



பொருட்கள் மீது கூட மாநிலங்களே விற்பனை வரி விதித்துக் கொள்ள வகை செய்யப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. தற்போது நடைபெற்றுவரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலேயே இது சம்பந்தப்பட்ட சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படுமென்று மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

150. மதிப்புக் கூட்டு வரி முறைக்கு மாறும் நிலையிலும், கூடுதல் விற்பனை வரி மற்றும் மேல் வரி நீக்கப்படுவதாலும், சில பொருட்களின் மீதான வரி விகிதங்களை மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பெட்ரோலைப் பொறுத்தவரை மேல்வரி உட்பட தற்போதுள்ள வரிவிகிதமான 29.4 விழுக்காடு வரி, 30 விழுக்காடாக மாற்றியமைக்கப்படுகிறது. அதிவேக டீசல் மற்றும் பளுவற்ற டீசல் எண்ணெய்க்குக் கூடுதல் விற்பனை வரி மற்றும் மேல் வரி உட்பட வரிவிகிதங்கள் தற்போது முறையே 23.1 விழுக்காடு மற்றும் 21.9 விழுக்காடு உள்ளது. அதிவேக டீசல் மற்றும் பளுவற்ற டீசல் எண்ணெய் மீதான வரியினை தற்போது ஒருங்கிணைக்கப்பட்ட 25 விழுக்காடாக மாற்றி அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. டீசல் எண்ணெய்க்கு மாற்றாக, வெள்ளை நிற மண்ணெண்ணெய் பயன்படுத்தப்படுவதாக கடந்த சில மாதங்களாகப் பெருமளவில் தகவல்கள் வந்துள்ளன. இதனால் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதுடன், வாகனங்களில் இயந்திரங்களுக்குப் பாதகங்களும் ஏற்படும். இதனைத் தடுப்பதற்காக வெள்ளை மண்ணெண்ணெய் மீதான வரியினை 4 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக உயர்த்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. பொது விநியோக முறையில் விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய் மீது அதாவது நீல நிற மண்ணெண்ணெய் மீது 4 விழுக்காடு வரி தொடர்ந்து இருக்கும்.

151. இந்திய உச்ச நீதிமன்றம் அண்மையில் வழங்கிய தீர்ப்பு, தொலைபேசி வாடகை மீது மாநிலங்கள் வரி விதிக்க வகை செய்கிறது. உரிமை மாற்றம் செய்து பொருட்களைப் பயன்படுத்தும் கோட்பாட்டின் தேவைகளை இந்தத் தொலைபேசி வாடகைகள் நிறைவு செய்கின்றன என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதற்கேற்ப பாரத் சஞ்சார் நிகம் லிமிடெட் மற்றும் தனியார் தொலைபேசி நிறுவனங்கள் வசூலிக்கும் தொலைபேசி வாடகை மீது, (செல்லுமிடத் தொலைபேசி வாடகை உட்பட) 12.5 விழுக்காடு வரி விதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

152. மேலே குறிப்பிட்ட வரி விதிப்பு நடவடிக்கைகள் ஆண்டொன்றிற்கு ரூ. 200 கோடி அளவிற்குக் கூடுதல் வருவாய் ஈட்டித்தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நுழைவு வரியினைப் பொறுத்தவரை கடந்த இரண்டு ஆண்டுகளின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட மாற்றங்கள், கணக்கில் காட்டப்படாத நேர்வுகளை சரிபார்த்தல் மற்றும் வரிவருவாயினைத் திரட்டுதல் ஆகியவற்றின் மூலம் சிறந்த பலன்களைத் தந்துள்ளன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இதே நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு, சலவை இயந்திரங்கள் மீது 12.5 விழுக்காடு நுழைவு வரியும், துகல்கள், நாடாக்கள் மற்றும் கழிவுகள் உள்ளடங்கலான எல்லா வகையான LDPP (Low Density Polyethylene and Polypropylene) மீது 4 விழுக்காடு நுழைவு வரி விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வரி விதிப்பு நடைமுறையினை எளிமைப்படுத்துவதற்காக, நுழைவுவரிச் சட்டம் மற்றும் மதிப்புக்கூட்டுவரிச் சட்டம் ஆகிய இரண்டிற்கும் தனிப்பட்ட வணிகரொருவருக்கு ஒரே வரி விதிப்பு அலுவலர் இருப்பார் என முடிவு செய்யப்பட்டுள்ளது. பிற மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளின் நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகள் தமிழ்நாட்டிலுள்ள அச்சகங்களில் கூலி அடிப்படையில் அச்சுப் பணிக்காக அனுப்பும் காகிதங்களின் மீது நுழைவு வரியிலிருந்து விலக்களிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் கூலி அடிப்படையில் அச்சுப்பணி செய்வதற்கான ஆதாரங்கள் அளிக்கப்பட வேண்டும்.

153. இந்த நடவடிக்கைகளை எடுக்கும்பொழுது மாநிலம் முழுவதும் உள்ள வரலாறு காணாத வறட்சி நிலையினை அரசு கவனத்தில் கொண்டுள்ளது. எனவே மதிப்புக் கூட்டு வரி அறிமுகம் செய்யப்பட்ட பின்னரும், அரிசி மீதான விற்பனை வரி விலக்கு தொடர்ந்து இருக்கும்.

154. தங்கம், வெள்ளி மற்றும் மதிப்பு மிக்க உலோகங்களாலான ஆபரணங்கள் அதிகமான அளவில் வரி ஏய்ப்புக்கு உள்ளானவை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக கடந்த நிதி நிலை அறிக்கையில் ஆபணரங்கள் மீது 1 விழுக்காடு ஆடம்பர வரி அறிவிக்கப்பட்டது. தற்போது, ஆபரணங்கள் இருப்பின் மீதான ஆடம்பர வரி 1 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாக உயர்த்தி, மதிப்புக்கூட்டு வரியுடன் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மதிப்புக்கூட்டு வரித் திட்டம் அமலாக்கப்படும்பொழுது ஆபரணங்கள் மீதான வரி விகிதம் 2 விழுக்காட்டிலிருந்து 1 விழுக்காடாக குறைக்கப்படுகிறது. மேலும், ஆபரணங்கள் மீதான இந்த 1 விழுக்காடு வரி, விற்பனைத் தொகை எவ்வளவு இருந்தாலும் அனைத்து வணிகர்களுக்கும் பொருந்தும். இதனைத் தொடர்ந்து ஆண்டு விற்பனைத் தொகை ரூ.50 இலட்சம் வரையில் உள்ள ஆபரண வணிகர்களுக்கு, தற்போதுள்ள இணக்க வரி விதிப்பு முறை ரத்து செய்யப்படும்.

155. தற்போது கம்பிவடத் தொலைக்காட்சி (Cable TV) இணைப்புகளுக்கு விதிக்கப்படும் வரியை உள்ளாட்சி அமைப்புகளே விதித்து வசூலித்து வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். எனினும், கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்புகளை அளிப்பவர்கள், இணைப்புகளின் எண்ணிக்கையை பெருமளவில் குறைத்து தெரிவிக்கின்றனர் என்று தெரிய வருகிறது. அனைத்து கம்பிவட தொலைக்காட்சி

இணைப்புகளும் வரி விதிப்புக்கு உட்படுத்தப்பட்டனவா என்பதை சோதித்து அறிந்து உறுதிப்படுத்திக்கொள்ள உள்ளாட்சி அமைப்புகளால் இயலவில்லை. அனைத்து கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பு குறித்து வீதி வழியாகத் தணிக்கை செய்வதன் மூலம் கணக்கீடு செய்வதில் நடைமுறைச் சிக்கல்களும் உள்ளன. இதனைத் தொடர்ந்து அனைத்து உள்ளாட்சி அமைப்புகள் வசூலிக்கும் வருவாய் மிகவும் குறைவாக இருந்து வருகிறது. மேற்கூறிய சிக்கல்களிலிருந்து விடுபட, கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பு தருபவர்கள், கம்பிவடத் தொலைக்காட்சிகளின் எண்ணிக்கைகளின் மீது செலுத்தப்படும் வரிக்குப் பதிலாக இணக்க முறையில் வரி செலுத்தும் கட்டாய முறையினை அறிமுகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. கிராம ஊராட்சிகளிலுள்ள கம்பிவடத் தொலைக் காட்சி இணைப்பு தருபவருக்கு ஆண்டொன்றுக்கு இணக்க வரி ரூ.12,000; பேரூராட்சிகளில் இணைப்பு தருபவருக்கு ரூ.18,000; நகராட்சிப் பகுதிகளில் இணைப்பு தருபவருக்கு ரூ.36,000 மற்றும் மாநகராட்சிகளில் இணைப்பு தருபவருக்கு ரூ.72,000 என இருக்கும். இந்த வரி விதிப்பு மற்றும் வரி வசூல் செய்யும் அதிகாரம் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து அரசுக்கு மாற்றப்படுகிறது. 2002–2003–ஆம் ஆண்டில் கம்பிவடத் தொலைக் காட்சி இணைப்பு மூலம் பெறப்பட்ட வரி வருவாய்க்கு நிகரான தொகை ஆண்டு மானியமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். உடன் நிகழ்வாக, கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பு தருபவர் ஒவ்வொருவரும் செலுத்தும் பிணை வைப்புத் தொகை ரூ.10,000–லிருந்து மாநகராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.5,000 ஆகவும் பிற பகுதிகளில் ரூ.2,500 ஆகவும் குறைக்கப்படும். இதற்காக 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இதற்கான சட்ட முன்வடிவு நடப்பு கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படும். இந்த மாற்றங்களின் மூலம் அரசுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.30 கோடி வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### மின்சார வரி

156. டாக்டர் ராஜா J. செல்லையா அவர்களின் தலைமையில் அமைந்த வரி சீரமைப்பு மற்றும் வருவாய் அதிகரிப்பு ஆணையம் மின்சாரத்தின் மீது விதிக்கப்படும் தீர்வை மற்றும் வரி ஆகியவற்றிற்கான சட்டங்களை முழுமையாக மறு பரிசீலனை செய்துள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் 7வது இணைப்பில் 53-ஆம் பதிவில் உள்ள வகைப்பாட்டின் அடிப்படையில் மின்சாரத்தின் விற்பனை அல்லது பயன்பாட்டின் மீது வரி விதிக்க வழி செய்யும் புதிய சட்டமொன்றை அரசு மேற்கொள்ள வேண்டும் என இந்த ஆணையம் கருத்துத் தெரிவித்துள்ளது. 1939ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சாரத் தீர்வைச் சட்டம் மற்றும் 1962-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயன்பாட்டின் மீது வரி) சட்டம் ஆகியவை மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, ஒற்றைச் சட்டமாக அறிமுகப்படுத்தப்படலாம் என இந்த ஆணையம் கருத்து தெரிவித்துள்ளது. ஆணையம் தனது அறிக்கையில் இறுதி நிலையில் மின்சாரத்தை வாங்கும் அமைப்புகளுக்கும், நுகர்வோர்களுக்கும் கட்டணத்தில் 6 சதவீதமும், வேளாண் பயனீட்டாளர்களுக்கும், குடிசைவாசிகளுக்கும் 5 சதவீதமும் வரி விதிக்கலாம் என பரிந்துரைத்துள்ளது. தமிழ்நாடு மின்வாரியத்தினால் செய்யப்படும் விற்பனை மீது இவ்வாறு வரி விதிக்கும் நேரத்தில் சுயப் பயன்பாட்டிற்காக மின்சார உற்பத்தி செய்வோரைப் பொறுத்தமட்டில் அவர்கள் சுய தேவைக்குப் பயன்படுத்தும் மின்சாரத்தின் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 25 பைசா வீதம் வரி விதிக்கப்படலாம் என ஆணையம் பரிந்துரைத்துள்ளது. ஆணையத்தின் பரிந்துரைகளைச் சிறிய மாற்றங்களுடன் ஏற்றுக் கொள்ளலாம் என அரசு முடிவு செய்துள்ளது. மின்சாரத்தின் மீதான வரி பற்றிய புதியதொரு சட்டமியற்ற சட்டப் பேரவையின் நடப்புக் கூட்டத்தொடரில் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்படும். சுய தேவைக்கு மின் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலைகள் உள்ளிட்ட உரிமம் பெற்றுள்ள அனைவருக்கும் அவர்கள் விற்பனை செய்யும் எரிசக்தியின் நிகர மதிப்பின் மீது குறைந்தபட்சம் 5 சதவீதமும், அதிகப்பட்சம் 10 சதவீதமும் வரிவிதிக்க இது வகை செய்யும். சுயத் தேவைக்கு மின்உற்பத்தி செய்யும் உரிமதாரர்களைப் பொறுத்த வரை, இந்தச் சட்டத்தின் கீழ் அவ்வாறு சுயப் பயன்பாட்டிற்கு நுகர்ந்த மின்சாரத்தின் மீது யூனிட் ஒன்றுக்கு குறைந்தபட்சமாக 10 பைசாக்களும், அதிகபட்சமாக 20 பைசாக்களும் வரி விதிக்க வழிவகை செய்யப்படும். விவசாயப் பயன்பாடு மற்றும் குடிசைகளுக்கான மின்சாரத்தின் மீது எந்த வரியும் விதிக்கப்படமாட்டாது. இவைகளுக்கு இவ்வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்கப்படும். மின்சார விற்பனை மீதான வரி தற்போது நடைமுறையில் உள்ள 5 சதவீத அளவிலேயே தொடரும். சுய தேவைக்கு மின்சாரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் சுய தேவைக்கும் பயன்படுத்திக் கொள்ளப்படும் ஒவ்வொரு யூனிட் மின்சாரத்திற்கும் 10 பைசா விகிதத்தில் இவ்வரிவிதிப்பு அமையும். இந்த சீரமைப்பின் மூலம் 2003–2004-ஆம் ஆண்டில் ரூ.80 கோடி கூடுதல் வருவாய் கிட்டும்.

### மோட்டார் வாகன வரி

157. சாலைகளின் தரத்தை உலகத்தரத்திற்கு உயர்த்தவும், அவற்றை நன்கு பராமரிக்கவும், நிதிநிலை அறிக்கையில் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இம்மன்ற உறுப்பினர்கள் அறிவீர்கள். நான் ஏற்கெனவே இந்நிதிநிலை அறிக்கையில் 'சாலை பராமரிப்பு நிதி' ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளேன. சாலைப் பணிகளின் வளர்ச்சிக்காகவும் அவைகளை நன்கு பராமரிப்பதற்காகவும் கூடுதலான நிதி ஆதாரத்தை நாம் ஏற்படுத்த வேண்டும். இதன் காரணமாக, கீழ்க் காணும் வாகனங்களுக்கு மோட்டார் வாகன வரியில் மாற்றம் செய்யக் கருதியுள்ளேன்.

158. அரசு, சரக்கு வாகனங்களுக்கான மோட்டார் வாகன வரியை 1.12.2001 முதல் மாற்றியமைத்தது. 15,000 கிலோ கிராம் மற்றும் அதற்கு அதிகமாக சுமை ஏற்றும் திறன் கொண்ட பெரிய சரக்கு வாகனங்கள் செலுத்த வேண்டிய வரியை மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, ரூ.2,500 காலாண்டு வரி, மற்றும் 15,000 கிலோ கிராமிற்கு கூடுதலாக ஏற்றப்படும் ஒவ்வொரு 1,000 கிலோகிராமிற்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.400 என்ற வரியை, ரூ.2,500 காலாண்டு வரி மற்றும் 15,000 கிலோகிராமிற்கு கூடுதலாக ஏற்றப்படும் ஒவ்வொரு 250 கிலோகிராமிற்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.75 என மாற்றம் செய்யப்படும். இம்மாற்றம், 1.12.2001 முதல் அமுலுக்கு வரும். 1.12.2001–இல் இருந்து கட்ட வேண்டிய நிலுவைத் தொகை தவணை முறையில் வசூலிக்கப்படும்.

159. 15,000 கிலோகிராமிற்கும் அதிகமாகச் சுமை ஏற்றும் திறன் கொண்ட பல அச்சு இரக சரக்கு வாகனங்களுக்கு, காலாண்டு வரி ரூ.2,300 எனவும், அதற்குக் கூடுதலாக ஏற்றப்படும் ஒவ்வொரு 250 கிலோ கிராமிற்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.50 எனவும் வரிவிதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

160. பல்வேறு வகை வாகனங்கள் செலுத்த வேண்டிய வரி கீழ்க்கண்ட பட்டியலில் உள்ளவாறு திருத்தி அமைக்கப்படுகிறது.

| வ. எண் | வாகனவகை | தற்போதைய வரிவிகிதம் | மாற்றம் செய்யப்படும் வரிவிகிதம் |
|---|---|---|---|
| 1) | மேக்ஸிகேப் | ரூ.250 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி | ரூ.500 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி |
| 2) | பெருநகர் பேருந்துகள் | ரூ.50 மற்றும் ரூ.10 (சர்சார்ஜ்) ஆக ரூ.60 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி, அமர்வதற்கும் நிற்பதற்கும் | ரூ.80 மற்றும் ரூ.20 (சர்சார்ஜ்) ஆக ரூ.100 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி, அமர்வதற்கும் நிற்பதற்கும் |
| 3) | நகரப் பேருந்துகள் | ரூ.275 மற்றும் ரூ27.50 (சர்சார்ஜ்)ரூ.302.50 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி, அமர்வதற்கும் நிற்பதற்கும் | ரூ.325 மற்றும் ரூ.32 (சர்சார்ஜ்) ரூ.357 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி, அமர்வதற்கும் நிற்பதற்கும் |
| 4) | புறநகர் மற்றும் விரைவுப் பேருந்துகள் | ரூ.360 மற்றும் ரூ 90. (சர்சார்ஜ்) ஆக ரூ.450 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி | ரூ.400 மற்றும் ரூ.100 (சர்சார்ஜ்) ஆக ரூ.500 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி |
| 5) | ரிக்ஸ், ஜெனரேட்டர்ஸ் மற்றும் கம்ப்ரஸர்கள் | ரூ.2500 ஆண்டு வரி | ரூ.3500 ஆண்டு வரி |
| 6) | கல்வி நிறுவனப் பேருந்துகள் | ரூ.500 காலாண்டு வரி ஒரு வாகனத்திற்கு | ரூ.150 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி |
| 7) | தனியார் பணி வாகனங்கள் | ரூ.100 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி | ரூ.150 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி |
| 8) | மோட்டார் சைக்கிள் 50 சி.சி முதல் 75 சி.சி.வரை | ரூ.1350 ஆயுட்கால வரி | ரூ.1500 ஆயுட்கால வரி |
| 9) | மோட்டார் சைக்கிள் 75 சி.சி முதல் 170 சி.சி வரை | ரூ.2000 ஆயுட்கால வரி | ரூ.2500 ஆயுட்கால வரி |
| 10) | மோட்டார் சைக்கிள் 170 சி.சி க்கும் அதிகமாக | ரூ.2500 ஆயுட்கால வரி | ரூ.3000 ஆயுட்காலவரி |

மேற்காணும் செயற்குறிப்புகளில் இனம் 6–ஐ தவிர, ஏனையவை 1.4.2003 முதல் அமுலுக்கு வரும். கல்வி நிறுவனப் பேருந்துகளைப் பொறுத்தமட்டில், தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச்சட்டத்தைத் திருத்தத் தேவையான சட்ட முன்வடிவு, இச்சட்டமன்றக் கூட்டத்தொடரில் அறிமுகம் செய்யப்படும்.

161. நான்கு சக்கர போக்குவரத்து அல்லாத (Non-transport) வாகனங்களுக்கு 1.7.1998 முதல் ஆயுட்கால வரி வசூலிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். வாகனத்தின் மொத்த விலையை அடிப்படையாகக்கொண்டு ஒரே சீரான ஆயுட்கால வரியை அறிமுகப்படுத்தலாம் என அரசு கருதுகிறது. எனவே, இனி, நான்கு சக்கர, போக்குவரத்து அல்லாத வாகனத்தின் மொத்த விலையில், 6 சதவீதம் ஆயுட்கால வரியாக விதிக்கப்படும். இதற்காக, தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டத்தைத் திருத்தத் தேவையான சட்ட முன்வடிவு இந்தக்கூட்டத்தொடரில் அறிமுகம் செய்யப்படும்.

162. மோட்டார் வாகனங்களினால் ஏற்படும் புகை, சுற்றுப்புறத்தூய்மைக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. மாசுபடுத்துபவர் அதிகமாக வரி செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் "பசுமை வரி" (Green Tax) எனும் புதிய வரியை அனைத்து பழைய மோட்டார் வாகனங்களுக்கும் கீழ்க்கண்டவாறு விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

| வாகனங்களின் வகைப்பாடு | அமுலுக்கு வரும் நாள் | உத்தேசிக்கப் பட்டுள்ள வரி விகிதம் |
|---|---|---|
| 1. இரண்டு சக்கர வாகனங்கள் | பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 15 ஆண்டுகாலம் முடிவடைந்த பின்னர் | ரூ.500 ஐந்தாண்டு காலத்திற்கு |
| 2. இரண்டு சக்கர வாகனங்கள் தவிர்த்து பிற (போக்குவரத்து அல்லாத) வாகனங்கள் | பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 15 ஆண்டுகாலம் முடிவடைந்த பின்னர் | ரூ.1000 ஐந்தாண்டு காலத்திற்கு |
| 3. அனைத்து வகை போக்குவரத்து வாகனங்கள் | பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 7 ஆண்டு காலம் முடிவடைந்த பின்னர் | ரூ.500 ஆண்டு ஒன்றுக்கு |

இந்த வரி, ஏற்கெனவே செலுத்தப்படவேண்டிய வரியுடன் கூடுதலாக விதிக்கப்படும். இதற்குத் தேவையான சட்ட முன்வடிவு இக்கூட்டத்தொடரில் அறிமுகம் செய்யப்படும்.

163. மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற் குறிப்புகளால் சுமார் ரூ.120.00 கோடி கூடுதலாக 2003–2004-ஆம் நிதி ஆண்டில் கிடைக்கும்.

164. 2003–2004-ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒட்டுமொத்த பற்றாக்குறை, ரூ.1295.15 கோடி ஆகும். கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்காக நான் விளக்கிக் கூறியுள்ள நடவடிக்கைகளினால் வருமாண்டில் ரூ.430 கோடி திரட்ட இயலும் என்று நாங்கள் நம்புகிறோம். இது, பற்றாக்குறையை ரூ.865.15 கோடியாகக் குறைக்கும். எஞ்சியுள்ள பற்றாக்குறையைச் சமாளிக்க, என்னுடைய உரையின் பின் இணைப்பில் விளக்கிக் கூறியவாறு நிதிநிலையை வலுப்படுத்துவற்கான நடவடிக்கைகளை நாங்கள் தொடர்ந்து செயற்படுத்துவோம். இந்த நடவடிக்கைகள் மூலமும் நம்முடைய ஆண்டுத் திட்டத்திற்கும், நாம் மேற்கொண்டுள்ள பொருளாதாரச் சீரமைப்பு நடவடிக்கைகளுக்கும் மத்திய அரசின் கூடுதல் நிதியுதவியைப் பயன்படுத்தி எஞ்சிய பற்றாக்குறையை ஈடுகட்டுவோம் என்று நம்புகிறோம்.

165. இந்த வரவு–செலவுத் திட்டம் வளர்ச்சி செயல்திட்டத்திற்கான பொருள் நிரலைக் கொண்ட ஒரு பெரிய மாற்றாகத் திகழ்கிறது. கடுமையான விளைவுகளைச் சமாளித்த நம்பிக்கையுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வகுத்துள்ள வளர்ச்சி செயல் திட்டத்தை மேற்கொள்ள நம்மால் தற்போது இயலும். இந்த அரசின் மூன்றாவது வரவு–செலவுத் திட்ட அறிக்கையை உருவாக்குவதில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் நல்கிய, போற்றுதற்குரிய தாராளமான வழிகாட்டுதலுக்கும், ஆதரவுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

166. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் துணிச்சலான மற்றும் அரிய சீர்திருத்தங்களை மேற்கொண்டிருக்கா விட்டால், இந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையையே தாக்கல் செய்ய இயலாமற் போயிருக்கக்கூடும் என்று கூறினாலும் அது மிகையில்லை.

167. இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதில், பேருதவியை நல்கிய மேம்பாட்டு ஆணையர் மற்றும் நிதித் துறை செயலாளர் திரு. ந. நாராயணன், இ.ஆ.ப., அவர்களுக்கும், அவருடன் அயராது பணியாற்றிய அலுவலர் குழுவிற்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

168. 2003–2004-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை, தமிழ்நாட்டு மக்களுக்கு நான் அர்ப்பணிக்கிறேன். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 2003–2004-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

★ ★ ★

# தொழில் முதலீட்டைக் கவரும் நகரமாக சென்னையை மாற்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழக அரசு திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்

இந்திய தொழில் கூட்டமைப்பின் தென் மண்டலம் ஏற்பாடு செய்துள்ள ஒருங்கிணைந்த அடிப்படைக் கட்டுமான வசதிகள் மற்றும் மூலதனமும் குறித்த இந்த இரட்டைக் கருத்தரங்கில் கலந்து கொண்டு துவக்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

### தனியார் துறையினரின் ஒத்துழைப்பு

இது ஒரு சரியான தருணத்தில் நடைபெறுகின்ற கூட்டம் என்று சொல்ல முடியாது. ஏனென்றால், தற்போது நாங்கள் நிதிநிலை அறிக்கை தயாரிப்பதில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் நேரம் இதுவாகும். எல்லா வகையான வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் மூலதனம் மற்றும் அடிப்படை கட்டுமான வசதிகளும் இரண்டு



முக்கியமான தூண்களாகும். மூலதனம் என்பது வளத்தை உருவாக்குவது. மக்களிடையே வருமானத்தை அதிகரிப்பது குறிப்பாக ஏழை மக்களின் கைகளில் வருமானம் வந்து சேர்வது என்ற வகையில்தான் பார்க்கின்றேன். இந்த வகையான விரைவான அல்லது வேகமான வளர்ச்சியை நாம் எட்ட வேண்டுமானால் அரசு பொதுத்துறை மற்றும் தனியார் துறையினரின் ஒத்துழைப்பும் முக்கியக் காரணியாக இருந்து செயல்பட வேண்டும்.

10ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழகத்தின் விவசாயத் துறையில் 4 சதவிகித வளர்ச்சியும், உற்பத்தித் துறையில் 7 சதவிகித வளர்ச்சியும், பணிகள் துறையில் 10 சதவிகித வளர்ச்சியுமாக ஒட்டுமொத்தத்தில் 8 சதவிகித வளர்ச்சி விகிதத்தை உறுதியோடு எட்டும் வகையில் 10ஆவது ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கமாகக் கொண்டுள்ளேன். அதாவது அதிகரிக்கப்பட்ட மூலதன உற்பத்தி விகிதம் (ICOR-Incremental Capital Output Ratio) இந்த கால கட்டத்தில் 3.26 ஆக உயர்த்த நாம் முயற்சிக்க வேண்டும்.

10ஆவது ஐந்தாண்டுக்கான மொத்த நிதியின் திட்ட மதிப்பீடு சுமார் ரூ.40 ஆயிரம் கோடி அளவுக்கு இருக்கும். கடுமையான நிதிப் பற்றாக்குறையால் பின்னுக்குத் தள்ளப்பட்டு, செயல்படுத்தப்படாமல் உள்ள வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் நிதிச் சீரமைப்பை செயல்படுத்த வேண்டிய கட்டாயம் இருப்பதாலும் மிகுந்த கடினமான நிலையை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளது. தனிநபர் வருமானத்தை வரும் 2010க்குள் இரட்டிப்பாக்க வேண்டும். அதாவது தேசிய செயல்திட்ட கால இறுதிக்கு 2 ஆண்டுகளுக்கு முன்பாக அடைய வேண்டும் என்று திட்டமிட்டுள்ளோம்.

விவசாயம் மற்றும் உற்பத்தித் துறையில் வளர்ச்சி விகிதம் கடந்த 9ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைந்துவிட்டது. உலக வங்கி சமீபத்தில் வெளியிட்ட தனியார் மூலதனம் குறித்த அறிக்கையில் மின் உற்பத்தித் துறை 40 சதவிகித தனியார் முதலீட்டை வரவேற்று உள்ளதாகவும் அதனையடுத்து தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து ஆகியவற்றில் தனியார் முதலீடு உள்ளதாகவும் தெரிவித்துள்ளது. ஆகவே, பொது முதலீடு அடிப்படைத் துறைகள் மற்றும் முக்கியமான உள்கட்டமைப்பு வசதிகளை, தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி அதனுடைய மதிப்பினை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் சவாலை சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

### புதிய முயற்சிகளுக்கு வரவேற்பு

தமிழகப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் உள்ளது. ஆனால் மாநிலத்தின் நிகர உள்நாட்டு உற்பத்திக்கு (GSDP-Gross State Domestic Product) இத்துறையில் இருந்து வரும் பங்களிப்பு வெறும் 17 சதவிகிதம் தான். ஆனால் மாநிலத்தில் உள்ள

62 சதவிகித மக்கள் விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலை நம்பித்தான் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்துறையில் மூலதனம் செய்வது என்பது முதலீடு, புதிய நவீன தொழில்நுட்பம், திறமையான நிருவாக முறைகள் மற்றும் எளிதான சந்தைப்படுத்தும் முறைகளை உருவாக்கித் தருவது என்பது இன்னும் கடினமான ஒன்றாகத்தான் உள்ளது. நமது விவசாயிகள் அதிக நீர்தேவைப்படும் பாரம்பரிய முறைகளை விட்டு அதிக பலன் மற்றும் வருவாய் தரும் பணப் பயிர்களையும் பயிரிட முன்வர வேண்டும். அதே நேரத்தில் விவசாயம் சாராத பால் பதப்படுத்துதல், கோழி வளர்ப்பு, தோட்டக் கலை மற்றும் மீன்வளர்ப்பிலும் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கித்தர வேண்டும். சிக்கனமான நீர்நிர்வாக மேலாண்மை, மண் பாதுகாப்பு மற்றும் தரிசுநில மேம்பாடு ஆகியவற்றில் என்னுடைய அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது.

பண்ணைகள் மற்றும் பண்ணை நிர்வாகத்தில் தனியார் துறையினரின் புதிய முயற்சிகளையும் செயல்திட்டங்களையும் வரவேற்கின்றேன். இவை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு விவசாய–பதப்படுத்துதல் மண்டலம் மூலம் தொடர்பு கொண்டுள்ளது.

மேலும் தோட்டக் கலை மற்றும் விதை மற்றும் மலர் உற்பத்திக்கு உதவும் வகையில் தனியார் துறையின் பங்களிப்பு மற்றும் முயற்சிகளை வரவேற்கின்றேன்.

கிராமப்புற கட்டமைப்பு

கிராமப்புற அடிப்படைக் கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதற்காக 10ஆவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் கிராமப்புற அடிப்படைக் கட்டுமான வசதி மேம்பாட்டு நிதியத்துக்கு (RIDF-Rural Infrastructure Development Fund) ரூ.2,000 கோடி நிதியை ஒதுக்கீடு செய்ய திட்டமிட்டுள்ளோம். விவசாயிகளையும், சந்தைகளையும் இணைக்கும் வகையில் தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த உள்ளோம்.

விவசாயிகளையும், சந்தையையும் இணைத்து விவசாயத் துறையின் வளர்ச்சியை மேம்படுத்தும் அரசின் இந்தத் திட்டத்திற்குத் தனியார் துறையினரும் இணைந்து பங்கேற்க வேண்டும் என அழைக்கின்றேன்.

விவசாயத் துறையில் உருவாகும் வருமானத்தின் வளர்ச்சியானது, உற்பத்தி மற்றும் பணிகள் துறையிலும் பரிணமிக்கும் என்பதில் நான், உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளேன்.

உற்பத்தித் துறையானது இன்று மிகவும் சிக்கலான ஒரு காலகட்டத்தில் உள்ளது. உலகமயமாக்கலின் விளைவாக, இன்று நமது பொருட்களை விற்பனை செய்யும் பாரம்பரிய சந்தைகள் மற்றும் பணிகள் துறையின் செயல்பாட்டையும், அமைப்பையும் மாற்றி அமைத்துள்ளது. உலகம் முழுவதும் உள்ள பல்வேறு உற்பத்தி நிறுவனங்கள் போட்டியை எதிர்கொள்வதற்காகத் தங்களின் உற்பத்தித் தளங்களை, வளர்ந்து வரும் ஆசிய–பசிபிக் பிராந்தியங்களை நோக்கி இடம் பெயர்ந்து வருகின்றன.

[illegible]

இந்த சூழ்நிலையால் அளவுக்கு அதிகமான வாய்ப்புகள் உருவாகும் நிலையிலும் கடுமையான போட்டிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையையும் நாம் சந்திக்க வேண்டி உள்ளது.

இந்திய தொழில் கூட்டமைப்பு ஏற்பாடு செய்து, டில்லியில் இந்திய பொருளாதார மாநாடு 2002, இரண்டாவது கட்ட பொருளாதாரக் கொள்கை மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தங்களை மத்திய–மாநில அரசுகள் செயல்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்தியது.

உற்பத்தித் துறையில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களாக டேவிட் டோலர் உலக வங்கிக்காகத் தயாரித்த அறிக்கையில் முக்கிய காரணியாகக் கீழ்க்கண்டவற்றைச் சுட்டிக்காட்டி இருப்பதோடு, அதனைச் செயல்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

★ அதிகாரப் பரவலையும் மற்றும் பணிகள் நடைபெறும் காலம் மற்றும் செலவுகளையும் குறைத்தல்
★ தரமான மின்சார விநியோகம்
★ தொழிலாளர் உற்பத்தித் திறன்
★ மாநில அளவிலான வரி சீர்திருத்தம்
★ தொழிற்சாலைக்குத் தேவையான வலிமையான அடிப்படைக் கட்டுமான வசதிகளை உருவாக்கித் தருவது ஆகியவையாகும்.

என்னுடைய தலைமையிலான அரசு உற்பத்தித் துறைக்கு முக்கிய காரணியாக விளங்கும் மேற்கண்ட பணிகளுக்கான கொள்கை மற்றும் செயல் திட்டங்களை ஒருங்கிணைத்துள்ளது.

ஒற்றை விண்ணப்ப முறை

முதலீட்டாளர்கள் தமிழகத்தில் தொழில் தொடங்க ஒரே ஓர் அமைப்பை அணுகினால் போதும். வழிகாட்டும் இயக்கம் ஒரே விண்ணப்பத்தின் மூலம் எல்லா ஒழுங்குமுறை ஆணையத்தில் இருந்து தேவைப்படும் அனைத்து அனுமதிகளையும் குறித்த கால அளவுக்குள் பெற்றுத் தர வழிவகை செய்துள்ளது.

ஏற்கெனவே திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளுக்கான கால அளவும் மற்றும் செலவுகள், மாநிலத்தின் முதலீடு செய்பவர்களுக்குக் குறைந்துள்ளது என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு பொதுவான கணக்கு சமர்ப்பிக்கும் விண்ணப்பம் நடைமுறைக்குக் கொணர்வதன் மூலம் ஏற்கெனவே 51 விண்ணப்பங்கள் மூலம் காண்பிக்கப்படும் கணக்கு நடைமுறைகள் முறை மாற்றி அமைக்கப்படுவதால் தொழில் முனைவோர் பயன்பெறுவர். ஒற்றை விண்ணப்ப முறையில் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் முறை விரைவில் அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் நிர்வாக நேரம் குறைவதோடு அரசு அலுவலகங்களில் செலவிடும் நேரம் மட்டுப்படுத்தப்படும்.

தரமான மின்சாரம்

2003 ஜனவரி முதல் தேதியில் இருந்து சர்வதேச மின்சார விநியோக தர அளவான 50 ஹெர்ட்ஸ் அளவில்






மின் விநியோகத்தைத் தமிழ்நாடு மின்சார வாரியம் வழங்கி வருகிறது என்பதை உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இந்த நிலை கடந்த ஜனவரி 2003, 1ஆம் தேதி முதல் கிடைக்கும் மின்சாரத்துக்கான புதிய கட்டண முறையைச் செயல்படுத்தியதால் தான் வழங்க முடிகின்றது. மின்சாரம் கிடைக்கவில்லை, தட்டுப்பாடு என்பது எல்லாம் தற்போது இல்லை. தரமான மின்சாரத்தை வழங்கவும், ஒருங்கிணைந்த மறுசீரமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலமும் தமிழ்நாடு மின்சார வாரியத்தைத் தரமானதாகவும், தலைசிறந்ததாகவும் மாற்ற உறுதி கொண்டுள்ளேன்.

உற்பத்தித் துறையில் தேவைப்படும் மனித வளங்களுக்குத் தமிழகத்தில் குறைவே இல்லை. உற்பத்தித் துறைக்குத் தேவையான மனித சக்தியை உருவாக்கித் தருவதில் தமிழகம் தனி இடத்தைப் பெற்றுள்ளது.

ஆண்டுதோறும் 75 ஆயிரம் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் தமிழகத்தில் உள்ள 500க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து பயிற்சி பெற்று வெளிவருகின்றனர்.

பள்ளிக் கூடங்களில் கணினிப் பயிற்சியை அறிமுகப்படுத்தியதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்கி வருகின்றது.

இந்தியாவில் நிலவும் வியாபாரப் போட்டியைச் சமாளிக்க தொழிலாளர்களின் ஊதியத்தையும் உற்பத்தி திறனையும் அதிகரிக்கத் தொழிலாளர்களும் நிருவாகத்தினரும் பேசி ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும்.

பழைய மற்றும் நலிவடைந்த தொழிற்சாலைகள் உலகமயமாக்கல் கொள்கையால் ஏற்பட்டுள்ள தற்போதைய போட்டி சூழ்நிலையை எதிர்கொள்ள முடியாமல் உள்ளது. அதனைச் சீரமைக்கப் புதிய நிதி முதலீடு செய்யப்பட வேண்டும்.

தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பது மற்றும் மாற்றங்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ளும் தன்மை ஆகியவற்றை நம்முடைய தொழிற்கல்வி நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

இந்திய தொழில் கூட்டமைப்பு இந்த செயல் திட்டத்தைச் சிறப்பான வகையில் செயல்படுத்தத் தேவையான முழு செயல்திட்டம் ஒன்றை வகுத்து வளர்ச்சி காண வேண்டும்.

இரண்டாவது தொழிலாளர் ஆணையத்தின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவது குறித்த ஆரம்ப கட்டப் பணிகள் குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகின்றது. நாங்களும் இதனை மாநில அளவில் செயல்படுத்துவது குறித்து பரிசீலனை செய்து வருகின்றோம்.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்

உயர்தரமான அடிப்படை கட்டுமான வசதிகளை குறைந்த முதலீட்டில் கிடைக்கச் செய்வது நவீன உற்பத்திக்குத் தேவையாகும். கடற்கரை நகரங்களான எண்ணூர், சென்னை மற்றும் தூத்துக்குடியில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

திருப்பூர் மற்றும் சென்னையை அடுத்த இருங்காட்டுக் கோட்டையில் இரண்டு ஆயத்த ஆடை ஏற்றுமதி பூங்காக்கள் விரைவில் செயல்பட உள்ளது. ஊட்டியில் மலர் ஏற்றுமதி பூங்கா விரைவில் செயல்பட உள்ளது. மேலும் தருமபுரி மாவட்டத்தில் தோட்டக் கலைத்துறை (பழவகை ஏற்றுமதி பூங்கா) அமைக்கப்படவுள்ளது.

அதே போன்று சுற்றுப்புறச் சூழல் சார்ந்த தொழில் பூங்கா ஒன்று திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் அமைக்கப்படவுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் நவீன ரப்பர் பூங்கா அமைக்கப்பட உள்ளது.

பெருகி வரும் சமூக அடிப்படை கட்டுமான தட்டுப்பாட்டின் காரணமாகச் சென்னைக்கு அருகில் ஒருங்கிணைந்த நகரங்களை உருவாக்க என்னுடைய தலைமையிலான அரசு திட்டமிட்டுள்ளது. அதே போன்று பெருகி வரும் உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தரமான அடிப்படை கட்டுமான வசதிகளை உருவாக்கி தரும் வகையில் தொழிற்பேட்டைகள் மற்றும் தொழில் நகரங்கள் எதிர்காலத்தில் உருவாக்கப்படும்.

### உலக உற்பத்தியாளர்களுக்கு முதலீட்டுக்குச் சென்னை சிறந்த இடம்

இந்த தொழிற்பேட்டைகள் மற்றும் நகரியங்களை மேம்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும் தனியார் துறை ஒத்துழைப்பை எனது அரசு வரவேற்கின்றது. இந்த நடவடிக்கைகள் தமிழகத்தை உலக உற்பத்தியாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் மத்தியில் முதலீடு செய்ய சிறந்த இடமாக சென்னையைத் தேர்ந்தெடுக்க உதவி செய்யும் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தில் பணிகள் துறையில் அதிக வேலை வாய்ப்புகளும், வருவாய் பெருக்கத்திற்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது. பணிகள் துறையில் முக்கியமான துறையாக தகவல் தொழில்நுட்பத்துறை விளங்கி வருகிறது. தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் தரமான தேர்ச்சி பெற்ற பொறியாளர்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்கள், மென்பொருள், வன்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் நிபுணத்துவம் கொண்டவர்கள் ஏராளமாக இருக்கின்றனர்.

பணிகள் துறையில் அதிகமான அளவில் வேலை வாய்ப்பை உருவாக்கிஆ தரும் துறையாக தகவல் தொழில்நுட்பத் துறை விளங்கி வருகிறது. இதில் தமிழகம் தனக்கென தனி இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

### அறிவுசார்ந்த நகரம்

தெற்காசிய மண்டலத்தில் அறிவு சார்ந்த நகரமாகச் சென்னையை மாற்றுவது என்று என்னுடைய தலைமையிலான அரசு உறுதி பூண்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப மையமாக விளங்கும் மத்திய கைலாசிலிருந்து சிறுசேரி வரை உள்ள பகுதியைச் சர்வதேசத் தரத்திற்கு இந்த ஆண்டுக்குள் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பகுதி விரைவில் நூறு கோடி டாலர் முதலீடு நடைபெறும் இடமாக மாறும் என்று நான் நம்புகிறேன். இந்தப் பகுதியில் 15 இலட்சம் சதுர அடிப்பரப்பில் மற்றும் ஒரு தகவல் தொழில்நுட்ப பூங்கா சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட உள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தைப் போன்றே உயிரி தகவல் தொழில்நுட்பத்துறையிலும் உலகம் முழுவதிலும் இருந்து முதலீடுகள் தமிழகத்தில் செய்யப்படுகின்றது. தமிழ்நாடு தொழில்நுட்ப வளர்ச்சி கழகமும் (TICEL-TIDCO Centre for Life Science) அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக் கழகமும் இணைந்து உயிரி அறிவியல் பூங்கா ஒன்றை இந்த ஆண்டு அமைக்கின்றது. இந்த பூங்காவில் உயிரியல் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஆராய்ச்சி மையங்கள் ஆகியவை இருக்கும். இதனை வல்லுநர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்தி இலாபம் தரும் வகையில் பணிகளை மேற்கொள்ள அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்.

தமிழகத்திலுள்ள பெரிய நகரங்களான கோவை, திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் தகவல் தொழில்நுட்பம், உயிரியல் நுட்பம் தொடர்பான முதலீட்டுக்கு வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது. உலகம் முழுவதையும் இணைக்கும் கண்ணாடி இழை கேபிள் நெட்வொர்க் 5 ஆயிரம் கிலோ மீட்டர் அளவுக்கு இந்த நகரங்களில் பரவியுள்ளது.

தரமான நல்ல அடிப்படைக் கட்டுமான வசதிகளை உருவாக்கித் தருவதற்கான மூலதனத்தை அரசால் மட்டும் முதலீடு செய்ய இயலாது. கடுமையான நிதி நெருக்கடி காரணமாக அரசால் மூலதனம் செய்ய இயலாத நிலையில் இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படாமல் உள்ள நிலையில் தனியார் துறையினர் இதுபோன்ற திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டும்.

இந்திய அடிப்படைக் கட்டுமான வசதிகள் குறித்து ராக்கேஷ் மோகன் குழுவின் பரிந்துரையின்படி அரசும், தனியாரும் இணைந்து (PPP-Public Private Partnership) இதுபோன்ற அடிப்படைக் கட்டுமான வசதிகளை உருவாக்க முன்வர வேண்டும். அதே போன்று பயன்படுத்துபவர்களே உருவாக்கிக் கொள்ளும் திட்டத்தையும் செயல்படுத்த வேண்டும்.

10–ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்தின் வளர்ச்சியில் பொதுத்துறையும் தனியார் துறையும் இணைந்து மாநிலத்தின் வளர்ச்சியில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று முடிவெடுத்துள்ளோம்.

அடிப்படைக் கட்டுமான வசதிகளைப் பெருக்குவதற்காக மத்திய அரசு அறிவித்த 2003–2004ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் போதுமான அளவு நிதி ஒதுக்க முடியாத நிலை உள்ளது. இதற்குக் காரணம் போதுமான மூலதனம் இல்லாதது தான். எனவே என்னுடைய தலைமையிலான அரசு பத்தாவது ஐந்தாண்டு காலத்தில் தமிழகத்தில் அடிப்படை கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதற்காகத் தனியார் முதலீட்டைப் பெறும் வகையில் புதிய சட்ட திருத்தத்தைக் கொண்டு வர உள்ளது.

இந்த சட்ட திருத்தத்தின் மூலம் சலுகை மேம்பாட்டு ஒப்பந்தங்கள் இலாபம்–நஷ்டத்தில் சம பங்கு மற்றும் அடிப்படைக் கட்டுமான வசதிகள் மேம்பாடு மற்றும் அமலாக்கம் குறித்த விதிமுறைகள் இதில் அடங்கும்.

தேசிய அனல்மின் கழகத்துடன் (NTPC-National Thermal Power Corporation) இணைந்து தமிழக அரசு 1000 மெகாவாட் உற்பத்தி நிலையத்தை வட சென்னையிலும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி (NLC-Neyveli Lignite Corporation) கழகத்துடன் இணைந்து தமிழக அரசு 1000 மெகாவாட் அனல்மின் நிலையம் ஒன்றைத் தூத்துக்குடியிலும் துவக்கவுள்ளது.






### மின்உற்பத்தி 50 சதவிகிதம் அதிகரிக்கும்

இந்திய அரசு ஏற்கெனவே இரண்டாயிரம் மெகாவாட் அணுமின் நிலையம் ஒன்றைத் திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளத்தில் அமைத்து வருகிறது. இதன் உற்பத்தி எதிர்காலத்தில் இரட்டிப்பாக்கப்படும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தில் தற்போது 8200 மெகாவாட்டாக இருக்கும் மின் உற்பத்தித் திறன் 50 சதவிகிதம் அதிகரிக்கப்படும்.

கடந்த 1995–இல் அறிவிக்கப்பட்ட தமிழகச் சாலைத் திட்டம் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தத் திட்டம் கிழக்குக் கடற்கரைச் சாலையில் நாகப்பட்டினத்தில் இருந்து தூத்துக்குடி வரை ரூ.2 ஆயிரம் கோடி செலவில் செயல்படுத்தப்படும். இதே போன்று மற்ற சாலைகளும் 13 புறவழிச் சாலைகளும் மேம்படுத்தப்பட்டு மற்ற நகரங்களில் உள்ள போக்குவரத்து இடையூறுகள் களையப்படும்.

அதே போன்று மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைக்கும் சாலைகளைத் தனியார் உதவியுடன் மேம்படுத்தி பொருளாதார வாய்ப்புகளை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வரும் 2005–ஆம் ஆண்டிற்குள் சென்னைத் துறைமுகத்தையும்–எண்ணூர் துறைமுகத்தையும் இணைக்கும் சாலைப்பணி முடிவடையும் போது சரக்குப் பெட்டி கையாளுவதிலும், 'கண்டெய்னர்' போக்குவரத்து சென்னைத் துறைமுகத்தில் அதிகரிக்கப்படும்.

இது எண்ணூர் விரைவு நெடுஞ்சாலையில் கடலரிப்பு பிரச்சினையையும் தீர்க்கும் இந்தத் திட்டங்கள் எல்லாம் தமிழகத்தின் ஒட்டு மொத்த சாலைப் போக்குவரத்தை மேம்பாடு அடையச் செய்யும்.

மாநிலத்தில் உள்ள நகரங்கள் மற்றும் பெருநகரங்களில் உள்ள தரமான அடிப்படைக் கட்டுமான வசதிகள் அம்மாநிலம் பொருளாதாரத்தில் சிறப்பாக இருப்பதை எடுத்துக்காட்டும் நல்ல அறிகுறிகளாகும்.

### மாபெரும் குடிநீர்த் திட்டம்

தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படைக் கட்டுமான வளர்ச்சிக் கழகம் மற்றும் நிதி சேவை நிறுவனம் (TNUIFSL-Tamil Nadu Urban Infrastructure and Financial Services Ltd) அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சிக்கு (PPP-Public Private Partnership) சிறந்த எடுத்துக்காட்டாகும். இதன் மூலம் ரூ.200 கோடி செலவில் நகர்ப்புறக் கழிவகற்றல், குடிநீர் வழங்கல், போக்குவரத்து வசதிகள் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும். ரூபாய் 1000 கோடி மதிப்பில் தனியார் மற்றும் அரசும் இணைந்து செயல்படுத்தும் மாபெரும் குடிநீர்த் திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின் மூலம் திருப்பூர் நகராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் பனியன் ஏற்றுமதியாளர்கள் பயனடைவார்கள். ஒருங்கிணைந்த சென்னை பெருநகர அடிப்படைக் கட்டுமான வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ.18 ஆயிரம் கோடி செலவில் மெகா திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது. இதில் ரூ.10 ஆயிரம் கோடி செலவில் மின் விநியோகம் சாலை மேம்பாட்டுப் பணிகள், போக்குவரத்து, குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல், திடக்கழிவு அகற்றல் மற்றும் குடியிருப்புகள் கட்டப்படும். இதற்கு அதிக அளவு முதலீடு தேவைப்படுவதால் முதலீட்டிற்கான புதிய வழிமுறைகள் கண்டறியப்படும்.

### ஆசியாவிலேயே சிறந்த நகரமாகச் சென்னை

மேலும் பெரிய அளவில் தனியார் துறையில் பங்களிப்பும் அவசியமாகிறது. சென்னையைப் புதுப்பித்து தென்னிந்தியாவில் மிகச்சிறந்த நகரமாகவும் தென்கிழக்காசியாவின் நுழைவு வாயிலாகவும் மாற்றி முதலீடு செய்வதற்கு ஆசியாவிலேயே சிறந்த நகரமாகச் சென்னையை மாற்ற வேண்டும் என்பதுதான் என்னுடைய தலைமையிலான அரசின் நோக்கமாகும்.

இதனை நிறைவேற்றுவதில் உங்கள் அனைவரின் ஒத்துழைப்பும் கண்டிப்பாகக் கிடைக்கும் என்பதை நான் முழுமனதுடன் நம்புகிறேன்.

சென்னை நகரின் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க ரூ.720 கோடி செலவில் ஒருங்கிணைந்த புதிய வீராணம்

திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் சென்னை நகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். சென்னை நகருக்குக் குடிநீர் வழங்க நவீன தொழில்நுட்பத்துடன் கடல்நீரை குடிநீராக்கும் புதிய தொழில்நுட்பங்கள் குறைந்த மூலதனத்தில் தற்போது உள்ளது.

சென்னை நகரில் உள்ள கழிவுநீரைச் சுத்திகரித்து தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் திட்டம்–II செயல்படத் துவங்கும்போது போதுமான அளவு குடிநீர் அடுத்த மூன்றாண்டுக்குள் கிடைக்கும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வரும் மழைநீர் சேகரிப்புத் திட்டத்திற்குப் பொதுமக்களுடைய பங்களிப்பு மிகவும் அவசியம் என்பதனை இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடிப்படை கட்டுமான வசதிகள் என்பதைப் பற்றி குறிப்பிடும் போது சாலைகள், குடிநீர் வழங்கல் ஆகியவை முக்கியமானவைதான். அதே நேரத்தில் தரமான பாதுகாப்பான சமூக வாழ்க்கை வாழத் தேவையான, சமூக கட்டமைப்பையும் உருவாக்க வேண்டியதும் அவசியமாகிறது.

### சுகாதாரத்தின் தலைநகரம்

சுகாதாரத்தைப் பொறுத்தமட்டில் சென்னை நகரம் இந்தியாவில் உள்ள மற்ற எல்லா நகரங்களைவிட அதிக அளவில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய மருத்துவமனைகளைக் கொண்டுள்ளது. எனவே, இந்தியாவில் சுகாதாரத்தின் தலைநகரமாகச் சென்னை விளங்குகிறது என்று அழைப்பதில் தவறில்லை.

நம்மிடம் உள்ள தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலம் கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கும் தேவையான மருத்துவ ஆலோசனைகளை வழங்க இயலும்.

மேலும் சுகாதாரத் துறை எதிர்காலத்தில் அபரிமிதமான வகையில் வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்புகள் உள்ளது. இந்தத் துறையில் அதிகமான அளவு வேலை வாய்ப்புக்கு வசதி வாய்ப்புகள் உள்ளன.

அரசு மற்றும் தனியார் இணைந்து தொழில்நுட்ப வல்லுநர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் செவிலியர்களை உருவாக்க வேண்டும். தமிழகத்திலிருந்து பயிற்சி பெற்று வரும் சுகாதாரப் பணியாளர்கள் உலகம் முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் பணிபுரியும் வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு விரிவான சீர்திருத்தத்தைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக நிதித்துறையில் செயல்படுத்தப்படும் சீர்திருத்தங்களுக்கு உற்பத்தித் துறையைச் சார்ந்தவர்களும், தகவல் தொழில்நுட்பத் துறையைச் சார்ந்த தொழில் முனைவோர்களும், தொழில் அதிபர்களும் அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு தருவீர்கள் என்றும் அரசின் இந்த தைரியமான முயற்சிக்கு ஆதரவு தருவீர்கள் என்றும் நம்புகிறேன்.

தற்போது நடைமுறையில் உள்ள உலகமயமாக்கல் தாராளமயமாக்கல் கொள்கைகளால் உருவாகியுள்ள போட்டிகளைச் சமாளிக்கும் வகையில் இந்த சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இதனை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு கடுமையான வழிமுறைகளை உள்ளடக்கிய நிதிச் சீர்திருத்தத்தை மிகப் பெரிய அளவில் சீர்திருத்தத்தைச் செய்து வருகின்றோம். முதலீட்டுக்கு ஏற்ற இடமாகத் தமிழகத்தை மாற்றும் வகையில் பல்வேறு சீர்திருத்தங்களை அரசு எடுத்து வருகிறது.

### [illegible]

உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் கொள்கைகளைச் செயல்படுத்துவதால் ஏற்பட்டுள்ள வர்த்தகப் போட்டியில் பங்கேற்று வெற்றி பெறுவதோ, தோல்வியைத் தழுவுவதோ உங்கள் கைகளில்தான் உள்ளது. முதலீடுகளை ஈர்ப்பதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுப்பது அரசின் பணியாகும்.

தமிழகத்தில் ஒரு தரமான ஆடுகளத்தை அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது; முதலீட்டாளர்கள் இந்தப் போட்டியைச் சமாளிக்க வேண்டும். இந்த போட்டியில், ரன் ஏதும் எடுக்காமல் அவுட் ஆகலாம் அல்லது சிக்சர் அடித்து வெற்றி பெறலாம். தென்னாப்பிரிக்காவில் உலக கோப்பை கிரிக்கெட் இறுதிப்போட்டியைச் சந்திக்கவுள்ள இந்திய அணி வெற்றிபெற வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில்துறையில் ஒரு சிறப்பான இன்னிங்சுக்கு தொழிலதிபர்கள் தயாராக வேண்டும்.

இந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவிப்பதோடு பங்கேற்ற அனைவருடைய முயற்சிகளும் வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்கள்.

முன்னதாக இந்திய தொழில் கூட்டம் (தென் மண்டலம்) சென்னை லீ ராயல் மெரிடியனில் ஏற்பாடு செய்திருந்த அடிப்படை உள்கட்டமைப்பு மற்றும் முதலீடு மாநாட்டை துவக்கி வைக்க வந்த தமிழக முதல்வர் அவர்களைத் தமிழ்நாடு இந்திய தொழில் கூட்டமைப்பின் தலைவர் பி.கே. மொகாபத்ரா பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

பின்னர் முதல்வர் அவர்கள் குத்து விளக்கேற்றி வைத்து கருத்தரங்கைத் துவக்கி வைத்தார்கள். இவ்விழாவில் இந்திய தொழில் கூட்டமைப்பின் ஆய்வறிக்கையை முதல்வர் அவர்கள் வெளியிட தொழில் அதிபர் அருண் ஜெயின் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் இந்திய தொழில் கூட்டமைப்பின் தென் மண்டலத் தலைவர் டி.கண்ணன், இந்திய தொழில் கூட்டமைப்பின் உள்கட்டமைப்புத் துணைக் குழுத் தலைவர் மல்லிகா சீனிவாசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்திய தொழில் கூட்டமைப்பின் தென்மண்டலம் ஏற்பாடு செய்திருந்த "முதலீட்டில் வெற்றிப் பாதையில் தமிழகம் மற்றும் [illegible] – 2003" (ஒருங்கிணைந்த அடிப்படைக் கட்டுமான வளர்ச்சி) ஆகிய இரு கருத்தரங்குகளை சென்னை லீ ராயல் மெரிடியன் ஹோட்டலில் 19.3.2003 அன்று துவக்கிவைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.

# தமிழகத்தில் ஒரு சிலிகான் பள்ளத்தாக்கு

*மாண்புமிகு முதலமைச்சர் உறுதி*

தமிழக அரசின் சார்பில் ஸ்காட் மெக் நீலி மற்றும் சன் மைக்ரோ சிஸ்டம் நிறுவன அதிகாரிகளை வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழக அரசு, அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் சன் மைக்ரோ சிஸ்டம் ஆகியவை இணைந்து தலைசிறந்த இணையதள சேவைகள், மின்னணு பயிற்சி மற்றும் மின்னணு அரசுப் பணிகள் ஆகியவற்றில் இணைந்து செயல்படுவது குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது மிகவும் முக்கியமான ஒரு நிகழ்வாகும்.

இந்த ஒப்பந்தம் அரசு, கல்வி நிறுவனம் மற்றும் தொழில் நிறுவனம் ஆகியவை இணைந்துள்ளதோடு பொது மற்றும் தனியார் துறை (PPP-Public Private Partnership) இணைந்து செயல்பட முடியும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.



தகவல் தொழில்நுட்பத்துறையில் தமிழகத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி மாநிலத்திற்கு வளத்தையும், புகழையும் உருவாக்கித் தருவதில் இது முக்கியப் பங்காற்றும் என்று நம்புகிறேன். என்னுடைய தலைமையிலான அரசு கடந்த ஆண்டு வெளியிட்ட தகவல் தொழில்நுட்பக் கொள்கையின் நோக்கமும் இதன் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

21ஆம் நூற்றாண்டின் வளர்ச்சி என்பது அரசினால் மட்டுமே இயலாது என்பது என்னுடைய திடமான கருத்தாகும். சிலிகான் பள்ளத்தாக்குக் கூட்டு முயற்சியால் உருவானது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழகத்தில் மற்றொரு 'சிலிகான் பள்ளத்தாக்கு' உருவாவதற்கு தளம் அமைத்துள்ளோம் என்று தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தகவல் தொழில்நுட்பப் பயன்பாட்டின் ஒரு பகுதியான மின்னணு நிருவாகத்தை பல்வேறு அரசுத் துறைகளில் பயன்படுத்த இந்த ஒப்பந்தம் ஒரு நுழைவாயிலாக அமைந்துள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயன்பெறும் வகையில் பல்துறை அறிவு சார்ந்த பணிகளையும் மற்றும் தகவல்களையும் இந்த ஒருங்கிணைந்த தகவல் மையத்தின் மூலம் நிர்மாணித்து அதனைச் செயல்படுத்துவதில் வெற்றி கண்டு, அதனை

மேம்படுத்தி சிறப்பாகச் செயல்பட அண்ணா பல்கலைக்கழகத்துக்கும், சன் மைக்ரோ சிஸ்டம் நிறுவனத்துக்கும் எனது அரசு முழு ஒத்துழைப்பை நல்கும்.

தமிழகத்தில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சன் மைக்ரோ சிஸ்டம் நிறுவனத்தின் 'ஸ்டார் ஆபீஸ் 6.0' என்ற மென்பொருளை இலவசமாக வழங்க இருப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த 'ஸ்டார் ஆபீஸ் 6.0' மென்பொருளை பள்ளிகளிலும் மற்ற நிறுவனங்களிலும் பயன்படுத்த அரசு ஊக்கத்தை அளிக்கும்.

தமிழகத்தில் மின்னணு நிருவாகம் செயல்படுத்தப்பட்டுள்ள துறைகள் குறித்து மெக் நீலி அவர்களுக்கு விளக்க விரும்புகிறேன்.

எளிய மற்றும் வெளிப்படையான நிருவாகப் பதிவுத் திட்டத்தைத் (Simple and Transparent Administration of Registration - STAR) தமிழகப் பதிவுத் துறையில் அமல்படுத்தி உள்ளோம். இந்த திட்டத்தின் முதல் கட்டமாக 17 மாவட்ட பதிவாளர் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக 325 மாவட்ட பதிவாளர் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்கள் கணினி மயமாக்கப் பட்டுள்ளன. மூன்றாவது கட்டமாக மற்ற எல்லா மாவட்ட பதிவாளர் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட உள்ளன.

இதே போன்று நிருவாகத்தின் முதுகெலும்பாக தாலுகா அலுவலகங்கள் உள்ளன. தமிழகத்தில் உள்ள 206 தாலுகா அலுவலகங்களிலும் நில ஆவணங்கள் கணினிமயமாக்கப் பட்டுள்ளது. கணினிமயமாக்குவதில் எங்களது பணி தொடர்ந்த வண்ணம் உள்ளது.

21.3.2003 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள என்னுடைய அலுவலகத்தில் இருந்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறைத் தலைமையிடம் ஆகியவற்றை இணைக்கும் 'வீடியோ கான்பரன்சிங் நெட்வொர்க்'–ஐத் தொடங்கி வைத்தேன். இந்த வீடியோ கான்பரன்சிங், தகவல் பரிமாற்றம், நேருக்கு நேர் கலந்துரையாடல் மற்றும் விரைந்து முடிவெடுத்தல் ஆகிய பணிகளைச் செய்ய உதவி புரியும்.



தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வீடியோ கான்பரன்சிங் முறை, பரப்பளவு, தன்மை மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவிலேயே, வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது.

அரசு மற்றும் தனியார் துறை இணைந்து செயல்படுவதற்கு மற்றொரு அருமையான எடுத்துக்காட்டு என்னுடைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட, பள்ளிகளில் கணினிப் பயிற்சி அளிக்கும் திட்டமாகும். இந்தத் திட்டம் தமிழகத்தில் உள்ள 1,200 மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு ஒரு இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள்.

அரசுத் துறையில் கணினியை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு உரிய நடைமுறைகள் மற்றும் வாய்ப்புகள் குறித்து ஆராய ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் என்னுடைய தலைமையிலான அரசு உறுதியுடனும் முழுமூச்சுடனும் செயல்பட்டு வருகிறது. அறிவுசார்ந்த சமுதாயமாக மாறிக் கொண்டே இருக்கின்ற நிலையில் எல்லோருடைய முகத்திலும் புன்னகையையும் மகிழ்ச்சியையும் பார்க்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

தமிழக அரசு மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைந்து பணியாற்ற உள்ள ஸ்காட் மெக் நீலி மற்றும் சன் மைக்ரோ சிஸ்டம் நிறுவனத்தின் அதிகாரிகளுக்கும் எனது வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புதுமையான திட்டம் வெற்றியடைய என்னுடைய வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் 22.3.2003 அன்று அரசுத் துறையில் மின்னணு நிருவாகத்தைப் பயன்படுத்த அமெரிக்க நிறுவனமான சன்மைக்ரோ சிஸ்டத்துடன் தமிழக அரசு மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் சார்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தான நிகழ்ச்சியில் ஆற்றிய உரை.* ★



# விளையாட்டு மூலம் இளைஞர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த முடியும்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்




51ஆவது அகில இந்திய காவல்துறை தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் 2002–ன் நிறைவு நாள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எந்தவொரு விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு விழா இறுதி நேரம் என்பது விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளில் ஒரு சிலருக்கு மகிழ்ச்சியும், வேறு சிலருக்கு துக்கமும் சிலருக்கு வெற்றியும் வேறு சிலருக்கு தோல்வியும் என்பது இரண்டறக் கலந்த ஒன்றாகும். ஆனால் ஒட்டு மொத்தத்தில் விளையாட்டுக்கு அது ஒன்று தான் பெருமையாகும்.

இந்தப் போட்டிகளில் இந்தியா முழுவதிலும் இருந்து வந்து கலந்து கொண்ட வீரர்களில் சிலர் வெற்றி பெற்ற கோப்பைகள் மற்றும் மெடல்கள் பளபளக்க, பல வீரர்கள் சற்று ஏமாற்றத்துடன் திரும்பினாலும், இந்தப் போட்டிகளில் பங்கேற்ற வீரர்களின் மனதில் இந்த நாட்களில் பெற்ற அனுபவங்கள் பசுமையாக அவர்களின் வாழ்க்கையில் இருக்கும் என்பதை நினைவு கூர விழைகின்றேன்.

தமிழகத்திற்கு என்றே உயர்ந்த பாரம்பரியம், பழக்கவழக்கம், கலை மற்றும் கலாச்சாரம் வந்தோரை உபசரிக்கும் பண்பு ஆகியவைகளில் சிறந்து விளங்குவது எல்லோரும் அறிந்த ஒன்று.

நான்காவது முறையாக தமிழக காவல் துறையினர் இந்தப் போட்டிகளை சென்னையில் நடத்துவது குறித்து நான் பெருமையடைகின்றேன்.

### நேரு விளையாட்டு அரங்கத்தின் பெருமை

இந்த உலகத்தரம் வாய்ந்த நேரு விளையாட்டு அரங்கம் கடந்த முறை நான் முதல்வராக



இருந்தபோது 1993ஆம் ஆண்டில் தான் கட்டப்பட்டது. சுமார் 40,000 பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கும் வகையில் சர்வதேச தரத்தில் கட்டப்பட்டது என்பதனை இங்கு நினைவுப்படுத்த விழைகின்றேன்.

ஜவஹர்லால் நேரு சர்வதேச அழைப்பு கால்பந்தாட்ட போட்டிகள், சர்வதேச அழைப்பு தடகளப் போட்டிகள், மதிப்பும் மரியாதை மிக்க தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (1995) ஆகிய போட்டிகள் நடைபெற்ற பெருமை இந்த நேரு விளையாட்டு அரங்கிற்கு உண்டு. மேலும் 1995இல் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் 7 தெற்காசிய நாடுகளும் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. கடந்த 1994–95ஆம் ஆண்டுகளில் 4 சர்வதேச தரத்தினாலான விளையாட்டு அரங்குகள் என்னுடைய ஆட்சியில் கட்டப்பட்டன.

அவை டென்னிஸ், ஹாக்கி, நீச்சல் மற்றும் உள்விளையாட்டு அரங்கம் ஆகியவையாகும். கடந்த 1996–2001ஆம் ஆண்டுகளில் ஆட்சி நடத்தியவர்கள் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்ட இந்த விளையாட்டு அரங்குகளைப் பயன்படுத்தாமலும், பராமரிக்காமலும் விட்டுவிட்டனர். தற்போது அவற்றைத் தொடர்ந்து பராமரிக்கவும், பயன்படுத்துவதற்கு ஏற்றவகையிலும் தேவையான அனைத்து உபகரணங்கள் மற்றும் அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து வருகின்றேன். விரைவில் நேரு விளையாட்டு அரங்க வளாகத்தில் செஸ் போட்டிக்காக ஒரு கட்டடமும், வலை அடிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறகுப்பந்து, பூப்பந்து மற்றும் நீச்சல் ஆகியவற்றுக்கான மையங்கள் தனியார் ஒத்துழைப்புடன் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**ஊக்கத்தொகை**

தகுதியும், திறமையும் வாய்ந்த சாதனை புரிந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்கப்படுத்துவதற்காகவும், ஒலிம்பிக் ஆசிய விளையாட்டு போட்டிகள், காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகள், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், தேசிய விளையாட்டு போட்டிகள் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்று சாதனை புரியும் தமிழக வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு என்னுடைய தலைமையிலான அரசு ரூ.25,000 முதல் ரூ.1 கோடி வரை அதிகபட்சமான ஊக்கத் தொகை வழங்கி உற்சாகம் அளித்து வருகின்றது என்பதை இங்கு நினைவுபடுத்த விழைகிறேன். இதன்படி வெற்றிபெற்ற வீரர்களுக்கு மட்டுமல்லாது அவர்களைத் தயார் செய்த பயிற்சியாளர்களுக்கும் ஊக்கத் தொகை வழங்கி உற்சாகப்படுத்தி வருவதையும் இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

கடந்த 2001ஆம் ஆண்டு லூதியானாவில் நடைபெற்ற 31ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 93 பேர்களுக்கு ரூ.31.75 இலட்சம் ஊக்கத் தொகை வழங்கியுள்ளது என்னுடைய தலைமையிலான அரசு.

**ஊக்கத்தைப் போற்ற சில பரிசுகள்**

இதேபோன்று ஜப்பான் நாட்டில் நடைபெற்ற சர்வதேச கராத்தே போட்டியில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்ற என்.வி.ஆர். வாசுதேவனுக்கு ரூ.1 இலட்சமும், சர்வதேச தகுதி பூப்பந்துப் போட்டிகளில் பங்கேற்ற ருஷ்மி சக்கரவர்த்திக்கு ரூ.4 இலட்சமும் ஊக்கத் தொகை வழங்கி ஊக்கம் கொடுத்துள்ளோம்.

இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டர் நகரில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டிகளிலும், தென்கொரியாவின் பூசன் நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டிகளிலும் வெண்கலம் மற்றும் தங்கப்பதக்கம் வென்ற அஞ்சு ஜார்ஜ்க்கு ரூ.30 இலட்சம் பரிசுத் தொகை வழங்கி உள்ளோம். மேலும் ஸ்நூக்கர் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற ரபாத் ஹபீப்க்கு ரூ.20 இலட்சம் பரிசுத் தொகை வழங்கியுள்ளது என்னுடைய தலைமையிலான அரசு.

மேற்கூறியவை எல்லாம் என்னுடைய தலைமையிலான அரசு விளையாட்டு வீரர்களின் ஊக்கத்தையும், அவர்களின் உழைப்பையும் போற்றும் வகையில் கொடுத்தவற்றில் சில தான்.



**நம்பிக்கை உள்ளது**

சாதனையாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் என்று ஒன்றை நான் அறிவித்துள்ளேன். தேசிய அளவில் பதக்கங்கள் வாங்கிய வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைத் தேர்ந்தெடுத்து தொடர்ந்து அவர்களின் தகுதியை மேம்படுத்தி சர்வதேச போட்டிகளில் பங்கேற்கச் செய்து சாதனைபுரிய தேவையான அனைத்து உதவிகளும் இந்தத் திட்டத்தின் மூலம் செய்யப்படும். எல்லா விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் பதக்கம் வென்று சாதனையாளர்களாக வரவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் என்னுடைய தலைமையிலான அரசு மேற்கண்ட நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. அந்த என்னுடைய எண்ணத்தை நீங்கள் கட்டாயம் செய்து சாதனை படைப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உங்கள் மேல் உள்ளது.

**விடாமுயற்சியால் வெற்றி**

மனிதகுலத்துக்கு விளையாட்டு சிறப்பான வகையில் பல்வேறு வகையில் உதவி புரிந்து வருகின்றது என நான் நம்புகின்றேன். விளையாட்டு வீரர்களுக்கு இடையே போட்டியை அதிகப்படுத்தும் அதே நேரத்தில் விளையாட்டு ஆரோக்கியமான போட்டியைத் தான் உருவாக்கும். ஒவ்வொரு விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் அவர்களுக்கென்று தனியாக வரைமுறைகளை, கொள்கைத் திட்டங்களை வகுத்துக் கொண்டு மீண்டும் மீண்டும் விடாமுயற்சியுடன், திரும்பத் திரும்ப முயன்றால் வெற்றியை கண்டிப்பாக அடையமுடியும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை.




எந்தவொரு விளையாட்டு போட்டியானாலும் வெற்றி பெற்றவர்கள், தோற்றவர்கள் இருப்பது இயல்புதான். ஆனால் வெற்றி பெற்றவர்களும், தோல்வி அடைந்தவர்களும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

வெற்றி பெறுவது மட்டும் வாழ்க்கையில் முக்கியமானது அல்ல. ஆனால் அதற்காகப் போராட வேண்டும். வெற்றி பெறுவதற்கு தேவையான முயற்சிகளில் முழுவதுமாக நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

இது விளையாட்டுக்கு மட்டுமல்ல, வாழ்க்கைக்கும் பொருந்தும்.

காவல்துறையில் பணியாற்றும் ஆண் ஆனாலும், பெண் ஆனாலும் காவலர் என்ற ஒரே சொல்லால் அழைக்கப்படுகிறார். காவலர் என்ற சொல் சட்டத்தின் காவலர், மக்களின் காவலர் என்ற பொருளில் வழங்கப்படுகிறது. இத்தகைய காவலர் பணியில் மெலிந்தவர்களுக்கோ, முயற்சியற்றவர்களுக்கோ, தோல்வி மனப்பான்மை உள்ளவர்களுக்கோ சிறிதும் இடமில்லை. காவல்துறையில் உள்ளவர்களுக்கு, விளையாட்டு மன வலிமையை உண்டாக்கி சமூகத்திற்கும், மக்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற இலட்சியத்தை உருவாக்கும் என்று நம்புகின்றேன். விளையாட்டு, வீரர்களை உருவாக்குவதில்லை. அவர்களிடம் உள்ள திறமையை வெளிக் கொணருகின்றது.

விளையாட்டில் ஒரு குழுவாக ஒருங்கிணைந்து செயல்படுவதால், அந்தக் குழுவில் உள்ளவர்களிடையே வெற்றி பெற வேண்டும் என்ற ஒரே குறிக்கோளை உண்டாக்குகின்றது. நாம் நமது பள்ளி நாட்களில் கற்ற குழுவில், நான் என்ற தனி ஒருவனுக்கு இடம் இல்லை என்று கற்றதை மறக்க கூடாது. இதனால்தான் எனது அரசு காவல் துறையில் விளையாட்டு வீரர்களுக்கு 10 சதவீதம் இட ஒதுக்கீடு செய்துள்ளது. இதே மாதிரி சிறைத்துறை, வனத்துறையிலும் 10 சதவீத இடத்தை விளையாட்டு வீரர்களுக்கு ஒதுக்க நான் உத்தரவு பிறப்பித்துள்ளேன். இதனால் காவல் துறையில் அதிக அளவு விளையாட்டு வீரர்கள் பணியாற்ற முடியும். இரண்டு தரப்பிலும் நன்மை கிடைக்கும்.

தமிழ்நாடு தனது காவல்துறையை பற்றி பெருமை அடைகின்றது. இதன் அதிகாரிகள், ஆண், பெண் காவலர்கள் நெருக்கடியான நேரங்களில் திறம்பட செயல்பட்டு பணியில் தங்களது திறமை பளிச்சிட செயலாற்றி உள்ளனர். நமது காவல் துறைக்கு விளையாட்டு நல்ல மதிப்பை பெற்றுக் கொடுத்துள்ளது. அகில இந்திய அளவில் நடந்த போலீஸ் விளையாட்டு போட்டிகளில், நமது காவல்துறை திறம்பட பங்கேற்றுள்ளது. தமிழக அளவில் நடக்கும் காவல்துறை போட்டிகளால் இத்துறையில் உள்ள திறமையானவர்களை கண்டறிய முடிகின்றது. நான் சமுதாய காவல் என்ற புதிய முறையைப் பற்றியும், வலியுறுத்தி கூறுகின்றேன்.

## சமுதாய காவல் பணி



இதனால் காவல் துறைக்கும், மக்களுக்கும் இடையே சிறந்த புரிந்து கொள்ளும் நிலை ஏற்படும். விளையாட்டும், விளையாட்டு மைதானங்களும் காவல்துறை பொது மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தி சிறந்த பங்கு வகிக்கும் என்று எண்ணுகிறேன். நாங்கள் தற்போது காவல்துறையின் செயல்பாடுகளில் மிகுந்த மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறோம். இளைஞர்களின் சில பிரிவினர் குறிப்பாக நகர்ப் பகுதியில் உள்ளவர்கள் போதைகளுக்கு அடிமையாகி பல தீய பழக்க வழக்கங்களை எளிதாக பெறுகின்றனர். இதனால் நகர்ப் பகுதிகளில் குற்றங்கள் அதிகரிக்கின்றன. குறிப்பாக பாலியல், பெண்கள் மீதான வன்முறை அதிகரிக்கிறது. இந்த இளைஞர்களின் விளையாட்டுத் திறமையை நமது காவல்துறை வெளிக்கொணர வேண்டும். இதற்காக விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட வேண்டும். இளைஞர்களைக் குழுக்களாக அமைத்து அவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்க வேண்டும். இதனால் மனம் உடைந்து நாம் எதற்கும் உபயோகமற்றவர்கள் என்று நினைத்துக் கொண்டு தங்களுக்குக் கிடைக்கும் உபரி நேரத்தில் சாகசம் செய்வதாக நினைத்துக் கொண்டு குற்ற செயல்களில் ஈடுபடுவது தடுக்கப்படும். கிராமப்புறங்களில் தவறாக வழிகாட்டப்பட்ட தீவிரவாதத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களையும் விளையாட்டு மூலம் அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். இவர்களை மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுத்த முடியும். எனவே காவல்துறை சமுதாய காவல் பணிகளுக்கு புதிய அணுகுமுறையில் கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த சில நாட்களாக நடந்து வந்த 51ஆவது அகில இந்திய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட ஆண்களும்–பெண்களும் சில புதிய சாதனைகளை ஏற்படுத்தி இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்தியாவின் பல்வேறு இடங்களில் இருந்து வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்களையும், பரிசுகளையும் வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் போட்டிகளில் கலந்துகொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்திய ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறேன். இதில் பங்கேற்ற உங்களில் சிலர் எந்த பதக்கத்தையோ, பரிசுகளையோ பெற்றிருக்கமாட்டீர்கள்.

ஒலிம்பிக் வீரரும், அமெரிக்கருமான ஜேசிஸ் ஓவன் கூறியதை நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். கடைசி மணித்துளிகளில் கூடுதலாக சக்தியை செலவழிக்காவிட்டால் இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டு விடுவோம். ஆனால் வெற்றி பெறுவதற்கு இந்தக் கடைசி நிமிட முயற்சிகள் மட்டுமே போதாது. வெற்றியை ஈட்டுவதற்கு தொடக்கத்திலிருந்தே முயற்சி எடுக்க வேண்டும். இதற்கு ஒழுக்கம், முயற்சி, உழைப்பு, சுயதியானம் ஆகியவை வேண்டும். இத்துடன் உங்கள் சகமனிதர்களின் மேல் அன்பும், பணிவும் மரியாதையும் வேண்டும். இவைகள் எல்லாம் இருந்தும் வெற்றி பெறமுடியாவிட்டால் அது உங்களின் இழப்பல்ல.

இன்று இந்த விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மற்றும் தோல்வியடைந்த அனைத்து வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் இந்த பொன்மொழியை நினைவுப்படுத்த விரும்புகிறேன். இதை நினைவில் வைத்துக்கொண்டால் உங்களுக்கு விளையாட்டிலும் பணியிலும் வாழ்க்கையிலும் தோல்வி என்பதே கிடையாது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திருமதி லட்சுமி பிரானேஷ், உள்துறைச் செயலாளர் திரு. சையத் முனீர் ஹோடா மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்,

முடிவில் காவல் துறைத் தலைவர் திரு. ராஜகோபாலன் நன்றி கூறினார்.

**– 5.3.2003 அன்று சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 51ஆவது அகில இந்தியக் காவல்துறைத் தடகள விளையாட்டுப் போட்டி 2002 நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.**



விழி மாநகரம் என்னும் பெயர் பெற்ற இந்த விழுப்புரம் நகரில் என் அன்புக்குரிய மக்களாகிய உங்களை எல்லாம் சந்தித்து, இன்று என் எண்ணங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு துறைகளைச் சார்ந்த நிறைவேற்றப்பட்ட பணிகளைத் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற நல்லதொரு வாய்ப்பு இன்று இந்த விழாவிலே எனக்குக் கிடைத்திருக்கிறது.

தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டமும் தனக்கே உரிய சிறப்புக்களைக் கொண்டு விளங்குகின்றது. விழுப்புரம் மாவட்டம் இயற்கைச் சிறப்பால் மட்டுமல்லாமல் சான்றோர்களின் பிறப்பாலும் பெருமை படைத்த மாவட்டமாக விளங்குகின்றது. மலை வளமும், மருத நில வளமும், கலை வளமும், ஒருங்கே நிறைந்து விளங்கும் இந்தப் பகுதி முற்காலத்தில் நடுநாடு என்று அழைக்கப்படுகின்ற சிறப்பினைப் பெற்று விளங்கியது. சோழ நாட்டிற்கும், தொண்டை நாட்டிற்கும், இடையே அமைந்த காரணத்தால் நடுநாடு என்று அழைக்கப்பட்டதாக வரலாற்றிலே காண்கிறோம்.

**மக்கள் வாழ்வில் வளர்ச்சியை உருவாக்கவே உங்கள் அரசு பாடுபட்டு வருகிறது**

*விழுப்புரம் மாவட்டத்தில் 27.2.2003 அன்று*
*வளர்ச்சித் திட்டப் பணிகள் திறப்பு விழா, புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா*
*மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி* **ஜெ ஜெயலலிதா** *அவர்கள் ஆற்றிய உரை.*

மேற்கு அரணாக, பசுமை கொஞ்சும் கல்வராயன் மலை அமைந்து தென் பெண்ணை, கெடிலம் ஆகிய நதிகளால், வளம் பெற்று விளங்கும் இந்த மாவட்டத்தில் தான் சைவத்தோடு தமிழையும் தழைக்கச் செய்த, சுந்தரமூர்த்தி நாயனார் தோன்றினார் என்பதையும், இதே விழுப்புரம் நகரத்தில் தான் காஞ்சிப் பெரியவர், பரமாச்சாரியார் ஜகத்குரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் தோன்றினார் என்பதையும் நினைத்துப் பார்க்கும் போது எத்தனை ஆன்மீகச் சிறப்புள்ள மண்ணிலே இன்று நாம்





கூடியிருக்கிறோம் என்னும் புனித உணர்வு நமக்குள் எழுகிறது.

கவிச் சக்கரவர்த்தி கம்பனை ஆதரித்த சடையப்ப வள்ளல் பிறந்து வாழ்ந்த திருவெண்ணை நல்லூர்; சங்கப் புலவர் கபிலர், நட்புக்காக உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்த திருக்கோவிலூர்; நினைத்தவுடன் கவி பாடும் ஆசு கவியாகிய காளமேகப் புலவர் பிறந்த எண்ணாயிரம் ஆகிய ஊர்களைத் தன்னகத்தே கொண்டு தனிச்சிறப்புடன் விளங்குவது விழுப்புரம் மாவட்டம் என்னும் செய்தி, இந்த மண் நெற்பயிரை மட்டும் அல்ல ஆன்மீகப் பயிரையும், கவிதைப் பயிரையும் வளர்க்கின்ற மண் என்னும் பெருமித உணர்வையும் நமக்குத் தருகிறது.

எல்லா மதத்தினரும் நட்போடு இணைந்து வாழலாம் என்னும் உணர்வை இந்த மண் வளர்த்து வருகிறது என்பதற்கு அன்றைய எடுத்துக்காட்டு செஞ்சியை ஆண்ட தேசிங்கு ராஜன். சாதுல்லா கான், முகம்மது கான் ஆகியோரை நண்பர்களாக ஏற்று மதம் கடந்த நட்புக்கு மாபெரும் உதாரணமாக அன்றைக்கு தேசிங்கு ராஜன் விளங்கினான் என்பதை வரலாறு சொல்லுகிறது.

உலக நாடுகளில் ஆன்மீகவாதிகள் ஒன்று கூடி, ஒருமித்து ஒரே இடத்தில் வாழலாம் என்பதற்கு, இந்த விழுப்புரம் மாவட்டத்தின் வானூர் ஒன்றியத்தில் அமைந்துள்ள ஆரோவில் நகரம் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இது அண்மைக் காலத்துச் சாதனை.

இன்று, எனது தலைமையில் அமைந்த அரசு சாதி மத பேதமற்ற ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட்டு வருகிறது என்பதையும் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் எந்தவித வேறுபாடும் கருதாமல் சகல ஜாதிகளைச் சேர்ந்தவர்களையும் அனைத்து மதங்களைச் சேர்ந்தவர்களையும் ஒன்றாகவே கருதுகிறேன் என்பதையும், நீங்கள் அறிவீர்கள். கடந்த ஒன்றே முக்கால் ஆண்டு காலத்தில் உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் எந்தவித சாதிக் கலவரமோ மதக் கலவரமோ தமிழ் நாட்டில் நடைபெறவில்லை என்பதை இன்று உங்கள் முன் கூறிக் கொள்வதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

தொடர்ந்த வளர்ச்சி நீடித்த வளர்ச்சி இருக்க வேண்டும் என்றால், அங்கே பழமைச் சிறப்பும் இருக்க வேண்டும். புதுமைப் பொலிவும் இருக்க வேண்டும். விழுப்புரம் மாவட்டம் எவ்வளவு பழமை வாய்ந்தது என்பதற்கு பல இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட மரங்கள் கல்லாக மாறி இருக்கின்ற திருவக்கரையே சாட்சி. அது மட்டுமல்லாமல் 3,500 ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றுத் தடயங்கள் கிடைத்துள்ளதால் விழுப்புரம் மாவட்டம் தொன்மையான வரலாற்றைக் கொண்டது என்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

ஓரிடத்தின் வளர்ச்சி உயிர்த் துடிப்போடு இருக்க வேண்டுமென்றால் பழமைச் சிறப்போடு இன்றைய சாதனைச் சிறப்பும் அங்கே இடம் பெற வேண்டும்.

1993ஆம் ஆண்டு என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் தென்னாற்காடு மாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டு விழுப்புரம் மாவட்டம் உதயமானது. இன்றைக்கு தமிழ்நாட்டிலே அதிக கிராம ஊராட்சிகளைக் கொண்ட, அதாவது, 1104 ஊராட்சிகளைக் கொண்ட மாவட்டமாக விளங்குவது விழுப்புரம் மாவட்டம் தான். மேலும், மாநிலத்திலேயே அதிக எண்ணிக்கையில் மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கிய மாவட்டமும் விழுப்புரம் மாவட்டம் தான். இவை எல்லாம் விழுப்புரம் மாவட்டம் பெற்று வரும் புதிய வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

''பானை பிடித்தவள் பாக்கியசாலி'', என்னும் பத்தாம் பசலித்தனமான கருத்துக்களை மாற்றி ஆணையிடும் அனுபவசாலி தான் பெண் என்னும் உண்மையை இந்த உலகம் உணர வேண்டும் என்பதே உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னுடைய விருப்பமாகும். அதனால்தான் கடந்த 1992ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்த போது, மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் திட்டத்தை நான் அறிமுகப்படுத்தினேன். அன்று நான் இட்ட விதை இன்று பரந்து விரிந்து ஆலமரமாய், பல இலட்சக்கணக்கான பெண்களுக்கு நிழல் தரும் பெருமரமாய், பலன் தரும் பழ மரமாய் விளங்கிக் கொண்டிருக்கிறது. அன்று நான் ஊன்றியது, சிறு விதை தான். ஆனால், இன்று தமிழ்நாட்டில் மொத்தம் 1 இலட்சத்து 19 ஆயிரத்து 583 மகளிர் சுய



உதவிக் குழுக்கள் உள்ளன. இந்தக் குழுக்களில் மொத்தம் 19 இலட்சத்து 77 ஆயிரத்து 274 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். தற்போது, 255.49 கோடி ரூபாய் சேமிப்புடன் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயங்கி பெரிய ஆல விருட்சமாக இந்த இயக்கம் வளர்ந்து உள்ளது. இந்தச் சாதனை சரித்திரத்தில், விழுப்புரம் மாவட்டம் ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பெற்றிருப்பதை நான் பாராட்டுகிறேன். விழுப்புரம் மாவட்டத்தில் 6,390 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கியுள்ளதன் மூலம் தமிழ்நாட்டிலேயே அதிக சுய உதவிக் குழுக்களை உருவாக்கியுள்ள மாவட்டம் என்ற பெருமையை விழுப்புரம் மாவட்டம் பெற்றுள்ளது என்பதை அறிந்து எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது மட்டுமின்றி 2531 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 6 கோடியே 32 இலட்சம் ரூபாய் சுழல் நிதி வழங்கியுள்ளதன்



மூலம் சுழல் நிதி வழங்குவதிலும் விழுப்புரம் மாவட்டம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. விழுப்புரம் மாவட்டத்திலுள்ள 6,390 குழுக்களும் வங்கிகளில் சேமித்து வைத்துள்ள மொத்த சேமிப்புத் தொகை 27 கோடி ரூபாயாகும். சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு, இன்னலுறும் அரவாணிகளுக்கும் சுய உதவிக் குழுக்கள் இம்மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், விழுப்புரம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் 14 நியாய விலைக் கடைகள் மற்றும் உரக் கடைகளை சிறப்பாக நடத்துகின்றனர். மகளிர் சுய உதவிக் குழுவின் பணி இத்துடன் நின்று விடாமல் கள்ளச் சாராயம் ஒழிப்பு, அநாதைக் குழந்தைகளைத் தத்தெடுத்துப் படிக்க வைத்தல், கண் தானம் செய்தல், போன்ற சமூக அக்கறையுள்ள பணிகளிலும் ஈடுபட்டு வருவது மிகவும் பாராட்டுக்குரியது. பெண்களுக்கு சிறப்பான கல்வியைத் தருவதுடன் அவர்கள் சுயமாகத் தொழில் தொடங்குவதற்கு, தொழிற் பயிற்சி அளித்திடும் வகையில் இந்த அரசு கொண்டு வந்துள்ள ''ஐந்து இலட்சம் மகளிர்க்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் திட்டம்'' என்ற திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 7,316 பெண்கள் இந்த மாவட்டத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தின் இந்த சாதனைகளை, நான் மிகவும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வானூர் ஒன்றியம் ஆரோவில்லில் உயர் தர தோல் பொருட்கள், விளக்கு அலங்காரப் பொருட்கள் உட்பட பல வகையான கைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள 31 சுய உதவிக் குழுக்களை இணைத்து 'Varsha' என்ற கூட்டமைப்பையும்; கள்ளக்குறிச்சி ஒன்றியம், தென்கீரனூர் ஊராட்சியில், மரச் சிற்பக் கலை தொழிலில் ஈடுபட்டுள்ள 12 சுய உதவிக் குழுக்களை இணைத்து 'Vruksha' என்ற கூட்டமைப்பையும் இம்மாவட்டத்தில் ஏற்படுத்தியுள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள இந்த இரண்டு கூட்டமைப்புகளும் மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்டு தொழில் தொடங்கவும் இயந்திரங்கள் வாங்கவும் 52.75 இலட்சம் ரூபாய் மத்திய அரசிடமிருந்து பெற்றுள்ளதற்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இயக்கம் இத்தோடு நின்று விடக் கூடாது. தமிழ் நாட்டிலுள்ள அனைத்துப் பெண்களும் மகளிர் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகப் பெருமளவில் சேர வேண்டும் – சேர்ந்து பொருளாதார முன்னேற்றம் சமுதாய முன்னேற்றத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று, உங்களை எல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். சேமிப்பினைக் கூட்டி, சிறு தொழிலில் ஈடுபட்டு, பொருளை ஈட்ட வேண்டும். அதன் மூலம் உங்களது வீட்டையும், தமிழகத்தையும், வளப்படுத்த உழைக்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் அனைத்து மகளிரையும் கேட்டுக் கொள்கிறேன். மகளிர் சுய உதவிக் குழுக்களில் இதுவரை சேராமல் உள்ள அனைத்து பெண்களும் மென்மேலும் சேர்ந்து பொருளாதார ரீதியில் பயன்பெற முன் வர வேண்டும் என்பதே எனது பேரவா. பெண்கள் சுய உதவிக் குழுக்களில் சேர்ந்தால் நீங்கள் யாரையும் தேடிச் சென்று போக வேண்டிய அவசியமே இல்லை. எல்லோரும் உங்களைத் தேடி வருவார்கள். ஆரம்பத்தில் இந்த சுய உதவிக் குழுக்களை நான் ஏற்படுத்திய போது அந்தக் குழுக்களில் உறுப்பினர்களாக

இருந்த பெண்களுக்கு கடன் வழங்க வங்கிகள் எல்லாம் பெரிதும் தயக்கம் காட்டின. ஆனால் இன்றைக்கு நிலைமையே தலைகீழாக மாறியிருக்கிறது. இன்றைக்கு இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் கோடிக்கணக்கான ரூபாய்கள் சேமிப்பாக இருப்பதைப் பார்த்து இந்த வங்கிகளே அவர்களைத் தேடிச் சென்று உங்களிடம் இருக்கின்ற சேமிப்பு நிதியை எங்களிடம் வைப்பு நிதியாக வையுங்கள் என்று இந்த மகளிரைத் தேடி போகிறார்கள். ஆகவே தமிழகத்தில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்து சொந்த கால்களில் நின்றால் இந்த உலகமே உங்கள் காலடிகளில் வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விமரிசையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் விழுப்புரம் மாவட்ட அரசு விழாவிலே இன்றைய தினம் 236 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்புடைய திட்டங்களை நான் இந்த மாவட்டத்து மக்களுக்காகக் கொண்டு வந்திருக்கிறேன். வளர்ச்சிப் பணிகளும் நலத்திட்ட உதவிகளும் மக்களை விரைந்து சென்றடைய வேண்டும் என்பதில் எங்கள் அரசு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டப் பணிகளை விரைவு படுத்துவதிலும் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து அவற்றை மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதிலும் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கான அடிக்கற்களை நாட்டுவதிலும் இதுபோன்ற மாவட்ட அரசு விழாக்களில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும் எனக்கு மிகுந்த மன நிறைவு ஏற்படுகின்றது.

முதலமைச்சர் ஒரு மாவட்டத்திற்கு வருகிறார் என்று சொன்னால் அந்த மாவட்டத்தில் உள்ள பணிகள் எந்த அளவுக்கு விரைவாக செய்து முடிக்கப்பட்டு மக்களுக்கு கொண்டு செல்லப்படும் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகவே தெரியும். இத்தகைய அரசு விழாக்களின் வாயிலாக மக்களுக்கு திட்டப் பணிகள் உடனடியான பலனை அளிப்பதற்கு எனது வருகை பயன்பட்டு இருக்கின்றது என்பதை எண்ணும் போது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

## முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தல்

இன்றைய தினம் இந்த விழுப்புரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டு இருக்கும் மொத்தம் 168 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்புடைய முடிவுற்ற பணிகளை நான் திறந்து வைத்துள்ளேன்.

அவற்றில் ஒரு சில முக்கியப் பணிகளைப் பற்றி உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன். நெடுஞ்சாலைத் துறையின் வாயிலாக இன்றைய தினம் மொத்தம் 33கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 10 பாலங்களையும் நான் திறந்து வைத்து இருக்கிறேன். இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள இந்த 10 பாலங்களில் குறிப்பாக ஒரு



கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்புடைய வானூர் – கண்டமங்கலம் சாலையில் உள்ள பாலம்; உளுந்தூர்பேட்டை – திருவெண்ணைநல்லூர் சாலையில் அமைக்கப்பட்டுள்ள 12 கோடி ரூபாய் மதிப்புடைய உயர் மட்ட பாலம்; 17 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், சென்னை – கும்பகோணம் – தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டுள்ள உயர் மட்ட பாலம் ஆகியவை இந்த மாவட்டத்தின் நெடுஞ்சாலை வசதிகளை மேலும் மேம்படுத்தும் என்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. அதே போன்று, 9 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக விழுப்புரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் அமைந்துள்ள மேம்படுத்தப்பட்ட 23 சாலைகளையும், இன்றைய தினம் நான் திறந்து வைத்துள்ளேன். இவை மட்டுமின்றி, ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் ''கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்'' கீழ், 9 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 51 தார்ச் சாலைகள் மற்றும் இதே துறையின் மூலம் ''நபார்டு'' திட்டத்தின் கீழ் 6 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் போடப்பட்டுள்ள 34 தார்ச்சாலைகள் ஆகியவற்றையும் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பருவ மழை பொய்த்ததன் வாயிலாகத் தற்போது மாநிலம் எங்கும் கடும் வறட்சியும், குடிநீர்த் தட்டுப்பாடும் நிலவி வருகிறது. கிராமப்புறங்களிலும் சரி, நகர்ப் புறங்களிலும் சரி இத்தகைய குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க எங்கள் அரசு போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக இன்றைய தினம், விழுப்புரம் மாவட்டத்தில் மொத்தம் 58 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள 777 பணிகளை நான் இந்த விழாவிலே திறந்து வைத்துள்ளேன். கள்ளக்குறிச்சி, தியாகதுர்கம் மற்றும் சின்னசேலம் ஆகிய மூன்று ஒன்றியங்களிலும் உள்ள 92 கிராமங்களுக்கு பயன் தருகின்ற 45 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்புடைய ரிஷிவந்தியம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் – தகடி மற்றும் 14 கிராமங்களுக்கு முடியனூர் மற்றும் 8 கிராமங்களுக்கு பயன் தருகின்ற முடியனூர் கூட்டுக் குடிநீர் திட்டம் – திருக்கோயிலூர், சங்கராபுரம் ஆகிய இரண்டு பகுதிகளுக்கு பயன் அளிக்கின்ற குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் – மற்றும் விழுப்புரம் மாவட்டத்தின் 72 இடங்களில் 4 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் – 3 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட உள்ள 500 சிறு விசை இறைப்பான்கள் (Mini Power Pumps) – 200 பள்ளிக் கூடங்களில் நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவற்றை திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். ஊரக வளர்ச்சித் துறையின் வாயிலாக இந்த மாவட்டம் முழுவதிலும் பல்வேறு இடங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 250 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார மையங்கள் – 700 களங்கள் – 1400 தொகுப்பு வீடுகள் – மகளிர் சுய உதவி குழுக்களுக்கான கட்டடங்கள் – 50 கிராம நிர்வாக அலுவலர்களுக்கான கட்டடங்கள் ஆகியவை உள்ளிட்ட

மொத்தம் 32 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு கட்டுமானப் பணிகளை இன்றைய தினம் உங்களுக்கு அர்ப்பணித்துக் கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்னும் கூட்டுறவுத் துறை, பொதுப் பணித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கல்வித் துறை, வேளாண்மைத் துறை போன்ற பல்வேறு துறைகளின் மூலம் நிறைவு செய்யப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான பணிகளையும் இந்த விழாவில் நான் திறந்து வைத்துள்ளேன். இவை அனைத்தையும் விரிவாக எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தினாலே திறந்து வைக்கப்பட்டுள்ள ஒரு சில திட்டப் பணிகளை மட்டும் நான் இங்கே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் அரசு எந்த அளவுக்கு விவசாயம் சார்ந்த திட்டப் பணிகளுக்கு சிறப்பு கவனத்தை அளித்து வருகின்றது என்பது உங்கள் அனைவருக்குமே நன்கு தெரியும். ஏனென்றால், கிராமப் பகுதிகளில் பொருளாதாரம் செழிக்க வேண்டும் என்றால் அங்கே விவசாயம் செழிக்க வேண்டும்; அதற்கு கூடுதல் பாசன வசதி தேவை. அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த விழாவில் பல முக்கியமான பணிகள் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பொதுப் பணித் துறை சார்பாக கீழ்பெண்ணையாற்றில் 7 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கூடுதல் நீர் வழிந்தோடி (Surplus Weir) – 93 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கோமுகி அணையிலிருந்து சின்னசேலம் ஏரிக்கு செல்கின்ற வரத்து கால்வாய்கள் – 85 இலட்சம் ரூபாய் செலவில் மணிமுத்தாறு அணைக்கட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள புனரமைப்பு பணிகள் ஆகியவை இன்றைய தினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமன்றி ஏறத்தாழ 2817 ஏக்கர் விளைநிலம் பாசன வசதி பெறுகின்ற வகையில் 10 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் வசிஷ்ட நதி குறுக்கே கட்டப்பட்டுள்ள பாசன அணைக்கட்டு – மற்றும் 2 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில், கோமுகி அணையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வெள்ளத் தடுப்பு அமைப்பு (Flood Regulator) ஆகியவற்றை இந்த இனிய விழாவிலே திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஆக, இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ள ஏறத்தாழ 168 கோடி ரூபாய் மதிப்புடைய, இந்த கட்டுமானப் பணிகள் அனைத்தும் இந்த மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் துணை நிற்கும் என்று கூறிக்கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.



## அடிக்கற்கள் நாட்டுதல்

புதிய திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டுதல் என்ற வகையில் இன்றைய தினம் என்னால் மொத்தம் 38 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் அமைய உள்ள பல்வேறு திட்டப் பணிகளுக்காக அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் இறையூர் மற்றும் பிரம்மதேசம் ஆகிய இடங்களில் 3 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ள துணை மின் நிலையம் – விழுப்புரம், கள்ளக்குறிச்சி அருகே நெடுஞ்சாலைத் துறையினால் 8 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ள பல்வேறு சாலைகள் – 8 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விழுப்புரத்தில் அமைக்கப்பட உள்ள வட்டார தடய அறிவியல் கட்டடம் – 17 இலட்சம் ரூபாய் செலவில் விழுப்புரம் நகரில் அமைக்கப்பட உள்ள மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் உள்ளிட்ட மொத்தம் 13 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு கட்டடங்கள் ஆகியவற்றிற்கான அடிக்கற்களை நான் இந்த விழாவிலே நாட்டி உள்ளேன். தாட்கோ நிறுவனத்தின் மூலம் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் விழுப்புரம், புளிச்சப்பள்ளம், சித்தாலம்பட்டு, தும்பூர், கொசக்களத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் மேல் உலக்கூர் ஆகிய ஏழு இடங்களில் அமைய உள்ள ஆதிதிராவிடர் இன மாணவர்களுக்கான தங்கும் விடுதிகள் – தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் மூலம் அமைக்கப்பட உள்ள 3 கோடி ரூபாய் மதிப்புடைய விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகக் கட்டிடம் – 85 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ள தீயணைப்பு கட்டிடம் ஆகியவற்றிற்கான அடிக்கற்களை இந்த இனிய விழாவிலே நான் நாட்டி உள்ளேன். இவை மட்டுமன்றி 90 இலட்சம் ரூபாய் செலவில் நடுக்குப்பம் கிராமத்தில் தடுப்பு சுவர் கட்டும் பணிகள் –

ஒரு கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட உள்ள 275 மீனவர் குடியிருப்பு கட்டடங்கள் – 84 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்பட உள்ள 210 குடியிருப்பு கட்டடங்களுக்கு இந்த விழாவிலே அடிக்கற்களை நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

### புதிய திட்டப் பணிகளைத் துவக்கி வைத்தல்

இன்றைய தினம், இந்த விழா மேடையிலே 10 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு திட்டப் பணிகளைத் துவக்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக, சின்னசேலம், உளுந்தூர்பேட்டை மற்றும் செஞ்சி பேரூராட்சிகளுக்குப் பயன் அளிக்கும் 2 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்புடைய அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் – விழுப்புரம் மாவட்டம், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கான 4 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் – மற்றும் ஆவின் நிறுவனத்தின் மூலம் 89 இலட்சம் ரூபாய் மதிப்பில் நடத்தப்பட உள்ள மகளிருக்கான பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றை இந்தச் சீர்மிகு விழாவில் துவக்கி வைத்துள்ளேன் என்பதை உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

### நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுச்சியோடு கூடியிருக்கின்ற இந்த விழுப்புரம் மாவட்ட அரசு விழாவில் மொத்தம் 24,258 பேர் பயன் பெறுகின்ற வகையில் ஏறத்தாழ 19 கோடி ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத்திட்ட உதவிகள் இந்த விழாவில் வழங்கப்பட உள்ளன. நலிந்தோருக்கும், ஆதரவற்றோருக்கும், மகளிருக்கும் என சமுதாயத்தின் அடித்தளத்துப் பிரிவினர் அனைவரும் தமது வாழ்க்கையில் முன்னேற உரிய உதவிகளை அளிப்பதில் எங்கள் அரசு என்றைக்கும் முன்னணியில் உள்ளது என்பதை பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த வகையில் இந்த விழாவிலே 19 அரசு துறைகள் 24,258 பயனாளிகளுக்கு மொத்தம் 19 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை வழங்கவிருக்கின்றன. அவை அனைத்தையும் உங்களுக்கு எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தினாலே வழங்கப்படுகின்ற உதவிகளில் முக்கியமான ஒரு சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

முதலில், ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக 12,551 பயனாளிகளுக்கு 9 கோடியே 42 இலட்சம் ரூபாய் அளவிற்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக 403 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு குழு ஒன்றிற்கு 25,000 ரூபாய் என்ற அளவில் சுழல் நிதி திட்டம் – 127 குழுக்களுக்கு 2 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடன் உதவி வழங்கும் திட்டம் – சமூக நலத் துறையின் சார்பாக 308 பெண்களுக்கு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம், கலப்பு திருமண நிதி உதவித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் உதவிகள் – மகளிர் மேம்பாட்டு கழகத்தின் மூலம் 3300 பெண்களைக் கொண்ட 155 குழுக்களுக்கு வங்கிக் கடன் உதவி ஆகியவை இன்றைய தினம் வழங்கப்பட உள்ளன. இவை மட்டுமன்றி வருவாய்த் துறையின் சார்பாக 3,162 பேர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களும் – 390 பேர்களுக்கு நிலப் பட்டாக்களும் – 316 பேர்களுக்கு முதியோர் உதவித் தொகையும் வழங்கப்பட உள்ளன. தாட்கோ நிறுவனத்தின் மூலமாக 422 பேர்களுக்கும் – வேளாண்மைத் துறையின் மூலமாக 181 பேர்களுக்கும் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை வாயிலாக 315 பேர்களுக்கும் – கூட்டுறவுத் துறை வாயிலாக 621 பேர்களுக்கும் – பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நலத் திட்ட உதவிகள் அனைத்தையும் எல்லா பயனாளிகளுக்கும் நானே வழங்க வேண்டும் என்ற விருப்பம் எனக்கு இருந்தாலும், நேரம் இல்லாத காரணத்தால் இந்த மேடையிலே 15 பேர்களுக்கு மட்டும் எனது கரங்களாலே வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும், இங்கேயே, இப்போதே வழங்கி சிறப்பிப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் விரைந்த வளர்ச்சியைப் பெற்று இந்திய நாட்டிலேயே முதன்மையான மாநிலம் என்ற சிறப்பை அடைய வேண்டும் என்பது தான் எனது இலட்சியம் என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கிறேன். இந்த இலக்கினை எட்ட வேண்டுமென்றால் நமது தமிழ்நாடு ஓர் ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பெற வேண்டும். அதற்கு ஒவ்வொரு குடும்பமும், சமூக பொருளாதார வளர்ச்சியின் அனைத்து அம்சங்களிலும் முன்னேற வேண்டும்; வளர்ச்சி பெற வேண்டும். இவ்வாறு, தமிழக மக்களின் வாழ்வில் ஒட்டுமொத்த முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் உருவாக்கவே உங்கள் அன்புச் சகோதரியின் அரசு அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறது.

இதைக் கூறுகின்ற நேரத்தில் மகாபாரதத்தில் நடந்த ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது.

உலக அரசியல் வரலாற்றில் எந்தக் காலத்திலும் நல்லவர்கள் எண்ணிக்கையில் குறைவாகவே இருக்கிறார்கள்; ஆனால், கெட்டவர்களோ எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறார்கள். இதைத் தான் நாம் புராணங்களிலும், இதிகாசங்களிலும்



பார்க்கிறோம், படிக்கிறோம். மகாபாரதக் காலத்தில் பாண்டவர்கள் ஐந்து பேர் தான் இருந்தார்கள். ஆனால் கவுரவர்களோ 100 பேர் இருந்தார்கள். இந்தக் காலத்திலும் அப்படித் தான். உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னை, அரசியலில் எதிர்க்க எத்தனை பேர்! தங்களுக்குள் எலியும், பூனையுமாக இருப்பவர்கள்கூட கீரியும், பாம்புமாக இருப்பவர்கள் கூட என் விஷயத்தில் ஒரே அணியில் நின்று எதிர்ப்பதை, தொடர்ந்து எதிர்த்து வருவதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

எனக்கும் அவர்களுக்கும் இடையில் என்ன வித்தியாசம்? எனக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? மகாபாரதத்தில் வரும் ஒரு நிகழ்ச்சியை விளக்கிச் சொன்னால் வித்தியாசம் புரியும் என்று நினைக்கிறேன்.

ஒரு முறை பாண்டவர்களுக்கும், கவுரவர்களுக்கும் ஆசிரியராக இருந்த துரோணாச்சாரியார், தன்னுடைய மாணவர்களுக்கு ஒரு சோதனை வைத்தார். பாண்டவர்கள் சார்பில் தருமனையும், கவுரவர்கள் சார்பில் துரியோதனனையும் அழைத்தார் துரோணாச்சாரியார். – உங்கள் இருவருக்கும் ஒரு சோதனை வைக்கிறேன். அதோ ஒரு வீடு இருக்கிறது. வீட்டில் பொருள் ஒன்றும் இல்லை. காலியாக இருக்கிறது. நீங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக அந்த வீட்டை நிரப்ப வேண்டும். அவ்வாறு வீட்டை நிரப்ப என்ன செய்யப் போகிறீர்கள் என்பது தான், நான் வைக்கும் சோதனை. இந்தச் சோதனை உங்கள் அறிவை எடைபோட எல்லோருக்கும் ஒரு சந்தர்ப்பமாக அமையும்'' என்று துரோணாச்சாரியார், தருமனிடமும், துரியோதனனிடமும் சொன்னார்.

முதல் வாய்ப்பு துரியோதனனுக்கு வழங்கப்பட்டது. துரியோதனன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான். எங்கெங்கோ சென்று, முயற்சி செய்து, கொண்டு வந்த பொருளால் அந்த வீட்டை நிரப்பினான். அதைப் பார்த்தவர்கள் பரிகாசம் செய்தார்கள். அந்தப் பொருள் என்ன தெரியுமா? வைக்கோல், வீடு முழுவதையும், கொஞ்சம் கூட காலியிடம் இல்லாமல் வைக்கோலாலேயே துரியோதனன் வீட்டை நிரப்பிவிட்டான்.

அடுத்தது தருமனின் முறை. அந்த வீட்டில் துரியோதனனால் அடைக்கப்பட்டிருந்த வைக்கோல் முற்றிலும் நீக்கப்பட்டது. தருமன் உடனே அந்த வீட்டிற்குள் சென்று அங்கே ஒரு விளக்கை ஏற்றி வைத்தான். இப்போது வீடு வெளிச்சத்தால் நிரப்பப்பட்டு இருந்தது.

துரியோதனனும் வீட்டை நிரப்பினான். தருமனும் வீட்டை நிரப்பினான். அந்த வகையில் இரண்டும் ஒன்று தான். ஆனால், எதைக் கொண்டு நிரப்பினார்கள்; என்ன பலன் கிடைத்தது என்பது தான் கேள்வி.

வீடு நிறைந்தபொருள் என்பதற்கு வைக்கோல் என்று அர்த்தப்படுத்திக் கொண்டு வீட்டை வைக்கோலால் நிரப்பினான் துரியோதனன். வீடு நிறைந்த பொருள் என்பதற்கு வெளிச்சம் என்று பொருள் கொண்டு தீப ஒளியால் வீட்டை நிரப்பினான் தருமன்.

இது தான் துரியோதனனுக்கும், தருமனுக்கும் இடையே இருந்த வேறுபாடு!

இது தான் கவுரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் இடையே இருந்த வேறுபாடு!

இதுதான் எதிர்க் கட்சியினருக்கும், எனக்கும் இடையே இருக்கும் வேறுபாடு!

தமிழ்நாடு தான் அந்த வீடு! அதில் விளக்கை ஏற்றி வைத்தது உங்கள் அன்புச் சகோதரி! வீட்டில் வைக்கோலை அடைத்த புத்திசாலிகள் யார் என்று நான் உங்களுக்கு விளக்கத் தேவையில்லை. அது உங்களுக்கே தெரியும்.

அப்படிப்பட்ட "புத்திசாலிகளோடு'' அனுதினமும் போராடித்தான் உங்கள் இல்லங்கள் முழுவதும் நலமும் வளமும் செழித்தோங்க உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வருகின்றேன்.

அரசு வழங்குகின்ற உதவிகளை பெற்றுக் கொள்கின்ற பயனாளிகள் அனைவரும், இவற்றை ஆதாரமாகக் கொண்டு கடின உழைப்பை பயன்படுத்தி மென்மேலும் உயர்ந்து தங்கள் வாழ்க்கையில் எல்லா நலன்களையும் பெற வேண்டும் என்று அன்போடு வாழ்த்துகிறேன்.

வெற்றி எப்போதும் உங்கள் பக்கமே! என்று கூறி இந்த விழா சீரோடும், சிறப்போடும் நடைபெற காரணமாக இருந்த அனைவருக்கும் குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

★ ★ ★



# பள்ளிவாசல்கள் மற்றும் தர்காகளில் அன்னதானத் திட்டம்

□ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3.3.2003 அன்று சென்னை அண்ணாசாலையில் உள்ள ஹஜரத் சையத் மூஸா ஷா காதிரி தர்கா வளாகத்தில் தமிழகத்தில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் தர்காகளுக்கு தொழுகை நடத்த வருகின்ற இறையன்பர்களுக்கு வாராந்திர மதிய உணவு வழங்கும் அன்னதானத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கும் சிறப்புமிகு அன்னதானத் திட்டத்தை, சென்னை மைலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் வளாகத்தில் 23.3.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். பின்னர் இந்தத் திட்டம் தமிழகத்தில் உள்ள 144 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் தர்காகளிலும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு வக்பு வாரியம் 16.12.2002 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியது. இதனைத் தொடர்ந்து, சென்னை அண்ணா சாலையில் உள்ள ஹஜரத் சையத் மூஸா ஷா காதிரி தர்கா வளாகத்தில் இந்த அன்னதானத் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3.3.2003 அன்று தொடங்கி வைத்தார்கள். இந்த தர்காவில் தொழுகைக்கு வருகை தந்த இறையன்பர்களுக்கு கேசரி, காலிபிளவர் பகோடா, வடை, வெஜிடபிள் பிரியாணி, சாம்பார் சாதம், தயிர் சாதம் ஆகியவை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் பரிமாறப்பட்டன. மேலும், தர்காவிற்கு வருகை தந்த இறையன்பர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உணவுப் பொட்டலங்களை வழங்கி சிறப்பித்தார்கள்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் தமிழகத்தில் உள்ள பிரசித்தி பெற்ற ஒரு பள்ளிவாசல் மற்றும் தர்காவில் தொழுகை நடத்த வருகை தரும் சுமார் 200 இறையன்பர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படும். பள்ளிவாசல் மற்றும் தர்காகளில் இத்திட்டத்தை செயல்படுத்த தேவையான நிதி, சமுதாய ஆர்வலர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் ஆகியோரிடமிருந்து தமிழ்நாடு வக்பு வாரியத்தின் மூலம் பெறப்பட்டு செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தபோது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் திருமதி. லட்சுமி பிரானேஷ், உள்துறைச் செயலாளர் திரு. சையது முனிர் ஹோடா மற்றும் முஸ்லீம் பெருமக்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அன்வர் ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சையது கான், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவர் திருமதி. பதர் சையீது, அண்ணா சாலையில் உள்ள ஹஜரத் சையத் மூஸா ஷா காதிரி தர்காவின் ட்ரஸ்ட்டி திரு. சையத் மொய்னுதீன் ஆகியோர் உடனிருந்தனர். ●



# பெண்களை வலிமையானவர்களாக ஆக்க வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை!

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்

இந்தப் பந்தல் மிக பிரமாண்டமான அளவில் அமைக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பந்தலுக்குள்ளே மிகப் பெரிய கூட்டம் கூடியிருக்கிறது. ஆனால் இன்னும் வெள்ளமான மக்கள் இந்த பந்தலில் இடம் கிடைக்காததால், வெளியே கொளுத்தும் வெயிலில் நிற்கிறார்கள். இப்படி சுட்டு எரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது என்னை காண வேண்டும், எனது உரையைக் கேட்க வேண்டும், என்று வெளியே வெயிலில் நிற்கும் அன்பு நெஞ்சங்களுக்கு எனது அன்பான வணக்கத்தை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

புதுக்கோட்டையும், எல்லைகளாக அமைந்திருக்க, தனக்கென்று தனி ஒரு வரலாற்றைக் கொண்டு விளங்குகின்றது.

சங்க காலச், சோழ மன்னர்களின் தலைநகராக விளங்கிய உறையூர், இன்றைக்கு திருச்சி மாநகரின், ஒரு பகுதியாக விளங்குகிறது.

சங்க காலத்தில், உறையூருக்கு, கோழியூர் என்றும் பெயருண்டு. சங்க காலச் சோழ மன்னர்களாகிய, நெடுங்கிள்ளி, கரிகாலன், கோப்பெருஞ்சோழன் ஆகியோரின் தலைநகராக விளங்கிய சிறப்பு, உறையூருக்கு உண்டு.




வரலாற்றுச் சிறப்பு மிக்க, திருச்சி மாநகரில் நடைபெறும், இந்த இனிய விழாவிலே கலந்து கொண்டு, என் அன்பிற்குரிய திருச்சி மாவட்டப் பெருமக்களாகிய, உங்களை எல்லாம் கண்டு, 209 கோடி ரூபாய் மதிப்பில், முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கிட்டத்தட்ட 15,910 பேர்களுக்கு, நலத் திட்ட உதவிகளை வழங்கி, உங்களோடு எனது கருத்துக்கள் சிலவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கு, இன்று கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பு குறித்து, நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தின் மையப் பகுதியில் அமைந்திருக்கும், திருச்சி மாவட்டம், கிழக்கில் தஞ்சாவூரும், மேற்கில் கரூரும், வடக்கில் பெரம்பலூரும், தெற்கில்

முற்காலத்தில் ஆடை நெய்தல், ஆடைகளுக்குச் சாயம் பூசுதல், ஆகிய தொழில்கள், மிகச் சிறப்பாக, இங்கு நடைபெற்று இருக்க வேண்டும்.

ரோமாபுரியின் சாயத் தொட்டி, பானை வகைகள் போன்று, உறையூரில் கிடைத்த, அகழ்வாராய்ச்சிப் பொருள்கள் மூலம், இந்த உண்மையை அறிந்து கொள்கிறோம்.

உறையூர், சங்க காலத்தில் மட்டுமல்லாமல், இந்தக் காலத்திலும் கூட, கைத்தறி ஆடைகளுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது.

திருச்சிராப்பள்ளி என்னும் இந்தத் திருநகரம், மலைக்கோட்டை மாநகரம், என்று அழைக்கப்படுகின்றது.

மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் சின்னமாகவே, விளங்கிக் கொண்டிருக்கிறது.

மலை மேல் உச்சி பிள்ளையார் கோவிலும், மலையைச் சுற்றி உள்ள கோட்டைச் சுவர்களும், கோட்டைச் சுவர்களுக்கு உள்ளே, அமையப் பெற்றுள்ள இருப்பிடமும், வணிக வளாகங்களும், தொன்று தொட்டு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின், பழம்பெரும் சின்னங்களாக இருந்து வருகின்றன.

திருச்சி மாநகரின் நடுவில், அமைந்துள்ள இந்த மலைக்குத், திருசிராமலை என்றும் பெயர் உண்டு. இந்த மலையில், தாயுமானசுவாமி கோயில் உள்ளது. திருநாவுக்கரசர் தமது தேவாரத்தில்

'சிராப் பள்ளிக் குன்று உடையானைக் கூற
என் உள்ளம் குளிருமே?' என்று பாடுகிறார்.

இறைவன் உயிர்களுக்குத் தந்தையானவன் என்பது தெரியும்; அவன் 'தாயும்' ஆனவன் என்பது, சிவபெருமானின் அருட்செயல் ஒன்றால் அறிகிறோம்.

தாயும், பிரசவ நிலையில் இருந்த மகளும், காவிரியின் ஒரு கரையில் இருந்து, அக்கரைக்குச் செல்ல வேண்டும்.

தாய் காவிரி ஆற்றைக் கடந்து விடுகிறாள். மகள் ஆற்றைக் கடப்பதற்குள், ஆற்றில் வெள்ளம் வந்து விடுகிறது. அக்கரையில் தாயும், இக்கரையில் மகளுமாக, இருக்க வேண்டிய நிலை. அந்த நேரத்தில் மகள், பிரசவ வேதனையால், துடித்துக் கொண்டு இருக்கிறாள்.

அப்போது சிவபெருமான், அந்தப் பெண்ணின் தாய் வடிவத்தில் வந்து, அவளுக்கு பிரசவம் பார்த்து காப்பாற்றுகிறார். வெள்ளம் வடிந்த பிறகு, வந்தது பெற்ற தாய் இல்லை, இறைவனே என்று தெரிகிறது. அதிலிருந்து, தந்தையாய் இருக்கும் இறைவன், தாயும் ஆனான் என்று, ஆன்மீக வரலாறு சொல்கிறது.

கட்டடக் கலையிலும், சிற்பக் கலையிலும், சிறந்து விளங்குகின்ற கோயில், இந்தக் கோயில். சைவர்களுக்கு கோயில் என்றால், சிதம்பரம் தான். வைஷ்ணவர்களுக்கு கோயில் என்றால், அது ஸ்ரீரங்கம் தான் என்பார்கள்.

ஸ்ரீரங்கம், இந்தியாவிலுள்ள மிகப் பெரிய வைணவ ஆலயம், என்னும் சிறப்பிற்குரியது.

மேலும், சமயபுரத்தில், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருவானைக் கோயில், அகிலாண்டேஸ்வரி ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், வயலூர் சுப்பிரமணியர் திருக்கோயில், போன்ற திருக்கோயில்களும், பழமை வாய்ந்த தப்லே ஆலம் பாதுஷா நத்தர்வலி தர்காவும், புனித லூர்து அன்னை தேவாலயமும், திருச்சிராப்பள்ளியின் சிறப்பு மிக்க திருத்தலங்களாக விளங்குகின்றன.

வேதாந்த, சித்தாந்த சமரச நிலையை, உலகிற்குப் போதித்த தாயுமானவர் சுவாமிகள், பிறந்து, வளர்ந்து, அமைச்சராக விளங்கியது திருச்சிராப்பள்ளியில் என்பதை அறிகிற போது, எத்தகைய ஞானத் திருத்தலம் திருச்சிராப்பள்ளி, என்பதனை உணர்ந்து கொள்கிறோம்.

திருக்குறளைப் பரப்புவதையே, லட்சியமாய் கொண்டு வாழ்ந்த முத்தமிழ்க் காவலர், கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களும்; புரட்சி வீரராய், நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட, சிறந்த தமிழறிஞர் வ.வே.சு ஐயர் அவர்களும், இந்த மாவட்டத்திற்கு உரியவர்கள் என்பதை, இந்த இனிய நேரத்தில், பெருமையோடு நினைவு கூர்கிறேன். இன்னும் பல அறிஞர்கள், திருச்சியில் இருந்தார்கள்.

திருச்சியில் திருவாசகமணி கே.எம்.பாலசுப்ரமணியம், என்னும் அறிஞர் இருந்தார். அவர் தமிழிலும், ஆங்கிலத்திலும், சைவ சித்தாந்தத்திலும், சிறந்த புலமை பெற்றிருந்தார்.

ஒரு முறை, ஓர் ரயில் நிலையத்தில், வெளியூருக்குப் போவதற்காக, முதல் வகுப்பு பயணச்சீட்டு வாங்க வேண்டியிருந்தது. எனவே டிக்கெட் கொடுப்பவரிடம், "அப்பர் கிளாஸ்' டிக்கெட் தாருங்கள்" என்று திருவாசகமணி கேட்டார். டிக்கெட் கொடுப்பவரோ "அப்பர் கிளாஸ் இல்லை" என்று சொன்னார். உடனே திருவாசகமணி அவர்கள் "அப்படியென்றால், 'சம்பந்தர் கிளாஸ்' டிக்கெட் கொடுங்கள்" என்றாராம்.

டிக்கெட் கொடுப்பவர் முறைத்தார். "என்ன? விளையாடுகிறீர்களா? அப்பர் டிக்கெட், சம்பந்தர் டிக்கெட், என்றெல்லாம் கேட்கிறீர்கள்" என்று கோபமாகக் கேட்டாராம், டிக்கெட் கொடுப்பவர்.

"கோபித்துக் கொள்ளாதீர்கள்! அப்பர் கிளாஸ் இல்லையென்றால் `Some under class' டிக்கெட் தான் கேட்டேன். அதாவது அதற்கு கீழ் இருக்கும், ஏதாவது வகுப்பு டிக்கெட் கொடுங்கள், என்று தான் கேட்டேன்" என்று திருவாசகமணி அவர்கள் பதில் சொன்னாராம்.

அந்தக் காலத்தில், முதல் வகுப்புக்கு கீழே, இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு பிரிவுகள், ரயில்வேயில் இருந்தன. ஆகவே தான் உயர் வகுப்பு டிக்கெட் இல்லையென்றால், ஏதாவது கீழ் வகுப்பு டிக்கெட் கொடுங்கள் என்னும் அர்த்தத்தில், "Upper Class இல்லையென்றால் Some under class கொடுங்கள்" என்று கேட்டிருக்கிறார்.

இந்த விளக்கத்தைக் கேட்ட பிறகு, பயணச் சீட்டு கொடுப்பவர், சிரித்துக் கொண்டே, மகிழ்ச்சியோடு இரண்டாம் வகுப்பு டிக்கெட் கொடுத்தாராம்.

இவ்வாறு ஆங்கிலத்தில் கூட, வார்த்தை விளையாட்டு நடத்துகின்ற அறிஞர் பெருமக்கள், வாழ்ந்த ஊர் திருச்சி, என்பதை நினைவு கூர்வதில், நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதைச் சொல்லும் போது, பேரறிஞர் அண்ணாவின் உவமைகள் சில கூட, எனது நினைவுக்கு வருகின்றன.

**அன்பிற்குரிய மாவட்டம்**

பேரறிஞர் அண்ணா சொல்வார் – "தங்கப் பேழையில், தவிடு கொட்டி வைப்பது போல" – "உடைவாளை உருவி, உருளைக் கிழங்கு சீவுவதைப் போல" – "விண்ணில் பறந்த விண்வெளி வீரர், காற்றாடி விட வீதிக்கு வருவதைப் போல" –என்று கருத்தைக் கவரும் உவமைகளால், பேரறிஞர் அண்ணா, தமது பேச்சிற்கு சிறப்பு சேர்த்தார், கேட்போரின் சிந்தையைக் குளிரச் செய்தார்.

இத்தனைச் சிறப்புகள் மட்டுமன்றி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு, சிறப்புத் திட்டங்களை அரங்கேற்றும் இடமாகவே, திருச்சிராப்பள்ளி விளங்கியதை, நான் மகிழ்ச்சியுடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



சிறு வயதில் தன் குடும்பத்தில், தான் அனுபவித்த வறுமை நிலையை, நன்கு உணர்ந்திருந்த இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், தமிழகத்திலுள்ள எந்தக் குழந்தையும், பசியால் வாடக் கூடாது, என்ற உயரிய எண்ணத்தில், 1982 ஆம் ஆண்டில், ஏழைக் குழந்தைகளை வாழ வைக்க, சத்துணவுத் திட்டத்தை திருச்சிராப்பள்ளி அருகே உள்ள, பாப்பாக்குறிச்சி காட்டூர் கிராமத்தில், துவக்கி வைத்தார். இத்திட்டம், இன்று உலக அளவில் பிரசித்தி பெற்று, பிற நாடுகளுக்கு முன்மாதிரித் திட்டமாக விளங்கி வருகிறது.

பாரதிதாசன் பல்கலைக்கழகம், புரட்சித் தலைவர் அவர்களால், 1982ஆம் ஆண்டு, திருச்சியில் தொடங்கி வைக்கப்பட்டது.

இவ்வாறு எங்கள் அன்பிற்கு உரிய மாவட்டமாக என்றென்றும் விளங்கிக் கொண்டிருக்கிறது திருச்சிராப்பள்ளி.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இதுவரை மொத்தம், 5182 மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 84,993 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் 35,442 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மகளிர், உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களின் மொத்த சேமிப்பு, 8 கோடியே 27 இலட்சம் ரூபாய் ஆகும்.

மகளிர் சுய உதவிக் குழுவினர் மூலம், உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களை, விற்பனை செய்ய, 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், வணிக வளாகம் ஒன்றும், www.ruralmart.com என்னும் இணைய தளம் ஒன்றும், திருச்சியில் உருவாக்கப்பட்டு உள்ளதை நான் பாராட்டுகிறேன்.

**பெண்ணுரிமை நிலை நாட்டுவோம்!**

ஒரு முறை காசியில், ஒரு பெரிய கருத்தரங்கு நடந்தது. அது பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை, நடத்தப்படும் கருத்தரங்கு! ஆன்மீக விஷயங்களைப் பற்றி, முடிவு செய்வதற்காகவும், வேதங்களைப் பற்றி எழுந்துள்ள, சில பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகவும், அது ஏற்பாடு செய்யப்பட்டது.

அற்புதமான ஞானியாகிய, கபீர், வாழ்ந்து கொண்டிருந்த காலம் அது. கபீர் இந்துவா, முஸ்லீமா என்று, யாருக்கும் தெரியாது. கபீர் ஒரு இந்துவா, என்பது தெரியாத நிலையில், அவர் அதற்கு அழைக்கப்படவில்லை. ஆனால் வேதங்களில் இருந்த, ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றி, அவர்களால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. ஆகவே ஒருவர் சொன்னார், "கபீர் இந்துவா, முஸ்லீமா என்பது பற்றி, மறந்து விடுங்கள். அது பரவாயில்லை. இந்த வேத வாசகத்தின் அர்த்தம், மற்றும் இதில் உட்பொதிந்துள்ள கருத்து பற்றி உடனடியாக முடிவு எடுக்கக் கூடிய ஒரே நபர், அவர் தான். எனவே அவரை அழைப்போம்" என்றார்.

அதே சமயத்தில், ஆன்மீக அரசியாம் மீராபாயும் காசியில் இருந்தார். அவர் பெண் என்பதால், அவரை பண்டிதர்கள் அழைக்க விரும்பவில்லை. தயக்கத்துடன் பண்டிதர்கள் கபீரிடம் சென்று, "உங்களைக் கருத்தரங்குக்கு அழைக்கிறோம்; ஏனெனில், ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றி, எங்களால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. அதற்கான அனுபவம் யாருக்கும் இல்லை. கருத்தரங்கில், உள்ள பலரும், கபீருக்கு அந்த அனுபவம் உண்டு, என்று சொல்கிறார்கள். இந்தப் பகுதியில், தன்னைத் தானே அறிந்து கொண்டுள்ள ஒருவரால் தான், அதை விளக்க முடியும். எனவே நீங்கள் இந்துவா, முஸ்லீமா, என்பது பற்றி எங்களுக்கு நிச்சயமாகத் தெரியாவிட்டாலும், உங்களை நாங்கள் அழைக்கின்றோம்" என்றனர். அதற்கு கபீர் "இதற்கு ஒரு நிபந்தனை உண்டு. மீராவும் அழைக்கப்பட்டால், நான் வருவேன்" என்றார். அவர்கள் சம்மதிக்கவில்லை. அப்போது கபீர், "அப்படி என்றால், கபீரும் வரமாட்டான். மீராவும் வருவதற்கு அனுமதிக்கப்பட்டால் தான், கபீரால் வர முடியும். நீங்கள் கபீரை அனுமதிக்கத் தயாராக இருக்கும் போது, அவனது சாதி நிச்சயமில்லை, மதம் நிச்சயமில்லை என்பதைப் பற்றிக் கவலைப் படவில்லை! மீராவைப் பற்றிய பிரச்சனை என்ன? அவள் பெண் என்பதற்காக மட்டுமே மறுக்கிறீர்கள். நான் பெற்றுள்ள அனுபவத்தை, அவளும் பெற்றிருக்கிறாள். அவளை அழையுங்கள்" என்றார். இதற்குப் பண்டிதர்கள் வேறு வழியின்றி ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. மீரா அந்தக் கருத்தரங்குக்கு அழைக்கப்பட்டார்.

ஆன்மீக ஞானம், ஆண்களுக்கு மட்டும் தனிச் சொத்தல்ல. பெண்களுக்கும் அதில் உரிமை உண்டு. ஆனால் மீராவை அழைப்பதற்கே, ஒரு கபீரின் பரிந்துரை தேவைப்பட்டது என்றால், சாதாரணப் பெண்களைப் பற்றி, என்ன சொல்வது!

**தலைகீழாய் மாறிய நிலை**

பெண்களின் கல்விக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட இனத்துப் பெண்களின் கல்விக்கு, முன்னுரிமை வழங்கி வருகிறது, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு!

பெண்களை வலிமையானவர்களாக ஆக்க வேண்டும் என்பது தான் இந்த அரசின் கொள்கை. அப்படி பெண்கள் சமுதாயத்தில் ஆண்களுக்கு சரிநிகர் சமானமாக உயர வேண்டும், வாழ வேண்டும் என்றால் அதற்கு இரண்டு அடிப்படை தேவைகள் உண்டு. ஒன்று கல்வி, இரண்டாவது பொருளாதார ரீதியாக பெண்கள் சொந்த காலில் நிற்க வேண்டும். இதற்காகத் தான் இந்த சுய உதவிக் குழுக்களை அமைத்திருக்கிறோம். 1992ஆம் ஆண்டில் நான் முதலமைச்சராக இருந்த போது நான் தான் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை ஆரம்பித்தேன். அப்போது



நான் இட்ட சிறிய விதை, இன்றைக்கு வளர்ந்து பெரிய ஆலமரமாகியிருக்கிறது. தமிழகத்தில் 1,19,000 சுய உதவிக் குழுக்கள் இன்றைக்கு அமைக்கப் பட்டிருக்கின்றன. ஏறக்குறைய 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் இதில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஏறக்குறைய 268 கோடி ரூபாய்க்கு மேல் இன்றைக்கு இந்த சுய உதவிக் குழுக்கள் எல்லாம் சேமிப்பு நிதியை வைத்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் 1992இல் இந்த மகளிர் சுய உதவி குழுக்களை நான் தொடங்கிய போது, பெண்களுக்கு வங்கிகள் கடன் கொடுக்கவே தயங்கினார்கள். அப்போது இந்த சுய உதவிக் குழுக்களிலிருந்த மகளிருக்கு வங்கிகளிடம் கடன் பெற்றுத் தருவது குதிரைக் கொம்பாக இருந்தது. ஆனால், இன்றைக்கோ நிலைமை தலை கீழாக மாறியிருக்கிறது. இன்று இந்த சுய உதவிக் குழுக்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு இந்த மகளிரிடம் கோடிக்கணக்கான ரூபாய்கள் இன்றைக்கு சேமிப்பாக இருப்பதைப் பார்த்து, வங்கிகளே இன்றைக்கு மகளிரை பின் தொடர்ந்து உங்களிடம் இருக்கின்ற நிதியை எங்களிடம் வைப்பு நிதியாக வையுங்கள், தாருங்கள் என்று மகளிரைத் தேடி அவர்களுக்குப் பின்னால் போகிறார்கள். மகளிர், வங்கிகளைத் தேடிப் போனது அந்தக் காலம். இன்றைக்கு வங்கிகளே மகளிரைத் தேடி வருவது இந்தக் காலம். ஆகவே, இன்றைக்கு ஏறக்குறைய 20 இலட்சம் பெண்கள் இந்த சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக சேர்ந்திருக்கிறார்கள் என்றால் இது போதாது, தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை பெண்களும் சுய உதவிக் குழுக்களில் சேர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக உங்களை மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை மகளிரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். மகளிர் சொந்தக் காலில் நிற்க வேண்டும். உங்கள் தேவைகளுக்காக, வாழ்க்கையை நடத்துவதற்காக, வாழ்க்கைக்குத் தேவையான செலவுகளுக்காக எந்த ஆணையும் நம்பி மகளிர் இருக்கக் கூடாது. அந்த அளவிற்கு ஆண்களோடு, சரி நிகர் சமானமாக மகளிர் உயர வேண்டும் என்பதற்காகத் தான் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மகளிரும் கல்வியைப் பெற வேண்டும், சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுவரை தமிழகத்தில் உள்ள எந்தப் பெண்ணாவது சுய உதவிக் குழுவில் சேரவில்லை என்றால் உடனடியாகச் சேர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மேம்பாலங்கள்**

இந்த இனிய விழாவிலே மொத்தம், 96 கோடி ரூபாய் மதிப்புடைய, பல்வேறு துறைகளைச் சார்ந்த, திட்டப் பணிகளை நான் திறந்து வைத்துள்ளேன். நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்த வரையில், 11 கோடி ரூபாய் மதிப்பில், திருச்சிராப்பள்ளி – நாமக்கல் நெடுஞ்சாலையில் உள்ள, உத்தமர்கோவில் அருகே கட்டப்பட்டுள்ள, ரயில்வே மேம்பாலத்தையும், 11 கோடி ரூபாய் மதிப்பில், ஸ்ரீரங்கம் நகரில் கட்டப்பட்டுள்ள, ரயில்வே மேம்பாலத்தையும், திருச்சிராப்பள்ளி – சிதம்பரம் சாலை, புள்ளம்பாடி – விடுதலைபுரம் சாலை, ஆகியவற்றில், 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 பாலங்களையும், இன்று நான் திறந்து வைத்துள்ளேன். இந்த மேம்பாலங்களும், பாலங்களும், திருச்சி மாவட்டத்தின் போக்குவரத்து வசதிகளை, பெரிதும் மேம்படுத்தும் என்று கருதுகின்றேன்.

பொதுப்பணித்துறையால், 4 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள, பல்வேறு துறைகளைச் சார்ந்த, 15 கட்டடங்களையும், இந்த விழாவில் திறந்து வைத்ததில், நான் மகிழ்ச்சி அடைகின்றேன். குறிப்பாக, 80 இலட்சம் ரூபாய் மதிப்பில், திருச்சிராப்பள்ளி அண்ணா விளையாட்டு அரங்கத்தில், கட்டப்பட்டுள்ள நீச்சல் குளத்தை, திறந்து வைத்ததிலே, நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

குடிதண்ணீர் வழங்கல் பணிகளைப் பொறுத்த வரையில், எங்களது அரசு, மிகுந்த கவனத்தை செலுத்தி வருகின்றது. அந்த வகையில், 68 இடங்களுக்கு, குடிநீர் வழங்குகின்ற, 17 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள, திருவெறும்பூர் – துவாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம், மற்றும் வையம்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த, கருங்குளம் மற்றும் குடியிருப்பு பகுதிகளுக்கு, 70 இலட்சம் ரூபாய் செலவில், குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம்– தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில், தும்பலம் மற்றும் 24 குடியிருப்பு பகுதிகளுக்கு, 4 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில், குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் – மணச்சநல்லூர் ஒன்றியத்தில், 18 குடியிருப்புகளுக்கு, 1 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பில், குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஆகியவற்றை திறந்து வைத்துள்ளேன். இந்தப் பணிகள் அனைத்தும், இப்பகுதி வாழ் மக்களின், குடிநீர்த் தேவைகளை, பெரிதும் பூர்த்தி செய்யும் என்று, நான் நம்புகின்றேன். திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், 1 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள, 12 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் – 67 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள, 2 ஆதிதிராவிடர் மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள் – ஊரக வளர்ச்சி முகமை சார்பில், 6 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, 470 கட்டடங்கள் – 18 இலட்சம் ரூபாய் செலவில், கட்டி முடிக்கப்பட்டுள்ள, திருச்சிராப்பள்ளி மத்திய கூட்டுறவு வங்கிக் கட்டடம் – ஊரக வளர்ச்சித் துறையினால், 7 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில், அமைக்கப்பட்டுள்ள, 1798 குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள், மற்றும் 30 கட்டடங்கள் ஆகியவற்றை, இந்த விழாவில் திறந்து வைத்ததில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும், இந்த விழாவில், மணிகண்டம் ஒன்றியம், அம்மாப்பேட்டையில், 3 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பில், துணை மின் நிலையம் ஒன்றை, திறந்து வைத்ததிலும் – பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில், 11 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பில், கட்டி முடிக்கப்பட்டுள்ள 7 கட்டடங்களையும், இந்த இனிய விழாவிலே திறந்து வைத்ததில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

**ஆண்டாள் பாடலும் அன்னதானத் திட்டமும்**

நம்முடைய இதிகாசங்களும், இலக்கியங்களும், ஆன்ம நேயத்தையே அதிகம் வலியுறுத்துகின்றன.



மனிதாபிமானம் என்பது, மனிதர்களிடம் அன்பு காட்டுவது. ஆன்ம நேயம் என்பது, எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுவது.

ஆழ்வார் பெருமக்கள், அரங்கனிடத்து மட்டுமல்ல; அடியாரிடத்திலும் அன்பு காட்டினார்கள். ஆண்டாள் அற்புதமான தமிழால் திருப்பாவை பாடினார். அந்தத் திருப்பாவையில், 27–ஆவது பாடலில், பாவை நோன்பு நோற்று, கண்ணனிடத்தில் என்னென்ன பரிசுப் பொருட்களைப் பெறலாம், என்பதைச் சொல்லுகிறார் ஆண்டாள்.

"ஆடை அணிகலன்கள் எல்லாம் பெற்று, அணிந்து கொண்ட பிறகு, பால் சோற்றை மூடும்படியாக, நெய்யை அதிலே ஊற்றி, முழங்கை வழியாக, அந்த நெய் வழியும்படி உண்ண வேண்டும்", என்று சொன்ன ஆண்டாள், அதற்கு மேல், இந்த உலகம் உணர்ந்து கொள்ள வேண்டிய, ஒரு உண்மையைச் சொன்னார்.

'பால் சோறு மூட
நெய் பெய்து
முழங்கை வழிவார'
– என்று பாடிய
ஆண்டாள்

'கூடியிருந்து
குளிர்ந் தேலோர்
எம்பாவாய்'
– என்று பாடலை
நிறைவு செய்கிறார்.



பால் சோற்றில் முழுக்க நெய் பெய்த சத்துணவை, தான் மட்டும் சாப்பிட வேண்டும், என்று ஆண்டாள் சொல்லவில்லை. கூடியிருந்து, – எந்தவித சாதி பேதமும் இன்றி – எல்லோரும் ஒன்றாகக் கூடியிருந்து – சேர்ந்து உண்போம், என்பது தான், இந்தப் பாடலின் பொருள்.

எல்லோரும் ஒன்றாக இருந்து உண்ண வேண்டும். இது தான் ஆண்டாளின் கொள்கை! இது தான் வைணவத்தின் கோட்பாடு!

**இது தான் தமிழகத்தின் பண்பாடு!**

இது தான் உங்கள் அன்புச் சகோதரி, ஆலயங்களில் அறிமுகப்படுத்தி இருக்கும், அன்னதானத் திட்டத்தின் அடிப்படை!

இன்றைக்கு, தமிழகம் முழுவதும் உள்ள, 144 திருக்கோயில்களில், பகல் நேரத்தில், திருக் கோயில்களுக்கு வரும், பக்தர்களின் பசியைப் போக்க, அன்னதானத் திட்டம், மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதிகாசங்களும், இலக்கியங்களும் சொன்னவை, வெறும் தத்துவமாக இருந்து விடக் கூடாது. அவை வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது தான், என்னுடைய நோக்கம்,! என்னுடைய செயல்பாடு!

**மகளிர் தொழில் பூங்கா**

கட்டி முடிக்கப்பட்ட பணிகளைத் திறந்து வைத்தால் மட்டும் போதாது. மக்களின் தேவைக்கும், வசதிக்கும், மேலும் புதுப்புது கட்டுமானப் பணிகளை, அமைத்துத் தந்து கொண்டே இருக்க வேண்டும், என்பது தான், இந்த அரசின் கொள்கை. அந்த வகையில், இன்றைய தினம், மொத்தம் 104 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு துறைகளில் அமைக்கப்பட உள்ள, பல் வகை கட்டுமானப் பணிகளுக்கு, அடிக்கற்கள் நாட்டியுள்ளேன். குறிப்பாக, நெடுஞ்சாலைத் துறையால், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட உள்ள, 21 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, 11 பாலங்களுக்கும், 7 சாலைப் பணிகளுக்கும், இந்த விழாவிலே அடிக்கற்கள் நாட்டியுள்ளேன். மேலும், 1 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பில், ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கான, 6 மாணவர் விடுதிகள் – 1 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைய உள்ள, 29 துணை சுகாதார நிலையங்கள் – 35 இலட்சம் ரூபாய் மதிப்பில், புளியஞ்சோலை பகுதியில் அமைக்கப்படவுள்ள, சுற்றுலாத் தலம் ஆகியவற்றிற்கு, அடிக்கற்கள் நாட்டியதில், நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், மொத்தம் 126 குடியிருப்புப் பகுதிகளுக்கு, 9 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள, குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளுக்கும் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம், 12 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அமைக்கப்படவுள்ள கால்வாய்கள் தூர்வாரும் பணி, சமுதாயக் கட்டடங்கள், கிராம நிர்வாக அலுவலகங்கள், மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்கள், கதிரடிக்கும் களங்கள், கழிப்பிடங்கள் ஆகியவற்றை அமைக்கின்ற பணிகளுக்கு, அடிக்கற்கள் நாட்டியதில், நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

இவை மட்டுமின்றி, யானைக்குளம் பகுதியில், 7 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமையவுள்ள, வணிக வளாகம் – திருச்சிராப்பள்ளி நீதிமன்ற வளாகத்தில், 2 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைய உள்ள, துணை மின் நிலையம் – திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில், வாழவந்தான் கோட்டையில், 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில், 51 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ள, மகளிர் தொழில் பூங்கா – திருச்சிராப்பள்ளி மாவட்ட, காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கான, 3 கோடி ரூபாய் மதிப்புடைய, புதியக் கட்டடம், ஆகிய முக்கியமான கட்டுமானப் பணிகளுக்கு, அடிக்கற்கள் நாட்டியுள்ளதில், நான் பெருமை அடைகின்றேன். இவை மட்டுமின்றி, 25 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், "அனைவருக்கும் கல்வி" திட்டத்தின் கீழ், அமைக்கப்படவுள்ள, பல்வேறு திட்டப் பணிகள் – போக்குவரத்து ஊழியர்களுக்கான 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைய உள்ள, 311 குடியிருப்புகள் – 32 இலட்சம் ரூபாய் செலவில், பார்வை அற்றோருக்கு

அமைக்கப்பட உள்ள, 100 தொகுப்பு வீடுகள் – திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், அனைத்துப் பணிகளையும் கணினிமயமாக்குதல் திட்டம், ஆகியவற்றை எல்லாம் இந்த விழாவில் துவக்கி வைத்ததில், நான் உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகின்றேன்

**எதையும் மறுத்தே**
**அறிவாளிகள் ஆனவர்கள்**

ரஷ்ய நாட்டிலே, ஒரு சிறந்த சிந்தனையாளர் இருந்தார். அவரிடம் அறிவுரை கேட்பதற்கு, ரஷ்ய நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், மக்கள் வருவார்கள். அவருடைய பெயர் கோகோல் (GOGOL).

அந்த நாட்டின் ஒரு ஊரில், ஒரு முட்டாள் இருந்தான். அவன் என்ன சொன்னாலும், அவனைப் பார்த்து பரிகசித்து, மக்கள் சிரிப்பார்கள். முட்டாள் என்பது, அவனது பட்டமாக, ஒரு காலத்தில் இருந்தது. நாளடைவில், சொந்தப் பெயர் போய் விட்டது. முட்டாள் என்னும் இந்தப் பெயரே, சொந்தப் பெயராய் ஆகிவிட்டது.

அவன் சிந்தனையாளர் கோகோலைக் சந்தித்து, 'முட்டாள் என்னும் பட்டத்தை மாற்ற முடியுமா?' என்று கேட்பதற்காகப் போனான். கோகோலிடம் போய் விஷயத்தைச் சொன்னான். அவப்பெயரை நீக்க வழி கூற வேண்டும், என்று அவரைக்' கேட்டுக் கொண்டான்.

அவன் மிகவும் மனம் வருந்திச் சொன்னான். "நான் சொன்னதைக் கேட்ட பிறகு, மக்கள் என்னை முட்டாள் என்று அழைத்தாலும், பரவாயில்லை. ஆனால், நான் எதையாவது சொல்லத் தொடங்கினாலே – ஏன் – வாயைத் திறந்த உடனேயே, மக்கள் என்னை முட்டாள் என்று பரிகசிக்கிறார்கள். இதை மாற்றுவது எப்படி?" என்று பரிதாபமாகக் கேட்டான்.

அதற்கு அந்த ரஷ்ய சிந்தனையாளர் கோகோல் சொன்னராம் – "இனிமேல் யார், என்ன சொன்னாலும், உடனே அதை மறுத்துப் பேசு. எப்போதும் மறுத்துப் பேசு! எவரையும் மறுத்துப் பேசு! என்ன சொன்னாலும் மறுத்துப் பேசு! உதாரணமாக, யாராவது கடவுள் இருக்கிறார் என்று சொன்னால், உடனே இல்லை என்று சொல். நிரூபிக்க முடியுமா என்று சவால் விடு! யாரும் உன்னைப் பற்றி என்ன சொன்னாலும் மறுத்துப் பேசு! அதை மட்டும் ஒழுங்காகச் செய்!" என்று கோகோல் அவனுக்கு அறிவுரை வழங்கி, அனுப்பி வைத்தார்.

அவன் ஊருக்குள் போனான். யார் என்ன சொன்னாலும், உடனே அதை மறுத்துப் பேசினான். யார் யாருடனோ பேசிக் கொண்டிருந்தாலும், இவன் நடுவில் குறுக்கிட்டு "அப்படி இல்லை" என்பான். "நிரூபிக்க முடியுமா?" என்று சவால் விடுவான்.

ஒன்றிரண்டு மாதங்களிலேயே, அவனை ஊர் மக்கள், "அறிவாளி"! என்று பேசத் தொடங்கி விட்டார்கள். விரைவில் அவன் புகழ் நாடெங்கும் பரவியது. இதில் வேடிக்கை என்னவென்றால், முன்பு அவனை யார், யார் 'முட்டாள்' என்று அழைத்தார்களோ, அவர்களுக்கு எல்லாம் அவனை 'முட்டாள்' என்று அழைத்ததே, மறந்து போய்விட்டது. இப்போது அவன் அறிவாளி, அதனால் தான், எல்லோரையும் அவனால் மறுக்க முடிகிறது, என்று மக்கள் பேசிக் கொண்டார்கள்.

இப்படி அறிவாளி ஆனவர்கள், ரஷ்ய நாட்டிலே மட்டுமல்ல, நமது தமிழ்நாட்டிலும் இருக்கிறார்கள். அடுத்தவர்களை மறுத்துப் பேசியே, அறிவாளிகள் என்று பெயர் பெற்று விட்ட இவர்களுக்கு, வேறு வேலையே இல்லை.

இவர்கள் "மக்களுக்கு ஏன் உதவி செய்யவில்லை?" என்று கேட்பார்கள். "விவசாயிகள் பட்டினி கிடக்கிறார்களே, ஏன் அரசாங்கம் உதவவில்லை?" என்பார்கள். அரசாங்கம் விவசாயிகளின் பசியைப் போக்குவதற்கு சோறு போட்டால், "ஏன் போட்டாய்?" என்பார்கள். போடவில்லை என்றால், "ஏன் போடவில்லை?" என்பார்கள்.

இவர்களில் சிலர் வேடிக்கையானவர்கள். மக்கள் ஒதுக்கித் தள்ளிய கட்சிகளில், இவர்கள் "முயல் தலைவர்கள்", "செயல் தலைவர்கள்", "புயல் தலைவர்கள்" என்றெல்லாம் பெயர்களை வைத்துக் கொண்டிருப்பார்கள். இவர்களை இன்னும் "புத்திசாலிகளாக" ஆக்க, ஒருவர் தூபம் போட்டுக் கொண்டே இருப்பார். அவருடைய பிழைப்பே, என்னை எதிர்ப்பது மட்டும் தான். எனது அரசு எதைச் செய்தாலும், அவர் அதை மறுப்பார், எதிர்ப்பார்.

இப்படிப்பட்ட புத்திசாலிகளின் எதிர்ப்புகளை எல்லாம் மீறித்தான், உங்கள் அன்புக் சகோதரியான நானும், எனது அரசும், மக்களுக்கான ஆக்கப் பணிகளை புரிவதில், இன்று ஒரு புதிய சகாப்தத்தைப் படைத்து வருகிறோம்.

இங்கே பேசிய அருமை சகோதரர் சபாநயாகர் டாக்டர் காளிமுத்து அவர்கள் பேசுகின்ற போது 1996–ம் ஆண்டு மக்கள் நம்மை தோற்கடித்தார்கள். ஆட்சியை இழந்தோம். மீண்டும் 5 ஆண்டுகள் கழித்து மக்கள் ஆட்சிப் பொறுப்பை நம்மிடம் வழங்கி இருக்கிறார்கள் என்று கூறினார். இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை மக்கள் எங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், இன்றைக்கு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், இது எளிதான காரியம் அல்ல. சாமானியமாக செய்யக் கூடிய காரியமும் அல்ல. இன்றைக்கு மக்கள் என்னிடத்தில் என்ன வழங்கி இருக்கிறார்கள்? முள்ளாலான கிரீடத்தை வழங்கி இருக்கிறார்கள். People have given me a crown of thorns. தமிழகத்தின் அரியணையில் மக்கள் என்னை உட்கார வைத்திருக்கிறார்கள். அரியணை என்றால் சிம்மாசனம். இது எப்படிப்பட்ட சிம்மாசனம். ஆணிகளால் செய்யப்பட்ட சிம்மாசனம். A throne of nails. I am sitting on a throne of nails wearing a crown of thorns ஆணிகளால் ஆன சிம்மாசனத்தில் உட்கார்ந்துக் கொண்டு முட் கீரிடத்தை அணிந்து கொண்டிருக்கிறேன். இது தான் என்னுடைய நிலை. என்னுடைய அரசாங்கத்தின் நிலை என்பதை நீங்கள் உணர வேண்டும்.

1996–ல் என்ன தவறு செய்தோம். ஆனால், மக்கள் அப்படி ஒரு தீர்ப்பை அளித்து எங்களைத் தோற்கடித்ததால் இன்றைக்குத் தமிழகத்தை சீர்படுத்துகின்ற காரியம் பன் மடங்கு, நூறு மடங்கு கஷ்டமானதாக, சிரமமானதாக ஆகி விட்டது. 1996–ம் ஆண்டு அந்தத் தேர்தலில் மக்கள் வேறு விதமான தீர்ப்பை அளித்திருந்தால் தொடர்ந்து இந்த அரசே செயல்பட்டிருந்தால் இந்நேரம் நிச்சயமாக தமிழ் நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆகியிருக்கும் அது உறுதி. ஆனால், மக்கள் அன்றைக்கு அத்தகையதொரு தீர்ப்பை வழங்கியதால் தமிழகத்தில் ஒரு பின்னடைவு ஏற்பட்டு விட்டது. 5 ஆண்டு காலம் தமிழகம் எல்ல வகைகளிலும், எல்லா துறைகளிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டு இருளில் மூழ்கியது. நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். புதியதாக ஒரு வீட்டைக் கட்டுவது என்றால் அது எளிதான காரியம். கிடு கிடுவென்று வேகமாகக் கட்டி விடலாம். ஆனால், ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட ஒரு வீட்டை இடித்து விட்டு, நாசப்படுத்தி அலங்கோலப் படுத்தினால் அதன் பிறகு மீண்டும் அந்த வீட்டுக்குள் வந்து கிடக்கின்ற குப்பைகளை எல்லாம், இடிபாடுகளை எல்லாம் அகற்றி அந்த வீட்டை சுத்தப்படுத்தி மீண்டும் அந்த வீட்டை புதுப்பித்து, மீண்டும் கட்டுவது என்றால் அது எவ்வளவு கஷ்டமான காரியம் என்றால் செய்து பார்த்தால் தான் தெரியும், புதிய வீட்டை கட்டுவதை விட இப்படி பாழடைந்த ஒரு வீட்டை புதுப்பித்து மீண்டும் கட்டுவது என்பது இன்னும் நூறு மடங்கு கஷ்டமான காரியம். இதைத் திரும்ப திரும்ப செய்ய வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கிறோம்.

புரட்சித் தலைவர் ஆட்சி 1987–ம் ஆண்டு வரை இருந்தது. புரட்சித் தலைவர் மறைந்த பிறகு ஒரு அரசியல் விபத்தால் 1989–ல் நடந்த சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. கருணாநிதி முதலமைச்சர் ஆனார். அப்போது, 1991ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கருணாநிதியின் ஆட்சி கலைக்கப்பட்டது. அப்போதே கஜானாவை காலியாக்கி விட்டுத் தான் அவர் சென்றார். 1991–ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றி பெற்று நான் முதலமைச்சரானேன். அப்போதே கஜானா காலி. மிகவும் நெருக்கடியான நிதி நிலைமை. எப்படியோ கஷ்டப்பட்டு, மன உறுதியோடு, 1991–லிருந்து 1996 வரை அரும்பாடுபட்டு தமிழகத்தை எல்லா துறைகளிலும் முன்னேற்றினோம். பல புதிய தொழில்களை இங்கு கொண்டு 'வந்தோம். புதிய தொழிற்சாலைகளை நிறுவினோம். மின் உற்பத்தியை பெருக்கினோம். ஒவ்வொரு துறையிலும் பல சாதனைகளைப் புரிந்தோம். ஆனால் இவ்வளவு செய்தும் கூட 1996–இல் மக்கள் எங்களுக்குத் தோல்வியை தந்தார்கள். நாங்கள் ஆட்சியை விட்டு இறங்கும் போது, தமிழகத்தில் நிதி நிலையை மிகவும் சீராக வைத்து விட்டு தான் போனோம். அன்றைக்கு உபரி நிதியை வைத்து விட்டுப் போனோம்.

ஆனால், மீண்டும் ஆட்சிக்கு வந்த தி.மு.க, மீண்டும் ஆட்சிக்கு வந்த கருணாநிதி, 5 ஆண்டு காலத்தில் தமிழகத்தை குட்டிச் சுவராக்கி அலங்கோலப்படுத்தி எல்லா வகையிலும் பின்னுக்குத் தள்ளி விட்டு படுகுழியில் தமிழகத்தை தள்ளி விட்டு போய் விட்டார். மீண்டும் 2001–ல் மக்கள் ஆட்சி பொறுப்பை என்னிடத்தில் வழங்கினீர்கள். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், தமிழகத்தில் யாருமே ஆட்சிப் பொறுப்பை ஏற்க விரும்ப மாட்டார்கள். இது விரும்பக் கூடிய ஒரு பதவி அல்ல. ஆசைப்பட்டு ஏற்கக் கூடிய ஒரு பொறுப்பு அல்ல. வைராக்கியத்துடன் இன்றைக்கு செயல்பட்டு கொண்டிருக்கிறேன். எந்தப் பக்கம் திரும்பினாலும், முட்டுக் கட்டை, நெருக்கடி. ஏற்கெனவே பற்றாக்குறையில் இருக்கின்ற நிதி நிலைமை. எதற்குக் கேட்டாலும், எதை எடுத்தாலும் நிதி இல்லை, நிதி இல்லை என்ற பதில் தான் அரசு அதிகாரிகளிடமிருந்து வருகிறது. போதாக் குறைக்கு வறட்சி. எங்கேயும் தண்ணீர் இல்லை. காவிரியில் நம்முடைய உரிமை கிடைக்கவில்லை. நமக்கு வரவேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை. இந்த நிலையில் ஒரு அரசாங்கம் என்ன செய்ய முடியும்? கடன் வாங்கும் உரிமையைக் கூட மத்திய அரசு மறுத்து விட்டது. முன்பு எல்லாம் ஒரு மாநில அரசுக்கு நிதி பற்றாக்குறை ஏற்பட்டால் எங்காவது கடன் எழுப்புவோம். கடன் வாங்குவோம். நிலைமையை சமாளிப்போம். அந்த அதிகாரங்களும் மாநில அரசாங்கத்திற்கு இல்லை. மறுக்கப் படுகின்றன.

இந்த நிலையில் ஒரு மாநில அரசு என்ன செய்ய முடியும்? முடிந்ததை செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, இன்றைய தினம் நிதிப் பற்றாக்குறை; காவேரியில் போதுமான தண்ணீர் இல்லை. அதனால் சம்பா பயிரை இழந்து விட்டோம். எங்கு பார்த்தாலும் வறட்சி தாண்டவமாடுகிறது. குடிக்க தண்ணீர் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு மாநில அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், இத்தகைய ஒரு சூழ்நிலையில் கூட மாவட்டந்தோறும் சென்று நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களைத் துவக்கி வைத்து மக்களுக்குப் பல பணிகளை ஆற்றி வருகிறோம். பல உதவிகளை செய்து வருகிறோம் என்று சொன்னால், இந்த அரசுக்கு இருக்கின்ற வைராக்கியம், உறுதி Political will இதுதான் இதற்குக் காரணம், மக்களின் ஆதரவும் காரணம்.

இதனால் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் எந்த மாநில அரசும், இத்தகைய சூழ்நிலையில் தலை நிமிர்ந்து நிற்பது கஷ்டம். ஆனால், தமிழக அரசு திவாலாகி விடக் கூடாது. என்னை நம்பி இந்தப் பொறுப்பை ஒப்படைத்த மக்களை நான் உயர்த்தியே தீர வேண்டும். தமிழகத்தை முன்னேற்றியே தீர வேண்டும் என்ற வைராக்கியத்துடன் மன உறுதியுடன் நான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஆகவே, தமிழக மக்கள் அனைவரும் இதற்கு ஆதரவு அளிக்க வேண்டும். இந்த அரசுக்குத் தோளோடு தோள் நிற்க வேண்டும் என்று நான் கேட்டு கொள்கிறேன்.

பொருளாதாரக் கடன் உதவி

சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்கு, அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்குவதில், எங்கள் அரசு முன்னணியில் இருக்கின்றது என்பதை, நான் பல முறை சுட்டிக் காட்டி இருக்கின்றேன். அந்த வகையில், இன்றைய தினம், மொத்தம் 15,910 பயனாளிகளுக்கு, சுமார் 9 கோடி ரூபாய் மதிப்புடைய, பல்வேறு நலத் திட்ட உதவிகளை, இந்த விழாவில் வழங்க இருக்கின்றேன். அவற்றில் ஒரு சில, முக்கிய நலத் திட்ட உதவிகளைப் பற்றி, எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

இன்றைய தினம், மொத்தம் 6526 பெண்களுக்கு, பொருளாதார கடன் உதவி மற்றும் சுழல்நிதி என்ற வகையில், 2 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, நலத் திட்ட உதவிகள் – 2925 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு, 93 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, வீட்டு

மனைப் பட்டாக்கள் – முதியோர் உதவித் தொகை போன்ற உதவிகள் – 85 பயனாளிகளுக்கு, திருமண உதவித் திட்டம், இலவச தையல் இயந்திரங்கள் மற்றும் பல்வேறு நலத் திட்ட உதவிகளை, 12 இலட்சம் ரூபாய் செலவில் வழங்குதல் – தொழில் வணிகத் துறையின் சார்பில், 154 பயனாளிகளுக்கு, 58 இலட்சம் ரூபாய் மதிப்பில் கடன் உதவி – 1277 பயனாளிகளுக்கு, 3 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பில், வீடுகளை மேம்படுத்துவதற்கான நிதி உதவி, ஆகியவற்றை இந்த விழாவிலே வழங்க உள்ளதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த நலத் திட்ட உதவிகள் அனைத்தையும், பயனாளிகள் அனைவருக்கும், நானே எனது கரங்களாலேயே வழங்க வேண்டும், என்று எனக்கு விருப்பம் தான். ஆனால் அதற்கு போதுமான நேரம் இல்லை என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆகவே, இந்த மேடையில், 15 பயனாளிகளுக்கு மட்டும், நலத்திட்ட உதவிகளை, நானே எனது கரங்களாலே வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் அரசு அலுவலர்களும், இப்போதே, இங்கேயே, இந்த விழாவிலேயே, வழங்கி சிறப்பிப்பார்கள், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு உதவிகள் பலவும் பெற உள்ள பயனாளிகள், தாம் செய்து வருகின்ற தொழில்களில், மென்மேலும் வளர்ச்சி பெற வேண்டும், என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

**புரட்சித் தலைவரிடம்**
**மக்கள் காட்டிய அன்பு**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., எனது நீண்ட கால நண்பர் என்று சொல்லி, அவர் மறைந்த பிறகு, ஆதாயம் தேடிக் கொள்ள நினைக்கும் ஒருவர், அவர் வாழ்ந்த காலத்தில், அவருக்கு என்னென்ன கொடுமைகள் செய்தார், என்பதையெல்லாம் தமிழகம் அறியும்.

சென்னையில் இருந்து திண்டுக்கல்லுக்கு தேர்தல் பிரச்சாரத்திற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், அவர்கள், சென்று கொண்டிருந்தார்.

ஒவ்வொரு 10 கிலோ மீட்டருக்குப் பிறகும், வாகனத்தை மாற்றி மாற்றிப், பயணம் செய்ய வேண்டிய நிலை! காரணம், கண்ட இடத்தில், அவருடைய கதையை முடித்துவிட வேண்டும் என்பதற்காக, எதிரிகள் கழுகுகளாக, வட்டமிட்டுக் கொண்டு இருந்தார்கள்.

மணப்பாறையைத் தாண்டும் போது, மாட்டு வண்டியில் அவர் சென்று கொண்டிருந்ததை எதிரிகள் அறிந்து கொண்டார்கள்.

புத்தா நத்தத்தைத் தாண்டி வண்டியை, வழி மறித்தார்கள் வஞ்சகர்கள்!

அவர்களுக்குத் தெரியாது, மணப்பாறையைத் தாண்டியதும், புரட்சித் தலைவர் ஒரு வேனிலே ஏறி விட்டார் என்ற விவரம்!

வேனை ரோட்டிலே நிற்க வைத்து விட்டு, பக்கத்திலிருந்த காட்டுக்குள் சென்று, தரையில் படுத்து உறங்கினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அதிகாலை 5 மணிக்கு கண் விழிக்கும் போது, கால்மாட்டில் ஒரு மூதாட்டி, இரண்டு அலுமினிய தூக்குக் சட்டிகளுடன், காத்துக் கிடப்பதைப் பார்த்தார்.

“அம்மா! உங்களுக்கு என்ன வேண்டும்?” என்று புரட்சித் தலைவர் கேட்டார்.

“ஐயா! நான் வாங்க வரவில்லை. உனக்கு கொடுக்க வந்திருக்கிறேன்.

“ஒரு தூக்குச் சட்டியில் சோறு இருக்கிறது. இன்னொரு தூக்குச் சட்டியில் வெடக்கோழி குழம்பு இருக்கிறது. சாப்பிடு மகராசா!” என்று மூதாட்டி சொன்னார்.

அந்த இரண்டு பாத்திரங்களையும் வேனிலே எடுத்துக் கொண்டு புறப்பட்டார் புரட்சித் தலைவர்.

திண்டுக்கல்லில் அன்று பிரச்சாரம் முடிந்து இரவு ஒரு மணிக்கு மேல், சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்.

காரில் மற்றவர்கள் உறங்கிக் கொண்டிருந்தார்கள். புரட்சித் தலைவர் மட்டும் விழித்துக் கொண்டிருந்தார்.

முதல் நாள் இரவு, மூதாட்டியைச் சந்தித்த இடத்தில், வண்டியை நிறுத்தச் சொல்லி, அந்த மூதாட்டியை புரட்சித் தலைவர் தேடிப் போனார்.

டார்ச் லைட் வெளிச்சத்தில், ஒட்டுத் திண்ணையில், படுத்திருந்த கிழவியைக் கண்டு, குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த அவருக்கு, கம்பளிப் போர்வையைப் போர்த்தினார்.

அது மட்டுமல்ல, மூதாட்டியின் கையில், ஆயிரம் ரூபாயை திணித்து விட்டு, விடைபெற்றார் அந்த வள்ளல்!

மக்கள் அவரிடம் வைத்த அன்பும், அவர் மக்களிடம் வைத்த அன்பும், வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது.

அந்தத் தர்மத் தலைவனின் வழியிலேயே நடக்கும், உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னிடம், நீங்கள் வைத்திருக்கும் அன்பும், நான் உங்களிடம் வைத்திருக்கும் அன்பும், வேறெங்கும் காணக் கூடியதா! இல்லை என்பது தானே இதற்கு விடை, இப்படிப்பட்ட அன்பை வேறு எங்கும் காண முடியாது என்பது தானே உண்மை.

இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறக் காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக, மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

*(திருச்சிராப்பள்ளியில் 10.3.2003 அன்று நடைபெற்ற திருச்சிராப்பள்ளி மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் திறப்புவிழா, புதிய கட்டடங்கள் திறப்பு விழா, புதிய திட்டப் பணிகள் அடிக்கல்நாட்டு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை).*

❖ ❖ ❖ ❖





# சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு தொடர்ந்து இலவச மின்சாரம் கிடைக்க ஆண்டுக்கு ரூ.1000 வீதம் பண உதவி

– மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு

**1998**-ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் கீழ், பல்வேறு வகையான பயனீட்டாளர்களுக்கு தமிழ்நாடு மின்வாரியத்தால் விற்கப்படும் மின்சாரத்திற்கான 16.3.2003 முதல் செயலுக்கு வரும் புதிய கட்டண விகிதங்களை, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்துள்ளது.

*நிதிச் சீரமைப்பு நடவடிக்கை*

1996-ஆம் ஆண்டு முதல் 2001-ஆம் ஆண்டு வரை ஆட்சியிலிருந்த தி.மு.க. அரசு நிதிச் சீரமைப்பு நடவடிக்கைகளை சிறிதும் கவனத்தில் கொள்ளாமல், மாநிலத்தை நிதிச் சீரழிவில் தள்ளிவிட்டது என்பது அனைவரும் அறிந்ததே. 1999–2000 மற்றும் 2000–2001 ஆகிய ஆண்டுகளில் மிகச் சீர்குலைந்த நிதி நிலைமையைச் சரி செய்ய, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை செயல்படுத்தாமல், மார்ச் 2001 இறுதியில் மாநிலத்தை நிதிச் சீரழிவில் சென்றடையும் வகையில் தி.மு.க. அரசு செய்துவிட்டது. 2001-ஆம் ஆண்டு மார்ச் இறுதியில் நிலுவையிலிருந்த உணவுப் பொருள் வழங்குதலுக்கான உதவி மானியத் தொகை, அரசுப் பணியாளர்களுக்கான ஊதிய நிலுவைத் தொகை, தமிழ்நாடு மின் வாரியத்தினால் மைய அரசு நிறுவனங்களுக்கு மின்சாரம் வழங்கியதற்காக கொடுக்க வேண்டிய தொகைகளின் நிலுவை, அரசு தமிழ்நாடு மின் வாரியத்துக்கு வழங்க வேண்டிய மானிய நிலுவைத் தொகையை வழங்காமை, மாநில அரசால் கொடுக்கப்பட வேண்டிய பட்டியல் தொகைகள் ஆகியவை அனைத்தும் நிதி நிலையின் மொத்தச் சீரழிவைத்தான் காட்டுகின்றன. இந்த மிகப் பெரிய நிதிச் சீரழிவினை எதிர்கொண்ட இவ்வரசு, நிலைமையை சரி செய்ய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதாகி விட்டது. மாநிலம், தமிழ்நாடு மின் வாரியம் மற்றும் பேருந்துப் போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றின் நிதி நலத்தை மீளப்பெறும் இமாலயப் பணியை மேற்கொள்ளும் நிலைக்கு இவ்வரசு தள்ளப்பட்டது.

1998-ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டம் என்னும் புதிய சட்டத்தை இந்திய அரசு இயற்றியது. இந்தச் சட்டம் 25.4.1998 முதல் செயல்முறைக்கு வந்தது. இந்தச் சட்டத்தின் கீழ், முந்தைய தி.மு.க. அரசு 17.3.1999 அன்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தை தோற்றுவித்தது. இந்தச் சட்டம் மின்சாரத்திற்கான கட்டணம், பயனீட்டாளர்களுக்கு மின்சாரம் வழங்கப்படும் சராசரி செலவு அளவின் அடிப்படையில், மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் மட்டுமே நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

2001-ஆம் ஆண்டு மே திங்களில் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் தமிழ்நாடு மின் வாரியத்தின் நிதி நிலைமை சீரழிந்த நிலையில் இருப்பதைக் கண்டறிந்தது. 2001–2002-ஆம் ஆண்டில் மின்சார வாரியம் ரூபாய் 5,000 கோடி அளவிற்கு மொத்த நட்டத்தை எதிர்கொண்டிருந்தது. மைய அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு மின்சாரம் மற்றும் நிலக்கரி வாங்கியதற்காக ரூபாய் 1,962 கோடி மின்சார வாரியத்தால் கொடுக்கப்பட வேண்டியிருந்தது. நிதிநிலை மிக அபாயகரமான நிலையில் இருந்ததால், 1.12.2001 முதல் மின் கட்டணத்தை மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயத்திற்கும், மைய அரசு நிறுவனங்களுக்கு தமிழ்நாடு வாரியம் செலுத்த வேண்டிய தொகைகளை அரசே ஏற்க வேண்டிய கட்டாயத்திற்கும் இந்த அரசு தள்ளப்பட்டது. இருந்தபோதிலும், விவசாய பம்பு செட்டுகளுக்கும், குடிசைகளுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்குவது தொடரப்பட வேண்டும் என இவ்வரசு ஆணையிட்டது. அரசினால் 1.12.2001 முதல் செய்யப்பட்ட இந்த மின் கட்டண மாற்றத்தை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உயர்நீதிமன்றம் 14.6.2002 அன்று மின் கட்டண மாற்றத்தை ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்தியதோடு, இனிவரும் காலத்தில் மின் கட்டண மாற்றம் மாநில ஒழுங்குமுறை ஆணையத்தினால் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும் என்று தனது தீர்ப்பில் உத்தரவிட்டது.

### வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி உதவி

மேலும் 2001ஆம் ஆண்டு மார்ச் திங்களில், முந்தைய தி.மு.க. அரசு துரிதப்படுத்தப்பட்ட மின்சார வளர்ச்சித் திட்டத்தின் (Accelerated Power Development Programme) கீழ் நிதி உதவியைப் பெற்றுவிட்டது. இதற்கு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) ஒன்றிற்கு ஏற்பளிக்க வேண்டியிருந்தது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மாநில ஒழுங்குமுறை ஆணையத்தை செயலாக்க வேண்டும். மேலும் 31.12.2003க்குள் அனைத்து நுகர்வோருக்கும் மின் பயனீட்டு அளவுக் கருவிகள் பொருத்தப்பட வேண்டும் என்பதும் தமிழ்நாடு மின்சார வாரியம் மாநில ஒழுங்குமுறை ஆணையத்திடம் மின் கட்டண விகிதத்தை மாற்றி அமைக்க ஒரு விண்ணப்பத்தினை 30.9.2002க்குள் கொடுக்க வேண்டும் என்பதும் இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள். எனவே, இந்த அரசுக்கு வேறு வழி இல்லாமல் போய்விட்டது. எனவே, முந்தைய தி.மு.க. அரசு, மைய அரசின் நிதி உதவியை ஏற்கெனவே பெற்றுவிட்ட நிலையில், நிபந்தனைகளின்படி 2002-ஆம் ஆண்டு ஜனவரியில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

2002-ஆம் ஆண்டு செப்டம்பர் 25-ஆம் தேதி, தமிழ்நாடு மின்வாரியம், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மின் கட்டண மாற்றத்திற்கான விண்ணப்பத்தினை கொடுத்தது. 1998-ஆம் ஆண்டு மைய அரசின் சட்டத்தின்படி, தற்போது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் கட்டண விதிமுறைகளை பின்பற்றி, கட்டண விகித ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்னர், 10.3.2003 அன்று தமிழ்நாடு அரசு விரிவான கொள்கை விளக்கத்தை எழுத்து வடிவில் அளித்து, விவசாயிகளுக்கும் கிராமப்புற குடிசைகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்படுவது தொடரப்பட வேண்டும் என்று அதில் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு மின் வாரியம் மிக மோசமான நிதி நெருக்கடியில் இருக்கிறது என்பதை மனதில் கொள்ள வேண்டும். 2001–2002-ஆம் ஆண்டிற்கான பற்றாக்குறையை சரிசெய்ய, 1.12.2001 அன்று முதற்கொண்டு கட்டண விகிதத்தை மாற்றி அமைத்த பின்னரும், நடப்பு 2002–2003-ஆம் ஆண்டில் ரூபாய் 2,589 கோடி அளவிற்கும், 2003–2004-ஆம் ஆண்டில் ரூபாய் 2,993 கோடி அளவிற்கும் பற்றாக்குறையை தமிழ்நாடு மின் வாரியம் சந்திக்கும். இந்தப் பற்றாக்குறையை சரிசெய்ய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மின் கட்டண மாற்றத்திற்கான விண்ணப்பத்தை தமிழ்நாடு மின் வாரியம் அளித்துள்ளது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையமும் அனைத்துக் கூறுகளையும் கருதிப் பார்த்து, 2003-ஆம் ஆண்டு மார்ச் 16ஆம் தேதி முதல் செயல்படுத்தும்படியான இந்த மின் கட்டண விகித ஆணையைப் பிறப்பித்துள்ளது.

### தமிழ்நாட்டில் மட்டுமே இலவச மின்சாரம்

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தனது ஆணைகளில், விவசாய பம்பு செட்டுகளுக்கான கட்டண விகிதம் மீட்டர் பொருத்தப்பட்டு அதனடிப்படையிலான பயனீட்டளவில் யூனிட் ஒன்றுக்கு 20 பைசா அல்லது மீட்டர் பொருத்தப்படும் வரை விருப்புரிமை அடிப்படையில் ஆண்டொன்றுக்கு ஒரு குதிரை சக்தி பம்பு செட்டுக்கு ரூபாய் 250/– வீதம் எனவும் இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளது. இக்கட்டணம் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் 2003 செப்டம்பர் திங்களில் கட்ட வேண்டியிருக்கும். தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் முடிவு செய்துள்ள இந்தக் கட்டணம் நாடு முழுமையிலும் பம்புசெட்டுகளுக்கான கட்டண விகிதத்தில் மிகக் குறைந்த அளவாகும். மிகப் பெருமளவில் நிதிப் பற்றாக்குறையை தமிழ்நாடு அரசு எதிர்கொண்டுள்ள நிலையில் தனது கடன்பாடுகளை நிறைவேற்ற சிரமப்படும் நிலையிலிருந்தாலும், விவசாயிகளுக்கு அரசின் உறுதியான உதவி அளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசு, பம்பு செட்டுகளைப் பயன்படுத்தும் சிறு மற்றும் குறு விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் அரையாண்டுக்கு ரூ.500/– வீதம் இரு தவணைகளில் 2003-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இருந்து வழங்கப்படக்கூடிய வகையில் ஆண்டொன்றிற்கு ரூ.1000/– பண உதவி செய்யும் என நான் முடிவு செய்துள்ளேன். இதில் 9.41 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறுவர். இது நாடு முழுவதிலும் தமிழ்நாட்டில் மட்டுமே சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்பதனை உறுதி செய்யும்.

இவ்வாறாக 3 குதிரை விசை பம்புசெட்டினை பயன்படுத்தும் ஒரு விவசாயி அரசிடமிருந்து நேரடியாக ரூ.1000/– பண உதவி பெறுவதற்கு தகுதியானவராவார். பின்னர் அவர் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ரூ.750/– கொடுக்க வேண்டும். உண்மையில் அவர் நிகர உதவியாக ரூ.250/–க்கு பண உதவி பெறுவார். இவ்வாறு அவர் தொடர்ந்து இலவசமாக மின்சாரம் பெறுவதோடு மட்டுமன்றி, ரூ.250/– பண உதவியையும் அரசிடமிருந்து பெறுவார். சிறு மற்றும் குறு விவசாயிகளின் பாதுகாப்பிற்கான இவ்வரசின் முழு ஆதரவை எடுத்துக் காட்டுவதோடு, அவர்கள் உண்மையில் கூடுதலாக பண உதவி பெறுவதையும் இது உறுதி செய்யும்.

இலவச மின்சாரம் பெற்று வரும் மொத்தமுள்ள 15.04 இலட்சம் விவசாயிகளில் 9.41 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் இவ்வாறு அரசின் பண உதவியைப் பெறுவார்கள். 1984-ஆம் ஆண்டில் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உருவாக்கிய கொள்கையைத்தான் நாம் இந்த முறையில் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறோம். தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கட்டண விகித ஆணையினால் சிறு மற்றும் குறு விவசாயிகள் பாதிக்கப்படாமல் காக்கப்படுவதை இது உறுதி செய்யும். அரசு எதிர்கொண்டுள்ள பெரும் நிதிச் சுமைகளுக்கிடையே விவசாயிகளின் பாதுகாப்பிற்காக இந்த உறுதியான முடிவை இவ்வரசு எடுத்துள்ளது.

தமிழ்நாடு மின்வாரியத்திற்கு மின்கட்டணத்தைச் செலுத்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவும் வகையில் நேரடி உதவி வழங்கும் இத்திட்டத்தைச் செயல்படுத்த நான் முடிவு செய்துள்ளேன். சட்டப்படியான தேவைகள் நிறைவு செய்யப்படுவதோடு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு முழுப் பாதுகாப்பு அளிப்பதையும் நாம் இதன் மூலம் உறுதி செய்கிறோம். சிறு மற்றும் குறு விவசாயிகள் தொடர்ந்து இலவச மின்சாரம் பெற வழி செய்ய உதவும் இதுபோன்ற ஒரு திட்டம் நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.

### குடிசை வாழ் மக்களுக்கு முழுமையான பாதுகாப்பு

தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளில் ஒரு விளக்கு கொண்ட 14 இலட்சம் குடிசைகள் இலவச மின்சாரம் பெற்று வருகின்றன. தமிழ்நாடு மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம் யூனிட் ஒன்றிற்கு 50 பைசா அல்லது மீட்டர் பொறுத்தப்படும் வரை விருப்புரிமை அடிப்படையில் மாதமொன்றிற்கு ரூ.10/– என்ற கட்டண விகிதத்தை விதித்துள்ளது. கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் நலத்தைப் பாதுகாப்பதற்கு இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, ஒவ்வொரு குடிசைவாழ் குடும்பத்தினருக்கும் ஆண்டொன்றிற்கு ரூ.100/– உதவித்தொகை வழங்கப்படும் என்று நான் முடிவு செய்துள்ளேன். தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் விதிக்கப்படும் கட்டணத்தை குடிசை வாழ் மக்கள் அரை ஆண்டுக்கு ஒரு முறை 2003ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் செலுத்துவதற்கு இந்த உதவித்தொகை பயன்படும். இவ்வாறு குடிசைவாழ் மக்கள் தொடர்ந்து இலவச மின்சாரம் பெறுவர். மீட்டர் கணக்கின் அடிப்படையில் ஒரு மின் விளக்குப் பயன்பாட்டிற்கான மாதாந்திரக் கட்டணம் ரூ.7.50 பைசா ஆகும். ஆண்டொன்றிற்கு இந்தக் கட்டணம் ரூ.90/– இத்தொகையை தமிழ்நாடு மின்வாரியத்திற்குச் செலுத்த உதவி செய்ய அரசு ரூ.100/– வழங்கும். இவ்வாறாக குடிசைவாழ் மக்கள் எந்த வகையிலும் பாதிப்பிற்குள்ளாக மாட்டார்கள்.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் மற்றும் சிறு மற்றும் குறு விவசாயிகள் ஆகியோரது நலனில் இந்த அரசு என்றென்றும் அக்கறை காட்டி வந்துள்ளது. குடிசைவாழ் மக்களுக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் நேரடியாக பண உதவி வழங்கும் இதுபோன்ற திட்டம் நாட்டில் வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இல்லை. இவ்விரு திட்டங்களும் சிறு மற்றும் குறு விவசாயிகளும் குடிசைவாழ் மக்களும் முழுமையான பாதுகாப்பு பெறுவதை உறுதி செய்யும் என்று அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**மாண்புமிகு தமிழக் முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 20.3.2003**

15.3.2003 அன்று மின்சார ஒழுங்கு முறை ஆணையம் தமிழ்நாடு மின்வாரியத்தால் விற்கப்படும் மின்சாரத்திற்கான 16.3.2003 முதல் செயல்பாட்டிற்கு வரும் புதிய கட்டண விகிதங்களை அறிவித்து இருந்தது. தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் தனது ஆணைகளில் விவசாய பம்ப் செட்டுகளுக்கான கட்டண விகிதம் மீட்டர் பொருத்தப்பட்டு அதன் அடிப்படையிலான பயனீட்டு அளவில் யூனிட் ஒன்றுக்கு 20 பைசா அல்லது மீட்டர் பொருத்தப்படும் வரை விருப்புரிமை (Optional basis) அடிப்படையில் ஆண்டொன்றுக்கு குதிரைத் திறன் (1 Horse Power) ஒன்றுக்கு ரூ.250/– வீதம் இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளது. இக்கட்டணம் 6 மாதங்களுக்கு ஒரு முறை என்ற அடிப்படையில் 2003 செப்டம்பர் மாதத்தில் கட்ட வேண்டியது இருக்கும். தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் முடிவு செய்துள்ள இந்தக் கட்டணம் இந்தியாவிலேயே பம்ப் செட்டுகளுக்கான கட்டண விகிதத்தில் மிகக் குறைந்த அளவாகும்.

மிகப் பெருமளவில் நிதிப் பற்றாக் குறையை தமிழ்நாடு அரசு எதிர்கொண்டுள்ள நிலையில் தனது கடன் சுமைகளை நிறைவேற்ற சிரமப்படும் நிலையில் இருந்தாலும், விவசாயிகளுக்கு உதவி அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு பம்ப்செட்டுகளை பயன்படுத்தும் சிறு மற்றும் குறு விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் அரையாண்டுக்கு ரூ.500/– வீதம் இரு தவணைகளில் 2003, செப்டம்பர் மாதத்தில் இருந்து வழங்கப்படக்கூடிய வகையில் ஆண்டொன்றுக்கு ரூ.1,000/– நிதி உதவி அளிக்கும் என்று நான் அறிவித்துள்ளேன். இதனால், 9.41 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்று தெரிவித்து இருந்தேன். இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழ்நாட்டில் மட்டுமே சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவது இதன் வாயிலாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது 5 குதிரை சக்தி பம்ப் செட்டினை பயன்படுத்தும் ஒரு சிறு விவசாயி, அரசிடமிருந்து ரூ.1,000 நிதி உதவி பெற்று பின்னர் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,250 செலுத்த வேண்டும் என்றும், எஞ்சிய தொகையான ரூ.250ஐ தாமாகவே செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையும் அரசு உதவித் தொகையாக அளித்தால் 5 குதிரைத் திறன் உள்ள பம்ப் செட் கொண்ட சிறு மற்றும் குறு விவசாயிகள் அனைவரும் பயன் பெறுவார்கள் என்ற கருத்து பல்வேறு தரப்பினரால் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு முழு பாதுகாப்பினை அளித்து வருகின்ற எங்கள் அரசு, இலவச மின்சாரம் பெறும் விவசாயிகளுக்கு முழுமையான பலனை அளிக்கக்கூடிய இந்தக் கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் அடிப்படையில் தமிழக அரசு 5 குதிரைத் திறன் பம்ப் செட் வைத்துள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000/– என்பது உயர்த்தப்பட்டு ரூ.1250/–ஐ உதவித் தொகையாக வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொருவருக்கும் அரையாண்டுக்கு ரூ.625/– வீதம் இரு தவணைகளில் ஆண்டொன்றுக்கு ரூ.1,250/– வழங்கப்படும். கடுமையான நிதி நெருக்கடிகளுக்கு இடையேயும் விவசாயிகளின் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட எங்கள் அரசு இக்கூடுதல் நிதிச் சுமையையும் தாங்கிக் கொள்ள முடிவு செய்துள்ளது. தமிழகத்திலுள்ள இலவச மின்சாரம் பெறும் அனைத்து சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் உதவும் வகையில்அமைந்துள்ள இந்தச் சலுகையை அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.



# உலக ஒற்றுமை

தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்
கன்னலடா என்சிற்றூர் என்போ னுள்ளம்
கடுகுக்கு நேர்மூத்த துவரை யுள்ளம்!
தொன்னையுள்ளம் ஒன்றுண்டு தனது நாட்டுச்
சுதந்தரத்தால் பிறநாட்டைத் துன்பு றுத்தல்!

ஆயுதங்கள் பரிகரிப்பார், அமைதி காப்பார்,
அவரவர்தம் வீடுநகர் நாடு காக்க
வாயடியும் கையடியும் வளரச் செய்வார்
மாம்பிஞ்சின் உள்ளத்தின் பயனும் கண்டோம்!
தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெலாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே!

– பாரதிதாசன்

# பெண்மையைப் போற்றுவோம்! பெண் சிசுவதையைத் தடுப்போம்!



சமுதாயத்தில் புறையோடிப் போயிருக்கின்ற பழக்கத்தில் பெண் சிசுவதையும் ஒன்று. இது சில மாவட்டங்களில் வேறூன்றிப் போயிருக்கின்றது. இந்த ஆணி வேரை அறுத்தெறிய பலவிதமான திட்டப்பணிகள் மேற்கொள்ளும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். இதன்படி இத்திட்டத்தின் மூலம் பெண் சிசுவதையை ஒழிப்பதற்கு பல்வேறு ஆக்கபூர்வமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெண்களுக்குப் போதிய கல்வி அறிவு இல்லாதது,

குடும்ப வறுமையின் காரணமாக பெண் குழந்தை வளர்ப்பது பொருளாதார சுமை எனக்கருதுதல்,

சில சமூகத்தில் பெண்களின் தாழ்ந்த நிலை,

வரதட்சணை கொடுமை,

பெண் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த பயம்,

ஆண்களால் மட்டுமே சமயச் சடங்குகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற எண்ணம்,

ஒரு சில குடும்பத்தில் தொடர்ந்து பெண் குழந்தை பிறந்தது என்றால் குடும்பத்தில் சாபக்கேடு என்ற நம்பிக்கை,

ஆண்களுக்கு மட்டுமே மூதாதையர்களின் சொத்து வழங்கப்படுவதில் முன்னுரிமை,

வயதான காலத்தில் பெற்றோர்களை ஆண் குழந்தைகளால் மட்டுமே காப்பாற்ற இயலும் என்ற எண்ணம்,



பெண்சிசுவதை என்ற கொடிய செயலுக்கு சொல்லப்படும் காரணங்கள் ஆகும்.

சமுதாயத்தில் நிலவும் பாலினப் பாகுபாடு (Gender disparity)

வாரிசுகளை உருவாக்கிக் கொள்வதில் ஆண்களே பெரிதும் தீர்மானம் செய்யும்நிலை,

பெண் சிசுவதை புரிவோரின் மீது முழு வீச்சில் செயல்படுத்தும்படியான சட்டங்களை பயன்படுத்த போதிய விழிப்புணர்வு இல்லாமை,

மூடநம்பிக்கையும் பழக்கவழக்கங்களும் ஆகியவைகளே (Gender disparity) ஆகும்.

ஆதிகாலத்தில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக மதிக்கப்பட்டார்கள். பெண்கள் பல்வேறு துறைகளில் தமது கடமையினை நிறைவேற்றி உள்ளதாகவும், அதிலும் குறிப்பாக அரசாட்சி செய்தவர்களாகவும், படைவீரர்களாகவும், படைத்தளபதிகளாகவும் பணியாற்றி உள்ளதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

ஆனால் அதனைத் தொடர்ந்து வந்த பிற்காலத்தில் பெண்களுக்கு நேரிட்ட கொடுமைகள் கணக்கிட முடியாது. இருப்பினும் பெண்கள் பல்வேறு துறைகளில் முன்னேறி வருகிறார்கள். குறிப்பாக பேருந்து ஓட்டுநராக, விமான ஓட்டியாக, விஞ்ஞானியாக, சாதனைகள் படைக்கும் விளையாட்டு வீராங்கனையாக, பார்போற்றும் சமூக சேவகர்களாக, உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களாக, நாட்டின் தலைவர்களாக இப்படி இன்னும் பல துறைகளில் சாதனைகள் புரிந்து வருகிறார்கள். இருப்பினும் எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் அடையவில்லை.

வரதட்சணைக் கொடுமை,

கல்வி மறுப்பு,

சதி எனும் உடன் கட்டை,

சொத்துரிமை மறுப்பு,

சமூக மூட நம்பிக்கை மற்றும் கட்டுப்பாடுகள்,

ஊனம்,

புகுந்த வீட்டினரால் துன்புறுத்தப்படுவது,

விதவையானால் ஆதரவற்றநிலை,

பொறுப்பற்ற கணவன்மார்கள்,

குழந்தைப் பேறின்மை,

கணவன் மறுமணம் செய்தல்,

சமுதாயத்தில் பாதுகாப்பற்ற நிலை,

பணிபுரியும் பெண்களிடம் பாலியியல் பலாத்காரம்,

குடிகாரக் கணவன்,

குடும்ப பாரம்,

இறுதியில் பெண் சிசுவதை என இன்றைக்கும் பல பெண்கள் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகி வருகின்றார்கள்.

பிறக்கின்ற நான்கு குழந்தைகளில் ஒரு குழந்தை எடை குறைவாகப் பிறக்கின்றது. 1980-ஆம் ஆண்டு 93 ஆக இருந்த சிசு மரண விகிதம் 1990இல் 59 ஆகவும் 2000த்தில் 51 ஆகவும் குறைந்தது. அதன்பின்னர் எந்த முன்னேற்றமும் இல்லை. அதே நிலை நீடித்து வருகிறது. பிறந்த ஒரு மாத காலத்திற்குள் குழந்தைகள் இறப்பதும், குறிப்பாகப் பெண் குழந்தைகள் இறப்பதும், பேறுகால தாய்மரணமும் தொடர்ந்து நிகழ்ந்துக்கொண்டே இருக்கிறது. எனவே ஆபத்தான அறிகுறிகள் உள்ள தாய்மார்களையும் குழந்தைகளையும் தனி கவனம் செலுத்தி காப்பாற்ற வேண்டியது மிகவும் அவசியம். மேலும் இது சார்ந்த இலக்குகளில் தொடர்ந்து கவனமுடன் பணியாற்ற வேண்டியது தலையாய கடமை எனக் கருதி இத்திட்டத்தின் மூலம் பல ஆக்கபூர்வமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளால் அவதியுறும் பெண்களுக்கு நம் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு பெண் சிசுவதை என்னும் கொடுஞ்செயலிலிருந்து விடுபட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, தமிழ்நாட்டில் பெண் சிசுவதை நடைபெறும் மாவட்டங்களில் பெண்சிசுவதைத் தடுப்பு விழிப்புணர்வு முகாமினை நடத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள். இதன்படி சேலம், நாமக்கல், ஈரோடு, தருமபுரி, தேனி மற்றும் மதுரை மாவட்டங்களில் பெண் சிசுவதை தடுப்பு விழிப்புணர்வு முகாம் நடத்த ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ பெண் சிசுவதை தடுப்பு விழிப்புணர்வு முகாமின் தொடர் நடவடிக்கையாக கீழ்க்கண்ட பணிகள் சேலம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ பெண் சிசு வதை நடைபெறும் கிராமங்களில் வசிக்கும் மக்களிடையே கணக்கெடுப்பு

★ மாவட்ட அலுவலர்களுக்கு மாவட்ட அளவிலான ஒரு நாள் பணியரங்கம்

★ ஒன்றிய அலுவலர்களுக்கான ஒன்றிய அளவிலான ஒரு நாள் பணியரங்கம்

★ ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், சமுதாய சுகாதாரச் செவிலியர்கள், காவல் துறை அலுவலர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், ஊட்டச்சத்து பணியாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்களுக்கான பணியரங்கம்

★ மாவட்ட அளவிலான விழிப்புணர்வுப் பேரணி

★ வட்டார வாரியாக 12 வட்டாரங்களில் விழிப்புணர்வுப் பேரணி

★ பெண் சிசுவதை விழிப்புணர்வு தொடர்பாக உரிய விளம்பரங்கள் தயாரித்து விநியோகம் செய்தல்

★ பெண் சிசுவதை நடைபெறும் 12 வட்டாரங்களிலும் நாடகங்கள், தெருக்கூத்துகள் நடத்துதல்

★ பாலின சமன்பாடு குறித்த வயது முதிர்ந்த மூத்த குடிமக்களுக்கும், ஊர் பெரியவர்களுக்கும் ஆலோசனைக் கூட்டங்கள்

★ புதுமணத் தம்பதிகள், மாமனார், மாமியார்கள், தாதிகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கான ஆலோசனைக் கூட்டங்கள்

★ துறைவாரியான கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளல்

★ பெண் சிசுவதை தடுப்பு விழிப்புணர்வு முகாம் நடத்தியபின் கருத்துக் கணிப்பு மற்றும் அரசிற்கு அறிக்கை தாக்கல் செய்தல்

மேற்கண்ட பணிகளைத் தொடக்கி வைக்கும் பொருட்டு சேலம் மாவட்டத்தில் பெண்சிசுவதை தடுப்பு விழிப்புணர்வு முகாம் மற்றும் பேரணி 4.1.2003 அன்று நடந்தது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் கல்வி அமைச்சர் திரு. செ. செம்மலை அவர்களும் மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்களும் பங்கேற்று துவக்கி வைத்தனர். இந்த முகாமின் போது மாவட்ட அளவிலான பேரணி, கூட்டம், பணியரங்கு, பேச்சுப்போட்டி, கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றின் மூலம் பெண்சிசுவதை தடுப்பு பற்றிய பல்வேறு கருத்துகள் விவாதிக்கப்பட்டன. கீழ்க்கண்ட முக்கிய கருத்துகளை அனைவரும் மனதிற் கொண்டு செயல்பட வேண்டும்.

• பெண்சிசுவதை தடுப்பதற்கு ஏதுவாக பிறப்பு/இறப்புகள் உரிய முறையில் பதிவு செய்யப்படுகிறதா என்பதை தீவிரமாக கண்காணிக்க வேண்டும்.

• தவறுகள் செய்வோர் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

• பெண்களுக்கென இயற்றப்பட்டுள்ள சட்டங்கள், பெண்களுக்கான சொத்துரிமை, பெண்ணின் திருமண வயது, பெண் உரிமை போன்ற பல்வேறு சட்டங்களை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

• சிசு ஆணா பெண்ணா என்பதை கருவிலேயே கண்டறிந்து தவறாக பயன்படுத்துவோரை தண்டிக்கும் சட்டத்தை (The Pre-natal Diagnostic Technique regulation and prevention of misuse-1994) நன்கு நடைமுறைப்படுத்த வேண்டும்.

• குடும்ப வறுமையின் காரணமாக பெண் குழந்தை வளர்ப்பது பொருளாதார சுமை என்ற எண்ணத்தை போக்கிடும் வகையில் வங்கிகள் மூலமும் சுய உதவிக் குழுக்கள் மூலமும் போதிய நிதி உதவி பெற்று சுயதொழில் செய்ய ஊக்குவிக்க வேண்டும்.

ஐ.நா. சபையின் குழந்தைகள் வாழ்வுரிமை மீதான நடவடிக்கை சட்டமானது (Convention on the rights of the child 20.11.1989) குழந்தைகளில் ஆண் பெண் என்ற பாகுபாடு கலையப்பட்டு கல்வி, உணவு போன்ற பல அடிப்படை வசதிகள் மற்றும் சமஉரிமை அளிக்க வேண்டும் என வலியுறுத்தி கூறுகிறது.

•பெண் சிசுவதை என்ற கொடிய செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால்...

• பெண்களுக்கான சொத்துரிமையை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

• வரதட்சணைக் கொடுமையை ஒழிக்க மேற்கொள்ளப்படும் தீவிர நடவடிக்கைக்கு சமுதாயம் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்

• சிறு குடும்ப நெறியை ஊக்குவிக்க வேண்டும்.

• வளர்இளம் பெண்கள் தன்னம்பிக்கை வளர்ச்சி, ஆளுமை வளர்ச்சி மற்றும் தன்னுரிமை மேம்பாடு அடைய ஊக்குவிப்பதோடு உதவி புரிய வேண்டும்.

எனவே பெண்சிசுவதை தடுப்பு விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டாலும் சமுதாய அமைப்புகளும் தொண்டு நிறுவனங்களும் அரசுத் துறைகளோடு ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் இக்கொடிய செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

நாட்டிற்கும் வீட்டிற்கும் விளக்காய் திகழ்பவள் பெண்!
வருங்கால வாரிசை உருவாக்கித் தருபவள் பெண்!
எனவே பிறந்ததிலிருந்து பெண் குழந்தையைப்
பேணிக்காப்போம்! நாட்டிற்கும் வீட்டிற்கும் பெருமை
சேர்ப்போம்!

*– திரு. ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,*
*திட்ட ஒருங்கிணைப்பாளர்,*
*உலக வங்கி உதவி பெறும்*
*ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்*
*– 3வது திட்டம்.*

• • •

# புதுயுகம் நோக்கித் தமிழகம் – குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க புரட்சிகர நடவடிக்கை

டாக்டர் **மூ. இராசாராம்,** இ.ஆ.ப., - தொழிலாளர் ஆணையர்



எதிர்கால தலைமுறை ஏற்றமுற அமைந்திட நம் நாட்டின் இன்றைய இளம் தலைமுறை குழந்தைச் செல்வங்கள் கல்வி கற்பதும், அறிவாற்றல் பெறுவதும் இன்றியமையாதது ஆகும்.

குழந்தைகள், சீரான எதிர்காலத்திற்கு வலுவான அடித்தளமாகத் திகழக்கூடியவர்கள் ஆவார்கள். இன்றைய குழந்தைகள் நாளைய தலைமுறைகள்.

நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குழந்தைகள் முன்னேற்றம் – குழந்தைகளின் வளர்ச்சி – குழந்தைகளின் கல்வி – குழந்தைகளின் ஆரோக்கியம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு குழந்தைகள் – மகளிர் முன்னேற்றத்திற்காக 18 அம்சத் திட்டம் என்கிற உன்னத திட்டத்தினை வகுத்துச் செயல்படுத்தி வருகிறார்கள்.

நாடு போற்றும் நல்ல திட்டமாகிய இந்த 18 அம்ச திட்டத்தில் – 14–வது அம்சம் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கும் திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்த வழிவகுப்பது ஆகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணங்களை ஈடேற்றும் தொழிலாளர் நலத்துறையின் மூலம் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு மற்றும் முறைப்படுத்தும் நடவடிக்கைச் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த உலகின் மனிதாபிமானமற்ற பெருந் தீமைகளில் ஒன்று குழந்தைத் தொழிலாளர் முறை. கல்விக்கும், விளையாட்டிற்கும், குதூகலத்திற்குமான குழந்தைப் பருவத்தில் அவர்கள் தொழிற்சாலைகளையும், வணிக நிறுவனங்களையும் நோக்கி அவர்கள் அனுப்பப்படுகின்றனர். நமது நாட்டின் அறிவும், வலிமையும் பொருந்திய தலைமுறையாக உருவாக வேண்டிய இலட்சக் கணக்கான குழந்தைகள் கடும் உடல் உழைப்பின் சுமையில் நசுக்கப்படுகின்றனர். இக்குழந்தைகள் உடல் உழைப்பின் நிர்ப்பந்தத்திலிருந்து விடுவிக்கப்பட்டு அவர்களது இயல்பான ஆளுமை வளர்ச்சியை உறுதி செய்வது நமது தலையாய கடமை.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் அடிப்படையில் தமிழ்நாட்டை சிறந்த மாநிலமாக்குவதற்கான திட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல் ஒரு முக்கிய அம்சமாக இடம் பெற்றுள்ளது.

1986–ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் (ஒழித்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் அபாயகரமான தொழில்களில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளைப் பணியில் அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது. மற்ற அபாயகரமற்ற தொழில்களில் பணி முறைப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டம் ஒரு மத்திய அரசு சட்டமாகும். தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ள 1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம் மற்றும் 1958 ஆம் ஆண்டு உணவு நிறுவனங்கள் சட்டம் ஆகியவற்றில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

1991ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 5.78 இலட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் தொடங்குவதற்காக 1995–ஆம் ஆண்டில் வேலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம், கோவை, திருநெல்வேலி, விருதுநகர், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மாவட்ட நிர்வாகத்தால் குழந்தைத் தொழிலாளர் குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. மேற்கண்ட மாவட்டங்களில் 2,45,796 குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளதாக அறியப்பட்டது.

இந்திய உச்சநீதிமன்றம் 10.12.96 அன்று வழக்கு எண்.465/86–இல் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் 1997–ஆம் வருடம் ஏப்ரல் மாதம் நடத்திய கணக்கெடுப்பின்படி, அபாயகரமான தொழிலில் 10,118 குழந்தைகளும், அபாயகரமற்ற தொழிலில் 9,052 குழந்தைகளும் கண்டறியப்பட்டனர். அனைவருக்கும் கல்வி இயக்ககம் (சர்வ சிக்ஷ அபியான்) 2001–ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 3.49 இலட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளதாகக் கண்டறியப்பட்டது. ஆனால், 30.9.2002–இல் பள்ளி செல்லாக் குழந்தைகள் 2.12 இலட்சம் குழந்தைகள் உள்ளனர் என்று அந்த இயக்ககம் தெரிவித்துள்ளது.

தற்போது குழந்தைத் தொழிலாளர்கள் கணக்கெடுப்புத் தொடர்பாகக் கல்வித்துறை மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## சட்ட அமலாக்கம்

குழந்தைத் தொழிலாளர் முறை ஒழித்தல் தொடர்பாகக் கீழ்க்கண்ட நலச்சட்டங்கள் தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் துறை அலுவலர்களால் அமலாக்கப்பட்டு வருகின்றன.

1. குழந்தைத் தொழிலாளர் (ஒழித்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986
2. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் 1961
3. பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் 1966
4. தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம் 1947
5. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் 1958
6. தொழிற்சாலைகள் சட்டம் 1948

இந்தச் சட்டங்களை முறைப்படி நிறைவேற்றி வருவதால்,

1. பள்ளிகளிலிருந்து விடுவிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் சிறப்புக் கல்வி பெற வசதி மற்றும் அவர்களுக்கு மதிய உணவு, இலவசச் சீருடைகள், புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், உதவித் தொகை ஆகியவை கிடைக்கின்றன.

2. ஆபத்தான தொழில்களிலிருந்து குழந்தைத் தொழிலாளர்கள் அகற்றப்படுகின்றார்கள்.

மொத்தத்தில் குழந்தைகளின் முழு நலனையும் பாதுகாக்க மாண்புமிகு தமிழக முதல்வரின் வழிகாட்டுதலுடன் பல்வேறு சிறப்புப் பணிகள் தமிழகத்தில் செவ்வனே நடந்துவருகின்றன.

இந்தப் பணியில் அரசுடன் இணைந்து கீழ்க்கண்ட தொண்டு நிறுவனங்கள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றன. அவை:

1. அருணோதயா
2. க்ரை (சைல்ட் ரிலீப் அண்ட் யு)
3. சங்கல்ப்
4. டான்பாஸ்கோ அன்பு இல்லம்
5. ஜீவஜோதி
6. கருணாலயா சோசியல் சர்வீஸ்
7. செண்ட்ரீடா
8. அப்டார்ப்
9. ஐ.சி.சி.டபிள்யு.
10. கிராமியக் கல்வி மற்றும் வளர்ச்சி மையம் (Centre for Rural Education and Development)

இவ்வாறாக, குழந்தைத் தொழிலாளர் முறைகள் ஒழித்தல் தொடர்பாக நலச் சட்டங்கள், தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் துறை அலுவலர்களால் அமலாக்கப்பட்டு வருகின்றன.

★ ★ ★



*அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் துறை உயர் அதிகாரிகள், துறைச் செயலாளர்கள் ஆகியோருடன் நேரடியாகப் பேசி அரசுப் பணிகளைத் துரிதப்படுத்தும் வசதியுடைய வீடியோ கான்பரன்சிங் **(Video Conferencing)** முறையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.3.2003 அன்று துவக்கி வைத்தார்.*



# ஃபுளோரோசிஸ் நோயிலிருந்து பாதுகாப்பும், நலவாழ்வும்

உடல் ஆரோக்கியத்திற்கும், நல வாழ்விற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மிகவும் அவசியம். மக்கள் பயன்படுத்தும் குடிநீரில் மாசுப் பொருட்களும் நோய்க் கிருமிகளும் இருக்கக்கூடாது.

நீரைக் கொதிக்க வைப்பதன் மூலமோ அல்லது குளோரின் சேர்ப்பதன் மூலமோ நோய்க்கிருமிகளை முற்றிலும் அழித்து பாதுகாக்கப்பட்ட குடிநீரைப் பெறமுடியும்.

ஆனால் நீரில் இருக்கும் பிற மாசுப் பொருட்கள் பல வகைப்பட்டதாகும். இவற்றால் ஏற்படும் தீங்குகளும் வெவ்வேறு விதமாக இருக்கும்.

நீரில் கரைந்திருக்கும் பொருட்களால் ஏற்படும் உடல் நலக் கேடுகளில் ஃபுளூரைடு உப்பு ஏற்படுத்தும் கேடு முதன்மையானதாகக் கருதப்படுகிறது. இந்த நோயினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.



### ஃபுளூரைடு என்பது என்ன?

ஃபுளூரின் என்பது இயற்கையாக இருக்கும் 92 தனிமங்களில் ஒன்று ஆகும். ஃபுளூரின் மிகவும் வீரியத்துடன் செயல்படும் தனிமம் ஆகும். இது பிற தனிமங்களுடன் வினைபுரிந்து ஃபுளூரைடு என்ற உப்பு உருவாகிறது. கால்சியம் என்கிற உலோகத்துடன் இணைந்து 'கால்சியம் புளோரப்படைட்டு (**Calcium fluorappatite**)' என்கிற தாதுப் பொருளாக பூமியில் காணப்படுகிறது.

*ஃபுளூரின் என்னும் தனிமத்தைக் கண்டறிந்தவர் பேராசிரியர் ஹென்றி மொய்சன் ஆவார். இவர் இதற்காக நோபெல் பரிசு பெற்றுள்ளார்.*

ஃபுளூரைடு உப்பு சில குறிப்பிட்ட பாறைகளில் அதிக அளவில் காணப்படுகிறது. ஃபுளூரைடு உள்ள தாதுக்கள் அல்லது பாறைகள் இருக்கும் நிலப்பகுதியில் உள்ள நிலத்தடி நீரில் ஃபுளூரைடு கரைவதால் அந்நீரில் ஃபுளூரைடு உப்பு அதிகமாக இருக்கும். எனவே இப்பகுதிகளில் புளோரோசிஸ் எனும் நோயும் அதிகமாகக் காணப்படும்.

குடிநீரில் ஃபுளூரைடு உப்பு அதிகமாக இருப்பது பொதுவாக மாசுபடும் நிகழ்ச்சி அல்ல. இது ஒரு இயற்கை செயல்பாடு ஆகும்.

நீரின் நிறம், மணம், சுவை இவற்றைக் கொண்டு நீரில் ஃபுளூரைடு உப்பு அதிகமாக உள்ளதா என்று கண்டறிய இயலாது. நீரைக் கொதிக்கவைப்பதன் மூலமும் நீரிலிருந்து ஃபுளூரைடு உப்பை அகற்ற முடியாது.

### ஃபுளூரைடு கலந்துள்ள நீர் ஆதாரங்கள்

பொதுவாக ஃபுளூரைடு நிலத்தடி நீரிலேயே காணப்படுகிறது.

கால்சியம் (அ) மக்னீசியம் கலந்துள்ள கடின நீர் உள்ள பகுதிகளில் புளோரோசிஸ் நோய் குறைவாக காணப்படுகிறது.

நீரின் காரத்தன்மைக்கும் புளோரோசிஸிற்கும் நேரடி தொடர்பு உண்டு. நீரில் ஃபுளூரைடின் அளவு லிட்டருக்கு 2 மில்லி கிராம் என்கிற அளவை விட அதிகமாக இருப்பின் அந்த நீரில் கடினத்தன்மை குறைவாக இருக்கும். காரத்தன்மை அதிகமாக இருக்கும். இத்தகைய நீரில் உள்ள பைகார்பனேட்டு உப்பின் அளவும் அதிகமாக இருக்கும்.

இயற்கையான நீரில் கார்பனேட்டு மற்றும் பைகார்பனேட்டு உப்புக்கள் அதிகம் இருப்பின், ஃபுளூரைடு கலந்துள்ள கனிமங்களிலிருந்து ஃபுளூரைடு கசிந்து நீரில் அதிகமாகக் கரைந்து காணப்படும்.

*திரு. என். வாசுதேவன், இ.ஆ.ப.,மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5*

*திரு. எஸ்.தர்மர், இணைத் தலைமைப் பொறியாளர், திட்டம் மற்றும் வரைவுப் பிரிவு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5*

*திரு. அ. குலசேகரன், தலைமை நீர் ஆய்வாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5*

### உடலில் ஃபுளூரைடு கலந்து செயல்படும் விதம்

நமது உடலில் ஃபுளூரைடு நீர், உணவு, காற்று (தொழிற்சாலை வாயுக்கள்), பற்பசை (ஃபுளூரைடு உள்ள பற்பசை), சில முகப்பூச்சு (அழகு பசைகள்), சில மருந்து பொருள்கள் மூலம் கலக்கிறது.

மனித உடலில் ஃபுளூரைடு விரைவில் உறிஞ்சப்படுகிறது. நீரில் ஃபுளூரைடு முழுவதும் மனித உடலால் கிரகிக்கப்படுகிறது. உணவில் உள்ள ஃபுளூரைடில் 80 சதவிகிதம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கால்சியம் அதிகமுள்ள எலும்பு, பல் போன்ற பகுதிகள் அதிக அளவில் ஃபுளூரைடுடன் வினைபுரியும்.

புளோரோசிஸ் நோய் வர மூல காரணம் நீரில் ஃபுளூரைடு கலந்திருப்பதே ஆகும். எனினும் புளோரோசிஸ் நோயின் தன்மை கூடுவதும் குறைவதும் வேறு சில காரணங்களையும் பொறுத்து உள்ளது.

இதற்கு நீரின் காரத்தன்மை, நாம் உட்கொள்ளும் கால்சியத்தின் அளவு, உணவிலுள்ள விட்டமின் 'சி' அளவு, மாலிப்டினத்தின் அளவு, அலுமினியம் மற்றும் பாஸ்பேட்டின் அளவு ஆகியவை மறைமுகக் காரணங்களாக உள்ளன.

கால்சியம் எனும் தனிமம் கால்சியம் பாஸ்பேட்டு (அ) கால்சியம் கார்பனேட்டாக இருப்பின் உடலில் ஃபுளூரைடு உறிஞ்சப்படுவது 50 சதவிகிதம் குறைகிறது. சில உப்புக்களுடன் இணைந்திருக்கும் பொழுது ஃபுளூரைடு கரைதிறன் குறைவாக இருக்கும். எனவே அது மனிதக் கழிவுகள் மூலம் அதிகம் வெளியேறுகிறது.

குடல், கால்சியம், ஃபுளூரைடை அதிகம் உறிஞ்சாது. ஆனால் பாஸ்பேட்டு இருந்தால் அது ஃபுளூரைடு உறிஞ்சும் தன்மையை அதிகரிக்கிறது.

உணவில் உள்ள ஃபுளூரைடு அங்ககப் பொருள்களுடன் இணைந்து காணப்படும். சிலவகை மருந்துகளிலும் ஃபுளூரைடு அதிகம் கலந்திருக்கலாம். இவ்வாறு காணப்படும் ஃபுளூரைடும் மனித உடலில் செயல்பட்டு புளோரோசிஸ் நோய் ஏற்படக் காரணமாக இருக்கலாம்.

ஃபுளூரின் சிறுநீரின் மூலம் வெளியேற்றப்படுகிறது. தோலில் படிகிறது. வியர்வையின் மூலமும் வெளியே வருகிறது. மனிதக் கழிவில் வெளிப்படுகிறது. பெருமளவு ஃபுளூரைடு சிறுநீரின் மூலமும் வெளியேறுகிறது.

### ஃபுளூரைடிற்கு வழிகாட்டி அளவு

இந்திய தர நிர்ணய அளவுப்படி, நீரில் அதிக அளவு அனுமதிக்கக்கூடிய ஃபுளூரைடின் அளவு 1.0 மில்லிகிராம்/லிட்டர் (mg/L) ஆகும். மாற்று நீர் கிடைக்காதபோது, அதிகபட்ச அளவு 1.5 மில்லிகிராம்/லிட்டர்(mg/L) ஃபுளூரைடு இருக்க அனுமதிக்கலாம்.

### புளோரோசிஸ் நோய்

ஃபுளூரைடு அதிகமுள்ள நீரைப் பருகுவதால் கீழ்க்கண்டவாறு மூன்று வித புளோரோசிஸ் நோய் ஏற்படலாம்.

1. பல் புளோரோசிஸ்
2. எலும்பு புளோரோசிஸ்
3. எலும்புசாரா புளோரோசிஸ்

ஊட்டச்சத்து குறைவாக உள்ள மக்கள் ஃபுளூரைடு அதிகமுள்ள நீரைப் பருகுவதால் இந்நோயினால் எளிதாக பாதிக்கப்படலாம்.

### பல் சம்பந்தப்பட்ட புளோரோசிஸ்

கருவிலுள்ள குழந்தையையும் மற்றும் பல் உருவாகும் பருவத்தில் உள்ள குழந்தைகளையும் இந்நோய் பாதிக்கிறது.

குழந்தைகளின் பற்களில் கறை படிதல் புளோரோசிஸ் நோயின் முதல் அறிகுறியாகும்.

கறை படிந்த பற்களில், பற்களின் மேற்பூச்சு சிதையும்; பொலிவிழக்கும்; கடினத் தன்மை பெறும்; எளிதில் சிதையக் கூடியதாகவும், சுண்ணாம்பு போன்றும் மாறும்.

இந்நோயின் பாதிப்பால் முதலில் பற்களில் மஞ்சள் நிறம் உருவாகும். பின் பழுப்பு (காவி) நிறம் தோன்றும். இக்கறைகள் கிடைமட்டக் கோடுகளாக தென்படும்.

இந்த பழுப்புப் படிவம் வட்டப் புள்ளிகளாகவோ, கிடைமட்டக் கோடுகளாகவோ காணப்படும். நோயின் தீவிரம் அதிகம் ஆகும் பொழுது பற்கள் கறுப்பாக மாறும்.

இந்தப் பற்களில் நாளடைவில் நுண்குழிகளும் துளைகளும் ஏற்பட்டு பற்கள் சிதைந்து விடும். பற்களை முழு வளர்ச்சி பெறாமலேயே இழக்க நேரிடும்.





இந்தப் பழுப்பு மற்றும் காவிநிறக் கறை, ஈறுகளை ஒட்டி தோன்றி பற்களின் மேல்பூச்சில் பரவியிருக்கும். இந்த கறைகளை அகற்ற இயலாது. பாதிக்கப்பட்ட பற்களை சரிசெய்ய இயலாது. பால் பற்களும் புதிதாக முளைக்கும் பற்களும் புளோரோசிஸ் நோயினால் பாதிக்கப்படலாம்.

ஒரு நபரின் முதல் பன்னிரண்டு வயதுக்குள் ஃபுளூரைடு பாதிப்பு இல்லை எனில், பல் புளோரோசிஸ் அதன்பின் ஏற்படவாய்ப்பில்லை. வளர்ச்சியடைந்த மனிதனுக்கு, ஃபுளூரைடின் தாக்கத்தால் பற்களில் பாதிப்பு ஏற்படாது. ஆனால் எலும்பு மற்றும் எலும்பு சாரா பகுதிகளில் பாதிப்பு ஏற்படும்.

பல் சொத்தை என்பது பற்களின் மேல் உணவு தங்கி, கிருமிகள் அதைச் சிதைத்து, அமிலம் உண்டாகி, அதனால், பல் சேதம் அடைவதே ஆகும். பற்களின் வேர்களில் பாதிப்பு மற்றும் பல் சொத்தை போன்றவை பற்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ளாமல் இருப்பதால் ஏற்படுகிறது.

பல் சொத்தைக்கும் புளோரோசிஸ் நோயிற்கும் சம்பந்தம் இல்லை.

### எலும்பு சம்பந்தப்பட்ட புளோரோசிஸ்

இந்நோய் வாலிபப் பருவத்தில் உள்ளோரை எளிதில் பாதிக்கிறது. ஃபுளூரைடு அதிகம் உள்ள நீரைத் தொடர்ந்து குடிக்கும்பொழுது நோயின் தாக்கம் அதிகரிக்கிறது. எலும்பு சம்பந்தப்பட்ட புளோரோசிஸ் நோய் எல்லா வயதினரையும் பாதிக்கும்.

இந்நோயின் ஆரம்பக்கட்ட அறிகுறி கழுத்தில் வலி மற்றும் கழுத்துத் தசைகள் இறுக்கமாகுதல், முதுகெலும்பில் வலி, மூட்டுக்களில் வலி போன்றவையாகும்.

கை, கால் அசைவுகள் கஷ்டமாக இருக்கும். நோயின் தன்மை அதிகரிப்பதால் முதுகுத் தண்டும் பாதிக்கப்படுகிறது/முதுகெலும்பும் ஒரு தொடர் எலும்பு போல் மாறிவிடும். இதை போக்கர் முதுகு, "poker back" என்று அழைக்கின்றனர்.

முதுகுத் தண்டின் தசைப்பிடிப்பு நாள்களுக்கு விறைப்புத் தன்மை ஏற்பட்டு, அதன் விளைவாக விரல் எலும்புகளும் பாதிக்கப்படுகின்றன. இதனால் விரல் அசைவுகள் பாதிக்கப்படுகின்றன. மார்பு எலும்புகள் பாதிக்கப்படுகையில் சுவாசிப்பதும் கஷ்டமாக இருக்கும்.

இடுப்பு மூட்டுக்களும் பாதிக்கப்பட்டு நோயாளிகள் முடக்க நிலையை அடைகின்றனர். புளோரோசிஸ் நோயினால் ஏற்படும் முடக்கத்தினால் மூட்டுக்களில் விறைப்புத் தன்மை ஏற்பட்டு முதுகுத் தண்டு வளைந்து காணப்படும்.

எலும்புகளின் அடர்த்தி அதிகரிக்கும், எடையும் கூடும். எலும்பின் எக்ஸ்–கதிர் படத்தின் மூலம் எலும்பு பாதிக்கப்படுவது தெளிவாகத் தெரியும். அதிக ஃபுளூரைடு உள்ள பகுதிக்கு ஒருவர் புதிதாகக் குடியேறினால் எலும்பு சம்பந்தப்பட்ட புளோரோசிஸ் நோயின் பாதிப்பு சிறிது சிறிதாக ஏற்பட்டு பின் முற்றிய நிலையை அடையலாம்.

### எலும்புசாரா பிற உடற்பகுதி புளோரோசிஸ்

எலும்பு சாரா புளோரோசிஸ் நோயை கீழ்க்கண்ட அறிகுறிகளின் மூலம் குறுகிய காலத்திலேயே கண்டறிய முடியும்.

- கழுத்து, பின்புறம், மூட்டு மற்றும் தோள் பட்டைகளில் வலி
- குடல் வாயுக் கோளாறுகள்
- தசை வலி மற்றும் இரத்த சோகை

உடம்பில் கால்சியம் எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் புளோரோசிஸ் நோயின் பாதிப்பு ஏற்படும். ஃபுளூரைடு சேர்க்கையினால் திசுக்கள், நரம்புகள் மற்றும் இரத்தமும் பாதிக்கப்படலாம். இத்தகைய பாதிப்புக்களை எலும்புசாரா புளோரோசிஸ் என்று அழைக்கிறோம். எலும்பு சாரா புளோரோசிஸ் மூலம் எலும்புக் கூட்டில் ஒட்டியுள்ள தசைகள், இரத்தச் சிவப்பு அணுக்கள், குடல் உறிஞ்சுகள் ஆகியவையும் பாதிக்கப்படும்.

குடலிலுள்ள 'மைக்ரோவில்லி' என்கிற தந்துகி போன்ற உறிஞ்சிகள் அழிவதும் சில சமயங்களில் திசுக்கள் முழுவதும் அவற்றின் தன்மையை இழப்பதும் ஏற்படும்.

எலும்புசாரா புளோரோசிஸ் எல்லா வயதினரையும் பாதிக்கும்.

### குடல் வாயுக் கோளாறுகள்:

கடும் வயிற்றுவலி, பேதி, மலம்கட்டுதல், வாயு, ஏப்பம், காய்ச்சல் இருப்பது போன்ற உணர்வு, வாய் துர்நாற்றம், பசியின்மை ஆகியவை ஏற்படும்.

### நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள்:

நடுக்கம், சோர்வு, கால் மற்றும் கைவிரல் நுனிகளில் கூச்ச உணர்வு, அதிக தாகம், அதிக அளவு சிறுநீர் வெளியேற்றம் போன்றவை ஏற்படும்.

### தசை கோளாறு:

தசை நலிவு, தசை இறுக்கம் மற்றும் வலி.

### ஒவ்வாமை கோளாறு:

தோலின் மீது வலியுடன் கூடிய தடிமன் ஏற்படுதல். இது சாதாரணமாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும். ஃபுளூரைடு கலக்காத நீரைப் பருகினால், பாதிப்பு பத்து நாட்களில் சரியாகிவிடும்.

### சிறுநீர் குழாயில் கோளாறு:

சிறுநீர் வெளியேறும் அளவு குறையும். சிறுநீர் சிவப்பு நிறமாக இருக்கும். சிறுநீர் உறுப்பு பகுதியில் நமைச்சல் இருக்கும்.

இரத்தச் சிவப்பு அணுக்கள் பாதிக்கப்படும். இரத்த சோகை நோய் ஏற்படும். எலும்பின் பிணைப்பு தசை பாதிக்கப்படும்.

### இரத்தநாளம்:

கால்சியமும், ஃபுளூரைடும் சேர்ந்த உப்புப் படிவம் கதிர்வீச்சு படத்தில் தெரியும்.

### விந்து:

உயிர் அணு குறைந்து மலட்டுத்தன்மை உருவாகும். விந்தில் உள்ள உயிரணுக்களின் எண்ணிக்கை குறைவதோடு விந்து உயிர் தன்மை இல்லாமல் இருக்கும். இரத்தத்தில் 'டெஸ்டோஸ்டெரோன்' என்ற சுரப்பியின் அளவு குறையும்.

### கரு:

கருத்தரித்த பெண்கள் அதிக ஃபுளூரைடு உள்ள உணவு உண்பதாலோ நீரைப் பருகுவதாலோ கரு சிதைவுறும். மேலும் பிறக்கும் குழந்தைகளின் மூளைத்திறன் பாதிக்கும்.

மேற்கண்ட அறிகுறிகள் யாவும் மற்ற காரணங்களாலும் ஏற்படலாம். ஃபுளூரைடு குறைவாக உள்ள நீரைப் தொடர்ந்து பருகினால் எலும்பு சாரா புளோரோசிஸ் நோயின் பாதிப்பிலிருந்து சிறிது சிறிதாக விடுபடலாம்.

### மூடநம்பிக்கைகள்

கீழ்கண்ட அனுமானங்களின் அடிப்படையில் புளோரோசிஸ் நோய் ஏற்படும் என்று கருத வேண்டாம்.

- கத்தரிக்காய் கடிப்பதன்மூலம்
- பச்சை வாழைக்காய் சாப்பிடுவதன் மூலம்
- பனங்காய், பனை இலை கடிப்பதன் மூலம்
- தென்னை இலை கடிப்பதன் மூலம்

புளோரோசிஸ் நோய் ஒரு தொற்று நோய் அல்ல. கிருமிகளால் பரவும் (infectious) நோயும் அல்ல.

### அதிக பாதிப்படையும் மக்கள்

கிடைத்துள்ள புள்ளி விவரங்களின்படி சில வகை மக்களே புளோரோசிஸ் நோயினால் பாதிக்கப்படுவது தெரியவருகிறது.

முதியோர், இதய நோயால் பாதிக்கப்பட்டவர், சிறுநீரக கோளாறு உள்ளவர், ஊட்டச்சத்து குறைவு உள்ளோர் (குறிப்பாக குழந்தைகள்) ஆகியோர் ஃபுளூரைடு அதிகம் கலந்த நீரைப் பருகினால் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர்.

வெய்யில் பிரதேசங்களில் வாழும் மக்கள் மற்றும் வெய்யிலில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஆகியோர் அதிக (ஃபுளூரைடு உள்ள) நீரைப் பருகுவதால் இந்நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

சத்துக் குறைந்த (malnourished) குழந்தைகள் இந்நோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் தனிமனித உடற்கூறு, சுரப்பிகள் சுரக்கும் அளவு ஆகியவையும் இந்நோய் தாக்கத்தை அதிகரிக்கிறது. ஃபுளூரைடு காணப்படும் பகுதியில் வாழும் மக்களின் வயது அதிகரிக்க அதிகரிக்க எலும்பு சம்பந்தப்பட்ட புளோரோசிஸ் நோயின் தாக்கம் அதிகமாகும்.

ஃபுளூரைடு அதிகம் காணப்படும் பகுதிகளில் 40 முதல் 50 வயது வரை உள்ள மக்களுக்கு எலும்பு புளோரோசிஸ் ஏற்பட்டு கூன் ஏற்படலாம்.

ஃபுளூரைடு அதிகம் காணப்படும் பகுதிகளில் பெண்களைவிட ஆண்களே அதிகம் பாதிக்கப்படுவர். ஏனெனில் இந்தியா போன்ற நாடுகளில் பெண்கள் திருமணத்தின்போது இடம் விட்டு இடம் மாறுவதால் பாதிப்பின்தன்மை மாறும்.

ஃபுளூரைடு தாதுவைப் பயன்படுத்தும் சுரங்கங்களிலும், அலுமினியம் தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு புளோரோசிஸ் நோய் ஏற்படக்கூடும்.

பருகக்கூடிய நீரின் அளவு, காற்றின் வெப்பம், இடத்தின் தீர்க்கரேகை – அட்சரேகை, காற்றின் திசை, கடலுக்கு அருகில் இருத்தல், ஆண்டின் சராசரி வெப்பம் இவற்றைப் பொருத்து ஃபுளூரைடு உட்கொள்ளும் அளவும் அதன் பாதிப்பும் மாறும்.

1. குடிநீரை, சோதனை செய்து ஃபுளூரைடு உள்ளதா என்று அறிய வேண்டும்.
2. ஃபுளூரைடு லிட்டருக்கு 1.5 மில்லி கிராம் என்ற அளவிற்கு மேல் இருப்பின் அந்த நீராதாரத்தில் சிவப்புநிறக் குறியீடு செய்து, அந்த நீரைக் குடிப்பதற்குப் பயன்படுத்தக் கூடாது என்று மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.
3. லிட்டருக்கு 1.5 மில்லி கிராம் என்ற அளவிற்கு மேல் ஃபுளூரைடு உள்ள நீரைக் குடிப்பதற்கோ, சமைப்பதற்கோ பயன்படுத்தக்கூடாது.
4. ஃபுளூரைடு அதிகமுள்ள உணவைத் தவிர்க்க வேண்டும்.
5. வைட்டசின் 'சி' மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும்.
6. அதிக அளவு பால் சாப்பிட வேண்டும்.
7. கால்சியம், வைட்டசின் 'சி', வைட்டமின் 'இ', ஆண்டி ஆக்ஸிடெண்டு அதிகமுள்ள உணவை சாப்பிட வேண்டும்.
8. கால்சியம் அதிகமுள்ள காய்கறிகளை சாப்பிட வேண்டும்.
9. ஃபுளூரைடு அதிகமுள்ள பற்பசை, மருந்துகள், அழகு பூச்சுகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.
10. மழைநீரை சேகரித்துப் பயன்படுத்தலாம்.
11. வெற்றிலை மற்றும் புகையிலையைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.
12. தேநீர் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்.
13. கருவுற்ற மற்றும் தாய்ப்பால் ஊட்டும் பெண்கள் கட்டாயம் ஃபுளூரைடு இல்லாத நீரையே பருக வேண்டும்.
14. புளோரோசிஸ் நோயின் அறிகுறி தென்பட்டால் ஆரம்ப சுகாதார நிலையத்தை அணுகி அறிவுரை கேட்க வேண்டும்.



### உணவுப் பழக்கத்தில் மாற்றம்

ஃபுளூரைடு அதிகமுள்ள பகுதி மக்கள் உணவுப் பழக்கத்தில் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலம் புளோரோசிஸ் நோயைத் தவிர்க்கலாம். கால்சியம், வைட்டமின் சி, வைட்டமின் ஈ, ஆண்டி ஆக்ஸிடெண்டு (Anti oxidant) ஆகியவை அதிகமுள்ள உணவு வகைகளை உட்கொண்டால் புளோரோசிஸ் நோயின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

வைட்டமின் 'சி' அதிகமுள்ள ஆரஞ்சு, எலுமிச்சை, தக்காளி, தானிய வகைகள், தனியா இலை ஆகியவற்றை உட்கொள்ளலாம். கால்சியம் மிகுந்த பால், முருங்கைக்கீரை ஆகியவற்றை அதிகம் உட்கொள்ளலாம்.

ஆண்டி ஆக்ஸிடெண்டு உள்ள உணவு வகைகளான பூண்டு, காரட், இஞ்சி, கொய்யா, பூசணி, வெள்ளை வெங்காயம், இலைகள் உள்ள காய்கறிகள் ஆகியவற்றை அதிகம் உட்கொள்ளலாம். வைட்டமின் 'ஈ' அதிகம் உள்ள உணவு வகைகளையும் உட்கொள்ளலாம்.

### புளோரோசிஸ் நோயிற்கு சிகிச்சை

பற்கள் மற்றும் எலும்புகளைப் பாதிக்கும் புளோரோசிஸ் நோய் நிரந்தரமாக இருக்கும் அதற்கு சிகிச்சை கிடையாது. மருந்துகள் இல்லை. இந்நோயைத் தொடக்கத்திலேயே கண்டறிந்தால் தடுக்க முடியும்.

எலும்பு சாரா புளோரோசிஸ் நோயை ஓரளவிற்கு குணப்படுத்த இயலும். இந்நோய் அறிகுறி அறிந்தவுடன் 10 (அல்லது) 15 நாட்கள் ஃபுளூரைடு இல்லாத நீரை பருகினால் இந்த நோய் நீங்கலாம் அல்லது குறையலாம்.

### புளோரோசிஸைத் தவிர்க்க மாற்றுக் குடிநீர் ஆதாரம் மற்றும் விநியோக முறைகள் மூலம் தீர்வு

1. அருகிலுள்ள வேறு நீர் ஆதாரத்தை நாடுதல் அல்லது ஃபுளூரைடு குறைவாக உள்ள தொலைதூர நீர் ஆதாரத்தைப் பயன்படுத்துதல்.
2. அதிக ஃபுளூரைடு உள்ள நீரை குறைந்த ஃபுளூரைடு உள்ள நீருடன் குறிப்பிட்ட விகிதத்தில் கலத்தல்.
3. மழைநீர் சேகரிப்பு: வீடுகளில் மழை நீரை சேகரித்து நேரடியாகப் பயன்படுத்தலாம். நீராதாரத்திற்கு அருகில் மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை ஏற்படுத்தி நிலத்தடி நீரில் ஃபுளூரைடின் அளவைக் குறைக்கலாம்.

### உலக அளவில்

பல்வேறு நாடுகளில் நிலத்தடி நீரில் ஃபுளூரைடு உப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

மெக்சிகோ, அல்ஜீரியா, அர்ஜென்டினா, ஈரான், ஈராக், ஆஸ்திரேலியா, பங்களாதேசம், சீனா, எகிப்து, இந்தியா, ஜப்பான், ஜோர்டான், செனிகல், எத்தியோப்பியா, உகாண்டா, கெனியா, டான்சானியா, லிபியா, மொராக்கோ, நியூசிலாண்டு, பாகிஸ்தான், பாலஸ்தீனம், இலங்கை, சிரியா, தாய்லாந்து, துருக்கி மற்றும் யூஏஇ ஆகிய நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

### இந்தியா

ஃபுளூரைடு உப்பு அதிகம் கலந்துள்ள கனிமங்கள் இந்தியாவில் பல இடங்களில் காணப்படுகிறது. இந்தியாவில் 1937–இல் ஆந்திர மாநிலத்தில் முதல் முதலில் புளோரோசிஸ் நோய் கண்டறியப்பட்டது.

1999–க்குள் இந்தியாவில் 17 மாநிலங்களில் ஃபுளூரைடு அதிகம் கலந்த நிலத்தடி நீர் இருப்பதும் அதனால் மக்கள் புளோரோசிஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதும் கண்டறியப்பட்டது.

இவற்றில் இராஜஸ்தான், ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் மிக அதிகமாக ஃபுளூரைடு நோய் பாதிப்பு உள்ளது. எனினும் இந்நோயின் தீவிரம் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டுள்ளது.

உலக சுகாதார நிறுவனம் (WHO) அறிக்கையின்படி உலக அளவில் ஃபுளூரைடு பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களில் 20 சதவிகிதம் இந்தியாவில் உள்ளன. சுமார் 6.6 கோடி மக்கள் இந்நோயால் அவதிப்படுகின்றனர்.

நிலத்தடி நீரையே குடிநீருக்காக நம்பியிருக்கும் கிராமப்புற மக்களே இந்நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### தமிழ்நாடு

தமிழ்நாட்டில் 22 மாவட்டங்களில் உள்ள சுமார் 212 ஊராட்சி ஒன்றியங்களில் ஃபுளூரைடு அதிகம் கலந்த நீராதாரங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் ஃபுளூரைடு அதிக அளவாக 9.0 மி.கி./லி இருப்பது தெரிய வந்துள்ளது.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நீரின் தரம் பற்றி நடத்திய ஆய்வு

2001–2002ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கைப்பம்புகளிலிருந்தும் பெறப்பட்ட நீர் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன.

மொத்தம் 1,49,457 நீர் மாதிரிகள் சோதனை செய்யப்பட்டது. சோதனையில் கிடைத்த புள்ளி விவரங்கள்படி தருமபுரி, விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஃபுளூரைடு கலந்துள்ள நீர் ஆதாரங்கள் உள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தில் மிக அதிக அளவாக 9.0 மி.கி/லி ஃபுளூரைடு பதிவாகியுள்ளது. சேலம், தருமபுரி, விருதுநகர் மாவட்டங்களில் 20 சதவிகிதத்திற்கு மேற்பட்ட நீர் ஆதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் இயங்கி வரும் பரிசோதனைக் கூடங்கள்

அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நீரைப் பரிசோதனை செய்யும் பரிசோதனைக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இப்பரிசோதனைக் கூடங்கள் நீரின் பௌதிக, இரசாயன, நுண்ணுயிர்த்தன்மைகளை முறையாகப் பரிசோதனை செய்து கொடுக்கும், ஃப்புளூரைடு உப்பும் சோதித்துக் கொடுக்கப்படும்.

### நீர் பரிசோதிப்பதற்கான கட்டணங்கள்

பௌதிக, இரசாயன சோதனை –
1 நீர் மாதிரிக்கு ரூ.250/–

நோய்க்கிருமி பரிசோதனைக்கு –
1 நீர் மாதிரிக்கு ரூ.100/–

ஃப்புளூரைடு உப்பு மட்டும் சோதிக்க –
1 நீர் மாதிரிக்கு ரூ.5/–

பிளீச்சிங் தூளின் திறன் அறிய –
1 நீர் மாதிரிக்கு ரூ.10/–

### நீர் மாதிரி சேகரிக்கும் முறை

ஃப்புளூரைடு உப்பு சோதனை செய்ய 250 மி.லி. (மில்லிலிட்டர்) கொள்ளளவுள்ள வெள்ளை நிற பாலிதீன் பாட்டில்கள் உகந்ததாக இருக்கும்.

தூய்மையான பாட்டில் ஒன்றினை எடுத்துக் கொண்டு சோதிக்கவிருக்கும் நீரை 2 அல்லது 3 முறை சேகரித்து பாட்டிலை நன்கு குலுக்கி நீரை வெளியே ஊற்றி விட வேண்டும். பின் சோதனை நீரை, பாட்டிலில் வெற்றிடமில்லாமல் முழுவதுமாகப் பிடிக்க வேண்டும்.

பாட்டிலின் மீது நீர் எடுக்கப்பட்ட நீராதாரத்தின் முழு விவரங்களுடன், சேகரிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம் எழுதப்பட்ட தாளை ஒட்ட வேண்டும்.

இந்த நீர் மாதிரியை, 24 மணி நேரத்திற்குள் அருகிலுள்ள பரிசோதனைக் கூடத்திற்குச் சென்று, சோதனைக்காகக் கொடுக்க வேண்டும்.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் புளோரோசிஸ் நோயைக் கட்டுப்படுத்த செயல்படுத்தியுள்ள நீர் வழங்கு திட்டங்கள்

1985–89 ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பின் உதவியுடனான (EEC) திட்டங்களின் மூலம் கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட 181 குடியிருப்புகளுக்கு ஃப்புளூரைடு கலக்காத பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, உலகவங்கி உதவியுடன், கோவை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 198 வழியோரக் குடியிருப்புகளுக்கு ஃப்புளூரைடு கலக்காத குடிநீர் வழங்கப்பட்டது.

தற்போது "ராஜீவ்காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின்" மூலம் 1994–இல் கண்டறியப்பட்ட, 9 மாவட்டங்களில் உள்ள 3,555 ஃப்புளூரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளில் சுமார் 3,000 குடியிருப்புகளுக்கு ஃப்புளூரைடு கலக்காத குடிநீர், பல கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

2001–2002இல் நடத்தப்பட்ட நீரின் தர ஆய்வில் 22 மாவட்டங்களில், புதிதாகக் கண்டறியப்பட்ட 3,088 ஃப்புளூரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கும் கூட்டுக்குடிநீர் மற்றும் தனித்திட்டங்கள் மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு, இதுவரை சுமார் 500 குடியிருப்புகளுக்கு திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளது.

மேலும், திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் நீரிலிருந்து ஃப்புளூரைடு உப்பை அகற்றும் "மாதிரி சுத்திகரிப்புத் திட்டங்கள்" பரிசோதனை அளவில் செயல்படுத்தப்படுகின்றன.

### விழிப்புணர்வு மற்றும் புளோரோசிஸ் பற்றிய நலக் கல்வி

ஃப்புளூரைடு கலந்துள்ள நீரினைப் பருகுவதால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றிய விழிப்புணர்வை பெரிய அளவில் நலக்கல்வி மூலம் பலதரப்பட்ட மக்களிடையே ஏற்படுத்த வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டில் மாநில அளவில் "பலதுறை புளோரோசிஸ் தடுப்புக் குழு" ஒன்று தமிழக அரசின் நகராட்சி நிர்வாகச் செயலர் அவர்களின் தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் புளோரோசிஸ் நோயைக் கண்டறிந்து கட்டுப்படுத்தும் வகையில், பொது சுகாதாரத்துறை, பல் மருத்துவத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, பெண்கள் முன்னேற்றக் கழகம், காந்தி கிராமியப் பல்கலைக்கழகம் போன்ற பலதுறைகளின் கூட்டு முயற்சியோடு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பெண்கள் சுயஉதவிக் குழுக்கள், ஊரக வளர்ச்சிப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகள், அரசுசாரா குழுக்கள் போன்றவர்களுக்கு புளோரோசிஸ் பற்றி பெரிய அளவில் நலக்கல்வி விழிப்புணர்வு ஏற்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

தொலைக்காட்சி, வானொலி மற்றும் திரை அரங்குகள் ஆகியவை புளோரோசிஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு மக்களைச் சென்றடைய பயன்படுத்தப்படுகின்றன.

இன்றைய காலகட்டத்தில், பொதுமக்கள் தரமான நீர் பயன்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, தங்கள் வீடுகளில் உள்ள கிணறு மற்றும் ஆழ்துளைக் குழாய்க் கிணறு ஆகியவற்றின் நீரின் தரத்தினைப் பரிசோதித்து அதன் அடிப்படையிலேயே பயன்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும், ஃப்புளூரைடு மற்றும் நீரின் தரமின்மையால் ஏற்படக்கூடிய பாதிப்பிலிருந்து காக்க, "முன்னெச்சரிக்கை நடவடிக்கையே" சிறந்ததாகும். நீரின் தரப் பரிசோதனையும், அதன் மூலம் செய்யப்படும் தடுப்பு நடவடிக்கைகளும் அனைத்து மக்களுக்கும் மற்றும் அவர்தம் குழந்தைகளுக்கும் நோயற்ற, மகிழ்வான வாழ்க்கையினை பல்லாண்டு வழங்கிட வழிவகுக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ச. நடராஜன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி: 25368926/25364906 தொலைச்சு: 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

22615-

உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

10 வது
மாத சந்தா
இலவசம்
மேலும்
அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!

| மாதச் சந்தா ரூ. | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. | கூடுதல் தொகை (2+3) ரூ. | அரசு தள்ளுபடி ரூ. | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. | அங்கயற்கண்ணி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |



வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.

Visit us at www.cooptex.com    Visit us at www.tn.gov.com

பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை






சிறப்பு நூலகர்
தமிழ்நாடு
மற்றும் வரலாற்று
-600 008





# ஆறரைக் கோடித் தமிழர்களின் வலிமையும் என் வலிமை

– என்று முழங்கினார் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். அவர் கற்றுக் கொடுத்த பாடம் தான், எனது அனைத்து முயற்சிகளிலும், எனக்குத் துணை நிற்கிறது.

– என்று கூறினார் ஆங்கிலக் கவிஞர் Lord Tennyson, எனது இதயம் தூய்மையானதாய் இருப்பதால் என் வலிமை பத்து பேர் வலிமைக்குச் சமமானது என்பது அந்தக் கவிஞரின் கருத்து.

என்னுடைய உள்ளம் தூய்மையானது. ஆனால் என் வலிமை பத்துப் பேர் வலிமைக்குச் சமம் என்று சொல்ல மாட்டேன், ஆறரைக் கோடித் தமிழர்களின் வலிமையும் என் வலிமை என்று தான் நான் சொல்வேன்.

உங்கள் அன்பும் ஆதரவும் எப்போதும் உங்கள் அன்புச் சகோதரியாகிய எனக்கு இருப்பதால், உங்கள் அனைவருடைய வலிமையும் எனது வலிமை என்று தானே பொருள்? இந்தப் பாசப் பிணைப்பை எந்தக் கொம்பனாலும் பிரிக்க முடியாது. எந்தக் காலத்திலும் பிரிக்க முடியாது.

அப்படிப்பட்ட அன்பை ஆதரவை, ஊக்கத்தை உறுதியை வழங்கி, உறுதுணையாக இருக்கும் உங்கள் அனைவருக்கும் என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பொங்கி வரும் அன்பை, நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

செல்வி **ஜெ ஜெயலலிதா**
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
(தேனி மாவட்ட அரசு விழாவில்)

# முதல்நிலை நோக்கிய லட்சியப் பயணத்தின் ஈராண்டுச் சாதனைகள்



இதுதான்
தமிழகத்தில்
ஒரு புதிய வளர்ச்சி சகாப்தத்தைப் படைத்துவரும்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
இலட்சிய முழக்கம்.

தன்னிகரற்ற தமிழகத்தை,
தலைசிறந்த தமிழகத்தைப் படைக்கின்ற பணியில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
ஈடுபட்டு வருகிறார்கள்.

சத்திய சோதனைகள் பலவற்றைத் தாண்டி,
மக்களின் மகத்தான ஆதரவோடு,
புதிய சரித்திரம் படைப்பதற்காக
2001ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள்
புரட்சித்தலைவி அவர்கள் முதலமைச்சர் ஆனார்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல் மாநிலமாக
தமிழகத்தை ஆக்குவேன் என்று
சூளுரைத்தார் முதலமைச்சர்.
அதன்படி துறைதோறும் புதிய சாதனைகளை
நிகழ்த்தி வருகிறது
அவரது தலைமையில் அமைந்த தமிழக அரசு.

கடந்த ஈராண்டுகளில்
தமிழ்நாடு அரசு படைத்த சாதனைகள் ஏராளம்!
தமிழ்நாடு பெற்ற சிறப்புகள் ஏராளம்!
அந்தச் சாதனைகளுக்கும், சிறப்புகளுக்கும்
கட்டியம் கூறுகின்ற வகையில்,
உற்பத்தித்திறனில் இந்தியாவிலேயே,
தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது.

கிராமங்கள்தான் இந்தியாவின் உயிர்நாடி. இது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. தமிழகத்தில் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களுக்கு நன்மை தரும் பல நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி இந்த அரசு தமிழகத்தை முன்னோடி மாநிலமாக மாற்ற 2001–2003ஆம் ஆண்டுகளில், வேளாண் துறையில் பல வியத்தகு சாதனைகள் புரிந்துள்ளது.

உணவு தானியம் 84.716 இலட்சம் மெ. டன்கள், பருத்தி 3.26 இலட்சம் பஞ்சு பொதிகள், எண்ணெய் வித்துக்கள் 14.346 இலட்சம் மெ. டன்கள். கரும்பில் 34.50 இலட்சம் மெ. டன்கள் வெல்ல உற்பத்தி.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு, இறவைப் பயிர்களுக்கு ரூ.2,500 மானாவாரிப் பயிருக்கு ரூ.1,000, பல்லாண்டுப் பயிர்களுக்கு ரூ.4,000. காவிரி ஆற்றுப்படுகை மாவட்டங்களில் 2002இல் பெய்த பெரு மழையால் நெல் மற்றும் பிற பயிர்களுக்கு ஏற்பட்ட பெருத்த சேதத்திற்கு நிவாரணத் தொகையாக ரூ.48.10 கோடி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மர சாகுபடியாளருக்கு ரூ.30.50 கோடி நிவாரணம்.

மாநிலத்தில் வறுமை ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தவும், முதன்மைத் துறைகளில் வளர்ச்சி விகிதத்தை வலுப்படுத்தவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் வழிகாட்டுதல்படி தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது மூன்று கூறுகளைக் கொண்டது. முதலாவதாக, அனைத்துக் கிராமங்களிலும் உள்ள தனிப்பட்ட உழவர்களுக்குச் சொந்தமான நிரந்தரமான மற்றும் நடப்பு நிலவரப்படியான தரிசு நிலங்கள் வேளாண் ஆய்வு அடிப்படையிலான அணுகுமுறை மூலம் ஆதாயம் தரத்தக்க பொருளாதார நடவடிக்கையின் கீழ் கொண்டுவர வேண்டும். இரண்டாவதாக தரிசு நில மேம்பாட்டுப் பணிகளிலும் அவற்றுடன் இணைந்த பதப்படுத்தும் தொழில்களிலும் தொழில்கூட்டு நிறுவனங்களை ஈடுபடச் செய்யவேண்டும். வேளாண்மை அடிப்படையில் அமைந்த தொழில்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களை மேம்படுத்துவதற்கு புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், தனிக் கவனம் செலுத்துவது மூன்றாவதாக அமையும். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நீர்வடிமுகடு மேம்பாட்டு முகமை நிறுவப்பட்டுள்ளது. அதன் தலைமையில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது. தரிசு நிலங்களை பசுமை நிலங்களாக்க 10 மாவட்டங்களில் 28 வட்டங்களில் 55,000 எக்டர் தரிசு நிலங்கள் மேம்படுத்தும் பணி வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.















பருத்தி பயிரிடப்படும் பரப்பளவை அதிகரித்து, உற்பத்தித் திறனை உயர்த்தி மாநில பருத்திக் குழு அமைக்கப்பட்டு, பருத்தித் தொழில்நுட்பக் குழு திட்டம் 2001–2002ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது. 2002–2003ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.180.255 இலட்சம் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.

சிறு விவசாயிகளுக்கு மூன்று 30 குதிரைத்திறன் கொண்ட டிராக்டர்கள், 567 பவர் டில்லர்கள், 4 கதிரடிக்கும் இயந்திரங்கள் மற்றும் 1 நெல் நாற்று நடும் கருவி போன்ற இயந்திரங்கள் ரூ.191.867 இலட்சம் மானிய செலவில் வழங்கப்பட்டன.

தேசிய மானாவாரி நீர் வடிப்பகுதித் திட்டம் ரூ.20.07 கோடி செலவில் 2001–2002ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. 2002–2003ஆம் ஆண்டு திருத்தி வடிவமைக்கப்பட்ட நீர் வடிப்பகுதி மேம்பாடு திட்டம் ரூ.15.32 கோடி செலவிட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

பயறுவகை அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகம், பெருவிளக்கப் பண்ணை, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கம், நுண்ணுயிர்ப் பொட்டலங்கள் விநியோகம், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் விநியோகம், தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் விநியோகம் போன்ற இனங்களுக்கு மானியம் வழங்க 2001–2002ஆம் ஆண்டு ரூ.106.78 இலட்சம் செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2002–2003ஆம் ஆண்டில் ரூ.164 இலட்சம் செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டம் ரூ.597.98 இலட்சம் செலவில் 2001–2002ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது. 2002–2003ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.628.025 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

பண்ணை மகளிரின் வாழ்க்கைத் தரம் உயர தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம். ரூ.512.737 இலட்சம் செலவில் 8,475 பண்ணை மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

தமிழகத்திலுள்ள 12 உழவர் பயிற்சி நிலையங்களில் ரூ.5 இலட்சம் செலவில், மொத்தம் 26,784 விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

பேரியல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ், தானிய உற்பத்தித் திட்டம், கரும்பு அபிவிருத்தித் திட்டம், மானாவரி நீர்வடிப்பகுதி மேம்பாடுத் திட்டம் போன்ற திட்டங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டது.

மண்ணின் வளத்தை மேம்படுத்த பசுந்தாள் உர விதைகள் 25 சத மானியத்தில் வழங்கப்பட்டது. 2001–2002ஆம் ஆண்டு ரூ.9 இலட்சம் செலவிலும், 2002–2003ஆம் ஆண்டு ரூ.25 இலட்சம் செலவிலும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் செயல்பாடுகள்

**ரோஜா மலர் ஏற்றுமதி மண்டலம் அமைத்தல்**

தருமபுரி மாவட்டம் ஓசூரில் ரோஜா மலருக்கென ஏற்றுமதி மண்டலமானது ரூ.24.85 கோடி மதிப்பீட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையும் டிட்கோ நிறுவனமும் இணைந்து "டான்ப்ளோரா" எனும் பெயரில் கூட்டு நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. மலர்களுக்கான ஏற்றுமதி மண்டலம் நீலகிரி மாவட்டத்தில் ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட உள்ளது.

**மாம்பழ ஏற்றுமதி மண்டலம் அமைத்தல்**

தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி தேனி மாவட்டத்தில் ரூ.24.60 கோடி மதிப்பீட்டில் மாம்பழத்திற்கான ஏற்றுமதி மண்டலம் அமைப்பதற்கான உடன்பாட்டுக் குறிப்பில் அபிடா நிறுவனமும் தமிழக அரசின் வேளாண்மைத் துறையும் கையெழுத்திட்டுள்ளது.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்**

விளைபொருட்களை விற்பனைக்குக் கொண்டுவரும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஆண்டிபட்டி, எழுமாத்தூர் மற்றும் தாத்தையங்கார் பேட்டை ஆகிய 3 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.2.25 கோடி செலவில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பணியும், செம்பனார் கோவில், கம்பம், கொடுமுடி மற்றும் சேவூர் ஆகிய 4 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ரூ.0.77 கோடி செலவில் ஊரகக் கிடங்குகள் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது.

**விற்பனைத் தகவல் மையம்**

2001-2002 மற்றும் 2002-2003ஆம் ஆண்டுகளில் 14 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.45.45 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண் விளைபொருள் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**100 இடங்களில் உலர்களங்கள்**

அறுவடைக்குப்பின் ஏற்படும் தானிய இழப்பினைக் குறைக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் 2002-03ஆம் நிதியாண்டில் ரூ.2 கோடி செலவில் 100 கிராமங்களில் உலர்களங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**புதியதாக விற்பனைக் குழுக்கள்**

ஏற்கெனவே செயல்பட்டு வந்த 16 விற்பனைக் குழுக்களுடன் தேனி, திண்டுக்கல், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 4 விற்பனைக் குழுக்கள் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், பரப்பு விரிவாக்கத் திட்டத்தில், தரமான நடவுச் செடிகள், விதைகள், உயிர் உரங்கள், தாவரப் பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்ற இடுபொருட்கள் விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியத்தில் விநியோகிக்கப்படுகின்றன. 2001-2002ஆம் ஆண்டில் 27,413 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு ரூ.322.33 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2002-2003ஆம் ஆண்டில் ரூ.293.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

**ஒருங்கிணைந்த பழங்குடி விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்**

சேலம் மாவட்டத்தில் சேர்வராயன்மலை, அருநூத்துமலை, பச்சைமலை மற்றும் கல்ராயன்மலை, நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலை, திருச்சி மாவட்டத்தில் பச்சை மலை, தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி மலை, வேலூர் மாவட்டத்தில் ஜவ்வாது மலை, விழுப்புரம் மாவட்டத்தில் கல்ராயன்மலை ஆகிய பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. 2001-2002ஆம் ஆண்டில் 1,050 ஏக்கர் பரப்பளவில், இத்திட்டம் ரூ.17.20 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2001-2002ஆம் ஆண்டில் ரூ.193.59 இலட்சம்

செலவிலும், 2002–2003ஆம் ஆண்டில், ரூ.299.48 இலட்சம் மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்பட்டது.

**தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 15 அம்ச திட்டத்தில், தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்திக்கு மாநிலத்திலுள்ள சாதகமான சூழ்நிலைகளை உரிய முறையில் பயன்படுத்திடவும், பயிர்சாகுபடியில் மட்டுமன்றி அறுவடைக்குப்பின் மேலாண்மை மற்றும் சேமிப்பு ஆகிய இனங்களிலும் அதிக கவனம் செலுத்திடவும் வலியுறுத்தப் பட்டுள்ளது. இக்குறிக்கோளை அடைந்திட அரசு சென்ற ஆண்டு, ''தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்'' ஒன்றை அறிவித்தது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் தோட்டக்கலை வளர்ச்சியில் 8 விழுக்காடு வளர்ச்சி நமது மாநிலத்தில் எய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தோட்டக்கலை வளர்ச்சிக்கென கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழக அரசு திட்டங்களின் கீழ் ரூ.19.50 கோடி செலவிடப்பட்டு, மேம்படுத்தப்பட்டுள்ளது.

**வேளாண்மைப் பொறியியல்**

நீர்வடிப்பகுதி மேலாண்மை, பாசனநீர் மேலாண்மை, மழை நீர் சேகரிப்பு மற்றும் சிக்கன நீர்ப்பாசன முறைகளான நுண்ணிய நீர்ப்பாசன முறைகளை அறிமுகப்படுத்தி பரவலாக்குதல் ஆகிய புதிய திட்டங்களுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை முக்கியத்துவம் வழங்கி செயல்பட்டு வருகிறது.

**மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு**

சமவெளிப்பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு 2001–2002ஆம் ஆண்டில் ரூ.1,172.79 இலட்சம் செலவில் 82,043 எக்டர் நிலத்தில் பணிகள் 25 விழுக்காடு மானியத்துடன் மேற்கொள்ளப்பட்டது.

★ **பண்ணைக் குட்டைகள்**

2002–2003ஆம் ஆண்டில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் ரூ.2.997 கோடி செலவில் 1139 பண்ணைக் குட்டைகள் போர்க்கால அடிப்படையில் 90 நாட்களில் அமைக்கப்பட்டன.

★ 2001–2002ஆம் ஆண்டில் ரூ.92.90 இலட்சம் செலவில் 646 எக்டர் நிலத்திலும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.89.46 இலட்சம் செலவில் 595 எக்டர் நிலத்திலும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்பட்டுள்ளன.

★ நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு 2001–2002ஆம் ஆண்டில் குந்தா, கீழ்பவானி மற்றும் வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ரூ.547.25 இலட்சம் செலவில் 4,473 எக்டர் நிலத்திலும் 2002–2003ஆம் ஆண்டில் ரூ.467.11 இலட்சம் செலவில் 3,058 எக்டர் நிலத்திலும் பணிகள் செயலாக்கப்பட்டுள்ளன.

★ மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.330.34 இலட்சம் செலவில் 3904 எக்டர் நிலத்திலும் 2002–2003ஆம் ஆண்டில் ரூ.258.48 இலட்சம் செலவில் 1933 எக்டர் நிலத்திலும் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப் பட்டுள்ளன.

★ தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் தென்னைக்கு சொட்டு நீர்ப்பாசனம் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.2,787.06 இலட்சங்களிலும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.2137.36 இலட்சங்களிலும் செயல்படுத்தப்பட்டது.

★ 2001–2002இல் 5,697 குழாய்க்கிணறுகளும் 2002–2003இல் 5,068 குழாய்க்கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

★ 2001–2002இல் ரூ.3,674.33 இலட்சம் செலவில் 40,681 எக்டர் நிலத்தில் பண்ணை மேன்மைப் பணிகளும், 1,00,416 எக்டர் நிலத்தில் சுழற்சிமுறைப் பாசனப் பணிகளும் 2002–2003இல் ரூ.3,887.49 இலட்சம் செலவில் 51,222 எக்டர் நிலத்தில் பண்ணை மேன்மைப் பணிகளும் 59,443 எக்டர் நிலத்தில் சுழற்றிமுறைப் பாசனப் பணிகளும் செயல் படுத்தப்பட்டுள்ளன.

★ **புதிய திட்டங்கள்**

பாலாறு, பொரந்தலாறு திட்டம், தொப்பையாறு திட்டம் மற்றும் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம் ஆகிய புதிய திட்டங்கள் 2001–2002இல் துவக்கப்பட்டு செயலாக்கப்பட்டுள்ளன.







★ திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் விரிவான நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2001–2002ஆம் ஆண்டில் ரூ.386.10 இலட்சம் செலவில் 3,232 எக்டரில் பணிகளும், விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.48.94 இலட்சம் செலவில் பராமரிப்புப் பணிகளும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.205.76 இலட்சம் செலவில் பராமரிப்புப் பணிகளும் செயலாக்கப்பட்டுள்ளன.

## பசுமைப் போர்வைத் தோட்டங்கள்

பசுமைப் போர்வைத் தோட்டங்களை 20 மாவட்டங்களில் (20 எக். வீதம் ஒரு மாவட்டத்திற்கு) சராசரியாக 800 மி.மிக்கு குறைவாக மழை வளம் கிடைக்கக்கூடிய இடங்களில் 2001–2002ஆம் ஆண்டிற்கு ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு இடத்திற்கு ரூ.3 இலட்சம் வீதம் பசுமைப் போர்வைத் தோட்டங்கள் உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தத் தோட்டங்களைத் தொடர்ந்து 2002–2003ஆம் ஆண்டில் பராமரிக்கும் பொருட்டு ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு எக்டருக்கு ரூ.3,000 வீதம் பராமரிப்பு செலவினம் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தோட்டங்களின் நிலைமை திருப்திகரமாக உள்ளது.

**தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்**

காடு வளர்ப்பு திட்டப் பணியில் சிறப்பாக செயலாற்றியதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் ஈக்வெட்டோரியல் விருது தமிழகத்திற்கு கிடைத்துள்ளது. இவ்விருதுப்பரிசுத் தொகையினை பயன்படுத்தி ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் 25 மாவட்டங்களில் 959 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 80,000 மக்கள் பயன்பெறும் வகையில் சித்த மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.

★ சமூகப் பாதுகாப்பினால் தரமிழந்த காடுகளில் மரம், செடி, கொடி, புல் போன்ற தாவர வகைகள் மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் மறுவளர்ச்சி அடைந்துள்ளன. தரங்குன்றிய காடுகள் நல்ல முறையில் மறுதளர்வு அடைந்திருப்பது கண்கூடாகத் தெரிகிறது. திட்டகிராமங்களில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து விவசாயம் பெருகியுள்ளது. இதுவரை ஒரு போகம் நெல் விளைந்த கிராமங்களில் 2 மற்றும் 3 போக விவசாயம் நடைபெறுகிறது.

**கடலோரத் தொடர் தடுப்புக் காடுகள் தோட்டங்கள்**

2001–2002ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.178.19 இலட்சத்திற்கு செயல்படுத்தப்பட்டது. 2002–2003ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் மரம் வளர்ப்புப் பணிகளுக்கு மைய அரசினால் நிதி ஒதுக்கீடு வழங்கப்படாத நிலையிலும் உருவாக்கப்பட்ட மரங்களின் பராமரிப்புப் பணி 2002–2003ஆம் ஆண்டில் ரூ.28 இலட்சத்திற்கு செயல்படவுள்ளது.

**கோடியக்கரை வன உயிரின சரணாலயம்**

★ அரசின் சிறப்பான முயற்சிகளால் நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள கோடியக்கரை வன உயிரின சரணாலயத்தில் காணப்படும் தனித் தன்மை வாய்ந்த தாவரங்கள் மற்றும் உயிரினங்களின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு அப்பகுதி, 2002 நவம்பர் 18 – 26 வரை 'வெலன்சியா' நகரில் நடைபெற்ற மாநாட்டில் 'சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக' (Ramsar site) அறிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல மன்னார் வளைகுடா பகுதியையும்



*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து சுற்றுப்புறச் சூழலுக்கான "பசுமை விருதுகள்" பெறும் மாவட்ட ஆட்சியர்கள் – 5.6.2002*

முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அறிவித்துள்ளது.

### இயற்கை வழி மரசாகுபடி

இரண்டாண்டுகளில், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்திற்கு மட்டும் 3 கோடி மர நாற்றுகளுக்குத் தேவையான உயிர் உரங்கள் மற்றும் ஊட்டச் சத்துக்கள் தயார் செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டது. இது இந்தியாவிலேயே முதன்முறையாகும். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்கு இதுவரை 1,500 டன் மண்புழு உரம், 400 டன் வேர்ப்பூசனம் மற்றும் 200 டன் உயிர் உரங்கள் நாற்றங்கால் மற்றும் மர நடவுக்கு பயன்படுத்தும் பொருட்டு வனத்துறையினரால் தயார் செய்யப்பட்டுள்ளது ஒரு தனிச் சிறப்பாகும்.

### மூலிகைச் செடி வனம் காத்தல்

★ நாட்டிலேயே முதன் முதலாக மூலிகைச் செடிகள் வளர்க்கத் தேவையான சாகுபடிக் குறிப்புகள் பெற 30க்கும் மேற்பட்ட மூலிகைச் செடிகளில் ஆராய்ச்சி, கோவை விதை மையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆழியார் மூலிகை ஆராய்ச்சி மையத்தில் இதுவரை 300க்கும் மேற்பட்ட மூலிகை இனங்கள் கொணர்ந்து சேகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு வருடங்களில் 125 எக்டர் நிலப்பரப்பில் சுமார் 300 முன்னோடி விவசாயிகளின் நிலங்களில் ஒட்டுபுளி, சவுக்கு, மூங்கில், பலா, வேம்பு, சொர்க்கமரம் போன்ற மரங்களைக் கொண்டு விவசாயிகளின் நிலங்களில் செயல்விளக்கத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 2,000 நபர்களுக்கு மரங்கள் வளர்ப்பது சம்பந்தமான தொழில்நுட்பப் பயிற்சி தரப்பட்டு, இரண்டு ஆண்டுகளில் சொர்க்கமரம், தேக்கு, புளி, நெல்லி, பலா போன்ற சுமார் 50,000 மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு விற்கப் பட்டுள்ளன.

★ 2002–2003ஆம் ஆண்டில் சந்தன மர ஏலம் மூலம் கிடைக்கப்பெற்ற வருவாய் ஏறத்தாழ ரூ.121.59 கோடியாகும். இதுவரை கிடைக்கப்பெற்ற 'சந்தனமர ஏலத்தின் வருவாயில் அதிகமான வருவாய் இதுவே' என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்

கடந்த 2001–2002 ஆம் ஆண்டில், இக்கழகமானது 77478.660 மெட்ரிக் டன் மரக்கூழ் மரங்களை காகித ஆலையினருக்கு விநியோகம்





செய்து ரூபாய் 9.10 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. 2002–2003 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் மெட்ரிக் டன் மரக்கூழ் மரங்களை அறுவடை செய்யத் திட்டமிட்டு, இதன் மூலம் ரூ.9 கோடி வருவாய் கிடைக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

வேலூர் மாவட்டம், தெக்குப்பட்டில் உள்ள சந்தனப் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலையில் கடந்த 2001–2002ஆம் வருடத்தில் 1587.300 கிலோ சந்தன எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், 2001–2002 ஆம் வருடத்தில் 2725.569 கிலோ சந்தன எண்ணெய் விற்கப்பட்டுள்ளது. மேலும் 1424.94 கிலோ சந்தன எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டும், அதன் மூலம் வெளிநாட்டு பரிவர்த்தனையாக ரூ.2.69 கோடி கிடைத்துள்ளது.

2001–2002 ஆம் வருடத்தில், மொத்த வருவாய் ரூ.18.92 கோடி ஆகும். இக்கழகமானது இலாபமாக ரூ.3.48 கோடி ஈட்டியுள்ளது.

## சுற்றுச் சூழல் துறை – ஆறுகள் மற்றும் ஏரிகள் பாதுகாப்பு

★ ஆறுகள் மற்றும் ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டாண்டுகளில் ரூ.6.30 கோடி செலவிடப்பட்டுள்ளது. அதே போல மதுரையில் வைகை நதிக்கரையிலும், கும்பகோணத்தில் காவிரி நதிக்கரையிலும் மாசுத்தடுப்புப் பணிகளுக்காக ரூ.29.23 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### சென்னைக்கு ...

★ சென்னைப் பெருநகர் நீர்வழித்தடங்கள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் ரூ.116.22 கோடி கடந்த இரண்டு ஆண்டுகளில் செலவிடப் பட்டுள்ளது.

## மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் மாசில்லாப் பணி

பெருகிவரும் சுற்றுச்சூழல் கேட்டைத் தடுக்க தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் சிறப்பான பணியை ஆற்றி வருகிறது.

★ பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக சுற்றுச் சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களை வெளிப்படுத்தும் ஒரு நடமாடும் கண்காட்சி சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கண்காட்சி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 3.8.2001 அன்று துவக்கி வைக்கப்பட்டது.





★ இத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்காக மாவட்ட ஆட்சியர்களுக்கு தலா ரூபாய் 1.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான, 'பிளாஸ்டிக்கிற்கு எதிராக குழந்தைகள்' என்னும் திட்டம் 15.9.2001 அன்று துவக்கப்பட்டுள்ளது.

### மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் மேலாண்மை

★ அரசாங்க மருத்துவமனைகளிலிருந்து வெளியேற்றப்படும் மருத்துவ நுண்ணுயிர் கழிவுகளுக்காக, தனியான வசதிகள் 6 மாநகராட்சிகளிலும் உத்தேசிக்கப்பட்டுள்ளன.

### சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

★ சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதுடன் தீபாவளி மற்றும் போகி போன்ற விழாக் காலங்களில் ஏற்படும் காற்று மற்றும் ஒலி மாசுக்கெதிராக சிறப்பு விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் நடத்தப்படுகின்றன. ஆண்டுதோறும், உலக சுற்றுச்சூழல் தினம் (ஜூன் 5) மற்றும் உலக எரிப்பதற்கு எதிரான தினம் (ஜூன் 25) முதலியன சுற்றுச்சூழல் நிகழ்ச்சிகளுடன் அனுசரிக்கப்படுகின்றன.

### பசுமை விருதுகள்

★ பசுமை விருதுகள், 5.6.2002, உலக சுற்றுச்சூழல் தினத்தன்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அவர்களது சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மாசுக் கட்டுப்பாடு பணிகளுக்காக வழங்கப்பட்டன.

★ நகர்ப் பகுதிகளில் ஒலி மாசினைக் கட்டுப்படுத்தும் வகையில், மாநிலமெங்கும் பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்களி லிருந்து 37,000த்திற்கும் மேற்பட்ட காற்று ஒலிப்பான்கள் அகற்றப்பட்டன.

## கால்நடைச் செல்வம்

### சிறப்புக் கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்

மருத்துவ வசதி இல்லாத தொலைதூர கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை, அறுவை சிகிச்சை மற்றும் இனப்பெருக்கக் குறைதீர்க்கும் சிகிச்சை, செயற்கைமுறைக் கருவூட்டல், சினைப் டரிசோதனை, ஆண்மை நீக்கம், குடற்புழு நீக்கம் மற்றும் பல்வேறு நோய்களிலிருந்து கால்நடைகளைப் பாதுகாத்திட தடுப்பூசி போடுதல் போன்றவை இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. 2001–2002ஆம் ஆண்டில் 4,613 இலவச முகாம்களும் 2002–2003ஆம்





ஆண்டில் 4,648 இலவச முகாம்களும் நடத்தப்பட்டு அதன் மூலம் முறையே 56.77 இலட்சம் மற்றும் 53.98 இலட்சம் கால்நடைகளும் இரு ஆண்டுகளில் பயனடைந்துள்ளன.

### டென்மார்க் உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம்

2001–2002ஆம் ஆண்டில் 273 இணைப்பு தம்பதிகளும், 10,689 இலக்கு விவசாயிகளும், 2002–2003ஆம் ஆண்டில் 282 இணைப்பு தம்பதிகளும், 7,366 இலக்கு விவசாயிகளும் பயிற்றுவிக்கப் பட்டுள்ளனர். இத்திட்டத்தின் வெற்றியினைக் கருத்தில் கொண்டு எஞ்சியுள்ள 336 ஊராட்சி ஒன்றியங்களிலும் ரூ.3.36 கோடி செலவில் இத்திட்டத்தினை அடுத்த ஐந்தாண்டுகளில் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. 2002–2003ஆம் ஆண்டில் திண்டுக்கல், பெரம்பலூர், திருவாரூர், கரூர், நாகப்பட்டினம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலுள்ள 1278 கிராம ஊராட்சிகளிலும் செயல்படுத்திட ரூ.63.48 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உதகையிலுள்ள அரசு கால்நடைப் பண்ணை யினை மேம்படுத்திடவும், வலுப்படுத்திடவும் 2001–2002 மற்றும் 2002–2003ஆம் ஆண்டுகளில் முறையே ரூ.10.698 இலட்சம் மற்றும் ரூ.8.5 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

★ சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டத்தின்கீழ் 2000–2001 முதல் மார்ச் 2003 முடிய ஆதிதிராவிட பயனாளிகளுக்கு 50% மானியத்துடன் 2,196 செம்மறி ஆடு அலகுகளும் 646 வெள்ளாடு அலகுகளும் வழங்கிட தாட்கோ ரூ.4 கோடி வழங்கியுள்ளது.

★ ஏழ்மை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் மொத்தம் 10,665 குடும்பங்கள் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலமாகப் பயனடைந்துள்ளன. 2002–2003ஆம் ஆண்டில் 127.50 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சையும், ரூ.5.71 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கமும், 118.71 இலட்சம் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கமும், 157.09 இலட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசியும், 24.90 இலட்சம் கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டலும் செய்யப் பட்டுள்ளன.

★ 1–5–2001 முதல் இத்துறையின் கட்டுப் பாட்டிலுள்ள 7,626 மொத்த பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 6,883 சங்கங்கள் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன.



★ கடந்த 2 ஆண்டுகளில் 6,881 சங்கங்களில் பொதுக்குழுக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

### இலாபத்தில் செயல்படும் மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள்

2002–2003ஆம் ஆண்டு 14 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் இலாபகரமாக இயங்கி வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் டிசம்பர் 2002 வரை ரூ.14.36 கோடி இலாபத்தில் இயங்கி வருகின்றது.

### பால் குளிரூட்டும் நிலையம்

2002–2003இல் திருச்சி மாவட்டத்தில் உள்ள மணப்பாறையில் 50,000 லிட்டர் கொள்திறன் கொண்ட ஒரு குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. பரமக்குடி பால் குளிரூட்டும் நிலையம், விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

### மகளிருக்கான பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம்

2002–2003ஆம் ஆண்டில் 48 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் 3,570 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

### தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

இப்பல்கலைக்கழகத்தின் கீழ் மூன்று கல்லூரிகள், ஐந்து ஆராய்ச்சிப் பண்ணைகள், பதினேழு பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், இரண்டு வேளாண் அறிவியல் மையங்கள், இரண்டு மீன்வளப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் மற்றும் ஒரு வேளாண் தொழில்நுட்பத் தகவல் மையம் ஆகியவை செயலாற்றி வருகின்றன.

★ தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேளாண்காடுகளுடன் கால்நடைகளை ஒருங்கிணைத்து வளர்க்கும் ஒரு ஆராய்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி 1,113 எக்டர் தரிசு நிலப்பரப்பில் 5,235 வேளாண் குடிமக்கள் கால்நடை மற்றும் மீன் வளர்ப்பின் மூலம் பயனடைந்துள்ளனர்.

★ தமிழகத்தில் கனடா நாட்டு சர்வதேச ஆராய்ச்சி மேம்பாட்டு நிதியுதவியுடன் மூன்று தொலைத்தொடர்பு தொழில்நுட்ப மையங்கள் (Tele centres) வேலூர் மாவட்டம் சித்தேரியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் குழுமணியிலும், மதுரை மாவட்டம் புதுதாமரைப்பட்டியிலும் இயங்கி வருகின்றன.

★ மீன் வளர்ப்போர் பயனடையும் வகையில் தஞ்சாவூரிலும், கன்னியாகுமரி மாவட்டத் திலுள்ள பறக்கையிலும், மீன்வளர்ப்புப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் துவங்கப்பட்டு இயங்கி வருகின்றன.

★ 2001–2003ஆம் ஆண்டுகளில் பல்கலைக் கழகத்தின் பயிற்சிகளின் மூலம் 52,611 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.

## மீன்வளத்துறை

மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தின்படி, வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் ஏழை மீனவர்களுக்கு ரூ.37,000 மதிப்புள்ள வீடுகள் கட்டி இலவசமாக வழங்கப்படுகிறது. 2001–2002ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட 4,000 வீடுகளுக்கு செலவினம் ரூ.1.48 கோடி. 2002–2003ஆம் ஆண்டில் மத்திய மாநில அரசின் நிதிஉதவியுடன் செயல்படுத்தப்படும் மாதிரி மீனவ கிராம திட்டத்தின் கீழ் 4,000 வீடுகளுக்கு ஒப்புதல் அளித்திட மத்திய அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், மீனவர் கூட்டுறவு சங்க அங்கத்தினர்களிடமிருந்து மாதம் ரூ.75 வீதம் ஆண்டில் 8 மாதங்களுக்கு வசூல் செய்யப்படுகிறது. அரசும் இதற்கான உதவியை அளிக்கிறது. வசூல் செய்யப்பட்ட ரூ.600 இணையான பங்கினை மாநில மற்றும் மத்திய அரசுகள் வழங்குகிறது. மொத்தத் தொகை ரூ.1,200இல் மீன்பிடிப்பு இல்லாத நான்கு மாத காலங்களுக்கு ஒவ்வொரு மீனவருக்கும் மாதம் ரூ.300 வீதம் வழங்கப்படுகிறது. இதன்கீழ் 2001–2002ஆம் ஆண்டு 1,91,849 பேர்களுக்கு ரூ.15.27 கோடியும், 2002–2003ஆம் ஆண்டு 1,95,996 பேர்களுக்கு ரூ.23.51 கோடி வழங்கப்படுகிறது.

மீனவர் குழு காப்புறுதித் திட்டத்தின் கீழ் மீனவர் விபத்தில் இறந்தாலோ/முழுமையாக நிரந்தர ஊனம் அடைந்தாலோ ரூ.50,000 மீனவர் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. பகுதி நிரந்தர ஊனம் அடைந்தால் ரூ.25,000 வழங்கப்படுகிறது.





இதன்படி 2001–2002ஆம் ஆண்டு 172 பேர்களுக்கு ரூ.61.15 இலட்சமும், 2002–2003ஆம் ஆண்டு 130 பேர்களுக்கு ரூ.58.10 இலட்சமும் வழங்கப்பட்டது.

மீனவ மகளிர் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 2001–2002இல் 120 பயனாளிகள் பயன்பெற்றனர். இதற்காக ரூ.17.33 இலட்சம் வழங்கப்பட்டது.

★ இலங்கை கடற்படையினரால் பிடிபடும் தமிழக மீனவர் குடும்பங்களின் துயர்துடைக்க நாள் ஒன்றுக்கு ரூ.50 வீதம் அரசால் நிவாரணமாக, மீனவர்கள் தாயகம் திரும்பும் வரை வழங்கப்படுகிறது.

★ தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்தி உயிரிழக்கும் மீனவர் குடும்பத்திற்கு உடனடி நிவாரணமாக ரூ.1 இலட்சம் தமிழக அரசின், மாண்புமிகு தமிழக முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

★ நீலாங்கரை, கடலூர், நாகப்பட்டினம் ஆகிய ஊர்களில் மீனவர் அங்காடிகள் திறக்கப் பட்டன.

★ காஞ்சிபுரம் – கோவளம், நாகப்பட்டினம் – கீச்சான்குளம், தூத்துக்குடி – தருவைக்குளம், திருநெல்வேலி – இடிந்தகரை, கடலூர் ஆகிய ஊர்களில் ஏலக்கூடம் மற்றும் உலர்களம் கட்டுமானப் பணி முடிக்கப்பட்டது.



★ 2001–2002 மற்றும் 2002–2003ஆம் ஆண்டுகளில் 205 பேர் மீன் பிடி பயிற்சியும், 193 பேர் பொருத்துநர் பயிற்சியும் பெற்றுள்ளனர்.

★ 500 உள்நாட்டு மீனவர்கள், 25 விழுக்காடு மானியத்தில் புதிய வலைகள் வாங்குவதற்கு ரூ.12.50 இலட்சம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஒரு மீனவருக்கு அதிகபட்ச மானியம் ரூ.2,500 ஆகும். இதுவரை 619 உள்நாட்டு மீனவர்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

★ 500 உள்நாட்டு மீனவ மகளிருக்கு 500 அலுமினியப் பாத்திரம் 50 விழுக்காடு மானியத்தில் விநியோகிக்கும் பொருட்டு ரூ.0.75 இலட்சம் அரசு ஒப்புதல் அளித்து 531 மீனவ மகளிருக்கு மானியம் வழங்கப் பட்டுள்ளது.

## நாட்டுயர்வு நோக்கில் பணியாற்றும் கூட்டுறவுத் துறை

வேளாண் பெருமக்களின் நலனில் என்றென்றும் அக்கறை கொண்டும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விரைவான நடவடிக்கை மூலம் நாளும் பணியாற்றி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 2001ஆம், ஆண்டில் 6,11,193 விவசாயிகளுக்கு 226.56 கோடி ரூபாய் அளவில் வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்ய உத்தரவிட்டார்கள்.

★ ரூ.25,000க்கு மேல் ரூ.50,000 வரையிலான குறுகிய காலப் பயிர்க் கடனுக்கான வட்டியை 15 சதவீதத்திலிருந்து 13 சதவீதமாகவும், ரூ.50,000–க்கும் மேலான பயிர்க் கடனுக்கான வட்டியை 16 சதவீதத்திலிருந்து 14



③

226158



சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. மகளிர் வாழ்வில் மகத்தான அக்கறையுடன் செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழக முதல்வரின் விருப்பப்படி, மகளிரின் பொருளாதாரத் தன்னுரிமையை நிலைநாட்ட சில சிறப்புத் திட்டங்களின் கீழ் கூட்டுறவு வங்கிகள் வழங்கும் முன்னுரிமை கடன்களுக்கு (Priority Sector Loans) 1 சதவீதவட்டி குறைக்கப்பட்டு உள்ளது. சீரமைக்கப்பட்ட மகளிர் சிறுவணிகக் கடன்களுக்கான வட்டிவிகிதம் 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக குறைக்கப் பட்டுள்ளது. உழைக்கும் மகளிருக்கும், மகளிர் தொழில் முனைவோருக்கும் வழங்கும் கடன்களுக்கான வட்டி விகிதம் 15 சதவீதத்தி லிருந்து 14 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

★ சீரமைக்கப்பட்ட மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தின் கீழ் நகராட்சி, மாநகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 3.3.2003 முடிய 62,429 நபர்களுக்கு ரூ.1599.37 இலட்சம் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ சுயஉதவிக் குழுக்களை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்துள்ளது. இதுவரை இவ்வங்கிகளில் 17,708 சுயஉதவிக் குழுக்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு 6,016 இலட்ச ரூபாய் அளவிற்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ புதிய மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டத்தின் கீழ் ரூ.284.47 இலட்சம் 407 மகளிர் தொழில் முனைவோருக்கு கடன் வழங்கப் பட்டுள்ளது.

★ ஒட்டுமொத்த கடன் தீர்வுத் திட்டம் (One Time Settlement Scheme) என்ற திட்டத்தை அரசு அறிவித்தது. இதுகாறும் 36,336 நபர்கள் ரூ.1028.85 இலட்சம் அளவிற்கு பயனடைந்துள்ளனர்.

**கூட்டுறவின் மூலம் குறைந்த விலை வேட்டி மற்றும் சேலை விற்பனைத் திட்டம்**

★ நெசவாளர்களின் இன்னலைப் போக்கும் நோக்கில் அரசு முடிவின்படி கைத்தறி வேட்டி மற்றும் சேலைகள் கூட்டுறவு நியாய விலை கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டன. இந்த மலிவு விலை கைத்தறி சேலை, வேட்டி ஆகியவற்றை 6.8.2002 முதல் கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் இதுகாறும் ரூ.16.20 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டு உள்ளது.

★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய நடவடிக்கையின் காரணமாக கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் நடை முறையில் இருந்து வந்த லெவி முறையை (100% & levy system) மாற்றி சோதனைச் சாவடிகளை அகற்றுவதற்கான ஆணை 11.9.2001 அன்று வெளியிடப்பட்டுள்ளது.**

★ வியாபாரிகள் உரிமங்கள் பெறாமலேயே அரிசி/ நெல்லை எங்கு வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் வெளிமாநிலங்களுக்கு கொண்டு செல்லலாம் என்ற நிலையை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக மாநிலம் முழுவதும் செயல்பட்டு வந்த 72 சோதனைச்சாவடிகள் கலைக்கப்பட்டுள்ளன. இனி விவசாயிகளும், வியாபாரிகளும், அரவையாளர்களும் சோதனைச்சாவடி அதிகாரிகள் தொல்லை கொடுக்கிறார்கள் என்று புகார் கூற இடமில்லை. வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகவும், நியாயமான விலையில் கிடைக்கவும் இந்த அணுகுமுறை வழி வகுக்கிறது. இனி அரிசி/நெல் கொள்முதல் செய்வதிலோ அல்லது விற்பனை செய்வதிலோ சிரமம் இருக்காது.





★ அரிசி ஆலைகளின் அரவைத் திறன் மேம்படுத்தப்பட்டு இவ்வருடம் உச்ச அளவாக 82.8 சதவிகிதத்தை அடைந்துள்ளது.

**நெல் கொள்முதல்**

இவ்வரசு, மக்களுக்குத் தரமான அரிசியை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் தேவைக்கேற்ப மைய அரசிடமிருந்து அரிசியைப் பெற்றுக் கொண்டும், விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டும் மாநிலத்திற்குள் நெல் கொள்முதல் செய்வதில் கண்ணும்கருத்துமாக உள்ளது. இதற்கேற்ப மைய அரசின் பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தை (Decentralised Procurement System) 1.10.2002 முதல் செயல்படுத்த ஆணையிட்டுள்ளது. அதன்படி மைய அரசுக்காக நுகர்பொருள் வாணிபக்கழகத்தால் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகின்றது.

**போலி குடும்ப அட்டைகளைக் களைய கூப்பன்**

ஏராளமான போலி குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளதால் இடைத்தரகர்கள் மற்றும் கடத்தல்காரர்களும் செயல்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக இவ்வரசு 1.7.2002 முதல் அரிசி கூப்பன் முறையை பொதுவிநியோகத் திட்டத்தில் அறிமுகப்படுத்தி உள்ளது.

**மண்ணெண்ணெய் மற்றும் அரிசி விலை உயரவில்லை**

மைய அரசின் விலை நிர்ணயப்படி, பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.9 முதல் ரூ.9.60 வரை விற்கப்பட வேண்டும். ஆனால், இவ்வரசு 9.3.2002 முதல் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.8.40 முதல் ரூ.9 வரை மானிய விலையில் விற்பனை செய்ய ஆணையிட்டு செயற்படுத்தப்படுகிறது.

இந்த அரசு கடுமையான நிதிப் பற்றாக்குறையை எதிர்கொண்டு வந்தாலும் பாகுபாடின்றி அனைத்து குடும்பங்களுக்கும் 10 கிலோ அரிசியை ஒரு கிலோவுக்கு ரூபாய் 3.50க்கு மிகவும் சலுகை விலையில் வழங்குகிறது.



நிலங்களை அளப்போம், வளங்களை ஆராய்வோம்

**நில ஆவணங்களை கணினி மயமாக்கும் திட்டம்**

மாநிலம் முழுவதிலுமுள்ள 206 வட்டங்களிலும் கணினி பொருத்தப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. 17,246 கிராமங்களுக்கான 'அ' பதிவேடு மற்றும் 'சிட்டா பதிவுகள் முடிவுற்றன. இதற்காக ரூ.164இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.



*சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு கணினிப் பயிற்சி துவக்கம் – 21.4.2003*

இதுவரை 66 வட்டாட்சியர் அலுவலகங்கள் Online செய்யப்பட்டுவிட்டன. மீதமுள்ள வட்டாட்சியர் அலுவலகங்கள் 1.7.2003–க்குள் Online-ல் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

**தொடுதிரைக் கணினி**

பொதுமக்களின் உபயோகத்திற்காக 29 வட்டங்களில் தொடுதிரைக் கணினி (TSCK) அமைக்கப்பட்டுள்ளது. இது 15.4.2002 முதல் செயல்பட்டு வருகிறது. 8.4.2003 முடிய 51,898 நபர்கள் இந்த தொடுதிரைக் கணினியினைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

**நிலப்படங்களை**
**கணினி மயமாக்கும் திட்டம்**

நிலப்படங்களை கணினி மயமாக்கும் திட்டத்தின் கீழ் 2 முன்னோடித் திட்டங்கள் செங்கல்பட்டு, கொடவாசல், ஈரோடு மற்றும் கோபிச்செட்டிப் பாளையம் வட்டங்களில் செயல்படுகின்றன. இதுவரை 122 இலட்சம் செலவில் 1.22 இலட்சம் நிலப்படங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

**10-ஆவது மானியக் குழு**

10–ஆவது நிதி மானியக் குழுத் திட்டத்தின் கீழ் மாவட்டங்களில் 33 கட்டடங்கள் ரூ.3.30 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டது.

ரூ.3.5 கோடி செலவில் சென்னையில் ஆவணக் காப்பகத்திற்காக 3 மாடிக் கட்டடம் கட்டப்பட்டு 18.7.2001 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறக்கப் பட்டது.

2001–2002, 2002–2003–இல் 4,43,265 பட்டா பாஸ் புத்தகங்கள் வழங்கப்பட்டது.

முதியோர் ஒய்வூதியத் திட்டத்தின்கீழ் 2002–2003ஆம் ஆண்டில் 12,19,696 பயனாளிகள் பயன் பெற்றனர்.

முதியோர் ஒய்வூதியம் பெறும் பயனாளிகளில் 1,44,973 நபர்கள் சத்துணவுக் கூடத்தில் உணவு உட்கொண்டு மாதம் 2 கிலோ இலவச அரிசி பெறுகின்றனர். 8,03,202 நபர்கள் சத்துணவுக் கூடத்தில் உணவு உட்கொள்ளாமல் மாதம் 4 கிலோ இலவச அரிசி பெறுகின்றனர்.

முதியோர் ஒய்வூதியம்: 2000–2001இல் ரூ.251.62 கோடி, 2001–2002இல் ரூ.263.07 கோடி, 2002–2003இல் ரூ.296.03 கோடி.

இலவச அரிசி: 2000–2001இல் ரூ.10.95 கோடி, 2001–2002இல் ரூ.9.21 கோடி, 2002–2003இல் ரூ.17.43 கோடி.

இலவச வேட்டி, சேலை: 2000–2001இல் ரூ.12.60 கோடி, 2001–2002இல் ரூ.12.40 கோடி, 2002–2003இல் ரூ.16.80 கோடி மதிப்பில் பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது.

**விபத்து நிவாரணத் திட்டம்**

விபத்தினால் இறக்க நேரிட்டால் தமிழக அரசு பங்காக ரூ.5,000–ம் மத்திய அரசு பங்காக ரூ.10,000/–மும் ஆக ஒட்டு மொத்தம் ரூ.15,000/– இறந்தவருடைய குடும்பத்தினருக்கு (வாரிசுதாரர் களுக்கு) நிவாரணத் தொகை கொடுக்கப்படுகிறது.

## கணினி மயமாகும் பதிவுத்துறை

இதுவரை 350 அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டு இவைகளில் 225 அலுவலகங்கள் 13.9.2002 முதல் செயல்பாட்டில் உள்ளது.

2001–2002இல் ரூ.1264.20 கோடி வருவாய் ஈட்டியது பதிவுத்துறை. இவை அதற்கு முந்தைய ஆண்டைவிட 15.54 சதவிகிதம் அதிகமாகும். 2002–2003இல் பிப்ரவரி வரை ஈட்டப்பட்ட வருவாய் ரூ.1444.31 கோடியாகும். இந்த வருவாய் உயர்வு தமிழ்நாட்டில் நில விற்பனை அதிகரித்து வருவதைச் சுட்டிக்காட்டுவதாகக் கொள்ளலாம்.








**"ரெஜிநெட்"**

நாட்டிலேயே முதல்முறையாக சென்னை மாநகரில் அமைந்துள்ள 20 சார்பதிவாளர் அலுவலகங்களை இன்டர்நெட் மூலம் இணைக்கின்ற ரெஜிநெட் (REGINET) என்ற இணைப்பகத்தை பதிவுத்துறைக்கென மாண்புமிகு முதல்வர் ஜெ ஜெயலலிதா அவர்கள் 13.9.2002 அன்று துவக்கி வைத்துள்ளார்கள்.

**சமாதான் திட்டம்**

தனித்துணை ஆட்சியரால் பெறப்படும் ஆவணங்களின் எண்ணிக்கையை ஈடுசெய்யும் அளவுக்கு அவரால் ஆவணங்களைத் தீர்வு செய்ய முடிவதில்லை. இதனால் அரசுக்கு வரவேண்டிய வருவாய் தடைபட்டதால் இதற்காக 1.10.2002 முதல் 29.11.2002 வரை 60 நாட்களுக்கு "சமாதான் திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டு, ரூ.95.95 கோடி முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

## வணிகவரித்துறை

2001–02ஆம் ஆண்டில் வணிக வரி வருவாய் ரூ.8,905 கோடியாக 2.78 விழுக்காடு வளர்ச்சி விகிதத்தை அடைந்தது.

வரி வழக்குகளையும், பூசல்களையும் குறைக்க புதிய சமாதான் திட்டம் 1–7–2002 முதல் 31–10–2002 வரை அமல்படுத்தப்பட்டது. இதன் மூலம் ரூ.10.43 கோடி வசூலிக்கப்பட்டது. ரூ.45.40 கோடி ஈடு செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு, தங்கும் விடுதிகளின் மீது விதிக்கப்பட்டு வந்த ஆடம்பர வரிவிகிதம் 31–12–2002 முதல் பின்வருமாறு குறைக்கப் பட்டுள்ளது.

| நாளொன்றுக்கு தங்குவதற்கான கட்டணம் | முன்னர் வரிவிகிதம் | தற்போதைய வரிவிகிதம் |
|---|---|---|
| ரூ.200 முதல் ரூ.499 வரை | 15% | 5% |
| ரூ.500 முதல் ரூ.999 வரை | 20% | 10% |
| ரூ.1000 (அ) அதற்கு மேல் | 25% | 12.5% |

2002–2003ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி அமல்படுத்தப்பட்ட வரிவிகித மாற்றங்களினால் கிடைக்கப்பெற்ற கூடுதல் வரி வருவாய் பின்வருமாறு :

அ மறு விற்பனை மீதான வரி ரூ.143.32 கோடி (1–7–2002 முதல் 31–3–2003 வரை)

ஆ மேல் வரி மூலம் ரூ.155.36 கோடி (1–7–2002 முதல் 31–3–2003 வரை)

இ. தங்க வெள்ளி நகை மற்றும் மதிப்பு மிக்க கற்கள் மீதான ஆடம்பர வரி ரூ.4.56 கோடி (1–7–2002 முதல் 31–3–2003 வரை)

ஈ. நடப்பு ஆண்டில் 2001ஆம் ஆண்டு நுழைவு வரிச் சட்டத்தின் பொருட்களின் மீதான நுழைவு வரி (2002–2003) ரூ.228.77 கோடி.

2002–2003ஆம் ஆண்டிற்கான வரி வருவாய்க்கான மொத்த இலக்கு ரூ.10,240 கோடி ஆகும். ஆனால் இவ்வாண்டில் வசூலிக்கப்பட்ட மொத்த வரி ரூ.10,199.88 கோடி ஆகும். கடந்த



ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பு ஆண்டில் ரூ.1295.20 கோடி அதிகம் வசூலிக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் வருவாய் வளர்ச்சி விகிதம் 14.55 விழுக்காடாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## குடும்பத்திற்கு ஒரு வீடு

மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான தமிழக அரசு தமிழகத்தில் நாளும் உயர்ந்து வரும் வீட்டுவசதித் தேவைகளை நிறைவு செய்வதற்காக "குடும்பத்திற்கு ஒரு வீடு" என்னும் உயரிய திட்டத்தினை தலையாய பணியாகக் கொண்டு செயல்படுத்தி வருகிறது.

★ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், கடந்த 2 ஆண்டுகளில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்காக 562 மனைகளும், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காக 106 மனைகள், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்காக 747 மனைகள்/குடியிருப்புகளும் மற்றும் உயர்வருவாய்ப் பிரிவினருக்காக 423 மனைகள்/குடியிருப்புகளும் ஆக மொத்தம் 1,838 மனைகள்/குடியிருப்புகள் மொத்தம் ரூ.94 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 6,548 மனைகள் மற்றும் 4,155 வீடுகள்/அடுக்குமாடி குடியிருப்புகளை ரூ.284.35 கோடிக்கு விற்பனை செய்துள்ளது.

வீட்டுவசதி

★ தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 2001 முதல் 2003 வரையிலான இரண்டு ஆண்டு காலங்களில் 5,828 அடுக்குமாடி குடியிருப்புகளும், 1,000 தனி வீடுகளும் மற்றும் 7,060 கல்நார் ஓட்டு கூரை வீடுகள் ரூ.60.20 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 1624 குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டி முடிக்கப்பட்டு ரூ.12.39 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதே பகுதியில், பகுதி 2இல் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 1,704 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ரூ.11.42 கோடி செலவிடப் பட்டுள்ளது.

தீப்பிடிக்காத வீடுகள் அமைத்தல்

★ சென்னை நகரில் சுற்றுச் சுவர்களுடன் கூடிய கல்நார் ஓட்டுக் கூரைகள் 6,300 குடும்பங்களுக்கு ரூ.10.76 கோடி செலவில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. சென்னை நகரில் மேலும் 2,724 தீப் பிடிக்காத வீடுகள் ரூ.4.24 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

★ தமிழகத்தில் நகர குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு கான்கிரீட் தளம், கூரைத் தளம் மற்றும் செங்கல் சுவர்களுடன் கூடிய 150 சதுர அடி கட்டட பரப்பளவு கொண்ட 1000 தனி வீடுகள் ரூ.4 கோடி செலவில் அமைத்து முடிக்கப் பட்டுள்ளன.

★ இத்திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 1,620 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அமைத்து முடிக்கப் பட்டுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக இதுகாறும் ரூ.13.48 கோடி செலவிடப் பட்டுள்ளது.

★ சென்னை மாநகரில் கட்டப்பட்டுள்ள சுமார் 10,000 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பழுதுபார்ப்புப் பணிகள் ரூ.6.55 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன.





★ சென்னை மாநகரில் சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் ஒத்துழைப்புடன் 30.4.2002 வரையிலான ஓராண்டு காலத்தில் 100 ஆழ்துளைக் குழாய் கிணறுகள் தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதிகளில் அமைக்கப்பட்டு ரூ.0.76 கோடி செலவிடப் பட்டுள்ளது.

★ குடிசைப் பகுதிகளில் வாழும் 38,709 ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த குடும்பங்கள் ரூ.37.40 கோடி செலவில் பல்வேறு திட்டப்பணிகளின் மூலம் பயனடைந்துள்ளனர்.

★ குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகளில் 30,124 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. இதற்காக ரூ.5.250 கோடி செலவிடப்பட்டுள்ளது.

★ 5,251 குடியிருப்புகளுக்கு கிரயப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. 7,723 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. 162 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. 1,024 மனைகளுக்கு கிரயப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

★ நகர்ப்புறப் பூங்காக்களைப் பராமரிக்கும் முகத்தான் திருச்செங்கோடு மற்றும் தூத்துக்குடி நகரங்களுக்கு 2001-2002ஆம் ஆண்டில் ரூ.2.40 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ கடந்த இரண்டாண்டில் கிராமிய மற்றும் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டங்களின்கீழ் 39,818 வீடுகள் கட்டிட ரூ.620.83 கோடி ரூபாய் கூட்டுறவு வீட்டுவசதித் துறை மூலம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ புதுடெல்லியில் 3.11.2001 அன்று நடைபெற்ற 13ஆவது தேசிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் கருத்தரங்கில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ ஜெயலலிதா விருது வழங்கப்பட்டுள்ளது.

★ தவணை தவறும் வட்டித் தொகைகள் தள்ளுபடி செய்யும் திட்டத்தின்கீழ் இதுவரை 76,145 பயனாளிகள் ரூ.33 கோடியளவுக்கு பயனடைந்துள்ளனர்.

## சிறந்த காவல்துறை

*"இன்று இந்தியாவிலேயே அனைத்து மாநிலங்களிலும், மிகச் சிறந்த காவல் துறை தமிழ்நாடு காவல் துறை தான். சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில், நிலை நாட்டுவதில், பராமரிப்பதில் இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதல் இடம் வகிக்கிறது. குற்றங்கள் எண்ணிக்கையும் தமிழ்நாட்டில் தான் பிற மாநிலங்களை விட மிகவும் குறைவாக இருக்கின்றன.*

*இந்த நல்ல நிலை தொடர வேண்டும். இந்தியாவிலேயே சிறந்த காவல் துறை தமிழ்நாடு காவல் துறை தான் என்ற பெருமையை நாம் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். நம் காவல் துறையின் திறமை மென்மேலும் வளர வேண்டும். காவல் துறையின் தரம் மேம்பட வேண்டும் என்பது தான் இந்த அரசின் நோக்கம் ஆகும். காவல் துறையினரின் பணி மிகவும் கடினமான பணி. நாட்டில் எத்தனையோ தொழில்கள் இருக்கின்றன. எத்தனையோ விதமான பணிகள் இருக்கின்றன. ஆனால், எல்லாவற்றையும் விட மிகவும் கடினமான, ஆபத்து நிறைந்த சிரமமான பணி காவல் துறையினரின் பணி ஆகும். இத்தகைய ஆபத்து நிறைந்த சிரமமான கடினமான பணியை விரும்பி ஏற்றுள்ள காவல் துறையினர் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுதல் களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்".*

*– காவல் துறைப் பணியாளர்களின் குறை தீர்க்கும் நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்* செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்.

## காவல் கரங்களை ஊக்கும் கரங்கள்

★ காவல்துறைக்கு போக்குவரத்து மிக இன்றியமையாததாகும். 2002-2003-ஆம் ஆண்டில் கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக வாங்கப்பட்ட வாகனங்கள் உட்பட 1244 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டன.

*"எங்கு அமைதி ஆட்சி செலுத்துகிறதோ, அங்கு வளர்ச்சி வளர்பிறை ஆகிறது. தமிழகம் இந்தியாவில் முதல் நிலை நோக்கி, முன்னேறி வருகிறது என்றால், தமிழகத்தில் நிலவுகின்ற அமைதியும், அதற்கு ஒரு முக்கிய காரணம்.*

*கடந்த இரண்டு ஆண்டு காலமாக, தமிழகம், சாதிப்பூசல் அற்ற, மதக் கலவரம் இல்லாத மாநிலமாக விளங்கி வருகிறது. இது தற்செயல் விளைவு அல்ல - இது ஒரு சாதனை! நாம், நமது சிந்தனையாலும், செயலாலும் படைத்த சாதனை. இதற்கு எது காரணம்? சகல மக்களையும் ஒன்றாகக் கருதும், நமது மனப்பான்மை ஒரு காரணம்! மக்கள் இந்த அரசின் மீது வைத்த, மாபெரும் நம்பிக்கை ஒரு காரணம்! காவல் துறையின் இடையறாத கண்காணிப்பு, இன்னொரு காரணம்!*

*தமிழகக் காவல் துறை, இந்தியாவிலேயே சிறந்த காவல் துறையாக விளங்குகிறது. இந்தப் பாரம்பரியச் சிறப்பை இன்னும் உயர்த்துகின்ற, உயரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது, இந்த அரசு".*

*- சட்டப்பேரவையில்*
*மாண்புமிகு முதலமைச்சர்*
செல்வி **ஜெ ஜெயலலிதா** *அவர்கள்*

★ 1.1.2002இல் 7,433 ஆக இருந்த தமிழ்நாடு காவல்துறையின் வாகன எண்ணிக்கை 28.2.2003இல் 8,677 ஆக உயர்ந்துள்ளது.

★ உணவு மானியத் திட்டத்துக்கு காவலர்களின் குடும்பங்களின் நலன் கருதி, பொது விநியோக விலையில் தோராயமாக 72 சதவீதம் 9 வகையான உணவுப் பொருள்கள் (மண்ணெண்ணெய் உள்பட) வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக 2002-2003 வருடத்தில் ரூ.226.49 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டது.

★ தமிழ்நாடு காவலர் சேமநல நிதிக்கு 2002-2003 ஆம் ஆண்டு முதல் ரூ.50 இலட்சம் கொடையாக வழங்கி வருகிறது.

★ காவலர்களின் குழு காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் பணி நிமித்தமாக செல்லும்போது விபத்துகளில் மரணம் ஏற்பட்டால், அவர்களின் வாரிசுதாரருக்கு ரூ.1 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் வரை வழங்கப்பட்டு, 2002-2003 ஆம் வருடத்தில் ரூ.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு அதிவீரப்படை மற்றும் சிறப்பு பிரிவுகளில் பணியாற்றும் காவலர்களுக்கு குழு காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.10 இலட்சம் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

**கருணைத் தொகை**

வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு காயம் அடையும் காவல் பணியாளர்களுக்கும் அல்லது இறந்தவரின் குடும்பத்திற்கு கருணைத் தொகை கீழ்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| இறந்தால் | ரூ. 5 இலட்சம் |
| நிரந்தரமாக உறுப்பு இழந்தால் | ரூ. 1 இலட்சம் |
| கொடுங்காயம் அடைந்தால் | ரூ. 20,000/- |
| சிறுகாயம் அடைந்தால் | ரூ. 10,000/- |

வீரதீரச் செயல்புரிந்து, இறந்து போகும் காவல் பணியாளர் அவர் கடைசியாக பெற்று வந்த ஊதியத்தையே அவர் பணி முதிர்வு ஓய்வுபெறும் வரை, அன்னாரின் வாரிசுக்கு குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**பரிசுத் திட்டம்**

★ காவல் துறையினரின் குழந்தைகளுக்கான பரிசுத் தொகை 2002-2003-ஆம் ஆண்டுக்கு 215 மாணவர்களுக்கு வழங்குவதற்கு ரூ.9,70,000 செலவழிக்கப்பட்டது.

★ காவல்துறையில் பணியாற்றும் அரசிதழ் பதிவு பெறாத களப்பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் குழந்தைகள் கல்லூரி அளவில் உயர்கல்வி பெற உதவித்தொகை வழங்கப் படுகிறது.

**கருணை அடிப்படையில் நியமனம்**

பணிக்காலத்தில் மரணமடைந்த அரசு ஊழியரின் வறுமை நிலையிலுள்ள வாரிசுதாரருக்கு 2002-2003ஆம்






வருடம் 30 இளநிலை உதவியாளர்கள், 14 ஆயாக்கள், 216 காவலர்கள் / பெண் காவலர்கள் (24 பெண் காவலர்கள் + 192 ஆண் காவலர்கள்) ஆகியோர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது. 805 கணினி ஆபரேட்டர்கள், 225 வீட்டு ஏவலர்கள் மற்றும் 63 அடிப்படைப் பணியாளர்கள் நியமனம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. 249 நபர்கள் இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்கள் / அலுவலக உதவியாளர்கள் / காவலர்கள் / காத்திருப்போர் பட்டியலிலிருந்து காவலர்களாக பணி நியமனம் செய்ய ஆணை வழங்கியுள்ளது.

இந்தியாவிலேயே பெண் கமாண்டோக்களை உருவாக்கிய பெருமை, தமிழக காவல் துறைக்கே உண்டு. அந்தப் பெருமையை தந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்.

காவல் துறையை நவீனப்படுத்துவதற்கான முன்னோடி பயிற்சி நிலையமாக தமிழ்நாட்டில் "போலீஸ் அகாடமி" நிறுவப்படுகிறது.

காவல் நிலையங்களுக்கும் மாவட்ட காவல் அலுவலகங்களுக்கும் அடிப்படை வசதிகளை அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மாவட்டங்களில் தடய அறிவியல் ஆய்வுக் கூடங்கள் வலுப்படுத்தப்படுகின்றன.

2001-02 மற்றும் 2002-03 ஆகிய இரு ஆண்டுகளில் காவல்துறையை நவீனப்படுத்து வதற்காக தமிழக அரசு ரூ.136.20 கோடி நிதி உதவி அளித்துள்ளது.

3,581 ஆண் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சிக்குப் பின்னர் அணிகளுக்கு நியமனம் செய்யப்பட்டனர். மேலும், 300 பேர் பயிற்சியில் உள்ளனர். விரைவில் 961 பெண் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 631 மகளிர் காவலர்களையும் தேர்வு செய்யும் பணி முடிவுறும் நிலையிலுள்ளது.

ஒவ்வொரு உட்கோட்டத்திலும் ஒரு அனைத்து மகளிர் காவல்நிலையம் என்ற அடிப்படையில் 2001 ஆம் ஆண்டு, 126 மகளிர் காவல் நிலையங்களை கூடுதலாக நிறுவ உள்ளதாக அரசு அறிவித்தது. 2001-2002 ஆம் ஆண்டில், முதற்கட்டமாக உதவிக்கரம் வசதியுடன் 50 மகளிர் காவல் நிலையங்கள் திறக்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக, அரசாணை பல்வகை எண்.625 உள்துறை (காவல் 14) நாள் 18.7.2002 கீழ் மேலும் 40 மகளிர் காவல் நிலையங்களைத்



திறக்க ஒப்பளித்தது. அவற்றில், 27.1.2003 அன்று 37 காவல் நிலையங்கள் திறக்கப்பட்டன. இக்காவல் நிலையங்களில், குழந்தைகளுக்கான உதவிக்காம். வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் தற்பொழுது 146 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

சென்னை நகரில் 1091 மற்றும் 1098 ஆகிய இரு தொலைபேசி எண்களை சுழற்றினால் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு உதவிக்கரம் அளிக்கப்படுகிறது.

கூடுதல் காவல்துறை இயக்குநர் ஒருவரின் தலைமையின் கீழ் மதுவிலக்கு அமல்பிரிவு சிறப்பாகப்பணியாற்று கின்றது.

சமுதாயக் காவல் முறை சென்னை நகரம், அசோக் நகர் மாவட்டத்தில் 9.11.2002 அன்று ஒரு வித்தியாசமான முறையில் தொடங்கப்பட்டது. இந்த

மாவட்டம் 29 ரோந்து பிரிவாகப் பிரிக்கப்பட்டு, காலை மற்றும் மாலை நேரங்களில் ரோந்துப் பணி மேற்கொள்ளப்படுகிறது. மக்களின் அத்தியா வசியத் தேவையான குடிநீர், மின்சாரம், அவசர சிகிச்சை வாகனம் போன்ற பணிகளுக்கும் காவல் பணியாளர்களின் சேவை பயன்படுத்தப் படுகிறது.

சென்னை நகரில் ஒப்பளிக்கப்பட்ட 2,147 ஊர்க்காவல் படையினரில் 500 ஊர்க்காவல் படையினரை ஒரு நாள் விட்டு ஒரு நாள் இரவு ரோந்துப் பணிக்கு அமர்த்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

சென்னை நகரில் குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளின் ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்தவும் 81 மஞ்சள் படை மற்றும் 81 நீலப்படை முறையே காலை மற்றும் இரவு நேரங்களில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இதுவரை 815 காவல்துறை நண்பர்கள் ரோந்துப் பணிக்காக அமர்த்தப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் உதவியுடன் சென்னை நகரில் உள்ள தியாகராயர் நகர் பகுதியிலும், வடக்கு மண்டலத்திலும் சிறப்பு சுற்றுக் காவல் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிசிடிவி கண்காணிப்பின் மூலம் தியாகராயர் நகர் ரங்கநாதன் தெரு முழுவதும் கண்காணிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.





உயர்மட்டக் குழு தவிர, மகளிர் ஆலோசனைக் குழு சென்னை நகரில் அமைக்கப்பட்டு செயல்படுவதன் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் நன்கு பாமரிக்கப்படுகின்றன.

25.4.2002 அன்று நடைபெற்ற காவல்துறை மானியக் கோரிக்கையின் போது சட்டமன்றத்தில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புதிதாக வீராபுரத்தில் தலைமையகத்தையும் மற்றும் வீராபுரம் (சென்னை), கோயம்புத்தூர், மதுரை, வேலூர், திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஆறு அணியுமாக "சிறப்புப் படை" அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அவ்வறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு "சிறப்பு செயல்படை" என்ற பெயரில் தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் அணி ஒன்றை உருவாக்க அனுமதி அளிக்கப்பட்டது. இதேபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் "உதவி ஆய்வாளர் பயிற்சி அகாடமி" அமைக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள்.

10.12.2002 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகள் கூட்டு மாநாட்டில் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அனைத்து மகளிர் காவல் அணியைப் பெற்றிருக்கும் முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடு வெகு விரைவில் அடைய உள்ளதாக அறிவித்தார்கள்.

2002- ஆம் ஆண்டில், சிறு குற்றங்களில் ஈடுபட்ட 17,694 நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆந்திரப்பிரதேச காவல் துறையினரின் ஒத்துழைப்புடன் மயக்க பிஸ்கட்டுகளைக் கொடுத்து கொள்ளையடிக்கும் கொல்கத்தாவைச் சேர்ந்த மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டனர். பிரபல குற்றவாளிகள் 11 பேர் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர். குழந்தைகளைக் கடத்திச் செல்வோர் மீது கடும் நடவடிக்கை எடுத்து, 51 சிறுமியர், 10 சிறுவர்களை, சென்னை மற்றும் கோவை ரயில்வே காவல் நிலையத்தினர்

மீட்டனர். மேலும் வீட்டை விட்டு ஓடிப்போன 102 பெண்களை மீட்டனர்.

239 மதுவிலக்கு குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு, ரயில்களில் கடத்திச் செல்லப்பட்ட 5.340 இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள், 45,646 கள்ளச் சாராய பாக்கெட்டுகள், 46 கிலோ கஞ்சா. 5.350 கிலோ அரிசி ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் தற்போது புதுப்பொலிவுடன் செயலாற்றி வருகிறது.

இக்கழகத்திற்கென சிறப்பு அலுவலகம் இல்லாததை அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் புதிய அலுவலகக் கட்டடம் கட்ட உத்தரவிட்டார்கள். அதன்படி சென்னை, கீழ்ப்பாக்கம் 132, பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலையில் ரூ.1.50 கோடி மதிப்பில், 15 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் 3 மாடிகளைக் கொண்டு கட்டப்பட்ட கட்டடத்தை 3.3.2003 அன்று திறந்து வைத்தார்கள்.

2002-03 ஆம் ஆண்டில் 2,600க்கும் அதிகமான குடியிருப்புகள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டு பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

கிளைச் சிறைகள் மற்றும் 2 பெண்கள் தனிச் சிறைகளாக மாற்றி அரசு ஆணையிட்டுள்ளது. அச்சிறைகளில் சிறைவாசிகளின் மறுவாழ்விற் காக கணிப்பொறிப் பயிற்சி அளிக்க ஏதுவாக வரலாற்றுச் சிறப்பு மிக்க திறனாய்வுப் போட்டியினை நடத்த முன்வந்து, தமது பங்காக ரூ.6.08 இலட்சம் நிதி ஒதுக்கீடும் செய்து இப்போட்டியினை சென்னையில் சிறப்பாக நடத்தியது சிறைவரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும். ரூ.85.30 இலட்சம் செலவில் திருவைகுண்டம் கிளைச்சிறையினை முதல் மாவட்ட சிறையாக நிலைஉயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

இவ்வரசு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறையை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக புதிய உரிமம் வழங்கும் முறையை அறிமுகப்படுத்தி உள்ளது.

இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களின் விற்பனை கடந்த ஆண்டுகளைவிட குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. கள்ளச் சாராயம் மற்றும் தீர்வை செலுத்தாத மதுபானங்களை ஒழிக்கவும் உதவி அரசிற்கு வருவாய் இழப்பை தடுத்ததுடன், கூடுதல் வருவாய் பெறவும் வழிவகுத்துள்ளது. இப்புதிய உரிமம் வழங்கும் முறையினால் அரசு கருவூலத்திற்கு இத்துறையின் மூலம் 2000–2001ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ.3,373.56 கோடிக்கு மாறாக 2003–2004ஆம் ஆண்டில் ரூ.3,808.35 கோடி கிடைத்துள்ளது.

இந்த அரசு பின்பற்றிய கடுமையான நடவடிக்கைகளினால் 2002–2003ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் மெத்தனால் தொடர்பான எந்த ஒரு உயிர்ச்சேத சம்பவமும் நிகழவில்லை.

ரூ.2.5 கோடி செலவில் மறுவாழ்வுக் குழு மற்றும் மறுவாழ்வு நிதி ஏற்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் அவரவர்கள் மாவட்டத்திலுள்ள கரும்புள்ளி கிராமங்களையும், கள்ளச்சாராயம் காய்ச்சுதல்/ விற்பதில் ஈடுபடுகின்ற குற்றவாளிகளையும் கண்டறிந்து, அவர்களை இத்தகைய தீங்கு விளைவிக்கும் தொழிலிலிருந்து விடுவித்து, அவர்கள் மாற்று வாழ்க்கையைத் தொடங்குவதற்குத் தேவையான பொருளுதவி, மானியங்கள் மற்றும் கடன்களை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## சட்டத்துறை

★ பெங்களூரில் உள்ள இந்திய தேசிய சட்டப் பள்ளியின் தர நிலைக்கு சென்னையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் தரநிலையை உயர்த்தியும் 5 ஆண்டு பி.ஏ,பி.எல்., (ஹானர்ஸ்) சட்டப்படிப்பில் 80 மாணவர்களை சேர்ப்பதற்கும் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அதற்கு இணங்க சென்னையில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் 2002–2003ஆம் கல்வியாண்டில் பி.ஏ., பி.எல். (ஹானர்ஸ்) சட்டப் படிப்பிற்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டு வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

★ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக பாடத்திட்டத்தின்படி தமிழில் சட்டப் புத்தகங்களை எழுத சட்டக் கல்லூரி ஆசிரியர்கள் அரசால் பணிக்கப்பட்டுள்ளனர்.

★ சட்டத்துறை பெரும்பாலான சட்டங்களை மொழி பெயர்த்துள்ளது. இவ்வாறு மொழி பெயர்க்கப் பட்டவை மைய அரசின் ஒப்புதலுடனும் இந்திய குடியரசு தலைவரின் அதிகாரத்துடனும் இருமொழி பதிப்பால் வெளியிடப்பட்டுள்ளன. 16.4.2003 அன்று இருமொழி பதிப்பில் உள்ள 60 மையச் சட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

## கல்வி என்னும் ஒளி விளக்கு

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்ற யவை –

– இது வள்ளுவர் வாக்கு

கல்விப் பணிகளுக்கு தடையில்லா நிதி உதவி அளித்து தகைசால் சமுதாயத்தை உருவாக்க அனைத்து முயற்சிகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் நிகழ்த்தப்படாத பல சாதனைகளை கடந்த 2001–2002 மற்றும் 2002–2003ஆம் ஆண்டுகளில் கல்வித்துறையில் தமிழ்நாடு நிகழ்த்தியுள்ளது.

✶ தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் "அனைவர்க்கும் கல்வித் திட்டம்" 2001–2002–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டம் 2010 வரை செயல்படுத்தப்படும். முதற்கட்டமாக, பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத்திட்டத்திற்காக ரூ.1,649 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்திய அளவில் திட்ட அறிக்கை முடிவு செய்த முதல் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

✶ "அனைவர்க்கும் கல்வி" திட்டத்தின் கீழ் 2001–2003 ஆகிய இரண்டு ஆண்டுகளில் ரூ.184.22 கோடி செலவில் பல பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

✶ 2001–2003 ஆகிய இரு ஆண்டுகளில் 756 தொடக்கப்பள்ளிகள், 676 நடுநிலைப் பள்ளிகள், 220 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 260 மேல்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டன.

✶ முதல் முறையாக கல்வித்துறைக்காக நபார்டு வங்கியிடம் கடன் பெற்று இரண்டு கட்டமாக 346 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர், கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.99 கோடி செலவில் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

✶ ஆசிரியர் பயிற்சி சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறை கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுதோறும் ஏறத்தாழ 4,661 தரம் வாய்ந்த மாணவர்கள் குறைந்த செலவில் ஆசிரியர் பயிற்சி பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் உள்ள இடங்கள் உயர்த்தப்பட்டு ஆண்டுதோறும் ஏறத்தாழ 1,560 நபர்கள் கூடுதலாகப் பயிற்சி பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

✶ பள்ளி ஆண்டுத் தேர்வில் 6–12 வகுப்புகளில் ஒன்று அல்லது இரண்டு பாடங்களில்



தோல்வியுறும் மாணவர்களுக்கு உடனடி மறு தேர்வு நடத்தப்பட்டு 10–ஆம் வகுப்பு மற்றும் +2 தேர்வுகளில் மட்டும் 56,063 மாணவர்கள் 2002–ஆம் ஆண்டில் பயன் பெற்றார்கள்.

* ஆசிரியர் இடமாற்றலில் வெளிப்படையான கலந்தாய்வு முறை பின்பற்றப்பட்டு சுமுகமான முறையில் ஆசிரியர்கள் இடமாறுதல் நடைபெறுகிறது.
* 6, 7, 8 வகுப்புகளில் பி.எட். தகுதி பெற்ற பட்டதாரி இடைநிலை ஆசிரியர்களை நியமிக்க ஆணையிடப்பட்டுள்ளது.
* 10,178 ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.
* பள்ளிகளில் பி.டி. ஆசிரியர் மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் நியமனத்தில் போட்டித் தேர்வு மூலம் திறமை வாய்ந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
* மெட்ரிகுலேஷன் பள்ளிகளை மேற்பார்வையிட தனி இயக்ககம் அமைக்கப்பட்டுள்ளது.
* இளைஞர் விளையாட்டுத் திறன் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவியல் தொழில் நுட்பத்துறைக்கு அயராத ஒத்துழைப்பை நல்கி வருகிறார்கள்.

ஆராய்ச்சித் திட்டம் ஒன்றுக்கு ரூ.5 இலட்சங்கள் வரை நிதி உதவி வழங்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 15 ஆய்வுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்காக கடந்த இரண்டாண்டுகளில் ரூ.40 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன.

### மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் இறுதியாண்டில் பயின்றுவரும் மாணவர்களுக்கு சமூகத்திற்கு உபயோகமுள்ள ஆராய்ச்சித் திட்டங்களைச் செய்வதற்கு திட்டம் ஒன்றிற்கு அதிகபட்சமாக ரூ.10,000/– வரை நிதி உதவி வழங்கப்படுகிறது.

கடந்த இரண்டாண்டுகளில் 370 மாணவர் ஆராய்ச்சித் திட்டங்களைத் தேர்ந்தெடுத்து நிறைவேற்றியதில் 1200 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். மொத்தம் ரூ.23 இலட்சங்கள் இத்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது.

### தமிழக அறிவியலறிஞர்கள் விருது

10 துறைகளைச் சார்ந்த சிறந்த அறிவியல் அறிஞர்களை ஊக்குவித்து பெருமைப்படுத்துவதற்காக கடந்த இரண்டாண்டுகளில் 20 அறிவியலறிஞர்களுக்கு ரூ.2 இலட்சங்கள் ரொக்கமாகவும் தாமிரப் பட்டயங்களும் வழங்கப்பட்டு உள்ளன.

### அறிவியல் வெளியீடுகளுக்கு நிதியுதவி

தமிழில் வெளிவந்த அறிவியல் வெளியீடு களுக்கு ரூ.1.40 இலட்சங்கள் ஊக்க ஆதரவுத் தொகை வழங்கப்பட்டுள்ளன.

### அறிவியல் தொழில்நுட்பத்தைப் பரப்புதல்

அறிவியல் தொழில்நுட்பப் பயன்களை விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளிடையே பரப்ப கடந்த இரண்டாண்டுகளில் 162 கல்வி நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.26.22 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதனால் மொத்தம் 1 இலட்சத்து 62 ஆயிரம் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அறிவியல் விழிப்புணர்ச்சியடைய வாய்ப்பு பெற்றனர்.

### உலகப் புகழைத் தேடித்தரும் உயர்கல்வி

* தமிழக அரசு, அண்ணா பல்கலைக்கழக (திருத்தப்பட்டது) சட்டம் 2001–இன் மூலம் தமிழக மாநிலத்தில் உள்ள 'அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் சனவரி 2002 முதல் அண்ணா பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கிறது. அண்ணா பல்கலைக்கழகம் தனது வெள்ளி விழா ஆண்டை 4–9–2002 முதல் 3–9–2003 வரை கொண்டாடுகிறது.





### கல்வித்தரம்

* தற்போதைய சமூகத்தின் தேவைகளுக்கு பொருத்தமான பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் அவை சார்ந்த அறிவியல் உயர்கல்வியை அண்ணா பல்கலைக்கழகம் அளிக்கிறது.
* ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நடவடிக்கைகளை விளக்கமுடன் செய்யும் கூட்டு செயற்பாட்டினைப் பெற இந்திய வெளிநாட்டு முதன்மை தொழிலகங்களுடனும், கல்வி நிறுவனங்களுடனும் அண்ணா பல்கலைக் கழகம் கருத்து உடன்பாட்டறிக்கையில் கையெழுத்திட்டிருக்கிறது.
* பல்கலைக்கழக மானிய ஆணையம் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு 2002இல் மிக உயர்ந்த தரவீதமான ஐந்து நட்சத்திரத் தகுதியை தொழில்நுட்பக் கல்வியின் சிறப்பிற்காக ஐந்து வருடத்திற்கு வழங்கியது.



*காமன்வெல்த் போட்டிகளில் வென்றவர்களுக்கு நிதியுதவி – 24.3.2003*

அண்ணா பல்கலைக்கழகம் ஐந்து அமெரிக்க காப்புரிமைகளை புற்றுநோய், நீரிழிவு நோய், செயலறு நிலை இவற்றைத் தடுக்கும் மூலிகை மூலக்கூறுகளில் பெற்றுள்ளது. குறிப்பிட்ட திசு இலக்குகளும் மூலக்கூறுகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. மேலும் ஐந்து மூலக்கூறுகள் காப்புரிமை பெற ஆயத்த நிலையில் உள்ளன.

இந்திய வான்வெளி ஆராய்ச்சி கழகத்திலிருந்து நுண்துணைக்கோள் உருவாக்க மூன்று கோடி நிதியுதவியுடன் அண்ணா பல்கலைக்கழகம் பெருமைப்படத்தக்க திட்டத்தைப் பெற்றுள்ளது. இது பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனங்களுடனுள்ள உறவை வலுப்படுத்தும். பல்கலைக்கழகத்தின் இலக்கில் இது ஒரு முக்கியமான படியாகும்.

## இளையோர் நலம் மற்றும் விளையாட்டுக்கள்

இன்றைய இளைஞன் நாளைய வளம்மிக்க வரலாற்றை உருவாக்குகிறான். இன்றைய இளைஞன் நாளைய சாதனையாளன்.

### சதுரங்க அரங்கம் மற்றும் கத்திச் சண்டை அரங்கம்

* சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில், சதுரங்க அரங்கம் அமைக்க ரூ.9.05 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு 3.1.2003 அன்று திறந்து வைக்கப்பட்டது. இது பல சதுரங்க வீரர்களுக்குப் பயன்படுகிறது.
* கத்திச்சண்டை அரங்கம், உள்ளரங்க விளையாட்டரங்கத்தில் ரூ.3.85 இலட்சம் செலவில் உருவாகி வருகிறது.
* மாநில மற்றும் தேசிய விளையாட்டுக்களில் பங்கேற்கும் வீரர்கள் காயமடைந்தாலோ, இறந்தாலோ அவருக்கு நிதி உதவி வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. செல்வி கே.சோலைமதி, இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறையினரால், ரூ.2 இலட்சம் நிதிஉதவி பெற்றார்.
* ஜப்பானில் நடந்த உலகக்கராத்தே போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற நாகப்பட்டினம் என்.வி.ஆர். வாசுதேவனுக்கு ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டது.

★ உலகத்தர வரிசைக்கான டென்னிஸ் போட்டியில் பங்கேற்ற செல்வி ரூஷ்மி சக்ரவர்த்திக்குத் தமிழ்நாடு அரசு ரூ.4 இலட்சம் வழங்கியது.

**உயர் ஊக்கத்தொகை**

இதில் மான்செஸ்டர் காமன்வெல்த் நீளம் தாண்டுதல் போட்டியில் தாமிரப்பதக்கம் வென்ற திருமதி. அஞ்சு ஜார்ஜுக்கு ரூ.11.50 இலட்சமும், வலுதூக்கும் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற திரு.டி.முத்துவுக்கு ரூ.17.25 இலட்சமும், குழுப்போட்டிகளில் டேபிள் டென்னிஸில் தாமிரப் பதக்கங்கள் பெற்ற திரு.எஸ்.இராமனுக்கு ரூ.20 இலட்சமும் பரிசாக உயர் ஊக்கத்தொகையாக வழங்கப்பெற்றன.

தென் கொரியாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நீளம் தாண்டுதலில் தங்கப் பதக்கம் பெற்ற திருமதி. அஞ்சு ஜார்ஜுக்கு ரூ.23 இலட்சமும், ஸ்னூக்கர் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற திரு.ரபித்ஹபீப் அவர்களுக்கு ரூ.23 இலட்சமும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது.

**விளையாட்டு வீரருக்கு வேலைவாய்ப்பு**

சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறையில் விளையாட்டு வீரர்களுக்கு 10 விழுக்காடு வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடும், சிறந்த வீரர் அடிப்படையில் சிறைத்துறையில் 10 விழுக்காடு வேலைவாய்ப்பும் அளிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**கல்வி உதவித்தொகை**

தமிழ்நாட்டுப் பள்ளிகளில் உயர் / மேனிலை வகுப்பிலும், கல்லூரியிலும் பயிலும் தேர்ந்தெடுக்கப் பட்ட 73 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.4.17 இலட்சம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.

**நீச்சல் குளம்**

திருச்சிராப்பள்ளி மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் ரூ.80 இலட்சம் செலவில் உருவாக்கப் பெற்ற நீச்சல் குளம் 10.3.2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

## சென்னை அரசு அருங்காட்சியகத்தின் அரும்பணிகள்

சென்னை அரசு அருங்காட்சியகத்தின் 151 ஆவது ஆண்டு ஆகும் இதனை நினைவுகூரும் வகையில் தொடர்ச்சியான பல நிகழ்ச்சிகளை, நடத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

இவ்வருங்காட்சியகத்துக்கு 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.62 இலட்சம் செலவிடப்பட்டது.

★ பாறை மற்றும் குகை ஓவிய காட்சிக் கூட அமைப்பு மற்றும் அகச்சிவப்பு கதிர்கள் மூலம் ஒலி, ஒளிக் காட்சிகள் செம்மையாக அமைக்கப்பட்டன.

★ 2002–2003 ஆம் நிதியாண்டில் ரூ.370.50 இலட்சம் செலவிடப்பட்டு பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ இலண்டனில் உள்ள குளோப் கலையரங்க பாணியில் அமைக்கப்பட்ட நூற்றாண்டு பழமை வாய்ந்த அருங்காட்சியகக் கலையரங்கம் மீட்டுருவாக்கப்பட்டது.

★ மாண்புமிகு தமிழக முதல்வர் எண்ணியபடி, படிமக்கூடம் மற்றும் வளர்கலைக் கூடம் பராமரிக்கப்பட்டு குளிர்சாதனங்கள் பொருத்தப் பட்டுள்ளன. இக்கூடங்களில் நவீன ஒளி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

★ இவ்வருங்காட்சியகத்தில், புகைப்படங்கள் கி.பி.1805 ஆம் ஆண்டு முதல் எடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றை ஒருங்கிணைத்துப் பட்டியலிட்டுக் குறுந்தகடுகளிலும் காகிதங் களிலும் அச்சிடப்பட்டு பாதுகாக்கப்பட உள்ளன.

★ 'சென்னை மாகாண மொழி மற்றும் பேச்சு வழக்கு – வரி வடிவம்' என்ற நூல் வெளியிடப் பட்டது. தற்பொழுது இக்குறுந்தகடுகளும் புத்தகமும் விற்பனைக்குக் கிடைக்கின்றன.

தமிழக அரசின் நிதி உதவியால் இவ்வருங்காட்சியகத்தின் பாரம்பரியக் கட்டடங்கள் மீட்டுருவாக்கி பாதுகாத்து அவற்றில் மீண்டும் மேம்படுத்தப்பட்ட வகையில் காட்சியமைப்புகள் அமைக்கப்பட பெருமுயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.





## அகில இந்திய குடிமைப்பணிகள் பயிற்சி மையம்

சென்னை அண்ணா நகரிலுள்ள அகில இந்திய குடிமைப்பணிகள் பயிற்சி மையம் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவர்களுக்கு அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வுகள் எழுதுவதற்குப் பயிற்சி அளித்து வருகிறது. இப்பயிற்சி மையம் மாணவர்களுக்கு இறுதித் தேர்வு எழுதுப் பயிற்சி அளிப்பதோடு, மாதிரி நேர் காணலையும் நடத்துகிறது. 2001–இல் இம்மையத்தில் பயிற்சி பெற்ற 21 நபர்களுக்கு அகில இந்தியப் பணிகளில் பணி வழங்கப்பட்டது. 2002–இல் 28 மாணவர்கள் இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

## தகவல் தொழில்நுட்பம்

தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பத் துறையில், நாட்டில் முன்னணியில் உள்ள மாநிலங்களில் ஒன்றாகத் தொடர்ந்து திகழ்ந்து வருகின்றது. இவ்வாண்டும் ஒரு பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் மேற்பட்ட மென்பொருள் ஏற்றுமதி செய்து, 900–க்கும் மேற்பட்ட மென்பொருள் ஏற்றுமதி நிறுவனங்களையும், 50,000க்கும் மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களையும் கொண்ட மாநிலமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க சீரிய தலைமையின் கீழ், தமிழ்நாடு மீண்டும் சிறப்பாகச் செயலாற்றியுள்ளது.

*மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் முன்னிலையில், இணையச் சேவை (Web Services) இணைய வழிக் கல்வி (e-learning), மின்–ஆளுமை (e-Governance) ஆகிய செயற்பாடுகளுக்காக தமிழ்நாடு அரசு, அண்ணா பல்கலைக்கழகம், சன் மைக்ரோ சிஸ்டம் ஆகிய மூன்று அமைப்புகளும், சன் மைக்ரோ சிஸ்டத்தின் நிறுவனத் தலைவரும், முதன்மைச் செயல் அலுவலருமான ஸ்காட் மெக்நியலி அவர்கள் அண்மையில் சென்னை வந்திருந்தபோது, ஒரு உடன்பாட்டு ஒப்பந்தம் (MOU) செய்து கொண்டனர். மின் ஆளுமையில் சிறந்த அறிஞரும் சிந்தனையாளருமான திரு.டக்லஸ் ஹோமஸ் என்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, மூத்த அரசு அதிகாரிகளுக்கு ஒரு பயிலரங்கினை நடத்தினார்.*

மாநிலம் முழுவதும் 14,000 கி.மீ.க்கும் மேலாக பொது மற்றும் தனியார் தொலைத் தொடர்பு வழங்குபவர்கள் (Private Communication Providers-PCP) ஒளி இழை வடங்கள் (Optical Fiber Cable-OFC) அமைத்துள்ளார்கள். இதனால், இந்தியாவில் மிகுதியாக இணைக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது.



“தகவல் தொழில்நுட்பத் துறைப் பொருட்காட்சியான ‘சிபிட் 2003’–இல் இந்திய அரசுடன், ஒரு கூட்டாளி மாநிலமாகத் தமிழக அரசு பங்குபெற்றது.

அரசுத் துறைகளின் செயலாற்றத் திறனை மேம்படுத்த தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப் படும். குடிமக்களுக்கான மின்வழிச் சேவை (EDS) என்னும் முன்னோடித் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இச்சேவை இவ்வாண்டு மேலும் உயர்த்தப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அரசின் தகவல் தொழில்நுட்ப கொள்கை, தகவல் தொழில்நுட்பத்தில் தமிழின் பயன்பாட்டை ஊக்குவிக்கிறது. அதற்கிணங்க, அனைத்து அரசுத் துறைகளின் இணைய தளங்களையும் இரு மொழி தளங்களாக மாற்றுவதற்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனமும், தமிழ் இணையப் பல்கலைக்கழகமும் இணைந்து செயல்பட்டு வருகின்றன. தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சான்றிதழ், பட்டப்படிப்புகள் மாண்புமிகு தமிழக முதல்வரால் தொடங்கிவைக்கப்பட்டன. தமிழில் ஆப்டிக்கல் கேரக்டர் ரீடர் (தமிழ் OCR) என்னும் மென்பொருள் ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

உலக அளவிலான பயன்பாட்டிற்காக தமிழ் மென்பொருள் மற்றும் மின் நூலகம் (Digital Library) ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக தமிழ் இணையப் பல்கலைக் கழகத்திற்கு தமிழக அரசு வேண்டிய உதவிகளைச் செய்யும்.

மின்னணு நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து, அரசு, தொழிற்கூடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை இணைக்கும் ஒரு வழிகாலாக எல்காட் (ELCOT) செயல்பட்டு வருகின்றது.

தகவல் தொழில்நுட்ப முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக தமிழகத்தை உயர்த்துவதற்கு எல்காட் (ELCOT) கருத்தரங்கங்களையும், கண்காட்சி களையும் நடத்தியுள்ளது. தேசிய மற்றும் உலகக் கருத்தரங்க நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றுள்ளது.

### கனெக்ட் 2002

2002ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 முதல் 22ஆம் தேதிகளில் சென்னையில், தமிழக அரசு, எல்காட் (ELCOT) மற்றும் இந்தியத் தொழில் கூட்டமைப்பு (Confederation of Indian Industry - CII) ஆகிய நிறுவனங்களுடன் சேர்ந்து கனெக்ட் 2002 (Connect 2002) என்ற நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் வளரும் முறைகளும் (Emerging Trends) வாய்ப்புகளும் பற்றி கருத்தாய்வு செய்யப்பட்டன.

தமிழக அரசு, எல்காட் (ELCOT) நிறுவனத்தை முன்னிறுத்தி இந்திய அரசு மற்றும் பாரிஸ் நகரிலுள்ள பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (Organisation for Economic Co-operation and Development - OECD) ஆகியோரின் துணையோடு “இந்திய ஆசிய வளர்ச்சியில் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் நிறுவனங்கள்” என்ற தலைப்பில் இரண்டு நாள் பன்னாட்டு மாநாடு ஒன்றினை நடத்தியது. இம்மாநாடு நவம்பர் 2002இல் சென்னையில் நடத்தப்பட்டது.

டிசம்பர் 2002இல் டெல்லியிலும் சென்னையிலும் இந்திய வர்த்தக வளர்ச்சி நிறுவனம் (India Trade Promotion Organisation - ITPO) ஸ்விட்சர்லாந்தில் ஜெனிவா நகரில் உள்ள உலக வர்த்தக மையம் மற்றும் எல்காட் (ELCOT) ஆகிய நிறுவனங்கள் இணைந்து இரண்டு நாள் மாநாடு ஒன்றினை நடத்தியது.

ஜனவரி 2003இல் ‘மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவனங்களின் தேசிய கூட்டுச் சங்கம்’ உச்சி மாநாடு ஒன்றினை நடத்தியது. எல்காட் (ELCOT) மற்றும் நாஸ்காம் (NASSCOM) ஆகிய நிறுவனங்கள் தமிழக அரசு சார்பில் இந்த பொருட்காட்சியின் முக்கிய அமைப்பாளர்களாகச் செயல்பட்டனர்.

டிசம்பர் 10–2002இல் கோவையில் இந்திய தொழிற்கூடங்களின் கூட்டமைப்புடன் இணைந்து ‘தகவல் தொழில் நுட்பத்தில் வணிக வாய்ப்புகள் என்ற தலைப்பில் மாநாடும், அக்டோபர் 2002 இல் திருச்சியில் இந்திய தொழிற்கூடங்களின் கூட்டமைப்புடன் (CII)





இணைந்து ITES மற்றும் BPOல் வணிக வாய்ப்புகள் என்ற தலைப்பில் மாநாடும், மார்ச் 11, 2003இல் மதுரை மற்றும் திருநெல்வேலி வட்டாரங்களை இணைத்து ‘தொழில் முனைவோர் முன்னேற்ற மையத்துடன்’ (Centre for Entrepreneurship Development) இணைந்து தகவல் தொழில் நுட்பத்தில் சாத்தியப்பட்ட சேவைகள் (ITES) வாய்ப்புக்கள் பற்றிய வட்டார கருத்தரங்கம்’ என்ற தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கமும், மார்ச் 25, 2003இல் சோனா பொறியியல் கல்லூரி மற்றும் ‘இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவினருடன்’ (STPI) இணைந்து தகவல் தொழில்நுட்பத்தில் சாத்தியப்பட்ட சேவைகளின் (ITES) வாய்ப்புக்கள்’ என்ற தலைப்பில் ஒரு வட்டார கருத்தரங்கமும் நடத்தப்பட்டது.

### இந்தியா சாஃப்ட் 2003:

பிப்ரவரி 2003இல் புதுடெல்லியில் ‘மின்னணு மற்றும் கணினி மென்பொருள் ஏற்றுமதி வளர்ச்சி ஆலோசனைக்குழு’ (Electronics & Computer Software Export Promotion Council - ESC) ஏற்பாடு செய்த ‘India Soft 2003’ என்ற பொருட்காட்சியில் எல்காட் (ELCOT) ஒரு அரங்கம் அமைத்தது.

### துபாயில் GITEX:

அக்டோபர் 2002 இல் துபாயில் நடைபெற்ற உலகின் மூன்றாவது பெரிய தகவல் தொழில்நுட்பப் பொருட்காட்சி, உலகின் முன்னணி தகவல் தொழில் நுட்ப (IT) முதலீட்டு நிறுவனங்களுக்கு தமிழ்நாட்டை அறிமுகம் செய்யும் வாய்ப்பை அளித்துள்ளது.

### சிபிட் 2003 (CEBIT 2003)

2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12–19 ஆம் நாட்களில் ஜெர்மனியிலுள்ள ஹானோவர் (Hannover) நகரில் பன்னாட்டு அளவில் பெரிய தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொழில் மற்றும் தொலைத் தொடர்புப் பொருட்காட்சி நடத்தப்பட்டது. அந்தப் பொருட் காட்சியில் தமிழ்நாடு, ESC - உடன் பங்கேற்றது.

வரும் ஆண்டுகளில் RASI திட்டம் மாநிலத்தின் எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

### தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக்கம்

சென்னையில் டைடல் (TIDEL), எல்நெட் மென்பொருள் நகரம் மற்றும் கோவையில் டெக்ஸ்சிட்டி மென்பொருள் பூங்கா முதலான பல்வேறு தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை எல்நெட் உருவாக்கியுள்ளது. அம்பத்தூர் தொழிற்பேட்டையை, தகவல் தொழில்நுட்பப் பூங்காவாக உருவாக்க சிறப்பு முயற்சி எடுக்கப்படும். பெருங்குடியில் தகவல் தொழில் நுட்பம் சார் சேவை மற்றும் வணிகச் செய்முறைகள் வெளியே செய்தலுக்கான மையம் ஒன்றினை உருவாக்க எல்காட் (ELCOT) முயற்சி மேற்கொள்ளும்.

### தொலைத் தொடர்புத் திட்டங்கள்

ஒளிப்படக் கலந்துரையாடல் அமைப்பு (Video Conferencing System) நிர்வாகத் தரத்தை உயர்த்தும் பொருட்டு ஆளுமையில் தகவல் தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தும் தமிழக அரசுக் கொள்கையின் ஒரு பகுதியாக அரசு அலுவலர்களுக்காக ஒளிப்படக் கலந்துரையாடல் வலை அமைப்பு (Video Conferencing Network) ஒன்றினை எல்காட் (ELCOT) நிறுவனம் நிறுவியுள்ளது. இந்த ஒளிப்படக் கலந்துரையாடல் வலைஅமைப்பு கீழ்காணும் இணைப்புகளைக் கொண்டுள்ளது.

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தியாளர் மாநாட்டு அறையில் பொருத்தப் பட்டுள்ள, ஒரே நேரத்தில் மூன்று ஒளிப்படக் கலந்துரையாடல் அழைப்பைக் காணும் வசதி கொண்ட பல்முனைக் கலந்துரையாடல் அமைப்பு

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலர் மற்றும் நிதி உள்துறை மற்றும் பொதுத்துறைச் செயலாளர்கள்.

★ அனைத்து 29 மாவட்ட ஆட்சியர்கள்

★ காவல்துறையின் 52 கள அலுவலர்கள்

நாட்டில் மிக விரிவான ஒன்றான இந்த ஒளிப்படக் கலந்துரையாடல் வசதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் தேதி தொடங்கி வைத்தார்கள்.

வருவாய்த் துறையின் சார்பாக கம்பியில்லா உயர் அலைவரிசை (Wireless High Frequency) அதி உயர் அலைவரிசை (VHF) பேரிடர் இடருதவி (Calamity Relief) மற்றும் நெருக்கடி தொலைத் தொடர்பு வலை அமைப்பு (Emergency Communication Network) போன்ற பணிகளை தொலைத் தொடர் பிரிவு செயல்படுத்தி வருகிறது.

### அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி

1,200 உயர்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி நிகழ்ச்சியை தமிழக அரசு செயலாற்றி வருகிறது.

### தொடுதிரைக் கணினி

முன்னோடி அடிப்படையில் ஆண்டிபட்டி தொகுதியில் (குறை தீர்ப்போம்) என்ற வலைத்தள கீயோசக் ஒன்று நிறுவப்பட்டது. இது வெற்றிகரமாக இயங்குகிறது.

மாநிலத்திலுள்ள பிற சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் ஸ்டார் திட்டத்தை விரிவுபடுத்தும் பணியை எல்காட் நிறுவனம் எடுக்கவுள்ளது. அனைத்து இந்திய முன்மாதிரியாயுள்ள தமிழக அரசின் இம் மின் ஆளுமை முயற்சியை ஒரு தலைசிறந்த மின் ஆளுமை முயற்சியாக இந்திய அரசு தெரிந்தெடுத்துள்ளது.

வரவு செலவுத் திட்ட 2003–04 உரையில் அறிவிக்கப்பட்டது போல் வரும் ஆண்டுகளில் 206 வட்டங்களில் உடனடித் தொடர்புச் (ON LINE) சேவைகள் அளிக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

2002–2003ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 100 துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கான தகவல் தொழில் வன்பொருள் மற்றும் மென்பொருட்களை எல்காட் நிறுவனம் வெற்றிகரமாக கொள்முதல் செய்து முடித்துள்ளது.

### தமிழ் இணையப் பல்கலைக்கழகம்

உலகு தழுவி வாழும் தமிழ்மக்கட்கும், தமிழில் ஈடுபாடுள்ள மற்றையோர்க்கும் தமிழ் மொழியைக் கற்கவும், தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு பற்றி அறிந்து கொள்ளவும் வேண்டிய வாய்ப்புகளை இணையம் வழியாக அளிக்கும் நோக்கத்தோடு, தமிழக அரசு தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவியது.

### மின் நூலகம்

மின் நூலகத்தில் இலக்கியம், உரைகள், அகராதிகள், கலைச்சொற்கள் ஒலி–ஒளிப்படக்காட்சிகள், படக்காட்டியகம் ஆகியன உருவமைக்கப்பட்டு இணையதளத்தில் இடப்பட்டுள்ளன. இதுவரை 76,192 பக்கங்களை உள்ளடக்கிய 169 புத்தகங்கள் இணையதளத்தில் இடப்பட்டுள்ளன. 54,427 பக்கங்களை உள்ளடக்கிய 180 புத்தகங்களை இணையதள உள்ளீடு செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. தமிழ்நாட்டிலுள்ள 126 சைவ மற்றும் வைணவக் கோயில்களின் ஒலி–ஒளிப்படக்காட்சிகளின் தொகுப்புகளும் இணைய தளத்தில் இடப்பட்டுள்ளது.

### தமிழ்த் தகவல் தொழில்நுட்பப் பணிகள்

தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியின் கீழ், கீழ்க்கண்ட தமிழ் மென்பொருள்கள் உருவமைக்கப் பட்டுள்ளன.

1. பொன்விழி – ஒளி வழித் தமிழ் எழுத்துரு அறிவி (Tamil OCR)
2. தமிழ் தேடு பொறி (Tamil Search Engine)
3. தமிழ் இணையதள உலாவி (Tamil Web Browser)
4. தமிழில் விண்டோஸ் 95, 98
5. இதழ் 2000 – தமிழ் சொற்செயலி (Tamil Word Processor)
6. தமிழ் அச்சு எழுத்திலிருந்து ஒலி உருவாக்கும் மென்பொருள் (Tamil text to Voice Synthesizer)

'பொன்விழி' – தமிழ் OCR என்னும் தமிழ் மென்பொருள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2002 ஜூன் திங்கள் 22–ஆம் நாளன்று வெளியிடப்பட்டது.





## இலவச மின்சாரம் – ஒளி வீசும் உண்மைகள்

மின்வாரியத்தின் வரலாற்றில் முதன் முறையாக தூத்துக்குடி, மேட்டூர் மற்றும் வடசென்னை அனல் மின் நிலையங்கள் 2001–02 மற்றும் 2002–03 ஆகிய ஆண்டுகளில் மிக நன்றாகச் செயல்பட்டு, ஒரே சமயத்தில் இந்திய அரசின் தங்கப்பதக்கம் / ரொக்கப் பரிசுகள் பெறத் தகுதிப் பெற்றுள்ளன.

இந்தியத் தரச் செயலக நிறுவனம், வடசென்னை அனல் மின் நிலையத்திற்கு (3 X 210 மெகாவாட்) அதன் தரமான அமைப்பை அங்கீகரிக்கும் வகையில் ஐ எஸ் ஓ (ISO) – 9002 : 1994 தரச்சான்றிதழை 1.1.2003 முதல் வழங்கியுள்ளது.

தனியார்த் துறையில் சமயநல்லூரில் 106 மெகாவாட் நிறுவுதிறன் கொண்ட மின்திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தனியார்த் துறையில் நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியை எரிபொருளாகக் கொண்ட 250 மெகாவாட் திறனுடைய மின் திட்டம் 16.12.2002 அன்று இயக்கி வைக்கப்பட்டது.

வழுதூரில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 95 மெகாவாட் திறனுடைய வாரியத்தின் சொந்த மின் திட்டம் 13.3.2003 அன்று இயக்கி வைக்கப்பட்டது.

தேசிய அனல் மின் கழகத்தின் இராமகுண்டம் மிகுதிறன் அனல் மின் நிலையம் –III (500 மெகாவாட்)லிருந்து 118 மெகாவாட் மின்சாரத்தைப் பெறுவதற்கான ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதல்வரின் முன்னிலையில் 12.9.2001 அன்று கையெழுத்திடப்பட்டது.

மேலும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் அனல் மின் நிலையம் – I விரிவாக்கம் (2 X 210 மெகாவாட்) மற்றும் அனல் மின் நிலையம் – II விரிவாக்கம் ஆகிய திட்டங்களிலிருந்து 493 மெகாவாட் மின்சாரத்தைப் பெறுவதற்கான இரு ஒப்பந்தங்கள் மாண்புமிகு முதல்வரின் முன்னிலையில் 20.9.2001 அன்று கையெழுத்திடப்பட்டது.

விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 25 துணை தொடர் மற்றும் மின் பகிர்மானத் திட்டங்கள் மொத்தம் ரூ.977 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

*"நம்முடைய நோக்கம், நம்முடைய எண்ணம், இந்த அரசின் இலக்கு சிறு, குறு விவசாயிகள் இலவசமாக மின்சாரத்தைப் பெறவேண்டும்.*

*இப்போது உலக வங்கி சில ஷரத்துக்களைப் போட்டிருப்பதால் அந்த ஷரத்துக்களுக்கு உட்பட்டு ஆணையம் சில விதிமுறைகளை விதித்திருப்பதால் அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு நம்முடைய இலக்கை நாம் அடையவேண்டும். விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்க வேண்டும். அதேநேரத்தில் இந்த ஷரத்துக்களை நாம் மீறக்கூடாது. இதற்கு என்ன வழி என்று யோசித்தோம். ஆகவே, இன்றையதினம் இந்த அரசு வகுத்திருக்கும் திட்டத்தின்படி யாருக்கு அந்த உதவி போய்ச் சேர வேண்டுமோ நேரடியாக அவர்களுக்குப் போய் சேருகிறது.*

*ஒரு சிறு விவசாயிக்கு 3 Horse Power Pumpset வைத்திருக்கும் ஒரு சிறு விவசாயிக்கு ஆண்டு ஒன்றுக்கு 750 ரூபாய் கட்டணம் வரும் என்று கணக்கிட்டு அவருக்கு 1,000 ரூபாய் கொடுக்கிறோம். அவரே அதைக் கொண்டு போய்ச் செலுத்துகிறார். ஆகவே, அந்தச் சட்டத் தேவையும் நிறைவு செய்யப்படுகிறது. அரசாங்கம் நேரடியாக அவர்களுக்குப் பணம் கொடுப்பதால், அதை உலக வங்கிக்கு இலவச மின்சாரம் இல்லை என்று நாம் சொல்லிக்கொள்ளலாம். அதே நேரத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய கட்டணத்தை நாமே அவர்களுக்குக் கொடுத்துவிடுகிறோம். ஆகவே, அந்த விவசாயி பயனடைகிறார். அவருக்கு மேலும் 250 ரூபாய் கிடைக்கிறது.*

*அதைப் போலவே, 5 எச்.பி. பம்பு செட் வைத்திருக்கின்ற விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 1,250 ரூபாய் கட்டணம் ஆகிறது என்று சொன்னால், அந்தத் தொகையை அரசாங்கமே கொடுத்து விடுகிறது. இதன் மூலம் யாருக்கு இந்த உதவி போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்கு மட்டும் இந்த உதவி போய்ச் சேரும். மின்சாரம் திருட்டு போகிறது, அது தடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்''.*

*– சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2003–2004ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையின் மீது ஆற்றிய பதிலுரையிலிருந்து.*



6




இத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மின்சாரத்தின் தரம் மேலும் மேம்படுத்தப்படும்.

ஏற்கெனவே இலவச மின்சாரம் பெற்று வரும் சிறு மற்றும் குறு விவசாயிகளை இந்த சுமையிலிருந்து காப்பாற்றுவதற்காக அவர்கள் ஓர் ஆண்டிற்கு ரூ.1000 என்ற வீதத்திலும் ஐந்து குதிரைத் திறன் பம்பு செட் வைத்திருந்தால் ஓர் ஆண்டிற்கு ரூ.1,250 என்ற வீதத்திலும் நேரடி உதவித்தொகை வழங்க தமிழக அரசு அறிவித்துள்ளது. மேலும் ஒவ்வொரு குடிசை இணைப்புக்கும் ஒரு வருடத்திற்கு ரூ.100 நேரடி உதவித்தொகையாக அளிக்க அறிவித்துள்ளது. இதனால் 9.41 இலட்சம் சிறு / குறு விவசாயிகள் மற்றும் 14 இலட்சம் குடிசை இணைப்புகள் தொடர்ந்து இலவச மின்சாரத்தைப் பெறுவர்.

### தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

இந்நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டு (2001–2002 மற்றும் 2002–2003) காலத்தில் ரூ.423.60 கோடியை நிகர வைப்பீட்டுத் தொகையாகத் திரட்டியுள்ளது. ரூ.354.84 கோடியைத் தவணை கொள்முதல் கடன் மற்றும் நீண்டகாலக் கடனாகக் கொடுத்துள்ளது.

2001–2002 மற்றும் 2002–2003 ஆம் ஆண்டில், இந்நிறுவனத்தின் மொத்த நிகர இலாபம் ரூ.44.56 கோடி ஆகும். இந் நிறுவனம், ஆண்டிற்கு ரூ.4.40 கோடி வீதம் இரண்டு ஆண்டுகளில் ரூ.8.80 கோடியை ஈவுத் தொகையாக தமிழக அரசுக்கு வழங்கியுள்ளது.

## போக்குவரத்துக்குப் புதுப்பொலிவு

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் தான் மக்களின் அன்றாட வாழ்க்கை அல்லல் இல்லாமல் கழிகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. அந்தத் துறை அடுக்கடுக்கான பணிகளை மேற்கொண்டு வளர்ச்சி கண்டு வருகிறது.

ஒரு நிறுவனம் இலாபம் ஈட்டினால்தான் அது பொலிவாக இருக்க முடியும். போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்ட நட்டத்தை ஈடுகட்ட நடவடிக்கை மேற்கொண்டு பேருந்து கட்டணத்தில் மாற்றம் செய்து ஓரளவு நட்டம் குறைக்கப்பட்டது.

எண்ணெய் நிறுவனங்களால் டீசல் விலை உயர்த்தப்பட்ட நிலையிலும், புதிய பேருந்துகள் இயக்கப்பட்டதன் மூலம் மக்களுக்கு சிறப்பான பணியை ஆற்றிவருகிறது. 21 போக்குவரத்துக் கழகங்களை



7 கழகங்களாக ஒருங்கிணைக்க முடிவு செய்யப்பட்டு முதற்கட்டமாக மாநகர போக்குவரத்துக் கழகம் கோட்டம் –1 மற்றும் 2, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் கோட்டம் 1 மற்றும் 2, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கோவை மற்றும் உதகை ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 16 போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைக்க விரைந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.150 கோடி மதிப்பில் 1,550 புதிய பேருந்துகள் வழங்க அனுமதிக்கப்பட்டு 3 போக்குவரத்துக் கழகங்கள் 263





புதிய பேருந்துகளை 2001 டிசம்பர் வரை தடங்களில் இயக்கியுள்ளன. எல்லா போக்குவரத்துக் கழகங்களும் பிப்ரவரி 2003 வரை 1,036 புதிய பேருந்துகளை போக்குவரத்து வளர்ச்சி நிதிநிறுவனத்தின் கடன் மூலமாக வாங்கியுள்ளன.

பேருந்துகளின் இயக்கத்திறனை மேம்படுத்தவும் தொழிலாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், 2001 ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பராமரிப்பு வாரம், பிரேக்டவுன் இல்லா வாரம், பாதுகாப்பு வாரம், மரியாதை வாரம் ஆகியவை நடத்தப்பட்டது. பேருந்துகளின் தோற்றம் மேம்படுத்தப்பட்டு பயணிகளை ஈர்த்து வருவாய் உயர வழி செய்யப்பட்டுள்ளது.

புதுடெல்லி எ.எஸ்.ஆர்.டி.யு. (ASRTU) வின் 2001–2002 ஆண்டுக்கான டீசல் சிக்கனத்துக்கான விருதை திருநெல்வேலி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் பெற்றுள்ளது.

## மக்கள் குறை தீர்ப்பில் மாபெரும் புரட்சி

பொதுமக்களுடன் தொடர்புடைய அனைத்து அலுவலகங்களும் மக்கள் நலத் திட்டங்கள் குறித்த விதிமுறைகளையும் வரைமுறைகளையும் விளம்பரம் செய்தல் வேண்டும். பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்களிடமிருந்து பெறப்படும் மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை எடுக்க அரசு ஆணை 15.6.2001 வெளியிடப்பட்டது. அதன்படி,

★ கோரிக்கை மனுக்கள் பெறப்பட்ட ஐந்து தினங்களுக்குள் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

★ மனுக்கள் பெறப்பட்ட 90 நாட்களுக்குள் இறுதி முடிவெடுக்கப்பட வேண்டும்.

★ ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மனுநீதி நாள் நடத்துவதைப்போன்று கோப்பு முடிக்கும் வாரம் நடத்த வேண்டும். திங்கட்கிழமை அரசு விடுமுறையாக இருந்தால் அதற்கு அடுத்த நாளில் கோப்புகள் முடிக்கும் வாரம் நடத்த வேண்டும். மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக மனுதாரருக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்.

★ துறைச் செயலாளர்கள், நிலுவையில் உள்ள கோப்புகளை நுண்ணாய்வு செய்வதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தகுந்த அறிவுரை வழங்க வேண்டும்.

★ கணினியில் மேல்நடவடிக்கை எடுத்த விவரங்கள் அன்றாடம் பதிவு செய்யப்பட வேண்டும்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை (வேலைவாய்ப்புப் பிரிவு)

1. இந்த அரசு பொறுப்பேற்றதன் பின் எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கையின் விளைவாக கடந்த இரண்டாண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யாத 3,214 நபர்கள் தனியார்த் துறைகளில் பணியமர்த்தம் செய்யப் பெற்றனர்.
2. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்த 30441 நபர்கள் பணியமர்த்தம் செய்யப் பெற்றனர்.
3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பெறப்பட்ட 45,730 மனுக்களில் 41,647 மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.
4. கண்பார்வையற்றோருக்கான வேலை வாய்ப்பற்றோர் நிவாரணம் வழங்கும் திட்டத்தின்கீழ் பட்டதாரி மற்றும் மேல்வகுப்பு பயின்றவர்களுக்கு ரூ.300. புகுமுக வகுப்பு/ மேல்நிலைப்பள்ளி படிப்பு பயின்றவர்களுக்கு ரூ.250/–ம், பத்தாம் வகுப்பு மற்றும் அதற்குகீழ் பயின்றவர்களுக்கு ரூ.200/–ம் ஒவ்வொரு மாதமும் நிவாரணமாக வழங்கப்படுகிறது. கடும் நிதிப் பற்றாக்குறைக்கு இடையேயும் 2001–2002ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 1,132 பயனாளிகளுக்கு ரூ.27.14 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
5. 2002–ஆம் ஆண்டில் ரூ.6.72 இலட்சம் செலவில் 1,150 இந்த ஆதிதிராவிடர் மனுதாரர்களுக்கு தமிழ்நாடு தொழிற்கல்லூரி நுழைவுத் தேர்வுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்களுள் 254 மனுதாரர்கள் தொழிற் கல்லூரிகளில் சேரத் தேர்வு பெற்றனர்.
6. 2001–2002 ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக சுயவேலை வாய்ப்புக்காக 1,464 விண்ணப்பதாரர்கள் ரூ.771 இலட்சம் கடன் உதவி பெற்றனர்.

★ 2000–ஆம் ஆண்டில் 29,080 ஆக இருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 2001–இல் 31,433 ஆகவும் 2002இல் 32,773 ஆகவும் உயர்ந்துள்ளது.

★ கடந்த இரண்டாண்டுகளில் பயனடைந்த தொழிலாளர்கள்
2000 – 11,86,448,
2001 – 12,23,060,
2002 – 12,37,653.

பணி நிரந்தரத் தகுதி கடந்த இரண்டாண்டுகளில்

அ) நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் எண்ணிக்கை 43,043

ஆ) சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 11,693



*கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நிதியுதவி – 28.11.2002*

**வழக்குகள்**

கடந்த இரண்டாண்டுகளில் கடும் முரண்பாடுகள் காணப்பட்ட நிர்வாகத்தினர் மீது தொடரப்பட்ட வழக்குகள் 6,073, நீதிமன்ற அபராதத் தொகை வசூல் ரூ.90,10,215.

**குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு**

கடந்த இரண்டாண்டுகளில் 1.1.2002 முதல் 31.12.2002 வரை குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு சம்பந்தமாக 164 வழக்குகள் தொடரப் பெற்றன. அபராதத் தொகை வசூலானது ரூ.3,43,000.

**பாதுகாப்பு விருதுகள்**

31.3.2003 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் மாநிலப்பாதுகாப்பு விருதுகள் முதல் பரிசு 198 நிர்வாகத்தினர்களுக்கும், இரண்டாம் பரிசு 134 நிர்வாகத்தினர்க்கும் வழங்கப்பட்டன. மற்றும் அதே விழாவில் 2000 ஆண்டுக்கான 'உயர்ந்த உழைப்பாளர்' விருதுகள் 101 தொழிலாளர்களுக்கு ரூ.1,44,000/– தொகையில் வழங்கப்பட்டன.

## தொழிலாளர் துறை

1. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் 1,30,525 தொழிலாளர்கள் பதிவு செய்யப் பெற்றனர். இதன் மூலம் 8,856 கட்டுமானத் தொழிலாளர்கள் ரூ.5,12,19,324/– உதவித்தொகை பெற்றனர்.

2. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்துக்கென சென்னையில் ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 28.11.2002 அன்று திறந்து வைக்கப்பட்டது.

3. தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப்பாதுகாப்பு மற்றும் நல வாரியங்களில் 1,44,798 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். இவர்களுள் 2,536 தொழிலாளர்களுக்கு ரூ.79,71,000 உதவித் தொகை வழங்கப்பட்டது.

4. தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியத்தின் நலத்திட்டங்களின் கீழ் 17,766 பயனாளிகள் ரூ.54,88,690/– உதவித் தொகை பெற்றனர்.

## மாநிலத் திட்டக் குழுவின் மகத்தான பணிகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், முனைவர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்டு 17.9.2001 அன்று மாநிலத் திட்டக்குழு திருத்தியமைக்கப்பட்டது. இக்குழுவில் மூன்று பகுதி நேர உறுப்பினர்கள், ஒரு முழுநேர உறுப்பினர், உறுப்பினர்–செயலர், மற்றும் வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறை செயலர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை செயலர், விவசாயத் துறை செயலர் ஆகியோர் பதவி வழி உறுப்பினர்களாகவும் உள்ளனர்.





மாநிலத் திட்டக் குழுவிற்கு, முக்கியமான இனங்களுக்கு இலக்கு நிர்ணயித்து பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம் தயாரித்து அவ்வப்போது அந்த இலக்குகளை கண்காணித்தல் முக்கியப் பணியாக அளிக்கப் பட்டுள்ளது. மேலும் மனித வளர்ச்சிக் குறியீடு (Human Development Index) மற்றும் பாலின வளர்ச்சிக் குறியீடு (Gender Development Index)களுக்கான குறியீடுகளின் வளர்ச்சியைக் கண்காணித்தல் மற்றும் தேவையான நடவடிக்கைகள் எடுத்தலும் முக்கியமான பணியாகும்.

**பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம்**

தேசிய வளர்ச்சிக் குழுமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமைகள் மற்றும் குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு, மாநிலத் திட்டக்குழு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கும் பணியை மேற்கொண்டது. இதற்கென பல்வேறு பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டு பணிக்குழு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. இப்பணிக்குழு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வரைவுக் கண்ணோட்டம் (Draft outline) தயாரிக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் மற்றும் மாநிலத் திட்டக்குழுத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநிலத் திட்டக்குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மாநிலத்தின் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டமானது வறுமை ஒழிப்பு, முதன்மைத் துறையில் விரைவான வளர்ச்சி, தொழில் துறையில் வளர்ச்சி வேகத்தை மீட்பது மற்றும் சேவைத்துறையில் நீடித்த வளர்ச்சி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து வளர்ச்சிப்பாதையை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்ச திட்டங்களை உள்ளடக்கி மாநிலத்தின் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாநில மக்கள் அனைவருக்கும் ஆரோக்கியமான வளமான வாழ்விற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். முதலமைச்சரின் 15 அம்ச திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் இக்குறிக்கோள்களை எய்த இயலும்.

### தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான வளர்ச்சி விகிதம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2010இல் தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்க இலக்கு நிர்ணயித்துள்ளார். பத்தாவது ஐந்தாண்டுத் திட்டமானது 2002–2003 முதல் 2006–2007 வரை மாநில மொத்த வருமானத்தில், ஆண்டுக்கு 8 சதவீத வளர்ச்சி விகிதத்தை அடைய இலக்கு நிர்ணயித்துள்ளது. 2010இல் தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டுமெனில், தனிநபர் வருமான வளர்ச்சி விகிதமானது ஆண்டுக்கு 9 சதவீதத்தை எட்ட வேண்டியுள்ளது. தற்போது மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் 1 சதவீதமாக உள்ள நிலையில், 2010இல் மாநில மொத்த வருமானத்தின் வளர்ச்சி விகிதம் 10 சதவீதத்தை எட்ட வேண்டியுள்ளது. இந்த இலக்கினை, பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (2002–2007) 8 சதவீத வளர்ச்சி விகிதத்தையும், 2007–2010ஆம் ஆண்டுக் காலத்தில் 13 சதவீத வளர்ச்சி வீதத்தையும் எய்துவதன் மூலம் அடைய இயலும்.

*– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் மத்திய திட்டக்குழுவின் துணைத்தலைவர் ஆகியவர்களிடையே 12–6–2002 அன்று புதுதில்லியில் நடைபெற்ற கூட்டத்தில், தமிழ்நாட்டிற்கு பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ.40,000 கோடி என முடிவு செய்யப்பட்டது.*

## மரபைக் காக்கும் தொல்லியல் துறை

மரபுப் பாதுகாப்புக்காக தொல்லியல் துறைக்கு 2001–2002ஆம் ஆண்டிற்கு ரூ.15.58 இலட்சமும், 2002–2003ஆம் ஆண்டுக்கு ரூ.170 இலட்சமும் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மரபுப் பாதுகாப்பு நிதியிலிருந்து வரலாற்று நினைவுச் சின்னங்கள், தொன்மைமிக்க கலைப் பொருட்கள், கல்வெட்டுக்கள் மற்றும் ஓலைச் சுவடிகளின் நிழற்படங்களை கணினி மற்றும் குறுந்தகடுகளில் மாற்றிப் பாதுகாக்க திட்டமிடப்பட்டுள்ளது.



ஆண்டுதோறும் முதுகலைப்பட்டம் பெற்ற 8 மாணவர்களுக்கு கல்வெட்டு மற்றும் தொல்லியல் முதுநிலைப் பட்டயப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## சமூக நலப் பணிகளில் [illegible]

தமிழ்நாட்டில் உற்றார் உறவினர் ஆதரவின்றி வாழ வழியற்ற முதியோர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

தமிழக அரசு பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.200 பணவிடை மூலம் உதவித்தொகை வழங்குகிறது. மேலும் பயனாளிகள் ஒவ்வொருவருக்கும், சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் 2 கிலோ இலவச அரிசியும், உணவு உட்கொள்ளாதவர்களுக்கு 4 கிலோ இலவச அரிசியும் வழங்கி வருகிறது. இது தவிர ஆண்டு ஒன்றுக்கு பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகையின்போது இலவசமாக ஒரு வேட்டி அல்லது சேலை வழங்குகிறது.

மேற்கண்ட திட்டத்தில் தமிழக அரசு பயனாளிகளுக்கு வழங்கிய உதவித்தொகை 2001–2002இல் ரூ.284.68 கோடியும், 2002–2003இல் ரூ.330.26 கோடியும் ஆகும்.

தமிழ்நாடு நலிந்தோர் உதவித் திட்டத்தின் கீழ் 2000–2001ஆம் ஆண்டு ரூ.17.91 கோடியும், 2001–2002ஆம் ஆண்டு ரூ.14.79 கோடியும் செலவிடப் பட்டது.

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஊக்கமளிக்கவும், ஆண் குழந்தைகள் மட்டுமே வேண்டும் என்ற எண்ணத்தினை கட்டுப்படுத்தவும் தமிழக அரசால் பெண் குழந்தைகள் மேம்பாட்டிற்காக பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் 1992இல் துவங்கப் பட்டது. அதிக பணப்பயன் கிடைக்கும் வகையில் இத்திட்டம் புத்துயிரளிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆண் குழந்தை இல்லாது ஒரு பெண் குழந்தை மட்டுமே உள்ள குடும்பத்தில் பெற்றோர்களில் ஒருவர் கருத்தடை செய்து கொண்டால், அக்குழந்தையின் பெயரில் அரசு நிரந்தர வைப்பு நிதியாக ரூ.22,200–ஐ குழந்தையின் பெயரில் செலுத்தும், இந்த வைப்பீட்டுத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து, அப்பெண் குழந்தையின் ஆரம்பக் கல்வி முதல் பள்ளிக் கல்வி முடிக்கும் வரை மாதம் ஒன்றுக்கு தொகை ரூ.150 வழங்கப்படும். 20 ஆண்டுகள் கழித்து வட்டியுடன் கூடிய முதிர்வு தொகை வழங்கப்படும்.

ஆண் குழந்தை இல்லாது இரு பெண் குழந்தைகள் உள்ள குடும்பத்தில் பெற்றோர்களில் யாரேனும் ஒருவர் கருத்தடை சிகிச்சை செய்து கொண்டால் ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் அரசு ரூ.15,200–ஐ தொடக்க வைப்பீடாக செலுத்தும். இத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு அப்பெண் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஆரம்பக் கல்வி முதல் பள்ளிக் கல்வி முடிக்கும் வரை மாதம் ஒன்றுக்கு தொகை ரூ.150 வழங்கப்படுவதோடு, 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஒவ்வொருவருக்கும் வட்டியுடன் கூடிய முதிர்வுத் தொகை வழங்கப்படும். 2001–2002இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.2 கோடியில் ரூ.178.48 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 1171 குழந்தைகளும் பயன் பெற்றுள்ளனர்.

2002–2003இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1270.75 இலட்சம் இத்திட்டத்தில் திட்டம்–1ல் 39 குழந்தைகளும், திட்டம்–2இல் 6,978 குழந்தைகளும் பயன்பெற்றுள்ளனர்.



### தத்தெடுத்தல்

குழந்தைகள் நலனில் மிகுந்த அக்கறையும் நாட்டமும் கொண்டுள்ள இந்த அரசு அக்குழந்தைகளுக்கு ஓர் குடும்ப சூழலை ஏற்படுத்த தத்து திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. மக்களிடையே தத்து திட்டம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் மூலம் தத்து திட்டம் ஊக்குவிக்கப்படுகிறது.

மாவட்டத்திற்கு ஓர் தத்து நிறுவனம் துவங்க அரசு முயற்சி செய்து வருகிறது. இம்முயற்சியின் விளைவாக 2001இல் பதினைந்தாக (15) இருந்த அங்கீகரிக்கப்பட்ட தத்து நிறுவனங்களின் எண்ணிக்கை இரண்டாண்டுகளில் இருபத்தி மூன்றாக (23) உயர்ந்துள்ளது.

### தொட்டில் குழந்தைத் திட்டம்

1992 முதல் மே 2001 வரை 150 தொட்டில் குழந்தைகள் பெறப்பட்டுள்ளனர். பின்னர் 51 கைவிடப்பட்ட குழந்தைகளின்றி, 528 தொட்டில் குழந்தைகள் பெறப்பட்டு உள்ளனர். மொத்தம் பெறப்பட்ட 729 குழந்தைகளில் 542 குழந்தைகளைக் குடும்ப சூழலை ஏற்படுத்தித் தரும் வகையில் தத்து நிறுவனங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் 43 ஆண் குழந்தைகளும், 499 பெண் குழந்தைகளும் அடங்கும். இத்திட்டத்தின் மீது அரசு மிகுந்த அக்கறையினையும் ஆர்வத்தையும் செலுத்தி வருகிறது.

★ விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடபுத்தகம் மற்றும் குறிப்பேடுகள் ஆகியவை 38,434 பேர்களுக்கு 2001–2002 மற்றும் 2002–2003ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டன.

★ ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண உதவித் திட்டத்தில் 2001–2002 மற்றும் 2002–2003ஆம் ஆண்டுகள் 1.729 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

★ அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 231 பேர் 2001–2003 ஆகிய இரண்டு ஆண்டுகளில் பயன்பெற்றுள்ளனர்.

★ டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டத்தின்கீழ் கடந்த இரு ஆண்டுகளில் 321 பேர் பயனடைந்துள்ளனர்.

★ தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண உதவித் திட்டத்தின்படி 2,356 பேர் நிதிஉதவி பெற்றுள்ளனர்.

★ 2001–2002ஆம் ஆண்டு, நான்கு திருமண உதவித் திட்டங்களின் கீழ் குறிப்பிடப்பட்ட மாறுதல் செய்யப்பட்டுள்ளது. அனைத்து திருமண உதவித் திட்டங்களின் கீழ் திருமண உதவி பெற மணமகளின் வயது 18லிருந்து 20ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி ரூ.7,000–லிருந்து ரூ.10,000ஆக உயர்த்தப் பட்டுள்ளது. அதேபோன்று அன்னை தெரசா ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி ரூ.7,000–லிருந்து ரூ.10,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ ½ கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரத்தில் உள்ள பள்ளிகளுக்குப் பேருந்து மூலம் பயணம் செய்யும் 10,11,12ஆம் வகுப்பு பயிலும் அரசு



குழந்தைகள் காப்பக உள்ளுறைவோர்களுக்கு 2002–2003ஆம் ஆண்டு முதல் இலவச மிதிவண்டி வழங்கப்படுகிறது. 372 பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைகின்றார்கள். இத்திட்டத்திற்காக ரூ.5.61 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத அமர்த்தப்படும் உதவியாளர்களுக்கு உதவித் தொகை 2001–2002ஆம் ஆண்டில் ரூ.1.78 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் 261 பேர்கள் பயனடைந்துள்ளனர். 2002–2003ஆம் நிதியாண்டில் ரூ.1.67 இலட்சம் நிதிஒதுக்கீட்டின் மூலம் மொத்தம் 265 நபர்கள் பயனடைந் துள்ளனர்.

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளைப் பராமரிக்கும் மூன்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானியமாக (ரூ.7400 x 3) ரூ.22,200 ஒதுக்கீட்டின் மூலம் மொத்தம் 96 பேர் பயனடைந்துள்ளனர்.

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மருத்துவ உதவிகள் செய்து பராமரிக்கும் மதுரை, சிஷ்டி தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு அரசு மானிய உதவியாக 2001–2002ஆம் ஆண்டிற்கு முதல் தவணையாக ரூ.42,000 அனுமதிக்கப்பட்டு 54 பேர்கள் பயனடைந் துள்ளனர்.

96 சிறப்புப் பள்ளிகளின் விடுதியில் தங்கிப் பயிலும் ஊனமுற்ற மாணவ/மாணவியர்களுக்கு உணவூட்டு மானியம் தலா ரூ.200 வீதம் 2001–2002ஆம் நிதியாண்டில் ரூ.99.34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் 7,218 பேர்கள் பயனடைந்துள்ளனர். 2002–2003ஆம் நிதியாண்டில் ரூ.96.24 இலட்சம் ஒதுக்கீட்டின் மூலம் மொத்தம் 4,822 பேர்கள் பயனடைந் துள்ளனர்.

காது கேளாதோர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் பயிற்சி மையம், சிறுமலர் காது கேளாதோர் பயிற்சி மையத்திற்கு, ஆசிரியர் ஊதியம், கல்வி உதவித்தொகை மற்றும் சில்லறைச் செலவினமாக ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 32 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

ஊனமுற்றவர்களுக்கு தடையற்ற சுற்றுச் சூழலை ஏற்படுத்தும் வண்ணம் தலைமைச் செயலகத்தில் ரூ.20 இலட்சம் செலவில் சாய்வுதளமும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் சாய்வுதளமும் அமைக்க ரூ.45 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.









இவ்வரசு பதவியேற்றவுடன் 2001–2002 நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தபோது ஊனமுற்றோர் கடன் பெற ஏதுவாக ரூ.4 கோடிக்கு அரசு முழு உத்தரவாதம் வழங்கியது. எல்லா மாவட்டங்களிலும் தகுதி வாய்ந்த ஊனமுற்றோருக்கு கடனுதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

### புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டத்தின் கீழ் ஆற்றிய சாதனைகள்

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் குழந்தைகள் கலோரி அதிகம் கிடைக்கும் உணவை உட்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் ஒவ்வொரு குழந்தைக்கும் வாரத்தில் மூன்று நாட்கள் 20 கிராம் உருளைக் கிழங்கு, 20 கிராம் பச்சைப் பயறு மற்றும் 20 கிராம் கொண்டைக் கடலை அளிக்கப்பட வேண்டும் என்னும் புதிய முறையை தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

- வாரத்திற்கு ஒருமுறை அளிக்கப்படும் முட்டைக்குப் பதில் மேற்குறிப்பிட்டவாறு உருளைக் கிழங்கு, பச்சைப் பயறு மற்றும் கொண்டைக் கடலை வாரத்தில் மூன்று நாட்கள் வழங்கப்பட வேண்டும் என்று ஆணையிடப் பட்டது. முட்டை வழங்குவதில் கண்டறியப்பட்ட சீர்கேடுகளைக் களையவும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறுகின்ற குழந்தைகளின் ஊட்டச்சத்தை அதிகரிக்கும் நோக்கோடும் இந்த புதிய முறை

### ஊனமுற்றோருக்கான திருமண உதவித் திட்டம் ஊக்கத் தொகை உயர்வு

- காது கேளாத வாய் பேசாதவரைத் திருமணம் செய்யும் நல்ல நிலையில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை ரூ.7,000–லிருந்து ரூ.10,000ஆக 2002–2003 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.
- கை, கால் ஊனமுற்றோரைத் திருமணம் செய்யும் நல்ல நிலையில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை ரூ.7,000–லிருந்து ரூ.10,000ஆக 2002–2003 முதல் உயர்த்தி வழங்கப் படுகிறது.



### பராமரிப்பு உதவித்தொகை பயனாளிகள் எண்ணிக்கை உயர்வு

கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்ட பராமரிப்பு உதவித்தொகை பெறும் பயனாளிகள் எண்ணிக்கை 2001–2002ஆம் ஆண்டு முதல் 7,400–லிருந்து 8,400ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கொண்டு வரப்பட்டது. இந்தப் புதிய முறைப்படி திங்கட்கிழமைதோறும் 20 கிராம் உருளைக் கிழங்கும், புதன்கிழமைதோறும் 20 கிராம் பச்சைப் பயறும், வெள்ளிக்கிழமைகளில் 20 கிராம் கொண்டைக் கடலையும் சமைக்கப்பட்ட வடிவத்தில் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்றன. இதனால் ஒவ்வொரு குழந்தையும் 158.20 கலோரி சக்தியும், 8.5 கலோரி புரதச்சத்தும் பெறுவது உறுதி செய்யப்படுகிறது.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப் பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கைப்படி தற்போதுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் வரையறுக்கப்பட்ட உணவுக் கட்டணத்தை மாற்றி அமைக்க முடிவு செய்யப்பட்டு ஆணையிடப்பட்டது. இவ்வாணை வழங்கப்படுவதற்கு முன்னர் காய்கறி, மசாலா பொருள் மற்றும் எரிபொருள் ஆகியவற்றுக்கு ஒரு குழந்தைக்கு 23 காசு என்று இருந்தது. தற்போது அரசு வழங்கிய ஆணைப்படி இந்தத் தொகை ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு 35 காசாக அதாவது 12 காசு கூடுதலாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ஊரகப் பகுதியிலுள்ள பள்ளிகளுக்கு மட்டும்



## 18 அம்ச திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ள இனங்கள்

1. வளர் இளம் பருவத்தினரின், குறிப்பாக வளர் இளம் பெண்களின் உடல் பலத்தை மேம்படுத்தல்.
2. அடிக்கடி பிள்ளைப் பேறு மற்றும் அதன் துன்பங்களிலிருந்து பெண்களை விடுவித்தல்.
3. கருக்கலைப்பு மற்றும் பெண் சிசு வதையை அறவே ஒழித்தல்.
4. குறைந்த எடையுள்ள குழந்தைகளின் எடையினை மேம்படுத்துதல்
5. தடுப்பு மருந்துகள் மூலம் நோய்கள் பரவாமல் தடுத்தல்.
6. குழந்தைப் பருவத்தில் ஏற்படும் உடல் ஊனத்தைக் கண்டறிந்து தக்க மருத்துவ வசதி மூலம் உடல் ஊனத்தை ஒழித்தல்.
7. குழந்தைப் பருவம் குறிப்பாக முதல் 3 ஆண்டுகளில் பராமரிப்பு மற்றும் முன்னேற்றத்திற்காக பெற்றோர்களின் கடமைகளை முன்னிருத்தல்.
8. குழந்தைகளின் இறப்பு சதவீதத்தைக் குறைத்தல்.
9. கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்து குறைபாடுள்ள 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாட்டினை நீக்குதல்.
10. மைக்ரோ ஊட்டச்சத்து குறைபாடுகளைக் களைதல்.
11. பெண் குழந்தைகளின் தரத்தை மேம்படுத்த பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை மக்களிடையே விளம்பரப்படுத்துதல்.
12. அனைத்து மருத்துவ மற்றும் மகப்பேறு மருத்துவமனைகளை பெண்கள் மற்றும் குழந்தைகளின் நல்லிணக்கம் உள்ளவைகளாக மாற்றுதல்.
13. இளம் பிராயத்தில் ஏற்படும் இதய நோய்கள் மற்றும் அதன் தொடர்பான இலவச அறுவை சிகிச்சைகளைக் கண்டறிந்து தடுத்தல்.
14. சிறார் தொழிலாளர் முறையை ஒழித்தல்.
15. ஒவ்வொரு குழந்தைக்கும் 8 வருட பள்ளிக் கல்வியை அளித்தல்.
16. அனைத்துப் பள்ளிகள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் பாதுகாப்புள்ள குடிநீர் வசதி மற்றும் சுகாதாரக் கழிப்பிட வசதிகளை அளித்தல்.
17. பெண்களின் கல்வி மற்றும் அவர் தம் தரத்தினை உயர்த்துதல்.
18. சுயஉதவிக் குழுக்கள் மூலம் பெண்களுக்கு அதிகாரப் பகிர்வு அளித்தல்.



ஆண்டொன்றுக்கு ரூ.1751.86 இலட்சம் கூடுதலாக செலவாகும்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் அளிக்க ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சத்துணவு மையங்களைக் கொண்ட கட்டடங்களில் ஏற்பட்டுள்ள சிறிய மற்றும் பெரிய பழுதுகளை நீக்கி சரிசெய்ய ரூ.812.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் 2,849 ஊரகப் பள்ளி மையங்களுக்கு ரூ.283.485 இலட்சமும், 952 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட மையங்களுக்கு ரூ.122.59 இலட்சமும் பழுது நீக்கம் செய்ய பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

''தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்கான 18 அம்சத் திட்டம்'' என்ற புதிய திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அனைத்துப் பள்ளிகள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு மையங்களில் 100 விழுக்காடு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் சிறந்த சுகாதார வசதியைப் பெறும் பொருட்டும், மாநில, துறை மற்றும் மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. பள்ளி செல்லும் குழந்தைகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுத்தமான கழிப்பிட வசதிகள் பெற்று தூய்மையான சூழ்நிலையில் வளர இத்திட்டம் பெரிதும் துணை புரியும். இதுவரை 33,305 ஊரகப் பள்ளிகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட மையங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியும் 19,925 மையங்களில் சிறுநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## ஊரக வளர்ச்சிக்கு புதிய உத்வேகம்

*''பெண்களை வலிமையானவர்களாக ஆக்க வேண்டும் என்பது தான் இந்த அரசின் கொள்கை. அப்படி பெண்கள் சமுதாயத்தில் ஆண்களுக்கு சரிநிகர் சமானமாக உயர வேண்டும், வாழ வேண்டும் என்றால் அதற்கு இரண்டு அடிப்படைத் தேவைகள் உண்டு. ஒன்று கல்வி, இரண்டாவது பொருளாதார ரீதியாக பெண்கள் சொந்த காலில் நிற்க வேண்டும். இதற்காகத் தான் இந்த சுயஉதவிக் குழுக்களை அமைத்திருக்கிறோம். 1992ஆம் ஆண்டில் நான் முதலமைச்சராக இருந்த போது நான் தான் இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களை ஆரம்பித்தேன். அப்போது நான் இட்ட சிறிய விதை, இன்றைக்கு வளர்ந்து பெரிய ஆலமரமாகியிருக்கிறது. தமிழகத்தில் 1,26,106 சுயஉதவிக் குழுக்கள் இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய 21,50,193 பெண்கள் இதில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஏறக்குறைய ரூ.288 கோடி ரூபாய்க்கு மேல் இன்றைக்கு இந்த சுயஉதவிக் குழுக்கள் எல்லாம் சேமிப்பு நிதியை வைத்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் 1992இல் இந்த மகளிர் சுயஉதவி குழுக்களை நான் தொடங்கிய போது, பெண்களுக்கு வங்கிகள் கடன் கொடுக்கவே தயங்கினார்கள். அப்போது இந்த சுய உதவிக் குழுக்களிலிருந்த மகளிருக்கு வங்கிகளிடம் கடன் பெற்றுத் தருவது குதிரை கொம்பாக இருந்தது. ஆனால், இன்றைக்கோ நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது. இன்று இந்த சுயஉதவிக் குழுக்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு இந்த மகளிரிடம் கோடிக்கணக்கான ரூபாய்கள் இன்றைக்கு சேமிப்பாக இருப்பதைப் பார்த்து, வங்கிகளே இன்றைக்கு மகளிரை*





*பின் தொடர்ந்து உங்களிடம் இருக்கின்ற நிதியை எங்களிடம் வைப்பு நிதியாக வையுங்கள், தாருங்கள் என்று மகளிரைத் தேடி அவர்களுக்குப் பின்னால் போகிறார்கள். மகளிர், வங்கிகளைத் தேடிப் போனது அந்தக் காலம். இன்றைக்கு வங்கிகளே மகளிரைத் தேடி வருவது இந்தக் காலம். ஆகவே, இன்றைக்கு ஏறக்குறைய 21,50,193 இலட்சம் பெண்கள் இந்த சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்திருக் கிறார்கள் என்றால் இது போதாது, தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை பெண்களும் சுயஉதவிக் குழுக்களில் சேர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக உங்களை மட்டுமல்ல. தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை மகளிரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். மகளிர் சொந்தக் காலில் நிற்க வேண்டும். உங்கள் தேவைகளுக்காக வாழ்க்கையை நடத்துவதற்காக வாழ்க்கைக்குத் தேவையான செலவுகளுக்காக எந்த ஆணையும் நம்பி மகளிர் இருக்கக்கூடாது. அந்த அளவிற்கு ஆண்களோடு, சரி நிகர் சமானமாக மகளிர் உயர வேண்டும் என்பதற்காகத் தான் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மகளிரும் கல்வியைப் பெற வேண்டும், சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுவரை தமிழகத்தில் உள்ள எந்தப் பெண்ணாவது சுயஉதவிக் குழுவில் சேரவில்லை என்றால் உடனடியாக சேர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்".*



– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

### மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள்

2001–2002ஆம் ஆண்டில் ஒரு வளாகம் கட்ட இருந்த அலகுத் தொகை ரூ.2 இலட்சம் ரூ.2.25 இலட்சமாக 2002–2003ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப் பட்டுள்ளது. அன்றாட பராமரிப்புப் பணிகள் பயன்பெறுவோர் குழுக்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இதுவரை 6,442 வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டு 5,721 வளாகங்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் பல நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது. இத் திட்டத்திற்காக தமிழக அரசு இதுவரை ரூ.126.18 கோடி செலவழித்திருக்கிறது.

2002–2003ஆம் ஆண்டில் ரூ.272.02 கோடி மதிப்பில் 79,111 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ.2.53 இலட்சம் மெ.டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 4,58,228 மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம், தமிழ்நாட்டில் மிகச்சிறப்பாக செயல்படுத்தப்பட்டதால், மத்திய அரசு 2002–2003ஆம் ஆண்டுக்கு ரூ.46.17 கோடி நிதி கூடுதலாக ஒதுக்கியுள்ளது. 52,893 மெ.டன் அரிசியையும் கூடுதலாக வழங்கியுள்ளது.





### சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்ட சிறப்புக் கூறு திட்டம்

இத்திட்டத்தின்கீழ், 2002–2003இல் 1,25,000 மெ.டன் அரிசி மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. 14,622 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 7,364 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 53,349 மெ.டன். அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது. 7,589 மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

### கிராமக் குளங்களை சீரமைத்தல்

2002–2003ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 12,618 ஊராட்சிகளில் 50 சதவிகித ஊராட்சிகளில் அதாவது 6,309 கிராம ஊராட்சிகளில் ஒரு ஊராட்சிக்கு ஒரு குளம் என்ற வீதத்தில் 6,309 குளங்களை சீரமைக்க திட்டமிட்டு 8,165 குளங்களை சீரமைக்கும் பணிகள் எடுத்துச் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதுவரை ரூ.7,868 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

### சுயஉதவிக் குழுக்களுக்கான கட்டடங்கள் கட்டுதல்

பெண்களுக்கு அதிகாரப் பகிர்வு செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஊரக ஏழை பெண்களை ஒன்று திரட்டி அவர்கள் சுயஉதவிக் குழுக்களாக செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் 1,14,767 சுயஉதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2002–2003ஆம் நிதியாண்டில், தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 12,618 கிராம ஊராட்சிகளில் 50 சதவீத ஊராட்சிகளில் ஊராட்சிக்கு ஒரு கட்டடம் என்ற வீதத்தில் 6,309 கட்டடங்களைக் கட்ட திட்டமிடப்பட்டு 5,655 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்டடமும் 370 சதுர அடிக்கு குறைவில்லாத பரப்பளவைக் கொண்டிருக்கும். ஒரு கட்டடத்திற்கான அலகுத் தொகை ரூ.1 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக இதுவரை ரூ.4,472 இலட்சம் செலவழிக்கப் பட்டுள்ளது.

### கதிர் அடிக்கும் களங்கள்

2002–2003ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 12,618 கிராம ஊராட்சிகளில் 50 சதவீத ஊராட்சிகளில், ஊராட்சிக்கு ஒரு கதிரடிக்கும் களம் என்ற வீதத்தில் 6,309 கதிர் அடிக்கும் களங்களை, ஒரு களத்திற்கான அலகுத் தொகை ரூ.60,000 என்ற அடிப்படையில் கட்டித் தர திட்டமிடப்பட்டது. 2002–03ஆம் ஆண்டில் 6,779 பணிகள் முடிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதுவரை ரூ.4,000.20 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

### ஊரகக் குடியிருப்பு

2001–2002இல் ரூ.104.64 கோடி செலவினத்தில் 28,284 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. பிரதம மந்திரி கிராம வளர்ச்சி திட்டத்தின் கீழ் (ஊரகக் குடியிருப்பு) 5,971 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 15,256 கச்சா வீடுகள் ரூ.16 கோடி செலவினத்தில் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2002–2003இல் ரூ.121.78 கோடி மதிப்பீட்டில் 37,686 வீடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் (குடியிருப்பு) திட்டத்தின் கீழ் ரூ.18.78 கோடி மதிப்பீட்டில் 5,868 வீடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 19,142 கச்சா வீடுகள் ரூ.19.14 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### ஊரகப் பொருளாதார முன்னேற்றம் - பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம்

2001–2002 மற்றும் 2002–2003ஆம் ஆண்டுகளில் முறையே 22,967 மற்றும் 15,583 ஆக மொத்தம் 38,550 சுயஉதவி குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 17,132 குழுக்களுக்கு சுழல் நிதியாக ஒவ்வொரு குழுவிற்கும் ரூ.25,000/- (அவற்றில் மானியமாக ரூ.10,000/-) வழங்கப்பட்டுள்ளது.

### சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

2002–2003ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.192.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 11,809 வேலைகள் இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு, 5,638 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் இதுவரை ரூ.14,452.50 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

### கிராம நிர்வாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடம் கட்டுதல்

2001–2002ஆம் ஆண்டிற்கு 990 இலட்சங்கள் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. 3,944 வேலைகள் எடுக்கப்பட்டு 3,944 வேலைகள் முடிக்கப்பட்டு 990




இலட்சங்கள் செலவிடப் பட்டுள்ளது. 2002–2003ஆம் ஆண்டிற்கு 1,155 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 3,740 வேலைகள் எடுக்கப்பட்டு 2,547 வேலைகள் முடிக்கப்பட்டு ரூ.1,782.90 இலட்சங்கள் செலவழிக்கப்பட்டுள்ளது.

## வியத்தகு தொழில் வளர்ச்சி

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வுநிலையை உயர்த்துவதற்காக தொழில் துறையில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறார்கள். அவர்கள் தரும் ஊக்கத்தால் தொய்வில்லாச் சாதனைகள் தொழில்துறையில் தொடருகின்றன.

### தமிழ்நாடு கனிம நிறுவனம்

தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) 2003ஆம் ஆண்டு முதல் 54 குவாரிகளை இயக்கி வருகிறது.

பைத்தூர், தோகைமலை, சூலமலை முதலிய முக்கிய குவாரிகளை நவீனப்படுத்த ரூ.4.35 கோடி செலவில் அதிநவீன இயந்திரங்களை 'டாமின்' அறிமுகம் செய்துள்ளது. இதனால் செலவு குறைவதோடு சுற்றுச்சூழல் மாசுபடாமல் உற்பத்தியும் பெருகியுள்ளது. தோகைமலை குவாரியில் மட்டும் மாதம் ஒன்றுக்கு 500 கன மீட்டராக உற்பத்தி உயர்ந்துள்ளது.

சேவாத்தூரிலுள்ள வெர்மிகுலைட் சுரங்கத்தையும் டாமின் நவீனமயமாக்கியுள்ளது.

மாதேப்பள்ளியில் ஒரு புதிய பல ரம்பம் கொண்ட அறுக்கும் இயந்திரமும், காலிப்ரேஷன் இயந்திரமும் ரூ.2 கோடி செலவில் நிறுவப்பட்டு அதன் மூலம் உலகத் தரத்துக்கு இணையான உயர்தர ஓடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கிரானைட் ஓடுகளை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி ஈட்ட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவகங்கையிலுள்ள கிராபைட் தொழிற்சாலை 2001–2002 ஆம் ஆண்டில் 4,554 மெ.டன் கிராபைட் செதில்கள் உற்பத்தி செய்தது. இது 2002–2003இல் 4,900 மெ.டன்னாக உயர்த்தி புதிய சாதனை படைக்க உள்ளது.

2001–2002ஆம் ஆண்டு 2,20,999 மெ.டன் உயர் வகை கனிமங்கள் உற்பத்தி செய்து புதிய சாதனையைப் படைத்துள்ளது.

2001–2002ஆம் ஆண்டில் சிவகங்கை கிராபைட் தொழிற்சாலை ரூ.518 இலட்சம் மதிப்புள்ள கிராபைட் செதில்களை விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது. இது சென்ற ஆண்டைக் காட்டிலும் 38 சதவிகிதம் அதிகமாகும். 2002–2003ஆம் ஆண்டில் இது ரூ.580 இலட்சத்துக்கு விற்பனை செய்து புதிய சாதனை படைக்கவுள்ளது.

2001–2002ஆம் ஆண்டின் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மொத்த விற்பனை ரூ.67.05 கோடி. இது ஒரு சாதனை விற்பனையாகும். இவ்விற்பனை 2002–2003இல் ரூ.80 கோடியாக உயர்ந்து சாதனை படைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2001–2002இல் நிகர இலாபம் ரூ.4.04 கோடி. இது 2002–2003இல் ரூ.6.20 கோடியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### புவியியல் மற்றும் சுரங்கத் துறை

மாண்புமிகு முதல்வர் அவர்களின் நடவடிக்கையால் கனிமச் சலுகைகளை வழங்கியதாலும், எளிய செயல்முறைகளை உருவாக்கியதாலும், புதிய கொள்கை முடிவாலும் தமிழ்நாட்டில் தொழில் முதலீடு ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது.







தமிழ்நாட்டில் காணப்படும் தாதுப் பொருட்களைக் கொண்டு தொழிற்சாலைகள் அமைக்க அரசு ஆர்வம் காட்டி டாடா நிறுவனத்துடன் டைட்டானியம்–டை–ஆக்ஸைடு செயல் திட்டத்தை நிறுவ குறிப்பாணை உடன்பாடு நிறைவேற்றியுள்ளது. இதன்படி டாடா நிறுவனம் ரூ.2,000 கோடி முதலீடு செய்யும்.

### தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC)

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 2001–2002 மற்றும் 2002–2003 ஆகிய ஆண்டுகளில் ரூ.348.75 கோடி நிதியுதவி அளித்து 3,953 சிறு தொழிற்சாலைகள் பயன்பெற்று, இதன்மூலம் 27,108 பேர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மைய நிதி முகவரமைப்பாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற கழகம் (TIIC) செயல்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 8 தொழிற்சாலைகளுக்கு 28.2.2003 வரை ரூ.243.76 இலட்சம் வழங்கி வளர்ச்சியைக் கண்காணித்து வருகிறது.

## சிறுதொழில் துறை

சிறு மற்றும் குறுந்தொழில்கள் வளர்ச்சி பெறுவதற்கு இந்த அரசு பல்வேறு கொள்கை முடிவுகளை வகுத்துள்ளது. இதனால் மாநிலத்தில் தொழில்துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்துள்ளது.

### ஏற்றுமதி சேவை மையம்

ஏற்றுமதியைப் பெருக்கவும், தொழில் முனைவோரை ஏற்றுமதி செய்ய ஊக்குவிக்கவும் ஒவ்வொரு மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திலும் ஏற்றுமதி சேவை மையத்தை ஏற்படுத்த அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

### புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், ஊரகப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தவும் வேளாண்சார்/உணவுப்பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு "புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்ற புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இத்திட்டம், மாநிலத்திலுள்ள 385 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தந்தப் பகுதிகளில் விளையும் வேளாண் பொருட்களை உபயோகித்து, குறைந்தபட்சம் ரூபாய் ஒரு கோடி மற்றும் அதற்கு மேல் முதலீட்டில் தொழில்களைத் தொடங்க இத்திட்டம் வகை செய்யும். இத்திட்டத்திற்கு மூலதன மானியம் மற்றும் பிற மானியங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தபட்சம் ரூ.25 இலட்சம் முதலீட்டில் 4 தொழில்கள் அமைக்க முடியும். இதுவரை மொத்தத்தில் 363 தொழில் திட்டங்களுக்கு மாநில அளவிலான உயர்நிலைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இவை 240 வட்டாரங்களில் ஏற்படுத்தப்படும். இதுவரை 43 தொழில் திட்டங்களுக்கு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நிதி ஒப்புதல் அளித்துள்ளன. 9 தொழில் திட்டங்கள் சுய நிதியின் மூலம் துவங்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் செயல்படும் பொழுது, ஊரக மக்களுக்குப் பெருமளவில் வேலைவாய்ப்பு கிடைக்கும். கிராமங்கள் முன்னேற்றமடையும்.

### சிறுதொழில் பதிவு - நிரந்தரம்

2001–2002 நிதியாண்டில் 32,544 சிறுதொழில் நிறுவனங்களுக்கு பதிவுச் சான்றுகள் வழங்கப்பட்டு, ரூ.937 கோடி நிரந்தர முதலீட்டுடன் 2,37,571 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 2002–2003 நிதியாண்டில் (பிப்ரவரி முடிய) 28,742



விற்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28-8-2001 அன்று தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின்படி 28-2-2003 முடிய ரூ.36.10 கோடி மதிப்பிலான 4813 மெட்ரிக் டன் ஊட்டி டீ விற்பனை செய்யப்பட்டுள்ளது. தற்போது ஊட்டி டீ தமிழக மக்களிடையே பிரபலமடைந்ததோடு, தமிழ்நாட்டில் தேயிலை சந்தையில் இன்கோசர்வ் ஒரு பிரதான விநியோகஸ்தர் நிலையையும் அடைந்துள்ளது.

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் முன்னிலையில் 6.2.2003 அன்று மலர் மற்றும் மாம்பழம் ஏற்றுமதிக்கான ஒப்பந்தம் கையெழுத்தானது*

சிறுதொழில் நிறுவனங்களுக்கு சிறுதொழில் பதிவுச் சான்றுகள் வழங்கப்பட்டு, ரூ.827 கோடி நிரந்தர முதலீட்டுடன், 2,09,816 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2002-2003ஆம் ஆண்டில் இதுவரை 22,468 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் இதுவரை 2,354 மகளிர் தொழில் தொடங்கி உள்ளனர்.

**ஒற்றைச் சாளர முறை கூட்டம்**

ஒற்றைச் சாளர முறை கூட்டம் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் அனைத்துத் துறைகளிடமிருந்து அனுமதிகளைத் துரிதமாகப் பெற்று, புதிதாகத் தொழில் தொடங்க இத்துறை உதவி புரிந்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் (2001-2002 முதல் 2002-2003) 28-2-2003 வரை 2009 மனுக்கள் பெறப்பட்டு 1909 மனுக்கள் தீர்வு காணப்பட்டது.

**ஊட்டி டீ**

நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு தேயிலை விவசாயி களுக்கு பச்சை தேயிலையின் விலை வீழ்ச்சியால் ஏற்பட்ட பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு, பொது விநியோகக் கடைகளில் ஊட்டி டீ என்ற பெயரில் தேயிலைத் தூளை

**ஊட்டி கோல்டு**

தமிழ்நாட்டில் உள்ள மேல்தட்டு உயர்ந்த மற்றும் நடுத்தர மக்களையும் கவரும் நோக்கத்தோடு "ஊட்டி கோல்டு'' என்ற பெயரில் தேயிலைத் தூள் விற்பனையை சென்னை, சேலம், ஈரோடு, கோவை, கரூர், மதுரை, திருச்சி, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அறிமுகம் செய்து பிப்ரவரி 2003 முடிய 5.8 மெட்ரிக் டன் ஊட்டி கோல்டு தேயிலை விற்பனையாகியுள்ளது. ஏனைய 16 மாவட்டங்களில் ''ஊட்டி கோல்டு'' தேயிலை விற்பதற்கான விநியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.







**டீசெர்வ் - புதிய ஏல மையம்**

தேயிலை ஏலத்தை மின்னணு முறையில் வெளிப் படையாக நடத்துவதற்காக ஒரு புதிய ஏல மையத்தை டீசெர்வ் என்ற பெயரில் கூட்டுறவு முறையில் நிறுவுவதற்கு அரசு உத்தரவிட்டது. புதிய ஏல மையம் 28-8-2002இல் பதிவு செய்யப்பட்டது. புதிய ஏல மையம் தனது வியாபாரத்தைத் துவங்க தேயிலை வாரியம் 31-1-2003இல் உரிமம் வழங்கியது.

**இலாபம் ஈட்டிய பொதுத்துறை நிறுவனங்கள்**

**தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்)**
2001-2002இல் நிகர இலாபம் சுமார் ரூ.4.04 கோடி.
2002-2003இல் ரூ.6.20 கோடி.

**தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் (டெல்)**
2001-2002இல் நிகர இலாபம் ரூ.2.90 கோடி.
2002-2003இல் ரூ.5.52 கோடி.

**தமிழ்நாடு உப்பு நிறுவனம்**
2001-2002 மற்றும் 2002-2003இல் நிகர இலாபம் ரூ. 76.83 இலட்சம்.

**தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்**
2001-2002 மற்றும் 2002-2003இல் நிகர இலாபம் ரூ. 702.60 இலட்சம்.

குன்னூரில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளின் தலைமைச் சங்கமான இன்கோசர்வ் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.4,109.81 இலட்சம் விற்பனை செய்துள்ளது.

மிக வெற்றிகரமாக நடைபெறும் தொழிற் கூட்டுறவுகளில் ஒரு எடுத்துக்காட்டாக சேகோசர்வ் நமது மாநிலத்தில் விளங்கி வருகிறது. சேகோசர்வ், 2001-02 மற்றும் 2002-03 (பிப்ரவரி 2003 முடிய) ஆண்டுகளில், முறையே ரூ.204.70 கோடி மற்றும் ரூ.129.47 கோடி அளவுக்கு விற்பனை செய்துள்ளது. 2000-2001ஆம் ஆண்டில் ரூ.22.89 இலட்சமாக இருந்த நிகர இலாபம், 2001-02ஆம் ஆண்டில் ரூ.26.60 இலட்சமாகவும், நடப்பு ஆண்டில் பிப்ரவரி 2003 வரை ரூ.190.47 இலட்சமாக உயர்ந்ததன் மூலம் சங்கத்தின் ஆதாயம் ஈட்டும் திறன் மேம்பட்டுள்ளது.

உற்பத்தித் துறையில் செய்யப்பட்டுள்ள முதலீட்டில் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக விளங்குகிறது என்று இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையம் **(Centre for Monitoring Indian Economy - CMIE)** வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

*– சட்டப்பேரவையில்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*

தேனி மாவட்டத்தில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள இலவம் பஞ்சுக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் முந்திரி சாகுபடியாளர் சங்கத்திற்கு மாக ரூ.22 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஊட்டி தேயிலை வணிகத்திற்காக இன்கோசர்வ் சங்கத்திற்கு ரூ.3 கோடி காசுக்கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1-4-2001 அன்று இருந்த முந்தைய ஆண்டு திரண்ட இழப்பு ரூ.4.32 கோடி முழுவதும் சரி செய்யப்பட்டு 28-2-2003 அன்று ரூ.1.40 கோடி (தோராயமாக) நிகர லாபம் ஈட்டப்பட்டுள்ளது.

**திருமுல்லைவாயில் தொழிற்பேட்டை**

தமிழக சட்டமன்றப் பேரவையில் தமிழக ஆளுநர் அவர்கள் 2001-2002ஆம் ஆண்டிற்கான மாநில அரசின் கொள்கைகள் குறித்து ஆற்றிய உரையில் திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், திருமுல்லைவாயில் அருகில் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழிற்பேட்டை ஒன்று நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 500 தொழிற்கூடங்கள் சிட்கோ நிறுவனத்தினால் கட்டப்பட்டு பெண் தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்தார்கள். இந்த தொழிற்பேட்டையில் மேம்பாட்டுப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

★ திருச்சி அருகே வாழவந்தான் கோட்டையில் 51.7 ஏக்கர் நிலம் மகளிர் தொழிற் பூங்காவிற்காக மேம்பாடு செய்ய ஒதுக்கப்பட்டுள்ளது. உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ரூ.180 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இந்த தொழிற் பேட்டையில் 10 சென்ட் முதல் 1 ஏக்கர் பரப்பளவுள்ள 200 தொழிற் மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த தொழிற் பூங்காவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10.3.2003 அன்று துவக்கி வைத்தார்கள்.

சேலத்திலிருந்து 10 கி.மீ. தூரத்தில் கருப்பூர் கிராமத்தில் பெரியார் பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான 51.7 ஏக்கர் நிலத்தில் "மகளிர் தொழிற்பூங்கா" அமைக்க அனுமதி வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சுமார் 120 பெண் தொழில் முனைவோர் இந்தத் தொழில் பூங்காவில் தொழில் துவங்க முன் வந்துள்ளனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 22.7.2002 அன்று இத்தொழிற்பேட்டைக்கான அடிக்கல் நாட்டியுள்ளார்கள்.

## பட்டு வளர்ச்சித் துறையின் இரண்டாண்டு சாதனைகள்

2001–2002ஆம் ஆண்டில் 5,088 ஏக்கரில் புதியதாக மல்பரி நடவு செய்யப்பட்டது. 131.50 இலட்சம் பட்டு முட்டை தொகுதிகள் வளர்க்கப்பட்டு 5,882 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டது. இதன் மூலம் 25,440 நபர்களுக்கு கூடுதலாக வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டது.

2001–2002ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட நிதி உதவிகள் ரூ.182.87 இலட்சம் மற்றும் பயனடைந்தோர் 4,554 பேர்.

2002–2003ஆம் ஆண்டில் 987 ஏக்கரில் புதியதாக மல்பரி நடவு செய்யப்பட்டது. 89.564 இலட்சம் பட்டு முட்டை தொகுதிகள் வளர்க்கப்பட்டு 4,005 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டது.

2002–2003ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட நிதி உதவிகள் ரூ.150.93 இலட்சம் மற்றும் பயனடைந்தோர் 2239.

2002–2003ஆம் ஆண்டில் மகளிர் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டத்தின்கீழ் 941 மகளிருக்கு பட்டுவளர்ப்புப் பயிற்சி தரப்பட்டுள்ளது.

### கதர்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் 2001க்கு முன்னர் ஐந்து ஆண்டுகளில் உற்பத்தி செய்த கதர் ரகங்கள் ரூ.42 கோடி அளவிற்கு விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்தன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதவி ஏற்ற பிறகு 13.7.2001 அன்று கதர் கிராமத் தொழில் வாரிய செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்த கதர் ரகங்களில் ரூ.3 கோடி மதிப்புள்ள கதர் வேட்டிகளை, முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு விநியோகம் செய்யத் தக்க வகையில் ஆணை வழங்கினார்கள். இதனால் வாரியத்தில் விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்த கதர் ரகங்கள் விற்பனை செய்யப்பட்டு வாரியத்தின் விற்பனை அதிகரிக்கப்பட்டது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் உற்பத்தி செய்து விற்கப்படும் பொருட்களின் மதிப்பில் பெரும்பகுதி அதனை உற்பத்தி செய்யும் நூற்பாளர்கள், நெசவாளர்கள் போன்ற கைவினைஞர்களுக்கு ஊதியமாக அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள நூற்பாளர்கள், கதர் மற்றும் பட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் சுமார் 41,500 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

### சோப்

கடந்த ஆண்டுகளில் படிப்படியாக குறைந்து வந்த சோப்பு உற்பத்தி, நடப்பாண்டில் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதவியேற்ற பிறகு வாரியத்தின் உற்பத்தி பொருள்களான சோப்பு வகைகள், தேன் முதலான கிராமத் தொழில் பொருட்களை 8.7.2002 அன்று நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனையை அறிமுகப்படுத்தி துவக்கி வைத்தார்கள். இதனால் மாதம் ஒன்றுக்கு சுமார் ரூ. 10 இலட்சம் வரை விற்பனை செய்யப்பட்ட சோப்பு வகைகள் ஏறக்குறைய ஐந்து மடங்காக அதிகரித்துள்ளது.

### தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம்

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முதலாக பனைத்தொழில் வளர்ச்சிக்காகவும் பனைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழை பனைத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும் அரசு செயல்பட்டு வருகிறது.

பனைத்தொழில் வளர்ச்சிக்காக 996 ஆரம்ப பனைவெல்ல கூட்டுறவு சங்கங்களும், 8 மாவட்ட பனைவெல்ல விற்பனை கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் ஒரு தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் ஆகியவை நேரடியாகப் பனைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றன.





## அடித்தளத்து மக்களுக்கு ஆதரவுக்கரம்

சாதி மதம் பாராது சமத்துவ உணர்வோடு ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு நிதிஉதவியை வாரி வாரி வழங்கி வருகிறார்கள். குறிப்பாக ஆதிதிராவிடர் மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டிகள் அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி இலட்சக்கணக்கான குடும்பங்களில் கல்வி விளக்கேற்றி வைத்துள்ளார்கள்.

### ஆதிதிராவிட மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்குதல்

2001–2002ஆம் ஆண்டில் ரூ.7.69 கோடி செலவில் 56,525 இலவச மிதிவண்டிகள் வழங்கப் பட்டன.

2002–2003ஆம் ஆண்டில் ரூ.6.91 கோடி செலவில் 47,980 மிதிவண்டிகள் வழங்க மதிப்பீடு செய்யப்பட்டது. இதுவரை 46,737 மிதிவண்டிகள் மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### பட்ட மேற்படிப்பு வரை இலவசக் கல்வி

2001–2002 முதல் முதுகலைப் பட்டபடிப்பு வரை ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிட மாணவியர்களுக்கு இலவசக் கல்வித் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### இலவச வீட்டுமனைப்பட்டாக்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 2001–2002 நிதியாண்டில் ரூ.396.77 இலட்சம் செலவில் 17,240 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

2002–2003இல் ரூ.300 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 11,600 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட உள்ளன.

ஆதிதிராவிடர்களுக்கான மயானம் மற்றும் மயானப் பாதை அமைத்திட 2001–2002ஆம் நிதியாண்டில் ரூ.74.78 இலட்சம் செலவில் மயானம் மற்றும் மயானப் பாதைக்காக நில எடுப்பு செய்யப்பட்டது.

2002–2003இல் ரூ.74 இலட்சம் செலவில் மயானம் மற்றும் மயானப் பாதைக்காக நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் விருது

ஆதிதிராவிடர் மக்களுக்காகப் பாடுபட்டு வரும் நபருக்கு டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது பெறும் நபருக்கு ரூ.1 இலட்சத்தில் காசோலையும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும் வழங்கப்படுகிறது. 2001ஆம் ஆண்டுக்கான டாக்டர் அம்பேத்கர் விருது, அம்பேத்கர் மக்கள் இயக்கத் தலைவரான திரு.வை.பாலசுந்தரம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

### வீட்டுவசதி

JL V2llm N70TA P02.34

ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் இந்திரா ஆவாஸ் யோஜனா (இந்திரா நினைவுக் குடியிருப்பு) திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு கான்கிரிட் கூரை அமைக்க ஒரு வீட்டிற்கு ரூ.12,000 வீதம் ஆதிதிராவிடர் நலத்துறை வழங்குகிறது. 2001–2002, 2002–2003ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் ரூ.2,268.48 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டுள்ளது.

### விடுதிக் கட்டடங்கள்

2001-2002ஆம் ஆண்டில் 8 மாணவர் விடுதிகளும் 2 மாணவியர் விடுதிகளும் ரூ.315 இலட்சம் மதிப்பில் விடுதிக் கட்டடங்கள் கட்ட எடுத்து கொள்ளப்பட்டது.

வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ரூ.210.57 இலட்சம் 2002-2003ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் 2002-2003ஆம் ஆண்டில் 9 மாணவர் மற்றும் 4 மாணவியர் விடுதிகளும் கட்ட ரூ.409.50 இலட்சம் அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.



### தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்

2001-2002 மற்றும் 2002-2003ஆம் ஆண்டுகளில் ஜனவரி 24 முதல் 30 வரை தீண்டாமையை ஒழிப்பதற்காக ரூ.5 இலட்சம் செலவில் மனிதநேய வார விழா அனைத்து மாவட்டங்களிலும் நடத்திட அரசு ஆணை யிட்டுள்ளது.

2001-2002இல் ரூ.84,000-ஆம், 2002-2003ஆம் ஆண்டில் ரூ.2,51,000 செலவிடப் பட்டு வில்லுப்பாட்டு மூலம் தீண்டாமையை ஒழிக்கப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியை தலைமை இடமாகக் கொண்டு இரண்டு விளம்பரப் பிரிவுகள் மூலம் தீண்டாமை ஒழிப்பு குறித்து திரைப்படங்கள் மூலம் விளக்கப்பட்டு வருகிறது.

### பழங்குடியினர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம்

2001-2002ஆம் ஆண்டில் 329 குடியிருப்புகளை ரூ.114 இலட்சத்திலும் 2002-2003ஆம் ஆண்டில் 68 குடியிருப்புகளை கட்ட ரூ.23.12 இலட்சம் செலவிலும் பழங்குடியினர்களுக்கு நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





பழங்குடியினர்களுக்கு குடிநீர் வசதி செய்து தரும் திட்டத்தின் கீழ் 2001-2002ஆம் ஆண்டில் 8 குடியிருப்புப் பகுதிகளுக்கு ரூ.50 இலட்சமும், 2002-2003ஆம் ஆண்டு திட்டத்தில் 7 குடியிருப்புகளுக்கு ரூ.32 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

மாநில அரசு பழங்குடியினரின் குடியிருப்பு களுக்கு மின்வசதி அளித்தல் திட்டத்தின்கீழ் 2001-2002ஆம் ஆண்டில் 18 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.30 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

பழங்குடியினர் குடும்பங்களை பொருளாதார நிலையில் மேம்படுத்திட அவர்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் இதர வசதிகளை அளிப்பதே பழங்குடியினர் துணைத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இந்த புதிய திட்டத்தினை தமிழகத்தில் அரசு செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்திற்கு 2002-2003இல் ரூ.323.32 இலட்சம் சிறப்பு மைய நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

### தாட்கோ

இதில் 48,675 நபர்கள் பயன்பெற்று உள்ளனர். மானியமாக ரூ.26.95 கோடியும், விளிம்புத் தொகையாக ரூ.10.30 கோடியும், வங்கிக் கடன் மற்றும் பருவக்கடன் தொகையாக ரூ.40.98 கோடி ஆகமொத்தம் ரூ.78.23 கோடி நிதி உதவி வழங்கி உள்ளது. படித்த இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு பெற தங்களது திறமைகளை மேம்படுத்திக் கொள்வதற்காக 8,776 நபர்களுக்கு ரூ.8.44 கோடி செலவில் தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும் 20,629 மகளிர் பயன்பெறும் வகையில் சுயஉதவிக் குழுக்கள் மூலம் தொழில் முனைவோர் பயிற்சி ரூ.0.96 கோடி செலவில் வழங்கப்பட்டது.

2002-2001ஆம் நிதியாண்டில் 7 மாணவ/ மாணவியர் விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

2002-2003ஆம் நிதியாண்டில் 1,59,940 ஆதிதிராவிட மக்கள் பயன்பெறும் வகையில் ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன்படி ரூ.93.65 கோடி மானியம் உட்பட மொத்தம் ரூ.200.98 கோடி



நிதிஉதவி செய்ய ஆண்டுத் திட்டம் அரசால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பள்ளிகளில் அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க ரூ.4.58 கோடி செலவிடப்பட்டுள்ளது.



தாட்கோ மூலம் 143 ஆதிதிராவிட மாணவ/மாணவியர் விடுதிகளுக்கான கட்டுமானப் பணிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.13.68 கோடியும், ஹட்கோ கடனாக ரூ.31.37 கோடியும் ஆகமொத்தம் ரூ.45.05 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன. அவற்றில் தற்சமயம் 11 விடுதிகளுக்கான கட்டுமானப் பணிகள் முடிவு பெற்றுள்ளன.

## பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

2001–2002ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ், தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கிய 770 விடுதிகளுள் 114 விடுதிகளுக்குக் கட்டடம் கட்டும் பணி ரூ.36.99 கோடி செலவில் தொடங்கப்பட்டு 21 விடுதிகளுக்கான கட்டடப்பணிகள் முடிக்கப்பட்டது.

ரூ.36 இலட்சம் செலவில் 94 விடுதிகளில் மின் இணைப்பு பழுதுபார்த்தல்/புதுப்பித்தல் பணி முடிக்கப்பட்டது.

பள்ளிகளில் வழங்கப்படும் உணவின் தரத்தை உயர்த்த ஒரு மாணவனுக்கு மாதாந்திர உணவுக் கட்டணம் ரூ.225லிருந்து ரூ.300 ஆக உயர்த்தி, ஆண்டொன்றுக்கு ரூ.3.70 கோடி செலவில், 49,000 மாணவ/மாணவியர் பயன்பெறுகின்றனர்.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு குடிநீர், மின் இணைப்பு வசதி போன்ற அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிகள் 2001–2002 ஆண்டில் ரூ.47 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

சாலை, தெரு விளக்கு, குடிநீர் வசதி மற்றும் சுகாதார வசதிகளுக்காக 2001–2002ஆம் மற்றும் 2002–2003ஆம் ஆண்டில் ரூ.7.25 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மலைப்பிரதேசங்களில் உள்ள 18 விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குக் கம்பளி ஆடைகள் ரூ.2.38 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.

தமிழகத்தின் 972 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்கு விளையாட்டுக் கருவிகள், ஒரு விடுதிக்கு ரூ.1000 வீதம் ரூ.9,72,000 வழங்கப்பட்டது.

இவ்விடுதிகளில் ரூ.3,000 வீதம் நூலகங்களுக்காக ரூ.29.16 இலட்சம் செலவில் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

2002–2003ஆம் ஆண்டில் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.3833.30 இலட்சம் வழங்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பொருளாதார நிலையை உயர்த்த





2002–2003ஆம் ஆண்டில் 1,500 இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப் பட்டன.

## நெடுஞ்சாலைத்துறையின் நெடிய பணிகள்

* 2001–2002–ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின் கீழ் ரூ.502.47 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

* பகுதி 2 திட்டத்தின் கீழ் 2001–2003 ஆகிய இரண்டாண்டுகளில் 18 பாலப்பணிகள் முடிக்கப்பட்டன.

* நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதியைக் கொண்டு 213.90 கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகளும், 76 பாலங்கள் கட்டும் பணிகளும் 55.16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2001–2002–ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. 2002–2003ஆம் ஆண்டில் ரூ.120.17 கோடி மதிப்பீட்டில் 75 கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகளும், 78 பாலப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.



* 500 முதல் 1,000 வரை மக்கள்தொகை உள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் நோக்குடன் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.95.42 கோடி மதிப்பீட்டில் 669 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும், 9 பாலங்கள் கட்டும் பணிகளும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.110 கோடி மதிப்பீட்டில் 910 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும், 10 பாலங்கள் கட்டும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

* 2001–2002ஆம் ஆண்டில் ரூ.58.73 கோடியில் 1,460 கி.மீ. சாலைகளின் மேற்தளமும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.33.41 கோடியில் 835 கி.மீ. சாலைகளின் மேற்தளமும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

* இருப்புப் பாதைப் பணிகள் திட்டத்தின் கீழ் 2001–2002ஆம் ஆண்டில் ஒரு சாலை கீழ்ப்பாலமும், 2002–2003ஆம் ஆண்டில் இரு சாலை மேம்பாலங்களும் கட்டப்பட்டுள்ளன.

* ஹட்கோ கடனுதவியுடன் 2002–2003ஆம் ஆண்டில் 14 பாலங்கள் திரும்பக் கட்டும் பணியில் கட்டி முடிக்கப்பட்டது.

* தேசிய நெடுஞ்சாலை திட்டப் பணியின் கீழ் 2001–2002ஆம் ஆண்டின் ரூ.96.54 கோடியில் 386 கி.மீ. சாலை மேம்பாட்டுப் பணிகளும், 5 சிறுபாலங்கள் கட்டும் பணிகளும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.84.50 கோடியில் 295 கி.மீ. சாலை மேம்பாட்டுப் பணிகளும் ஒரு சிறு பாலமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## அவசர விபத்து சிகிச்சை மையம்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேசிய நெடுஞ்சாலைகளிலும் மாநில நெடுஞ்சாலைகளிலும் ஒவ்வொரு 50 கி.மீ. தூரத்திற்கும் 'சாலை விபத்து சிகிச்சை மையம்' ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி முதற்கட்டமாக அரசு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் சென்னை–திருச்சி மற்றும் சென்னை–பெங்களூர் நெடுஞ்சாலைகளில்

முதலில் 13 சிகிச்சை மையங்களை துவக்கத் தீர்மானிக்கப்பட்டு, அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதில் 8 மையங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த சிகிச்சை மையங்களில் நோயாளி ஊர்தி மற்றும் உயிர் காக்கும் மருந்துகள் உள்ளன. இம்மையங்கள் விபத்தில் சிக்கியவர்களை, உரிய நேரத்தில் மீட்டு, உடனடி மருத்துவ சிகிச்சை அளித்து, அவர்களது உயிரினைக் காப்பாற்ற உதவி புரிந்து வருகின்றன.

## பொதுப்பணியில் புதுப்பணிகள்

### நீர்வள ஆதார அமைப்பு

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் ரூபாய் 807.49 கோடி செலவில் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் ரூபாய் 1,062 கோடியாக திருத்தப்பட்டு அதற்கான களப்பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டது. மற்றும் இத்திட்டக் காலத்தை 31–3–2004 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டித்து உலக வங்கி ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் நிதி ஆதாரத் தேவையை எதிர்நோக்கி அடவிநயினார் கோயில், கிருதமால் அணைக்கட்டு, கொடுமுடியாறு, நம்பியாறு, பொய்கையாறு, சோத்துப்பாறை, வடக்குப் பச்சையாறு, மோர்தானா, இராஜா தோப்பு கானாறு ஆகிய ஒன்பது நீர்த்தேக்கத் திட்டங்கள் உலக வங்கி உதவியுடன் முற்றிலும் முடிக்கப்பட்டன.

பாலாறு–வைகை–தாமிரபரணி படுகைகளில் உள்ள 620 ஏரிகளையும், வரத்துவாய்க்கால்களிலும் புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப் பட்டு ரூ.100 கோடி செலவில் இரண்டு ஆண்டுகளில் பணி முடிக்கப்பட்டு சுமார் 1 இலட்சம் எக்டர் பாசனப் பரப்பு பயனடைந்துள்ளது. கால்வாய்கள், மதகுகள் புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் மூலம் 6 இலட்சம் எக்டர் பாசனப்பரப்பு பயன்பெறுகிறது.

### ஹட்கோ நிதியுதவித் திட்டம்

கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.58 கோடி மதிப்பில் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

### தூர் துடைப்புப் பணிகள்

2002–2003இல் காவிரி கழிமுகப் பகுதியிலுள்ள விவசாயத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்புக்காக வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர், திருச்சி, நாகப்பட்டினம் மாவட்டங்களில் பி, சி மற்றும் டி பிரிவு வாய்க்கால்கள் தூர்வாரும் பணி ரூ.5 கோடியில் மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றத்திலுள்ளது.

### நபார்டு வங்கி நிதியுதவித் திட்டங்கள்

13,300 எக்டர் நிலம் பாசன வசதி பெறும் வகையில் ரூ.101 கோடி மதிப்பில் 10 பாசனத் திட்டங்களுக்கு நபார்டு வங்கி அனுமதி அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் 23 மாவட்டங்களில் ரூ.14.06 கோடி நபார்டு வங்கி நிதி உதவியுடன் 42 உபயோகமில்லா குளங்களை புனரமைப்புப் பணிகள் செய்வதால் 5.054 எக்டர் ஆயக்கட்டு பயன்பெறும். அவ்வேலைகள் முடியும் தருவாயில் உள்ளது.

### புதிய வீராணத் திட்டம்

புதிய வீராணம் திட்டத்தில், வீராணம் ஏரியில் வடவாறு கால்வாயைச் சரிப்படுத்தவும், ஏரியின் முழு கொள்ளளவிற்கு உயர்த்தவும், அதிலுள்ள திட்டுக்களை அகற்றுதல் மற்றும் தற்போதைய கொள்ளளவான 935 மி.கன அடியிலிருந்து 1405 மி.கன அடியாக அதிகப்படுத்தும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

✧ ரூ.1,540 இலட்சத்தில் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

✧ ரூ.1145 இலட்சத்தில் உயர்நீதிமன்ற வளாகத்தில் சட்ட வல்லுநர் அறைகள் கட்டடம் (Law Chamber) கட்டப்பட்டுள்ளது.

✧ சென்னை கிரீன்வேஸ் சாலையில் 30 நீதிபதி மாளிகைகள் ரூ.1,365 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளது.

✧ சென்னை, அரசினர் தோட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்கு ரூ.250 இலட்சத்தில் நிர்வாகப் பகுதி வளாகம் கட்டப்பட்டுள்ளது.



★ நில அளவைத் துறைக்காக 33 இடங்களில் நில பதிவறைகள் ரூ.330 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

★ சென்னை கிண்டியில் வேளாண் விற்பனை மைய அலுவலகக் கட்டடம் ரூ.193.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

★ கோவை மாவட்டம் திருப்பூரில் ஒழுங்குமுறை விற்பனை வளாகத்தில் ரூ.230.50 இலட்சம் செலவில் விற்பனை நிலையம் கட்டப்பட்டுள்ளது.

★ சேலம் மாவட்டத்தில் உத்தமசோழபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனை மையம் மற்றும் விற்பனை குழு அலுவலகம் ரூ.214.50 இலட்சத்திலும், விடுதியுடன் கூடிய பயிற்சி மையம் ரூ.700 இலட்சம் செலவிலும் கட்டப்பட்டுள்ளது.

★ சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளை மதுரையில் ரூ.44.81 கோடி செலவில் கட்டப்பட்டு கட்டடப் பணிகள் முடிவடைந்து விட்டது. மரசாமான்கள் ரூ.7.68 கோடி செலவில் வெகு சீக்கிரத்தில் பொருத்தப்பட உள்ளது.

★ கூடுதல் தமிழ்நாடு விருந்தினர் மாளிகை மற்றும் அலுவலர் குடியிருப்புகள் ரூ.22.07 கோடி செலவில் புதுடெல்லியில் கட்டப்பட்டு கட்டடப் பணிகள் முடிவடைந்து விட்டது. மர சாமான்கள் பொருத்துவது விரைவில் முடிவடைய உள்ளது.

## பொதுமக்கள் பிணி தீர்க்கும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறை

மக்களின் உடல் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் இத்துறைக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் வழங்கி ஊக்கமளித்து வருகிறார்கள். குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு அனைத்து மருத்துவ வசதிகளையும் வழங்க ஆணையிட்டுள்ளார் முதல்வர் அவர்கள். அதன்படி,

★ ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 300 பெண் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ ஆரம்ப சுகாதார நலன்களை மேம்படுத்த 500 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

★ கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு தரம் வாய்ந்த சேவைகளை அருகிலேயே கிடைக்கும் வகையில் 58 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

★ மலைவாழ் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு போதுமான மருத்துவ வசதி வழங்குவதற்காக 25 நடமாடும் மருத்துவப் பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 20 நடமாடும் மருத்துவப் பணிக்குழுக்கள் விரைவில் அமைக்கப்பட உள்ளது.

★ போதுமான வசதிகள் இல்லாத கிராமப்புற மக்களுக்கு 2001–2002ஆம் ஆண்டில் 151 சிறப்பு மருத்துவ முகாம்களும் 2002–2003–இல் 385 சிறப்பு மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டுள்ளது.

★ அனைத்து வட்டார அளவிலான ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் குளுக்கோமீட்டர் சாதனமும், இருதய நோய் தொடர் கண்காணிப்பிற்கென கையடக்கமான ஈசிஜி கருவியும் வழங்கப்பட்டுள்ளது.

★ 400 துணை சுகாதார நிலையங்களுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ கருவுற்ற தாய்மார்களுக்கும், வளர் இளம் பருவ மகளிருக்கு வாரந்தோறும் இரும்புச்சத்து மாத்திரை வழங்கப்படுகின்றது.



கடந்த மூன்றாண்டுகளாக இளம்பிள்ளை வாத நோய் ஒன்றுகூட இல்லை. இது தொடர்ந்து முறையாக அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்குவதாலும் சிறப்பு போலியோ முகாம்கள் மூலமாக 73 இலட்சம் குழந்தைகளுக்கு கூடுதலாக இரண்டு தவணைகள் வழங்குவதாலும் அடையப்பட்டது. பிற தடுப்பூசியினால் தடுக்கப்படும் நோய்களும் குறைவாகவே உள்ளன.

10,000 மக்கள்தொகைக்கு தொழு நோய் கண்டவர்கள் 3.5 என்ற நிலைக்கு குறைக்கப் பட்டுள்ளது.

யானைக்கால் நோயை அடியோடு ஒழித்திட ஒட்டுமொத்த டிஇசி சிகிச்சை முறை மூலம் தொடர்ந்து இரண்டாண்டுகளாக ஒவ்வொரு சுற்றிலும் 2.3 கோடி மக்கள் பயனடைந் துள்ளனர்.

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலம்

2001ஆம் வருடத்தில், 25 மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலுள்ள 25 அறுவை அரங்கு களிலும் 9 மாவட்ட தலைமை மருத்துவமனை களிலுள்ள 9 தீக்காயப் பிரிவுகளிலும் குளிர்சாதன வசதி அமைக்க ஒப்புதலளிக்கப்பட்டது.

மேலும் 2003 ஆம் வருடத்தில் 64 அரசு மருத்துவமனைகளிலும் குளிர்சாதன வசதி அமைத்திட ஒப்புதலளிக்கப்பட்டது.

அரசு மருத்துவமனைகளில் மின்தடை ஏற்படும் தருணத்தை சமாளித்து தடையில்லா மின்சார விநியோகம் ஏற்படுத்திட அனைத்து மருத்துவ மனைகளிலும் மின்னாக்கி (ஜெனரேட்டர்) படிப்படியாக அமைக்க அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

மூன்று மாவட்ட மருத்துவமனைகளில் 75 கேவிஏ திறனுள்ள மின்னாக்கிகள் அமைத்திட ஒப்புதலளிக்கப் பட்டது.

கிருஷ்ணகிரி, கோவில்பட்டி, திண்டிவனம், ஸ்ரீபெரும்புதூர், ஆம்பூர் ஆகிய அரசு மருத்துவ



மனைகளில் இம்மையங்களை ரூ.338 இலட்சம் செலவில் மேம்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையிலும் இம்மையத்தை ரூ.105 இலட்சம் செலவில் மேம்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டது.

திருவண்ணாமலை, விழுப்புரம், நாமக்கல், திருப்பூர், புதுக்கோட்டை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் ரூ. 21 கோடி செலவில் மண்டல நோய்ப் பரிசோதனை மையங்கள் அமைக்கப்படுகிறது.

பொதுமக்களுக்கு சிறந்த மருத்துவ சேவை வழங்குவதற்காக அரசு மருத்துவமனைகளில், 1126 செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

மருந்து தயாரிப்பு நன்னடத்தை விதி முறைகளை அமல்படுத்தும் நோக்கத்தோடு மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் திடீர் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டன. குறைகள் காணப்பட்ட நிறுவனம் மருந்து தயாரிப்பை உடனடியாக நிறுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டது.

போலி மருந்துகளைத் தடுக்க எடுத்த நடவடிக்கையில், க்ரிப் பேண்டேஜ் மற்றும் ஆக்குமெண்டின் மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

2001–2002 ஆம் ஆண்டில் 3,90,195 பேர்கள் மற்றும் 2002–2003 ஆம் ஆண்டில் 4,00,944 பேர்கள் குடும்பநல அறுவை சிகிச்சையும், 2001–2002 ஆம் ஆண்டில் 3,88,568 பேர்கள் மற்றும் 2002–2003 ஆம் ஆண்டில் 4,11,778 பேர்கள் கருத்தடை வளையம் பொருத்தியும், 2001–2002 ஆம் ஆண்டில் 1,91,222 பேர்கள் மற்றும் 2002–2003 ஆம் ஆண்டில் 1,49,935 பேர்கள் வாய்வழி மாத்திரைகளை உட்கொண்டும் உள்ளனர். மேலும் 2001–2002 ஆம் ஆண்டில் 2,27,138 பேர்கள் மற்றும் 2002–2003 ஆம் ஆண்டில் 1,90,489 பேர்கள் ஆணுறை உபயோகிக்கின்றனர்.

எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தடுப்பு நடவடிக்கைகளில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது.



★ 2001–ஆம் ஆண்டில் 17 ஆக இருந்த எச்.ஐ.வி. கண்டறியும் நிலையங்கள் 2002ஆம் ஆண்டில் 24 ஆக உயர்த்தப் பட்டது.

★ 2002 ஆம் ஆண்டு நோய் கண்டறியும் புள்ளி விவரங்கள் தேசிய அளவில் எடுக்கப்பட்டதில், தமிழ்நாட்டில் இந்த 24 நிலையங்களில் கர்ப்பிணிகள் முன் கவனிப்பு நிலையங்களில் இருந்து எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி, 2001–ஆம் ஆண்டில் 1.1 சதவீதமாக இருந்த நோயின் தாக்கம் 2002–ஆம் ஆண்டில் 0.87 சதவீதமாக குறைந்துள்ளது.

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் 112 திட்டங்களை தொண்டு நிறுவனங்களின் மூலமாகச் செயல்படுத்தி வருகிறது.

பொதுமக்களிடையே பால்வினை நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காகவும், எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோய் பரவுவதை தடுப்பதற்காகவும் தமிழகத்தில் 57 பால்வினை நோய்ப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

தன்னார்வத்துடன் இரத்தம் அளிப்பவர்களிடம் இருந்து எடுக்கப்படும் இரத்தத்தின் பங்கு மொத்த இரத்த சேமிப்பில் 2001–ஆம் ஆண்டில் 50.40 சதவீதமாக இருந்து 2002–ஆம் ஆண்டில் 59.40 சதவீதமாக உயர்ந்துள்ளது. அக்டோபர் 1ஆம் தேதியன்று இரத்ததான முகாம் நடத்தப்பட்டு 3,783 அலகுகள் இரத்தம் சேமிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில், தாய் சேய் மேவா திட்டம் 47 மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## ·ந்திய மருத்துவம் மற்றும் ·பியோபதித்துறை

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் ரூ.40 இலட்சங்கள் செலவில் வெளி நோயாளி துறைக்கான கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு வருகின்றன.

சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் ரூ.30 இலட்சங்கள் செலவில் யோகா மற்றும் இயற்கை வைத்திய பிரிவிற்கு மேல் முதல் தளம் கட்டி முடிக்கும் தருவாயில் உள்ளது.

### எம்.ஆர்.ஐ. ஸ்கேன்

தமிழ்நாடு மருத்துவப்பணிகள் கழகம் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சென்னை அரசு பொதுமருத்துவமனை மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவியை இயக்கி வருகிறது. ஏழை எளிய மக்களும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இதுவரை வசூலிக்கப்பட்டு வந்த கட்டணத்திலிருந்து ரூ.1,000 குறைத்து ஏற்கெனவே வசூலிக்கப்பட்டு வந்த ரூ.4,500–க்கு பதிலாக ரூ.3.500க்கு Brain. Cervical Lumbar, Abdomen, Thoracic. M.R.Angio, Pelvis, MRCP and large part போன்ற பாகங்களுக்கும் மற்றும் ரூ.3,500–க்கு பதிலாக ரூ.2,500க்கு Knee, Hipjoint, Shoulder, Wrist, Elbow, MR Mylogram and Small area including limited sequence of spine போன்ற பாகங்களுக்கும் மாற்றி அமைத்துள்ளது. கூடுதலாக ரூ.1,500 காண்ட்ராஸ்ட்க்கு வசூலிக்கப்படும். இந்தக் கட்டணம் தனியார் மருத்துவமனைகளில் வசூலிக்கும் கட்டணத்தை விட மிகவும் குறைவானது.

★ சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் உயிர்வேதியல் மற்றும் உடற்கூறு இயல் ஆய்வுக்கூட மேம்பாட்டிற்காக ரூ.7.37 இலட்சங்கள் செலவில் சாதனங்களும், இரசாயனப் பொருட்களும் வாங்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு பார்வை இழப்பு தடுப்புச் சங்கம்

தற்போது தமிழ்நாட்டில் பார்வை இழப்பு விகிதம் 0.78 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் இலவசமாக 7,00,000 கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டு விழியுள்ளாடி, மருந்துகள் மற்றும் கண்ணாடியும் வழங்கப்பட்டது.





கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர்களில் தமிழ்நாட்டில் மட்டும் 91 சதவீதத்தினருக்கு விழியுள்ளாடி பொருத்தப்பட்டு, அகில இந்திய அளவில் முதன்மை மாநிலமாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கது. கடந்த இரண்டாண்டுகளில் 34 இலட்சம் பள்ளிச் சிறார்களின் குறைகள் கண்டறியப்பட்டு 40 ஆயிரம் சிறார்களுக்கு இலவசமாக கண் கண்ணாடி வழங்கப்பட்டது.

### கண்தானம்

இவ்வாண்டில் மொத்தம் 3,320 கண்கள் இறந்தவர்களிடமிருந்து உரிய முறையில் தானமாகப் பெறப்பெற்று தகுதியான கண் அறுவை சிகிச்சை வாயிலாக 1,230 நோயாளிகளுக்குப் பார்வை பெற ஏதுவாகப் பொருத்தப்பட்டது. கண் தானம் பெறுவதற்கு ஏதுவாக கடந்த இரண்டாண்டுகளில் திருநெல்வேலி மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் கண் வங்கி நிறுவப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.108 கோடி மதிப்புள்ள மருந்துகளையும் 2002–2003ஆம் ஆண்டில் ரூ.115 கோடி மதிப்புள்ள மருந்துகளையும், தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவ நிலையங்களுக்கு 24 மாவட்ட மருந்து கிடங்குகள் மூலமாக வழங்கியது.

★ ரூபாய் 14 கோடி மதிப்புள்ள இசிஜி கருவிகள், அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர் கருவிகள், பாயில் கருவிகள், எக்ஸ்ரே கருவிகள் ஆகியவை, சுகாதார துணை மையங்களுக்கும், ஆரம்ப சுகாதார மையங்களுக்கும், அரசு மருத்துவ மையங்களுக்கும் இக்கழகம் கொள்முதல் செய்து வழங்கியது.

★ ரூபாய் 4.5 கோடி மதிப்புள்ள மூன்று டெலிகோபால்டு கருவிகள் இக்கழகம் கொள்முதல் செய்து, அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை, மகப்பேறு மகளிர் நோயியல் நிலையம், எழும்பூர் மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைகளில் இக்கழகம் நிறுவியுள்ளது.

★ உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.11.50 கோடியில், 11 மாவட்ட மருந்துக் கிடங்குகளை தமிழ்நாட்டில் கட்டியுள்ளது.

★ மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் மொத்தம் ரூ.5.65 கோடி செலவில் 8 நகர சுகாதார மையங்களையும், 21 சுகாதார துணை மையங்களின் கட்டுமானப் பணி செய்து வருவதுடன் 40 ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் 75 சுகாதார துணை மையங்களின் பழுது நீக்கும் பணிகளையும் செய்துவருகிறது.

★ இந்த இரண்டாண்டில் 18 சி.டி.ஸ்கேன் மையங்களை அரசு மாவட்ட மருத்துவமனைகளில் நிறுவியுள்ளது. ஆக தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் மொத்தம் 35 சி.டி.ஸ்கேன் மையங்களை இக்கழகம் நடத்தி வருகிறது. இம்மையங்களில் 1,06,999 நோயாளிகள் 2001–2002ஆம் ஆண்டிலும், 1,63,617 நோயாளிகள் 2002–2003ஆம் ஆண்டிலும் ஸ்கேன் செய்யப் பட்டுள்ளனர்.

★ சென்னை மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் இக்கழகம் நடத்திவரும் எம்.ஆர்.ஐ. மையத்தில் 2001–2002ஆம் ஆண்டில் 1,262 நோயாளிகளும், 2002–03ஆம் ஆண்டில் 4,283 நோயாளிகளும் ஸ்கேன் செய்யப் பட்டுள்ளனர்.

# ஆன்மீக எழுச்சிக்கு ஒரு புதிய பூபாளம்

## திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம்:

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23.3.2002 அன்று சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

முதற்கட்டமாக 63 திருக்கோயில்களில் தொடங்கிவைக்கப்பட்ட இத்திட்டம், நன்கொடையாளர்கள், ஆர்வலர்களின் அமோக ஆதரவினைத்



தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக 63 திருக்கோயில்களில் 15.8.2002 முதலும், மூன்றாம் கட்டமாக 18 திருக்கோயில்களில் 15.9.2002 முதலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு சிறப்புற நடைபெற்று வருகின்றது. அதன்பின் 14.4.2003 அன்று மேலும் 18 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டு தற்சமயம் 162 திருக்கோயில்களில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

31.3.2003 முடிய இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தோரின் எண்ணிக்கை 54,04,681 ஆகும். சுமார், 700 இலட்சம் ரூபாய் நன்கொடையாகவும், ரூபாய் 300 இலட்சம் உண்டியல் மூலமும் இத்திட்டத்திற்கு கிடைக்கப்பெற்று மக்களின் பேராதரவை பெருமளவில் பெற்றுள்ளது.

## இலவசத் திருமண திட்டம்

தற்சமயம் 2003-2004ஆம் ஆண்டு மானிய கோரிக்கையில் இதற்கு முன்பாக 2 கிராம் எடையில் வழங்கப்பட்டு வந்த பொன் திருமாங்கல்யத்தின் எடையை 4 கிராமாக உயர்வு செய்து வழங்கப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டதின் அடிப்படையில் இணை ஒன்றுக்கு செலவுத் திட்டம் ரூ.5,500/- ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் நிதிவசதிமிக்க ஒவ்வொரு திருக்கோயில்களிலும் தனித்தனியே நடத்தப்பட்டு வந்த இலவச திருமணங்கள் இந்த ஆண்டு (14.7.2002) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சிறப்பாக ஒரே இடத்தில் முதன் முறையாக 1008 இணைகளுக்கு இலவச திருமணங்கள் நடத்தப்பட்டன. இத்திருமணத்தில் 662 இணைகள் ஆதிதிராவிடர் வகுப்பினரும், 67 இணைகள் பழங்குடி இனத்தவரும், 114 இணைகள் மிகவும் பிற்படுத்தப்பட்டவரும், 160 இணைகள் பிற்படுத்தப்பட்டவர்களும், 5 இணைகள் இதர வகுப்பினரும் பயனடைந்தனர்.

## திருப்பணி

உலகிலேயே மிகப்பெரிய கோவில் பிரகாரத்தை கொண்டது இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலாகும். இந்த திருத்தலத்தில் 125 வருடங்களாகப் பயனற்றுக் கிடந்த இரண்டாம் பிரகாரத்தின் தெற்குப் பகுதி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக செப்பனிடப்பட்டு 8.4.2002 அன்று திறந்து விடப்பட்டது.





## தர்கா

அனைத்து மத மக்களையும் சமமாகப் பாதுகாக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழகத்தில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்களிலும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த உத்தரவிட்டு, சென்னை, அண்ணாசாலையிலுள்ள ஹஜரத் சையத் மூஸாஷா காதிரி தர்கா வளாகத்தில் இந்தத் திட்டத்தை 3.3.2003 அன்று தொடக்கி வைத்தார்கள்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் தமிழகத்திலுள்ள பிரசித்திபெற்ற ஒரு பள்ளிவாசல் மற்றும் தர்காவில் தொழுகை நடத்த வருகைதரும் சுமார் 200 இறையன்பர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படும்.

## திருக்கோயில் திருப்பணிகளுக்கு நிதியுதவி அனுமதிக்கப்பட்ட விவரம்

திருக்கோயில்களில் நடைபெறும் பல்வேறு திருப்பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு 393 திருக்கோயில்களில் 677 பணிகளுக்கு ரூ.4025.36 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளது.

## திருப்பணிக்கு நிதியுதவி

திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணி களுக்காக அரசு மானியம், ஆணையர் பொது நல நிதி, ஆலய மேம்பாட்டு நிதி போன்ற நிதிகளிலிருந்து 83 திருக்கோயில்களுக்கு ரூ.197.08 இலட்சம் துறை மூலம் நிதியுதவி செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் 150 திருக்கோயில்களுக்கு ரூ.37.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## குடமுழுக்கு

திருக்கோயில்களில் திருப்பணிகள் முடித்து இரண்டாண்டுகளில் 1,766 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழா நடத்தப்பட்டது.

1974ஆம் ஆண்டில் நடைபெற்ற குடமுழுக்கிற்குப் பிறகு சுமார் 18 ஆண்டுகள் காலம் கடந்த நிலையில் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர்



திருக்கோயிலில் சுமார் ரூ.300 இலட்சம் செலவில் அனைத்து திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு 27.6.2002 அன்று குடமுழுக்கு வெகு சிறப்பாக நடைபெற்றது.

சுமார் 450 ஆண்டுகளுக்குப் பிறகு ரூ.20 இலட்சம் செலவில் புராதன சிறப்புமிக்க ஆயிரங்கால் மண்டபம் புதுப்பிக்கப்பட்டு சீரமைக்கப்பட்டது. இது தவிர சுமார் ரூ.85 இலட்சம் செலவில் சுவாமி மற்றும் அம்பாள் சன்னதி கொடி மரங்கள் தங்க ரேக்குகள் ஒட்டப்பட்டு புதுப்பிக்கப்பட்டது.

### ஒரு கால பூஜைத் திட்டம்

ஒரு கால பூஜை முறையாக நடத்திட இயலாத நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜை முறைப்படி நடத்திட இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

2001–2002 நிதியாண்டில் 1,000 திருக்கோயில் களுக்கும், 2002–2003 நிதியாண்டில் 460 திருக்கோயில்களுக்கும், ஆக கடந்த இரண்டு ஆண்டுகளில் 1,460 திருக்கோயில்களில் இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

### கிராமப்புற திருப்பணி

இத்திட்டத்தின் கீழ் 2001–2002ஆம் நிதியாண்டிற்கு 100 திருக்கோயில்களுக்கும், 2002–2003ஆம் நிதியாண்டிற்கு 100 திருக்கோயில் களுக்கும் தலா ரூ.25,000 வீதம் ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### மரத்தேர் திருப்பணி

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான திருத்தேருக்குப் பதிலாக ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திருத்தேர் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, இதற்கான செலவுத் தொகை திருக்கோயில் "திருப்பணி மற்றும் அறப்பணி நிதி"–யிலிருந்து வழங்கவும் ஆணையிடப் பட்டுள்ளது. இது தவிர 2001–2002இல் 29 திருத்தேர்களும் 2002–2003இல் 44 திருத்தேர்களும் பழுது பார்க்கப்பட்டு சீரமைக்கப்பட்டது.

### கிராமக்கோயில் பூசாரிகளுக்கு ஓய்வூதியம்

கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதிய தேர்வுக் குழுவினரால் இத்துறை நிர்வாகத்தின் கீழ் இல்லாத திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு 1.7.2001 முதல் நபர் ஒருவருக்கு ரூ.500 வீதம் 861 பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்க அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

### பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள்

பக்தர்களுக்கு 1,077 திருக்கோயில்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. 272 திருக்கோயில்களில் கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளது. குளியல் அறைகள் வசதிகள் 165 திருக்கோயில்களில் புதியதாக செய்து கொடுக்கப்பட்டது.

திருக்கோயில்களுக்கு காணிக்கையாக செலுத்தப்படும் பரிவட்டங்களில் உபரியாக உள்ள பரிவட்டங்களை நிதி வசதியில்லாத திருக்கோயில் களுக்கு உபயமாக வழங்கும் திட்டத்தின்படி இதுவரை 84 திருக்கோயில்களில் உள்ள உபரி பரிவட்டங்களை 6,171 திருக்கோயில் களுக்கு 37,257 பரிவட்டங்கள் உபயமாக வழங்கப்பட்டுள்ளன.

### ஆக்கிரமிப்பு அகற்றுதல்

திருக்கோயிலுக்குச் சொந்தமான 301.98 ஏக்கர் நிலம், 51 கிரவுண்ட் 1,546 சதுர அடி மற்றும் 38









*புதுமைப்பித்தனின் படைப்புகள் நாட்டுடைமை*

கட்டடங்களில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு திருக்கோயில் வசப்படுத்தப்பட்டது.

### தமிழ் வளர்க்கச் சீரிய பணிகள்

தமிழ் வளர்ச்சிக்கான நூல் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.9,78,394மும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.4,92,179மும் நூல்கள் வெளியிட நிதியுதவியாக வழங்கப்பெற்றன.

### ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்

இவ்வரசு பொறுப்பேற்றபின் 2001–2002ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, விழுப்புரம், சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி, தருமபுரி, வேலூர் ஆகிய 8 மாவட்டங்களிலும் 2002–2003ஆம் ஆண்டில் சேலம், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், ஈரோடு, சென்னை, கன்னியாகுமரி, இராமநாதபுரம் ஆகிய 8 மாவட்டங்களிலும் ஆக மொத்தம் 16 ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

### குறள் பரிசுத் திட்டம்

திருக்குறள் முற்றோதல் செய்த கடலூரைச் சேர்ந்த செல்வி சிவராஜீ அவர்களுக்கு ரூ.5000த்தை 11.6.2001லும், செல்வி இரா. அருள்ஜோதி அவர்களுக்கு ரூ.5,000த்தை 4.7.2002லும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

### தமிழறிஞர்களின் பிறந்தநாள் விழா/ நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடுதல்

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் நூற்றாண்டு விழா அவர் வாழ்ந்த இடமாகிய திருநெல்வேலி மாவட்டம் – சங்கரன் கோயிலில் 5.2.2002 அன்றும் கோமதிமுத்துபுரத்தில் 7.2.2002 அன்றும் கொண்டாடப்பட்டது.

### நூல்கள் நாட்டுடைமையாக்கம்

இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர் சிறுகதைச் சிற்பி புதுமைப்பித்தன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்தம் மகள் திருமதி. தினகரி சொக்கலிங்கம் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பரிவுத்தொகை ரூ.5 இலட்சம் 25.9.2002 அன்று வழங்கப்பட்டது.

எழுத்தாளர் கு.ப.ராசகோபாலன் அவர்களின் சகோதரியாகிய திருமதி கு.ப.சேது அம்மாள் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவருக்கு ரூ.3 இலட்சமும், கு.ப.ரா. அவர்களின் மகன் திரு. கு.ப.ரா. பட்டாபிராமன் அவர்களுக்கு ரூ.2 இலட்சமும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பரிவுத் தொகையாக 25.9.2002 அன்று வழங்கப்பட்டது.

**மாண்புமிகு தமிழக முதல்வருக்கு மாநிலங்களவைத் துணைத்தலைவர் பாராட்டு**

மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைப் பாராட்டி, நாடாளுமன்ற மாநிலங்களவைத் துணைத்தலைவர் நஜ்மா ஹெப்துல்லா அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது :

*"தமிழக அரசின் உயர் பதவிகளில் பெண் அதிகாரிகளை நியமித்துள்ளதற்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*திறமையை நிரூபிக்க பெண்களுக்கு சிறந்த வாய்ப்புகளை அளித்துள்ளீர்கள். அவர்களும் அதற்கேற்றவகையில் செயல்படுவார்கள் என்று நம்புகிறேன். மேலும் குழந்தையின் பெயருக்கு முன்பாக தாயின் 'இன்சியலை' போட்டுக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்துள்ளீர்கள். பாரம்பரியமாகப் பெண்களுக்கு எதிராக நடந்துவரும் பாரபட்சத்தை முறியடிக்க, உங்களைப் போன்ற பெண்களால் தான் முடியும்".*

**'சொல் வங்கி'**

ஆங்கிலம் மற்றும் பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை ஆக்கிக் கொள்ளவும் பழைய தமிழ்ச் சொற்களை இன்றைய தேவைக்கேற்ப புதுப்பித்துக் கொள்ளவும் மக்களிடையே புழக்கத்தில் உள்ள சொற்களைத் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளவும் 'சொல்வங்கி'த் திட்டம் தோற்றுவிக்கப் பட்டது.

**தமிழ் நூல்கள் வழங்கல்**

மும்பை தமிழ்ச் சங்கத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ.43,025 மதிப்பிலான தமிழ் நூல்கள் 3.10.2002 அன்று வழங்கப்பட்டன.

**தமிழ் - செம்மொழி, மைய அரசின் ஆட்சி மொழியாக்கும் முயற்சிகள்**

உலகின் தொன்மை மொழியாகிய நம் தமிழ் மொழியை மத்திய ஆட்சிமொழிகளில் ஒன்றாக அறிவிக்க வேண்டும் எனவும், "உயர் தனிச் செம்மொழி" என அறிவிக்க வேண்டும் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறார்கள்.

**தில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழிருக்கை நிறுவ நல்கை**

21.4.2003இல் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "இந்தியத் தலைநகரில் (தில்லி) உள்ள புகழ்மிக்க ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காகத் தமிழ் இருக்கை நிறுவப்படுவதன் இன்றியமையாமையையும், தேவையையும் கருத்தில் கொண்டு ரூ.50 இலட்சம் நல்கைத் தொகையாக ஒரே தவணையில் வழங்க அரசு முடிவு செய்துள்ளது" என அறிவித்தார்கள்.



'பொன்விழி' - புதிய தமிழ் மென்பொருள் வெளியீடு 18.6.2002





★ மாணவ, மாணவியர்களின் படைப்பாற்றலை வளர்க்க தமிழ்நாடு முழுவதும் உள்ள மேல்நிலைப் பள்ளிகள்தோறும் தமிழ் மன்றங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

## சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் செறிவான பணிகள்

**சென்னைப் புறநகர் பேருந்து வளாகம் - கோயம்பேடு**

பெருகி வரும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் உத்தேசத்தில் ஏற்கெனவே இருந்துவரும் பாரிமுனை, பேசின்பாலம், எம்.யூ.சி. வளாகம் போன்ற பேருந்து நிலையங்களில் உள்ள பேருந்துகளை ஜவகர்லால் நேரு சாலையில் (உள்வட்டச்சாலை) அமைந்துள்ள கோயம்பேட்டிற்கு மாற்றி, புதிய புறநகர் பேருந்து வளாகம் சுமார் 37 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.103 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. இப்பேருந்து வளாகத்தை 18.11.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

**துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் - II**

★ சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமே இந்த திட்டத்தை தலைமையேற்று கூட்டாக செயல்படுத்துகிறது. இந்த திட்டமானது முழு விசையோடு செயல்படுத்தப்பட்டு முதல் நிலையான செயல்பாட்டை டிசம்பர் 2003-க்குள் நிறைவேற்றவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இரயில் நிலையங்கள் அமைக்கப்படும். இதரப் பணிகள் அதற்குப் பிறகு தொடரப்படும். இதற்கு இதுவரை செய்யப்பட்டுள்ள செலவு ரூ.448 கோடியாகும்.



## பேரூராட்சித் துறை

தமிழகமெங்கும் பேரூராட்சிகளில் பொது தேர்தல்கள் நடைபெற்று, மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆலோசனைகளுடன் பேரூராட்சி மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அனைத்து பேரூராட்சி அலுவலகங்களிலும் கணினி மயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*இயற்கை அன்னை நமக்கு அளித்துள்ள வரங்களில் மழை வளம் முதன்மையானது.*

*அனைத்து நீர் வளங்களுக்கும் பொதுவானது "மழை நீர்". இதனை உணர்ந்து, மழை நீர் சேகரிப்பை ஒரு மக்கள் இயக்கமாக்கிட எனது தலைமையிலான இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.*

*நானும் எனது இல்லத்தில் மழை நீர் சேகரிப்பு அமைப்பை ஏற்படுத்தி உள்ளேன்.*

*உங்களது இல்லங்களில் மட்டுமல்லாமல், ஊரணிகள், குளங்கள், கோயில் குளங்கள் மற்றும் பொது இடங்களிலும் மழை நீர் சேகரிக்கும் அமைப்புகளை ஏற்படுத்தி, ஒரு கூட்டு முயற்சியாக அரசுடன் இணைந்து ஒத்துழைக்குமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.*

*தமிழகம் குடிநீர்த் தேவையில் தன்னிறைவு பெற, மழைநீர் சேகரிப்பு அவசியம்.*

*ஏனெனில், நீரின்றி அமையாது உலகு!*

*வானத்தின் மழைத்துளி!*
*வையத்தின் உயிர்த்துளி!*

*வான் மழையைச் சேகரிப்போம்!*
*வாழ்வுக்கு வளம் சேர்ப்போம்!*

*– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்*

பேரூராட்சிக்கென புதியதாக இணைய தளம் (Web Site) துவக்கப்பட்டு, பேரூராட்சித்துறை சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்கள் மற்றும் மக்களுக்குத் தேவையான தகவல்கள் தரப்பட்டுள்ளன.

பேரூராட்சிகளின் நிர்வாகம் மற்றும் கணக்குகள் மேம்பாடு செய்யும் பொருட்டு ஏற்கெனவே உள்ள கணக்குகள் நடைமுறையினை மாற்றி, புதியதாக இயல்பு நிலை கணக்கு முறை (Accrual based accounting) துவக்கப்பட்டுள்ளது.

மழைநீர் சேகரிப்புத் திட்டம் தமிழகமெங்கும் உள்ள அனைத்துப் பேரூராட்சிகளிலும் அதன் தொடர்பான கட்டடங்கள், நீர் ஆதாரங்கள் மற்றும் குடியிருப்புகளிலும் முழு முனைப்புடன் செயல்பட்டு 1,11,402க்கு மேற்பட்ட மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து இத்திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பேரூராட்சிப் பகுதிகளில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக 720 நவீன கழிப்பிடம் மற்றும் குளியலறை வசதியுடன் கூடிய சுகாதார வளாகங்கள் ரூ.18 கோடியே 72 இலட்சம் மதிப்பீட்டில் செயல் படுத்தப்படுகிறது.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

### ஊரகக் குடிநீர்த் திட்டம்

**13,493 ஊரகக் குடியிருப்புகளுக்குத் தனி மின் விசைத் திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது. இதில் நீராதாரத்தின் குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 2,603 ஊரகக் குடியிருப்புகளும் அடங்கும்.**








குடிப்பதற்கு உகந்த குடிநீர் ஆதாரமில்லாத 2,500 ஊரகக் குடியிருப்புகளுக்கு கைப்பம்புகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது.

கைப்பம்புகளிலிருந்து குடிநீர் பெறுவதில் கிராமப்புற மகளிருக்கு இருந்த கடின நிலையை எளிதாக்கிட, 14,661 கையிறைப்பான்களை மாற்றி தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய சிறு மின்னிறைப்பான் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் நிறைவேற்றப்பட்ட 4,026 சிறு மின்னிறைப்பான் திட்டங்களும் அடங்கும்.

ஊரகப் பகுதிகளிலுள்ள 14,564 அரசு பள்ளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளிலுள்ள 1,226 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வருகை தரும் நோயாளிகள் மற்றும் பொதுமக்களின் குடிநீர்த் தேவையை ஈடுசெய்யும் முகமாக குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

முதன் முறையாக ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து கையிறைப்பான் மற்றும் மின்விசை திட்ட நீராதாரங்களிருந்தும் குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு தர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

53 இடங்களில் குறைந்த செலவில் தளத்திலேயே சுத்திகரிப்புக் கலன்கள் (10 புளோரைடு நீக்கும் மற்றும் 43 இரும்பு தன்மை நீக்கும் கலன்கள்) அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி கிராம யோஜனா திட்டத்தின் கீழ் தடுப்பு அணைகள், கசிவு நீர்க்குட்டைகள் நிலத்தடி தடுப்பணைகள் உள்ளிட்ட 409 நிலத்தடி நீர் செறிவூட்டல் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### நகரக் குடிநீர்த் திட்டம்

17 நகராட்சிகள் மற்றும் 118 பேரூராட்சி களுக்குமாக மொத்தம் 135 நகரங்களுக்கு 31.32 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.280.19 கோடி மொத்த மதிப்பீட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

## சொக்கவைக்கும் தமிழகச் சுற்றுலாத்தலங்கள்

உலகச் சுற்றுலாப் பயணிகளின் உள்ளத்தைக் கவரும், தமிழ்நாடு சுற்றுலாத்துறை, ஆற்றல் நிரம்பிய தமிழக முதல்வரின் நற்பயன் நோக்கிய நல்ல தலைமையில் தமிழகம் 'இந்தியச் சுற்றுலாச் செயல்பாடுகளுக்குத் தேவையான' வணிகக் களமாக விளங்குகிறது. நாட்டிலேயே முதன் முறையாக – தமிழகச் சுற்றுலா மற்றும் வணிக வளர்ச்சிக்காக, தமிழக அரசு சுற்றுலா முகமைகளையும், தொடர்பு ஆலோசகர்களையும் நியமித்துள்ளது.

தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலில் கடந்த 2002–2003ஆம் ஆண்டில் தலைமைச் சுற்றுலாத் திட்டத்திற்காக ரூ. 20 இலட்சம் அளிக்கப்பட்டது. 2003–2004ஆம் நிதியாண்டிற்கு ரூ.25 இலட்சம் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாமல்லபுரம் முதல் ஆவுடையார் கோயில் வரை 14 வழிபாட்டுத் தலங்கள் மற்றும் இயற்கை எழில் நிறைந்த இடங்களுடன் பாரம்பரியச் சிறப்புடைய காரைக்குடி – செட்டிநாடு பாரம்பரிய மையங்களும், சுற்றுலா அடைவு மையங்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டன.

### முன்னெப்போதுமில்லாத வகையில் நிதி ஒதுக்கீடு:

2001–2002 நிதியாண்டில் சுற்றுலா வளர்ச்சிக்காக ஒதுக்கப் பெற்ற ரூ17.10 கோடியில், பதினைந்து மாவட்டங்களில் சுற்றுலா மையங்களின் உள்கட்டுமான வளர்ச்சிக்காக ரூ.5 கோடி செலவிடப்பட்டு, சுற்றுலா மையங்கள் புதுப்பொலிவு பெற்றன. 2002–2003 நிதியாண்டில் முன்பிருந்ததைவிட அதிகமாக ரூ.26.79 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### உள்கட்டுமான வசதிகளின் மூலம் உற்பத்தி நோக்கிய வளர்ச்சி:

2002–2003ஆம் நிதியாண்டில் மாமல்லபுரம் சுற்றுலா மையத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்









8.1.2003 அன்று காஞ்சிபுரத்தில் தொடங்கி வைக்கப் பெற்றது.

### சுற்றுலாத் தகவல் சேவைகள்

2002ஆம் ஆண்டில் ஜெய்ப்பூர் மற்றும் ஆக்ராவில் இரண்டு சுற்றுலாத் தகவல் மையங்கள் அமைக்கப்பட்டு, தமிழகத்தின் 14 சுற்றுலா மையங்களுடனும், மற்ற மாநிலங்களில் உள்ள 6 சுற்றுலா மையங்களுடனும் வலைத்தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேடு புறநகர் மாநகரப் பேருந்து நிலையத்தில் ஒரு சுற்றுலாத் தகவல் மையம் உருவாக்கப்பெற்றுள்ளது. விரைவான தகவல் தொடர்பு வளர்ச்சிக்கு உதவும் வகையில் எல்லா சுற்றுலாத் தகவல் மையங்களும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

2002–2003ஆம் நிதியாண்டில் நடத்தப்பட்ட 25 பெரும் சுற்றுலா விழாக்களுடன் 2002 டிசம்பர் திங்களில் இந்தியத் தொழிலகங்களின் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் 'சென்னைத் திருவிழா' நடத்தப் பெற்றது. பயணிகளை மேலும் கவரும் வகையில் காஞ்சிபுரத்தில், பட்டுத் திருவிழா, திருவண்ணாமலையில் 'அருணாஞ்சலித் திருவிழா' மற்றும் மதுரையில் 'நாட்டியத் திருவிழா' ஆகியவை இணைக்கப்பெற்றன. வரலாற்றிலேயே முதன் முறையாக, உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வானூர் இதழ்களில் நம் சுற்றுலா மையங்களைப் பற்றிய விரிவான விளம்பரங்கள் கொடுக்கப் பெற்றன.

சுற்றுலாச் சந்தை மற்றும் விளம்பரத்துக்காக 2001–2002 நிதியாண்டில் வழங்கப்பட்ட 4.2 கோடி ரூபாய் ஒதுக்கீடு, 2002–2003 நிதியாண்டில் 5.4 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது.

### புதிய தொடக்கங்கள்

மதுரை, திருமலைநாயக்கர் மகாலில் கடந்த 2 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்த 'ஒலி–ஒளிக்காட்சி' கடந்த 2001 டிசம்பரில் மீண்டும் தொடரப்பட்டது.

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சுற்றுலா விரும்பிகளுக்கும், பொதுமக்களுக்கும், விழிப்புணர்வு உண்டாக்கும் பொருட்டு, சுற்றுலா வளர்ச்சித்துறை ரூபாய் 30 இலட்சம் வழங்கியுள்ளது. "குப்பையற்ற பகுதிகள் மற்றும் தூய்மையான சேர்விடங்கள் இயக்கங்கள்" மாவட்ட நிர்வாகங்களால் மேற்கொள்ளப் பட்டன.

## தமிழகத்திலுள்ள சுற்றுலாத்தலங்கள்

### இராமநாதபுரம்

இராமேஸ்வரம் இராமநாதசுவாமி திருக் கோவில், பாம்பன் பாலம், நவபாஷாணம், தேவிப்பட்டினம்.

### ஈரோடு

பவானிசாகர் அணை, கூடுதுறை, கொடிவேரி அணை, தாளவாடி மலை, கொடுமுடி, ஈரோடு பெரியார் நினைவு இல்லம்.

### கடலூர்

பிச்சாவரம் (மாங்குரோவ் காடுகள்), சிதம்பரம் நடராஜர் கோயில், நெய்வேலி அனல் மின்நிலையம்.

### கன்னியாகுமரி

கன்னியாகுமரி, பத்மநாபபுரம் அரண்மனை, உவரி, சுசீந்திரம், திற்பரப்பு அருவி, பேச்சிப்பாறை அணைக்கட்டு, வட்டக்கோட்டை

### காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் அண்ணா நினைவு இல்லம், வேடந்தாங்கல், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம், முட்டுக்காடு.

### கோயம்புத்தூர்

சிறுவாணி அணை, பெரியார் அருவி, டாப்சிலிப் (ஆனைமலை), வால்பாறை, அமராவதி அணை.

### சிவகங்கை

மடிப்புரம், குன்றக்குடி முருகன் கோவில், பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோவில், பிரான்மலை, கொல்லங்குடி, திருகோஷ்டியூர் சௌமிய நாராயணப் பெருமாள் கோவில், தாயமங்கலம், காளையார் கோவில், கொள்ளுகுடிப்பட்டி பறவைகள் சரணாலயம்.









### சென்னை

வள்ளுவர் கோட்டம், கோல்டன் பீச், வண்டலூர் மிருகக்காட்சி சாலை, மெரினா பீச், கிண்டி சிறுவர் பூங்கா, அரசு அருங்காட்சியகம், எழும்பூர் கலைக்கூடம்.

### சேலம்

ஏற்காடு (மலைவாழிடம் – கடல் மட்டத்திலிருந்து 5100 அடி உயரம்), மேட்டூர் அணை, தாரமங்கலம் கோயில், சேலம் உருக்காலை, சேலம் கந்தாஸ்ரமம், குருவம்பட்டி உயிரியல் பூங்கா.

### தஞ்சாவூர்

தஞ்சாவூர் பெரிய கோவில், சரஸ்வதி மகால், கும்பகோணம், மனோரா.

### தருமபுரி

ஒகேனக்கல் நீர் வீழ்ச்சி, தீர்த்த மலை, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம், தூவல் நீர்வீழ்ச்சி, அனுமன் தீர்த்தம், மத்திகிரி கால்நடைப் பண்ணை, ஒசூர் சிப்காட், அதியமான் கோட்டை கோவில், ஒசூர் அருகே தொரப்பள்ளி எனும் ஊரில் அமைந்துள்ள இராஜாஜி பிறந்த இடம், சுப்பிரமணிய சிவா நினைவுத்தூண்.

### திண்டுக்கல்

கொடைக்கானல், மலைக்கோட்டை, பழனி மற்றும் திருமலைக் கேணி.

### திருச்சிராப்பள்ளி

முக்கொம்பு, கல்லணை, புளியஞ்சோலை, பொன்னணியாறு அணைக்கட்டு.

### திருநெல்வேலி

பாபநாசம், மணிமுத்தாறு நீர்வீழ்ச்சிகள், முண்டந்துறை, களக்காடு புலிகள் சரணாலயம், குற்றாலம், கிருஷ்ணாபுரம் (சிற்பக்கலை), திருக்குறுங்குடி, கூந்தக்குளம், அரியகுளம், மூன்றடைப்பு பறவைகள் சரணாலயம்.

### திருவண்ணாமலை

திருவண்ணாமலை ரமணமகரிஷி ஆஸ்ரமம், சாத்தனூர் அணை, அமிர்தி காடுகள், ஜவ்வாது மலை.

### திருவள்ளூர்

பழவேற்காடு, பூண்டி

### திருவாரூர்

பறவைகள் சரணாலயம், வடுவூர் மற்றும் உதயமார்த்தாண்டபுரம்

### தூத்துக்குடி

தூத்துக்குடி, திருச்செந்தூர், மணப்பாடு, கழுகுமலை, ஒட்டப்பிடாரம், எட்டயபுரம் பாரதியார் நினைவு இல்லம், பாஞ்சாலங்குறிச்சி, நவதிருப்பதி, கயத்தாறு.

**தேனி**

சுருளி நீர் வீழ்ச்சி, மஞ்சளாறு அணை, வைகை அணை, கும்பக்கரை அருவி, மேகமலை அருவி, மாவூத்து வேலப்பர் கோவில், குச்சனூர் கோவில், போடி மொட்டு, டாப் ஸ்டேசன், ஹைவேவிஸ்.

**நாகப்பட்டினம்**

தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபம், பூம்புகார், வேளாங்கண்ணி மாதா கோயில், நாகூர் தர்கா, தரங்கம்பாடிக் கோட்டை, கோடிக்கரை வனவிலங்கு சரணாலயம்.

**நாமக்கல்**

கொல்லிமலை, ஆகாயகங்கை நீர்வீழ்ச்சி, திருச்செங்கோடு காந்தி ஆஸ்ரமம்.

**நீலகிரி**

தாவரவியல் பூங்கா, உதகமண்டலம் ஏரி, தொட்டா பெட்டா, முதுமலை வனவிலங்கு சரணாலயம், சிம்ஸ்பார்க், குன்னூர், கோடநாடு வியூ பாயிண்ட், கோத்தகிரி, கல்லட்டி நீர் வீழ்ச்சி.

**புதுக்கோட்டை**

சித்தன்னவாசல் குகை ஓவியங்கள், கொடும்பாளூர், விராலிமலை, குடுமியான்மலை, நார்த்தாமலை, புதுக்கோட்டை, ஆவுடையார் கோவில்.

**பெரம்பலூர்**

கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலயம், துருவ கோட்டை (மங்களமேடு அருகில் உள்ளது), லாடபுரம் மயில் ஊற்றுநீர் அருவி, சாத்தனூர், சித்தமல்லி நீர்த்தேக்கம்.

**மதுரை**

வைகை அணைக்கட்டு, திருப்பரங்குன்றம், அழகர்மலை, திருமலை நாயக்கர் மகால், காந்தி மியூசியம்.

**விருதுநகர்**

பிளவக்கல் அணை, காமராசர் நினைவில்லம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில், அய்யனார் கோவில் அருவி, இருக்கன்குடி மாரியம்மன் கோவில்.

**விழுப்புரம்**

திருக்கோவிலூர், செஞ்சிக்கோட்டை, கல்வராயன் மலை, திருவக்கரை, மயிலம், மேல் மலையனூர், கோமுகி அணை, வீடூர் அணை, மணிமுத்தாறு அணை, மரக்காணம் கடற்கரை.

**வேலூர்**

வேலூர் கோட்டை, முத்து மண்டபம், ஏலகிரி மலை, அமிர்திகாடு, ஜவ்வாது மலை, விஷ்ணு பாப்பு வான் இயற்பியல் மையம்.










## அரசின் விழிகளாகவும் செவிகளாகவும் விளங்கும் செய்தி–மக்கள் தொடர்புத்துறை

செய்தி–மக்கள் தொடர்புத்துறை அரசுக்கும், மக்களுக்கும் பாலமாகத் திகழ்கிறது. அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகள் அனைத்தும் மக்களுக்கு முழுமையாகச் சென்றடையச் செய்யும் சீரிய குறிக்கோளுடன் செயல்படுகின்றது செய்தி–மக்கள் தொடர்புத் துறை.

### பத்திரிக்கையாளர்கள் நலன்

★ நாளிதழ் செய்தியாளர்களுக்கு மட்டுமின்றி அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சியினருக்கும், அங்கீகார அட்டை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழி வகுத்துள்ளார்கள்.

★ 2002–2003ஆம் ஆண்டில், மொத்தம் 592 பேருக்கு செய்தியாளர் அரசு அங்கீகார அட்டையும், 383 பத்திரிகையாளர்களுக்கு இலவச பேருந்து அட்டையும் வழங்கப்பட்டுள்ளது.

★ 20 ஆண்டுகள் பணியாற்றி பணியிலிருக்கும் போது இறக்கும் அந்தப் பத்திரிகையாளரின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை ரூ.50 ஆயிரத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு அவ்வாறு வழங்கப்பட்டு வருகிறது.

★ 2002–2003ஆம் ஆண்டில் 67 நலிவுற்ற ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்கள் மாதந்தோறும் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். 9 பத்திரிகையாளர் குடும்பத்தினர்கள் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். 2002–2003ஆம் ஆண்டில், 23 இலட்சம் ரூபாய் ஓய்வூதியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ ஓய்வு பெற்று நலிந்த நிலையிலுள்ள பத்திரிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத் தொகை ரூ.2,000–லிருந்து ரூ.3,000– ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ ஓய்வூதியம் பெற்று வந்த பத்திரிக்கையாளர்கள் இயற்கை எய்தினால் அவரின் துணைவி யாருக்கு

வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம் ரூ.500–லிருந்து ரூ.1,500–ஆக உயர்த்தி வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தியாளர் கூட்டத்தின்போது பத்திரிகையாளர்கள், செய்திகளை வசதியாக சேகரிக்கும் வகையிலும், புகைப்படக்காரர்கள் மற்றும் தொலைக்காட்சிப் பிரிவினர்கள் வசதியாக நின்று படங்கள் எடுக்கும் வகையிலும், முதலமைச்சர் அறைக்கு அருகில் ஒரு பத்திரிகையாளர் அறை அமைக்கப்பட்டு, அங்கு பத்திரிகையாளர் கூட்டங்கள் நடத்தப் படுகின்றன.

★ அரசின் வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள் அரசு விழாக்கள் ஆகியவை குறித்து, அறிந்துகொள்ளும் வகையில் பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரம் செய்ய இத்துறை மூலம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

### தமிழரசு இதழ் மூலம் விளம்பரப் பணிகள்

அரசின் அதிகாரப்பூர்வமான ஏடாக தமிழரசு இதழ் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்படுகிறது. இவ்விதழ் சிறப்பாக அமையும் வகையில் தமிழரசு இதழில் பிறமொழிக் கருத்தோவியங்கள் மொழிபெயர்த்து வெளியிடப்படுகின்றன.

மேலும், அரசின் திட்டங்கள், நலத்திட்ட உதவிகள், வளர்ச்சிப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரைகள் சிறப்பிதழாக வெளியிடப்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளில் 13 சிறப்பு வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

### நாட்டுக்கு உழைத்த சான்றோரை நினைவுகூர்ந்திடும் நல் அரசு

விடுதலை வீரர்களையும், சுதந்திரப் போராட்டத் தியாகிகளையும், நாட்டுக்கு உழைத்த நல்லவர்களையும், சமுதாய மேம்பாட்டிற்கும், தமிழ்மொழி மேம்பாட்டிற்கும் உழைத்திட்ட பெரியோர்களையும் போற்றி பெருமைப்படுத்தி வருகிறார்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்.









கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாருக்கு திருநெல்வேலி நகரில் மணிமண்டபம் அமைக்க ரூ.75 இலட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு, 13–3–2003 அன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால், அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கேரள மாநிலம் வைக்கத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவகம் பராமரிப்புக்காக ரூ.4.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், கட்டாரங்குளத்தில், வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம் அமைக்க ரூ.35 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்தப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்களுக்கு மணிமண்டபம் 58.69 இலட்சத்தில், சென்னை, காயிதேமில்லத் மகளிர் கல்லூரி வளாகத்தில் 8–5–2003 அன்று திறந்துவைக்கப்பட்டது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் நினைவு மண்டபம் அமைப்பதற்கு, சென்னை – அடையாறில் ரூ.10.27 கோடி மதிப்புள்ள 65 சென்ட் நிலத்தை இலவசமாக வழங்க தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணை பிறப்பித்துள்ளார்கள். அவ்விடத்தில் தென்னிந்திய நடிகர் சங்கம் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள அரசாணை வழங்கப்பட்டது.

15.7.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னையில், காமராஜர் நூற்றாண்டு விழாவினை தொடங்கிவைத்து, விழாவினை சிறப்பித்தார்கள். அதுமட்டுமன்றி, ஆண்டு முழுவதும், இவ்விழாவினை கொண்டாட ஆணையிடப்பட்டது. பெருந்தலைவர் காமராசர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை 15–7–2003 அன்று அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

### பல்துறை பணி விளக்க முகாம்கள்

அரசு நிறைவேற்றும் சீரிய திட்டங்களை, அனைத்துத் துறைகளும் பங்கேற்கும் வகையில் விளம்பர சாதனங்களை ஒருங்கிணைத்து, பயன்படுத்தி விளம்பரம் செய்து பொதுமக்கள் அறியும் வகையில் பல்துறை பணி விளக்க முகாம்கள் நடத்தப்படுகிறது.

தமிழ் திரைப்பட வரலாற்றில் முதன்முறையாக திரைப்படங்களில் பின்னணிக் குரல் கொடுப்பவர்களுக்கு 2001–ஆம் ஆண்டில் திரைப்பட விருதுகளை அறிவித்தார்கள். இதனால்,விருது வழங்கப்படுவோர் பட்டியலில் ஆண் மற்றும் பெண் பின்னணிக் குரல் கொடுப்பவர்களும் சேர்க்கப் பட்டுள்ளனர்.

திரைப்படக் கல்லூரி மாணவர்கள் கணினி பயிற்சி பெறுவதற்காக, ரூ.11 இலட்சம் செலவில் கணினி மையம் அமைக்க எல்காட் நிறுவனத்திற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னையிலுள்ள திரைப்படக் கல்லூரி மாணவர்களால் தயாரிக்கப்படும் குறும்படங்களை தேசிய மற்றும் சர்வதேச திரைப்பட விழாக்களில் பங்கு பெறச் செய்ய ரூ.75 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டு, இந்த ஆண்டு, 4 குறும்படங்கள் திரைப்பட விழாக்களுக்கு அனுப்ப தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 109 அரசுப் பொருட்காட்சிகள் நடைபெற்றுள்ளன. இதன் மூலம் அரசுக்கு ரூ. 10.70 கோடி இலாபம் கிடைத்துள்ளது.



தமிழ்த் திரைப்படங்கள் தொடர்பான திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களின் அரிய புகைப்பட சேகரிப்புகளை அரசுடைமை ஆக்குவதற்கு பரிவுத் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்கியும், அவர் எழுதிய "சாதனைகள் படைத்த தமிழ் திரைப்பட வரலாறு" என்ற புத்தகத்தினை வெளியிடுவதற்காக ரூ.5.50 இலட்சம் உதவித்தொகை வழங்க ஆணையிட்டுள்ளது.





# தமிழ்நாடு




| | | |
|---|---|---|
| மொத்த மாவட்டங்கள் | – | 29 |
| மாநகராட்சிகள் | – | 6 |
| நகராட்சிகள் | – | 102 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | – | 385 |
| பேரூராட்சிகள் | – | 611 |
| கிராமப் பஞ்சாயத்து | – | 12,619 |
| மொத்த மக்கள் தொகை | – | 6,21,10,839 |
| ஆண்கள் | – | 3,12,68,654 |
| பெண்கள் | – | 3,08,42,185 |
| படிப்பறிவு பெற்றோர் | – | 73.47% |
| ஆண்கள் | – | 82.33% |
| பெண்கள் | – | 64.55% |

**தமிழகத்தில் 59 விழுக்காட்டினர்** சொந்த வீடுகளில் **குடியிருக்கின்றனர்.** கடந்த பத்து ஆண்டுகளில் தற்போதுள்ள **வீடுகளின் எண்ணிக்கை,** அவற்றின் தரம் ஆகியவற்றில் நல்ல **முன்னேற்றம்** காணப்படுகிறது.

**தமிழ்நாட்டில்** 1991ஆம் ஆண்டில் 1.45 கோடியாக **இருந்த வீடுகள்** கடந்த பத்து ஆண்டில் 1.7 கோடியாக **உயர்ந்துள்ளன. கிராமங்களில்** 91 விழுக்காட்டினர் தற்போது **சொந்த வீடுகளில்** குடியிருக்கின்றனர். மொத்த வீடுகளில் **தனிப்** படுக்கையறைகள் கொண்ட வீடுகள் 49 **விழுக்காடுதான்.** மீதமுள்ள வீடுகளில் பொதுவான **படுக்கையறைகளே** உள்ளன.

2001ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி **குடிநீர்க்** குழாய் இணைப்புகள் 44 விழுக்காடாகவும் **கிராமங்களில்** இவ்விணைப்பு கொண்ட வீடுகள் **60 விழுக்காடாகவும், மின்** இணைப்பு உள்ள வீடுகள் 78 விழுக்காடாகவும் **தமிழ்நாடு** வளர்ச்சி பெற்றுள்ளது. மேலும், **கழிப்பறை உள்ள வீடுகள் 35** விழுக்காடாகவும், தனிக்குளியலறை **கொண்ட வீடுகள் 39** விழுக்காடாகவும் உயர்ந்துள்ளன. **தற்போதுள்ள வீடுகளில்** விறகு அடுப்புகள் குறைந்து சமையல் எரிவாயு **அடுப்புகள் 19** விழுக்காடு வீடுகளிலும் மண்ணெண்ணெய் **அடுப்புகள் 13** விழுக்காடு வீடுகளிலும் முன்னேறியுள்ளன.

கடந்த பத்து ஆண்டுகளில் ஏற்பட்ட **முன்னேற்றம்** பொதுமக்களின் வாழ்க்கைத்தரம் **உயர்ந்துள்ளதையே** காட்டுகின்றன என்று சொன்னால், அது மிகையாகாது.



இரண்டாண்டு ஆட்சியில் அரசுக்கு ஏற்பட்ட இன்னல்கள் ஏராளம்.

கடந்த கால ஆட்சி முறையால், தடம் புரண்டு போன நிதி நிர்வாகம், சுவர்களும், சன்னல்களும், கதவுகளுமிருந்தால் வீடாகி விடுமா? – கூரை வேண்டுமே! கூரையில்லா வீட்டைக் குட்டிச் சுவர் என்று தானே கூறுவர். நிதிதான் கூரை.

கொடுபடாத பட்டியல்களை விட்டுச் செல்வதா? விட்டுச் சென்றது மட்டுமல்லாமல் குற்றம் சொல்வதா? இயல்பான ஆற்றலாலும் அறிவுத் திறத்தாலும் – அனுபவத்தாலும் – வியூகத்தை உடைத்து வெற்றி கண்டார் புரட்சித்தலைவி. பார்வையிட வந்த உலக வங்கியின் பாராட்டுதலையும் பெற்றார்.

*வீறுநடை போட்டு*
*வெற்றிப் பாதையில் –*
*இரண்டாண்டுச் சாதனைகளை*
*முடித்துவிட்டது தமிழக அரசு.*

உண்மை – ஊக்கம் – உழைப்பு இருக்கும் வரை மக்கள் நெஞ்சகத்திலிருந்து மாறாது இந்த அரசு.

தன்னிகரற்ற மன உறுதியோடும் – கூரிய மதிநலத்தோடும் – தமிழகத்தை வழி நடத்திவரும் – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையில், தொடர்ந்து செல்வோம்! தொடர்ந்து வெல்வோம்!


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2034
சித்திரை – வைகாசி
மே 2003
மலர் : 34 இதழ் : 21 & 22
விலை ரூ.10


இப்போது, என் அன்புக்குரிய மக்களாகிய உங்களுக்கு ஒரு நிகழ்ச்சியை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், 1967ஆம் ஆண்டில் தமிழகத்தின் முதலமைச்சராக பதவியேற்ற போது நடந்த நிகழ்ச்சி இது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பதவி ஏற்றவுடன், சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து சட்டமாக்கினார். இனிமேல் நடைபெறப் போகும் சுயமரியாதைத் திருமணங்கள் மட்டுமல்லாமல், ஏற்கெனவே நடைபெற்றிருக்கிற சுயமரியாதைத் திருமணங்கள் அனைத்தும், சட்டப்படி செல்லுபடியாகும் என்று அண்ணா அறிவித்தார். அப்போது, சட்டசபையில், காங்கிரஸ் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு கேள்வி கேட்டார். “இந்தத் தீர்மானம், நீங்கள் பெரியாருக்குத் தருகின்ற காணிக்கையோ” என்று கேட்டார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், “இந்த சட்டம் மாத்திரமல்ல, இந்த அமைச்சரவையே பெரியாருக்காக தரப்படுகின்ற காணிக்கை தான்” என்று சொன்னார்.

அதைப் போலவே, நாங்கள் பெறுகின்ற ஒவ்வொரு வெற்றியும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு காணிக்கை ஆக்கப்படுகின்ற வெற்றி.

பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு காணிக்கை ஆக்கப்படுகின்ற வெற்றி.

இருவரும் தமது வாழ்நாள் முழுவதும் நேசித்த தமிழகப் பெருமக்களுக்கு காணிக்கை ஆக்கப்படுகின்ற வெற்றி.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்


ஆசிரியரும் வெளியிடுபவரும் : [illegible]
[illegible]
தமிழரசு அலுவலகம், [illegible] அண்ணா சாலை, சென்னை – 600 002.
தொலைபேசி : [illegible]
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com



உங்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்

10 வது மாத சந்தா இலவசம்

மேலும்

அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

ரூ. 12,500/- மதிப்புள்ள பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!

| மாதச் சந்தா ரூ. | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. | கூடுதல் தொகை (2+3) ரூ. | அரசு தள்ளுபடி ரூ. | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1.000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. | அங்கயற்கன்னி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |



Visit us at: www.cooptex.com Visit us at: www.tn.gov.com

# தமிழரசு

R.N.I NO. 21446/70
RGN.No.TN/PMG(CCR)836/03-05, WPP-518




ஜூலை - 2003
N OF WOMEN POLICE COMMANDO
NING
AND
RST WOMEN POLI
OMMAN
Y IN
DIA
BY
RATCHI
VI
JA
F MI



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2034
வைகாசி - ஆனி
ஜூன் 2003
மலர் : 34 இதழ் : 23 & 24
விலை ரூ.10

- காமராஜர்-அண்ணா-சென்னை பல்கலைக்கழகங்கள் நாட்டிலேயே உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சியில் முன்னணியில் உள்ளன ..... 2
- மக்களின் கனவை நனவாக்க முடியும் ..... 6
- பெரம்பலூர் மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ..... 11
- தமிழக அமைச்சர்கள் பொறுப்பேற்றுள்ள துறைகள் ..... 18
- கரூர் மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ..... 21
- சென்னை மாநகருக்குத் தடையில்லா குடிநீர் ..... 27
- வாழ்க்கைத் தரம் உயர சுற்றுலாவுடன் கூடிய காளான் வளர்ப்புப் பயிற்சி ..... 28
- திருவாரூர் மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ..... 29
- தருமபுரி மாவட்டத்தில் பெண் சிசுக் கொலைக்கு முற்றுப்புள்ளி ..... 35
- தேசத்தின் தலைவிதியை பெண்களால்தான் நிர்மாணிக்க முடியும் ..... 37
- படமும் செய்தியும் ..... 42
- திண்டுக்கல் மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ..... 45
- குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாள் -ஜூன்12 ..... 51
- தருமபுரி மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ..... 52
- மதநல்லிணக்கத்தின் மறுபெயர் ஏர்வாடி தர்கா ..... 58
- தூத்துக்குடி மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ..... 59
- பெரம்பலூர் மாவட்ட மகளிரின் புரட்சி ..... 67
- திருநெல்வேலி மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ..... 68
- கன்னியாகுமரி மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ..... 75

*ஆசிரியரும் வெளியிடுபவரும்:* **ச. நடராஜன்**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி—மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை—தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை—600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

# காமராஜர் - அண்ணா- சென்னை பல்கலைக்கழகங்கள் நாட்டிலேயே உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சியில் முன்னணியில் உள்ளன

இயற்கைச் சூழ்நிலையை சமன் செய்ய இரண்டு உயிரினங்கள் ஒன்றுக்கொன்று இணைந்து இணக்கத்துடன் வாழ்வது இன்றியமையாத ஒன்று. இது தொன்றுதொட்டு நடைமுறையில் உள்ள நம்முடைய கலாச்சாரம் மற்றும் நாகரிகமாகும். கட்டுக்கடங்காத மக்கள் தொகை பெருக்கத்தினால் இயற்கை உயிரி வளங்களுக்கு அச்சுறுத்தல் உள்ளது. உயிரி தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் சட்டப்பூர்வமான வளர்ச்சிக்கு ஆபத்தாக உள்ளது. கட்டுக்கடங்காத மக்கள் தொகை உருவாகி வளர்ச்சியினாலும், அதனால் அதிகப்படியான இயற்கை வளங்களை கணக்கிலடங்காத வகையில் பயன்படுத்துவதால் இயற்கை வளங்கள் அளவுக்கு அதிகமாக அழிக்கப்படுகிறது. இந்நிலை மனித குலம் தன்னைத் தானே அழித்துக் கொள்வதற்கு ஒப்பாகும்.

இயற்கை அழிவுகள் ஏற்பட காரணமாக தொடர்ந்து பல ஆண்டு காலமாக நம்முடைய வனப்பகுதிகளை அழித்து வரும் நிலையை நீண்ட நாட்கள் நாம் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. தற்போது வளங்களைப் பாதுகாப்பது குறித்து உலக சமுதாயம் தனது கவனத்தை செலுத்த வேண்டிய




கட்டாயத்தில் உள்ளது.

22.4.2003 அன்று நடைபெற்ற டைசல் உயிரி தொழில் நுட்பப் பூங்கா அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

சட்டப்பூர்வமான வளர்ச்சி என்பது தற்போதைய தாரக மந்திரமாக உள்ளது. தற்போது சட்டப்பூர்வமாக பாரபட்சமின்றி இயற்கை வளங்களை நாம் வாழ்கின்ற சூழ்நிலையில் பயன்படுத்துவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ள துறையாக உயிரி தொழில்நுட்பத் துறை



விளங்குகிறது. மேலும் இத்துறை இயற்கையில் கிடைக்கின்ற வளங்களை சட்டப்பூர்வமாக பயன்படுத்துவதற்கு உகந்ததாக உள்ளது.

தற்போது உயிரி தொழில்நுட்பத் துறையில் பல்வேறு கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சிகளை நம்முடைய பல்கலைக்கழகங்களும், உயிரி தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றன. இதற்கு காரணம் கடந்த 25 ஆண்டுகளில் உயிரி அறிவியல் துறையில் ஏற்பட்டுள்ள அபரிமிதமான வளர்ச்சியே ஆகும்.

உயிரி தொழில்நுட்பம் குளோனிங் மனித ஆராய்ச்சியில் தொடங்கி பல்வேறு ஆராய்ச்சிகளுக்கு உகந்த துறையாக உள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உணவு தொழில்நுட்ப பயன்பாட்டில் உயிரி தொழில்நுட்பம் இருந்து வந்துள்ளது. காடுகளினால் உண்டாகும் மாறுதல் அல்லது புளித்துப் பொங்குதல் என்ற முறை எகிப்தியர்களால் சோதனை மற்றும் பழக்கவழக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

உதாரணத்திற்கு மூச்சுத்திணறல் நோயைக் குணப்படுத்துவதற்காக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீனாவில் உள்ள ஒரு தாவரத்தில் இருந்து எஃபிடெரின் பிரித்தெடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீனப் பேரரசர் ஃபியூ–ஹசி என்பவர் உணவு மற்றும் மருத்துவ பொருட்களை தாவரங்களில் இருந்து பிரித்தெடுக்கும் முறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வந்தார். இந்திய மருத்துவ முறைகளான ஆயுர்வேதா மற்றும் சித்தா ஆகியவை மருத்துவ குணநலன் கொண்ட தாவரங்களைப் பயன்படுத்தி வந்துள்ளது மிகச் சரியான உதாரணமாகும்.

தற்போது உயிரி தொழில்நுட்ப நிறுவனங்கள் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியுள்ளன. உயிரி தொழில்நுட்பத் துறையில் மனித வாழ்க்கைக்குப் பயன்படும் பல்வேறு பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மரபணு மேம்படுத்தப்பட்ட பயிர்கள், மருந்துகள், நோய்த் தடுப்பு உயிர்க் கொல்லிகள், உயிரி நுண்ணுயிரிகள், தடுப்பூசிகள், செரிமானப் பொருட்கள், உரங்கள், பயோ பாலிமர் ஆகியவை அவற்றுள் அடங்கும்.

## தரமான வாழ்க்கைத்தரம்

அணு கண்டுபிடிப்பு மற்றும் அதனைத் தொடர்ந்து குண்டு தயாரிக்கும் தொழில்நுட்பம் ஒரு காலத்தில் தலைசிறந்து விளங்கியது. எலக்ட்ரானிக் மற்றும் கணினி புரட்சி இருபதாம் நூற்றாண்டில் கோலோச்சியது. ஆனால் அறிவு வளர்ச்சியின் காரணமாக இருபத்தொன்றாம் நூற்றாண்டில் உயிரி அறிவியல் துறை தலைசிறந்து விளங்குவதோடு தரமான வாழ்க்கைத் தரத்தை உருவாக்கித் தரக்கூடிய நிலையில் உள்ளது. மருத்துவம், இயற்கைப் பாதுகாப்பு, உணவு மற்றும் அழகு சாதன நிறுவனங்களின் வளர்ச்சிக்கு டி.என்.ஏ. பரிமாற்றம், ஜீன் வரிசை, மரபணு ஆராய்ச்சி அதிக வாய்ப்புகளை

## மாறட்டும் மனித மனங்கள்



மாறட்டும் மனித மனங்கள் – ஒழியட்டும்
பெண் சிசுக் கொலைகள்
ஓசோன் படலத்தில் ஓட்டை – அடைக்க
வழி தெரியவில்லை
மனித மனங்களிலும் ஓட்டை – ஆனால்
அடைக்க வழி உண்டு
கம்சனை அழிக்க வந்த கர்மாவே – என்று
வரப் போகிறாய் – இந்த
கலியுக கம்சன்களை அழிப்பதற்கு
எடுத்துக் காட்டாய் வந்த – கருத்தம்மாவே
என்று காட்டப் போகிறாய் உன் சுயரூபத்தை
தொட்டில் குழந்தை திட்டமதைத்
தொட்டுப் பார்த்தாவது
மாறட்டும், மனித மனங்கள்!

– என்.அங்குலட்சுமி

### அகமும் முகமும்



முகத்தில் புன்னகையும், அகத்தில்
நம்பிக்கையும், செய்கையில் சுத்தமும்,
சிந்தனையில் தன்னலம் கருதாத்
தன்மையுமிருந்தால் போதுமானது.

- அறிஞர் அண்ணா

உருவாக்கித் தருகிறது.

உயிரி தொழில்நுட்ப வளர்ச்சி தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியைப் போன்றுஇருக்காது. ஆனால், தொழில்நுட்பப் பொருட்களின் வளர்ச்சியானது நீண்ட காலத்தையும் அதிகப் பொருட்செலவையும் உள்ளடக்கியது. தற்போது உயிரி தொழில்நுட்பத் துறையில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி என்பது உண்மையிலேயே கடுமையான சவாலை எதிர்கொண்டுள்ளது.

சோதனைக் கூடங்களில் பெற்ற அறிவை பொருட்களாக மாற்றி அதனைப் பயன்பாட்டிற்கு கொண்டு செல்ல வேண்டிய நிலையில் உயிரி தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட தொழில் முனைவோருக்கு பல்வேறு வகையில் உதவும் அமைப்புகள் தேவைப்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சந்தைக்கு கொண்டு வரப்படுவதற்கு முன்பு கடுமையான சோதனைகளுக்கும், தரக்கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்தப்பட வேண்டும். இதையெல்லாம் செய்வதற்கு தேவையான உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கு அதிக செலவு பிடிக்கும்.

### தமிழகத்தில் அதிக உயிரி தாவரங்கள்

தமிழ்நாட்டில் அதிக அளவில் உயிரி வளங்கள் உள்ளன. அதேபோன்று உயிரி தொழில்நுட்ப நிறுவனங்களையும் ஆராய்ச்சிகளையும் மேம்படுத்துவது என்ற குறிக்கோளுடன் ஏராளமான தகுதியும் திறமையும் வாய்ந்த விஞ்ஞானிகளும் பயிற்சி நிறுவனங்களும் பணியாற்றி வருகின்றனர். 22,500 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட நமது காடுகளிலும் சுமார் 1000 கி.மீ. நீளம் கொண்ட கடற்கரைப் பகுதிகளிலும் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிரி தொழில்நுட்பத்திற்கு தேவையான தாவரங்கள் உள்ளன. இவற்றிலிருந்து ஆராய்ச்சிக்குத் தேவையான தாவரங்களை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அண்ணா பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவை உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சியில் இந்தியாவில் முன்னணியில் விளங்குகின்றன. உயிரி தொழில்நுட்பம் தொடர்பான சவால்களைச் சந்திக்கவும் எதிர்கொள்ளவும் தமிழக அரசு மிகுந்த ஆர்வத்துடன் உள்ளது.

தமிழகத்தில் உள்ள உயிரி வளங்களைப் பயன்படுத்த முன்வரும் உயிரி தொழில்நுட்ப தொழில் முனைவோருக்குத் தேவையான அனைத்துவசதிகளையும், வாய்ப்புக்களையும், தொழில்நுட்ப பயிற்சிகளையும் மற்றும் மூலதனங்களையும் செய்துதர அரசு தயாராக உள்ளது. அதற்காகத்தான் மிகவும் பிரபலமான அறிவியல் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையில் தமிழ்நாடு உயிரி தொழில்நுட்ப வாரியம் ஒன்றை என்னுடைய தலைமையிலான அரசு உருவாக்கியுள்ளது.

இந்த வாரியம் மக்களுக்குப் பயன்படும் வகையில் அவர்களுக்குத் தேவையானவற்றைத் தயாரிக்க போதுமான அறிவுரைகளையும், ஆலோசனைகளையும், கொள்கைகளையும் வரையறுத்து கண்காணிக்கும்.

### பெண்கள் உயிரி தொழில்நுட்ப பூங்கா

உயிரி தொழில்நுட்ப வளர்ச்சிக்குத் தேவையான இடங்களைக் கண்டுணர்ந்து அந்த இடங்களில் உயிரி தொழில்நுட்ப பூங்காக்களை அமைக்க என்னுடைய அரசு முடிவு செய்துள்ளது. அதன் முதல்கட்டமாக உயிரி தொழில்நுட்பத் துறையில் பெண் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் பெண்களுக்காகவே தனிப்பட்ட வகையில் பெண்கள் உயிரி தொழில்நுட்ப பூங்கா ஒன்றை கேளம்பாக்கத்தில் உருவாக்கி பெண் தொழில் முனைவோர்களுக்கு ஊக்கம் அளித்துள்ளோம். இந்த உயிரி தொழில்நுட்ப பூங்கா டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பவுண்டேஷன் தலைமை மற்றும் வழிகாட்டுதலின்கீழ் இயங்கும்.

மருந்து உற்பத்தி, உணவு சார்ந்த பொருட்கள் மற்றும் அழகு சாதனங்கள் ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படும் உயிர் வேதிப் பொருட்கள் அபரிமிதமான அளவில் கடலில் இருந்து கிடைக்கிறது. ஆகவே, மகாபலிபுரம் அருகே சகல வசதிகளுடன் கூடிய கடல் உயிரி தொழில்நுட்ப பூங்கா ஒன்றை ரூ.50 கோடி செலவில் என்னுடைய தலைமையிலான அரசு அமைக்க உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மருந்து உற்பத்தி, உணவு சார்ந்த பொருட்கள் மற்றும் அழகு சாதனங்கள் ஆகிய துறைகளில் வர்த்தக ரீதியாக இந்த கடல் உயிரி தொழில்நுட்ப பூங்கா மிகப் பெரிய உந்துசக்தியாக விளங்கும்.

### நிலக்கோட்டையில் மருத்துவப் பூங்கா

நம்முடைய பழங்கால பாரம்பரியம் மிக்க மருத்துவ முறைகளை அடிப்படையாகக் கொண்ட இந்திய மருத்துவ முறைகளான ஆயுர்வேதா, சித்தா மற்றும் யுனானி ஆகியவற்றின் பலனையும், புகழையும் மேம்படுத்தும் வகையில் அவற்றைப் பற்றிய தகவல்களை ஒருங்கிணைத்துப் பாதுகாக்க வேண்டிய அவசியமாகிறது. எனவே மருத்துவப் பூங்கா ஒன்றை திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் அமைக்க உள்ளோம். இந்தத் திட்டம் வர்த்தக ரீதியான திட்டமாக செயல்படுத்தப்படும். இந்த திட்டத்திற்கு தேவையான மூலப்பொருட்கள் அருகிலேயே அதிக அளவில் பயிரிடப்படுகிறது. அங்கிருந்து மூலிகைகள் மற்றும் மருத்துவ குணநடன் கொண்ட தாவரங்கள் சேகரிக்கப்படும்.

உயிரி தொழில்நுட்பத் துறை நிச்சயமாக வளர்ச்சியடையும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அதனால் என்னுடைய அரசு அதற்காக ஒரு நிதி ஆதாரத்தை உருவாக்கி உள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் அடிப்படை கட்டுமான கடன் மற்றும் நிதிப் பணிகள் என்ற அமைப்பின் மூலம் உயிரி தொழில்நுட்ப தொழில்முனைவோருக்கு ஆரம்ப கட்ட முதலீடு வழங்குவதற்காக ரூ.90 கோடி ஒதுக்கி உள்ளோம். இதில் உயிரி தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு மட்டும் ரூ.14 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

உயிரி தொழில்நுட்ப தொழில் முனைவோர் எந்தவித சிரமமுமின்றி எளிதாக தங்களுடைய திட்டங்களுக்கு நிதியைக் கோரலாம். அதே நேரத்தில் உங்களின் முயற்சி வெற்றி பெற என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 1,20,000 ச.அடி பரப்பளவில் தொழில் பூங்கா

இங்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ள டைசல் உயிரி பூங்காவுக்கான தொழில்நுட்பத்தை, உயிரி தொழில்நுட்பத்தில் உலகிலேயே தலைசிறந்து விளங்கும் அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகம் அமைத்து தரவுள்ளது. இந்த மையத்தில் சோதனைக்கூடங்கள் மற்றும் நவீன அறிவியல் உபகரணங்கள் தொழில்முனைவோர் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்படும். இந்தப் பூங்கா 1,20,000 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்படும். இங்கு சர்வதேசப் பாதுகாப்பு அளவான உயிரி பாதுகாப்பு அளவு – 2 மற்றும் உயிரி பாதுகாப்பு அளவு – 3 ஆகியவை கடைப்பிடிக்கப்படும்.

தொழில்முனைவோர் எளிதில் பயன்படுத்தும் வகையில் இங்குள்ள வளங்கள் அமைக்கப்படும். சர்வதேச தரத்தில் ரூ.62.50 கோடி செலவில் அமைக்கப்படும் இந்தப் பூங்கா ஜனவரி 2004க்குள் முழுமையாக செயல்படத் துவங்கும். உயிரி தொழில்நுட்ப தொழில்முனைவோருக்குத் தேவையான அனைத்துவசதிகளையும் சர்வதேசத் தரத்தில் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதில் என்னுடைய தலைமையிலான அரசு உறுதியாக உள்ளது.

### எதிர்காலப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்

மனிதகுலம் ஒருகாலத்தில் சுதந்திரத்தை நோக்கி நடைபோட்டது. பசி, பட்டினி, நோய் மற்றும் மரணம் ஆகியவற்றிலிருந்து மீள நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் பயணத்தில் விஞ்ஞானிகள் சமுதாயம் மற்றும் அறிவியலாளர்கள், நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் சுயநலப் போக்கிலிருந்து விடுபட்டு அவர்களுடைய எண்ணங்களை பரந்து விரிந்த இந்த உலகில் முழுவதுமாகச் செயல்படுத்த வாய்ப்புகள் ஏராளமாக உள்ளது. நம்முடைய ஆராய்ச்சிகள் மூலம் தரமான பயிர்களை நம்முடைய விவசாயிகளுக்கு உருவாக்கித் தருவது, பசியால் வாடுபவர்களுக்கு உணவு அளிப்பது, நோயால் வாடுபவர்களுக்கு தலைசிறந்த மருந்துகளை உருவாக்கித் தருவது, நுண்ணுயிரி மூலம் ஏற்படும் நோய் மற்றும் உடல்கூறுகளில் ஏற்படும் குறைபாடுகளை நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உயிரி தொழில்நுட்பத் துறையில் உள்ள நம்முடைய விஞ்ஞானிகளும், தொழில் முனைவோரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நாளைய பிரச்சினைகளுக்கு இன்றே தீர்வுகாண முயற்சிக்க வேண்டும்.

டைசல் புதிய தொடக்கமே இந்தப் புதிய பயணத்தில் அறிவுசார் உலகில் உள்ள தடைகளைத் தாண்டி நம்மை



வெற்றிகொள்ள முடியும். மிக வேகமாக மாறிவரும் உலகில் பல்வேறு துறைகளில் ஏழை மக்களுக்கு நமது நீண்ட முயற்சி உதவும்.

அறிவியல் அறிஞர்களுக்கும், தொழில் முனைவோருக்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ள பகுதியாக தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்ற இலட்சியத்தை நான் கொண்டுள்ளேன். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் உங்களுடைய முயற்சி வெற்றி பெற உங்களை வாழ்த்துகிறேன். மீண்டும் ஒருமுறை உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். •

**கல்வி**



வயிற்றுக்கும் பட்டத்திற்கும் படிப்பது கல்வியாகாது. உடல் வாழ்க்கைக்கும் உயிர் வாழ்க்கைக்கும் உறுதுணை செய்யுங் கல்வியே வேண்டற்பாலது.
*– திரு.வி.க.*

# மக்களின் கனவை நனவாக்க முடியும்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்பிக்கை!

உலக வங்கியுடன் மிகவும் நெருக்கமாக உள்ள தமிழகத்திற்கு நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் வந்துள்ள உலக வங்கி இயக்குநர் மைக்கேல் கார்ட்டர் தலைமையிலான பிராந்தியக் குழுவை வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

### மாற்றத்தின் விளிம்பில்

வறுமை ஒழிப்பிலும், வளமான பாதுகாப்பான வளர்ச்சியை நோக்கிய வாழ்க்கைத் தரத்தை அமைத்துக் கொடுப்பதில் உலக வங்கியும், தமிழக அரசும் ஒரே பாதையைக் கொண்டுள்ளது. தமிழகத்திற்கு கார்ட்டர் அவர்களுடைய வருகையானது உங்களுடைய வாக்குறுதிகளை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் மற்றும் புதிய வளர்ச்சிப் பாதைகளில் இணைந்து பணியாற்றவும், நம்முடைய இலட்சியத்தை எட்டுவதற்கும் உதவிகரமாக அமையும் என்று நான் நம்புகிறேன்.



கடந்த என்னுடைய ஆட்சிக் காலத்தில் தமிழகத்திற்கு வந்த உலக வங்கி முன்னாள் நிர்வாக இயக்குநர் ஏர்னஸ்ட் ஸ்டெர்ன் மற்றும் ஹெயின்ஸ் வெர்ஜின் ஆகியோர் என்னைச் சந்தித்து ஆலோசனை செய்ததை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விழைகின்றேன்.

அதுசமயம் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்துவது குறித்து ஆலோசனை செய்தோம். அவைகளில் சில தமிழ்நாடு கிராமப்புற வளர்ச்சி நிதி, நீர் ஆதாரங்கள் மேம்படுத்துதல் திட்டம்–I மற்றும் இரண்டாவது சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் உட்பட வேறு சில திட்டங்களும் அடங்கும்.

தமிழ்நாடு தற்போது மாற்றத்தின் விளிம்பில் உள்ளது. மாநிலம் தற்போது பல்வேறு சந்தேகங்களுக்கு இடையிலும், எதிர்கால வளர்ச்சி நிலை குறித்து ஒரு தெளிவான சூழ்நிலை புலப்படாத நிலையிலும், கடுமையான நிதிப் பற்றாக்குறையிலும் ஒரு புதிய நூற்றாண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

**“தற்போது தமிழகம் நிதி மற்றும் பொருளாதார வளர்ச்சியில் வரலாற்றில் இடம்பெறக் கூடிய வகையில் ஒரு புதிய வளர்ச்சிக்கான நிலையில் நுழைந்துள்ளது என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.”**



2001–லிருந்து துவங்கும் ஐந்தாண்டு காலகட்டத்தில் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி போதுமான அளவில் இல்லை. இதற்குக் காரணம் அடிப்படை மற்றும் இரண்டாம் கட்ட துறைகளின் உற்பத்தி தேக்க நிலையிலும், மனித வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பொதுத்துறை மூலதனமும் பற்றாக் குறையாக உள்ள சூழ்நிலையில் சமூக நலத்துறைக்கு ஒதுக்க வேண்டிய நிதி பற்றாக்குறை ஏற்படும் சூழ்நிலை உள்ளது.

வாய்ப்புகளைத் தேர்ந்தெடுப்பதில் எங்களுக்கு பலவித இடர்பாடுகள் உள்ளது. நீண்ட நாட்களாக ஆகும் எளிமையான திட்டங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

நிதி நிலைமையைச் சீரமைக்க கடுமையான நடவடிக்கைகளை எடுத்து புதிய வளர்ச்சிக்கான கொள்கையை உருவாக்கியுள்ளேன். தற்போது தமிழகம் நிதி மற்றும் பொருளாதார வளர்ச்சியில் வரலாற்றில் இடம்பெறக் கூடிய வகையில் ஒரு புதிய வளர்ச்சிக்கான நிலையில் நுழைந்துள்ளது என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

தமிழ்நாடு தற்போது சந்திக்கும் இந்தக் கடுமையான நிதிப் பற்றாக்குறைக்கு காரணம் கடந்த 90களின் துவக்கத்திலிருந்து வருவாய் செலவினங்கள் அதிகமானதும் அதே நேரத்தில் வருவாய் வரவுகள் அதிகமில்லாமல் போனதும் ஒரு காரணம்.

இந்த வருவாய் இழப்பை ஈடுகட்டுவதற்கு அரசு கடந்த காலங்களில் அதிக அளவு கடன்களை வாங்கியதன் விளைவு தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க வேண்டியுள்ளது.

இந்த நிதிப் பற்றாக்குறை ஏற்றத்தாழ்வுகள் மாநிலத்தின் தற்போதைய செலவினங்களுக்கு ஒதுக்கும் நிதி அளவுகளை மாற்றியமைக்கும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

### வேகமான வளர்ச்சிக்கு உறுதியளிக்கும்

மேலும், அடிப்படைக் கட்டுமான வளர்ச்சிப் பணிகளுக்கும், சமூக நலத் திட்டங்களுக்கும் ஒதுக்கும் நிதிக்கு இடையூறாக உள்ளது. இப்பிரச்சினைகளுக்குக் காரணம் மாநில அரசு சார்ந்த நிறுவனங்கள், மாநில அரசின் வளம் மற்றும் கூட்டுறவுத் துறையிலுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மாநில நிதி நிலைமையை சீர்குலைத்ததில் முக்கியப் பங்கு வகித்தன.

மாநிலத்தில் கடுமையான நிதிப் பற்றாக்குறையை சீரமைக்கும் விஷயத்தில் மிகுந்த கவனத்துடனும், முன்னெச்சரிக்கையுடனும் செயல்பட்டு வருகின்றோம். ஒருங்கிணைந்த குறுகிய கால நிதிச் சீர்திருத்தத் திட்டத்தை எல்லாத் துறைகளையும் இணைத்து எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் வகையில் தயாரித்துள்ளோம்.

தமிழ்நாட்டில் தற்போது காலந்தாழ்த்தாமல் செயல்படுத்தப்பட்டு வரும் நிதிச் சீர்திருத்தத் திட்டம் விரைவான மற்றும் வேகமான வளர்ச்சிக்கு

### *தனிப்படிப்பு மூலம் மாணவர்கள் சேர்க்கை அரசின் அறிவிப்பு*

*2003–2004ஆம் கல்வியாண்டில் மாணாக்கர்களை இரண்டாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை தனிப்படிப்பு மூலமாக பள்ளிகளில் சேர்க்கலாம் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. 23.5.2003 அன்று பிறப்பிக்கப்பட்ட தமிழக அரசு ஆணை எண்.(1டி) 74–ன்படி அரசு அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் பயின்ற மாணவர்களை தனிப்படிப்பு மூலம் சேர்க்கைத் தகுதி பெற்றவர்களாகக் கருதி அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் சேர்த்துக்கொள்ள இது வகை செய்கிறது.*

*அங்கீகாரம் பெறாத மெட்ரிக்குலேஷன் பள்ளிகளில் பயின்ற மாணாக்கர்கள் தம் படிப்பைத் தொடர, 8–ஆம் வகுப்புவரை பள்ளித் தலைமை ஆசிரியர்களே சேர்க்கலாமென அரசு உத்தரவிட்டுள்ளது.*

*இதே போன்று அங்கீகாரம் பெறாத் பள்ளிகள் மற்றும் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட பள்ளிகளில் 8 மற்றும் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்கள் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் சிறப்பு ஆணை பெற்றும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும் அங்கீகாரம் பெறாத மற்றும் அங்கீகாரம் திரும்ப மறுக்கப்பட்ட பள்ளிகளில் 8, 9–ஆம் வகுப்புகளில் படித்த மாணாக்கர்களை சில ஆவணங்களைச் சரிபார்த்து முறையே, 9, 10–ஆம் வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*இந்தச் சலுகைகள் மாணாக்கர்களின் நலன் கருதி 2003–2004 ஆம் கல்வி ஆண்டுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளது என்றும், அடுத்த ஆண்டு இதுபோன்று சலுகை வழங்கப்படமாட்டாது என்றும் அரசாணை கூறுகிறது. பெற்றோர்கள் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளிலேயே தங்கள் குழந்தைகளை சேர்க்க வேண்டும் என்றும் அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இதுபற்றிய மேல்விவரங்களுக்கு அனைத்துக் கல்வி அலுவலகங்களையும் அணுகலாம்.*

உறுதியளிக்கும் வகையில் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிச் சீர்திருத்தத்தை அமல்படுத்துவது குறித்து பொதுமக்கள் மத்தியில் விரிவான வகையில் பேசப்பட்டு வருகிறது. தற்போது உள்ள சூழ்நிலையில் நிதிச் சீர்திருத்தத்தை அமல்படுத்தவேண்டியதன் அவசியத்தை பொதுமக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

மேலும், நிதிச் சீர்திருத்தத்தை அமல்படுத்துவதற்கு இதுதான் சரியான நேரம் என்பதையும், அவ்வாறு செய்யாத பட்சத்தில் தமிழகம் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதையும் பொதுமக்கள் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளனர்.

தமிழகத்தின் பொதுநிதியின் ஆரோக்கியத்தை சீரமைக்கும் வகையில் வளம் தராத வருவாய் செலவினங்கள் மற்றும் வருவாய் இனங்களைக் கண்டறிய அரசு தீவிரமான முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக எனது அரசு ஊழியர் மற்றும் செலவினங்கள் மறு ஆய்வுக்குழு மற்றும் வரி மற்றும் வருவாய் இனங்கள் மேம்படுத்துதல் ஆகியவற்றை நியமித்துள்ளது.

அக்குழுக்களின் பரிந்துரைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவை 2003–2004 நிதி ஆண்டிலேயே செயல்படுத்த மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. நிதிச் சீர்திருத்தம் என்பது விரைவான, வேகமான வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

அதற்கென்று சமூக நலத்துறையிலான உடல்நலம், அடிப்படைக் கல்வி, உணவு ஆகிய துறைகளுக்கான ஒதுக்கீட்டை குறைப்பது என்பதல்ல. ஆனால், அதேநேரத்தில் செலவினங்கள் தேவையான துறைக்கு சரியான அளவில் ஒதுக்கப்பட வேண்டும் என்பதுதான் அதன் நோக்கம்.

உற்பத்திக்கு உத்தரவாதம் அளிக்கும் துறைகளுக்கும் அதேநேரத்தில் மனித வளர்ச்சிக்கு பயன்படும் துறைகளுக்கும் அரசிடம் உள்ள நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்வதற்கு தேவையான வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

**உலக வங்கி உதவ வேண்டும்**

2003–2004ஆம் நிதியாண்டில் உடனடியாக செயல்படுத்தப்பட்டு வரும் நிதிச் சீர்திருத்தத் திட்டத்தால் சமூகத்தில் வறுமையில் உள்ள ஏழை எளியவர்கள் மற்றும் அரசின் உதவியை எதிர்நோக்கியுள்ளவர்கள் பாதிக்கப்படாத வகையில் அரசு ஒரு சமூகப் பாதுகாப்பு வளையத்தை உருவாக்கி, எந்த ஒரு சூழ்நிலையிலும் ஏழை எளியவர்கள் பாதிக்கப்படாத வண்ணம் அவர்களைப் பாதுகாப்பது என்ற உறுதியை நாங்கள் கொண்டுள்ளோம்.

இன்றைக்குள்ள பிரச்சினைகளுக்கான காரணம் மற்றும் நிர்ப்பந்தம் ஆகியவை குறைந்த காலகட்டத்தில் வருவாய் செலவினங்களைக் குறைப்பதுதான். பல்வேறு இனங்களில் வருவாய் செலவினங்கள் தன்னிச்சையான வளர்ச்சியைக் கொண்டுள்ளது. நிதிச் சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் வருவாய் வளர்ச்சியில்லாத துறைகளில் செய்யப்படும் மூலதனம் குறித்து சிறப்பான கவனம் செலுத்த வேண்டும்.

இந்த மாபெரும் நிதிச் சீர்திருத்தத் திட்டத்தால் ஏற்படும் வருவாய்ப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு மத்திய அரசும், உலக வங்கியும் உதவ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழகத்தின் பொருளாதாரச் சூழ்நிலை சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகள் குறித்து தற்போது கூற விழைகின்றேன். 1996–2001ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வேளாண்மைத் துறையின் வளர்ச்சி முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு அம்சமாகும். துரதிருஷ்டவசமாக 2001ஆம் ஆண்டு துவக்கத்திலிருந்து காலநிலை மாறுபாட்டாலும் அதனைத் தொடர்ந்து 2002–2003இல் மாநிலம் சந்தித்த கடுமையான வறட்சியும் நிதி நிலையை மோசமாக்கியது. இது வேளாண்மைத் துறையை வளர்ச்சியடையச் செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளுக்கும் முன்னுரிமை வழங்குவதற்கான முக்கியமான காரணமாகும்.

ஆகவே, நான் இதனை செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நீர் வடிபகுதி மேலாண்மைத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதன் மூலம் வறட்சியின் பிடியில் சிக்கி அழிந்துபோகும் நிலையிலுள்ள நிலங்களைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொண்டேன்.

**கிராமத் தொழில்களுக்கு ஊக்கம்**

இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக, அரசிடம் உள்ள மானாவாரி நிலங்களை வணிகக் குழுமங்களுக்கும் மற்றும் சுயஉதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளுக்கும், வேளாண் வணிகம் சார்ந்த தொழில்களைச் செய்வதற்காக குத்தகைக்குவிட திட்டமிட்டுள்ளோம்.



மூன்றாவது கட்டமாக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் கிராமப்புறத் தொழில்களை மேம்படுத்த ஊக்கப்படுத்துவது என்பதும் ஆகும்.

உலக வங்கி இத்திட்டங்களுக்கு நிதியுதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைக்குத் தேவையான தண்ணீர் வசதி பற்றாக்குறையாக உள்ளது. வேளாண்மைத் துறையின் தேக்க நிலைக்கு இது அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினைகளின் காரணமாக நீர் கிடைக்கும் என்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலங்களுக்குக்கூட நீர் கிடைக்காமல் போன சூழ்நிலை உருவானது. மாநிலத்தின் விவசாயத்துக்குத் தேவையான நீரோட்டம் இருக்கும்பட்சத்திலும் அவற்றைத் தேக்கி வைத்து பயன்படுத்தும் வகையில் புதிய நீர் ஆதார வசதிகளை மேம்படுத்த இயலாத நிலையில் உள்ளது.

ஆகவே, நீர் ஆதார மேம்பாட்டுத் திட்டம் II–ஐ செயல்படுத்துவதற்கு உலக வங்கியின் உதவி தேவைப்படுகின்றது. முதல் திட்டத்திற்கு நிதி உதவிகளை அதிகபடுத்தியதற்கு கார்ட்டர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, 2ஆவது திட்டத்திற்கு ஒப்புதல் வழங்க வேண்டும். அப்போதுதான் பற்றாக்குறையுள்ள நீர் தட்டுப்பாட்டை சீர்செய்து வேளாண்மைக்குத் தேவையான நீர் ஆதாரங்களை சிறந்த முறையில் செயல்படுத்த உதவும்.

**வறுமை ஒழிப்புத் திட்டம்**

எங்களுடைய வறுமை ஒழிப்புத் திட்டங்கள் குறித்து உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விழைகின்றேன். வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு உலக வங்கி உதவியுடன் நிதி ஒதுக்குவது குறித்து ஆலோசித்து வருகிறோம். இந்த வறுமை ஒழிப்புத் திட்டத்தை விவசாயம் சார்ந்த துறைகளில் செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

ஏனெனில் மாநிலத்தின் 62 விழுக்காட்டு மக்கள் இத்துறையை நம்பித்தான் உள்ளனர். சமீபத்திய வறட்சியால் அவர்கள் கடுமையான அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, இந்த விரிவான வறுமை ஒழிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது.

தமிழ்நாட்டில் பெண்களின் வாழ்க்கைத் தரம் மகளிர் சுய உதவிக்குழுக்களின் மூலமாக உயர்ந்துள்ளது.

மேலும், தொடர்ந்து மகளிர் சுய உதவிக்குழுக்களை பலப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் வறுமை ஒழிப்புத் திட்டங்களை அவர்கள் மூலமாக செயல்படுத்தவும் உதவும். தமிழ்நாடு விவசாயம் அல்லது அடிப்படை துறைத் திட்டம் என்ற ஒன்றை தமிழகத்துக்கென்றே உருவாக்கி. அதன் மூலம் வறுமை ஒழிப்புத் திட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்தலாம் என்று நான் நினைக்கிறேன்.

**ரூ.2116 கோடியில் சாலைத் திட்டம்**

இதன்மூலம் வறுமை ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி உயர்ந்தபட்ச வருமான வேறுபாட்டுச் சூழ்நிலையை மாற்ற முடியும்.

1996–2001க்கு இடைப்பட்ட ஒன்பதாவது திட்டக் காலத்தில் உற்பத்தித் துறையின் வளர்ச்சி சொல்லிக் கொள்ளும் வகையில் இல்லாமல் மிகவும் மோசமான நிலையில்தான் இருந்தது. இரண்டாம் கட்ட சீர்திருத்தத்தில் உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான ஒரு சரியான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

அதேநேரத்தில் தமிழ்நாட்டில் ஏற்றுமதி சார்ந்த ஒரு வளர்ச்சிக்கான கொள்கையை வகுத்துள்ளோம். அதிலும் குறிப்பாக சென்னை பிராந்தியத்தை உலகத்திலேயே தகவல் தொழில்நுட்பம் மட்டுமல்லாது மற்ற அனைத்து உற்பத்தித் துறைகளுக்கும் ஏற்ற இடமாக மாற்ற தேவையான அனைத்து அடிப்படைக் கட்டுமான வசதிகளையும் உருவாக்கித் தர உறுதிகொண்டுள்ளோம்.

சர்வதேச அளவிலான தரக்கட்டுப்பாட்டை அடிப்படைக் கட்டுமான வசதிகளின் துறைகளில் செயல்படுத்துவதற்கு அதிக அளவில் மூலதனம் தேவைப்படுகின்றது. பொது மூலதனத்தை அடிப்படைக் கட்டுமானப் பணிகள் துறைக்கு செலவிடுவதில் முன்னுரிமை வழங்கப்படும்.

என்னுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் (1991–1996) சாலைத் துறைகள் திட்டத்திற்கு 441 மில்லியன் அல்லது ரூ.2116 கோடி செலவிலான திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது.

**தென்னிந்தியாவின் ஏற்றுமதி பகுதியாக சென்னை**

இத்திட்டம் மாநிலத்தின் சாலைக் கட்டுமானத் துறையின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய காரணியாக அமைந்தது. இவற்றிற்குக் காரணமாக அமைந்த உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

②

226155

சென்னை மாநகரை உள்ளடக்கிய பகுதிகளை இணைத்து ஒருங்கிணைந்த அடிப்படைக் கட்டுமான வசதிகள் கொண்ட ஒன்றாக மாற்றும் திட்டத்தை உருவாக்கி வருகிறோம். இத்திட்டத்தின் கீழ் போக்குவரத்து மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு உலக வங்கியின் நிதி ஒதுக்கீடு எந்த அளவு அவசியமாகின்றது ?

தென்னிந்தியாவிலே ஏற்றுமதியை அடிப்படையாக கொண்ட வளர்ச்சிப் பகுதியாக சென்னையை மாற்றத் திட்டமிட்டுள்ளோம். அதிக நகர்ப்புறங்களைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு உள்ளதால் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் III –ஐ செயல்படுத்துவதற்கு உலக வங்கி உதவ வேண்டும்.

அடிப்படைக் கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதற்காக பொதுத்துறை மற்றும் தனியார் இணைந்து செயல்படுத்துவதற்கேற்ற வகையில் தேவையான சட்ட வரைவுகளை அறிமுகப்படுத்த உள்ளோம்.

உங்களுடைய ஒத்துழைப்புடன் விரைவில் தரமான அடிப்படைக் கட்டுமான வசதிகளை உருவாக்குவோம் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

சமூக நலத்துறையில் முதலீடுகளை செய்வதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இருந்து வந்துள்ளது. சமூகப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் சமூகப் பாதுகாப்பு வளையம் ஒன்றை உருவாக்கியுள்ளேன். மருத்துவ அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் ஏழை எளியவர்களுக்கு உறுதியான, தரமான சுகாதார வசதிகளையும் மற்றும் உடல்நலத்தைப் பேணுவதற்கும் உண்டான வாய்ப்புகளை மற்றும் வழிவகைகளை உருவாக்கித் தர இயலும். அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு அவசியம்.

**குடிநீர் திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்க வேண்டும்**

அதேபோன்று தரமான பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கு அதிகமான நிதியை ஒதுக்கியுள்ளோம். இதன்மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது. சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் திட்டத்தை உலக வங்கி ஆய்ந்து நிதி ஒதுக்குவதன் மூலம் குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்கு இத்திட்டத்தைச் செயல்படுத்த உள்ளோம்.

இத்திட்டத்தை வடசென்னையில் செயல்படுத்துவதன் மூலம் ஏற்கெனவே உள்ள குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் நிலையங்கள் சிறப்பான முறையில் செயல்பட இது வழிவகை செய்யும். சிறந்த நிர்வாகத்தின் மூலம் விரைவான வேகமான வளர்ச்சியை அடைய முடியும் என்பதை நான் அறிந்துள்ளேன்.

அரசின் நடைமுறைகளில் ஏற்படும் காலதாமதத்தையும், பண விரயத்தையும் தடுப்பதற்காக அனைத்துத் துறைகளையும் கணினிமயமாக்கி வருகிறோம். தமிழ்நாடு பொதுக் கொள்முதலில் விரிவான சட்ட நெறிமுறைகளுக்குட்பட்டு வெளிப்படையான வகையில் செயல்பட்டு வருகிறது. கொள்முதல் நடவடிக்கைகளில் இன்னும் பல்வேறு திருத்தங்களை அறிமுகப்படுத்த உள்ளோம். இதன் மூலம் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் செயல்பாடுகள் அணுகும்போது விரைவான குறைந்த செலவில் குறித்த காலத்தில் நடைபெறுவதற்கு உதவும்.

**தன்னிறைவு**

அரசின் பெரும்பான்மையான பணிகளையும் **உள்ளாட்சி அமைப்புகள் செயல்படுத்துவதால்** அவற்றை பலப்படுத்தி தன்னிறைவு அடையச் செய்ய வேண்டும்.

திரு. கார்ட்டர் அவர்களே, தமிழ்நாட்டின் பத்தாவது திட்டக் காலத்தில் **2003–2004**ஆம் ஆண்டுக்கான செயல்பாடுகள் குறித்து தெளிவான கொள்கையை நாங்கள் வகுத்துள்ளோம். கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டி ஒருங்கிணைந்த அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியை அடையச் செய்ய வேண்டும் என்கின்ற வேகத்தில் நான் இருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

இதே பாதையில் தொடர்ந்து, வேகமாக வீறுநடைப் போடுவதன் மூலம் எதிர்காலக் கனவுகளில் வாழும் மக்களின் கனவுகளை நனவாக்க முடியும். தமிழ்நாட்டில் தங்கியுள்ள உங்களுக்கு எனது வாழ்த்துக்களையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு தேவையான பகுதிகளை நீங்கள் நேரில் சென்று ஆய்வு செய்து நல்ல வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். புதிய வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாட்டுக்கும் உலக வங்கிக்கும் இடையேயான கூட்டு முயற்சிக்கு தங்களுடைய வருகை உதவும்.

***மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்***
***2–5–2003 அன்று***
***தலைமைச் செயலகத்தில்***
***நடைபெற்ற உலக வங்கிக் குழுக்கூட்டத்தில்***
***ஆற்றிய உரை.***



# பொருளாதார நிலையை உயர்த்துவது தான் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதன் குறிக்கோள்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

“இந்தப் பந்தலுக்குள் எத்தனை பேர் அமர்ந்திருக்கிறார்களோ, இதற்கு நான்கு மடங்கு கூட்டம் வெளியே கொளுத்தும் வெய்யிலில் நிற்கிறது. சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது என்னைக் காண வேண்டும்; என் உரையைக் கேட்க வேண்டும் என்று இங்கே வந்து காத்திருக்கின்ற அன்பு உள்ளங்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை எந்த மாநில அரசும் செய்யாத சாதனைகள், எந்த மாநில முதலமைச்சரும் செய்யாத பல சாதனைகளை நான் செய்திருப்பதாக நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். அவற்றில் முக்கியமான சாதனைகள் பலவற்றை நீங்கள் அறிவீர்கள். இந்தியாவிலேயே முதன் முதலாக காவல் துறையில் பெண் கமாண்டோ படையை அமைத்தது நம்முடைய அரசு தான். இந்தியாவிலேயே முதன் முதலாக அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்தது நான் தான். இந்தியாவிலேயே முதன் முதலாக வக்பு வாரியத்திற்கு ஒரு பெண்ணைத் தலைவராக பதவி ஏற்கச் செய்தது இந்த அரசு தான். அதைப் போலவே, தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு முதன் முதலாக ஒரு பெண்ணைத் தலைவராக நியமித்தது நான் தான். தமிழ் நாட்டின் வரலாற்றிலேயே அரசு தலைமைச் செயலாளராக ஒரு பெண்ணை முதன் முதலாக நியமித்த முதலமைச்சரும் நான் தான். இப்படி, இதுவரை எந்த முதலமைச்சரும் செய்யாத பல காரியங்களை நான் செய்திருப்பதை நானே அறிவேன். ஆனால், இன்றைக்குத் தான் ஒரு புதிய சாதனை எனக்குத் தெரிய வந்துள்ளது. இது வரை பெரம்பலூருக்கு இந்த மாநிலத்தின் எந்த






*வேலைவாய்ப்பு, கல்வி வாய்ப்பு, ஆராய்ச்சி, உதவித்தொகை பெறுவது உள்ளிட்ட தகவல்கள் அடங்கிய இணைய தளத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 6-6-2003 அன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள்.*

முதலமைச்சரும் வந்ததில்லை. இது தான் முதல் முறை என்ற இனிய செய்தியை இன்று நான் தெரிந்து கொண்டேன். அதனால் இங்கே வருகை புரிந்ததில் நான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தின் மத்திய பகுதியில் அமைந்திருக்கும் மாவட்டமாகிய பெரம்பலூர் மாவட்டத்தில் சீரோடும் சிறப்போடும் நடைபெறும் இந்த அரசு விழாவில் கலந்து கொண்டு, உங்களை எல்லாம் சந்தித்து உங்களோடு எனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டு, நிறைவேற்றப்பட்ட திட்டங்களைத் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

**பழமைச் சிறப்பு**

மகத்தான சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கிய கங்கைகொண்ட சோழபுரத்தைத் தன்னிடத்தே கொண்டு விளங்கும் சிறப்பைப் பெற்றது இன்றைய பெர்ம்பலூர் மாவட்டம். வட புலத்தை வென்று வாகை சூடிய வரலாற்றுப் பேரரசனாகிய ராஜேந்திர சோழனால் உருவாக்கப்பட்ட ஊர் இன்று உருக்குலைந்து போயிருந்தாலும் தமிழர்களின் கலைச் சிறப்பை, குறிப்பாக, சோழர்களின் கலைப் பணியை எடுத்துக் காட்டுகின்ற வகையில் கங்கைகொண்ட சோழபுரத்தின் பிரகதீஸ்வரர் ஆலயம் 54.86 மீட்டர் உயரம் கொண்டதாக, இன்றைக்கும் விண்முட்ட உயர்ந்து கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது. அது மட்டுமல்லாமல், சிறுவாச்சூர் அருள்மிகு மதுரகாளியம்மன் கோயில், செட்டிக்குளம் பாலதண்டாயுதபாணி கோயில், அரியலூர் அருகே கல்லங்குறிச்சி கலியபெருமாள் கோயில், திருமழப்பாடியில் மும்மூர்த்திகளால் பாடப்பெற்ற வைத்தியநாத சுவாமி கோயில் ஆகிய ஆலயங்கள் இந்த மண்ணின் மகிமையை விளக்கும் வகையில் ஆன்மீக மணம் கமழ அமைந்திருக்கின்றன. அவை மட்டுமல்லாமல், ஏலாக்குறிச்சியில் அமைந்திருக்கும் மாதா கோயில் பழம்பெருமை உடையது. இத்தாலியிலிருந்து தமிழகத்திற்கு வந்து தமிழ் கற்று, தேம்பாவணி என்னும் தீந்தமிழ்க் காவியத்தை நமக்கு வழங்கிய வீரமா முனிவரால் அமைக்கப்பட்ட தேவாலயம் என்னும் சிறப்புக்குரியது ஏலாக்குறிச்சி மாதா கோயில் என்பது பெருமைக்குரிய செய்தி ஆகும்.

ஆன்மீகச் சிறப்பு மிக்க திருக்கோயில்களோடு காண வேண்டிய சுற்றுலாத் தலங்கள் பலவற்றையும் கொண்டது பெரம்பலூர் மாவட்டம். பெரம்பலூரிலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ரஞ்சன்குடிக் கோட்டை, சாத்தனூர் கிராமத்தில் உள்ள கல் மரம், தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலையின் அருங்காட்சியகத்தில் உள்ள டைனோசார் முட்டை, சிப்பிகள், நட்சத்திர மீன் ஆகியவற்றின் கற்படிவங்கள், பச்சைமலை அடிவாரத்தில் லாடபுரத்தில் அமைந்த மயிலூற்று அருவி, அரியலூர் வட்டத்தில் உள்ள கரைவெட்டி பறவைகள் சரணாலயம் ஆகிய சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் கொண்டு விளங்கும் பெரம்பலூர், பழமைச் சிறப்பில் மற்ற மாவட்டங்களுக்கு எந்த வகையிலும் குறைந்தது அல்ல என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

**கவிதை**

**தா**ம் கண்டு உள்ளம் நெகிழ்ந்தவற்றை
மற்றவர்கள் கண்டு நெகிழும் வண்ணம்
அள்ளித்தருவதுதான் கவிதை.

*- அறிஞர் அண்ணா*

இருப்பினும், வறட்சியால் அதிகம் பாதிக்கக் கூடிய மாவட்டமாகவும், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகவும் உள்ள இந்த மாவட்டத்தை பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி அடையச் செய்ய உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அந்த முயற்சியின் ஒரு முக்கிய பகுதி தான், இன்று நடைபெறுகின்ற இந்த விழா.

1995 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் தேதி திருச்சி மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, இந்த பெரம்பலூர் மாவட்டம் தொடங்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். அது உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னால் தொடங்கப்பட்டது என்ற ஒரே காரணத்திற்காக, அடுத்து வந்த தி.மு.க. அரசு பெரம்பலூர் மாவட்டத்தில் எந்தவித அடிப்படைப் பணிகளையும் மேற்கொள்ளாமல், முற்றிலுமாகப் புறக்கணித்தது.

அந்தக் குறைகளை எல்லாம் போக்குகின்ற வகையில், நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற உத்தரவிட்டேன். அவற்றில் ஒன்று தான், பெரம்பலூர் மக்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்த கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம். இந்தத் திட்டம் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு, இன்று முதல் தூய்மையான குடிநீர் உங்கள் இல்லந்தோறும் வழங்கப்பட உள்ளது என்பதையும், உங்களின் மற்றொரு நீண்ட நாள் கோரிக்கையான மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம் கட்டுவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இவ்விழாவில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதையும் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், பெரம்பலூர் மாவட்டத்துடன் அரியலூர் மாவட்டம் மீண்டும் இணைக்கப் பட்டதனால், அப்பகுதிகளுக்கு அதிக அளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அரியலூரில் மிகப் பெரிய அளவில் மாவட்ட விளையாட்டு அரங்கம் 68 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அது போல், மீன்சுருட்டி பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, மீன்சுருட்டி ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கை வசதிகள் கொண்ட நவீன மருத்துவமனையாக 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் தரம் உயர்த்தப்பட உள்ளது. இதனால் சுமார் 36 கிராமங்களைச் சேர்ந்த ஏழை



மக்கள் இலவச நவீன மருத்துவ வசதிகளைப் பெறுவார்கள் என்பதையும் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அன்புச் சகோதரியாகிய என் மீது பெரும் நம்பிக்கை வைத்திருக்கும் மக்கள் நீங்கள்! அந்த நம்பிக்கையின் வெளிப்பாடாக அரியலூர் பகுதியை உள்ளடக்கிய இன்றைய பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்றத் தொகுதிகளில், 4 தொகுதிகளில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்து, எஞ்சியுள்ள ஒரு தொகுதியில் கழகத்தின் ஆதரவு பெற்ற வேட்பாளரையே வெற்றி பெறச் செய்தவர்கள் நீங்கள்! உங்கள் அன்புச் சகோதரியின் மீது யார் நம்பிக்கை வைத்தாலும் அந்த நம்பிக்கை வீண் போவதில்லை.

இந்த நேரத்தில் எனக்கு ஒரு புராணச் சம்பவம் நினைவுக்கு வருகிறது.

தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் அடிக்கடி போர் வரும் என்று நாம் புராணங்களில் கேள்விப் பட்டிருக்கிறோம். அந்தப் போர்களில் வெற்றி தோல்வி மாறி மாறி வந்து கொண்டிருந்தது. தங்களுக்கு நிரந்தர வெற்றி வேண்டும் என்றும், மரணத்தைத் தவிர்க்கின்ற அமிர்தத்தைத் தராமல் படைப்புக் கடவுளாகிய பிரம்மா ஓர வஞ்சனையாக நடந்து கொள்கிறார் என்றும், அசுரர்கள் பிரம்மாவிடம் அங்கலாய்த்துக் கொண்டார்கள்.

பிரம்மா சொன்னார், "அவ்வளவு தானே பிரச்சனை? வாருங்கள், உட்காருங்கள். உங்களுக்கு அமிர்தம் தருகிறேன். வரிசையாக உட்காருங்கள்" என்றார். அப்படியே உட்கார வைத்து அவர்களுக்கு நடுவில் அமிர்தக் கிண்ணங்களை வரிசையாக வைத்தார். அசுரர்கள் மிகவும் சந்தோஷத்தோடு அமிர்தத்தை சாப்பிடத் தயாரானார்கள்.

அப்போது பிரம்மா, "நிறுத்துங்கள்! நீங்கள் அமிர்தத்தை தாராளமாக சாப்பிடலாம். ஆனால், ஒரு நிபந்தனை! நீங்கள் முழங்கையை மடக்காமல் சாப்பிட வேண்டும்" என்றார் பிரம்மா.

அசுரர்கள் முயன்று பார்த்தார்கள். முழங்கையை மடக்காமல் அவர்களால் அமிர்தத்தை உண்ண முடியவில்லை. அவர்களுக்கு கோபம் வந்தது. கூச்சலிட்டார்கள். "பிரம்மா, நீங்கள் சூழ்ச்சி செய்கிறீர்கள். உங்களை சும்மா விட மாட்டோம்", என்று ஆக்ரோஷமாகக் கத்தினார்கள்.

அப்போது பிரம்மா, "பதற்றப்படாதீர்கள். இப்போது பாருங்கள்" என்று கூறிக் கொண்டே தேவர்களை அழைத்தார். தேவர்கள் வந்தார்கள். அவர்களுக்கும் அதே நிபந்தனை! முழங்கையை மடக்காமல் சாப்பிட வேண்டும் என்றார் பிரம்மா. தேவர்கள் அமிர்தம் சாப்பிட உட்கார்ந்தார்கள். அவர்கள் கோபப் படவில்லை. கூச்சலிடவில்லை. எதிர் எதிரே உட்கார்ந்து கொண்டார்கள். அமிர்தத்தைக் கையில் எடுத்தார்கள். கையை மடக்காமல், எதிரே இருப்பவரின் வாயில் ஊற்றினார்கள். ஒருவருக்கு ஒருவர் கையை மடக்காமல் ஊட்டிக் கொண்டே இருந்தார்கள். இப்படியாக, எல்லோரும் அமிர்தம் உண்டார்கள். உங்களுக்குப் புரிகிறதல்லவா? நாமே சாப்பிட வேண்டும் என்றால் கிண்ணத்தை ஏந்தி கையை மடக்கித்தான் சாப்பிட முடியும். ஆனால், முழங்கையை மடக்காமல் உண்ண வேண்டும் என்றால் கையை இப்படியே நீட்டிக் கொண்டு கிண்ணத்தை ஏந்தி எதிரே உள்ளவர் வாயில் ஊட்டினால் அவரும் சாப்பிடுகிறார். அதைப் போலவே உண்பவரும் நம் வாயில் ஊட்டினால், நாமும் சாப்பிடுகிறோம் அல்லவா?.

இது கதையாக இருக்கலாம். ஆனால் உலகம் அறிந்து கொள்ள வேண்டிய ஒப்பற்ற நீதி இதிலே அடங்கியிருக்கிறது.

அடுத்தவருக்குக் கொடுக்க நினைத்தால் நமக்குக் கட்டாயம் கிடைக்கும். ஒருவருக்கொருவர் உதவினால், இந்த பூலோகமே தேவ லோகமாக மாறும்.

எனவே, பிறர்க்குக் கொடுக்க நினைத்தால் நமக்கும் கிடைக்கும். இது தான் உண்மையான சோஷலிசம்.

இதைத் தானே இத்தகைய அரசு விழாக்களில் பல்வேறு திட்டங்களை மக்களுக்குக் கொண்டு செல்வதன் வாயிலாக இந்த அரசு தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது.

நீங்கள் அனைவரும் என் மீது வைத்திருக்கும் அளவற்ற நம்பிக்கை நிச்சயம் வீண் போகாது என்பதை நிரூபிக்கின்ற வகையில் இன்றைய தினம், இந்த இனிய விழாவிலே 198 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு திட்டப் பணிகளை எனது அன்புக்குரிய உங்கள் அனைவரின் பயன்பாட்டிற்காகவும் கொண்டு வந்திருக்கிறேன் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

இன்றைய தினம் இந்த பெரம்பலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டு இருக்கும் மொத்தம் 100 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 5742 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்ததில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.



அவற்றில் ஒரு சில முக்கிய பணிகளைப் பற்றி உங்களுக்கு எடுத்துக் கூற வேண்டியது என்னுடைய கடமையாகும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக 34 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ள, சாலைகள் அமைத்தல், குளங்கள் தூர் வாருதல், தொகுப்பு வீடுகள் கட்டுதல், மகளிர் சுகாதார வளாகக் கட்டடங்கள் அமைத்தல், கிராம நிர்வாக அலுவலர்களுக்கான கட்டடங்கள் கட்டுதல், கதிர் அடிக்கும் களங்கள் அமைத்தல், அங்கன் வாடிகளிலும், பள்ளிகளிலும் கழிப்பறைகள் கட்டுதல் முதலான 4850 பணிகளை இன்று திறந்து வைத்ததில் நான் மன நிறைவு அடைகிறேன்.

பெரம்பலூர் நகருக்கான கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டம் இந்தப் பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கையாகும். இந்தத் திட்டம் 17 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக பெரம்பலூர் நகரப் பேரூராட்சியில் 46,480 பேர் பயன்பெற உள்ளனர். இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக குரும்பலூர் கிராமப் பேரூராட்சியில் 23,210 பேர்களும், வழியோரக் குடியிருப்புகளில் 1,15,282 பேர்களும் பயனடைவர்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக, கான்கிரீட் சாலைகள், தார் சாலைகள் மற்றும் மெட்டல் சாலைகள் ஆகியவை உள்ளிட்ட மொத்தம் 1,101 பணிகள் 26 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், 11 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள், மகளிர் சுகாதார கட்டடங்கள், கிராம நிர்வாக அலுவலகங்களுக்கான கட்டடங்கள், கதிர் அடிக்கும் களங்கள், பள்ளிகளில் கழிப்பறைகள், பெரம்பலூரில் வணிக வளாகம் ஆகியவற்றை இந்த இனிய விழாவில் நான் திறந்து வைத்துள்ளேன்.

மேலும், நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக அமைக்கப்பட்டுள்ள 12 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 24 சாலைப் பணிகளையும் பொதுப்பணித் துறையின் வாயிலாக கட்டி முடிக்கப்பட்டுள்ள 3 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 42 கட்டடங்களையும் இன்றைய தினம் நான் திறந்து வைத்துள்ளேன். குடிநீர் வழங்கல் பணிகளைப் பொறுத்தவரையில் இந்த மாவட்டத்தில் மொத்தம் 45 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பில் 446 பணிகள் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றில், குறிப்பாக, இந்த மாவட்டத்தின் 10 ஊராட்சி ஒன்றியங்களில் ஏறத்தாழ இரண்டரை இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் மொத்தம் 9 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் 446 குடிநீர் வழங்கல் பணிகளை திறந்து வைத்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த மாவட்டத்தில், 9 பேரூராட்சிகளில், 2 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 241 கட்டடங்கள், தார் சாலைகள், சிமெண்ட் மற்றும் கான்கிரீட் சாலைகள், வடிகால்கள், குடிநீர் விநியோகப் பணிகள் ஆகியவற்றை இந்த இனிய விழாவிலே திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.



### முழு வறுமை ஒழிப்புத் திட்டம்

மக்களுடைய வாழ்க்கை மென்மேலும் வளமடைய வேண்டும் என்பதிலும், அவர்கள் தம்முடைய அன்றாட வாழ்க்கையை ஆரோக்கியமாகவும், ஆக்க பூர்வமாகவும் நடத்திச் செல்ல அடிப்படை வசதிகள் உட்பட அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதிலும் நான் மிகுந்த அக்கறை கொண்டிருக்கின்றேன்; எங்கள் அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கின்றது.

அந்த வகையில், புதிய திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டுகின்ற வாயிலாக இன்றைய தினம் என்னால் மொத்தம் 85 கோடி ரூபாய் மதிப்பில் பெரம்பலூர் மாவட்டத்தின் பல பகுதிகளில் அமைக்கப்பட உள்ள பல்வேறு திட்டப் பணிகளுக்காக அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக "முழு வறுமை ஒழிப்புத் திட்டம்" என்ற 25 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்தை நான் இங்கு துவக்கி வைத்துள்ளேன். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினால் செயல்படுத்தப்பட உள்ள இந்தத் திட்டம் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு பெரிதும் உதவிடும் என்று நான் நம்புகின்றேன். 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குறும்பலூர் பேரூராட்சி மற்றும் 55 வழியோர குடியிருப்புகளுக்கு குடிநீர் அளிக்கும் திட்டம் – 7 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலக வளாக பணித் திட்டம் – 1 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் 38 குடியிருப்புகள் கொண்ட காவலர்களுக்கான கட்டடங்கள் – 1 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு – வருவாய் அலுவலர் குடியிருப்புகள் – வேப்பந்தட்டை வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றிற்கு நான் அடிக்கற்கள் நாட்டியுள்ளேன். இவை மட்டுமன்றி, 9 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் இந்த மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் 10 சாலைகள் மற்றும் ஒரு பாலம் ஆகியவற்றிற்கான மேம்பாட்டுப் பணிகள் – 9 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் பெரம்பலூர் மாவட்டத்திற்கான ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் – 1 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள பிரகதீஸ்வரர் ஆலயத்தின் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றிற்கு இன்று நான் அடிக்கற்கள் நாட்டியுள்ளேன்.

மேலும், சிறுவாச்சூர் அருள்மிகு மதுர காளியம்மன் திருக்கோயிலுக்கு புதிய தங்க ரதம் அமைக்கும் பணி – மீன்சுருட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகளுடன் தரம் உயர்த்தும் பணி – அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி – தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன கட்டடங்கள் அமைக்கும் பணி ஆகியவற்றிற்கெல்லாம் அடிக்கற்கள் நாட்டியதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

### நலத் திட்ட உதவிகள்

பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுச்சியோடு குழுமியிருக்கின்ற பெரம்பலூர் மாவட்ட அரசு விழாவில் மொத்தம் 19,845 பேர் பயன் பெறுகின்ற வகையில், ஏறத்தாழ 13 கோடி ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத் திட்ட உதவிகள் இன்று இந்த விழாவில் வழங்கப்பட உள்ளன. நலிந்தோருக்கும், ஆதரவற்றோருக்கும், மகளிருக்கும் என சமுதாயத்தின் அடித்தளத்து பிரிவினர் அனைவரும் தமது வாழ்க்கையில் முன்னேற உரிய உதவிகளை வழங்குவதில் எங்கள் அரசு என்றைக்குமே முன்னணியில் இருக்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில், இந்த விழாவிலே 18 அரசுத் துறைகள் மூலம் 19,845 பயனாளிகளுக்கு மொத்தம் 12 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. அவை அனைத்தையும் உங்களுக்கு எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தினாலே, வழங்கப்படுகின்ற உதவிகளில் முக்கியமான ஒரு சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

முதலில், ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக 5036 பயனாளிகளுக்கு 4 கோடியே 41 இலட்சம் ரூபாய் அளவிற்கு கடன் உதவிகள் வழங்கப்படுகின்றன – கூட்டுறவுத் துறையின் சார்பாக 629 பயனாளிகளுக்கு 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் அளவில் வேளாண் சார்ந்த தொழில் அபிவிருத்திக்காக உதவி வழங்கப் படுகின்றது – 8252 பெண்களுக்கு மொத்தம் 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் கடன் உதவி மகளிர் திட்டத்தின் கீழும் – 3297 பேருக்கு வருவாய்த் துறையின் கீழ் வீட்டுமனைப் பட்டா, நிலப் பட்டா மற்றும் முதியோர் உதவித் தொகை, ஊனமுற்றோர் உதவித் தொகை போன்ற உதவிகளும் – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக 1226 பேருக்கு 2 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பில் வீட்டு மனைப் பட்டாக்களும், தையல் இயந்திரங்களும் வழங்கப்பட உள்ளன. இவை மட்டுமன்றி, சமூக நலத்துறை, வனத்துறை, வேளாண்மைத் துறை, தொழில் துறை மற்றும் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை ஆகிய பல்வேறு துறைகளின் சார்பாகவும், இந்த இனிய விழாவிலே பல ஆயிரக்கணக்கான பயனாளிகளுக்கு, நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்த நலத்திட்ட உதவிகள் அனைத்தையும் பயனாளிகள் அனைவருக்கும் நானே எனது கரங்களாலேயே வழங்கிட வேண்டும் என்று எனக்கு விருப்பம் தான். ஆனால் அதற்கு போதுமான நேரம் இல்லை என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆகவே, இந்த மேடையில் 15 பயனாளிகளுக்கு மட்டும் நலத்திட்ட உதவிகளை நானே வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் அரசு அலுவலர்களும், இங்கேயே, இந்த விழாவிலேயே, இப்போதே வழங்கி சிறப்பிப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு உதவிகள் பலவும் பெற உள்ள பயனாளிகள் தாம் செய்து வருகின்ற தொழில்களில் மென்மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

"எங்கு தர்மம் இருக்கிறதோ
அங்கே கிருஷ்ணன் இருப்பார்
எங்கே கிருஷ்ணன் இருப்பாரோ
அங்கே வெற்றி இருக்கும்"

என்று சொல்வார்கள்.

எனவே வெற்றி வேண்டும் என்றால், அங்கே கிருஷ்ணன் வேண்டும்.கிருஷ்ணன் வேண்டும் என்றால், அங்கே தர்மம் வேண்டும். சுருங்கச் சொன்னால், வெற்றி வேண்டும் என்றால், தர்மம் வேண்டும்.நம்மிடம் இருப்பது தர்மம். அதனால் நமக்குக் கிடைப்பது வெற்றி. சிலரிடம் அதர்மம் தான் இருக்கிறது. அவர்களுக்குக் கிடைப்பது தோல்வி.

அரசு விழாவிலே ஏழை எளிய மக்களுக்கு நலத் திட்ட உதவிகளை நான் வழங்குகிறேன். இதைக் கூட சில அரசியல்வாதிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

எந்த நல்ல காரியத்தை செய்ய நினைத்தாலும் அதனை உடனே செய்து விட வேண்டும் என்பார்கள். எனவே தான் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், சிரமங்களை பொருட்படுத்தாமல், இந்த அரசு விழாவிலே கலந்துகொண்டு, திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்கியதில், உள்ளபடியே மிகுந்த மன நிறைவை அடைகின்றேன்.

அரசு வழங்கும் உதவிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு பயனாளிகள் அனைவரும் தங்களது பொருளாதார நிலையை மேலும் மேலும் உயர்த்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு பொருளாதார நிலையை உயர்த்துவது தான் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதன் குறிக்கோள் ஆகும். அதற்காக தங்களது தொழில் முயற்சிகளில் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பயனாளிகள் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். எந்தத் தொழிலை நாம் செய்தாலும் அதைச் செம்மையாக செய்ய வேண்டும் என்றும், அப்படிச் செய்தால் உங்கள் வாழ்க்கையில் வெற்றி நிச்சயமாக உங்களுக்கு வந்து சேரும் என்றும் கூறி, உங்கள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறக் காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

*(6.3.2003 அன்று நடைபெற்ற*
*பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பெருந்திட்ட*
*வளாக அடிக்கல் நாட்டு விழா,*
*புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா*
*மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள்*
*வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்*
*ஆற்றிய உரையிலிருந்து.)*

* * *

**தர்காக்களில் அன்னதானம்!**
**தமிழக முதல்வருக்கு**
**த.மா.மு.லீக் பாராட்டு**

தமிழக மாநில முஸ்லிம் பொதுக்குழு கூட்டம் லீக் கடந்த 8–6–2003 அன்று நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் கோயில்களில் அன்னதானம் வழங்குவது போல தர்காக்களில் அன்னதானத் திட்டம் தொடங்கியும், கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்களுக்கு மணிமண்டபமும், அமைத்து கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களுக்கு இஸ்லாமிய சமுதாயம் சார்பாக நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்கள்.



# தமிழக அமைச்சர்கள் பொறுப்பேற்றுள்ள துறைகள்

**செல்வி ஜெ ஜெயலலிதா** : பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி (IAS), இந்திய காவல் பணி (IPS), அனைத்து இந்திய சேவைப் பணிகள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள்துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலம்.
முதலமைச்சர்

2. **திரு. ஓ. பன்னீர் செல்வம்**
பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை & வருவாய்த்துறை அமைச்சர் : பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள், சிறுநீர்ப் பாசனம் உட்பட்ட நீர்ப் பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, மொலாசஸ், ஊழல் தடுப்பு மற்றும் சிறைத்துறை, வருவாய், மாவட்ட வருவாய் நிர்வாகம், துணை மாவட்ட ஆட்சியர்கள், பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், பூதானம், கிராமதானம் மற்றும் பாஸ்போர்ட்கள்.



3. **திரு. சி. பொன்னையன்**
நிதித்துறை அமைச்சர் : நிதி, திட்டம், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டம் இயற்றல், எடைகள் மற்றும் அளவுகள், கடன் வழங்கும் சட்டம் உட்பட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு.



4. **திரு. டி. ஜெயக்குமார்**
சட்டம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்துறை அமைச்சர் : சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பம், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி.



5. **திரு. பி.சி. ராமசாமி**
இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் : இந்து சமயம் மற்றும் அறநிலையம்



6. **திரு. எஸ். செம்மலை**
கல்வி அமைச்சர் : கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், தொல் பொருள், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.



7. **திரு. என். தளவாய் சுந்தரம்**
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மக்கள் நல்வாழ்வு, மருத்துவக்கல்வி மற்றும் குடும்ப நலம்.



8. **திரு. அ. அன்வர் ராஜா**
தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : தொழிலாளர் நலம், வேலைவாய்ப்புப் பயிற்சி, நகர்ப்புற மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.



9. **திரு. இரா. ஜீவானந்தம்**
வேளாண்மைத்துறை அமைச்சர் : வேளாண்மைத்துறை, வேளாண் பொறியியல், வேளாண் சேவை கூட்டுறவுகள், தோட்டக்கலை, கரும்பு மேல்வரி, கரும்பு சாகுபடி.



10. **திரு. பா. வளர்மதி**
சமூகநலத்துறை அமைச்சர் : பெண்கள் நலம் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலத்துறை, சத்துணவு, உடல் ஊனமுற்றோர் நல வாழ்வு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை இல்லங்கள், சீரமைப்பு நிர்வாகம்.





11. **திரு. சொ. கருப்பசாமி**
ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : ஆதிதிராவிடர் நலம், மலைவாழ் மக்கள், கொத்தடிமைகள் மற்றும் முன்னாள் படைவீரர்கள் நல்வாழ்வு.



12. **திரு. இரா. விஸ்வநாதன்**
போக்குவரத்துத்துறை அமைச்சர் : போக்குவரத்து, தேசிய மயமாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வாகனங்கள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.



13. **திரு. நயினார் நாகேந்திரன்**
தொழில்துறை அமைச்சர் : தொழில்கள், இரும்பு மற்றும் உருக்கு கட்டுபாடு, சுரங்கம் மற்றும் தாதுப்பொருட்கள், மின்னணுவியல்.



14. **திரு. கே. பாண்டுரங்கன்**
ஊரகத் தொழில் துறை அமைச்சர் : குடிசைத் தொழில்கள் உட்பட்ட ஊரகத் தொழில்கள், சிறுதொழில்கள், காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம்.



15. **திரு. செ.மா. வேலுசாமி**
வணிகவரித்துறை அமைச்சர் : வணிகவரிகள்



16. **திரு. ப. மோகன்**
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் : கூட்டுறவு, உணவு, குடிமைப் பொருள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.



17. **திரு. எம்.சி. சம்பத்**
உள்ளாட்சித்துறை அமைச்சர் : நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன், நகர்ப்புற மற்றும் ஊரக குடிநீர் விநியோகம்.



18. **திரு. பி.வி. தாமோதிரன்**
கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் : கால்நடைப் பராமரிப்பு.



19. **திரு. ஆர். வைத்திலிங்கம்**
வனம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் அமைச்சர் : வனங்கள் மற்றும் சுற்றுப்புறச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.



20. **திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் : வீட்டுவசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரத் திட்டம், குடிசை மாற்று, இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்புற மேம்பாடு, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.



21. **திரு. எஸ். இராமச்சந்திரன்**
பால்வளத்துறை அமைச்சர் : பால் மற்றும் பால் பொருள் மேம்பாடு.



22. **திரு. வி. சோமசுந்தரம்**
கைத்தறி மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் : கைத்தறி மற்றும் ஜவுளி.



23. திரு. எம். ராதாகிருஷ்ணன் : மீன்வளம்.
மீன்வளத்துறை அமைச்சர்



24. திரு. ஏ. மில்லர் : சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.
சுற்றுலாத்துறை அமைச்சர்



25. திரு. பி. அண்ணாவி : பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்.
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்



26. திரு. கே.பி. அன்பழகன் : செய்தி விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பம், ஒளிப்பதிவுச் சட்டம், செய்தித்தாள் காகிதக் கட்டுப்பாடு.
செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்



27. திரு. இரா.த. இன்பத்தமிழன் : இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு.
இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்





மேதகு ஆளுநர் மற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆகியோருடன்
3-6-2003 அன்று பதவியேற்றுக் கொண்ட புதிய அமைச்சர்கள்



# அடித்தளத்து மக்களை உயர்த்துவேண்டும் என்பதே என் விருப்பம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

**த**மிழகத்தின் பழம்பெருமை மிக்க நகரங்களில் ஒன்றாக விளங்கும் கரூர் நகரத்தில் நடைபெறும் கரூர் மாவட்ட அரசு விழாவில் கலந்து கொண்டு முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற இந்த நல்ல விழாவில் எனது அன்பிற்குரிய மக்களாகிய உங்களை எல்லாம் சந்திக்கின்ற இனிய வாய்ப்பு கிடைத்துள்ளது குறித்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய கரூர் முற்காலத்தில் வஞ்சி என்று அழைக்கப்பட்டது. சேர மன்னர்களின் தலைநகராக வஞ்சி நகரம் இருந்தது என்பதும் சங்க காலத்தில் உலக நாடுகளோடு தொடர்பு கொண்ட நகரமாக இந்த வஞ்சி மாநகரம் இருந்தது என்பதும் கரூர் நகரத்தின் புகழுக்கு இன்றும் கட்டியம் கூறுகின்றன.

சங்க காலத்தில் புழக்கத்தில் இருந்த ரோமானியக் காசுகளும் கிரேக்க நாட்டுக் காசுகளும் கரூரில் மட்டும் தான் மிகுதியாகக் கிடைத்திருக்கின்றன. கரூரின் அருகே உள்ள பள்ளிப்பாளையத்தில் வெனீஸ் (**VENICE**) நகரக் காசுகள் கிடைத்துள்ளன என்றும் நாம் அறிகிறோம்.

ஒரு காலத்தில் ஒரு வகையில் சிறப்புற்று இருக்கும் நகரம் அதே வகையில் இக்காலத்திலும் சிறப்பு பெற்றிருக்கும் என்று சொல்ல இயலாது. ஆனால் கரூர் நகரம் அன்றைக்கும் உலகளாவிய அளவில் வணிகத்தில் சிறப்பு பெற்றிருந்தது; இன்றைக்கும் உலகளாவிய வணிகத்தில் சிறப்பு பெற்றிருக்கிறது. இது சாதாரணமாக கிடைத்து விடுகின்ற சிறப்பல்ல. உலகளாவிய அளவில் வணிகத்தில் அன்றைக்கே சிறப்பு பெற்றிருந்ததைப் போலவே இன்றைக்கும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வெளிநாட்டு வர்த்தகத்தில் கரூர் மாவட்டம், சிறந்து விளங்குகின்றது.



## தாய் மொழி

தாய் மொழியைத் திறமையாகப் பயன்படுத்தத் தெரியாத எவனும் பிற மொழியைத் திறமையாகப் பயன்படுத்த கற்றுக் கொள்ளுதல் மிகவும் கடினம்.

**- பெர்னாட்ஷா**

கைத்தறித் துணிகள் உற்பத்தி மற்றும் கொசுவலைத் தொழில் இங்கு சிறப்பாக நடைபெறுவதும்; அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான், கானடா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், தென்கொரியா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்கு இவை ஏற்றுமதி செய்யப்படுவதும்; ஆண்டுதோறும் 1,000 கோடி ரூபாய் மதிப்பில், வெளிநாட்டு வர்த்தகம் நடைபெறுவதும்; கரூரில் உள்ள ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களும் இத்தொழில்களில் ஈடுபட்டு இருப்பதும்; தமிழகத்திற்குத் தனிப்பெருமை அளிக்கும் செய்திகளாகும். ஆசிய கண்டத்திலேயே, மிகப் பெரிய காகித ஆலையாகத் திகழும் "புகளூர்" **TNPL** காகித ஆலை, கரூர் மாவட்டத்தில் தான் உள்ளது என்பது மற்றொரு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி ஆகும்.

### கரூரின் சிறப்பு

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில், விடுதலைக்காகப் போராடிய வீரர்கள் பலரைத் தந்த ஊர் கரூர் என்பதும், இந்த நேரத்தில் குறிப்பிடத்தக்கது. அதைப் போல நீதிக் கட்சிக் காலத்தில், சான்றோர் பலரைத் தந்ததும், இதே கரூர் தான் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில், முதன்மையான இடத்தை வகித்த நகரங்களில், கரூர் நகரமும் ஒன்று என்பது மொழிப் போர் வரலாற்றில் கரூர் பெற்ற சிறப்பிடத்தைப் பறை சாற்றுகிறது.

தொழில் சிறப்பு பெற்ற ஈரோடு நகரோடும், தமிழகத்தின் மைய நகரமான திருச்சி சந்திப்போடும், இணைக்கப்பட்ட நகரமாகக் கரூர் இருப்பதால் இன்று மிகச் சிறந்த துணி உற்பத்தி நகரமாக வளர்ந்து, நூற்றுக்கணக்கான துணி உற்பத்தியாளர்களைக் கொண்டு ஏற்றுமதி மூலம் ஆண்டுக்கு 500 கோடி ரூபாய்க்கும் மேலாக அந்நியச் செலாவணி திரட்டும் நகரமாகவும் கரூர் வளர்ந்துள்ளது. இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த கரூர் மாவட்டம் 1995 ஆம் ஆண்டிலிருந்து, தனி மாவட்டமாக உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னால் அறிவிக்கப்பட்டது என்பதையும் மகிழ்வுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இத்தனை சிறப்புகளையும் பெற்றிருக்கும் கரூர் மாவட்டத்துக்கு நான் ஆர்வமுடன் இன்று வந்திருக்கிறேன். "ஆர்வமுடன்" என்று நான் சொன்னதன் காரணம் உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னிடம் நீங்கள் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கை தான் காரணம் !

இந்த மாவட்டத்திலே உள்ள ஒரே ஒரு நாடாளுமன்றத் தொகுதியிலும் நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் மூன்று சட்டமன்றத் தொகுதிகளிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பெரும்பான்மையான ஆதரவினைத் தந்து வெற்றி அளித்து உங்களுக்காக உழைக்கின்ற வாய்ப்பினை அளித்துள்ள அன்புள்ளம் கொண்ட மக்கள் நீங்கள்! உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஏற்கெனவே உள்ள இந்தச் சிறப்புகளுக்கு எல்லாம் சிகரம் வைத்தாற்போல் மேலும் பல சிறப்புகளை கரூர் மாவட்ட மக்களுக்கு வழங்குகின்ற வகையில், 308 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களையும், நலத் திட்ட உதவிகளையும் வழங்க இன்று நான் கரூர் நகருக்கு வந்திருக்கிறேன். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், நிதிநிலை சீர்குலைக்கப்பட்டு மிக நெருக்கடியான நிலையில் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றோம் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். இன்றும் நமது நிதிநிலை திருப்திகரமாக இல்லை. இருப்பினும், அதனைச் சரி செய்கின்ற முயற்சியில், தீவிரமாகக் கடந்த ஒன்றே முக்கால் ஆண்டு காலமாக, ஈடுபட்டு வருகிறது எங்கள் அரசு. இதைச் சொல்லுகின்ற போது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நடந்த ஒரு சம்பவம் தான் எனக்கு நினைவிற்கு வருகிறது.

இந்தியாவில் இருந்த சமஸ்தான மன்னர்களெல்லாம் டெல்லியில் ஒரு மாநாட்டில் கலந்து கொண்டார்களாம். அந்த மாநாட்டில் ஒவ்வொரு சமஸ்தான மன்னரும், "என்னிடம் இத்தனை கோடி பணம் இருக்கிறது" என்று பெருமையடித்துக் கொண்டிருந்தார்களாம். அந்த இடத்தில் இராமநாதபுரம் சமஸ்தான மன்னரான பாஸ்கர சேதுபதியும் இருந்தாராம். எல்லோரும் இத்தனை கோடி பணம் வைத்திருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்த போது, இராமநாதபுரம் அரசர் சொன்னாராம் "என்னுடைய சமஸ்தானத்தில் ஒரே ஒரு கோடி மட்டும் தான் உள்ளது. அது தான் தனுஷ்கோடி!" என்றாராம்.

அப்போது தமிழகத்தில் தனுஷ்கோடியாவது இருந்தது. இப்போதைய தமிழகத்தில் அந்த தனுஷ்கோடியும் இல்லை. தமிழகத்தின் நிதி நிலை முந்தைய தி.மு.க. ஆட்சியில் வரலாறு காணாத அளவிற்கு சீர்குலைவு அடைந்தது. அதன் பின்னர் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு கடந்த ஒன்றேமுக்கால் ஆண்டு காலமாக நிதி நிலைமையை சரி செய்ய போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன். இத்தகைய கடுமையான நிதி நெருக்கடி இருந்த போதிலும், கரூர் மாவட்ட மக்களுக்கு மகிழ்வு தரும் வகையில், இன்று 308 கோடி ரூபாய் மதிப்பில் திறப்பு விழாவிற்கு தயார் நிலையில் உள்ள திட்டங்கள்



அடிக்கல் நாட்டப்படும் நிலையில் உள்ள திட்டங்கள் துவக்கி வைக்கப்பட வேண்டிய புதிய திட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் என்று வகைப்படுத்தப்பட்டு, மொத்தம் 25,779 பணிகள் இங்கு இந்த மாவட்டத்து மக்கள் நலனுக்காக என்னால் அர்ப்பணிக்கப்படுகின்றன. இந்தப் பணிகளை இங்கு கூடியுள்ள அன்புள்ளம் கொண்ட மக்கள் அனைவரின் பயன்பாட்டிற்கும் வழங்கியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

### மக்கள் நல்வாழ்வுப் பணிகள்

கரூர் மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு மகுடம் வைத்தாற்போல் விளங்குவது, TNPL என்று அழைக்கப்படும், புகளூரில் உள்ள தமிழ்நாடு காகித ஆலை ஆகும். 1986–ஆம் ஆண்டு, இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால், புகளூர் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட போது, இதன் காகித உற்பத்தித் திறன், ஆண்டு ஒன்றுக்கு, 90 ஆயிரம் மெட்ரிக் டன் என்று இருந்தது. பின்னர், 1994–ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்த போது, இதன் உற்பத்தித் திறன் ஆண்டு ஒன்றுக்கு 1 லட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட்டது. இன்றைய தினம், இந்த சீரிய விழாவிலே புகளூர் காகித தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஆண்டு ஒன்றுக்கு 2 லட்சத்து 30 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்த்தும் பணி நிறைவு பெற்றுள்ளதை அடுத்து, இந்த விரிவாக்கத் திட்டத்தை இந்த இனிய விழாவில் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மக்கள் நல்வாழ்வு, மற்றும் குடும்ப நலத் துறை சார்பில், 3 கோடியே 61 லட்சம் ரூபாய் மதிப்பில், 30 துணை சுகாதார நிலையங்களும் – வேலாயுதம் பாளையத்தில் 32 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை மற்றும் அறுவை சிகிச்சை அரங்கமும் – 12 படுக்கைகள் கொண்ட வளர்ச்சியடையாத சிசுக்களுக்கான பாதுகாப்புக் கட்டடம் – X-ray மற்றும் E.C.G. பிரிவு கட்டடம் – கரூர் அரசு மருத்துவமனையில் பால்வினை நோய் ஆலோசனை மற்றும் சோதனைக் கூடம் – பள்ளப்பட்டி அரசு மருத்துவமனையில் பிரசவ அறை – மைலம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கைகள் கொண்ட புதிய வார்டு – அறுவை சிகிச்சை அரங்கு மற்றும் X-ray பிரிவுக் கட்டடம் – ஆகியவையும், இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பொதுப் பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் சார்பில், 63 லட்சம் ரூபாய் மதிப்பில் குளித்தலை ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டப் பிரிவு அலுவலகக் கட்டடம் – கரூர் திட்ட இல்லம் – மாயனூர் சுற்றுலா மேம்பாட்டுத் தலம் – செட்டிபாளையம் சுற்றுலாத் தலம் ஆகியவைகளும் கரூர் மக்கள் நலனுக்காக இன்றைய தினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

'நீரின்றி அமையாது உலகு' என்பது ஆன்றோர் வாக்கு. அந்த வகையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில், 4 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பில் 119 மின் விசைத் திட்டங்களையும் – 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பில், 200 சிறு மின்விசைத் திட்டங்களையும் – 17 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பில், கரூர், பரமத்தி மற்றும் அரவக்குறிச்சி ஒன்றியங்களைச் சார்ந்த, 564 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் முதல்கட்டப் பணிகளையும் – 2 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பில், குளித்தலை நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணியையும் – 5 கோடி ரூபாய் மதிப்பில், பள்ளப்பட்டி பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணியையும் – 1 கோடியே 94 லட்சம் ரூபாய் மதிப்பில், அரவக்குறிச்சி பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணியையும் – 1 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பில், புஞ்சைப்புகளூர் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணியையும் – இங்கே துவக்கி வைப்பதில் பூரிப்படைகிறேன். ஆக, கரூர் மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவைக்காக மட்டும், 33 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பில், 324 பணிகள் இன்றைய தினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மக்களின் அடிப்படைத் தேவைக்கு, இந்த அரசு, எந்த அளவு முன்னுரிமை கொடுத்து செயல்படுகிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

நெடுஞ்சாலைகள் மற்றும் கிராமப் பணிகள் துறை சார்பில், 2 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பில் கடவூரில் NABARD திட்டத்தின் கீழ், உயர்மட்டப் பாலம் – கோட்டமேடு மற்றும் சூரியனூரில், இரண்டு உயர்மட்டப் பாலங்கள் – NABARD திட்டப்பணிகள் ஆகியவை இங்கே திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற மக்களின் அடிப்படைத் தேவைகளையும், பொருளாதார வளர்ச்சியையும், முக்கிய நோக்கமாகக் கொண்டு பல்வேறு நலத்திட்டப் பணிகளைச் செயல்படுத்தி வருவது ஊரக வளர்ச்சித் துறையாகும். கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம், 11 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்டுள்ள 1,389 கட்டடங்கள் இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இப்பணிகள், கரூர் மாவட்ட கிராமப்புற மக்களின் கட்டுமான வசதி தேவைகளைப் பெருமளவிற்கு நிறைவு செய்யும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இவை மட்டுமின்றி, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் 3 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பில்

## ஒழுக்கம்

மற்றவர்களிடமிருந்து நாம் எதை எதிர்பார்க்கிறோமோ, மற்றவர் நமக்கு என்ன செய்யவேண்டும் என்று கருதுகிறோமோ, மற்றவர் நம்மிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று நினைக்கிறோமோ அப்படியே நாம் மற்றவர்களிடத்தில் நடந்துகொள்ள வேண்டும். அதுதான் ஒழுக்கம்.

**- தந்தை பெரியார்**



## நன்றி

**ந**ன்றி அறிவித்தல் ஒரு கடமையே. அதைச் செலுத்தியே ஆகவேண்டும். ஆனால் கேட்கப்பட வேண்டிய உரிமையல்ல.

*– ரூசோ*

முடிக்கப்பட்டுள்ள காவல்காரன்பட்டி துணை மின் நிலையத்தையும், 83 லட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ள லாலாபேட்டை துணை மின் நிலையத்தையும் – திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்போது, என் அன்புக்குரிய மக்களாகிய உங்களுக்கு ஒரு நிகழ்ச்சியை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

**மக்களுக்குக் காணிக்கை**

பேரறிஞர் அண்ணா அவர்கள், 1967–ஆம் ஆண்டில் தமிழகத்தின் முதலமைச்சராக பதவியேற்ற போது நடந்த நிகழ்ச்சி இது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பதவி ஏற்றவுடன், சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து சட்டமாக்கினார். இனிமேல் நடைபெறப் போகும் சுயமரியாதைத் திருமணங்கள் மட்டுமல்லாமல், ஏற்கெனவே நடைபெற்றிருக்கிற சுயமரியாதைத் திருமணங்கள் அனைத்தும், சட்டப்படி செல்லுபடியாகும் என்று அண்ணா அறிவித்தார். அப்போது, சட்டசபையில், காங்கிரஸ் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு கேள்வி கேட்டார். "இந்தத் தீர்மானம், நீங்கள் பெரியாருக்குத் தருகின்ற காணிக்கையோ" என்று கேட்டார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், "இந்த சட்டம் மாத்திரமல்ல, இந்த அமைச்சரவையே பெரியாருக்காக தரப்படுகின்ற காணிக்கை தான்" என்று சொன்னார்.

அதைப் போலவே, நாங்கள் பெறுகின்ற ஒவ்வொரு வெற்றியும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் காணிக்கை ஆக்கப்படுகின்ற வெற்றி.

பேரறிஞர் அண்ணா அவர்களுக்குக் காணிக்கை ஆக்கப்படுகின்ற வெற்றி.

இருவரும் தமது வாழ்நாள் முழுவதும் நேசித்த தமிழகப் பெருமக்களுக்குக் காணிக்கை ஆக்கப் படுகின்ற வெற்றி.

அவர்களின் அடியொற்றி உங்கள் அனைவரையும் நேசிக்கின்ற நான், நிறைவேற்றப்பட்ட திட்டங்களைத் திறந்து வைப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், மொத்தம் 33 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பில், 1629 பணிகளுக்கு இன்றைய தினம் அடிக்கற்கள் நாட்டியுள்ளதிலும் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

**அடிக்கற்கள் நாட்டுதல்**

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில், 5 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்படவுள்ள பஞ்சப்பட்டி துணை மின் நிலையத்திற்கும் – பொதுப்பணித் துறை சார்பில் 1 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படவுள்ள, சுற்றுலா மாளிகைக்கும் – 30 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படவுள்ள, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் குடியிருப்பு, மற்றும் முகாம் அலுவலகத்திற்கும் – போக்குவரத்துத் துறை சார்பில், 77 லட்சம் ரூபாய் மதிப்பில், கட்டப்படவுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலக கட்டடத்திற்கும் அடிக்கற்களை இன்று நான் நாட்டியுள்ளேன்.

2 கோடியே 29 லட்சம் ரூபாய் மதிப்பில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் அலுவலக கட்டடம் – 12 கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் – 25 சுயஉதவிக் குழுக்கள் கட்டடங்கள் – 40 ஒருங்கிணைந்த பெண்கள் சுகாதார வளாகக் கட்டடங்கள் – 215 அங்கன்வாடி கழிப்பறைகள் – 281 பள்ளிக் கழிப்பிடங்கள் – கட்டட மையம் மூலம் பள்ளிகளுக்கு, குடிநீர் வசதி செய்து தரும் பணிகள் ஆகியவற்றிற்கு இந்த சீரிய விழாவில் இன்று அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. இவை மட்டுமின்றி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்பில், 40 லட்சம் ரூபாய் மதிப்பில் தோகைமலை ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கைகள் கொண்ட கட்டடம் – அறுவை அரங்கம் X-ray பிரிவு கட்டடம் – 1 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பில் 17 துணை சுகாதார மையங்கள் ஆகியவற்றிற்கான அடிக்கற்களும், இன்று என்னால் நாட்டப்பட்டுள்ளன.

வருவாய்த்துறை சார்பில், 6 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பில் கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பல்துறை அடுக்கு மாடிக் கட்டடம் – மாவட்ட ஆட்சித் தலைவர் குடியிருப்பு மற்றும் முகாம் அலுவலகம் உள்ளிட்ட, பல்வேறு அலுவலகங்களுக்கான கட்டடங்களுக்கும் – பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில், 1 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பில், 4 மாணவர் விடுதிகள் கட்டவும் இன்று என்னால் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

கரூர் மக்களின், எதிர்காலக் குடிநீர்த் தேவையை கருத்தில் கொண்டு கரூர், க.பரமத்தி மற்றும் அரவக்குறிச்சி ஒன்றியங்களைச் சார்ந்த, 564 குடியிருப்புகளுக்கு, 4 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பில்,



குடிநீர் வழங்கும் பணிகளுக்கும் இன்று அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. இதனால் கரூர் மற்றும் க.பரமத்தி ஒன்றியங்களைச் சார்ந்த, 101 குடியிருப்புகளுக்கு உட்கட்டமைப்புகள் அமைத்து குடிநீர் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி வளர்ச்சியில், கரூர் மாவட்டம் தொடர்ந்து முன்னேற வேண்டுமென்ற உணர்வுடன், 2 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு பள்ளிக் கட்டடங்களுக்கும் – காவல்துறை சார்பில், 1 கோடியே 94 லட்சம் ரூபாய் மதிப்பில், 58 காவலர் குடியிருப்புகளுக்கும் – 6 பெண் காவலர் ஓய்வு அறைகள் கட்டுவதற்கும் இந்த இனிய விழாவில் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

பொதுப்பணித்துறை சார்பில், 2 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பில், நபார்டு திட்டத்தின் கீழ், 7 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் கட்டட வசதிகளுக்கும் இங்கே அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

இவை மட்டுமன்றி, கரூர் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் பயன் தருகின்ற வகையில், 57 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பில், தேசிய மானாவாரி நீர்வடி மேம்பாட்டுத் திட்டம் – ஒட்டு மொத்த சுகாதார திட்டப்பணிகள் – தேசிய பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் ஆகியவற்றை இந்த சீரிய விழாவில் துவக்கி வைத்துள்ளதிலும் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**நலத்திட்ட உதவிகள்**

இன்று கரூர் மாவட்ட மக்களின் ஏற்றமிகு வாழ்விற்கு உதவிடும் வகையில், 7 கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பில், 18 ஆயிரத்து 10 பயனாளிகளுக்கு, பல்வேறு துறைகளின் சார்பில் நலத் திட்ட உதவிகளை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அவற்றில் ஒரு சில நலத்திட்ட உதவிகளைப் பற்றி உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நபார்டு வங்கி மூலம், 50 லட்சம் ரூபாய் மதிப்பில் 1,650 பயனாளிகள் பயன் அடையும் வகையில் கடன் உதவிகளையும் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைச் சார்பில், 1 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பில், 83 பயனாளிகளுக்கு பொருளாதார மற்றும் ரொக்கக் கடன்களும் இன்று வழங்கப்படுகின்றன.

தாட்கோ சார்பில், 7 லட்சம் ரூபாய் மதிப்பில், தனி நபர் தொழில் தொடங்க 50 பயனாளிகளுக்குக் கடனுதவியும் – ஆதி திராவிடர் நலத் துறை சார்பில், 16 லட்சம் ரூபாய் மதிப்பில், 2,618 பயனாளிகளுக்கு, பெண் குழந்தைகள் கல்வி ஊக்கத் தொகை – வருவாய்த் துறை சார்பில், 41 லட்சம் ரூபாய் மதிப்பில், 831 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் – 1 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பில், 456 பயனாளிகளுக்கு முதியோர் ஓய்வூதியம் ஆகியவை இன்று இந்த இனிய விழாவில் வழங்கப்படுகின்றன.

சிறுதொழில் துறை சார்பில் "சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்" கீழ், 1 கோடியே 9 லட்சம் ரூபாய் மதிப்பில், 281 பயனாளிகளுக்கு கடனுதவியும் – சமூக நலத்துறை சார்பில், 237 பயனாளிகளுக்கு, 29 லட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு நலத் திட்ட உதவிகளும் இங்கு வழங்கப்படுகின்றன. மேலும், 201 வளர்கல்வி மையங்களுக்கு, 28 லட்சம் ரூபாய் மதிப்பில் மேஜை, பீரோ, நூல்கள், சைக்கிள்கள் போன்ற உபகரணங்களும் இந்த விழாவில் வழங்கப்படுகின்றன.

இந்த நலத்திட்ட உதவிகள் அனைத்தையும் பயனாளிகள் அனைவருக்கும் நானே வழங்கிட வேண்டும் என்பது தான் எனது விருப்பம். ஆனால், அதற்கு போதுமான நேரமில்லாத காரணத்தால் இந்த மேடையில் 15 பயனாளிகளுக்கு மட்டும் நலத்திட்ட உதவிகளை நானே என் கரங்களால் இப்போது வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும், இங்கேயே, இப்போதே வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு உதவிகளைப் பெற்றுக் கொள்கின்ற பயனாளிகள் அனைவருக்கும், ஒன்றை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எந்தத் தொழிலை நீங்கள் செய்தாலும் அதை நீங்கள் செம்மையாகச் செய்யவேண்டும் என்றும் அப்படிச் செய்தால் வாழ்க்கையில் வெற்றி நிச்சயமாக உங்களை வந்து அடையும் என்றும் கூறி உங்கள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

அமெரிக்க அதிபராக இருந்த ஆப்ரகாம் லிங்கன் அமெரிக்க நாட்டின் அடிமை முறையை ஒழிப்பதற்கு கடுமையாகப் போராடி வந்தார்.

பல போராட்டங்களுக்குப் பிறகு, நீக்ரோக்களை அடிமை முறையிலிருந்து விடுவிக்கும் பிரகடனத்தில், அவர் கையெழுத்துப் போடும் நேரம் வந்தது. அப்போது ஆப்ரகாம் லிங்கனின் செயலாளர் பிரகடனத்தின் கோப்பினையும், பேனாவையும் அவர் கையில் கொடுத்தார். லிங்கன் வாங்கினார். ஆனால் கையெழுத்துப் போடாமல் பேனாவை மேஜை மீது வைத்துவிட்டார்.

இவ்வாறு இரண்டு மூன்று முறை பேனாவைச் செயலாளர் திரும்ப திரும்பக் கொடுத்த போதும், லிங்கன் அதனை வாங்கி மேஜை மீது வைத்துவிட்டார்.

ஆபிரகாம் லிங்கனின் செயலாளருக்குச் சந்தேகம்! அடிமை முறையை ஒழிப்பதற்கு இவ்வளவு காலம் போராடியவர் கடைசி நேரத்தில் தயங்குகிறாரே, ஏன்? கையெழுத்துப் போட விருப்பமில்லையா? அல்லது எதையாவது நினைத்துப் பயப்படுகிறாரா? இவ்வாறு

பலவாறாக அந்தச் செயலாளர் சிந்தித்துக் கொண்டிருந்த போது ஆப்ரகாம் லிங்கன் சொன்னாராம்.

“இன்று காலை நூற்றுக்கணக்கானோர் என்னைப் பாராட்ட வந்தார்கள். அவ்வாறு வந்தவர்களோடு தொடர்ந்து ங்கைகுலுக்கியதால் என் கை வலியெடுக்கிறது. அப்படி வலிப்பது மட்டுமல்லாமல், தொடர்ந்து கை குலுக்கிய காரணத்தால் எனது வலது கை, நடுங்கிக் கொண்டு இருக்கிறது.

“இப்படி நடுங்கும் கையால், நான் கையெழுத்து போட்டால் என் கையெழுத்து தடுமாறிப் போய்விடலாம். அதைப் பார்ப்பவர்கள், அரைகுறை மனதோடு நான் கையெழுத்து போட்டதாக நினைத்துவிடலாம் அல்லவா! நான் போடும் கையெழுத்து, உறுதியாக இருக்க வேண்டும். அதற்காகத் தான், கை நடுக்கம் தீரும் வரை காத்திருக்கிறேன்” என்று ஆப்ரகாம் லிங்கன் சொன்னாராம்.

ஆட்சிப் பொறுப்பில், உயர்ந்த பதவியில் இருப்பவர்களுக்கு இப்படிப்பட்ட சிக்கலான சந்தர்ப்பங்கள் வரத் தான் செய்யும். அப்போது உறுதியாகச் செயல்பட வேண்டும். கையெழுத்தில் கூட அவர்களது தயக்கம் வெளிப்பட்டு விடக் கூடாது. அவர்களுடைய உள்ளத்தின் உறுதிப்பாடு கையெழுத்திலும் தெரிய வேண்டும்.

உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், மக்களுக்கு நன்மை தரும் திட்டங்களைப் பற்றி தீர்க்கமாகச் சிந்திக்கிறேன்.

“ஏற்றது ஒரு கருத்தை எனது உள்ளம் என்றால்
எவர் வரினும் நில்லேன் அஞ்சேன்”

– இது தான் உங்கள் அன்புச் சகோதரியின் கொள்கை.

அவ்வாறு சிந்தித்து முடிவெடுத்துவிட்ட பின்பு, எதற்காகவும் நான் தயங்குவதில்லை; யாருக்காகவும் நான் அஞ்சுவதில்லை என்பதை, எனது அன்புக்குரிய கரூர் மாவட்டத்து மக்களின் வாயிலாக, தமிழக மக்கள் அனைவருக்கும் நான் கூறிக் கொள்கிறேன்.

இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறக், காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக, மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*–7.3.2003 அன்று கரூரில் நடைபெற்ற*
*மாவட்ட அரசு விழாவில்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை.*

## பட்டுப் பூமாலை!

*சேலம் மகளிர் சுயஉதவிக்குழுக்களின் சாதனை*

அகில இந்திய அளவிலான கைவினைப் பொருட்களின் கண்காட்சி அண்மையில் ஹரியானாவில் நடந்தது. இதில் அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது, ஒரு வண்ணமிகு மாலை. கண்காட்சியில் அந்த மாலையைப் பாராட்டாதவர் யாருமில்லை. அது சாதாரண பூமாலை அல்ல. குப்பைக்குப் போயிருக்க வேண்டிய பட்டுப் பூச்சி கூடுகளிலிருந்து உருவான மாலை அது!

‘பெவிசோ’ என்ற தொண்டு நிறுவனத்தின் அங்காடியில் இருந்த இம் மாலையைப் பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சியளித்து, உருவாக்கினார்களாம். இப்படிப்பட்ட மாலைகள் மட்டுமில்லாமல் மலர் கொத்து, பொக்கே வாழ்த்து அட்டைகள், சுவர் அலங்காரங்கள் என்று பலவிதமான பொருட்கள் இங்கு உருவாக்கப்படுகின்றன. (விலை மூன்று ரூபாயில் தொடங்கி ஐந்நூறு ரூபாய் வரை)

பெவிசோ அமைப்பைச் சேர்ந்த மதிவாணன் சொல்கிறார்: “தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் பகுதிகளில் பட்டு வளர்ப்பு மிகப் பிரபலம். பட்டு வளர்ப்பில் ஈடுபடுகிறவர்கள், பட்டுப் பூச்சிகள், கூடு நிலையில் இருக்கிறபோது விற்பனைக்குக் கொண்டு வருகிறார்கள். அந்த மூட்டைகளிலிருந்து சரக்கை தரம் பார்த்து, விலை நிர்ணயம் செய்வதற்காக, ஒரு கையளவு பட்டுப் பூச்சிக் கூடுகள் எடுக்கப்படும். அவற்றின் முனைவெட்டப்பட்டு, தரம் பரிசோதிக்கப்படும். இவற்றிலிருந்து பட்டு எடுக்க முடியாது என்பதால், குப்பைக்குத்தான் போகும்.

ஆனால், நாங்கள் பட்டு வளர்ப்புத் துறையிலிருந்து அத்தகைய வீணான கூடுகளை வாங்கி வந்து சுத்தப்படுத்தி, கைவினைப் பொருட்கள் செய்ய பயன்படுத்துகிறோம். இதற்காகப் பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்குப் சிறப்புப் பயிற்சி அளித்திருக்கிறோம். அதன் பயனாக இன்று சுமார் நூறு பெண்கள், மாதம் இரண்டாயிரம் ரூபாய் வரை வருமானம் ஈட்டுகிறார்கள்” என்கிறார்.





# சென்னை மாநகருக்கு தடையில்லா குடிநீர்!

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிக்கை
(4–6–2003)

2002–ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவ மழை பொய்த்ததால் சென்னை மாநகரில் முக்கியமான நீர்ப்பிடிப்பு பகுதிகளில் நீர்வரத்து குறைந்ததாலும், ஆந்திர பிரதேசத்தில் பருவ மழை பொய்த்ததால் கிருஷ்ணா நதி நீர் சிறிதும் நமக்குக் கிடைக்காததாலும், சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் ரெட் ஹில்ஸ், சோழவரம், பூண்டி ஆகிய மூன்று ஏரிகளிலும் கடந்த வடகிழக்குப் பருவ மழைக் காலம் முடிந்துவிட்ட நிலையிலும் போதுமான அளவு நீர் கிடைக்கவே இல்லை. இதன் விளைவாக 1.7.2003–ஆம் நாள் முதற்கொண்டு ஒரு நாள் விட்டு ஒரு நாள் 225 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும். நீர் வழங்கப்படாத நாட்களில், லாரிகள் மூலம் நாள் ஒன்றுக்கு 25 மில்லியன் லிட்டர் குடிநீர் 31.10.2003 வரை வழங்கப்படும்.

கடைக்கோடி பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்ய, லாரிகள் மூலம் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2003 ஜனவரி மாதத்தில் நாள் ஒன்றுக்கு 1200 நடைகள் வரைக்கும் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது. இது இப்போது நாள் ஒன்றுக்கு 3000 நடைகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 1.7.2003 முதல் இது நாள் ஒன்றுக்கு 5000 நடைகளாக அதிகரிக்கப்படும்.

சென்னை மாநகருக்கு, பாதுகாப்பான அளவு, நீரை எடுத்து வழங்கும் அளவுக்கு சென்னையைச் சுற்றியுள்ள கிணறுகளில் போதுமான நிலத்தடி நீர் உள்ளது. எனவே, சென்னையைச் சுற்றி உள்ள கிணறுகளிலிருந்து எடுக்கப்படும் நீரின் அளவை அதிகப்படுத்தி, 15.7.2003–லிருந்து நாள் ஒன்றுக்கு 100 மில்லியன்லிட்டர் நீர் வழங்க நான் முடிவு செய்துள்ளேன். இந்த அளவு நீரை, அதாவது, நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் நீர் தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, கூடுதலாக மேலும் 75 தனியார் வேளாண்மைக் கிணறுகள் வாடகைக்கு எடுத்துக் கொள்ளப் படும். ரூ.12.60 கோடி செலவில் கிணறுகளுக்கு குழாய் வசதிகளும், அடிப்படை வசதிகளில் மேம்பாடும் செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் 1.7.2003 முதற் கொண்டு நாள் ஒன்றுக்கு சுமார் ரூ.6.30 இலட்சம் செலவில் (2003 அக்டோபர் வரை ரூ.9.7 கோடி) பூவிருந்தவல்லி – போரூர் பகுதியிலிருந்து நாள் ஒன்றுக்கு 2.5 மில்லியன் லிட்டர் தண்ணீரும், செங்கற் பட்டிற்கு அருகிலுள்ள மாமண்டூர் மற்றும் பாலூர், ஆத்தூரிலிருந்து நாள் ஒன்றுக்கு 2.5 மில்லியன் தண்ணீரும் ஆக மொத்தம் நாள் ஒன்றுக்கு 5 மில்லியன் லிட்டர் தண்ணீர் சுமார் 500 நடைகள் லாரிகள் மூலமாகக் கொண்டு வரப்படும். இதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



15.7.2003–ஆம் நாளுக்குள்ளாக 600 புதிய உருக்காலான / HDPE தண்ணீர்த் தொட்டிகள் வாங்கப்பட்டு, கடைக்கோடிப் பகுதிகளில் நிறுவப்படும். இதனால், அதற்குப் பின்னரும் கூட அப்பகுதிகளுக்குத் தொடர்ந்து தண்ணீர் வழங்க இயலும். (ஏற்கெனவே தண்ணீர்த் தொட்டிகள் இல்லாத பகுதிகளில் 300 தொட்டிகள் புதியதாக அமைக்கப்படும். ஏற்கெனவே அமைக்கப்பட்டு கசிவு ஏற்பட்டுள்ள 300 தொட்டிகளுக்குப் பதிலாக புதிதாக 300 தொட்டிகள் அமைக்கப்படும்)

15.7.2003–ஆம் நாளுக்குள் தேவையான பகுதிகளில், சுமார் 500 புதிய இந்தியா மார்க் II குழாய்கள் நிறுவப்படும். குடிநீர்த் தேவை மற்றும் நிலத்தடி நீர் இருப்பு நிலையைப் பொறுத்து அவசியமான இடங்களில், கூடுதலாக இந்தியா மார்க் II குழாய்கள் நிறுவப்படும்.

சென்னை மாநகருக்கு, தொடர்ந்து போதுமான அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, 2003–ஆம் ஆண்டு அக்டோபர் வரை எடுக்கப்பட வேண்டிய அவசரப் பணிகளுக்காக என்னுடைய அரசு ரூ.40 கோடி ஒதுக்கியுள்ளது.

மிகவும் மோசமான பருவ நிலை நிலவி வரும் போதும் கூட, 2003 அக்டோபரில் வடகிழக்குப் பருவமழை தொடங்கும் வரை, சென்னை மாநகருக்குத் தேவைப்படும் குறைந்தபட்சக் குடிநீர் தொடர்ந்து வழங்கப்படுவதை இந்த நடவடிக்கைகள் உறுதி செய்யும். ●

## திருவண்ணாமலை மாவட்டம்

# வாழ்க்கை தரம் உயர சுற்றுலாவுடன் கூடிய காளான் வளர்ப்பு பயிற்சி

மலைகள் சூழ்ந்த மாவட்டம் – கிரிவலத்திற்கு பெயர் பெற்ற மாவட்டம் – சிவனே மலையாக அவதரித்துள்ளார் என்று அனைத்து மக்களாலும் நினைக்கப்பெற்ற – நினைத்தாலே முக்தி என்று அனைத்து உன்னாமலை அம்மா என்றும் அபீதா குஜாம்பாள் என்றும் அழைக்கப்படுபவரின் அடியார்களாலும் புகழும் மாவட்டம் திருவண்ணாமலை மாவட்டம். வறண்ட மாவட்டத்தை பசுமை மாவட்டமாக்க – தோட்டக்கலை மூலமாக காளான் வளர்ப்பு பயிற்சி, பெண் விவசாயிகளுக்கு சுய தொழில் ஆரம்பிக்க அளிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் தங்குதடையின்றி மிகவும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. குறிப்பாக வறுமையை போக்க வேண்டும் என்றும், விவசாயத்தை பெருக்க வேண்டும் என்றும், செயல்படுகின்ற திட்டங்கள் அனைத்தும் பாமர மக்களை சென்று அடைய வேண்டும் என்று மிகவும் கவனமாக திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மத்திய சார்புத் திட்டத்தின் கீழ் காளான் வளர்ப்பு பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று 2002–2003ஆம் ஆண்டின் திட்ட செயலாக்கத்தினை தோட்டக்கலை செய்து வருகிறது. இம்மாவட்டத்தில் பெண் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து அவர்கள் வாழ்க்கை தரம் உயர்த்துவதற்கு 20 பெண் விவசாயிகளுக்கு சுற்றுலாவுடன் கூடிய பயிற்சி அளிக்கும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களுக்கு ஒருவார காலம் சுற்றுலாவுடன் கூடிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



ஒரு வார காலம திருவண்ணாமலை – வேலூர் – ஈரோடு – கோவை – உதகை – கிருஷ்ணகிரி – ஒசூர் ஆகிய மாவட்டங்களுக்கு நேரடியாக சென்று அங்குள்ள வேளாண்மை அலுவலர் டான்வா மற்றும் மேம்பாடு திட்ட அலுவலர் – திருவண்ணாமலையில் தொழில்முனைவோர் பயிற்சி. வேலூரில் – தனியார் காளான் உற்பத்தி நிலையத்தில் பயிற்சி. கோவையில் – தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் காளான் உற்பத்தி கூடத்தில் பயிற்சி, உதகையில் – பால் காளான், சிப்பிக் காளான் மற்றும் முத்துக் காளான்கள் உற்பத்தியை நேரில் பார்வையிட்டு அதன்படி பயிற்சியை செவ்வன செய்தல். பையூரி மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் காளான் உற்பத்தியை கண்டறிதல், ஒசூரில் தனியார் உற்பத்தி நிலையங்களை பார்வையிட்டு வருதல் போன்ற சுற்றுலாவுடன் கூடிய பயிற்சி வழங்கப்பட்டது.

இந்த மாவட்டத்தில் காளான் வளர்ப்புத் திட்டத்தை விவசாய மக்களிடம் அறிமுகப்படுத்தி அவற்றை எப்படி செயல்படுத்த வேண்டும், இத்திட்டத்தை தோட்டக்கலை அறிமுகப்படுத்தி மிகவும் சிறப்பாக இத்திட்டம் அமைய வேண்டும் என்பதற்காக, பெண் விவசாயிகளுக்கு பயிற்சியுடன் கூடிய சுற்றுலாவினை தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயி களுக்கு செயல்முறையிலும், நடைமுறையிலும் எப்படி செயல்பட வேண்டும் என்ற மிகவும் உபயோகமான பயிற்சியை வழங்கியுள்ளார்கள். புதிய தொழில் முனையவும் பெண்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

**– எம். கலைமணி,**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*திருவண்ணாமலை.*



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 400 திருக்குறள்களை மனப்பாடமாக ஒப்பிக்கும் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று வயது சிறுமி செல்வி அட்சயாவின் கல்விச் செலவுக்காக, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5 இலட்சத்திற்கான நிதியுதவியை தலைமைச் செயலகத்தில் 4–6–2003 அன்று நேரில் வழங்கினார்கள்.





# அன்று நான் இட்ட சிறிய விதை, இன்று ஆலமரமாய் வளர்ந்துள்ளது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 8–3–2003 அன்று, திருவாரூர் மாவட்ட அரசு விழாவில் ஆற்றிய உரை.

“தமிழகத்தின் பன்னிரண்டு கடலோர மாவட்டங்களில் ஒன்றாகிய திருவாரூர் மாவட்டத்திற்கு வந்து தெய்வத் திருநகராம் திருவாரூரில் என் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய உங்களை எல்லாம் கண்டு உங்களிடம் என்னுடைய எண்ணங்கள் சிலவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கு இன்று அருமையான வாய்ப்பு கிடைத்தது குறித்து, நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான் செல்லுகின்ற போது, பல கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை, நலத் திட்ட உதவிகளை அந்தந்த மாவட்டத்து மக்களுக்கு வழங்குவதற்காகக் கொண்டு செல்கிறேன். அந்த வகையில் இன்று, 84 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் திட்டங்களையும், நலத்திட்ட உதவிகளையும் உங்களுக்காகக் கொண்டு வந்திருக்கிறேன்.

திருவாரூர் ஒரு தெய்வத் திருநகரம். இறைவன் தியாகராஜனாக எழுந்தருளிய திருத்தலம்.

செந்நெல்லும், செங்கரும்பும், கனியும், கிழங்கும், தானியங்களும், கணக்கின்றி விளையும் வளம் நிறைந்த ஊர் திருவாரூர்.

இயற்கைச் சிறப்பு மட்டுமல்ல, நீதிச் சிறப்பும் மிக்க ஊர் திருவாரூர். தவறு செய்தவன் தன் மகனே ஆனாலும் தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும் என்று நீதியை நிலை நாட்டிய மனு நீதிச் சோழனின்



தலைநகரமாக விளங்கிய நகரம் திருவாரூர் என்பதை அறியும் போது, நாம் பெருமிதம் கொள்கிறோம்.

"தன் அரும் பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்" என்று சேர நாட்டு இளங்கோ அடிகளாலே பாடப்பட்ட சோழ நாட்டு மன்னனின் சொந்த ஊர் இந்த ஊர் என்பது, எவ்வளவு சிறப்புக்குரியது!

இந்த மாவட்டம் பூகோள ரீதியாக அனைத்து வட்டாரத் தலைமை இடங்களுடன் உடனுக்குடன் தொடர்பு கொள்ளக் கூடிய வாய்ப்புள்ள மாவட்டம் என்றும், 2,293 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் சுமார் 12 இலட்சம் மக்கள் வாழ்கின்ற மாவட்டம் என்றும் அறிகிறேன்.

சைவ சமயத்தின் பெரிய கோயில் என்று அழைக்கப்படுவதும் சைவ சமயத்தின் தலைமைப் பீடமாகப் போற்றப்படுவதும் ஆகிய திருவாரூர் பஞ்சபூத தலங்களுள், 'பிருத்வி', அதாவது 'மண்' தத்துவமாகும். திருவாரூர், சர்வதோஷ பரிகாரத் தலம்! பிறந்தாலும், பெயர் சொன்னாலும் முக்தி தரும் தலம்! மூலாதாரத் தலம்! இது சப்த விடங்கத் தலங்களுள் முதன்மையானது!

**ஆழித்தேர்**

திருவாரூர் கோயில் மட்டுமல்ல திருவாரூர்த் தேரும் சிறப்புடையது.

தமிழகத்துத் தேர்களில் மிகப் பெரிய தேர் திருவாரூர்த் தேர். அலங்கரிக்கப்படுவதற்கு முன், 30 அடி உயரமும், அலங்கரிக்கப்பட்ட பின் 96 அடி உயரமும், 300 டன் எடையும் கொண்ட திருவாரூர்த் தேர், 6000 ஆட்கள், இரண்டு டிராக்டர்கள் மற்றும் புல்டோசர்கள் கொண்டு இயக்கப்படுகிறது. 'திருவாரூர் தேரழகு' என்பது பழமொழி! இந்தத் தேர் திரும்பும் அழகைக் காண்பதே அழகு என்பது குறிப்பிடத்தக்கது.

'ஆழித் தேர் வித்தகனை யான் கண்டது ஆரூரே'

என அப்பர் பெருமானே வியந்து பாடியுள்ளார்.

இதைப் போலவே மன்னார்குடியில் 11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சிறப்புடைய கோயில் அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோயில் ஆகும்.

நீடாமங்கலம் வட்டம், திருராமேஸ்வரம் என்ற ஊரில் உள்ள அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோவிலும் 11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது என்று வரலாறு கூறுகிறது.

இம் மாவட்டத்தில் கூத்தனூரில், கலைவாணி மகா சரஸ்வதியாக, தனிக்கோயில் கொண்டு இருக்கிறாள். இந்தக் கோயில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தரால் கட்டப்பட்டதாக அறிகிறோம்.

இதைப் போலவே முத்துப்பேட்டை தர்கா என்று அழைக்கப்படும், ஜாம்பவான் ஓடை தர்கா புகழ் பெற்ற தர்காவாக திருவாரூர் மாவட்டத்தில் ஒளி வீசித் திகழ்கிறது, என்பதும் குறிப்பிடத் தக்கது.



புண்ணியத் தலங்களைப் போலவே சுற்றுலாத் தலங்களும் இங்கு சிறப்புடன் விளங்குகின்றன. அலையாத்திக் காடுகள், உதயமார்த்தாண்டபுரம் சரணாலயம் ஆகியவை சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டுமல்லாமல் ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன் அளிக்கக் கூடிய இடங்களாக விளங்குகின்றன.

ஒரு நாட்டின் சிறப்பு அதன் இயற்கைச் சிறப்பில் மட்டுமில்லை. அங்கு வாழ்ந்த சான்றோர் சிறப்பிலும் அது அடங்கி இருக்கிறது.

கர்நாடக சங்கீதத்தை உலகளவில் பெருமையடையச் செய்த தியாகராஜர், முத்துஸ்வாமி தீட்சிதர் மற்றும் சியாமா சாஸ்திரிகள் ஆகிய மும்மூர்த்திகள் இம் மாவட்டத்தில் வாழ்ந்தவர்கள்.

தங்கத் தமிழ் வளர்த்த தமிழ் முனிவராகிய தமிழ்த் தென்றல் திரு.வி.க. பிறந்த திருத்தலமும் திருவாரூர் தான். திரு.வி.க. என்பதில் உள்ள திரு, திருவாரூரைக் குறிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி பல துறைச் சிறப்புகளைப் பெற்ற திருவாரூர் தற்போது உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியிலும் புதிய வளர்ச்சியைப் பெற்று வருகின்றது.

இந்த மாவட்டம் பொதுவாக வேளாண்மை மாவட்டமாக விளங்கி வருகிறது. விவசாயத் தொழிலை நம்பியே இம்மாவட்டம் செயல்பட்டு வருகிறது. இம்மாவட்ட விளைநிலங்களின் பரப்பு 1,55,385 எக்டேர் ஆகும். அதாவது, சுமார் 3,77,586 ஏக்கர் ஆகும். இம் மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவில், அது 74 சதவிகிதம் ஆகும் என்னும் செய்தி எந்த அளவுக்கு இந்த மாவட்டம் விவசாயத்தையே நம்பி இருக்கிறது என்பதை நமக்கு விளக்குகிறது. மேலும், இம்மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு நல்ல வாய்ப்புக்கள் உள்ளன. கயிறு தொழிற்சாலை, நவீன அரிசி ஆலைகள், பெட்ரோலியம் மற்றும் ரசாயனத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள், உப்புத் தொழிற் சாலைகள், இறால் பண்ணைகள் ஆகியன இம்மாவட்டத்தில் ஏற்படுத்த நல்ல வாய்ப்புகள் உள்ளன.

***"எனது இல்லத்தில், நானே மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்தி இருக்கிறேன். அது போல, நீங்கள் அனைவரும் உங்கள் இல்லங்களிலும், பணிபுரியும் இடங்களிலும், மழை நீர் சேகரிப்பை மேற்கொள்ள வேண்டும்"***

ஆகவே, திருவாரூர் மாவட்டம் இது போன்ற அனைத்து அம்சங்களிலும் சிறந்த வளர்ச்சியைப் பெற வேண்டும் என்று எங்களது அரசு கருதி உள்ளது. அந்த வகையில் இந்த மாவட்டத்தில் ஒட்டு மொத்த வளர்ச்சியை விரைந்து ஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு இன்றைய தினம் மொத்தம் 84 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்புடைய திட்டங்களோடு திருவாரூர் மாவட்டத்துக்கு வந்திருக்கின்றேன் என்பதைப் பெருமையோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**மக்கள் முன்னேற்றம்**

இன்று, மார்ச் 8ஆம் தேதி. உலகம் முழுவதும் இந்த நாள் 'மகளிர் தினமாக' கொண்டாடப்படுகிறது. இந்த நன்னாளில் மகளிர் மேம்பாடு, மகளிர் நலன் மற்றும் சமுதாய முன்னேற்றத்தில் மகளிர் பங்கு ஆகியவற்றைப் பற்றி உங்களுடன் ஒரு சில கருத்துக்களை நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

"மகளிர் சுய உதவிக் குழுக்கள்" என்ற மாபெரும் சமூகப் பொருளாதார இயக்கத்தை தமிழ்நாட்டில், 1992 – ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த போது, நான் தான் ஆரம்பித்து வைத்தேன். இதற்கு முன், பெண்கள் முன்னேற்றத்திற்கான அமைப்புகள் பல இருந்து இருக்கலாம். அமைப்புகள் என்கின்ற போதே நிர்வாக தாமதம், போதிய அளவு விரைவாகச் செயல்படாமை, ஆகிய குறைகள் இருக்கும். இதனால், மகளிர் மத்தியில் மறுமலர்ச்சியையோ, புதிய எழுச்சியையோ, அவற்றால் உண்டாக்க முடியவில்லை. ஆகவே, எங்கோ ஒரு இடத்தில் என்றோ ஒரு நாள் என்றில்லாமல் மாநிலம் தழுவிய இயக்கமாக மகளிரின் செயல்பாடுகள், அவற்றின் மூலமாக மகளிர் முன்னேற்றம் பெருமளவில் ஏற்பட வேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன். அதே போல், எந்தவொரு புரட்சித் திட்டமும் யாரோ ஒருவர் மூளையில் ஒரு சிந்தனையாக உதித்தது தான்! அன்று நான் இட்ட சிறிய விதை, இன்று ஆலமரமாய் வளர்ந்துள்ளது. தற்போது, தமிழ்நாட்டில், 1 இலட்சத்து 18 ஆயிரத்து 413 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் மொத்தம், 20 லட்சத்து 25 ஆயிரத்து 795 மகளிர் இணைந்து செயல்பட்டு வருகின்றனர். இவர்கள் அனைவரும் சேமித்து வைத்துள்ள தொகை மொத்தம் 266 கோடியே 22 இலட்சம் ரூபாய் ஆகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**25-4-2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் சமூகநலத் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் இடையில் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள் :**

*"தமிழ் மொழியில், அரசமைப்புச் சட்டத்திலேயே பெண்களுக்கு ஒரு பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. முதல்வராக பதவிப் பிரமாணம் எடுக்கும்போது, இந்தியக் குடிமகன் ஆகிய நான் இப்பதவியை ஏற்கிறேன் என்றுதான் கூறுகிறோம். குடிமகள் ஆகிய நான் என்று கூறி பதவி ஏற்கக் கூடாதா என்று போராடி இருக்கிறேன். குடிமகன் என்று கூறித்தான் பதவி ஏற்க வேண்டும் என்பதே பெண் குலத்துக்கே இழைக்கப்பட்ட அநீதி. குடிமகள் என்ற சொல் புழக்கத்துக்கு வருவதற்காகப் பெரிய இயக்கமே நடத்தத் தீர்மானித்திருக்கிறேன்"*

மேற்கண்ட அறிவிப்பின் தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனத்துடன் பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் முகமாக **அரசாணை நிலை எண்.62 நாள் : 28-4-2003**இன்படி கீழ்க்கண்ட ஆணை வெளியிடப்பட்டது.

*"உறுதிமொழி ஏற்றல், அரசு ஆணைகள், கடிதங்கள், அறிக்கைகள், அரசு அலுவலகங்களின் செயல்பாடுகள், பள்ளி, கல்லூரி பாடநூல்கள், தமிழ்நாடு அரசின் வெளியீடுகள், அகராதிகள், படிவங்கள் ஆகிய அனைத்து நேர்வுகளிலும் 'Citizen' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக, தமிழில் "குடிமகன்/குடிமகள்" என்றே இனி பயன்படுத்த வேண்டும். அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழிச் சட்டத்தைத் தீவிரமாக நிறைவேற்றுவதற்கு ஏதுவாக ஆங்கிலத்திற்கு இணையான புதிய தமிழ்ச் சொற்களை அவ்வப்போது உருவாக்கித் தருவதற்காக இந்த அரசு அமைத்துள்ள "சொல்வங்கி" அமைப்புவழி வெளிவரும் சொற்களையும் அரசு அலுவலகங்கள் தவறாமல் பயன்படுத்த வேண்டும் என்றும், மேற்கூறியவாறு பின்பற்றத் தவறுகிறவர்கள் அரசாணையை மீறிய குற்றத்திற்கான நடவடிக்கைகளுக்கு ஆளாகநேரும்."*

மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உள்ள பெண்களுக்கெல்லாம் நான் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். கடனுதவி ஏதும் கிடைக்காதா என்று பெண்கள் வங்கிகளைத் தேடிச் சென்றது அந்தக் காலம். மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உள்ள பெண்களைத் தேடி வந்து உங்களுடைய சேமிப்புத் தொகையை எங்கள் வங்கிகளுக்கு கொடுங்கள் என்று வங்கிகள் மகளிரைத் தேடி வருவது இந்தக் காலம். அந்த வகையில் திருவாரூர் மாவட்டத்தில் மொத்தம் 4,412 மகளிர் சுயஉதவிக் குழுக்கள், மொத்தம் 78,190 பெண்களை உறுப்பினர்களாகக் கொண்டு மொத்தம் 9 கோடியே 74 இலட்சம் ரூபாய் சேமிப்புத் தொகையுடன் வலிவோடும், பொலிவோடும் இயங்கி வருவதை நான் பாராட்டுகிறேன். இதுவரை மகளிர் சுயஉதவிக் குழுக்களில் சேராத பெண்கள் அனைவரும் அவற்றில் சேர்ந்து பயன் பெற வேண்டும் என்று இங்குள்ள மகளிரை மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள அனைத்து மகளிரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். இதனையே மகளிர் தினமான இன்று மகளிர் தினச் செய்தியாக தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

**மழை நீர் சேகரிப்பு**

தற்போது நாடெங்கும் வரலாறு காணாத வறட்சி நிலவி வருகிறது. இதற்கு தமிழ்நாடும் விதி விலக்கல்ல. குறிப்பாக நதி நீர் பங்கீட்டு பிரச்சினை, பருவ மழை பொய்த்தல், நிலத்தடி நீர் குறைந்து போதல் ஆகிய காரணங்களினால் மக்களுடைய அன்றாடப் பயன்பாட்டிற்கும், விவசாயப் பணிகளுக்கும், தண்ணீர் கிடைப்பது, நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகிறது. ஒருபுறம் மரங்களை வெட்டுவதால் காடுகளின் பரப்பளவு குறைந்து வருகிறது. மறுபுறம், நிலத்தடி நீரை அதிகமாகப் பயன்படுத்துவதால் நீரும் குறைந்து கொண்டே வருகிறது. இந்நிலையில், நமது பெருகி வரும் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரே வழி மழை நீரை சேகரிப்பது தான்! மழை நீர் சேகரிப்புக்கு எனது அரசு, மிகுந்த் முன்னுரிமை அளித்து வருகின்றது. அரசு கட்டடங்கள் உட்பட அனைத்து கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துவதை எங்கள் அரசு கட்டாயமாக்கி இருக்கின்றது. எனது இல்லத்தில், நானே மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்தி இருக்கிறேன். அது போல, நீங்கள் அனைவரும் உங்கள் இல்லங்களிலும், பணிபுரியும் இடங்களிலும், மழை நீர் சேகரிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று உங்களை அன்புடன் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

**மன்னார்குடி குடிநீர் அபிவிருத்தி திட்டம்**

இந்த இனிய விழாவிலே திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் 55 கோடியே 68 இலட்சம்



ரூபாய் மதிப்புடைய பல்வேறு துறைகளைச் சார்ந்த முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்துள்ளேன்.

நான் திறந்து வைத்துள்ள அனைத்துப் பணிகளையும் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும் என்றால் அதற்கு நிறைய நேரம் தேவை. ஆகையால், அவற்றில் முக்கியமான சில திட்டப் பணிகளைப் பற்றி மட்டும் உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இன்றைய தினம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக பல்வேறு குடிநீர் திட்டங்களின் கீழ் மொத்தம், 1,248 குடியிருப்புகளில் வசிக்கின்ற ஏறத்தாழ ஒரு இலட்சத்து 28 ஆயிரம் பேர் பயன் அடைகின்ற வகையில் மொத்தம் 12 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ள குடிநீர் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து உள்ளேன். இதில் குறிப்பாக, 3 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் 15 ஆயிரம் பேருக்கு, குடிநீர் வசதி செய்து கொடுக்கின்ற மன்னார்குடி குடிநீர் அபிவிருத்தி திட்டத்தையும் இந்த விழாவிலே திறந்து வைத்துள்ளேன்.

இந்த நேரத்தில், இன்றைய தினம் 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டத்தில், 900 பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணிகளையும் துவக்கி வைத்துள்ளேன். இதன் மூலமாக, 5 இலட்சத்து 4 ஆயிரம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு விவசாய தொழிலாளர்களுக்கு கூலியாக 3,600 டன் அரிசியும், 72 இலட்சம் ரூபாய் ரொக்கமாகவும் வழங்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பண்ணைக் குட்டைகளில் விவசாயிகள் மீன்களை வளர்த்து, தமது பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வதோடு நீர் சேமிக்கப்படுவதன் வாயிலாக நிலத்தடி நீரின் மட்டமும் உயர வழி ஏற்படுகிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக நபார்டு திட்டம், பகுதி II திட்டம், ஹட்கோ திட்டம் ஆகியவற்றின் கீழ் திருவாரூர் மாவட்டத்தில் 14 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள 18 பாலங்களைத் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக, மயிலாடுதுறை – திருத்துறைப்பூண்டி சாலையில் வாழவாய்க்கால் மீதான பாலம்; அம்மாபேட்டை– வடுவூர் சாலையின் மீதான பாலம்; மன்னார்குடி – பட்டுக்கோட்டை சாலையில், வடவாறு பிரிவு வாய்க்காலின் மீதான பாலம்; மயிலாடுதுறை –முத்துப்பேட்டை சாலையில், அடப்பாற்றின் மீதான பாலம்; திருத்துறைப்பூண்டி – பரவாக்கோட்டை சாலையில், மறக்கா கோரையாற்றின் மீதான பாலம்; வேளாங்கண்ணி – திருத்துறைப்பூண்டி சாலையில், முள்ளி ஆற்றின் மீதான பாலம்; திருவாரூர் – குடவாசல் – வலங்கைமான் சாலையின் மீதான பாலம் ஆகியவை இந்த மாவட்டத்து மக்களின் போக்குவரத்து வசதியை மேம்படுத்த பெரிதும் உதவிடும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**தொகுப்பு வீடுகள்**

திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் இன்றைய தினம் 19 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள், பள்ளிக் கட்டடங்கள், கான்கிரீட் சாலைகள், சிமெண்ட் சாலைகள், மெட்டல் சாலைகள், கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள், தடுப்பு சுவர்கள், மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் மற்றும் நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் ஆகியவை உள்ளிட்ட மொத்தம் 1,540 பணிகளை இந்த இனிய விழாவிலே திறந்து வைத்ததில் நான் மிக்க மனநிறைவு அடைகிறேன். கிராமப் பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்த கட்டமைப்பு வசதிகள் எல்லாம் இந்த மாவட்டத்து மக்களின் வாழ்க்கை உயர பெரிதும் துணை செய்யும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

கால்நடைப் பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரையில், திருவாரூர் மாவட்டத்தில், 13 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு கால்நடை மருத்துவமனைகளையும் – ஒரு கால்நடை கிளை மையத்தையும் – மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பாக, 41 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, 9 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் – பேரூராட்சிகளில் 21 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 8 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களையும் இன்றைய தினம் நான் திறந்து வைத்துள்ளேன். மேலும், நகராட்சிகளைப் பொறுத்த வரையில், கூத்தாநல்லூரில், ஒரு கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பில் 23,020 பேருக்கு பயன்படக் கூடிய குடிநீர் வழங்கல் விரிவாக்கப் பணியையும் 20 இலட்சம் ரூபாய் மதிப்பில், திருவாரூரில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு சுகாதார மையங்களையும் இன்று நான் திறந்து வைத்துள்ளேன். மேலும் தமிழ்நாடு மின்சார வாரியம் நிறுவியுள்ள, 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்புடைய கொரடாச்சேரி துணை மின் நிலையத்தையும், 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்புடைய உள்ளிக்கோட்டை துணை மின் நிலையத்தையும், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் மூலம் மொத்தம் 22 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளையும் திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்**

இன்றைய தினம் எழுச்சிமிகு இந்த விழாவிலே மொத்தம் 26 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பில் இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைய உள்ள 1,524 திட்டப் பணிகளுக்கு அடிக்கற்களை நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக 7 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைய உள்ள 402 பணிகளுக்கும் – மாவட்ட ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் மொத்தம் 6

கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்படவுள்ள 197 குடிநீர் வழங்கல் பணிகளுக்கு 'உரிய அடிக்கற்களையும் நாட்டியுள்ளேன்.

இவை மட்டுமன்றி, திருவாரூர் மாவட்டத்திற்கான மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக பெருந்திட்ட வளாகம், 8 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படுவதற்கான அடிக்கற்களை நான் இந்த விழாவிலே நாட்டி உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பெருந்திட்ட வளாகத்தில், மாவட்ட ஆட்சித் தலைவருடைய குடியிருப்பு மற்றும் அலுவலகம், இதர .வருவாய் அலுவலர்களுக்கான குடியிருப்புகள் மற்றும் அலுவலகங்கள்– இவை மட்டுமன்றி, 5 கோடி ரூபாய் செலவில் அமைய உள்ள பல்வேறு துறைகளை உள்ளடக்கிய அடுக்கு மாடி அலுவலகக் கட்டடம் – மற்றும் ஒரு கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள மாவட்ட விளையாட்டு அரங்கம், ஆகியவை அனைத்தும் இந்த பெருந்திட்ட வளாகத்தில் அமைக்கப்படும் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில், திருவாரூர் மற்றும் அத்தனூர், ஆகிய இரண்டு இடங்களில் 46 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைய உள்ள கிடங்குகளுக்கும் – இந்த மாவட்டத்தின் 5 இடங்களில் அமைக்கப்பட இருக்கும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கான அலுவலக கட்டடங்களுக்கும் – எடமேலையூரில் 32 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ள ஆதிதிராவிட மாணவர்களுக்கான தங்கும் விடுதிக்கும் – மற்றும் பொது பணித்துறை கட்டடப் பிரிவு சார்பாக இந்த மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் 51 இலட்சம் ரூபாய் செலவில் அமையவுள்ள 8 கட்டடங்களுக்கும் அடிக்கற்களை இன்று நான் நாட்டி உள்ளேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மகளிருக்கு உதவிகள்**

இந்த இனிய விழாவிலே, ஆயிரக்கணக் கானோருக்கு பயனளிக்கும் வகையில் பல்வேறு துறைகளின் சார்பாக, நலத் திட்ட உதவிகளை நான் வழங்க இருக்கின்றேன். மொத்தம் 5,878 பயனாளிகளுக்கு 2 கோடி ரூபாய் செலவில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் நான் உண்மையிலேயே மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், இந்த உதவிகள் அனைத்தும் சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள், பொருளாதார ரீதியாக வாழ்வில் உயர்ந்திட வழங்கப்படுகின்ற உதவிகள் ஆகும். இவை ஏழை எளியோரின் வாழ்வில் ஏற்றத்தையும், வறுமையில் வாடுவோர் அனைவரின் வாழ்விலும் வசந்தத்தையும் கொண்டு வர பெரிதும் துணை நிற்கும் என்று நான் நம்புகிறேன். அந்த வகையில் மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உள்ள மொத்தம் 1,050 பெண்களுக்கு, அவர்கள் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள, 63 இலட்சம் ரூபாய் நிதியுதவியும், அவர்களுக்கு வங்கிக் கடனாக 32 இலட்சம் ரூபாயும், இந்த விழாவிலே வழங்கப்படுகின்றது. உலகெங்கும் மகளிர் தினம் கொண்டாடப்படும் இந்த நன்னாளில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இந்த உதவிகளை வழங்குவதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

இந்த மாவட்ட சமூக நலத் துறையின் சார்பில், பல்வேறு திட்டங்களின் கீழ் 222 பேருக்கு, 8 இலட்சம் ரூபாய் செலவில் நலத் திட்ட உதவிகளும் – தாட்கோ நிறுவனத்தின் மூலம் 37 பேருக்கு 6 இலட்சம் ரூபாய் மதிப்பில் நலத் திட்ட உதவிகளும் – பேறுகால மகளிருக்கான உதவி திட்டத்தின் கீழ் 1,035 தாய்மார்களுக்கும் – 412 ஊனமுற்றோருக்கு 7 இலட்சம் ரூபாய் செலவில், நலத் திட்ட உதவிகளையும் – ஆக மொத்தம் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட பயனாளிகளுக்கு இந்த விழாவிலே பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்குவதில் நான் மிக்க மன நிறைவு அடைகிறேன்.

இந்த உதவிகள் அனைத்தையும், நானே எனது கரங்களாலே, அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று விரும்பினாலும் கூட அதற்குரிய நேரம் போதாது என்று நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இந்த விழா மேடையிலே 15 பேருக்கு மட்டும் நானே எனது கரங்களால் நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளேன். மற்ற அனைவருக்கும் இங்கேயே இந்த விழாவிலேயே, இப்போதே, அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அதிகாரிகளும் இந்த நலத் திட்ட உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெற்றுக் கொள்ள இருக்கின்ற பயனாளிகள் அனைவரும், தம்முடைய வாழ்க்கையின் உயர்விற்கு தேவையான முதல் படிக்கட்டாக இவற்றைக் கருதி, தமது உழைப்பின் மூலம் உயர்ந்து, வெற்றியை எட்ட வேண்டும் என்று உங்கள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

எத்தனையோ சோதனைகளின் கீழ், எங்களுடைய அரசு பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தி வருகிறது. இதற்கு சில இடர்பாடுகளை, சில நேரங்களில் இயற்கையும் ஏற்படுத்துகிறது; சில நேரங்களில் மனிதர்களும் ஏற்படுத்தி வருகின்றனர்! ஆனால், எத்தனை இன்னல்கள் வந்தாலும், தடைகள் ஏற்படுத்தினாலும், எதற்காகவும் நாங்கள் தயங்குவதில்லை; யாருக்காகவும் நாங்கள் அஞ்சுவதில்லை என்பதை எனது அன்புக்குரிய தமிழக மக்கள் அனைவருக்கும் கூறிக் கொண்டு இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறக் காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டு தல்களைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

• • •



தருமபுரி மாவட்டத்தில்

# பெண் சிசுக் கொலைக்கு முற்றுப்புள்ளி

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா"

என்று மகளிர் புகழ்பாடிய தமிழகத்தில், இன்று பெண்களே பெண்களை அழிக்கும் கொடூர சம்பவங்கள் நடைபெறுவதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1992ஆம் ஆண்டில்



சமூக நலத்துறை மூலம் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தையும், தொட்டில் குழந்தை திட்டத்தையும் அறிவித்து செயல்படுத்தினார்கள்.

வரதட்சணை போன்ற சமூக, பொருளாதார காரணங்களுக்காக பெண் சிசுக்கள் அழிக்கப்பட்டாலும், தருமபுரி மாவட்டத்தில் ஏழ்மை, அறியாமை, மூடப்பழக்க வழக்கம் ஆகியவற்றால்தான் பெண் சிசுக்கள் அதிகமாக அழிக்கப்படுகிறது என்பது கணக்கெடுப்பில் தெரிய வருகிறது. மனித நேயத்திற்கு சவால்விடும் இத்தகைய குற்றச் செயலில் ஈடுபடுவோர் மீது குற்றவியல் சட்டங்களைக் கொண்டு தண்டிப்பது ஒரு புறமும், கல்வியறிவில் தமிழகத்திலேயே பின்தங்கிய மாவட்டமாக உள்ள இம்மாவட்டத்தில் பெண் கல்வியை அதிகரிக்கவும், மூடப்பழக்க வழக்கத்தை ஒழித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அரசும், மாவட்ட நிர்வாகமும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், விழிப்புணர்வுப் பேரணிகள், திரைப்படங்கள், கண்காட்சிகள் ஆகியவற்றை கிராமப் பகுதிகளில் குறிப்பாக பெண் சிசுக் கொலை அதிகமாக நடைபெறும் பென்னாகரம் நல்லம்பள்ளி, காவேரிப்பட்டினம், தருமபுரி ஆகிய பகுதிகளில் நடத்தியதன் விளைவாகவும், மகளிர் சுய உதவிக் குழுக்கள், சுகாதாரத் துறை செவிலியர்கள், தொண்டு நிறுவனத்தினர், கிராம களப் பணியாளர்கள், சத்துணவு ஊட்டச்சத்துப் பணியாளர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியாலும், கண்காணிப்பாலும், தற்சமயம் பெண்சிசுக் கொலைகள் வெகுவாகக் குறைந்துள்ளது.

கர்ப்பிணித் தாய்மார்களை கணக்கெடுத்து அவர்களுக்கு அறிவுரை வழங்குதல், கண்காணித்தல், மருத்துவ வசதிகள் செய்தல் போன்ற தொடர்பணிகளும், பெண்களின் மனமாற்றத்திற்குக் காரணமாக அமைந்தது. மேலும் அரசின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் இரு பெண் குழந்தைகள் பெற்று குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொண்ட பெற்றோரின் பிள்ளைகள் பெயரில் தலா ரூ.15,200/– வங்கியில் வைப்புநிதி செய்யப்பட்டு பத்திரம் வழங்கப்படுகிறது. அக்குழந்தைக்கு 5 வயது முடிந்து பள்ளியில் சேரும் போது

**தா. மனோகரன்**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்*
*தருமபுரி*

மாதம் ரூ.150 படிப்பிற்கும், 23–ஆவது வயதில் திருமணத்திற்கோ, உயர்படிப்பிற்கோ பயன்படும் வகையில் முழுத்தொகையும் வட்டியுடனும் வழங்கப்படும். ஒரு பெண் குழந்தையோடு நிறுத்திவிட்டு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் பெற்றோரின் பிள்ளை பெயருக்கு ரூ.22,200–/ வைப்புநிதி செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்படி இம்மாவட்டத்தில் இதுவரை இரு பெண் குழந்தைகளுக்கு உரிய திட்டத்தில் 222 பெண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தை திட்டத்தில் 1 பெண் குழந்தையும் மொத்தம் 223 குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர். 403 பெண் குழந்தைகளுக்கு இத்திட்டத்தில் பயன்பெற இம்மாவட்டத்தில் விண்ணப்பித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

தொட்டில் குழந்தைகள் வரவேற்பு மையம் இம்மாவட்டத்தில் ஏப்ரல் 2001–இல் துவக்கப்பட்டு இதுவரை 300 நாட்களில் 200 குழந்தைகள் பெறப்பட்டு மரணத்தின் விளிம்பிலிருந்து அக்குழந்தைகளின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டமான பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் மூலம் 223 குழந்தைகளும், தொட்டில் குழந்தைகள் திட்டம் மூலம் 201 குழந்தைகளும் காப்பாற்றப்பட்டுள்ளது. இது, இத்திட்டத்திற்கு கிடைத்த பெரிய வெற்றியாகும்.

இம்மாவட்டத்தில் இத்திட்டங்களினாலும், சிறந்த மருத்துவ சேவைகள் மற்றும் ஆலோசனைகள் மூலமும் 2000ஆம் ஆண்டில் 1,497 ஆக இருந்த சிசு மரணங்கள் 2001ஆம் ஆண்டில் 1,175 ஆகவும், 2002ஆம் ஆண்டில் 990 ஆகவும் குறைந்துள்ளது. 1999ஆம் ஆண்டில் 657 ஆக இருந்த பெண் சிசுக் கொலைகள் 2000ஆம் ஆண்டில் 439 ஆகவும், 2001ஆம் ஆண்டில் 178 ஆகவும் 2002ஆம் ஆண்டில் 39 ஆகவும் குறைந்துள்ளது. பிறப்பு விகிதம் 1999ஆம் ஆண்டில் 25.4 ஆகவும், 2000 ஆம் ஆண்டில் 23.9 ஆகவும், 2001ஆம் ஆண்டில் 21.4 ஆகவும் 2002 ஆம் ஆண்டில் 20.3 ஆகவும் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தருமபுரி மாவட்டத்தில் பெண் சிசுக் கொலைக்கு இந்த ஆண்டு முற்றுப்புள்ளி வைத்து நூறு சதவிகிதம் பெண் சிசுக் கொலையில்லா மாவட்டமாக ஆக்கிட மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

★ ★ ★



*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 6–6–2003 அன்று மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா.காளிமுத்து அவர்கள் எழுதிய "தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகளும் குறுந்தொகையும்" என்னும் நூலின் திருத்திய பதிப்பினை வெளியிட்டார்கள்.*





# தேசத்தின் தலைவிதியை பெண்களால் தான் நிர்மாணிக்க முடியும்

## மாண்புமிகு முதலமைச்சர் பெருமிதம்

இந்த நாள், பெண் குலத்தின் பெருமைக்குரிய வரலாற்றில், ஒரு திருநாள்.

27.1.2003 அன்று ஆரம்பிக்கப்பட்ட பெண் போலீஸ் கமாண்டோக்களுக்கான 12 வாரப் பயிற்சியின் நிறைவு விழா இன்று! இந்தியாவிலேயே முதல் பெண் போலீஸ் கமாண்டோ குழுமத்தின் தொடக்க விழா இன்று! இத்தகைய விழாவில் கலந்து கொள்வதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாடு ஒவ்வொரு துறையிலும் முனைப்பாக முன்னேற்றம் அடைய வேண்டும்; இந்தியாவுக்கே வழிகாட்டியாக அமைய வேண்டும்; முன்னணியில் இருக்க வேண்டும் என்று நான் எடுத்து வரும் முயற்சி ஒவ்வொரு துறையிலும் பலன் அளித்துக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்,

தமிழகக் காவல் துறை என்னுடைய வழிகாட்டுதலின் பேரில் இன்று இந்தியாவிலேயே முதன்மையாகத் திகழ்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. காவல் துறையில் எத்தனையோ பிரிவுகளில் தமிழகம் முதன்மையாகத் திகழும் இந்த நேரத்தில் இந்தியாவிலேயே முதன் முதலாக "பெண் போலீஸ் கமாண்டோ படையை" உருவாக்கியிருப்பது என்னுடைய தலைமையில் இயங்கும் தமிழகத்தில்தான் என்பது, உண்மையாகவே பெருமைக்குரிய செய்திதான்.

### சாதனை நிகழ்த்தக் கூடியவர்கள்

பெண்களால் என்ன சாதிக்க முடியும்? என்று கேட்பவர்களைப் பார்த்து நான் கேட்க விரும்பும் ஒரே கேள்வி - பெண்களால் என்ன சாதிக்க முடியாது? என்பதுதான். சாதாரணப் பணி மட்டுமல்ல, மிகவும் கடினமான சவால்களைக் கூட சந்தித்து சோதனைகளைக் கடந்து சாதனைகளை நிகழ்த்தக் கூடியவர்கள் தமிழகப் பெண்கள்!




இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்ட முடியும் என்ற உண்மையினை நமது காவல்துறையின் அதிரடிப்படை வீராங்கனைகள் இப்போது நிரூபித்துக் காட்டி இருக்கிறார்கள்.

இந்தப் பெண் கமாண்டோ பயிற்சியின் தொடக்கத்தின் போது, ஆண்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியில் எள்ளளவும் குறையக் கூடாது என்ற என்னுடைய ஆலோசனையை உத்தரவை முழுமையாகச் செயல்படுத்த, என்னென்ன வசதிகள் செய்ய வேண்டுமோ அவற்றை எல்லாம் செய்து தருகிறேன் என்று நான் சொல்லியிருந்தேன்.

இந்தப் பெண் போலீஸ் கமாண்டோ வீராங்கனைகளுக்கு, ஹரியானா மாநிலம் மானேசரில் உள்ள தலைசிறந்த தேசிய பாதுகாப்புப் படையில் NSG-யில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள், பயிற்சி அளித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[illegible]

மேலும், வீராங்கனைகளுக்கு ஆண் கமாண்டோக்களுக்கு இணையாக இடர்ப்படி மாதம் ஒன்றுக்கு 1500 ரூபாய் வீதமும், Special Uniform Allowance- அதாவது சிறப்பு சீருடைப் படி ஆண்டு ஒன்றுக்கு 500 ரூபாய் வீதம் வழங்கவும், தினப்படி வழக்கமான படியைப் போல, இரண்டரை மடங்காக வழங்கவும், சீருடை அல்லாத பிற உடைகள் வழங்கவும், 10 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள குழு காப்பீட்டுத் திட்டத்தில் பயன் அடையவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், பயிற்சிக் காலத்தில் பெண் கமாண்டோக்களுக்கு இடர்ப்பாடு இருக்கக் கூடாது என்பதற்காக அவர்களுக்கு உதவியாக 5 சமையல்காரர்களையும், 5 மகளிர் சலவையாளர்களையும், 5 மகளிர் துப்புரவுப் பணியாளர்களையும், 5 மகளிர் உதவியாளர்களையும், நியமிக்க உத்தரவிட்டேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண் கமாண்டோக்களுக்கு

[illegible]

இந்திய வரலாற்றில் சீருடைப் படையினர் பயிற்சியின் போது இந்தப் பெண் கமாண்டோக்களுக்கு அளிக்கப்பட்ட வசதிகளுக்கு ஈடாக வேறு யாருக்கும் வழங்கப்பட்டதில்லை என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். பயிற்சியின் போது அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அந்த வசதிகளுக்கு, இன்று பலன் கிடைத்துள்ளது என்பது நம் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாகும்.

இந்தப் பயிற்சியில் பெண் கமாண்டோக்களுக்கு யோகாசனம் முதல் வெடிகுண்டு கண்டுபிடிப்புப் பயிற்சி வரை பல்வேறு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆண் கமாண்டோக்களுக்கு கொடுக்கும் பயிற்சியை விட கூடுதலாக பாரா பறித்தல் - அதாவது, PARA Sailing குதிரையேற்றம், படகு ஓட்டுதல், கடற்கரை மணலில் ஓடுதல், செங்குத்தான குன்றுகளில் கயிற்றின் உதவியுடன் இறங்குதல் போன்ற பயிற்சிகள் சிறப்பாக அளிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை நான் பெருமிதத்தோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பயிற்சியின்போது, கடைசி 3 வாரங்களில் ஒவ்வொரு நாளும், 20 கி.மீ. ஓடி இருப்பது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அதேபோன்று, பயிற்சியின் ஒரு பகுதியாக 3ஆவது மாதத்தில் 3 முழு நாட்களும், தொடர் ஓட்டமாக எங்கேயும் நிற்காமல், ஓய்வு எடுக்காமல், இரவு பகல், மழை வெயில் எனப் பாராமல், கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை சுமார் 700 கி.மீ. தூரத்தை 72 மணி நேரத்தில் கடந்து வந்தது, ஒரு மிகப் பெரிய சாதனை என்பதை யாரும் மறுக்க முடியாது.

பெண்கள் எதையும் செய்து முடிப்பார்கள்

இந்த 3 நாட்களில், சற்று ஏறக்குறைய 1 இலட்சம் வாகனங்கள் இவர்களைக் கடந்து சென்ற போதும், ஓட்டம் எந்த நேரத்திலும் நிறுத்தப்படாமலும், வாகனப் போக்குவரத்துக்குத் தடை ஏற்படாமலும், இந்த ஓட்டம் ஓடி முடிக்கப்பட்டது. இன்னும் ஒரு சாதனையாகும். இந்தியாவிலேயே இதுவரை இராணுவம், காவல்துறை அல்லது விளையாட்டுத் துறை சார்ந்த பெண்களோ, பெண் அமைப்புகளோ, 700 கி.மீ. தூரத்தை 72 மணி நேரத்தில் தொடர் ஓட்டமாக ஓடி முடித்ததில்லை என்பது மட்டுமல்ல அவ்வாறு ஓடுவதற்காக முயற்சி கூட இதுவரை எடுக்கப்பட்டது இல்லை என்பதையும் நான் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரும் சாதனையை நிகழ்த்திய தமிழக பெண் போலீஸ் கமாண்டோக்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். பெண்களுக்கு வாய்ப்பு அளித்தால் எதையும் செய்து முடிப்பார்கள் என்று இதிலிருந்து தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது.




என்னுடைய தலைமையில் இயங்கும் அரசு பெண்களுக்காக பெண்களின் முன்னேற்றத்திற்காக என்னென்ன செய்யலாம் என்று சிந்தித்துச் செயல்பட்டு வருகிறது. பெண்களுக்கு சுயஉதவிக் குழுக்கள் மூலம் வேலைவாய்ப்பு ஏற்படுத்தியது; அதிக அளவில் காவல்துறையில் பெண்களைப் பணியமர்த்தியது; பெண் சிசுக்கொலைத் தடுப்புச் சட்டம்; தொட்டில் குழந்தைத் திட்டம்; குழந்தைகள் பெயருக்கு முன்னால், தாயின் பெயரின் முதல் எழுத்தை அதாவது 'Initial' - போட்டுக் கொள்ளும் அரசாணை; Citizen என்று குறிப்பிட வேண்டிய இடங்களில், "குடிமகள்" என்ற சொல்லைப் பயன்படுத்த பெண்களுக்கு உரிமை என்று 100 ஆண்டுகளில் நடந்தேறாத மாற்றங்களை, உயர்வுகளை, நான் பெண் இனத்திற்கு அளித்திருக்கிறேன் என்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

காவல்துறை வரலாற்றில் புதிய தொடக்கம்

காவல் துறையின் வரலாற்றில் ஒரு புதிய தொடக்கமாகவும், பெண்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வதில், ஒரு முன்னோடித் திட்டமாகவும், அனைத்து மகளிர் காவல் நிலையத்தை முதன்முதலாக நான் 1992ஆம் ஆண்டில் தொடங்கி வைத்தேன். இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு கிடைத்த வெற்றி, பாராட்டு ஆகியவை உண்டாக்கிய ஊக்கத்தினால் 1996ஆம் ஆண்டுக்குள் 58 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டன. அடுத்து வந்த தி.மு.க. ஆட்சியில், 1996-லிருந்து 2001 வரை 5 ஆண்டுகளில் புதியதாக மகளிர் காவல் நிலையம் ஒன்று கூட தொடங்கப்படவில்லை என்பதோடு ஏற்கெனவே இருந்த எல்லா அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் சீர்கேட்டுக்கு ஆளாக்கப்பட்டு எந்த நோக்கங்களுக்காக அவை தொடங்கப்பட்டனவோ அந்தச் சீரிய நோக்கங்களை செயல்படுத்த இயலாத நிலையில் அவை இருந்தன. மீண்டும் ஆட்சிப் பொறுப்பை 2001 மே மாதத்தில் நான் ஏற்றுக் கொண்ட பிறகு தமிழகத்தில் உள்ள 188 காவல் உட்கோட்டங்களில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்த நான் ஆணையிட்டேன்.

இந்தியா முழுமைக்குமான சாதனை

இன்று தமிழகம் முழுவதும் மொத்தம் 148 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இந்த ஆண்டு சுமார் 7 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில், ஏற்படுத்தப்பட உள்ளன என்பதையும் காவல் துறை வரலாற்றில், இந்தியா முழுமைக்குமான ஒரு சாதனையாக இந்த முயற்சி அமைகிறது என்பதையும் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறையினரின் குறை தீர்க்கும் நிகழ்ச்சியை நான் கடந்த 2002இல், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில், 5 நாட்கள் நடத்தினேன். இவ்வாறு, காவலர் குறைதீர்க்கும் நிகழ்ச்சியை, முதலமைச்சரே நடத்தி, பல்லாயிரக்கணக்கான ஆண் மற்றும் பெண் காவலர்களுடைய குறைகளைக் கேட்டறிந்து அவற்றைக் களைந்திருப்பது, இந்திய வரலாற்றிலேயே இது தான் முதல் தடவை என்பதையும் நான் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அவ்வாறு குறை கேட்ட போது, மகளிர் காவலர்கள், சிறிய குழந்தைகளை வீட்டிலேயே விட்டுவிட்டு, பணிக்குச் செல்வதால் ஏற்படும் துன்பங்களைப் பற்றிச் சொன்னார்கள்.

மகளிர் காவலர்கள் துன்பப்படக் கூடாது என்பதற்காக அவர்களுடைய குழந்தைகளைப் பேணுவதற்காக "காவலர் குழந்தைகள் நலக் காப்பகம்" என்னும் சிறந்த திட்டத்தை நான் தொடங்கி வைத்திருக்கிறேன்.

மேலும், மாநிலம் முழுவதும் பெண் காவல் பணியாளர்களுக்கு 114 அலுவலகங்களில் அடிப்படை வசதிகளுடன் கூடிய ஓய்வறைகள் அமைக்கப்பட உள்ளன என்பதையும்; வெளி மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வரும், பெண் காவல் பணியாளர்கள் தங்குவதற்காக ஒரு விருந்தினர் இல்லம் கட்டவும் நான் ஆணையிட்டு இருக்கிறேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், பெண் தலைமைக் காவலர்கள், உதவி ஆய்வாளர் தேர்வுக்காக குறைந்தபட்சம் 8 ஆண்டுகள் தலைமைக் காவலராகப் பணியாற்றி இருத்தல் வேண்டும் என்பதனை மாற்றி, 4 ஆண்டுகளுக்கு அவ்வாறு பணியாற்றி இருந்தால் போதுமானது என்று கொளகை முடிவு எடுத்து, ஆணை பிறப்பித்திருக்கிறேன்.

ஆண் காவலர்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே பெண் காவலர்களுக்கும், ஆயுதங்களையும் பிற கருவிகளையும் வழங்குவதற்கு நான் ஆணையிட்டிருக்கிறேன்.

இவ்வாறு, காவல் துறையில் பெண்களுக்கு சிறப்பு அளிக்கும் முயற்சிகளுக்கு முன்னுரிமை அளித்த நான் இப்போது அந்த முயற்சிகளுக்கு முத்திரை பதிக்கும் விதமாக பெண் கமாண்டோ படையை உருவாக்க நடவடிக்கை எடுத்திருக்கிறேன்.

இன்று பெண் கமாண்டோக்கள் செய்து காட்ட உள்ள பல்வேறு சாகசச் செயல்கள் உங்களை மெய்சிலிர்க்க வைக்கும் என்பது உறுதி. இந்திய வரலாற்றிலே தலைவர்களின் சிறப்பு வாகன அணிவகுப்பில், 9 பெண் கமாண்டோக்கள், மோட்டார் சைக்கிளில் முன்னே செல்ல, 9 பெண் கமாண்டோ, குதிரைப் படை வீராங்கனைகள் புடைசூழ அணிவகுத்து வந்தது, முதன் முதலாக, இன்று தான் நடந்திருக்கிறது என்பதை அறிவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

குதிரையின் அருகிலே செல்லக் கூட அஞ்சுபவர்கள் மத்தியில், இன்று குதிரை அணி வகுப்பில் கலந்து கொண்டது மட்டுமல்ல குதிரை மேல் பல சாகசங்களை வீராங்கனைகள் செய்து காட்ட இருப்பது பெருமைக்குரியது.

"அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்ச வருவதும் இல்லை" என்பது தான் என்னுடைய தனிப்பட்ட motto என்னைப் பற்றி நானே சொல்ல வேண்டும் என்றால் இதைத்தான் சொல்வேன். "அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதும் இல்லை" என்னும் தேவாரத் திருப்பாடலுக்கு ஏற்ப இன்று அச்சத்தைத் தவிர்த்து திறமையை வெளிக்காட்டும் பெண் போலீஸ் கமாண்டோக்கள் எனது பாராட்டுக்குரியவர்கள். ஒரு முழு அளவிலான அணிவகுப்பு மரியாதையை அதுவும், ஏ.கே.47 போன்ற அதிநவீன ஆயுதங்களைக் கையில் ஏந்தி அணிவகுப்பு மரியாதை செய்து காட்டியது, இந்தியாவிலேயே முதன் முதலாக, இந்தப் பெண் கமாண்டோக்கள்தான்!

இந்த சிறப்பான பயிற்சிக்கும், அவர்களுடைய செயல்திறனுக்கும் காரணம் பெண்களின் முன்னேற்றத்தில் நானும் எனது தலைமையின் கீழ் செயல்படும் அரசும் கொண்டுள்ள தெளிவான சிந்தனை, தீர்க்கமான முடிவு, உறுதியான கொள்கை, குறுக்கீடு இல்லாத செயல்பாடு ஆகியவையே என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.







ஏட்டிலும், எழுத்திலும் மட்டும் பாராட்டப்பட்ட பெண்ணினம் இன்று உண்மையிலேயே புத்துயிர் பெற்று, புதுத் தகுதி பெற்றுள்ளது.

"மின்னல் ஒளியே... விலை மதியா ரத்தினமே...
கன்னல் பிழிந்து கலந்த கனிச்சாறே...
மூடப்பழக்கத்தின் முடை நாற்றம் வீசுகின்ற
காடு மணக்க வந்த கற்பூரப் பெட்டகமே...."

- என்று பாட்டிலே பாடிவைத்த காலம் போய், உண்மையிலேயே இந்த நாடே போற்றும் வண்ணம் இன்று பெண்கள், கமாண்டோக்களாக தங்கள் திறமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள்; அத்தோடு வீரத்தை வெளிப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் பெண்கள் என்றதும் அவர்களது அழகு மட்டுமே நினைவுக்கு வந்தது! பின்பு பெண்கள் என்றதும், அவர்களது புதுமைப் பண்பு மட்டுமே நினைவுக்கு வந்தது! இன்று பெண்கள் என்றதும், அவர்களது புரட்சித் தோற்றமே நினைவுக்கு வருகிறது! எத்தகைய பாராட்டத்தக்க பரிணாம வளர்ச்சி!

பெண்கள், பாரதி கண்ட புதுமைப் பெண்களாக மட்டும் இருந்தால் போதாது. அந்தப் புதுமைப் பெண்கள், புரட்சிப் பெண்களாகவும் ஆக வேண்டும் என்ற என்னுடைய அவாவை, இன்று அதிரடிப் படை வீராங்கனைகள் ஈடேற்றியிருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

தமிழகத்தில் ஒரு முழு அளவிலான பெண் கமாண்டோ குழுமம்; இன்று ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. இந்தியாவிலேயே முதன் முதலாக பெண் போலீஸ் கமாண்டோ குழுமத்தைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இப்போது பயிற்சி முடித்த 130 பேருடன் ஏற்கெனவே சோதனை முறையாகப் பயிற்சி பெற்று, இவர்களுக்கு உறுதுணையாக இருந்த 21 பெண் கமாண்டோக்களையும் நான் பாராட்டுகிறேன்.



இந்தப் பயிற்சியில் அனைத்துப் போட்டி களிலும் முதன்மையாக வந்த, கலைச் செல்வி என்ற பெண் கமாண்டோ வீராங்கனையை நான் மனதாரப் பாராட்டு கிறேன். பரிசு பெற்ற அனைத்துப் பெண் கமாண்டோ வீராங்கனைகளையும், வெற்றிகரமாகப் பயிற்சி முடித்த மற்ற பெண் கமாண்டோ வீராங்கனைகள் அனைவரையும் அவர்களுக்கு மிகச்சிறப்பான பயிற்சி அளித்த பயிற்சிக் குழுவினரையும், இந்தப் பயிற்சியைச் சிறந்த முறையில் நடத்தி முடித்த, காவல் துறை தலைமை இயக்குநரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

பெண் கமாண்டோ வீராங்கனைகள், தங்களது பணிகள் அனைத்திலும் வெற்றி பெற எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்களின் தலை விதியைப் பெண்களே மிகச் சிறந்த முறையில், தீர்மானிக்க முடியும். "women will out do their own destinies much better too, than men can ever do for them" என்று சுவாமி விவேகானந்தர் கூறி இருக்கிறார்.

தங்கள் தலைவிதியை மட்டுமல்ல; தங்கள் தேசத்தின் தலைவிதியையும் பெண்களே நிர்மாணிக்க முடியும் என்பது நிரூபணம் ஆகிவிட்ட காலம் இது.



அந்தச் சாதனை மகுடத்தில், இன்னும் ஒரு மாணிக்கம் தான், இந்தப் பெண் கமாண்டோக்களின் வெற்றி! இந்த வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்.

# படமும் செய்தியும்



பசுமைத் திட்டத்தைச் சிறப்பாக
செயல்படுத்தி வரும்
மாவட்ட ஆட்சியர்களுக்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
அவர்கள்
5–6–2003 அன்று
தலைமைச் செயலகத்தில்
பசுமை விருதுகளை வழங்கி
பாராட்டுத் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
9–6–2003 அன்று சென்னை முகப்பேர் மேற்கு ஜெ. ஜெ. நகரில்
இராகமாலிகா என்னும் பெயரில் அமைந்துள்ள கடலோரக்காவல்
படையினருக்கான குடியிருப்பை திறந்து வைத்தார்கள்.








பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம்
வகுப்புத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள்
பெற்ற மாணவ மாணவிகளுக்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
9–6–2003 அன்று
தலைமைச் செயலகத்தில்
ரொக்கப்பரிசும், பாராட்டுச் சான்றிதழும்
வழங்கினார்கள்.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
5-6-2003 அன்று
தலைமைச் செயலகத்தில்
சுகாதாரத்துறையில் தகவல்
தொழில்நுட்பத்தின் முறை
என்ற நூலினை வெளியிட்டார்கள்.
இதன் முதல் பிரதியை
மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர்
திரு.வைத்திலிங்கம் அவர்கள்
பெற்றுக் கொண்டார்.

கோவை வனப் பகுதியில் பணியில்
இருந்தபோது மரணமடைந்த வனப்
பாதுகாவலர் சிவனின் ஐந்து வயது மகள்
லட்சுமியிடம் முதலமைச்சர் பொது நிவாரண
நிதியிலிருந்து ரூ.4 இலட்சத்திற்கான
காசோலையை
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
5-6-2003 அன்று
தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.






மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9–6–2003 அன்று,
சென்னை கிரீன்வேஸ் சாலை, "பூம்பொழில்" வளாகத்திலுள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில்
அமைந்துள்ள சிறப்பு சட்டப் பள்ளிக்கான அனைத்து வசதிகளுடன் கூடிய நூலகம், கருத்தரங்குக் கூடம், வகுப்பறைகள்
முதலான பல்வேறு வசதிகளுடன் அமையவுள்ள புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

நவீன கட்டடக் கலை அழகிலும் மற்றும் சர்வதேச அளவில் கல்வித்துறையில் மரியாதையும் பெற்றுத்தரும் வகையில் அமையவுள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின் புதிய வெள்ளிவிழா நிருவாக வளாக கட்டடத்திற்கு 9–6–2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டி சிறப்புரையாற்றினார்கள்.










மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 5–6–2003 அன்று தலைமைச் செயலகத்தில், பல்வேறு கால கட்டங்களில் எடுக்கப்படும் செயற்கைக் கோள் வரைபடங்களைக் கொண்டு வனப்பரப்பில் ஏற்படும் மாற்றங்களை அவை எந்த இடத்தில் நிகழ்ந்துள்ளன என கண்டறியும் தரவு மையத்தையும் இணைய தளத்தையும் தொடங்கி வைத்தார்கள்.



# தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கும் இலட்சியத்தை அடைவேன்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்




***(திண்டுக்கல் மாவட்டத்தில் 7.3.2003 அன்று நடைபெற்ற வளர்ச்சித் திட்டப் பணிகள் திறப்பு விழா மற்றும் புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டுவிழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை)***

“சீரும் சிறப்புமாக திண்டுக்கல் மாநகரில் நடைபெறும், இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு, எனது அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய, உங்கள் அனைவரையும் காண்பதிலும், உங்களுடன் எனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதிலும், நிறைவேற்றப் பட்ட திட்டங்களைத் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். திண்டுக்கல் என்றதும், மலை வாழைப்பழமும், கொடைக்கானல் குளிர்ச்சியும், பழனி பஞ்சாமிர்தமும் நினைவுக்கு வரும். வாழைப் பழம் இனியது; குளிர்ந்த காற்று இனியது; பஞ்சாமிர்தம் இனியது. இப்படி எல்லாமே இனிமையாக விளங்கும் இடத்தில் வசிக்கும் நீங்கள், இனியவர்களாக இருப்பதில் எந்த வியப்பும் இல்லை.

திண்டுக்கல் – இந்தப் பெயரே விசித்திரமானது. ‘திண்டு’ என்பது மென்மையாக இருக்கும். ‘கல்’ என்பது வன்மையாக இருக்கும். ஆகவே, மென்மையும், வன்மையும், சேர்ந்தது தான் திண்டுக்கல். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூட அப்படித்தான். அது, பாசத்தோடு பழகுவோர்க்கு பால் போன்றது. ஆனால், பகைவர்க்கு வேல் போன்றது. உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் கூட அப்படித்தான். என்னிடம் தண்ணீரின் தன்மையும் உண்டு; செந்தீயின் வெம்மையும் உண்டு.

இது முரண்பாடு அல்ல – யாரிடத்தில் எப்படி இருக்க வேண்டுமோ, அப்படி இருக்கக் கூடிய ஆற்றல்! அண்மையில் நடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுவில் கூட நான் குறிப்பிட்டேன்: "நான் மிகவும் அமைதியானவள். என்னை கோபக்காரி என்று சொல்வது உண்டு. அது உண்மை அல்ல. உண்மையாகவே நான் மிகவும் அமைதியான சுபாவம் படைத்தவள்".

"ஆனால், என்னை அழிக்க ஒருவர் வருகின்ற போது, என்னை தாக்க ஒருவர் வருகின்ற போது, என் மீது ஒரு படையே, பழி வாங்கும் படலத்தையே கட்டவிழ்த்து விடும் போது என்னை தற்காத்துக் கொள்ள வேண்டாமா? அப்படி தற்காத்துக் கொள்ளும் முயற்சியில், அவர்கள் ஒரு அடி போட்டால், பதிலுக்கு பத்து அடி போடுவேன்" என்று நான் என்னைப் பற்றி கூறி உள்ளேன். திண்டுக்கல் என்ற பெயரைக் கேட்டவுடனேயே, இப்படி நமக்குள் எத்தனையோ சிந்தனைகள் தோன்றுகின்றன. 'திண்டு' போன்ற 'கல்' அமைப்பு உள்ளதால், "திண்டுக்கல்" என அழைக்கப்பட்டது என்று ஆவணங்கள் கூறுகின்றன. இன்னொரு வகையில் கூட, திண்டுக்கல்லுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், நெருங்கிய தொடர்பு உண்டு.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கிய பிறகு, முதன் முதலாக தனது வேட்பாளரை நிறுத்தியது இங்கு தான்.

அப்போது திண்டுக்கல் மக்களாகிய நீங்கள், என்ன செய்தீர்கள்? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 'திண்டை'த் தந்தீர்கள்! எதிர்த்து நின்ற தி.மு.க.விற்கு 'கல்' லைத் தந்தீர்கள்! எனவே, திண்டுக்கல் என்றைக்கும், எங்கள் அன்பிற்குரிய திண்டுக்கல் தான்!

திண்டுக்கல் மாவட்டம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட மாவட்டம் என்பது, நமக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கும் மற்றொரு செய்தி.

## வீரத்தின் விளைநிலம்

6,267 சதுர கிலோ மீட்டர் பரப்பில், ஏறத்தாழ 20 இலட்சம் மக்களைக் கொண்ட மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம். ஒரு மாவட்டத்தைச் சுற்றி, எட்டு மாவட்டங்களும், ஒரு மாநிலமும் எல்லையாக அமைந்திருக்கிறது என்று சொன்னால், நிச்சயம் அது திண்டுக்கல் மாவட்டம் மட்டுமாகவே இருக்கும்.

திண்டுக்கல்லின் வரலாறு என்பது, அதன் கோட்டையின் வரலாறு என்றே கூறிவிடலாம்.

**பள்ளி உதவி ஆசிரியர்கள் நியமனம் குறித்த தகவல்**



*அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் சென்னை மாநகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது சிறுபான்மை மொழிகளுக்கான மொழி ஆசிரியர்கள் மற்றும் பள்ளி உதவி ஆசிரியர்கள் பணியிடங்களை நிரப்புவதற்கான போட்டி எழுத்துத் தேர்வு ஜூலை 2003இல் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட உள்ளது.*

*காலிப் பணியிட விவரம் மற்றும் விண்ணப்பிக்கும் முறை சார்ந்த விவரங்கள் அறிய பள்ளிக் கல்வி இயக்குநர் வளாகம், கல்லூரி சாலை சென்னை–6இல் அமைந்துள்ள ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தகவல் பலகையிலும், ஆசிரியர் தேர்வு வாரியம் – இணையதளம் trb.tn.nic.in மூலமும் அறியலாம்.*

*மேலும் விவரங்களுக்கு நேரில் அணுகவும்.*

*தொலைபேசி எண்கள் : 28229688, 28272455 ஆகியவற்றில் தொடர்பு கொள்ளவும்.*
*மின் அஞ்சல் : trb @ tn.nic.in*

திண்டுக்கல்லின் வரலாறு, அதன் கோட்டையைச் சுற்றியே அமைந்திருக்கிறது. திண்டுக்கல் வரலாற்றுடன் தொடர்புடைய ஒரு பெயரை, நாம் மறந்துவிட முடியாது. சிவகங்கைச் சீமையின் அரசர், முத்துவடுகநாதர் பெரிய உடையாத் தேவர் மறைந்த பிறகு, அவரது மனைவி வீரமங்கை வேலுநாச்சியார், திண்டுக்கல் வந்து, ஹைதர் அலியின் ஆதரவு பெற்று, திண்டுக்கல் கோட்டையிலும், விருப்பாச்சிக் கோட்டையிலும், எட்டு ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். திப்பு சுல்தான் அளித்த ஆயுத உதவியுடன், 1780–இல் படை நடத்தி, கோச்சடையில் நவாபின் படைகளையும், மானாமதுரையில் ஆங்கிலேயர்களின் படையையும் ஓட ஓட விரட்டி, தனது கணவர் இறந்த பொழுது எடுத்துக் கொண்ட சபதத்தின்படி, சிவகங்கைச் சீமையை மீட்டு, வீர சுதந்திரம் படைத்த வரலாறு, இன்று நினைத்தாலும், நமக்கெல்லாம் வீர உணர்வை ஊட்டுகின்றது.

ஜான்சி ராணி வடக்கே தோன்றி, வரலாறு படைப்பதற்கு முன்பே தெற்கே வரலாறு படைத்தவர் வேலு நாச்சியார் என்பதை அறிந்து, வீரத்தின் விளைநிலம் இந்த மண் என்று நாம் நெஞ்சம் பூரிக்கிறோம்.



அந்தத் தியாக வரலாற்றின் பிற்காலப் பிரதிநிதி தான், வத்தலகுண்டு தந்த வீரர், சுப்பிரமணிய சிவா. இன்றைக்கு யார் யாரையோ தளபதி என்கிறார்கள். தமிழ் நாடெங்கும் சுற்றிச் சுழன்று, சுதந்திரப் போராட்டத்திற்கு இளைஞர்களைத் தயார் படுத்திய, சுதந்திர போராட்டத் தளபதி, வீரர் சுப்பிரமணிய சிவா அவர்கள். அவர் பிறந்த வத்தலகுண்டு நமது வணக்கத்துக்கு உரியது.

'பயிரை வளர்ப்பது கழனி – நம் உயிரை வளர்ப்பது பழநி' என்று கவிஞர்கள் பாடுகின்றபடி, அறுபடை வீடுகளில் ஒரு அற்புதப் படை வீடு பழநி! அந்தப் பழநியைத் தன்னகத்தே கொண்டதால், முருக பக்தர்களுக்கும் இனிய மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம்! முருகன் என்றதும் எனக்குத் திருப்புகழும், அருணகிரிநாதரும் நினைவுக்கு வருகிறார்கள்!

முருகன் அருள் பெற, மற்ற மொழிகளால் வாழ்த்த வேண்டும். ஆனால், தமிழ் மொழியில் திட்டினால் கூட, முருகப் பெருமான் அருள் புரிவாராம்.

அருணகிரி நாதர் கூறுகிறார் –

'மொய்தார் அணிகுழல்
வள்ளியை வேட்டவன்
முத்தமிழால் வைதாரையும்
அங்கு வாழ வைப்பான்'

இந்த அருமையான கந்தர் அலங்கார வரிகள், எந்த மொழியால் இறைவன் அருளை எளிதில் பெறலாம் என்பதை விளக்குகின்றன.

பழநி மலைப்பாதைக்கு மூன்று விஞ்ச் (winch)–கள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. இந்த விஞ்ச் மேலே செல்ல எட்டு நிமிடங்கள் எடுத்துக் கொள்கிறது. இதன் மூலம் மணிக்கு சுமார் 220 பக்தர்கள் வீதம், நாள் ஒன்றுக்கு 3,000 பக்தர்கள் மட்டும் மேலே செல்லவும், கீழே வரவும் முடியும். பண்டிகைக் காலங்களில், பக்தர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் வகையில், "கேபிள் கார்" திட்டத்தினை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, ஐந்து கோடி ரூபாய் மதிப்பில், செயல்படுத்த ஆணை வழங்கி, அதன் ஆரம்பகட்டப் பணிகள், இன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த கேபிள் காரில், 4 நபர்கள் அமரும் வசதியுடன் கூடிய, 20 பெட்டிகள் இருக்கும். இப்பெட்டி ஒவ்வொன்றும் கீழிருந்து மேல் செல்ல, சுமார் ஒன்றேகால் நிமிடங்களே ஆகும்.

மணிக்கு 800 பக்தர்கள் வீதம், நாளொன்றுக்கு 11,200 பக்தர்கள் மேலே மற்றும் கீழே சென்று வர இயலும். 2004–ம் ஆண்டு ஜனவரி மாதம், இத்திட்டம் முடிவடைந்து, பக்தர்களின் உபயோகத்திற்கு கொண்டு வரப்படும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மாசு அகற்றும் பணி

"ஏழைகளின் ஊட்டி" என அழைக்கப்படும் மலைவாழ் இடம், கொடைக்கானல். 33 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட கொடைக்கானல் நகரில், 55 ஏக்கர் பரப்பளவில், அமைந்துள்ள கொடைக்கானல் ஏரி, சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரும் ஒரு அம்சமாகும். கண்கவர் கொடைக் கானல் ஏரியின் நீர்ப்பிடிப்புப் பகுதி, கழிவுநீர் வந்து சேரும் இடமாக தற்போது உள்ளது. ஏரியில் மாசு அதிகரித்து, ஏரி நீர் மோசமான நிலையை அடைந்து உள்ளது. எனவே, ஏரியில் கழிவு கலக்காமல் இருக்கவும், மாசு அடைந்த ஏரியை, முன் போல் தெளிந்த நிலைக்கு கொண்டுவரவும் நடவடிக்கை எடுக்க, கொடைக்கானல் ஏரி பாதுகாப்புப் பணிக்கு, 10 கோடியே 33 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், மாசு தடுப்புப் பணி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலும், ஏரியில் மாசு அகற்றும் பணி, பொதுப் பணித்துறையின் வாயிலாகவும், மேற்கொள்ளப்பட உள்ளது,

## முடிவுற்ற பணிகள்

அந்த வகையில், திண்டுக்கல் மாவட்டப் பெருமக்களாகிய, நீங்கள் அனைவரும் பயன்பெறும் வகையில், இன்றைய தினம், 254 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்புடைய திட்டப் பணிகளை, உங்களுக்கு கொண்டு வந்துள்ளேன். முடிவுற்ற பணிகளைப் பொறுத்த வரையில், 83 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, நிறைவுற்ற பணிகளை திறந்து வைத்துள்ளேன். அவற்றில் குறிப்பாக, சில முக்கிய திட்டப் பணிகளை, இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

ஊரக வளர்ச்சி முகமை திட்டத்தின் கீழ், 22 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பில், தொகுப்பு வீடுகள், சாலைப் பணிகள், கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள் போன்ற கட்டுமானப் பணிகளை, இந்த இனிய விழாவில் நான் திறந்து வைத்துள்ளேன்.

பொதுப் பணித் துறையின் கட்டடப் பிரிவின் சார்பாக, கட்டி முடிக்கப்பட்டுள்ள, 2 கோடியே 91 இலட்சம் மதிப்பீட்டிலான, மாவட்டம் எங்கும் அமைந்துள்ள பல்வேறு கட்டடங்கள், இன்றைய தினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்த வரையில், நகரக் கோட்டத்தின் கீழ், 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், எரியோடு கிராம பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், மற்றும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் குடிநீர்த் திட்டம் – 4 கோடியே 61 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 85 கிராமங்களில் மின் விசை

இறைப்பான்கள் – 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 13 ஒன்றியங்களில் சிறு மின் விசை இறைப்பான்கள், போன்ற முக்கிய குடிநீர் திட்டப் பணிகளை, இன்று நான் திறந்து வைத்துள்ளேன்.

70 இலட்சம் ரூபாய் மதிப்பில், அருள்மிகு பழனியாண்டவர் பெண்கள் கல்லூரியில், புதிய விடுதி கட்டுதல், அருள்மிகு பழனியாண்டவர், ஆண்கள் தொழில்நுட்பக் கல்லூரியில், ஆய்வுக் கூடங்கள் அமைத்தல் – 1 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், வனத் துறையின் கீழ், தரம் குன்றிய காடுகளில் தோட்டம் அமைத்தல் – 6 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தமிழ் நாடு மின்சார வாரியத்தின் கீழ், செங்குறிச்சி, செந்துறை ஆகிய இடங்களில், துணை மின் நிலையங்கள் அமைத்தல் – 5 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நெடுஞ்சாலைத் துறையின் கீழ், பல்வேறு சாலைகள் மற்றும் உயர்மட்ட பாலங்கள் அமைத்தல், போன்ற பணிகளும், இன்றைய தினம் இங்கே என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், காவல் துறையின் கீழ், பெண் காவலர் ஓய்வு அறை, துப்பறியும் நாய் கூடம் அமைத்தல் – திண்டுக்கல் நகராட்சியில், 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சாலைகள், வணிக வளாகம், சிமெண்ட் தளம் அமைத்தல் – பழநி நகராட்சியில், 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த சுகாதார வளாகம், ஆழ்குழாய்கள் அமைத்தல்; – கொடைக்கானல் நகராட்சியில், 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த சுகாதார வளாகக் கட்டடம், மற்றும் சாலைகள் அமைத்தல் – பல்வேறு பேரூராட்சிகளில், 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கட்டி முடிக்கப்பட்டுள்ள பணிகள், ஆகியவை எல்லாம் இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பல ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்காவில் பஸிஃபிக் (PACIFIC) கடற்கரை ஓரம், ஒரு நகரத்தில் ஒரு விழா நடைபெற்றது. அந்த விழாவை ஏற்பாடு செய்தவர்கள், ஒரு போட்டி நடத்தினார்கள். உலகப் புகழ் பெற்ற நகைச்சுவை நடிகர், "சார்லி சாப்லின்" போல, யார் சிறப்பாக நடிக்கிறார்களோ, அவர்களுக்கு பரிசுகள் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

விழா நாள் வந்தது. போட்டி ஆரம்பம் ஆனது. சார்லி சாப்லின் போல வேடமிட்டவர்கள், பலர் அங்கு வந்து, சார்லி சாப்லின் போலவே நடித்துக் காட்டினார்கள். இதில், சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், நடிகர் சார்லி சாப்லின், தானே அந்தப் போட்டியில் கலந்து கொண்டு நடித்துக் காட்டினார். போட்டியில் சார்லி சாப்லின் மாதிரி நடித்தவர்களில், சிறந்த மூன்று பேர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. நிஜமான சார்லி சாப்லினுக்கு, என்ன பரிசு கிடைத்தது என்று நினைக்கிறீர்கள் ? இரண்டாவது பரிசு தான் கிடைத்தது.




இது தான் உலகம் ! இங்கு உண்மைக்கு இரண்டாம் இடம் தான்!

இப்படி தமிழ்நாட்டில் சில பத்திரிகைகளும், சில தனியார் தொலைக்காட்சிகளும், பொய்யை, மெய்யாகக் காட்டி வருகின்றன. ஆனால் நம்முடைய மக்களை, யாரும் ஏமாற்ற முடியாது. அவர்களை எந்தக் கொம்பனாலும் ஏமாற்ற முடியாது!

தேர்தல் கணிப்புகள் என்று சொல்லப்படுபவை எல்லாம், 'மோசடி' என்னும் விஷயம் தமிழக மக்களுக்கு மிக நன்றாகவே தெரியும்.

இங்கே, பல தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களை, தன்னிடம் வைத்திருக்கும் ஒரு குடும்ப டி.வி நிறுவனம், நிறைய பொய் மூட்டைகளை அவிழ்த்து விடலாம், என்று நினைத்துக் கொண்டிருக்கிறது.

அந்த நினைப்பிலே மண் அள்ளிப் போட்டவர்கள், நமது தமிழ் நாட்டு மக்கள் என்பதை நினைத்து, நான் மிகவும் பெருமைப் படுகின்றேன்.

உண்மையையும், உண்மை மாதிரி மாய்மாலம் காட்டும் பொய்யையும், அடையாளம் காண்பது தான் அறிவு ! நம் தமிழக மக்கள் அறிவாளிகள் ! அவர்களுக்கு எது உண்மை என்று நன்கு தெரியும்.





இத்தகைய அன்பும், அறிவும், ஆற்றலும் படைத்த தமிழக மக்களுக்கு, ஏராளமான திட்டப் பணிகளை வழங்க வேண்டும், என்பதே எனது விருப்பம். குறிப்பாக, சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும், மேலும் மேலும் என்னென்ன வசதிகளை எல்லாம், உருவாக்கித் தரலாம் என்று தான், எங்களது அரசு தொடர்ந்து சிந்தித்து, செயலாற்றி வருகிறது. அல்லவற்றை புறக்கணித்து, நல்லவற்றை தேர்ந்தெடுத்து, ஆதரிக்கின்ற தமிழக மக்களுக்கு, எனது நன்றியை காணிக்கை ஆக்குகின்ற வகையில் தான், இன்றைய தினம், இந்த மாவட்டத்து மக்கள், பயன் பெறுகின்ற வகையில், இந்த இனிய விழாவிலே, 164 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள, பல்வேறு துறைகளைச் சார்ந்த 2,195 திட்டப் பணிகளுக்கு, அடிக்கற்கள் நாட்டியுள்ளேன் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கேபிள்கார் அமைக்கும் திட்டம்

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ், 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில், முழு சுகாதாரத் திட்டம் – 5 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், "கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" – 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கிராம வேலை வாய்ப்புத் திட்டம் – ஆகிய திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டியதில், நான் மன நிறைவு அடைகிறேன்.

தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ், 10 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கொடைக்கானல் ஏரியில் மாசு அகற்றி சீரமைக்கும் திட்டம் – 91 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திண்டுக்கல் நகராட்சி, நத்தம் நகர பேரூராட்சி, 5 ஊரக பேரூராட்சிகள், மற்றும் 816 ஊரக குடியிருப்புகள், ஆகியவை அடங்கிய, கூட்டுக் குடிநீர் திட்டம் – 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பழநி நகராட்சியில், பகுதி பாதாள வடிகால் திட்ட சீரமைப்புப் பணிகள் – 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் கேபிள் கார் அமைக்கும் திட்டம் – 1 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பொதுப் பணித் துறையின் கீழ், மாணவர் விடுதிகள் கட்டுதல் – 9 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் வாரியத்தின் கீழ், கொடைக்கானல் மற்றும் அய்யலூர் ஆகிய இடங்களில், துணை மின் நிலையங்கள் அமைத்தல் – 13 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நெடுஞ்சாலைத் துறையின் கீழ் சாலைகள், நடை பாதைகள், மற்றும் பாலங்கள் அமைத்தல் – 2 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், திண்டுக்கல் நகராட்சியில் தினசரி அங்காடி, மற்றும் நவீன சுகாதார வளாகங்கள் கட்டுதல் – 1 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பழநி நகராட்சியில், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் அமைத்தல் – 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கொடைக்கானல் நகராட்சியின் கீழ், கான்கிரீட் சாலைகள், நடைபாதைகள், மற்றும் தடுப்புச் சுவர்கள் அமைத்தல் – தமிழ்நாடு விளையாட்டு

மேம்பாட்டு ஆணையத்தின் கீழ், 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நீச்சல் குளம், உடற்பயிற்சி கூடம், மற்றும் தடகளம் அமைத்தல், போன்ற பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டியதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஏழை எளியோர், ஆதரவற்றோர், முதியோர், விதவைகள், நலிவுற்றப் பிரிவினர், ஆகிய சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்கு கைகொடுத்து, அவர்களை உயர்த்த வேண்டும் என்பதில், நான் அளவற்ற அக்கறை கொண்டுள்ளேன்.

## ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம்

அந்த வகையில், நலிந்தோருக்கும், ஆதரவற்றோருக்கும், மகளிருக்கும் என, சமுதாயத்தின் அடித்தளத்து பிரிவினர் அனைவருக்கும், தமது வாழ்க்கையில் முன்னேற உரிய உதவிகளை வழங்குவதில், எங்கள் அரசு என்றைக்கும் முன்னணியில் உள்ளது என்பதை, பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவிலே, 26 அரசுத் துறைகள் மூலம், 21,007 பயனாளிகளுக்கு, மொத்தம், 6 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, பல்வேறு நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்படுகின்றன. அவை அனைத்தையும் உங்களுக்கு எடுத்துச் சொல்ல, நேரம் இல்லாத காரணத்தினால், வழங்கப்படுகின்ற உதவிகளில், முக்கியமான ஒரு சிலவற்றை மட்டும், எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

முதலில், 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 9,730 பேர் பயனடையும் வகையில், நீர்வடிப் பகுதி வளர்ச்சித் திட்டம், மற்றும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் – 1 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 185 பேர் பயனடையும் வகையில், தொழில் வணிகத் துறையின் கீழ், மகளிர் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக, 2,347 பயனாளிகளுக்கு, 69 இலட்சம் ரூபாய் அளவிற்கு குடியிருப்பு, மற்றும் சுய வேலைவாய்ப்புத் திட்டம் – வருவாய்த் துறையின் மூலமாக, 1,696 பேர்களுக்கு, 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இலவச வீட்டுமனை பட்டாக்கள் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ், 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 1,115 பேர் பயனடையும் வகையில், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் – கூட்டுறவுத் துறையின் சார்பாக, 1,010 பயனாளிகளுக்கு, 1 கோடியே 96 இலட்சம் ரூபாய் அளவில், விவசாயம் சார்ந்த தொழில் அபிவிருத்திக்காக, கடன் உதவிகள், ஆகியவை வழங்கப்படுகின்றன. இவை மட்டுமின்றி, சமூக நலத்துறை, வனத்துறை, சுகாதாரத் துறை, மற்றும் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை, ஆகிய பல்வேறு துறைகளின் சார்பாகவும், இந்த இனிய விழாவிலே, பல ஆயிரக்கணக்கான பயனாளிகளுக்கு, நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதையும், மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நலத்திட்ட உதவிகள் அனைத்தையும், பயனாளிகள் அனைவருக்கும், எனது கரங்களாலேயே வழங்க வேண்டும் என்ற பெருவிருப்பம் எனக்கு இருந்தாலும், போதுமான நேரமில்லாத காரணத்தினால், இந்த மேடையில் 15 பயனாளிகளுக்கு மட்டும், நலத்திட்ட உதவிகளை நானே வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும், இங்கேயே, இந்த விழாவிலேயே வழங்கி சிறப்பிப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு உதவிகள் பெறவுள்ள பயனாளிகள் அனைவரும், தாம் செய்து வருகின்ற தொழில்களில், மென்மேலும் உயர்வினை பெற வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

உங்களது அன்புச் சகோதரியின் அரசு தமிழகத்தை ஒவ்வொரு துறையிலும் முன்னேற்ற, பயனுள்ள திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. சாதிகள், மதங்கள், இவற்றால் மக்கள் பிரிந்து கிடக்கும் வரை, எத்தனை முன்னேற்றத் திட்டங்களைக் கொண்டு வந்தாலும், ஒரு நாடு முன்னேற இயலாது என்பதை நாம் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். நம்மிடையே நிலவுகின்ற செயற்கையான பிரிவுகளை, பேதங்களை, மூட்டை கட்டி வைத்து விட்டு, ஒன்று படுவோம், உயர்வோம் என்று, இந்த நல்ல நாளிலே சூளுரை ஏற்போம்!

எனது முழு கவனமும், தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலம் ஆக்குகின்ற, லட்சியத்தை அடைவதில் தான் இருக்கிறது என்று கூறி, எத்தனை இடர்பாடுகளை இவர்கள் கொடுத்தாலும், அவற்றை எல்லாம் வென்று, இந்த லட்சியத்தை அடைவேன் என்று, எனது அன்புக்குரிய தமிழக மக்களுக்கு, இந்த் விழாவின் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அரசு வழங்கும் உதவிகளை, முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, பயனாளிகள் அனைவரும், தங்களது பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்ள வேண்டும், என்பது தான் அரசின் குறிக்கோள் ஆகும். தங்களது தொழில் முயற்சிகளில், முழுமையாக தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, பயனாளிகள் வெற்றி பெற வேண்டும் என்பதே, எனது விருப்பமாகும். எந்தத் தொழிலை நாம் செய்தாலும், அதைச் செம்மையாகச் செய்ய வேண்டும் என்றும், வாழ்க்கையில் வெற்றி, நிச்சயமாக உங்களை வந்து சேரும் என்றும் கூறி, உங்கள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இந்த விழா, சீரோடும் சிறப்போடும் நடைபெறக், காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன்". •



# "குழந்தைத் தொழிலாளர்முறை எதிர்ப்பு நாள் - ஜூன் 12

குழந்தைத் தொழிலாளர் முறையை அடியோடு அகற்றும் பணியில் விரைவாக முன்னேறி வரும் தமிழகம், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு செயலாக்கத் திட்டத்திற்கு தமிழக அரசு ஆணை எண்.எம்எஸ் 53 தொழிலாளர் மற்றும் பணியமர்த்தல் நாள் 12.5.2003 மூலம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி ஆண்டுதோறும், பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில், 'குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாள்' ஒன்றினை மேற்கொள்ள





முன்மொழிந்துள்ளது. தொழிலாளர்துறை ஆணையர், 'பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் ஆண்டுதோறும், ஜூன் திங்கள் 12–ஆம் நாளை "குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாளாக" அனுசரிக்கிறது' என்றுஅறிவித்துள்ளார். அவ்வாறே நாமும் பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனத்தின் பின் திட்டத்தைப் பற்றி ஆண்டுதோறும் ஜூன் 12–ஆம் நாளை 'குழந்தைத் தொழிலாளர்முறை எதிர்ப்பு நாளாக' மேற்கொள்ள, நம் தமிழக அரசு இசைவளித்து ஆணை பிறப்பித்துள்ளது.

மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத்திட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல் முக்கிய அம்சமாக இடம் பெற்றுள்ளது. அபாயகரமான தொழில்களில் உள்ள குழந்தைகளை 2005–ஆம் ஆண்டிற்குள்ளும், அபாயமற்ற தொழில்களில் உள்ள குழந்தைகளை 2007–ஆம் ஆண்டிற்குள்ளும் அகற்றும் முக்கிய நோக்குடன் இச்செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

- குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான செயல்திட்டம்
- குழந்தைத் தொழிலாளர்களை கணக்கெடுப்பின் மூலம் அடையாளம் காணுதல்
- குழந்தைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்
- ஐந்து வயது முதல் ஏழு வயது வரையிலான குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்த்தல்
- குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு முறையான பள்ளிகளில் சேர்த்தல்
- முறைசார்ந்த பள்ளிக்கல்வியை மேம்படுத்துதல்
- குழந்தைகளுக்குச் செயல்திறன் பயிற்சியளித்தல்
- குழந்தைத் தொழிலாளர் முறையை தடைப்படுத்தும் சட்டங்களை அமலாக்குதல்
- விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
- திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை இலக்கை நோக்கி நடைமுறைப்படுத்துதல்
- குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை குறித்த மாநாடுகள் / கருத்தரங்குகள் / பயிலரங்குகள் / பயிற்சிகள் ஆகியவற்றை நடத்துதல்
- பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்தல்
- நிறுவன உரிமையாளர்களின் பங்கேற்பு
- குழந்தைத்தொழிலாளர் முறை ஒழிப்பில் சமுதாயத்தின் பங்கேற்பு ஆகியவை இச்செயல் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

### இளைஞர்கள்



வாலிபர்களுக்கு வெறும் உற்சாகமும், துணிவும், தியாகபுத்தியும் மாத்திரம் இருந்தால் போதாது. நன்மை தீமையை அறியும் குணமும், சாத்தியம் அசாத்தியம் அறியும் குணமும், ஆய்ந்து பார்க்கும் தன்மையும் இருந்தால்தான் வாலிபர்கள் பொதுவில் பயன்படக்கூடியவர்கள் ஆவார்கள்.

– தந்தை பெரியார்

# மக்களுக்கு எப்படி உதவலாம் என்பதே என் சிந்தனை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

"தமிழ் மூதாட்டி ஔவையாரால் புகழ்ந்து பாடப்பட்ட கடையெழு வள்ளல்களில் ஒருவரான, அதியமான் மரபினர் ஆண்ட வீரமிக்க பூமியான தகடூராம் தருமபுரியில் நடைபெறுகின்ற அரசு விழாவில் கலந்து கொண்டு, 100 கோடி மதிப்பில் பல்வேறு திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டி, அரசு நலத் திட்ட உதவிகளை வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

அறம் பல பாடிய தமிழ் மூதாட்டி ஔவையாரும், கொடைத் தன்மைக்குச் சிகரமாக விளங்கிய வள்ளல் அதியமானும் வாழ்ந்த இந்த மண்ணிற்கு என்றும் மங்காப் பெருமை உண்டு.

தமிழ் மூதாட்டி ஔவைப் பாட்டியின் பாடல்கள் அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றில் காணப்படுகின்றன. புறநானூற்றில் தான் ஔவையாரின் பாடல்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. அதாவது 33 பாடல்கள். அவைகளில் 23 பாடல்கள் அதியமான் நெடுமான் அஞ்சி பற்றியன. 3 பாடல்கள் அவனுடைய மகன் பொகுட்டெழினி பற்றியவை. இவர்கள் இருவருமே தகடூரை, அதாவது இன்றைய தருமபுரியை தலை நகராகக் கொண்டு கோலோச்சியவர்கள்.

அரிதாகக் கிடைத்த
ஒரு நெல்லிக் கனியால்
ஆயுள் பெருகும் என்று அறிந்தும் அந்த மூவாக் கனியை, ஔவைப் பாட்டிக்குப் பரிசாகக் கொடுத்தான் வள்ளல் அதியமான். தான் வாழ்வதை விட தமிழ் வாழ வேண்டும் என்று நினைத்தவன் வள்ளல் அதியமான்!

வடலூர் வள்ளல் பெருமான், சென்னை நகரை 'தருமமிகு' சென்னை என்று பாடியிருக்கிறார்.

'தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர் தலம் ஓங்கு கந்தவேளே'

என்பது அவர் கந்தக் கோட்ட முருகன் மீது பாடிய பாடல்.

ஆனால், தருமபுரி நகரமும், தருமபுரி மாவட்டமும், இயற்கையாகவே 'தருமம்' என்னும் அடைமொழியைப் பெற்றிருக்கின்றன. இதைக் காரணப் பெயராகவும் நாம் கொள்ளலாம்.





'நடந்தாய் வாழி காவேரி!' என்று பாடுவார் இளங்கோ அடிகள்.

காவேரி தமிழகத்தில் நடக்கத் தொடங்குவதே இங்கு தான்! காவேரி நதி, இம்மாவட்டத்தில் வலது காலை எடுத்து வைத்துப் புகுந்து தமிழ்நாட்டிற்கு வளம் தருகிறது. ஆனால், அக் காவேரியால் ஒரு ஏக்கர் நிலம் கூட இம்மாவட்டத்தில் பயன் பெறுவதில்லை. இப்படி அடுத்தவருக்கு தருமம் புரிகிற மாவட்டமாக இருப்பதால் தான், இம்மாவட்டம் தருமபுரி மாவட்டம் என்று பெயர் பெற்றதோ என எண்ணுகிறேன்.

தருமபுரி மாவட்டத்தில், கிழக்குத் தொடர்ச்சி மலை மற்றும்மேற்குத்தொடர்ச்சி மலை ஆகியவை உள்ளன. இரண்டும் இம்மாவட்டத்தில் தான் கூடுகின்றன. மாவட்டம் முழுவதிலுமே உயர்ந்த மலைகளும், தாழ்வான குன்றுகளும் உள்ளன.

## ராஜாஜியும் பெரியாரும்

தமிழக வரைபடத்தில், கடைக் கோடியிலுள்ள ஒரு குக்கிராமமான தொரப் பள்ளியில் பிறந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இந்தியத் திருநாட்டின் தலைமைப் பதவி வரை உயர்ந்து இம்மண்ணிற்கு பெருமை சேர்த்தவர். ராஜாஜி அவர்கள், இந்திய கவர்னர் ஜெனரல் என்னும் உச்சபட்சமான பதவியிலே இருந்தார்.

மூதறிஞர் ராஜாஜியின் 91ஆவது பிறந்த நாளின் போது, தந்தை பெரியார் திருச்சியிலே வாழ்த்துத் தெரிவித்துப் பேசினார்:

"ராஜாஜிக்கு என் மனமார்ந்த பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் தம் லட்சியங்களை உண்மையாகக் கடைபிடிப்பவர். லட்சியங்களுக்காகத் தியாகம் செய்ய தயங்காதவர்" என்று தந்தை பெரியார் குறிப்பிட்டார்.

மேலும் காங்கிரசில் தாம் இருந்த போது ராஜாஜியுடன் கழித்த மகிழ்ச்சியான நாட்களை நினைவு கூர்ந்து பெரியார் பேசினார்.

"நாங்கள் சேர்ந்திருந்த போது நான் அவரது சீடனைப் போலவே நடந்து கொண்டேன். இருப்பினும், அவர் என்னைத் தனது தலைவர் போல் நடத்தினார். அவர் எனக்கு மிக கௌரவமான ஸ்தானம் தந்த போதிலும், நான் அவரது உதவியாளனைப் போலவே நடந்து கொண்டேன். பிற்பாடு நாங்கள் அரசியலில் விலகினோம். எங்கள் கொள்கைகள் மாறுபட்டன. எனினும் தனிப்பட்ட முறையில் எங்களிடம் பேதமில்லை. எங்களது மகத்தான நட்பை, இருவரும் போற்றி வருகிறோம்."

தந்தை பெரியார் இவ்வாறு உள்ளார்ந்த அன்புடன் மூதறிஞர் ராஜாஜியைப் பற்றிக் கூறினார்.

மூதறிஞர் ராஜாஜியோ, "பெரியார் கூறியதைப் போல் வேறு எதுவும் என் கவனத்தை ஈர்த்து மனதைத் தொட முடியாது" என்றார்.

இவ்வாறு, தந்தை பெரியார் அவர்களது மனதைக் கவர்ந்த மாமனிதராகிய ராஜாஜி அவர்கள் பிறந்த தொரப் பள்ளியை தன்னகத்தே கொண்ட பெருமைக்குரிய மாவட்டமான தருமபுரியில் இருந்து, பேசிக் கொண்டிருக்கிறோம் என்று எண்ணும் போதே ஒரு தனி பெருமித உணர்வு என் நெஞ்சில் எழுகிறது!

## பழம் பெரும் சின்னங்கள்

இம்மாவட்டத்தைப் பற்றி நினைக்கும் போது சொல் வழக்கு ஒன்று என் நினைவிற்கு வருகின்றது. தருமபுரி என்றாலே, "தளி, களி, புளி, கம்பளி" என்று வேடிக்கையாகச் சொல்வார்கள். தருமபுரி மாவட்டத்திலுள்ள தளி பகுதி எப்போதும் குளிர்ந்த சீதோஷ்ண நிலையோடு இருக்கும். இதனால் அதை சர். தாமஸ் மன்றோ, "Little England" என்று குறிப்பிட்டிருக்கிறார். இம்மாவட்டத்தில் நெல் விளையும் பகுதி குறைவு. ஆகையால் பெரும்பாலான மக்கள், கேழ்வரகுக் களியையே உணவாகக் கொண்டு பழகியுள்ளார்கள். இப்பகுதியில் உரிகம் புளி, என்றொரு வகைப் புளி, அதிகம் விளைகிறது. இந்த வகைப் புளி அதிகச் சதைப் பிடிப்போடும், மிக நீளமாகவும் இருக்கும். வேறு எங்கும் இப்படி கிடைக்காது. குளிருக்கு கம்பளி உடை தயாரிக்க ஏற்ற அடர்த்தியான ரோமம் கொண்ட மேச்சேரி வகை செம்மறி ஆடுகள் இங்கே அதிகம். ஆகவே தான், தருமபுரி என்றால் "தளி, களி, புளி, கம்பளி" என்னும் சொல் வழக்கு வந்தது, என நினைக்கிறேன்.

அதியமான் கோட்டையில், சென்றாய பெருமாள் கோயிலும்; கிருஷ்ணகிரியில் சையது பாட்சா மலையும்; ராயக்கோட்டையில் மலைக் கோட்டையும் இந்த மாவட்டத்தின் பழம் பெருமை வாய்ந்த சின்னங்களாகும்.

ஒகேனக்கல்லில் நீர் வீழ்ச்சியும், கிருஷ்ணகிரியில் அணைக்கட்டும், தீர்த்தமலையில் நீர்வீழ்ச்சி மற்றும் கோயிலும் சுற்றுலாத் தலங்களாகும்.

தமிழகத்தின் சிறப்பு வாய்ந்த அருவியாக விளங்கும் ஒகேனக்கல், தனிச் சிறப்பு வாய்ந்த சுற்றுலாத் தலமாக, தினம் தினம் அனைவரையும் ஈர்த்து வருகிறது என்பது மாநிலத்துக்கே பெருமை தரும் செய்தியாகும்.

120 பெரிய தொழிற்சாலைகளையும், 13,858 சிறிய தொழிற்சாலைகளையும், 13,678 குடிசைத் தொழில்களையும், கொண்ட தருமபுரி மாவட்டம், தொழில் வளத்திலும் சிறந்து விளங்குவது கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

சேலம் மாவட்டத்திலிருந்து பிரிந்து 2.10.1965 முதல் தனி மாவட்டமாக உருப்பெற்று தருமபுரி மாவட்டம் முன்னேற்றப் பாதையில் பீடுநடை போட்டு வருவது நமக்கெல்லாம் பெருமை தருவதாகும்.

மிகவும் சிறப்புடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த விழாவில் எந்தப் பக்கம் பார்த்தாலும், திரளாக பெண்கள் கூடியிருப்பதை நான் காணுகிறேன்.

அவர்களுடைய அன்புச் சகோதரியான என் மீது வைத்துள்ள பேரன்பாலும், பாசத்தாலும், என்னைக் காணவும், எனது கருத்துக்களைக் கேட்கவும் திரளாகக் கூடியுள்ள இவர்களைப் பார்க்கும் போது ஒரு புறம் எனக்குப் பெருமிதமாக இருக்கிறது; பெருமையாக இருக்கிறது. அதே நேரம், ஒரு தமிழ் அறிஞர் கூறியதும் எனது நினைவுக்கு வருகிறது.

### பாலின நேர்மை நெறி

ஒரு கூட்டத்தில், அந்த தமிழ் அறிஞர் கூறினார்:– "நான் ஏகப்பட்ட இடங்களுக்குப் போய் இருக்கிறேன்; எத்தனையோ கூட்டங்களில் பேசி இருக்கிறேன். கன்னியாகுமரியிலிருந்து டில்லி வரையும், மலையாளக் கரையிலிருந்து பினாங்கு வரையும் போயிருக்கிறேன்.

"ஏறக்குறைய 400 பெண்கள் கூடியிருக்கும் கூட்டத்தில் பார்த்தால் கூட, நாலைந்து இளம் பெண்கள் தான் வலிமையான உடற்கட்டோடு இருப்பார்கள். ஏனைய இளம் பெண்களோ, மெலிந்து ஒல்லியாகக் காட்சி தருவார்கள்".

"எனது பாட்டியின் தாயார் உலக்கையைப் பிடித்து நெற்குத்தி வந்தாள். என் பாட்டி ஆட்டுக் கல்லில் மாவு அரைப்பாள். என் தாயாருக்கோ அம்மியில் கூட்டு அரைக்கும் அளவு பலம் இருக்கிறது. என் மனைவி கையில் கரண்டி பிடித்ததோடு சரி. என் மகளோ ஊசியும், நூலும் வைத்திருக்கிறாள். என் பேத்தி என்ன வைத்திருப்பாளோ தெரியவில்லை" என்று வேடிக்கையாகக் கூறினார் அவர்!

பெண்கள் வலிமையற்று இருப்பதைப் பற்றி இப்படி வருத்தப்பட்டார், அந்தத் தமிழ் அறிஞர். இது உண்மை தான்!

இந்த நிலையை மாற்றத் தான் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் பெரும் முயற்சி எடுத்து வருகிறேன்.

"பாலின நேர்மை நெறி", என்னும் கோட்பாட்டின் மூலம் பல வழிகளிலும் பெண்கள் ஏற்றம் பெற பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு பெண் கமாண்டோக்கள் பிரிவை இந்தியாவிலேயே முதல் முறையாக உங்கள் அன்புச் சகோதரியின் அரசு தான் ஏற்படுத்தியுள்ளது.

பெண்கள் காலம் காலமாக, பலவீனமானவர்கள் என்றே சித்தரிக்கப்பட்டு வந்துள்ளார்கள். பெண்களை மலருக்கும், கொடிக்கும் ஒப்பிட்டு கவிஞர்கள் பேசி, எழுதி பெண்களின் மென்மையைப் போற்றிய அளவுக்கு, அவர்களுடைய மனத் திண்மையை, உறுதிப்பாட்டைப் போற்றிப் பாராட்டவில்லை. இந்தப் பத்தாம் பசலித் தனத்தைத் தவிடு பொடியாக்கி, பெண்கள் வலிமையின் வடிவங்கள் தான் என்பதை நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபிக்க வேண்டுமானால் – உடல் வலிமையும், உள்ள உறுதியும் கொண்டவர்கள் பெண்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டுமென்றால் – அதற்கு பெண்கள் பொருளாதாரத்தில் பிறரைச் சார்ந்து நிற்காத நிலை வர வேண்டும் – தங்களது சொந்தக் காலிலேயே நிற்கின்ற நிலை வர வேண்டும். அதற்காகத் தான், 'மகளிர் சுய உதவிக் குழுக்கள்' திட்டத்தையே தமிழகத்தில் நான் தொடங்கினேன்.

### மகளிர் சுய உதவிக் குழுக்கள்

"மகளிர் சுய உதவிக் குழுக்கள்", என்ற மாபெரும் சமூகப் பொருளாதார இயக்கத்தை, தமிழ்நாட்டில் 1992–ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த போது நான் தான் ஆரம்பித்து வைத்தேன். இதற்கு முன், பெண்கள் முன்னேற்றத்திற்கான அமைப்புகள் பல இருந்திருக்கலாம். அமைப்புகள் என்கின்ற போதே, நிர்வாக தாமதம், போதிய அளவு விரைவாகச் செயல்படாமை, ஆகிய குறைகள் இருக்கும். இதனால், மகளிர் மத்தியில் மறுமலர்ச்சியையோ, புதிய எழுச்சியையோ அவற்றால் உண்டாக்க முடியவில்லை. ஆகவே, எங்கோ ஒரு இடத்தில், என்றோ ஒரு நாள் என்றில்லாமல், மாநிலம் தழுவிய இயக்கமாக, மகளிரின் செயல்பாடுகள், அவற்றின் மூலமாக மகளிர் முன்னேற்றம், பெருமளவில் ஏற்பட வேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன். எந்தவொரு புரட்சித் திட்டமும் யாரோ ஒருவர் மூளையில், ஒரு சிந்தனையாக உதித்தது தானே! அன்று நான் இட்ட சிறிய விதை, இன்று ஆலமரமாய் வளர்ந்துள்ளது. தற்போது, தமிழ்நாட்டில், 1 இலட்சத்து 18 ஆயிரத்து 413 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் மொத்தம், 20 இலட்சத்து 25 ஆயிரத்து 795 மகளிர் இணைந்து செயல்பட்டு வருகின்றனர். இவர்கள் அனைவரும் சேமித்து வைத்துள்ள தொகை, மொத்தம், 267 கோடியே 22 இலட்சம் ரூபாய் ஆகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள பெண்களுக்கெல்லாம் நான் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். கடனுதவி ஏதும் கிடைக்காதா என்று பெண்கள் வங்கிகளைத் தேடிச் சென்றது அந்தக் காலம்! மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள பெண்களைத் தேடி வந்து, உங்களுடைய சேமிப்புத் தொகையை, எங்கள் வங்கிகளுக்கு கொடுங்கள் என்று வங்கிகள் மகளிரைத் தேடி வருவது இந்தக் காலம்! அந்த வகையில் தருமபுரி மாவட்டத்தில், 5,457 மகளிர் சுய உதவிக் குழுக்கள், மொத்தம் 1 லட்சத்து ஓர் ஆயிரம் பெண்களை உறுப்பினர்களாகக் கொண்டு மொத்தம் 35 கோடி ரூபாய் சேமிப்புத் தொகையுடன் வலிவோடும், பொலிவோடும் இயங்கி வருவதை நான் பாராட்டுகிறேன். இதுவரை மகளிர் சுய உதவிக் குழுக்களில் சேராத பெண்கள் அனைவரும் அவற்றில் சேர்ந்து பயன்பெற வேண்டும் என்று இங்குள்ள மகளிரை மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள அனைத்து மகளிரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

### பாதுகாக்கப்பட்ட குடிநீர்

இன்றைய தினம் தருமபுரி மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பாக, 54 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு தயாராக உள்ள 822 வளர்ச்சித் திட்டப் பணிகளை இன்று திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அவற்றில் ஒரு சில திட்டங்களைப் பற்றி இங்கே உங்களிடத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.






தருமபுரி மாவட்ட மக்களின் அடிப்படை தேவைகளில், தலையாய தேவையாக இருப்பது குடிநீர்த் தேவையே. எனவே தான், தமிழக மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்க வேண்டும் என்பதில் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறேன். அந்த வகையில், தருமபுரி மாவட்டத்தில் 27 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக நிறைவேற்றப்பட்ட, 112 கிராம குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம், மற்றும் தனி மின் விசைத் திட்டப் பணிகள் மற்றும் ஊத்தங்கரை, அரூர், தருமபுரி, காரிமங்கலம், நாகோஜனஹள்ளி, பாலக்கோடு, பர்கூர், ஆகிய 7 நகர பேரூராட்சிகளுக்கான குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள், என மொத்தம், 119 குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளை இன்று இந்த விழாவில் திறந்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதன் மூலம் மொத்தம் 142 கிராமப் பகுதிகளும், 19 நகரப் பகுதிகளும் பயனடையும் என்பதையும், அந்தப் பகுதிகளில் வசித்து வரும் 2 லட்சத்து 24 ஆயிரம் மக்களின் குடிநீர்த் தேவை இதனால் நிறைவு அடையும் என்பதையும் எண்ணும் போது உண்மையிலேயே நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மாவட்டத்தில் உள்ள பல்வேறு பேரூராட்சிகளில் பேருந்து நிலையங்கள், அங்காடிகள், உணவு விடுதிகள், அலுவலகக் கட்டடங்கள் என 124 பணிகள் 1 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவற்றை இந்த விழாவில் திறந்து வைத்துள்ளேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக அரூர் அருகே மாம்பட்டி கிராமத்தில், 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள துணை மின் நிலையத்தை தொடங்கி வைத்துள்ளேன்.

மாணவ மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள் மற்றும் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், ஆகிய 7 பணிகள் என 1 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்தப் பணிகளை இன்று திறந்து வைத்துள்ளேன்.

### ஆரோக்கியமான மக்கள் வாழ்வு

நெடுஞ்சாலைத் துறை சார்பாக, போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்குடன் தொப்பூர், பி. மல்லாபுரம், கல்லாவி, குருபரப்பள்ளி, சின்னம்பள்ளி, மாரண்டஹள்ளி, சந்திராபுரம், ஆகிய இடங்களில் 4 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள 7 பாலங்களையும் – பொதுப் பணித் துறை சார்பாக, நீர்வள ஆதார அமைப்புகளை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சின்னாறு, வாணியாறு, ஆகிய ஆறுகளில், 3 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள 3 தடுப்பணைகளையும் திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆரோக்கியமான மக்கள் வாழ்வை உறுதிப்படுத்தும் நோக்குடன், ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் உருவாக்கும் திட்டத்தின் கீழ், தருமபுரி நகராட்சியில் 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 3 வளாகங்களையும் – கிருஷ்ணகிரி நகராட்சியில், 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப் பட்டுள்ள 2 வளாகங்களையும் – ஒசூர் நகராட்சியில், 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள ஒரு வளாகத்தையும் திறந்து வைத்துள்ளேன்.

கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 3 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேம்படுத்தப்பட்ட 29 கிராமச் சாலைகளை மக்கள் பயன்பாட்டிற்கு இன்று திறந்து வைத்துள்ளேன்.

கிருஷ்ணகிரி வட்டம், மாதேபள்ளி கிராமத்திலுள்ள கிரானைட் ஓடுகள் தயாரிக்கும் தொழிற்சாலையில், தரமான கிரானைட் ஓடுகள் தயாரிக்க 2 கோடி ரூபாய் மதிப்பில் பொருத்தப்பட்டுள்ள நவீன இயந்திரத்தை, இன்று நான் தொடங்கி வைத்துள்ளேன்.

தருமபுரி மாவட்டத்தின் தளி, கெலமங்கலம், ஒசூர், மத்தூர், தருமபுரி, பர்கூர், பாலக்கோடு, காரிமங்கலம், கிருஷ்ணகிரி, மொரப்பூர், பெண்ணாகரம், நல்லம்பள்ளி, அரூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 5 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக கட்டி முடிக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்கள், சமுதாயக்

கூடக் கட்டடங்கள், கதிரடிக்கும் களங்கள், சமையல் அறைக் கூடங்கள், தொகுப்பு வீடுகள், பள்ளிக் கட்டடங்கள், கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள், முதலான 461 பணிகளைத் திறந்து வைத்ததில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தருமபுரி மாவட்டத்தின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு, அதன் முன்னேற்றத்தை உறுதி செய்யும் வகையில் இன்றைய தினம் என்னால் மொத்தம் 34 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட உள்ள 111 திட்டப் பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக, அஞ்செட்டி, புலிக்கரை, கெலமங்கலம், ஆகிய கிராமங்களில் 3 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 3 துணை மின் நிலையங்களை அமைத்திட அடிக்கற்களை நாட்டியுள்ளேன்.

பொதுப்பணித் துறை நீர்வள ஆதார அமைப்பின் சார்பாக, கிருஷ்ணகிரி வட்டம், "படேதலாவ்" (Padedhalav) ஏரியிலிருந்து வெண்ணம்பள்ளி ஏரி, மற்றும் அதற்கு கீழ் உள்ள 10 ஏரிகளுக்கு 7 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு புதிய நீர் வரத்துக் கால்வாய் அமைக்கும் பணிக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இதன் மூலம், 9 வருவாய்க் கிராமங்கள் பயனடையும் என்பதும், நேரடி ஆயக்கட்டுகள் என்ற வகையில், 1340 ஏக்கர் விளை நிலமும், மறைமுக ஆயக்கட்டுகள் என்ற வகையில் 1500 ஏக்கர் விளை நிலமும், ஆக மொத்தம், 2840 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறவுள்ளது என்ற தகவலால் எனக்கு கிடைக்கும் மகிழ்ச்சியை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் நான் மிகுந்த மன நிறைவு அடைகிறேன்.

அதே போல, ராம கொண்டஹள்ளி, மஞ்சார ஹள்ளி, பத்தரஹள்ளி, ஆகிய மூன்று வருவாய் கிராமங்களும், அதற்கு அடங்கிய 19 குக்கிராமங்களும் பயனடையும் வகையிலும் 1100 ஏக்கர் விளை நிலம் பாசன வசதி பெறும் வகையிலும், ராம கொண்டஹள்ளி கிராமத்தில், மத்தளப்பள்ளம் ஆற்றின் குறுக்கே 14 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பில் ஒரு புதிய ஏரி அமைத்திட இந்த விழாவில் அடிக்கல் நாட்டி உள்ளேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மொரப்பூர், காரிமங்கலம், சூளகிரி கிராமங்களில் மருத்துவமனைக் கட்டடப் பணிகள் – ராமியம்பட்டி முதலான 14 கிராமங்களில், பள்ளிக் கட்டடப் பணிகள் என மொத்தம், 18 பணிகளை, 6 கோடியே 29 லட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ள அடிக்கற்கள் நாட்டியுள்ளேன்.

கல்வித் துறையின் சார்பாக, தருமபுரி மாவட்டத்திலுள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களிலும், 3 கோடியே 1 லட்சம் ரூபாய் மதிப்பில் ஊராட்சி ஒன்றியங்களின் துவக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 81 வகுப்பு அறைகள் கட்ட, அடிக்கற்கள் நாட்டியுள்ளேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உரையாற்றுவதற்கு அழைக்கப்பட்டிருந்தார். மாணவர் பேரவையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த விழாவிற்கு, பேராசிரியர் சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார். விழாத் தலைவர் ஆகிய அவர், பேரறிஞர் அண்ணா அவர்களை அறிமுகப்படுத்திப் பேசும் போது, அண்ணாவை "அறிவின் சிகரம்" என்று குறிப்பிட்டார். அடுத்துப் பேச வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னாராம், "அறிவின் சிகரம்" என்று என்னை சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். "சிகரம்" என்னை மாதிரி குள்ளமாக இராது; பேராசிரியர் சிதம்பரநாதன் செட்டியாரைப் போல உயரமாக இருக்கும்" என்று நகைச்சுவையாக அண்ணா சொன்னாராம். (பேராசிரியர் சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் உயரமாக இருப்பார்.)

எப்பேர்ப்பட்ட அண்ணா! எவ்வளவு பேரறிவு படைத்தவர்! அந்தப் பேரறிவால், பெரும் பொருளைச் சேர்த்திருக்கலாம். ஆனால், தமது அறிவு முழுவதையும் நாட்டு மக்களுக்காகவே குறிப்பாக, தமிழ்நாட்டு மக்களுக்காகவே அர்ப்பணித்தார். அதே போன்று, ஏழை எளிய மக்களுக்கு என்று தமது வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்தார் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அந்தப் பெருமக்கள் காட்டிய வழியிலே தான் உங்கள் அன்புச் சகோதரியாகிய நானும், ஏழை எளிய மக்களுக்கு, அடித்தளத்து மக்களுக்கு, எப்படி எல்லாம் உதவலாம் என்று தொடர்ந்து சிந்தித்து, செயல்பட்டு வருகிறேன்.

## நலத் திட்ட உதவிகள்

பல்லாயிரக் கணக்கில் மக்கள் எழுச்சியோடு கூடி, உற்சாகத்துடன் பங்கேற்க, மிகுந்த சீரோடும், சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த விழாவில் மொத்தம் 26,843 பேர் பயன் பெறும் வகையில் 16 அரசுத் துறைகள் சார்பாக ஏறத்தாழ 12 கோடி ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத் திட்ட உதவிகள் இன்று இந்த விழாவில் வழங்கப்பட உள்ளன.

நலிவடைந்த மக்கள் நலம் பெற்றிடவும், அடித்தளத்து மக்கள் தங்களது உழைப்பைச் செலுத்தி படிப்படியாக முன்னேறிடவும், நலத் திட்ட உதவிகளை வழங்கி அத்தகைய மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுகின்ற பணியில், எங்கள் அரசு எப்போதும், என்றைக்கும் முன்னணியில் இருக்கிறது என்பதை மிகவும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு வழங்கப்படுகின்ற இந்த நலத் திட்ட உதவிகள் பற்றி முழுமையாக உங்களிடம் எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தால், அவற்றுள் முக்கியமான ஒரு சிலவற்றை பற்றி மட்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.



முதலில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாக சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி, மற்றும் சுழல் நிதிக் கடன் உதவியாக 9987 பெண்களுக்கு, 1 கோடியே 41 லட்சம் ரூபாய் நிதி வழங்கப்படுகிறது. அதே போல, சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களான 1575 பெண்களுக்கு அவர்கள் தொழில் நடத்த உதவியாக 2 கோடியே 30 லட்சம் ரூபாய் தொழிற் கடன் வழங்கப்படுகிறது. மேலும், 3277 பயனாளிகளுக்கு 44 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் "தாட்கோ" சுழல் நிதியும் வழங்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக 467 பேர்களுக்கு, 7 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் மதிப்பில் இலவச தொழிற் கருவிகளும், வீட்டுமனைப் பட்டாக்களும் வழங்கப்பட உள்ளன. சமூக நலத் துறையின் சார்பாக, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் சார்பில் 149 பேர்களுக்கு, 23 லட்சம் ரூபாய் நிதி உதவி – 100 பேர்களுக்கு இலவச தையல் இயந்திரங்கள் – மாவட்டத் தொழில் மையத்தின் சார்பில், 473 பேர் தொழில் தொடங்க, 1 கோடியே 82 லட்சம் ரூபாய் கடன் உதவி – மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 6416 உறுப்பினர்கள் பயனடையும் வகையில் வங்கி மூலம், 3 கோடியே 68 லட்சம் ரூபாய் நேரடிக் கடன் உதவி மற்றும் கூட்டுறவுத் துறை மூலமாக 29 உறுப்பினர்களுக்கு, 6 லட்சம் ரூபாய் கடனுதவி – தோட்டக் கலைத் துறை சார்பாக 194 பேர்களுக்கு 1 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய பழச் செடிகள் முதலான உதவிகள் இந்த விழாவிலே வழங்கப்பட உள்ளன. இவையன்றி, வருவாய்த் துறை, ஆதி திராவிடர் நலத் துறை, ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை, பால் வளத் துறை, தாட்கோ நிறுவனம், வனத் துறை, வேளாண்மைத் துறை, கூட்டுறவுத் துறை, முதலான பல்வேறு துறைகளின் சார்பாகவும், இந்த இனிய விழாவிலே பல ஆயிரக் கணக்கான பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நலத் திட்ட உதவிகள் அனைத்தையும் பயனாளிகள் அனைவருக்கும் நானே எனது கரங்களாலேயே வழங்கிட வேண்டும் என்று எனக்கு விருப்பம் தான். ஆனால், அதற்கு போதுமான நேரம் இல்லை என்பதை நீங்களே அறிவீர்கள். ஆகவே, இந்த மேடையில் 15 பயனாளிகளுக்கு மட்டும் நலத்திட்ட உதவிகளை நான் வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும், இங்கேயே, இப்போதே, இந்த விழாவிலேயே வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு வழங்கும் இந்த உதவிகளை பெற்றுக் கொள்கின்ற பயனாளிகள் தாங்கள் பெற்ற உதவிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, தங்களது பொருளாதார நிலையை மேலும் மேலும் உயர்த்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு பொருளாதார நிலையை உயர்த்துவது தான், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதன் குறிக்கோள் ஆகும். அதற்காக, தங்களது தொழில் முயற்சிகளில் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பயனாளிகள் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். எந்தத் தொழிலை நாம் செய்தாலும் அதைச் செம்மையாக செய்ய வேண்டும் என்றும்; அப்படிச் செய்தால், உங்கள் வாழ்க்கையில் வெற்றி நிச்சயமாக



உங்களை வந்து சேரும் என்றும் கூறி உங்கள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

அரசு உதவிகள் பலவும் பெற உள்ள பயனாளிகள், தாம் செய்து வருகின்ற தொழில்களில், மென்மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்று மீண்டும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

இந்த விழா சீரோடும், சிறப்போடும் நடைபெறக் காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

*9.3.2003 அன்று தருமபுரியில் நடைபெற்ற*
*மாவட்ட அரசு விழாவில்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
***செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்***
*ஆற்றிய உரை*



**வ**ரலாற்றுச் சிறப்பும், சரித்திரப் பின்னணியும் ஒருங்கே அமையப்பெற்ற இராமநாதபுரம் மாவட்டத்தின் புகழ்கிரீடத்தில் விலைமதிப்பற்ற ஒரு வைரக்கல்லாய் ஜொலிப்பதுதான் ஏர்வாடி தர்கா. "மத நல்லிணக்கத்தின் மறுபெயர் ஏர்வாடி தர்கா'' என்று பாரோர் போற்றும் புகழுடைத்து இந்த மூதூர்.

**மத நல்லிணக்கத்தின் மறுபெயர் ஏர்வாடி தர்கா**

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையிலிருந்து 8 கி.மீ. தூரத்தில் உள்ளது ஏர்வாடி தர்கா. இங்குதான் சுல்தான் சையது இபுராகீம் ஷஹீது (ஒலி) என்ற பாதுஷா நாயகம் உட்பட பல மகான்கள் அடங்கியுள்ளனர்.

மதுரை மாநகரிலிருந்து இறைப்பணி ஆற்ற வந்த ஏர்வாடி பாதுஷா நாயகம் அவர்கள் கி.பி. 1200ஆம் ஆண்டில் இறைவன் திருவடியை அடைந்தார். அவர் இங்கு நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தியத் திருநாட்டின் முதல் முஸ்லீம் மன்னர் என்ற பெருமையைப் பெற்ற பாதுஷா நாயகம் அவர்கள் கி.பி.1189ஆம் ஆண்டு முதல் சரியாக 12 ஆண்டு 12 நாட்கள் அரசாட்சி செய்ததாக வரலாறு கூறுகிறது. பாதுஷா நாயகம் அவர்களின் வரலாற்றை ஷஹாதத் நாமா எனும் நூலிலிருந்து நாம் முழுமையாக அறிந்து கொள்ளலாம். துருக்கி நாட்டின் அரசவை எழுத்தாளர் பாரசீக மொழியில் எழுதியதன் தமிழாக்கம் கி.பி. 1782–இல் காதிப்புலவர் அவர்களால் அம்மானை வடிவில் ஆக்கப்பட்டது. 3,606 கண்ணிகளையும், 90 விருத்தங்களையும் கொண்ட பெருநூல் இது.

இந்த மண்ணின் மகத்துவம் குறித்து பெங்களூர் துவாரகா வித்யானந்தா தீர்த்த சுவாமிகள் இங்குள்ள குறிப்பேட்டில் "இந்த மண்ணில் பல மகான்கள் வாழ்ந்ததால், இப்பகுதி பூலோக சொர்க்கமாக இருந்து மக்களுக்கு அருள் பாலிக்கிறது'' என்று குறித்துள்ளார்.

இராமநாதபுரத்தை ஆண்ட முத்துக்குமார சுவாமி ரகுநாத சேதுபதியின் மாமனார் முத்துவிஜயன் என்பவருக்கு இருந்து வந்த தீராத நோய், ஏர்வாடி தர்காவிற்கு வந்து சென்றதால், பாதுஷா நாயகத்தின் மகிமையால் முத்துவிஜயன் நோய் முழுமையாக நீங்கி குணம் பெற்றுள்ளார். இதனையறிந்ததும், மன்னர் முத்துக்குமார சுவாமி ரகுநாத சேதுபதி தனது மனைவி பானுமதி நாச்சியாருடன் ஏர்வாடி தர்கா சென்று தனக்கு ஆண் வாரிசு இல்லை என்று முறையிட, அந்த ஆண்டே இறையருளால் அவர்களுக்கு ஆண்வாரிசு கிட்டியது. இதனால் மனமகிழ்ந்த மன்னர் கி.பி.1744ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதியன்று ஏர்வாடியைச் சுற்றியுள்ள 6,666 குறுக்கம் நஞ்சை, புஞ்சை நிலங்களைத் தானமாக வழங்கியதாகக் குறிப்பேடுகள் சான்று பகர்கின்றன. இங்கு ஆண்டுதோறும் பாதுஷா நாயகத்தின் மக்பராவிற்கு (நினைவிடத்தில் உள்ள சமாதிக்கு) சந்தனம் பூசும் புனித நிகழ்ச்சி நடைபெறும். இந்தத் திருவிழா தான் "சந்தனக்கூடு திருவிழா'' என்று அழைக்கப்படுகிறது.

சேதுபதி மன்னர் இணைந்து ஆரம்பித்து வைத்ததுதான் உரூஸ் எனும் சந்தனக் கூடு திருவிழா. ஒவ்வொரு ஆண்டும் துல்கஃதா பிறை1ல் புனித மௌலீது ஷரீப் ஆரம்பித்து, அடிமரம் ஏற்றுதல், கொடி ஏற்றம், சந்தனக் கூடு திருவிழா போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். சந்தனக் கூடு திருவிழா அன்று புனித மௌலீது நிறைவடைந்து சிறப்பு துஆ ஓதப்படுகிறது.

சந்தனக்கூடு ஊர்வலத்துடன் பாதுஷா நாயகத்தின் மக்பராவிற்கு (சமாதிக்கு) சந்தனம் பூசும் புனித நிகழ்ச்சி நடக்கின்றது. துல்காஃதா பிறை 30 அன்று புனித குர்ஆன் ஷரீப் ஓதி தமாம் (நிறைவு) செய்து கொடி இறக்கப்படுகிறது. அன்றிரவு பல்லாயிரக்கான மக்களுக்கு நெய்ச்சோறு என்றழைக்கப்படும் பிரசாதம் வழங்கப்படுகிறது.

இந்தச் சந்தனக்கூடு திருவிழாவில் பல்வேறு கட்டங்களில் பலதரப்பட்ட இந்து சமுதாயத்தவர்களுக்குப் பங்களிப்பு தரப்பட்டுள்ளது. சந்தனக்கூடு செய்யும் உரிமை ஆசாரி சமூகத்தினருக்கும், சந்தனக் கூட்டை அலங்கரிக்கும் உரிமை யாதவ சமூகத்தினருக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. முத்தரையர் சமூகத்தினர் கொண்டுவரும் கடல் நீரால் தர்கா சுத்தம் செய்யப்படுகிறது. தீப்பந்தங்கள் சலவைத் தொழிலாளர்களால் கொண்டுவரப்படும் துணிகளில், ஆதிதிராவிட சமூகத்தினர் அந்தத் துணிகளில் நேர்ச்சை எண்ணெய் ஊற்றி, சந்தனக் கூடு கிளம்ப வழிகாட்டியாகச் செல்ல உதவுவார்கள். மதநல்லிணக்கத்தை விளக்கிடும் வண்ணம் இந்து மக்கள் முன்னே செல்ல, கொடி ஊர்வலம் தர்காவிற்குள் சென்றடைவது வழக்கம். இவ்வாறு ஏர்வாடி தர்காவில் நடைபெறும் சந்தனக்கூடு திருவிழா ஒரு மத நல்லிணக்கத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக நம் தமிழ்த் திருநாட்டில் விளங்குகிறது.

"யார் வாடி நின்றாலும் ஏர்வாடி வாருங்கள்'' என்பது இங்கு பேசப்பட்டு வரும் ஒரு முதுமொழி. இது உண்மை; நீங்களும் ஒருமுறை இப்புண்ணியத் தலத்திற்கு வந்து இந்த மத நல்லிணக்கத்திற்கு வித்திட்ட மண்ணைத் தரிசித்துவிட்டுச் செல்லலாமே!

**ரெ. இராவணன்**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்*
*இராமநாதபுரம் மாவட்டம்*



# சாத்தான்குளத்தில் புதிய அரசு மகளிர் கல்லூரி

**14–3–2003 அன்று தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.**

"**தெ**ன்பாண்டி நாடு'' என்று போற்றப்படும் தமிழகத்தின் தென்கோடி மாவட்டங்களில் ஒன்றான, தூத்துக்குடி மாவட்டத்தில் என் அன்பிற்குரிய சாத்தான்குளத்தில், இன்று நடைபெறும் தூத்துக்குடி மாவட்ட அரசு விழாவில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் காணவும், உங்களோடு ஒரு சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் எனக்குக் கிடைத்திருக்கும் இந்த நல்ல வாய்ப்புக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.



16 நாட்களுக்கு முன் கடந்த 26–ஆம் தேதி நடைபெற்ற, சாத்தான்குளம் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்கு அளிக்குமாறு தொகுதி மக்களாகிய உங்களைக் கேட்டுக் கொள்வதற்காக நான் நேரில் வந்திருந்தேன். எனது வேண்டுகோளை ஏற்று, மகத்தான வெற்றியை நீங்கள் எனக்குத் தந்தீர்கள். அது என் மீது நீங்கள் வைத்த, அன்புக்கும் நம்பிக்கைக்கும் அடையாளம்.

தேர்தல் முடிவு தெரிந்தது மார்ச் 1–ஆம் தேதி அன்றுதான். அதன் பின்னர் சரியாக 13 நாட்கள் கழித்து இன்றைக்கு நான் தூத்துக்குடி மாவட்டத்தின் அரசு விழாவை இந்த சாத்தான்குளத்திலேயே நடத்தி, இன்றைக்கு 163 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும், புதிதாகத் தொடங்க இருக்கின்ற திட்டங்களையும் நலத்திட்ட உதவிகளையும் வழங்குவதற்காக சாத்தான் குளத்திற்கு வந்திருக்கிறேன் என்றால் இது நான் உங்கள் மீது வைத்திருக்கும் அன்புக்கு அடையாளம்.

“அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்'', என்பார்கள். தேர்தல் முடிவு தெரிந்து 13 நாட்களுக்குள்ளேயே நடைபெறும், இந்த இரண்டாவது சந்திப்பு, ஒரு வரலாற்றுச் சந்திப்பு, என்றே நான் நினைக்கிறேன்.

ஒரு தேர்தல் நேரத்தில் வந்து விட்டு திரும்பவும், அடுத்த தேர்தல் நேரத்தில் மட்டுமே வருகின்ற, அரசியல் தலைவர்கள் உள்ள தமிழகத்தில் கொடுத்த வாக்கை நிறைவேற்றும் வகையில் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் இரண்டு வாரங்களுக்கு உள்ளாகவே உங்களைக் காண மீண்டும் வந்திருக்கிறேன். உங்கள் அன்புச் சகோதரியாகிய என் மீது யார் நம்பிக்கை வைத்தாலும் அந்த நம்பிக்கை வீண் போகாது என்பதற்கு இன்று நடைபெறுகின்ற இந்த விழாவே, ஓர் இனிய உதாரணமாகும். “முத்துக் குளிப்பதொரு தென் கடலிலே'', என்று மகாகவி பாரதி பாடியபடி முத்தை வாங்குவதற்காக உலகின் பழம்பெரும் நாடுகள் வந்த இடம் தூத்துக்குடி. தற்போது, ‘புன்னைக்காயல்’ என்று அழைக்கப்படும் ஊர் தான் பாண்டிய மன்னர்களின் காலத்தில் தலைநகரமாகவும், துறைமுகமாகவும் விளங்கியது, என்று வரலாறு கூறுகிறது. பொருநையாறு, கடலிலே கலக்கும் இந்த இடம் அக்காலத்தில் சிறந்த, இயற்கைத் துறைமுகமாக விளங்கியது. 16–ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த போர்ச்சுகீசியர்கள் புன்னைக்காயலைத்தான், கப்பல் கட்டும் தளமாகவும், வணிகப் போக்குவரத்துக்கு உரிய இடமாகவும் பயன்படுத்தி இருக்கிறார்கள். மேலும், தமிழகத்தில் புன்னைக்காயலில் தான், தமிழ்க் கல்லூரியும் தமிழ் அச்சகமும், முதலில் அமைக்கப்பட்டன என்பது எண்ணி மகிழத்தக்க ஒரு செய்தியாகும்.

தமிழர்கள் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று, பண்டை காலத்திலிருந்தே வணிகம் செய்து வந்தவர்கள். ‘செட்டி கப்பலுக்குச் செந்தூரான் துணை’ என்பது பழமொழி. வணிகக் கப்பலுக்கு மட்டுமல்ல நமது வாழ்க்கைக் கப்பலுக்கும் செந்தூரான் தான் துணை என்பதால் உலக நாடுகளிலே உள்ள தமிழர்கள் நாடி வரும் ஊர் திருச்செந்தூர்! அறுபடை வீடுகளில் இரண்டாவது வீடாக விளங்கும் திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூர் பற்றிப் பாடாத பாவலரே இல்லை என்று சொல்லலாம்.

“வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
“கந்தனென்று சொல்லக் கலங்கிடுமே–செந்தில் நகர்ச்
சேவகா என்று திருநீறு அணிவார்க்கு
மேவ வாராதே வினை”

என்று கவிஞர்கள் போற்றும் கவிஞரான, கவியரசு குமரகுருபர சுவாமிகள், செந்தில் நகர், முருகப் பெருமானைப் பற்றிப் பாடுவார்.

திருச்செந்தூரை, ‘சீர்கெழு செந்தில்’ என்று, சிறப்பித்துப் பேசுகிறது, சிலப்பதிகாரம்.

இப்படி மிகப் பழங்காலத்திலிருந்து புகழ் படைத்த திருச்செந்தூரைத், தன்னிடத்தே கொண்டு விளங்குகின்ற மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம்.

## பாரதி பிறந்த மண்

அதைப் போலவே வைணவப் பெருமக்கள் மிக விரும்புகின்ற பகுதியாக ஸ்ரீவைகுண்டம் விளங்குகிறது. ‘வேதம் தமிழ் செய்த மாறன்’ என்று போற்றப்படுகிற, நம்மாழ்வார் அவதரித்த திருத்தலம் ஆழ்வார்திருநகரி. அங்குள்ள புளிய மரத்தடியில் அவர் ஞானம் பெற்றதால் ‘திருப்புளியாழ்வார்’ என்று அந்தப் புளியமரம், இன்றைக்கும் அழைக்கப்படுகின்ற, சிறப்புடையது. சைவ, வைணவத் தலங்களைப் போலவே தூத்துக்குடியில் உள்ள ‘திவ்ய பனிமய நாயகித் தேவாலயம்’, போன்ற பழம் பெருமை மிக்க, கிறிஸ்துவ தேவாலயங்கள், தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் சிறப்புற்று விளங்குகின்றன. உடன்குடி, குலசேகர ஆழ்வார்பட்டினம், காயல்பட்டினம், ஆகிய ஊர்களில் புகழ்மிக்க மசூதிகள் பல அமைந்திருக்கின்றன.

இவ்வாறு, மும்மத மக்கள் மட்டுமல்லாமல் எம்மத மக்களும் சேர்ந்து வாழும் மாவட்டமாக தூத்துக்குடி மாவட்டம் விளங்கிக் கொண்டிருப்பது நமக்கெல்லாம் பெருமை தரும் ஒன்றாகும். வீரர்களையும், ஞானிகளையும், இணையற்ற கவிஞர்களையும், மாசு மருவற்ற தியாகிகளையும், பெற்றுத் தந்த மண், இந்த மண்.

“வீர சுதந்திரம் வேண்டி
நின்றார் – பின்பு
வேறொன்று கொள்வாரோ!”

என்று பாடிய பாட்டுக்கொரு புலவன் பாரதி பிறந்த மண் இந்த மண். கப்பலோட்டிய தமிழன் என்றும் செக்கிழுத்த செம்மல் என்றும் போற்றப்படுகின்ற தியாகச் செம்மல் வ.உ. சிதம்பரனாரைத் தந்த மண் இந்த மண். வீரத்தின் விளை நிலங்களாகிய வீரபாண்டிய கட்டபொம்மன், வீரன் அழகு முத்துக்கோன், வீரன் சுந்தரலிங்கம், வீரன் வாஞ்சிநாதன், ஆகியோர் பிறந்த மண் இந்த மண்.

### கணினியின் தோற்றம்



“ஈனியாக்” (ENIAC) என்னும் கணிப்பொறியை ஹார்வார்ட் பல்கலைக்கழகம் 1946இல் உருவாக்கியது. இதுவே உலகின் முதல் இலக்க மின்னணு கணிப்பொறி (First Digital Electronic Computer) அமெரிக்க இராணுவத்துக்காக உருவாக்கப்பட்டது.
ஈனியாக் என்ற பெயர் Electronic Numerica Integrator and Calculator என்ற நீண்ட பெயரின் சுருக்கமே ஆகும்.



சீறாப் புராணம் வழங்கிய உமறுப் புலவரும், சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துஸ்வாமி தீட்சிதரும், தோன்றிய மண் இந்த மண்.

டாக்டர் கால்டுவெல் டாக்டர் ஜி.யூ. போப், ஆகிய அருந்தமிழ்ப் பணியாற்றிய, அயல்நாட்டு அறிஞர்கள் வாழ்ந்த மண் இந்த மண். நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால், 1986 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 20 ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு புதியதாக உதயமான மாவட்டம் தூத்துக்குடி மாவட்டம் என்பதை நினைக்கும் போது நாம் பெருமிதம் அடைகிறோம்.

## தூத்துக்குடியின் பெருமை

4621 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் ஏறத்தாழ 16 லட்சம் மக்களைக் கொண்டதாக விளங்குகின்ற இந்த தூத்துக்குடி மாவட்டத்தின் தலைநகரமாக, ‘முத்து நகரம்’ என்று அழைக்கப்படும் தூத்துக்குடி விளங்குகின்றது. உப்பு எடுத்தலும், மீன் பிடித்தலும், முக்கியத் தொழில்களாக உள்ள மாவட்டம் இந்த மாவட்டம். இந்தியாவின் மொத்த உப்பு உற்பத்தியில் 30 சதவீதம் இந்த மாவட்டத்தில் தான் உற்பத்தியாகிறது என்னும் செய்தி தமிழகமே பெருமைப்படத் தக்க செய்தியாகும். அதைப் போலவே கோவில்பட்டி நகரம், தீப்பெட்டிகள் மற்றும் பட்டாசுகள், தயாரிக்கும் முக்கிய நகரமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. ஆசியாவிலேயே மிகப் பெரிய உரம் தயாரிக்கும் தொழிற்சாலையான, ஸ்பிக் (SPIC) நிறுவனம் – கோவில்பட்டி வட்டத்தின் நூற்பு ஆலைகள் – கனநீர் தொழிற்சாலை – அனல் மின் நிலையம் – சிப்காட் – ஸ்டெர்லைட் காப்பர் – தாரங்கதரா கெமிக்கல்ஸ் – தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் (TAC), ஆகிய முக்கியத் தொழிற்சாலைகளால் தொழில் துறையில் தூத்துக்குடி மாவட்டம் சிறப்பிடம் பெறுகின்றது. இந்தியாவிலுள்ள 10 பெரிய துறைமுகங்களில் ஒன்றாக விளங்குவது, தூத்துக்குடி துறைமுகம் என்பதும்; இந்தியாவின் தென்கிழக்குக் கோடியில், பன்னாட்டுக் கப்பல் போக்குவரத்து வழிக்கு மிக அண்மையில் உள்ளது, இந்தத் துறைமுகம் என்பதும், தூத்துக்குடி மாவட்டத்திற்கு மட்டுமல்லாமல் தமிழகத்திற்கே பெருமை சேர்க்கும் செய்திகளாகும்.

இந்த இனிய விழாவிலே தூத்துக்குடி மாவட்டத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியை கருத்தில் கொண்டு, இன்றைய தினம் மொத்தம் 163 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்புடைய திட்டங்களோடு, தூத்துக்குடி மாவட்டத்திற்கு வந்திருக்கின்றேன் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

## கிராமப் பகுதிகளுக்கு குடிநீர்

இவ்விழாவில், 106 கோடியே 61 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, பல்வேறு துறைகளைச் சார்ந்த, முடிவுற்ற பணிகளை இன்றைய தினம் நான் திறந்து வைத்துள்ளேன். திறந்து வைத்துள்ள அனைத்துப் பணிகளையும் பற்றி எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தால் அவற்றில் முக்கியமான சில திட்டப் பணிகளை பற்றி மட்டும் உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

இன்றைய தினம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, 28 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சாத்தான்குளம் முதல், உடன்குடி வரை, 308 கிராமப் பகுதிகளுக்கு, குடிநீர் வழங்குதல் – 27 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடம்பூர் முதல், விளாத்திகுளம் வரை 180 கிராமப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குதல் – 9 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கருங்குளம் முதல் தூத்துக்குடி வரை 76 கிராமப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குதல் போன்ற கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், இம்மாவட்டத்தின் கிராமப் பகுதிகளிலும் – 17 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூத்துக்குடி நகராட்சி மேம்பாட்டுக் குடிநீர்த் திட்டம் – 2 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாசரேத் நகர பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இம்மாவட்டத்தின் நகரப் பகுதிகளிலும் செயல்படுத்தும் வகையில் அவற்றை இந்த விழாவிலே நான் திறந்து வைத்துள்ளேன். நெடுஞ்சாலைத் துறையின் கீழ் 4 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தாமிரபரணி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்; விட்டிலாபுரம் – மணக்கரை சாலையில் புதிய பாலம், நாகம்பட்டி– சில்லாங்குளம் சாலையில் பாலம், 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பேட்மாநகரம் – வாகைக்குளம் சாலை, பாளையங்கோட்டை – அருப்புக்கோட்டை சாலை, ஆகிய இரண்டு இடங்களில் புதிய பாலங்களை நான் இந்த விழாவிலே திறந்து வைத்துள்ளேன். தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூத்துக்குடி மேற்பார்வையாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் – 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கருங்கடல் ஊராட்சி பழனியப்பபுரத்தில் புதிய துணை மின் நிலையம் – 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆறுமுகநேரி துணை மின் நிலையத்தில் மின்னேற்பிகள் அமைத்தல் – பொதுப் பணித் துறையின் கீழ், 1 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 14 இடங்களில் குளம் மேம்பாடு செய்தல் – 1 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6 இடங்களில் வரத்துக் கால்வாய் மேம்பாடு, தூர்வாருதல், புதிய கண்மாய் அமைத்தல் போன்ற பணிகளை இந்த இனிய விழாவிலே திறந்து வைத்ததில் நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் 1 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான சுகாதார வளாகம் – 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கதிரடிக்கும் களங்கள், சமுதாய நலக் கூடங்கள், கிராம நிர்வாக அலுவலர்களுக்கான கட்டடங்கள், ஊனமுற்றோருக்கான பணிக் கூடங்கள், குடிநீர்த் திட்டப் பணிகள், குளம் தூர்வாருதல், அறுவை சிகிச்சை அரங்கம் அமைத்தல், ஆகிய பணிகளையும் – 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆதிதிராவிட மாணவ மாணவியர்களுக்கான விடுதிகள் கட்டுதல் – 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீன் வளத் துறையின் கீழ் மீனவர் அங்காடி அமைத்தல் போன்ற பணிகளையும் இந்த விழாவிலே நான் திறந்து வைத்துள்ளேன்.

தூத்துக்குடி மாவட்டத்திற்கு உரிய புதுக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள “அனைத்து மகளிர் காவல் நிலையத்தையும்” இந்த இனிய விழாவிலே திறந்து வைத்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் எழுச்சிமிகுந்த இந்த விழாவிலே, மொத்தம் 32 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பில் இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமையவுள்ள 508 திட்டப் பணிகளுக்கு, அடிக்கற்கள் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக நெடுஞ்சாலைத் துறையின் கீழ், 12 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூத்துக்குடி – மதுரை சாலையில் ஒரு மேம்பாலம், பருவக்குடி – விளாத்திகுளம் சாலையில் ஒரு பாலம், மதுரை – கன்னியாகுமரி சாலையில் 2 மேம்பாலங்கள்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கீழ் 1 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குரும்பூர் கிராமத்தில், துணை மின் நிலையம் அமைத்தல் – "தாட்கோ" நிறுவனத்தின் கீழ் 2 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பில் 7 இடங்களில் ஆதி திராவிடர் மாணவ, மாணவியர்களுக்கு விடுதிகள் – ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் 1 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பில் இம்மாவட்டத்தில் 55 இடங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள் – 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 39 இடங்களில் ஊரக மகளிர் சுகாதார வளாகங்கள் – 73 இலட்சம் ரூபாய் மதிப்பில் 104 இடங்களில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் ஆகிய பணிகளுக்கு இன்று அடிக்கற்கள் நாட்டியுள்ளேன் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவில், மொத்தம் 9 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பில் கயத்தாறு, கழுகுமலை மற்றும் எட்டயபுரம் ஆகிய மூன்று பேரூராட்சிகளைச் சேர்ந்த ஏறத்தாழ 60,000 மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்கின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான அடிக்கல்லையும் நாட்டி உள்ளேன் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை மட்டுமின்றி 87 இலட்சம் ரூபாய் மதிப்பில் மீன் வளத் துறையின் கீழ் 235 இடங்களில் மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டுதல் – மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏரல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கைகள் அமைத்துத் தரம் உயர்த்துதல், அறுவை சிகிச்சை அரங்கம் அமைத்தல், X-ray பிரிவு கட்டுதல் போன்ற பணிகளுக்கும் இன்றைய தினம் இந்த விழாவிலே அடிக்கற்கள் நாட்டியுள்ளேன் என்பதில் நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

### இலக்கியம்

புத்தகங்கள் அறிவுக்கே உணவை ஊட்டிப்
புதிதான காட்சிகளை மனத்தி லேற்றி
வித்தகனாய்ச் செய்யும்என இலக்கி யத்து
வேலிக்குள் அடியெடுத்து வைத்தி டாது
நத்துமனப் பசிதீரப் படித்துப் பார்த்து
நாலைந்து பேர்களுக்கு விளக்கிக் கூறின்
அத்தனையும் அறிவாகி மனத்தில் ஏறும்;
அறிவாளி எனும்பெயரை உலகம் நல்கும்!

வள்ளுவரின் குறள்மீது விழியை நாட்டி
வடித்தஇரண் டடிஎடுத்து மனத்துள் போட்டு
தெள்ளிதின்நற் பொருள்கண்டே உளம்பூ ரித்துச்
சித்திரித்துப் பார்க்குங்கால் வளரும் எண்ணம்!
அள்ளுசுவை ஐம்பெரிய காப்பி யங்கள்
அடுக்கிவரும் உவமைநயச் சுவையால் என்றும்
கள்ளமனம் கூடநய நிலையைக் காணும்
கவிதையிலே திருவிடத்துச் சோலை பாடும்.



– கவியரசர் கண்ணதாசன்.

## சாத்தான்குளம்

நான் சாத்தான்குளம் தொகுதி இடைத் தேர்தலுக்காக இந்தப் பகுதியில் கிராமம் கிராமமாக சுற்றி வந்தேன். நான் செல்லாத கிராமமே இல்லை என்கின்ற அளவுக்கு அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று இங்குள்ள உங்கள் அனைவரையும் சந்தித்து விட்டேன். வறட்சியும் வறுமையும் காலம் காலமாக நிலவி வருகின்ற இந்தத் தொகுதியில் ஒட்டு மொத்த வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற சூளுரையை நான் அப்போதே மேற்கொண்டேன். தற்போது என் அன்பிற்குரிய சாத்தான்குளம் தொகுதி மக்களின் முன்னேற்றத்திற்காக மட்டும் முதற்கட்டமாக, மொத்தம் 15 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு துறைகளைச் சார்ந்த திட்டப் பணிகளை இன்று என்னுடன் கொண்டு வந்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது மட்டுமன்றி, மேலும் பெரிய அளவிலே இந்தத் தொகுதியில் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துகின்ற வகையில், அரசு மேற்கொள்ள உள்ள சில திட்டப் பணிகள் பற்றிய அறிவிப்புகளையும் நான் இந்த விழாவிலே அறிவிக்க உள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில் இங்குள்ள விவசாயிகள் 100 பேருக்கு 10 இலட்சம் ரூபாய் மதிப்பில், மேம்படுத்தப்பட்ட புதிய ரக வாழைப் பயிர், மா மற்றும் நெல்லி ஆகிய பயிர்கள் விளைவிப்பதற்கான விதைப் பயிர்கள் (Seedlings), விநியோகம் செய்யப்படும். 5 இலட்சம் ரூபாய் செலவில் இந்தப் பகுதியைச் சார்ந்த, 1400 பண்ணை மகளிருக்கு முந்திரிப் பயிர், பருப்பு வகைகள், மற்றும் காளான், ஆவாரம்பூ போன்ற மூலிகைப் பயிர்கள், எரி பொருளைத் தரக்கூடிய ஜட்ரோபா, பாரடைஸ் செடி போன்ற பயிர் வகைகள் ஆகியவற்றை பயிரிடுவதற்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படும்.

மேலும், தேசிய நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 9 இலட்சம் ரூபாய் செலவில் 5,000 ஏக்கர் நிலப்பரப்பில் நீர்ப்பிடிப்புப் பணிகளை 2,000 விவசாயிகள் பயனடையும் வகையில் கருங்குளம் ஒன்றியத்திலும் – வறட்சிக்கு உட்பட்ட பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 33 லட்சம் ரூபாய் செலவில் 12,500 ஏக்கர் பரப்புள்ள நில மேம்பாட்டுப் பணிகள், சாத்தான்குளம் ஒன்றியத்திலும் – 23 இலட்சம் ரூபாய் செலவில், ஒருங்கிணைந்த வறட்சிக்கு உட்பட்ட பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 6,250 ஏக்கர் நில மேம்பாட்டுப் பணிகள், ஆழ்வார்திருநகரி ஒன்றியத்திலும் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், விவசாயப் பொருட்களை ஏற்றுமதிக்காக பாதுகாத்து வைப்பதற்கு ஏதுவாக, "குளிர்ப்பதன கிடங்கு" ஒன்று, தனியார் துறையின் ஒத்துழைப்போடு, சாத்தான்குளம் தொகுதியில் நிறுவ வழி வகை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பாக மொத்தம் 37 இலட்சம் ரூபாய் செலவில், ஆழ்வார் திருநகரி, கருங்குளம், மற்றும் சாத்தான்குளம் ஒன்றியங்களில் ஆடு வளர்ப்புத் திட்டம் – இந்த ஒன்றியங்களிலேயே மேய்ச்சல் தரை அமைத்தல் மற்றும் ஆழ்வார்திருநகரி, கருங்குளம் ஆகிய இரண்டு இடங்களில், தற்போதுள்ள கால்நடை துணை மையங்களை கால்நடை மருத்துவ மனைகளாக உயர்த்துதல், பொத்தக்காலன்விளை, செட்டிக்குளம் மற்றும் கால்வாய் ஆகிய மூன்று இடங்களில் புதிதாக 3 பால் கூட்டுறவு சங்கங்கள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அரசு மகளிர் கல்லூரி

அடுத்து, ஆழ்வார்திருநகரி, சாத்தான்குளம் மற்றும் செய்துங்கநல்லூர் ஆகிய மூன்று இடங்களில் கதர் துறையின் சார்பாக பனை வெல்லம் தயாரிக்கும் மையம் ஒன்றும் – பனை ஓலை பொருட்கள் தயாரிப்பு மற்றும் பயிற்சி மையம் ஒன்றும் – பதனீர் தயாரிக்கும் மையம் ஒன்றும் – மொத்தம் 11 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்த வரையில் சாத்தான்குளத்தில் உள்ள அரசு வட்ட தலைமை மருத்துவமனையில் 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் 18 படுக்கைகள் கொண்ட புதிய வார்டு அமைத்தல் – தற்போது ஆழ்வார்திருநகரி மற்றும் கருங்குளம் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை, மொத்தம் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகளாக நிலை உயர்த்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இது மட்டுமன்றி சாத்தான்குளம் பகுதியில் உள்ள 16 துணை சுகாதார நிலையங்கள் மற்றும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் சுமார் 4 இலட்சம் ரூபாய் செலவில் பராமரிப்புப் பணிகளும் – 25 இலட்சம் ரூபாய் செலவில், 4 புதிய துணை சுகாதார மையங்களும் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புதிய மருத்துவ வசதிகள் இந்தப் பகுதியில் உள்ள 3 இலட்சத்து 25,000 மக்களுக்குப் பயன் அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சாத்தான்குளம் பகுதியில் பெண்களுக்கு என்று ஒரு மகளிர் கல்லூரி இல்லாதது பெரும் குறையாகவே இருந்து வருகிறது என்பதை நான் சென்ற முறை இங்கு வந்த போது தெரிந்து கொண்டேன். இங்கு ஒரு பெண்கள் கல்லூரி நிச்சயம் ஏற்படுத்த வேண்டும் என்று நான் அப்போதே முடிவு செய்தேன்.

**அதன் அடிப்படையில் சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு பக்கத்தில் ஏற்கனவே மகளிர் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டும் என்று "Sattankulam Educational Society" என்ற அமைப்பு, இதற்காக வாங்கி தற்போது தானமாக வழங்குகின்ற 30 ஏக்கர் நிலத்தில் புதிதாக அரசு மகளிர் கல்லூரி ஒன்று அமைக்கப்படும் என்பதையும், இதற்காக 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.**

நெடுஞ்சாலை துறையைப் பொறுத்தவரையில் அனவரத நல்லூரையும் ஆழிக்குடியையும் இணைக்கும் பாலம் வலுவிழந்த நிலையில் இருப்பதால், 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் அந்தப் பாலம் சரி செய்யப்படும்.

ஆழ்வார்திருநகரி, நாசரேத், கச்சனாவிளை ஆகிய பகுதிகளில் 420 ஏக்கர் விளை நிலம் பயன் பெறும் வகையில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஸ்ரீவைகுண்டம் ஏரிக்கரையின் உயரம் இரண்டு அடி உயர்த்தப்படும். மணிமுத்தாறு முக்கிய கால்வாயில் பனங்குளம் கிராமத்தின் அருகே, 12 கிலோ மீட்டரில், புதிய கால்வாயை ஏற்படுத்தி அதன் மூலம், கருங்குளம் ஒன்றியத்தைச் சேர்ந்த அய்யனார்குளம்பட்டி பகுதியில் சுமார் 4000 விவசாயிகளின் 850 ஏக்கர் நிலம் பயன்பெறும் வகையில் புதிய கால்வாய் அமைக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சாத்தான்குளம் மற்றும் திசையன்விளை ஆகிய வறட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தாமிரபரணி ஆற்றிலிருந்து, சுமார் 60 கிலோ மீட்டர் நீளம் கொண்ட, புதிய கால்வாய் அமைக்கும் பணியை, நீர்வள ஆதாரங்கள் மேம்பாட்டு திட்டம்–II–ன் கீழ் (WRCP-II - Water Resources Consolidated Programme-II) எடுத்துக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் வாயிலாக சுமார் 12,500 ஏக்கர் விளை நிலம் புதிய பாசன வசதிகளைப் பெறுவதோடு சுமார் 8,500 ஏக்கர் நிலப் பரப்பில்

நிலத்தடி நீரும் பெருகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், புத்தன் தருவை மற்றும் சடையநேரி பகுதிகள், பயன் பெறும் வகையில் மருதூர் அணைக்கட்டிலிருந்து, கால்வாய் ஏரிக்கு செல்லும், மருதூர் மேலக்கால் கால்வாயின் கொள் அளவை 1,000 ஏக்கர் விளை நிலம் பயன் பெறும் வகையில் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இணைப்பு சாலைகள்

9 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் தொகுப்பு வீடுகள் – ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், தனி நபர் கழிப்பிடங்கள், பள்ளிகளில் கழிப்பிடங்கள் – சுமார் 620 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் மஸ்கோத் அல்வா தயாரித்தல், பனங்கல்கண்டு தயாரித்தல், நன்னீர் இரால் வளர்ப்பு, முருங்கைக் காய் பொடி தயாரித்தல், பனை ஓலையிலிருந்து பனை நார் பொருட்கள் தயாரித்தல் முதலிய சிறு தொழில்கள் தொடங்க திட்டங்கள் தீட்டப்படும். சென்னா, ஆவாரம்பூ, போன்ற மூலிகைப் பொருள்களை ஏற்றுமதி நோக்குடன் பயிர் செய்யும் திட்டம் – சாலை மேம்பாட்டுப் பணிகள் – ஏரி, குளம், தூர் வாரும் பணிகள், இந்தத் தொகுதியில் இணைப்பு சாலைகள் இல்லாத 4 கிராமங்களில், இணைப்பு சாலைகள் ஏற்படுத்தித் தருதல் ஆகிய பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்த வரையில் கருங்குளம் ஒன்றியத்தில் அனவரத நல்லூரில் உள்ள, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, அரசு உயர் நிலைப் பள்ளியாக, தரம் உயர்த்தப்படும் என்பதை இந்த நல்ல நேரத்தில், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கொம்மடிக்கோட்டை, மாவடிபண்ணை ஆகிய இடங்களிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளில் மூன்று வகுப்பு அறைகள் கொண்ட கட்டடங்கள் கட்டப்படும். படுக்கப்பத்து கிராமத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியிலுள்ள சோதனைக் கூடத்திற்கு, புதிய கட்டடம் கட்டப்படும். கருங்குளம், படுக்கப்பத்து, கொம்மடிக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள அரசு மேல் நிலைப் பள்ளிகளில், கணினி கல்வி கற்பிக்கும் வசதி செய்து தரப்படும். ராமானுஜம் புதூர், சுண்டங்கோட்டை, மாவடிபண்ணை ஆகிய இடங்களிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும்; கருங்குளம், படுக்கப்பத்து, கொம்மடிக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கில கல்வி ஆய்வகம் (English Language Laboratory) நிறுவப்படும். மொத்தம் 54 இலட்சம் ரூபாய் மதிப்பில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

சாத்தான்குளம் பகுதியில் உள்ள பெரியதாளை கிராமத்தைச் சேர்ந்த 600 கட்டு மரங்களைக் கொண்ட, 2000 மீனவர்கள் கடலுக்குள் சென்று மீன் பிடிக்கும் போது, அங்குள்ள பவழப் பாறைகளில் அடிக்கடி அவர்களுடைய படகுகள் மோதி விபத்துக்கு உள்ளாகி வருகின்றன என்பதை நான் அறிகிறேன். கடல் அரிப்பின் காரணமாக கடல் நீர் அடிக்கடி அவர்களுடைய குடியிருப்புகளில் புகுந்து விடுகிறது என்றும், அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அவர்கள் படுகின்ற இந்தத் துன்பங்களைத் தீர்ப்பதற்காக அவர்களுடைய பகுதியில் ஒரு தூண்டில் வளைவு - Groyne எனப்படும் தூண்டில் வளைவு அமைக்க வேண்டும் என்ற அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று பெரியதாளை பகுதியில் 4 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு புதிய தூண்டில் வளைவு ஏற்படுத்துவது பற்றி, பரிசீலிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### WWW என்றால் என்ன ?

WWW என்று இணையதள முகவரி ஆரம்பிக்கும் இந்த WWW என்பதன் பொருள் என்ன தெரியுமா ? "World Wide Web" இதைத் தமிழில் உலகளாவிய வலைப்பின்னல் என அழைக்கிறார்கள்.

### மின்...மின்...மின்...

- 1831இல் "பாரடே" மின் சக்தியைக் கண்டறிந்தார்கள்.
- 1856இல் சீமன்ஸ் மின்சார உற்பத்தியை கண்டறிந்தார்கள்.
- 1879இல் "எடிசன்" மின்சார விளக்கைக் கண்டுபிடித்தார்.

## "ரெஜிநெட்" மையம்

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 27 சார்பதிவாளர் அலுவலகங்களில், 11 சார்பதிவாளர் அலுவலகங்களை இணைத்து, "ரெஜிநெட்" சேவை மையம் அதாவது கணினி மூலம் வில்லங்கச் சான்று உடனடியாக வழங்கும் அமைப்பு இன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாகத் தமிழகத்தின் தென்னக மாவட்டங்களிலேயே முதன் முறையாக எனது செல்லக்குட்டி தொகுதியான சாத்தான்குளத்தில் இதனைத் துவக்கி வைப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டத்தின்படி, சாத்தான்குளத்தில் வசிக்கும் ஒருவர் தூத்துக்குடி மேலூரில் உள்ள சொத்திற்கு வில்லங்கச் சான்று பெறுவதற்கு தூத்துக்குடி மேலூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லாமலேயே சாத்தான்குளம் சார்பதிவாளர் அலுவலகத்திலேயே வில்லங்கச் சான்று பெற்றுக் கொள்ளலாம். இந்த ரெஜிநெட் மையத்தில் கணினிமயம் ஆக்கப்பட்டுள்ள இதர 11 சார்பதிவாளர் அலுவலகங்களின், வில்லங்கச் சான்றுகளையும் பெற்றுக் கொள்ளலாம். மேலும், இந்த 11 அலுவலகங்களில், ஏதாவது ஓர் அலுவலகத்திலிருந்து மற்ற "ரெஜிநெட்" சேவை மையம் உள்ள சார்பதிவாளர் அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள சொத்துக்களுக்கான, வில்லங்கச் சான்றுகளையும் பெறலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளைஞர் நலம் மற்றும், விளையாட்டுத் துறையின் சார்பாக, (athletics)–க்காக தடகளம், வாலிபால், கால் பந்து, கூடைப் பந்து, கொகொ (Kho-Kho) ஆகிய விளையாட்டுகளை இளைஞர்கள் விளையாடுகின்ற வசதியுடன் கூடிய, விளையாட்டு வளாகம் 20 இலட்சம் ரூபாய் செலவில் சாத்தான்குளத்தில் நிறுவப்படும் என்பதை மெத்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல, சாத்தான்குளத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் வாலிபால் விளையாட்டு மைதானம், 10 இலட்சம் ரூபாய் செலவில் 10 இடங்களில் உருவாக்கப்படும். இந்த அடிப்படை வசதிகளை எல்லாம் விரைவில் ஏற்படுத்தித் தந்து அவற்றை நானே மீண்டும் வந்து திறந்து வைப்பேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## துணை நிற்கும் உதவிகள்

இந்த இனிய விழாவிலே நலிந்தோருக்கும், ஆதரவற்றோருக்கும், மகளிருக்கும், சமுதாயத்தின் அடித்தளத்துப் பிரிவினர் அனைவருக்கும் பயன் அளிக்கும் வகையில் பல்வேறு துறைகளின் சார்பாக நலத் திட்ட உதவிகளை நான் வழங்க இருக்கின்றேன். மொத்தம் 11,619 பயனாளிகளுக்கு 9 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்குவதில் நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், இந்த உதவிகள் அனைத்தும் சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள் பொருளாதார ரீதியாக வாழ்வில் உயர்ந்திட ஏதுவாக இருக்கும். இவை ஏழை எளியோரின் வாழ்வில் ஏற்றத்தையும், வறுமையில் வாடுவோரின் வாழ்வில் வசந்தத்தையும் கொண்டு வர பெரிதும் துணை நிற்கும் என்று நான் நம்புகிறேன்.

இம்மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1145 பேர் பயன் பெறும் வகையில் குடியிருப்புத் திட்டங்கள் – 1 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பில் 7059 பேர் பயன் பெறும் வகையில் சுய வேலை வாய்ப்புத் திட்டம் – கூட்டுறவுத் துறையின் கீழ் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் 193 பேர் பயன் அடையும் வகையில் தொழில் கடன் வழங்குதல் – 18 இலட்சம் ரூபாய் மதிப்பில் சமூக நலத்துறையின் கீழ், 121 பேர் பயன் பெறும் வகையில் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் – 52 இலட்சம் ரூபாய் மதிப்பில், தாட்கோ நிறுவனத்தின் கீழ் 146 பேர்களுக்கு கடன் வழங்குதல் – 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் மீன்வளத் துறையின் கீழ் 190 பேர்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுத்தல் போன்ற நலத் திட்ட உதவிகள் இந்த விழாவிலே வழங்கப்படுகின்றன.

இவை மட்டுமின்றி 43 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாவட்ட தொழில் மையத்தின் கீழ் 73 பேர் பயன் பெறும் வகையில் கடன் உதவி வழங்குதல், மற்றும் வேளாண்மைத் துறை, ஆதி திராவிடர் நலத் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், வருவாய்த் துறை, ஆகிய பல்வேறு துறைகளின் சார்பாகவும் இந்த இனிய விழாவிலே, பல்லாயிரக்கணக்கான பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நலத் திட்ட உதவிகள் அனைத்தையும் பயனாளிகள் அனைவருக்கும் நானே வழங்க வேண்டும் என்றுதான் விருப்பம். இருந்தாலும் அதற்கு நேரம் போதாது என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, 15 பயனாளிகளுக்கு மட்டும் நலத் திட்ட உதவிகளை எனது கரங்களாலே வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும், இங்கேயே, இப்போதே வழங்கி சிறப்பிப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு உதவிகள் பெறவுள்ள பயனாளிகள் அனைவரும் தாம் செய்து வருகின்ற தொழில்களில் மென்மேலும் உயர்வினைப் பெற வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

உலகப் புகழ் பெற்ற ஓவியர் "மைக்கேல் ஏஞ்சலோ", (Michaelangelo) ஏசு பெருமானின் "கடைசி இரவுச் சாப்பாடு" – The Last Supper – என்னும் ஓவியத்தை, வரையத் திட்டமிட்டு இருந்தார். ரோமாபுரி ஆலயம் ஒன்றில், அந்த ஓவியம் வரையப்பட வேண்டும். ஏசு பெருமான், தன் 12 சீடர்களுடன் இருக்கின்ற காட்சியை, ஓவியர் வரைய ஆரம்பித்தார். ஏசு பெருமான் எப்படி இருப்பார் ? அவருடைய முகப் பொலிவு எப்படி இருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து, எழுதுவதை விட பாலொழுகும் ஒரு பச்சைக் குழந்தையின் முகத்தை மாதிரியாக வைத்து எழுதினால் சிறப்பாக இருக்கும் என்று கருதிய மைக்கேல் ஏஞ்சலோ அப்படி ஒரு சிறுவனைத் தேடினார். ஒரு சாந்த சொரூபனாக அழகிய முகத்தோடு, ஒரு சிறுவன் கிடைத்தான். அந்தக் குழந்தையின் முகத்தை மாதிரியாக வைத்து ஏசு பெருமானின் திருமுகம் வரையப்பட்டது. அதே போல, சீடர்களுடைய முகங்களை வரைய வேண்டும். 11 சீடர்களுடைய முகங்களை ஒரு வழியாக வரைந்து விட்டார். ஆனால், ஏசு பெருமானை 30 வெள்ளிக் காசுகளுக்காக காட்டிக் கொடுத்த சீடனாகிய ஜூடாஸின் முகம் எப்படி இருக்கும் என்பதை அவரால் கற்பனை செய்ய முடியவில்லை. ஆகவே அப்படிப்பட்ட ஒரு முகத்தைத் தேடினார். நாட்கள் உருண்டு, மாதங்கள் கழிந்தன. மாதங்கள் உருண்டு, ஆண்டுகள் கழிந்தன. அப்போதும் ஜூடாஸின் முகத்துக்கான, மாதிரி கிடைக்காததால், ஓவியம் முற்றுப் பெறாமலே இருந்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு நாள், ஓவியர் மைக்கேல் ஏஞ்சலோவின் வீட்டு வாயில்படியில் ஒருவன் வந்து விழுந்தான். மைக்கேல் ஏஞ்சலோ அவனைப் பார்த்தார்.

★ ஓராயிரம் முறை நீ உனது இலட்சியத்தைக் கைக்கொள். **முயற்சி...**

★ துன்பம் விளைவதற்கு அறியாமையைத் தவிர வேறு எதுவும் காரணமில்லை. **அறியாமை...**

**பகை...**



★ பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.

*– சுவாமி விவேகானந்தர்*

அந்த முகத்தில் ஒரு வஞ்சகம் இருந்தது. வந்தவன் பசியாலும், தாகத்தாலும், களைப்பாலும், சவம் போல விழுந்து கிடந்தான். அவனைத் தொட்டுத் தூக்கி உள்ளே அழைத்துச் சென்று, பருகுவதற்குப் பழரசம் தந்து உண்பதற்கு உணவும் தந்தார் ஓவியர். அவன் உண்ணும் போதும் அவனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அவர் மனதுக்குள் ஒரு முடிவு எடுத்தார். "இவனது முகம், ஜூடாஸின் முகத்திற்குச் சரியாக இருக்குமே" என்று நினைத்தார். அவன் பசி தீர்ந்து கொஞ்சம் தெளிவான நிலைக்கு வந்த பிறகு, "உன்னை வைத்து, ஓர் ஓவியம் வரையப் போகிறேன்" என்று சொன்னார். அவனும் சரி என்றான். அவனை அவர் ஓவியம் வரைந்து கொண்டிருந்த ஆலயத்திற்கு அழைத்துச் சென்று ஓரிடத்தில் அமர வைத்தார். "உன் முகத்தை வைத்து, ஏசு பெருமானைக் காட்டி கொடுத்த ஜூடாஸின் முகத்தை வரையப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு, வண்ணங்களையும், தூரிகைகளையும் சேகரிக்கத் தொடங்கினார். அங்கு வரையப்பட்டிருந்த ஓவியங்களை அந்த இளைஞன் பார்த்துக் கொண்டிருந்தான். திடிரென்று அவன் கதறி அழத் தொடங்கினான். ஓவியரால் அவனை சமாதானப்படுத்த இயலவில்லை. ஒரு வழியாக, அவன் கதறலை நிறுத்தியதும், "ஏன் இப்படிக் கதறி அழுகிறாய்? உனக்கு என்ன நேர்ந்தது?" என்று அவனிடம் கேட்டார். "நான் சிறு பையனாக இருந்த போதே, இந்த இடத்திற்கு நான் வந்தது நினைவிருக்கிறது. அதோ வரைந்திருக்கிறீர்களே, ஏசு பெருமான் ஓவியம் அந்த முகம் என்னுடைய முகம் தான். இன்று நான் வளர்ந்த பிறகு ஜூடாஸின் முகத்திற்கும், என்னுடைய முகமே பயன்படப் போகிறது என்று நினைத்துப் பார்த்தேன். அழுகை வந்தது. எப்படி இருந்த நான் எப்படி மாறிவிட்டேன்! அமைதி தவழும் அந்த அழகிய முகம் எங்கே போனது? இன்று என் முகத்தை என்னாலேயே பார்க்க சகிக்க முடியவில்லை. எத்தனை வஞ்சகம் ததும்பும் விழிகள் என் விழிகள்! கூடா நட்பால் இந்த நிலைமைக்கு நான் ஆளாகி இருக்கிறேன்", என்று அவன் சொன்னானாம். மைக்கேல் ஏஞ்சலோ விக்கித்து நின்று விட்டார். பால் வழியும், பச்சைக் குழந்தையின் முகம் இன்று ஒரு துரோகியின் முகமாக மாறியதற்கு என்ன காரணம்? சமூகச் சூழல் தான் காரணம். அவன் சேர்ந்த சேர்க்கை தான் காரணம் என்று அவர் நினைத்தார்.

மைக்கேல் ஏஞ்சலோ அன்று என்ன நினைத்தாரோ அதைத் தான் நாமும் இன்று நினைக்க வேண்டியிருக்கிறது.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே – பின்

நல்லவர் ஆவதும், தீயவர் ஆவதும் அன்னை
வளர்ப்பதிலே"

என்ற புரட்சி தலைவர் எம்.ஜி.ஆருடைய திரைப்படப் பாடல் தான் என் நினைவுக்கு வருகிறது. நீங்கள் எல்லோரும் அந்தப் பாடலை கேட்டிருப்பீர்கள்.

இளைஞர்களுக்கு நல்ல கல்வியும், நல்ல பழக்க வழக்கங்களும் கிடைக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது பெற்றோர்களது கடமை. அதைப் போலவே, நல்ல சமூகச் சூழலை ஏற்படுத்தித் தர வேண்டியது, அரசின் கடமை. இளமைப் பருவம் என்பது வாழ்க்கைக்கான ஆயத்தப் பருவம். அந்தப் பருவத்தில் இளைஞர்களுடைய கவனம் சிதறாதபடி, கல்வியிலும் உடல் நல மேம்பாட்டிலும் சிறந்தவர்களாக, அவர்களை உருவாக்க வேண்டும். அதற்கு கல்வி வாய்ப்புகளும் உடல் நலம் பேணும் விளையாட்டு வசதிகளும் வேண்டும். இந்த லட்சியத்தோடு தான், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு ஒரு வலிமை மிக்க இளைய தமிழகத்தை உருவாக்க முனைப்போடு செயல்பட்டு வருகிறது.

இந்த லட்சியத்தை மனதில் வைத்துத் தான் பிற்பட்ட பகுதியாகிய சாத்தான்குளத்திற்கு ஒரு நவீன விளையாட்டு வளாகத்தை தந்துள்ளேன். இந்தப் பகுதியிலுள்ள பெண்கள் மேல்கல்வி கற்று சிறக்க அரசு மகளிர் கல்லூரி ஒன்றையும் கொடுத்துள்ளேன். இன்னும் இவற்றைப் போல ஏராளமான நன்மைகளை எனது செல்லக்குட்டியாகிய சாத்தான்குளம் தொகுதிக்கும், தூத்துக்குடி மாவட்டத்திற்கும் தொடர்ந்து தர உள்ளேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்கள் அனைவர்க்கும் கூறிக் கொண்டு,

இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெற காரணமாக இருந்த அனைவருக்கும் குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அரசு அலுவலர்களுக்கும் காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்து, இந்த தூத்துக்குடி மாவட்ட அரசு விழா முதலில் மாவட்டத் தலைநகரமாகிய தூத்துக்குடியில்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிறகு திடீரென்று சாத்தான்குளம் இடைத்தேர்தல் வந்தது. நீங்களும் மகத்தான வெற்றியை எங்களுக்கு அளித்தீர்கள். அதன் பின்னர், இந்த விழா நடத்துவதற்கான தேதி நெருங்கிவிட்டது. அப்போது திடீரென்று எனக்கு ஒரு எண்ணம் தோன்றியது. சாத்தான்குளம் மக்கள் இவ்வளவு நம்பிக்கை வைத்து வெற்றிக் கனியை அளித்துள்ளார்கள். இந்த தூத்துக்குடி மாவட்ட விழாவை சாத்தான்குளத்திலேயே நடத்தினால் நன்றாக இருக்குமே என்று கருதி அரசு அதிகாரிகளை அழைத்து இதைப் பற்றி எல்லாம் விவாதித்தேன். அப்போது மூத்த அரசு அதிகாரிகள் அனைவருமே இது எப்படி சாத்தியமாகும். இன்னும் சில நாட்களே இருக்கின்றன. தூத்துக்குடி என்றால் அது மாவட்டத் தலைநகரம். இப்படிப்பட்ட பெரிய விழாவை நடத்துவதற்கு தேவையான எல்லா வசதிகளும், கட்டமைப்புகளும் அங்கேதான் இருக்கிறது. திடீரென்று சாத்தான்குளத்தில் நடத்தச் சொன்னால் எப்படி முடியும். அதை நடத்த இயலாது என்றார்கள். அப்போது புதிய கலெக்டராக அன்றைக்குத்தான் இந்த மாவட்ட ஆட்சித் தலைவராக திரு. ராஜாராமன் அவர்களை நியமிக்க முடிவு செய்து அவரை நியமித்தேன். அன்றைய தினம் அவரை அழைத்துக் கேட்ட போது, அவர் உடனேயே இதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு இதற்கு சம்மதித்தார். மாவட்ட ஆட்சித் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட ஒன்பது நாட்களுக்குள்ளேயே இந்த பிரமாண்டமான விழாவை வெற்றிகரமாக ஏற்பாடு செய்து நடத்திக்காட்டிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜாராமன் அவர்களை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அவருக்கு ஒத்துழைப்பு நல்கிய அரசு அலுவலர்கள், காவல் துறையினர் அனைவருக்கும் எனது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். •



# பெரம்பலூர் மாவட்ட மகளிரின் புரட்சி

பெரம்பலூர் மாவட்டத்தில் பல பகுதிகளில் கள்ளச் சாராயம் அதிக அளவு காய்ச்சி விற்கப்படுவதாக மகளிர் சுய உதவி குழுவினர் தாங்கள் பங்கேற்கும் கூட்டங்களில் தெரிவித்து வந்தனர். இதனைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறை இணைந்து கள்ளச் சாராயம் அதிக அளவு காய்ச்சப்படுவதாக புகார் வந்த அனைத்து கிராமங்களிலும், மதுஒழிப்புக்குழு அமைத்து குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

பின்னர் அக்கிராமத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டு வந்த மகளிரை உடனடியாக மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களாக்கி அவர்களின் மறுவாழ்விற்காக தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு சுயத்தொழில் தொடங்கிட வங்கிகள் மூலம் கடனுதவிகள் வழங்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கள்ளச்சாராயத்தை ஒழித்து அத்தொழில் செய்துவந்தவர்களுக்கு மறுவாழ்வு அளித்திட சுய உதவி குழுக்கள் மூலம் சிறுதொழில் தொடங்கிட பயிற்சி அளிக்கப்பட்டு வங்கிகள் மூலம் கடனுதவிகள் வழங்கிட அரசு உத்தரவிட்டுள்ளது. இத்திட்டத்தினை தமிழகத்திலேயே முதன்முதலாக பெரம்பலூர் மாவட்டத்தில் புதுக்கோட்டை கிராமத்தில் முதல் கட்டமாக கள்ளச் சாராயம் காய்ச்சி வந்த பெண்களின் மறுவாழ்விற்காக இதுவரை 35 பெண்களுக்கு ரூ.7.50 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

கள்ளச்சாராயம் காய்ச்சியவர்களின் மறுவாழ்விற்கு குலமாணிக்கம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும், திருமழபாடி தொடக்க கூட்டுறவு வங்கியும் தலா 15 நபர்களுக்கும் சுய தொழில் கடன் வழங்கியுள்ளது. இதுபோல் தமிழக அரசின் மதுவிலக்கு அமலாக்க பிரிவின் சேமிப்பு நிதியிலிருந்தும் 5 நபர்களுக்கு சுய தொழில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஒத்துழைப்புடன் கள்ளச்சாராயம் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ள புதுக்கோட்டை ஊராட்சியில் தமிழக அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் சாலை மேம்பாடு, பாலம் கட்டுதல், சிமெண்ட் சாலை, மயான பாதை, தூர் வாரும் பணிகள், குடிநீர் குழாய் நீட்டிப்பு, மகளிர் சுய உதவிக்குழு கூட்ட கட்டடம், இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகள் என்று ரூ. 10 இலட்சம் மதிப்பில் இரண்டு ஆண்டுகளில் வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.



, கள்ளச்சாராய ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு மாவட்ட நிர்வாகம் முன்னுரிமை கொடுத்து மக்களின் ஒத்துழைப்புடன் பெரம்பலூர் மாவட்டத்தை கள்ளச்சாராயம் இல்லாத மாவட்டமாக்கிட நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் கள்ளச்சாராயம் காய்ச்சியப் பெண்கள் தற்போது கறவை மாடுகள் வளர்த்து பால் விற்பனை செய்து வருகிறார்கள். மேலும் சிலர் பெட்டிக்கடை வைத்து சமூக அந்தஸ்துடன் சிறுதொழில் செய்துவருகிறார்கள்.

கள்ளச்சாராயம் காய்ச்சும் தொழில் செய்வதிலிருந்து விடுபட்டு தற்போது வங்கி கடனுதவியால் கறவை மாடு வளர்த்து பால் விற்பனை செய்து வரும் ஜோஸ்பின், கள்ளச்சாராயம் காய்ச்சி போலீசுக்கும் பொது மக்களுக்கும் பயந்து, பயந்து முன்பு தொழில் செய்துவந்தோம். தற்போது தமிழக அரசின் உதவியுடன் வங்கிகளில் கடன் பெற்று பால் விற்பனை செய்தும், சிறுதொழில் செய்தும் தலைநிமிர்ந்து நிற்கிறோம் என்றும், கள்ளச்சாராயத் தொழில் செய்வதிலிருந்து மறுவாழ்வு பெற்றுள்ள லலிதா, சுசிலா, சுகந்தி ஆகியோர் தமிழக அரசு வழங்கியுள்ள கடனுதவியால் சிறுதொழில் செய்து மனநிம்மதியுடன் குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக இருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். ஆரோன் மனைவி சுகந்தி என்பவர் அரசின் கடனுதவியால் தற்போதைய கோடை பருவத்தில் உளுந்து சாகுபடி செய்து நல்ல மகசூலுடன் அறுவடை செய்துள்ளேன் என்று தெரிவித்தார்.

ஆரோக்கியமேரி-சகாயராஜ் தம்பதிகளின் மகள் தேவிபிரசிலா நான் குலமாணிக்கம் தூய இன்னாசியர் உயர்நிலைப்பள்ளியில் 7-ஆம் வகுப்பு படித்து வருகிறேன், முன்பு பள்ளியில் எல்லோரும் என்னை நீ மதுக்கோட்டையிலிருந்து வருகிறாய் என்று கேலி பேசுவார்கள். எங்கள் ஊரில் கள்ளச்சாராயம் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளதால், இப்பொழுது என்னை யாரும் கிண்டல் செய்வதில்லை நிம்மதியாக பள்ளிக்கு சென்று வருகிறேன் என்று மகிழ்ச்சியாக தெரிவித்தார்.

புதுக்கோட்டை கிராமத்தில் உள்ள அன்னை, மாதா மகளிர் சுய உதவி குழுக்கள் சுழற்சி நிதியாக தலா ரூ. 25 ஆயிரம் பெற்று நன்றாக செயல்பட்டுள்ளதால் தற்போது பொருளாதார வளர்ச்சி கடனாக காளான் வளர்ப்பிற்கு ரூ. 1.20 இலட்சம் வங்கி கடனுதவி பெற்று காளான் வளர்ப்பு விரைவில் தொடங்கவுள்ளார்கள்.

**எம்.ஏ. லாரன்ஸ்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்.

226155



# சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதே எனது இலட்சியம்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
13–3–2003 அன்று
திருநெல்வேலி மாவட்ட அரசு விழாவில்
ஆற்றிய உரை

**தி**க்கெல்லாம் போற்றும் திருநெல்வேலியில் நடைபெறும் இந்தத் திருநெல்வேலி மாவட்ட அரசு விழாவில் என் அன்புக்குரிய உங்களையெல்லாம் காணவும், என் எண்ணங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளவும் மொத்தம் 438.73 கோடி ரூபாய் மதிப்பில், நிறைவேற்றப்பட்டிருக்கும் திட்டங்களைத் திறந்து வைக்கவும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும், நலத் திட்ட உதவிகளை வழங்கவும், நல்லதொரு வாய்ப்பு கிடைத்தது குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

“தென்பாண்டி நகர்” என்னும் திருப்பெயரைப் பெற்றது திருநெல்வேலி. பாண்டி நாட்டின் பழம் பெரும் பகுதியாகிய திருநெல்வேலி மாவட்டத்தில் ரோமாபுரி நாட்டின் நாணயங்கள் கண்டு எடுக்கப்பட்டு இருப்பது திருநெல்வேலியின் பழம்பெருமையை நமக்கு உணர்த்துவதாக உள்ளது.

சங்க காலத்தைச் சேர்ந்த “இறையனார் அகப்பொருள்” என்னும் நூலில் இம்மாவட்டம் குறித்துப் பேசப்படுகிறது. இப்பகுதியை ஆண்ட “நெடியோன்” என்று அழைக்கப்படும் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் மற்றும் மாகீர்த்தி ஆகியோரைப் பற்றித் திருவிளையாடல் புராணத்தில் பேசப்படுகிறது. சங்க காலத்தில் இம்மாவட்டத்தில் ஆட்சி செய்த முதுகுடுமிப் பெருவழுதி மன்னனைப் பற்றிய செய்தி இம்மாவட்டத்தைச் சேர்ந்த புலவர், மாங்குடி மருதனாரின் “மதுரைக் காஞ்சி” என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இளம் பெருவழுதி மற்றும் பெருவழுதி ஆகிய மன்னர்கள் சங்க இலக்கியத்திற்கு ஆற்றிய பங்கு மகத்தானது. முதல் பாண்டிய அரசை, கி.பி. 575–ஆம் ஆண்டில் கடுங்கோன் என்ற அரசன் நிறுவியதாகவும்; நெடுஞ்சடையன்; பராந்தகன் ஆகிய அரசர்கள், தற்போதைய உக்கிரன் கோட்டையில் கி.பி. 768 முதல் கி.பி. 815–ஆம் ஆண்டு வரை வலுவான கோட்டையை அமைத்து அரசாட்சி செய்ததாகவும், வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன. இத்தகைய தொன்மையான வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது திருநெல்வேலி மாவட்டம். பின்னர், கி.பி. 1801–ஆம் ஆண்டு முதல் தமிழகம் முழுவதும் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின் கீழ் வந்ததை நாம் வரலாற்றில் காண்கிறோம்.



பொருநை நதிக்கரையில் அமைந்த ஆதிச்சநல்லூரில், 3000 ஆண்டுகளுக்கு முன்பாகவே நெற்பயிர் வளர்த்து செழித்த வரலாற்றை ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

முற்காலத்தில், தற்போதைய திருநெல்வேலி நகரம் அமைந்துள்ள பகுதி மூங்கில் காடாக இருந்தது. வேதசர்மா என்ற பக்தர் இருந்ததாகவும்; அச்சமயம் பெரும் பஞ்சம் நிலவியதால் மிகவும் சிரமப்பட்டுச் சேகரித்த நெல்லை வீட்டிற்கு முன் உலர வைத்து விட்டு குளிக்க ஆற்றுக்குச் சென்றதாகவும்; குளித்துக் கொண்டு இருக்கும் போது பஞ்சம் தீர மழைக்காக இறைவனை வேண்டியதாகவும்; உடன் திடீர் என மேகம் மழை பொழிந்தது எனவும்; நெல்லைக் காக்க வேண்டுமே என்று விரைவாக வீட்டுக்கு வந்ததாகவும்; இறைவன் அருளால் அந்த நெற்பகுதியில் மட்டும் மழை படாமல், நெல்லுக்கு வேலி அமைத்து இறைவன் காத்ததாகவும்; அது முதல் திரு+நெல்+வேலி, அதாவது, திருநெல்வேலி என இந்நகர் அழைக்கப்படுவதாகவும் புராண வரலாறு கூறுகிறது.

“தென்னிந்தியாவின் மிகப் பழமையான நாகரிகம், நனி சிறந்து விளங்கியது, பொருநைக் கரையிலே” என்று ‘திருநெல்வேலிச் சீமை வரலாறு’ எழுதிய ராபர்ட் கால்டுவெல் (ROBERT CALDWELL) புகழ்ந்து மகிழ்ந்துள்ளார்.

தேவாரம் பாடிய, திருஞான சம்பந்தப் பெருமானோ, ‘திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி’ என்று பாராட்டியுள்ளார்.

## பஞ்ச சபைகள்

நடராஜப் பெருமானின் திருநடனம் நடைபெறும் இடங்களை, ‘சபை’ என்று அழைக்கிறோம்.

“பஞ்ச சபைகள்” என்று அழைக்கப்படுகின்ற 5 சபைகளில் 2 சபைகளை திருநெல்வேலி மாவட்டம் தன்னகத்தே கொண்டிருக்கிறது என்பது சைவம் தழைக்கும் பூமி இது என்பதற்குச் சான்றாக விளங்குகின்றது..

திருநெல்வேலியில் நெல்லையப்பர் திருக்கோயிலில் நடராஜப் பெருமான் திருநடனம் நடைபெறும் சபை தாமிரத் தகடுகளால் வேயப்பட்டிருப்பதால், “தாமிர சபை” என்று அழைக்கப்படுகிறது. அது ஒரு சபை.

திருக்குற்றாலத்தில், நடராஜப் பெருமானின் நடனம் மற்றும் நமது பண்பாடுகள் பற்றி ஓவியங்கள் அமைக்கப்பட்டிருப்பதால், அது ‘சித்திர சபை’ என்று அழைக்கப்படுகின்றது. அது மற்றொரு சபை. ஆக நடராஜப் பெருமானின் திருச்சபைகளில், இரண்டு சபைகள், இந்த மாவட்டத்திற்குள்ளே அமைந்திருக்கின்றன என்பதை இந்தச் சபையில் கூறிக் கொள்வதில் நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இறைவனை வழிபடுவதற்கு நாதோபாசனையும், அதாவது நாத உபாசனையும், ஒரு சிறந்த வழி என்று கண்டவர்கள் நமது தமிழர்கள்.

இறைவன் “ஏழிசையாய், இசைப்பயனாய்” இருப்பவன் என்று சுந்தரமூர்த்தி நாயனார், அழகாகத் தமது தேவாரப் பாடலிலே குறிப்பிடுவார்.



திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலின் மணிமண்டபத்தில் இசைத் தூண்கள் உள்ளன. இவை தமிழ்நாட்டுச் சிற்பிகளின் திறனை உலகிற்கு எடுத்து இயம்புகின்றன. நடுவில் ஒரு பெரிய தூண். இதைச் சுற்றி 48 கல் தண்டுகள் கொண்ட ஒற்றைக் கல்லினால் ஆன இசைத் தூண்கள் மணிமண்டபத்தின் இருபுறங்களிலும் உள்ளன. இனிய ஒலி தரும் இந்த இசைத் தூண்கள், தமிழ்நாட்டிலே மிகப் பழமையானதாகக் கருதப்படுகின்றன.

திருநெல்வேலி மாவட்டத்தில் கிருஷ்ணாபுரத்தில் அமைந்துள்ள, கிருஷ்ணாபுரம் கோயில் சிற்பங்கள் சிற்பக் கலைக்கு சிறந்ததொரு சாட்சியாக விளங்குகின்றன. இவை மட்டுமன்றி, அனைத்து மதங்களின் புகழ் மிகுந்த வழிபாட்டுத் தலங்களையும், உள்ளடக்கிய மாவட்டமாகத் திருநெல்வேலி திகழ்வது நமக்கெல்லாம் பெருமை அளிக்கின்றது.

## நெல்லைத்தமிழ்

திருநெல்வேலி மாவட்டத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள திருக்குற்றால நகரம், 2000 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியதாக வரலாறு கூறுகின்றது. அருவிகள் பெருகி ஓடும் இம்மலைப் பகுதிக்கு, அகத்திய மாமுனிவர் வந்ததாக இதிகாசங்களில் கூறப்படுகின்றது.

தமிழ் பிறந்தது பொதிகை மலையில் என்பார்கள். தென்றல் பிறப்பதும் அங்கு தான். ஆகவே தான் தமிழ் தென்றலைப் போல் மென்மையாகவும், இனிமையாகவும் இருக்கிறது என்று நான் எண்ணுகிறேன்.

பொதிகை மலையில் வாழ்ந்த தமிழ் முனிவர் அகத்தியர் தொல்காப்பியத்திற்கு விளக்கம் வழங்கிய சேனாவரையர், பழந்தமிழ் புலவர் நப்பசலையார், கடையத்தில் பிறந்த பரிமேலழகர், வ.உ. சிதம்பரனார், டாக்டர் ரா.பி. சேதுபிள்ளை, சிறுகதைத் தந்தை என்று போற்றப்படும் புதுமைப்பித்தன், முதன் முதல் எம்.எல். பட்டம் பெற்ற தமிழறிஞர் கா. சுப்பிரமணியப் பிள்ளை, மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், தென்காசி ரசிக மணி டி.கே.சி., பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரனார், திராவிட மகா முனிவரான மாதவ சிவஞான முனிவர், திராவிட மொழிகளில் ஒப்பிலக்கணம் வரைந்த கால்டுவெல், திருவாசகத்தையும், திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த ஜி.யு. போப், ரேனியஸ் ஐயர், ஆகிய தமிழ் முனிவர்களாலும், தமிழ் அறிஞர்களாலும், நெல்லைத் தமிழ் ஓர் இன்பத் தமிழாய் வலம் வந்து கொண்டிருக்கிறது.

### புகை நமக்குப் பகை



ஒருவர் புகைப் பிடிக்கும் போது நிகோட்டின், கார்பன்மோனாக்சைடு, அமோனியா, ஆர்சனிக், மெத்தனால், காரீயம் , வினைல் குளோரைடு உள்ளிட்ட விஷங்களை உள்ளே இழுக்கிறார். இந்த நச்சுக்கள் மனித உடலில் ஒவ்வொரு அணுவையும் தாக்குகின்றன.

இலக்கிய உலகில் உன்னத இடம் என்றுமே நெல்லைக்கு உண்டு. அன்றும், இன்றும், என்றுமே தமிழ் வளர்ச்சியில் நெல்லை மாவட்டம் அரிய பல பணிகளை ஆற்றி வருகிறது. அருமையான நூல்களை வழங்கும் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அமைந்து, அயராது பணியாற்றி வருவது நெல்லையில் தான்.

திருநெல்வேலி மாவட்டத்தின் இன்னும் ஒரு பெருமை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, என்னும் ஐந்து வகை நிலங்களையும் தன்னகத்தே அடக்கிய மாவட்டமாக திகழ்கிறது என்பதே.

மூலிகைகளும், சித்தர்களும் வாழும் பொதிகை மலையும் கட்டபொம்மனும், ஜாக்ஸன் துரையும் பேச்சு நடத்திய பாளையங்கோட்டையின் பழைய கோட்டையும் - பாய் நெசவுக்குப் புகழ் பெற்றதும், சுவாமி சிவானந்தர் அவதரித்த புண்ணிய பூமியுமான, பத்தமடையும் – பைந்தமிழ் பாரதி படித்த நெல்லை ம.தி.தா. இந்து மேல்நிலைப் பள்ளியும்,பலகாலம் வாழ்ந்த கடையம் பகுதியும் – தென்னகத்தின் ஆக்ஸ்போர்டு (OXFORD) என்று பாராட்டப்படும் படித்தவர்களும், பண்பாளர்களும், அருமையான கல்வி நிறுவனங்களும் உள்ள பழமையான பாளையங்கோட்டையும் – தின்னத் தின்னத் திகட்டாத திருநெல்வேலி அல்வாவும் – கல்லிடைக்குறிச்சி அப்பளமும் – பெண்களுக்குப் பெருமை தரும் திருவிளக்கு தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கும் வாகைக்குளமும் – தென்னகத்திற்கே ஒளி தர இருக்கும் கூடன்குளம் அணுமின் நிலையமும் – உள்ளடக்கிய உன்னத பூமி நெல்லைச் சீமையே ஆகும்.

இந்திய அரசியல் அமைப்பின் 8வது அட்டவணையில் தமிழ் உட்பட 18 தேசிய மொழிகளும் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ளன. தமிழை ஒரு Classical Language ஆக அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்திருக்கிறோம். அது மட்டுமின்றி இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 8ஆவது அட்டவணையில் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ள தமிழ் உள்ளிட்ட 18 தேசிய மொழிகளையும் மத்திய அரசின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறோம். இதற்கு மத்திய அரசு செவி சாய்க்க வேண்டும் என்று இந்த கூட்டத்தின் வாயிலாக மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

## வலுவான நிலையில் மகளிர் சுய உதவிக்குழுக்கள்

திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 5391 மகளிர் சுய உதவிக் குழுக்கள் இந்த மாவட்டத்தில் அமைந்துள்ளன என்பதையும்; இந்த குழுக்களில் மொத்தம்





98 ஆயிரத்து 346 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர் என்பதையும்; இவர்களுடைய சேமிப்புத் தொகை 10 கோடியே 89 லட்சம் ரூபாய் என்ற நிலையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயக்கம், திருநெல்வேலி மாவட்டத்தில் நல்ல வலுவான நிலையில் உள்ளது என்பதையும் அறிந்து நான் பாராட்டுகிறேன். மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

## மழைநீர் சேகரிப்பு அவசியம்

தமிழ்நாட்டில் அவ்வப்போது பருவமழை தவறுவதால் குடிநீர் தேவைக்கு நாம் அல்லல் படுகின்றோம். இந்த அவல நிலையை மாற்றி வான் தந்த மழை நீரை முறையோடு சேமித்து நாம் வாழ்வதோடு நமது சந்ததியினரும், மழை நீரின் அவசியம் பற்றி உணர்ந்து வாழ நாம் இப்போதே அதற்கு அடித்தளம் போட்டாக வேண்டும். மழை பெய்யும் போது அந்நீர் கடலில் சென்று வீணாக கலப்பதைத் தடுத்து முறையாக சேமித்து பூமியில் செலுத்தினால் நிலத்தடி நீர் வளம் அதிகரிக்கும். கடல் நீர் உள்ளே புகாமல் நிலத்தடி நீரின் தரமும் உயரும். குடிநீர் ஆதாரமும் பெருகும்.

கால்நடைகள் ஆனாலும் சரி, மனிதர்கள் ஆனாலும் சரி, அனைவருக்கும் அன்றாடம் தேவைப்படுகின்ற தண்ணீரை நாம் வீணாக்கக் கூடாது. இதற்காக, தொலை நோக்கு சிந்தனையுடன் உங்கள் சகோதரியின் தலைமையிலான இந்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட உன்னதத் திட்டம் தான் "மழை நீர் சேகரிப்புத் திட்டம்".

நீர் வளம் பெருகினால், நில வளம் பெருகும், நில வளம் பெருகினால், உலகம் செழிக்கும், என்ற அடிப்படையில் தான் இதனை மக்கள் இயக்கமாக ஆக்க நான் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறேன். அனைத்து கட்டடங்களிலும் குடிசைகள் என்றாலும், அடுக்குமாடி குடியிருப்புகள் என்றாலும், அரசு கட்டிடங்கள் என்றாலும், அங்கெல்லாம் மழை நீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்த அரசு வலியுறுத்தி வருகிறது.

இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்திய நானே அதை செயல்படுத்துவதில் முன் உதாரணமாக முன்னின்று எனது வீட்டிலேயே இதனைத் தொடங்கியுள்ளேன் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே, நீங்களும் உங்கள் இல்லங்களில் இந்த திட்டத்தை செயல்படுத்த முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## கூட்டுக் குடிநீர் திட்டங்கள்

திருநெல்வேலி மாவட்ட பெருமக்களாகிய நீங்கள் அனைவரும் பயன் பெறும் வகையில் இன்றைய தினம் 438 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்புடைய திட்டப் பணிகளை உங்களுக்காகக் கொண்டு வந்துள்ளேன். முடிவுற்ற பணிகளைப் பொறுத்தவரையில் 267 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்புடைய நிறைவுற்ற பணிகளை திறந்து வைத்துள்ளேன். அவற்றில் குறிப்பாக, சில முக்கிய திட்டப் பணிகளை மட்டும் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில், 29 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பில், கடையநல்லூர் - புளியங்குடி கூட்டுக் குடிநீர்த்

திட்டம், 20 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பில், செங்கோட்டை - குற்றாலம் கூட்டுக் குடி நீர்த் திட்டம், 43 கோடி ரூபாய் மதிப்பில், நாங்குநேரி - திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டம், 12 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சேந்தமங்கலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், 7 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 102 தனி மின் விசை குடிநீர்த் திட்டப் பணிகள் – 3 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம், போன்ற பணிகளை, நான் இன்று திறந்து வைத்ததில், மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஆக, இந்த விழாவிலே மட்டும் திருநெல்வேலி மாவட்ட மக்களுடைய குடிநீர் தேவையை நிறைவு செய்வதற்காக, மொத்தம் 115 கோடியே 78 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை திறந்து வைத்துள்ளது எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கின்றது.

இவை மட்டுமின்றி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் 5 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பில் வணிக வளாகங்கள், நெசவாளர் கூடம், பணிச் கூடம், கால்நடை மருந்தகங்கள், தொழிலாளர் நல பள்ளிக் கட்டடம், பயணியர் விடுதிக் கட்டடம், கிராம நிர்வாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடங்கள், போன்ற கட்டுமானப் பணிகள் 7 கோடி ரூபாய் மதிப்பில் திருநெல்வேலி மாநகராட்சி, வேய்ந்தான் குளத்தில், புதிய பேரூந்து நிலையம் – 65 இலட்சம் ரூபாய் மதிப்பில், மாநகராட்சி பகுதியில் 7 இடங்களில், சுகாதார வளாகங்கள் கட்டுதல் மாவட்டத்தின் பல்வேறு பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் 61 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மகளிருக்கான 15 சுகாதார வளாகங்கள் ஆகியவற்றை இந்த இனிய விழாவில் நான் திறந்து வைத்துள்ளேன்.

## பல்வேறு கட்டடங்கள்

பொதுப் பணித் துறை கட்டடப் பிரிவின் சார்பாக கட்டி முடிக்கப்பட்டுள்ள 3 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 3 சுகாதார நிலையங்கள், மாவட்ட தகவல் தொடர்பு மையம், 4 பிற்படுத்தப்பட்டோர் இன மாணவ, மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள், கடையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில், 30 படுக்கைகள் கொண்ட வார்டு, அறுவை அரங்கம் மற்றும் X-ray பிரிவு கட்டடம், 3 தீயணைப்பு நிலையக் கட்டடங்கள், சட்டக் கல்லூரியில் விளையாட்டு மைதானம் 1 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பில், 5 ஆதிதிராவிடர் இன மாணவ மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்கள் 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ் நாடு மின்சார வாரியத்தின் கீழ் துணை மின் நிலைய அலுவலகக் கட்டடம் போன்ற பல்வேறு கட்டடங்கள் இன்றைய தினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலை துறையின் கீழ் 12 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அத்தியூத்து – சுரண்டை சாலை, பாளையங்கோட்டை – அம்பாசமுத்திரம் சாலை, முக்கூடல் – வீரவநல்லூர் சாலை ஆகிய இடங்களில் 3 பாலங்கள் – 1 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் 7 சிறு பாலங்கள் ஆகிய பணிகளை இன்றைய தினம் இங்கே திறந்து வைத்ததில் நான் மன நிறைவு அடைகின்றேன்.

### புகை பிடிப்பதால்...

புற்றுநோய், உறக்கமின்மை, மார்புச்சளி, வாய் துர்நாற்றம், ஆண்மைக் குறைவு, மூளை பாதிப்பு, மஞ்சள் நகம் போன்ற நோய்கள் புகைபிடிப்பதால் ஏற்படுகின்றன.

புகை பிடிப்பதால் மனித ஆயுள் குறையும் வாய்ப்பும் உள்ளது.



பொதுப்பணித் துறை பாசனப் பிரிவின் கீழ், 64 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12 கிராமங்களில் உள்ள 6,507 ஏக்கர் விளை நிலம் பாசன வசதி பெறும் வகையில் செங்கோட்டை தாலுகா மேக்கரை – அனுமன் நதியின் குறுக்கே அணை 45 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 17 கிராமங்களில் உள்ள 9,595 ஏக்கர் நிலம், பாசன வசதி பெறும் வகையில் நாங்குநேரி தாலுகா, மஞ்சுவிளை – வடக்குப் பச்சையாறு நதியின் குறுக்கே அணை போன்ற இந்த மாவட்டத்திற்குத் தேவையான மிகவும் முக்கியமான பணிகளும் இன்றைய தினம் என்னால் இங்கே திறந்து வைக்கப்பட்டுள்ளன.

## துணை மின்நிலையங்கள்

இன்றைய தினம், இந்த மாவட்டத்து மக்கள் பயன்பெறுகின்ற வகையில் இந்த இனிய விழாவிலே 165 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள பல்வேறு துறைகளைச் சார்ந்த திட்டப் பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டியுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் 107 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் இந்த மாவட்டத்தின் மக்கள் அனைவரும் பயன் பெறும் வகையில், பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இவற்றில் குறிப்பாக, 16 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பனகுடி – வடக்கு வள்ளியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்; 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவிருக்கும் கீழப்பாவூர் – ஐந்தாம் கட்டளை கூட்டுக் குடிநீர் திட்டம், 78 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஆகியவற்றிற்கும் இன்றைய தினம், நான் அடிக்கற்கள் நாட்டியுள்ளேன்.

இந்த மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக திருநெல்வேலி மாவட்டத்தில், சங்கரன்கோயில் நகராட்சி, திருவேங்கடம் பேரூராட்சி மற்றும் 395 கிராமங்களுக்கும் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சில பகுதிகளுக்கும் சேர்த்து மொத்தம் ஏறத்தாழ நான்கரை லட்சம் மக்கள் பயன்பெறுவார்கள் என்ற செய்தி எனக்கு



மிக்க மகிழ்ச்சியை அளிக்கின்றது.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் 1 கோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 54 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் 69 இலட்சம் ரூபாய் செலவில், 99 கிராம நிர்வாக அலுவலர்களுக்கான, அலுவலக கட்டடங்கள் 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாநகராட்சியின் கீழ் வணிக வளாகங்கள்; நேரு குழந்தைகள் பூங்காவில் பல்நோக்கு கலை அரங்கம் 1 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேரூராட்சியின் கீழ், களக்காடு பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாக கட்டடம் 3 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 11 இடங்களில், ஆதிதிராவிட மாணவ மாணவியர்களுக்கான விடுதிகள் போன்ற பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டியதில் நான் மன நிறைவு அடைகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில், கொடிக்குறிச்சியில் 36 கோடி ரூபாய் மதிப்பில் துணை மின் நிலையம் அமைக்க இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். இது மட்டுமின்றி, திருநெல்வேலி பொருட்காட்சி திடல் மற்றும் மேலப்பாளையம் ஆகிய 2 இடங்களில் 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் துணை மின் நிலையங்கள் அமைக்கவும் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

பொதுப் பணித் துறை கட்டடப் பிரிவின் கீழ் 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடங்கள்; 3 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்; உக்கிரன்கோட்டை, முக்கூடல் மற்றும் குருவிகுளம் ஆகிய இடங்களில் 30 படுக்கை வசதிகள் கொண்ட சிறு மருத்துவமனைகள் அமைத்தல் 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாநகராட்சி பகுதியிலும், களக்காடு பேரூராட்சி பகுதியிலும், 25 தார் சாலைகள் அமைத்தல் 3 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறை பாசனப் பிரிவின் கீழ் பாலம் கட்டுதல், சாலை சீரமைக்கும் பணி, வரத்துக் கால்வாய் மேம்பாடு செய்யும் பணி, போன்ற பல்வேறு பணிகளுக்கு இன்று அடிக்கற்கள் நாட்டியதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இது மட்டுமின்றி, சுதந்திரப் போராட்ட தியாகியும், செக்கிழுத்த செம்மலும் ஆன, விடுதலைப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் திருநெல்வேலியில், 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைக்க இந்த விழாவிலே அடிக்கல் நாட்டியதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

## முன்னணியில் அரசு

நலிந்தோருக்கும், ஆதரவற்றோருக்கும், மகளிருக்கும் என சமுதாயத்தின் அடித்தளத்துப் பிரிவினர் அனைவரும் தமது வாழ்க்கையில் முன்னேற உரிய உதவிகளை வழங்குவதில் எங்கள் அரசு என்றைக்கும் முன்னணியில் இருக்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவிலே 18 அரசுத் துறைகள் மூலம், 13,518 பயனாளிகளுக்கு மொத்தம் 5 கோடியே 49 லட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத் திட்ட உதவிகள் இன்று வழங்கப்பட உள்ளன. அவை அனைத்தையும் உங்களுக்கு எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தினால் வழங்கப்படுகின்ற உதவிகளில் முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

முதலில், 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6,264 பெண்களுக்கு சுய உதவிக் குழுக்களின் கீழ் நிதியுதவி – 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வருவாய்த் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைகளின் கீழ் இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் , தையல் இயந்திரங்கள், முதியோர் உதவித் தொகை – 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3,854 பேர் பயனடையும் வகையில் வேளாண்மைத் துறையின் கீழ், விவசாயிகளுக்கான மானியம் – 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 417 பேர் பயன் பெறும் வகையில் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின் கீழ் சக்கர நாற்காலி, மூக்குக் கண்ணாடி, 3 சக்கர வண்டி – ஆகிய உதவிகள் இந்த விழாவிலே வழங்கப்பட உள்ளன. மேலும், 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட தொழில் மையத்தின் கீழ் 70 பேருக்கு தொழில் தொடங்க கடன் உதவி – 9 லட்சம் ரூபாய் மதிப்பில் 271 பேர் பயனடையும் வகையில் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் பல்வேறு உதவிகள்– 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 390 பேர் பயனடையும் வகையில் சமூக நலத் துறையின் கீழ் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், கலப்புத் திருமணத் திட்டம், முதலான பல்வேறு திட்டங்களின் கீழ் உதவிகள் இங்கே வழங்கப்பட உள்ளன.

இவை மட்டுமின்றி, கூட்டுறவுத் துறை, வனத்துறை, தாட்கோ, கதர் கிராமத் தொழில் வாரியம், ஆகிய பல்வேறு துறைகளின் சார்பாகவும், இந்த இனிய விழாவிலே பல்லாயிரக்கணக்கான பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு உதவிகள் பெறவுள்ள பயனாளிகள் அனைவரும் தாம் செய்து வருகின்ற தொழில்களில் மென்மேலும் உயர்வினைப் பெறவேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

அடுத்தவர்களுக்காக வாழும்போதுதான் நமது வாழ்க்கையின் அர்த்தம் நமக்குப் புரிகிறது.

உங்கள் அன்பு சகோதரியாகிய நான் இந்த உயர்ந்த லட்சியத்தோடு தான் எனது பொது வாழ்வுப் பயணத்தை நடத்தி வருகிறேன் என்பதையும் – உங்களுக்காகவே வாழ்ந்து வருகிறேன் என்பதையும் என் அன்புக்குரிய நெல்லை வாழ் மக்களாகிய உங்கள் அனைவருக்கும் தெரிவித்து – இந்த விழா சீரோடும், சிறப்போடும் நடைபெறக் காரணமாக இருந்த அனைவருக்கும் குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம். ●

# மூலிகை சாகுபடியில் ஈரோடு மாவட்டம்

ஈரோடு மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறையில் குறைவாகத் தண்ணீர் தேவைப்படும் பயிர்களை குறிப்பாக மூலிகைப் பயிர்களை மாவட்டம் முழுவதும் விவசாயிகளிடம் அறிமுகப்படுத்துவதில் முனைப்பாக செயல்படுத்துகின்றனர்.

இம்மாவட்டத்தில் தாராபுரம், மூலனூர் பகுதிகளில் 315 எக்டர் பரப்பில் மூலிகைச் செடிகள் பயிர் செய்யப் பட்டுள்ளன. குறிப்பாக கண்வள்ளிக்கிழங்கு என்ற மூலிகைப்பயிர் தாராபுரம் பகுதியில் அதிக அளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த மூலிகை தொன்றுதொட்டே இந்திய மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு ஏற்ற நல்ல செம்மண் தாராபுரம் பகுதியில் இருப்பதால் இங்கு அதிக அளவு பயிரிடப்படுகிறது. அதேபோன்று பரம்ரோசா என்ற மூலிகைப் பயிர் பவானி, அரச்சலூர், காங்கேயம் பகுதிகளில் 20 எக்டர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டுள்ளது. அம்மாபேட்டை, பாசூர் பகுதிகளில் அஸ்வகிந்தா, கீழாநல்லி போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

25 எக்டர் பரப்பில் ஜாதிக்காய் பயிர் செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 534 எக்டர் பரப்பில் முருங்கை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் தாராபுரம் மூலனூர் பகுதியில் மூலிகைப் பயிர் செய்வதற்குரிய சூழ்நிலை உள்ளதால், அப்பகுதி விவசாயிகள் அதிக அளவில் மூலிகைப் பயிர் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தில் மூலிகைத் தாவரங்களான தூதுவளை, செம்பருத்தி, நெல்லி போன்ற நூற்றுக்கணக்கான தாவரங்கள் தற்போது விவசாயிகளுக்கு இலாபகரமான விவசாயமாக அமைந்துள்ளது. குறிப்பாக குறைவான தண்ணீர் வசதிக்கு இவை ஏற்றவை என்பதால், விவசாயிகள் அதிக அளவில் மூலிகைப் பயிர் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

மூலிகைச் சாகுபடி விவசாயிகளுக்கு பல்வேறு தொழில்நுட்ப உதவிகளையும், வேளாண் ஆலோசனைகளையும் வேளாண்மைத்துறை செய்துவருகிறது. மூலிகை மருத்துவ நிறுவனங்கள் இந்த விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சிறந்த விலையைப் பெற்றுத் தருவதும் ஈரோடு மாவட்டத்தில் விவசாயம் செழிப்படைய ஒரு வழிகாட்டுதலாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

**– எம்.ஆர். லிங்கம்**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*ஈரோடு மாவட்டம்.*

*நாகப்பட்டினம் மாவட்டம், பிரதாபராமபுரம் ஊராட்சியில் தேசிய வேளாண்மை தொழில்நுட்பக் கழகத்தினர், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து ரூ.40 ஆயிரம் செலவில் பரீட்சார்த்த அடிப்படையில் நன்னீர் நவீன உறை கிணறு அமைக்கப்பட்டுள்ளது, இதன் துவக்கவிழாவில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. இரா. ஜீவானந்தம் அவர்கள் பேசும்போது,*

*"தற்போது துவக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் கடலோர வயல்களில் உள்ள நிலத்தடி நீரில் உப்பு நீருக்கு மேலாக உள்ள நன்னீரை மட்டும் பிரித்தெடுத்து நவீன உறை கிணற்றின் மூலம் தண்ணீரை பாசனத்திற்குப் பயன்படுத்திட இயலும். இத்தொழில்நுட்பத்தின் மூலம் கடலோரப் பகுதிகளில் பாசன நீர்த் தேவையினை சமாளித்திட இயலும். வேளாண்மை பெருமக்கள் வேளாண் உற்பத்தியில் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தெளிப்பு நீர்ப் பாசனம் மற்றும் சொட்டு நீர்ப் பாசன முறையைப் பின்பற்றினாலே பாதியளவு தண்ணீரை சேமித்திட முடியும்.*

*குறைந்த முதலீடு, நிறைவான இலாபம், அதிக வேலைவாய்ப்பு ஆகியவற்றின் மூலம், வறுமையினை ஒழித்து, தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிட முடியும்' என கூறினார்.*

## நாகப்பட்டினம் மாவட்டத்தில்

# நன்னீர் நவீன உறை கிணறு

*கடலோரப் பகுதிகளில் 15 அடி ஆழத்தில் நன்னீர் உள்ளது. இத் தண்ணீரை நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாசனத்திற்கு பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன்படி உறை கிணற்றின் இருபுறங்களிலும் 40 அடி நீளத்திற்கு ஓட்டைகளுடன் கூடிய குழாயினை நிலத்தில் பதித்து அதன் மூலம் பெறப்படும் நீரை உறை கிணற்றில் சேகரித்து பாசனத்திற்கு எளிதாக மோட்டார் மூலம் நீரை இறைத்து பயன்படுத்தலாம். இத்தொழில் நுட்பத்தைக் கொண்டு அமைக்கப்படும் உறை கிணறுகளின் வாயிலாக விவசாயிகள் வருடம் முழுவதும் சாகுபடி செய்யலாம். காய்கறிகள், மலர்ச் செடிகள், பயிறு வகைகள் ஆகியவற்றையும் பயிரிடலாம்.*

**– க. பேரின்பநாயகம்**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*நாகப்பட்டினம்*



# உதவிகளை வழங்குவதில் என்றைக்கும் முன்னணியில் உள்ளது எங்கள் அரசு

தமிழகத்தின் கடைக்கோடியாகவும், இந்தியத் துணைக் கண்டத்தின் கடைக்கோடியாகவும், ஒருங்கே விளங்குகின்ற கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று என் அன்புக்குரிய உங்களை எல்லாம் கண்டு எனது கருத்துக்கள் சிலவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ளவும், 154 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள, திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, அடிக்கற்கள் நாட்டி நலத் திட்ட உதவிகளை வழங்கவும், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த அருமையான வாய்ப்பு எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

முக்கடலும் சங்கமிக்கும் புண்ணிய பூமி, கன்னியாகுமரி. சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த குமரிக் கண்டத்தை கடல் கொண்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவார்கள். எஞ்சியுள்ள குமரிப் பகுதியை கடல் கொள்ளாதிருக்க குமரி அன்னை தவக்கோலத்தில் இருக்கிறாள் என்பதை "நீலத்திரைக் கடல் ஓரத்திலே நித்தம் தவம் செய்யும் குமரி" என அழகுறப் பாடினார் மகாகவி பாரதியார். அந்த அன்னையின் திருப்பெயரால் அழைக்கப்படுகின்ற மாவட்டம் குமரி மாவட்டம். இந்த மாவட்டம், பாண்டியர், சோழர், வேணாடு அரசுகளின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது என்பதும் பின்னர் திருவிதாங்கூர் அரசின் கீழ் கல்குளம், விளவங்கோடு, அகஸ்தீஸ்வரம், தோவாளை, ஆகிய நான்கு




தாலுக்காக்களும் தென் திருவிதாங்கூர் பகுதியாகத் திகழ்ந்தன என்பதும் வரலாறு. நாஞ்சில் நாடு, எட நாடு என்ற பெயர்களும் இப்பகுதிகளுக்கு உண்டு என்று நாம் அறிகிறோம்.

மொழியால், பண்பாட்டால், தமிழர்களாக வாழ்ந்து வந்த நாஞ்சில் நாடு மற்றும் எடநாட்டு மக்கள் தாய்த் தமிழகத்தோடு இணையப் போராடினர். மார்ஷல் நேசமணி, நத்தேனியல் போன்ற தியாகச் செம்மல்களின் அரும் போராட்டத்தால் 1956 நவம்பர் 1–ஆம் நாள் நாஞ்சில் நாடு "கன்னியாகுமரி மாவட்டம்" என்ற பெயருடன் தாய்த் தமிழகத்துடன் இணைந்தது என்பதை இன்று நினைத்துப் பார்க்கிறோம்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15–3–2003 அன்று கன்னியாகுமரி மாவட்ட அரசு விழாவில் ஆற்றிய உரை**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு வகை நிலங்களையும் தன்னகத்தே கொண்ட இயற்கை அன்னையின் எழில்மிகு மாவட்டம் குமரி மாவட்டம்! மக்களோ உழைப்பால் உயர்ந்தவர்கள்!

சதாவதானி செய்குத்தம்பி பாவலர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பொதுவுடைமை வீரர் ஜீவா, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் ஆகியோர் இம்மாவட்டம் ஈன்றெடுத்த தவப் புதல்வர்கள்.

இங்கு மூன்று கடல்கள் மட்டுமல்ல மூன்று மதங்களும் சங்கமிக்கின்றன. மும்மதங்களைச் சார்ந்த புராதன மிக்க வழிபாட்டுத் தலங்களும் இங்கு சிறப்புடன் விளங்குகின்றன. கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில், மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில், கொல்லங்கோடு பகவதி அம்மன் கோவில், சுசீந்திரம் தாணுமாலயப் பெருமாள் கோவில், கேரளபுரம் அதிசய விநாயகர் கோவில், புகழ் பெற்ற 12 சிவாலயங்கள், பறக்கை மதுசூதனப் பெருமாள் கோவில், பத்மநாபபுரம் ராமசுவாமி குமாரகோவில், மருங்கூர், தோவாளை, வெள்ளிமலை முருகன் கோவில்கள் என எண்ணற்ற திருத்தலங்களால் ஆன்மீக பூமியாக விளங்குவது குமரி மாவட்டம்.

கோட்டாறு புனித சவேரியாரின் வருகை நினைவாக கட்டப்பட்ட சவேரியார் கோவில், கன்னியாகுமரி அலங்கார உபகார அன்னை கோவில் கிரேக்க கட்டடக் கலையில் உருவான கற்கோயில், ராஜாவூர் அதிதூதர் புனித மைக்கல் ஆலயம், முட்டம் சகல புனிதர்கள் ஆலயம் ஆகிய பழமை வாய்ந்த கிறிஸ்துவ வழிப்பாட்டுத் தலங்களும் இம்மாவட்டத்துக்குச் சிறப்பு அளிக்கின்றன.

இளங்கடையில் உள்ள பெருநாள் தொழுகை நடத்தும் இடம், மிகப் பழமை வாய்ந்தது என்றும் சித்தர்களில் ஒருவராகக் கருதப்படும் தக்கலை பீர் முகம்மது சமாதி அடைந்த தர்கா, திருவிதாங்கோடு முகமது சாகிப் தர்கா, ஆகிய இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்கள் மிகவும் பிரபலமானவை என்பதை அறிகிறோம்.

சர்வதேச சுற்றுலாத் தலமான கன்னியாகுமரி முக்கடல் சங்கமம், சுவாமி விவேகானந்தர் மண்டபம், திற்பரப்பு அருவி, உலக்கை அருவி, பத்மனாபபுரம் அரண்மனை, மாத்தூர் தொட்டிபாலம் என மாவட்டமே சிறந்த சுற்றுலாத் தலமாகத் திகழ்கிறது. 1684 சதுர கிலோ மீட்டர் பரப்பு அளவைக் கொண்ட இம்மாவட்டத்தில் மருந்து வாழ் மலை, வேளிமலை, காத்தாடி மலை, கல் மலை, தாடகை மலை, மகேந்திரகிரி மலை என பல மலைகளும் உண்டு. சீதையை மீட்க இலங்கைக்குச் சென்ற அனுமான், மகேந்திரகிரி மலையிலிருந்து புறப்பட்டுச் சென்றதாக நமது இதிகாச புராண வரலாறு கூறுகிறது.

## கல்வியில் முதலிடம்

68 கிலோ மீட்டர் நீளமான அழகிய கடற்கரை அமையப் பெற்றுள்ள இம்மாவட்டத்தில் தேங்காய்பட்டினம், குளச்சல், முட்டம், சங்குத் துறை, சொத்தவிளை, கோவளம், சின்னமுட்டம் ஆகியவை இயற்கை எழில் நிறைந்த கடற்கரைகளாக விளங்குகின்றன.

16,69,763 மக்கள் தொகை கொண்ட இம்மாவட்டத்தில் 13,20,564 பேர் கற்றவர்கள் என்பதும் பெண்கள் கல்விக்கும், முன்னேற்றத்திற்கும் முதலிடம் வழங்குவது இம்மாவட்டத்தின் இயல்பு என்பதும் பெருமிதம் தரும் செய்திகள் ஆகும்.

குமரி மாவட்டம், கல்வி, மகளிர் மேம்பாடு ஆகியவற்றில் முதல் இடத்தில் விளங்குவதைப் போல சுகாதாரத்தைப் பேணுவதிலும் குறிப்பாக, குழந்தைகள், பெண்கள் சுகாதார மேம்பாட்டு பணிகளிலும் முதல் இடம் வகிக்கிறது. ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தது போல் இந்தியாவிலேயே முதல் முறையாக இரு ஊராட்சி ஒன்றியங்கள் – தக்கலை மற்றும் மேல்புரம் – முழு சுகாதாரம் பெற்ற ஊராட்சி ஒன்றியங்களாக அறிவிக்கப்பட்டது குமரி மாவட்டத்தில் தான் என்பது பெருமைக்குரியது.

மகளிருக்கு என 65 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள், கட்டி முடிக்கப்பட்டு, அவற்றைப் பராமரிக்கும் பணி மகளிர் குழுக்களிடமே ஒப்படைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குழந்தைகளின் இறப்பு விகிதம் குமரி மாவட்டத்தில் தான் மிகக் குறைவு என்பது பாராட்டத்தக்கது. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டின் போது மாவட்ட ஆட்சித் தலைவரின் கோரிக்கையை ஏற்று, மகளிருக்குத் தேவையான சுகாதார வளாகங்களைக் கட்டி முடித்துவிட்டதால் ஆடவர்களுக்கான சுகாதார வளாகம் கட்டும் திட்டத்தினை செயல்படுத்த நான் சிறப்பு ஒப்புதல் அளித்து அந்த வகையில் இந்த மாவட்டத்தை முன்னோடி மாவட்டமாக அறிவித்தேன் என்பதையும் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

## முழு சுகாதாரம்

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு சென்னையில் நடைபெற்ற போது ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களுக்கான சுகாதார வளாகங்கள் கட்டுவதை முடுக்கிவிட வேண்டும். விரைந்து அந்த திட்டத்தை செயல்படுத்தி முடிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நான் அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தேன். அப்போது கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு வித்தியாசமான கோரிக்கையை வைத்தார். ஆண்களுக்கான சுகாதார வளாகங்களை கட்ட வேண்டுமென்று கேட்டார். நாங்கள் பெண்களுக்காகத் தானே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நீங்கள் என்ன புதிதாக ஒரு கோரிக்கையை வைக்கிறீர்களே என்று கேட்டேன். அப்போது அவர் சொன்னார், எங்கள் மாவட்டத்தில் மகளிருக்கு கட்ட வேண்டிய சுகாதார வளாகங்களைக் கட்டி முடித்துவிட்டோம். இனிமேல் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை. தேவையைப் பூர்த்தி செய்து



விட்டோம். இதைப் பார்த்து, இந்த மாவட்டத்தில் இருக்கின்ற ஆடவர் எல்லாம், ஆண்கள் எல்லாம், எங்களுக்கும் இந்த மாதிரி கட்டித் தாருங்கள் என்று கேட்கிறார்கள். எனவே, செய்யலாமா? என்றார். இந்தக் கோரிக்கை எனக்கு மகிழ்ச்சி அளித்தது. ஆகவே, விநோதமான இந்தக் கோரிக்கையை ஏற்று, முழு சுகாதாரம் பெற்ற மாவட்டமாக கன்னியாகுமரி மாவட்டத்தை அறிவித்து, முதன்முதலாக இந்தியாவிலேயே ஆண்களுக்கான சுகாதார வளாகங்கள் இங்கே கட்டலாம் என்று அனுமதி அளித்திருக்கிறேன் என்பதைப் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மையே இம்மாவட்டத்தின் பிரதானத் தொழில். நெற்பயிரே முக்கியமான உணவுப் பயிர். 28,584 ஏக்கரில் நெல் பயிரும், 8,179 ஏக்கரில் மரவள்ளிக் கிழங்கும் பயிரிடப்படுகின்றன. வாசனைப் பயிரான கிராம்பு 518 ஏக்கரிலும், ரப்பர் 18,442 ஏக்கரிலும் சாகுபடி செய்யப்பட்டு, கிராம்பு, ரப்பர் உற்பத்தியில், இம்மாவட்டம் தமிழ் நாட்டிலேயே முதல் இடத்தில் உள்ளது என்பதும் மகிழ்ச்சியுடன் குறிப்பிடப்பட வேண்டிய செய்தி ஆகும்.

சீரோடும், சிறப்போடும் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு எனது அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய உங்கள் அனைவரையும் காண்பதிலும் உங்களுடன் எனது எண்ணங்களை பகிர்ந்து கொள்வதிலும் 154 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை திறந்து வைத்து புதிய பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டி, நலத் திட்ட உதவிகளை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.



பெண்கள் சொந்தக் கால்களில் நிற்க வேண்டும் என்றால், அதற்கு இரண்டு தேவை. ஒன்று கல்வி, அடுத்தது பொருளாதார ரீதியாக நீங்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும். பொருளாதார ரீதியாக நீங்கள் சக்தி பெற வேண்டும். தனித்து நிற்க வேண்டும். அதை, கன்னியாகுமரி மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருவதைக் கண்டு நான் பாராட்டுகிறேன். எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை மகளிரும், சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக எனது அன்புக்குரிய தாய்மார்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். இதுவரை தமிழ்நாட்டில் இருக்கின்ற பெண்கள் சுய உதவிக் குழுக்களில் சேரவில்லை என்றால், உடனே சேர வேண்டும் என்று அவர்களை இந்த நேரத்தில் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

## நீர்த்தேக்கத் தொட்டிகள்

கன்னியாகுமரி மாவட்ட பெருமக்களாகிய நீங்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் இன்றைய தினம் 154 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்புடைய திட்டப் பணிகளை உங்களுக்காக கொண்டு வந்துள்ளேன். முடிவுற்ற பணிகளைப் பொறுத்தவரையில் 72 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பில் 3,249 பணிகளைத் திறந்துவைத்துள்ளேன். அவற்றில் குறிப்பாக சில முக்கியத் திட்டப் பணிகளை மட்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் 6 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பில் தனி மின்விசை இறைப்பான் திட்டத்தின் மூலம் 160 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி – ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் சிறு மின் விசை இறைப்பான் திட்டத்தின் கீழ் 200 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி – 90 இலட்சம் ரூபாய் மதிப்பில் சிறு மின் விசை இறைப்பான் திட்டத்தின் கீழ் 150 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு, குடிநீர் வசதி, போன்ற கிராம குடிநீர் திட்டப் பணிகளையும், 2 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பில், தாழக்குடி, புதுக்கடை, ஆரல்வாய்மொழி ஆகிய பேரூராட்சிகளில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளையும் இன்று நான் திறந்து வைத்துள்ளேன்.

பொதுப்பணித்துறை நீர் ஆதாரக் கோட்டத்தின் கீழ் 15 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பில் "ஹட்கோ" நிறுவன நிதி உதவியுடன் வள்ள விளை, ரவிபுத்தன் துறை, சின்னத் துறை, புத்தன் துறை, பெரிய விளை, பள்ளம் துறை, வட்டக்கோட்டை, மேல்மிடாலம், கீழ்மிடாலம், இனயம், முள்ளூர் துறை, தூத்தூர், பூத்துறை, கீழ்மணக்குடி, சின்னமுட்டம் ஆகிய 15 கடலோர கிராமங்களில், தடுப்புச் சுவர் கட்டுதல், 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பழையாற்றின் குறுக்கே, செட்டித் தோப்பு அணைக்கட்டு, திருவிதாங்கோடு மற்றும் பத்மனாபபுரம் கால்வாயில் மறு புனரமைப்பு செய்தல், பொதுப்பணித் துறை, கட்டடப்

பிரிவின் கீழ், 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கன்னியாகுமரியில் ஒய்வு விடுதி கட்டுதல், தோவாளையில் ஆய்வு மாளிகை கட்டுதல், ஆரல்வாய்மொழி மற்றும் குறும்பனையில், நூலகக் கட்டடம் கட்டுதல், போன்ற பணிகள் இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இது மட்டுமின்றி, தீயணைப்புத் துறையின் கீழ், 18 இலட்சம் ரூபாய் மதிப்பில் கன்னியாகுமரியில் தீயணைப்பு நிலையம் கட்டுதல், பதிவுத் துறையின் கீழ், 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் அருமனையில் சார்பதிவாளர் அலுவலகம் கட்டுதல், நெடுஞ்சாலைத் துறையின் கீழ், 13 இலட்சம் ரூபாய் செலவில், ஆரல்வாய்மொழி – நாகர்கோவில், ராஜாக்கமங்கலம் – குளச்சல் சாலைகளில் சிறு பாலங்களை அகலப்படுத்துதல், 30 இலட்சம் ரூபாய் மதிப்பில், களியல் – ஆலஞ்சோலை சாலையில், உள்ள பாலத்தை அகலப்படுத்துதல், 15 இலட்சம் ரூபாய் மதிப்பில், மகாராஜபுரம் சாலையில் உள்ள சிறு பாலத்தை புதுப்பித்தல், கிராமச் சாலைகள் துறையின் கீழ், 5 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பில், இம்மாவட்டத்தில் உள்ள 21 இடங்களில் சாலை மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றை திறந்து வைத்ததில் நான் மிக்க மன நிறைவு அடைகிறேன்.

## புதிய பாலங்கள்

நெடுஞ்சாலை திட்டக் கோட்டம் II–ன் சார்பில் 8 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பில் பழைய ஆற்றின் குறுக்கே கீழ் மணக்குடி மற்றும் மேல மணக்குடியை இணைக்கும் புதிய பாலம் கட்டுதல், 2 கோடி ரூபாய் மதிப்பில், இரணியல், ராஜமங்கலம் சாலையில், புதிய பாலம் கட்டுதல், தேசிய நெடுஞ்சாலை கோட்டத்தின் கீழ் 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பில், பழுதடைந்த சாலைகளை சீரமைத்தல், மருத்துவத் துறையின் கீழ், 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் குளச்சல் அரசு மருத்துவமனையில் மகப்பேறு அறை கட்டுதல், அருமனை மருத்துவமனையில், அறுவை சிகிச்சை அறை கட்டுதல், கருங்கல் அரசு மருத்துவமனையில், 12 படுக்கைகள் கொண்ட புதிய வார்டு கட்டுதல், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறையின் கீழ், 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் அகஸ்தீஸ்வரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கைகள் கொண்ட வார்டு மற்றும் X-ray பிரிவு கட்டடம் கட்டுதல் – 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பில் இம்மாவட்டத்தில் 25 இடங்களில் துணை சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்டுதல், போன்ற பணிகளை இந்த இனிய விழாவிலே திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கல்வித் துறையின் கீழ் 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் 6 பள்ளிகளில் வகுப்பறை, சத்துணவு மையம் மற்றும் விளையாட்டு மைதானம் அமைத்தல், 61 இலட்சம் ரூபாய் மதிப்பில் மீன் வளத் துறையின் கீழ் 100 வீடுகள் கட்டுதல், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல், 95 இலட்சம் ரூபாய் மதிப்பில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் கீழ் பூதப்பாண்டி, தக்கலை மற்றும் கொல்லங்கோட்டில் பிற்படுத்தப்பட்ட மாணவியருக்கான விடுதிக் கட்டடம் கட்டுதல், ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் 6 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பில் 1,183 பணிகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றை இந்த விழாவிலே திறந்து வைத்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

## ஆட்சிமொழியாக - தமிழ்

மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. பொன். ராதாகிருஷ்ணன் பேசுகின்ற போது இந்த மாவட்டத்தின் சார்பாக பல கோரிக்கைகளை இங்கே தெரிவித்தார். அவற்றையெல்லாம் கனிவுடன் பரிசீலிக்கிறேன் என்பதை தெரிவிக்கும் அதே நேரத்தில், நானும் அவருக்கு ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். மத்திய அமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது இந்த மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் எல்லாம், இந்த மாவட்டம் மட்டும் அல்ல, ஏன், தமிழகத்தில் இருக்கின்ற மாணவர்கள் எல்லாம் இந்தி மொழியை விருப்பு மொழியாக படிக்க விரும்புகிறார்கள். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இந்த நேரத்தில் மத்திய அமைச்சர் அவர்களுக்கு ஒன்றை நினைவுப்படுத்த விரும்புகின்றேன். 1998ஆம் ஆண்டில் பிஜேபி தலைமையில், எங்கள் ஆதரவோடு மத்தியில் கூட்டணி அரசு அமைந்த போது அதில் நாங்களும் அங்கத்தினர்களாக இருந்தோம். எங்களுக்கும் மத்தியிலே அமைச்சர்கள் இருந்தார்கள். அப்போது மத்திய அமைச்சரவை பதவி ஏற்பதற்கு முன்பாக தேசிய செயல் திட்டம் – National Agenda for Governance என்று ஒன்று டில்லியிலே வகுக்கப்பட்டது. முக்கியத் தலைவர்களெல்லாம், அந்தக் கூட்டணியில் இடம்பெற்றிருந்த தலைவர்கள் எல்லாம், அதில் பங்கேற்றார்கள். நானும் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றேன். அப்போது அந்த தேசிய செயல் கூட்டத்திலேயே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின், 8ஆவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள தமிழ் உள்ளிட்ட 18 தேசிய மொழிகளையும் மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக ஆக்குவதின் சாத்திய கூறுகளை ஆராய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்பதை நான்தான் வலியுறுத்தி சேர்க்கச் செய்தேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அதை ஏற்றுக் கொண்டு தமிழ் உள்ளிட்ட 18 தேசிய மொழிகளையும், இந்திய நாட்டின் – மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக ஆக்குவதன் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக ஒரு குழு அமைக்கப்படும் என்பதை அந்த திட்டத்தில் சேர்த்தார்கள். அந்தக் குழு இன்று வரை அமைக்கப்படவில்லை. ஆகவே, மத்திய அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர், தமிழின் பெருமையை நன்றாக அறிந்தவர். தமிழுக்காக இரண்டு கோரிக்கைகளை மத்திய அரசுக்கு வைத்திருக்கிறோம். ஒன்று, தமிழ் மொழியை உயர் தனிச்செம்மொழியாக அறிவிக்க வேண்டும் – Classical Language என்று அறிவிக்க வேண்டும். இரண்டாவது கோரிக்கை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள தமிழ் உள்ளிட்ட 18 தேசிய மொழிகளையும் மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை இரண்டாவது கோரிக்கை. மலேசிய நாட்டில் கூட தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிறது. இந்தியாவில் இருக்கக் கூடாதா? வேறுஅயல்நாடுகளில் தமிழ் ஆட்சிமொழியாக இருக்கின்ற போது, இந்தியாவில் இருக்கக் கூடாதா? ஆகவே, மத்திய அமைச்சருக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், மத்தியிலே நீங்கள் தமிழை ஆட்சி மொழியாக அறிவியுங்கள். தமிழ்நாட்டில் இந்தியை விருப்பு மொழியாக பயிற்சி செய்வதற்கு, கற்றுக் கொடுப்பதற்கு, நான் பரிசீலனை செய்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் சொல்கிறேன். மத்திய அரசின் ஆட்சி மொழியாக தமிழை நீங்கள் அறிவிக்க வேண்டும், அப்படி நீங்கள் அறிவித்தால் தமிழகத்தில் இந்தியை விருப்பு மொழியாக பள்ளிக்கூடங்களில் கற்றுத் தருவதை பற்றி நான் பரிசீலிக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## உழைப்பின் உயர்வு

நாம் உழைத்து அந்த உழைப்பிலே கிடைத்த பணத்தைக் கொண்டு ஒரு பொருளை வாங்கினால்தான் அதனுடைய அருமை நமக்கு நன்றாகத் தெரியும். முன்னோர் சொத்து என்கிற போது நாம் அவ்வளவாக அதற்கு மரியாதை தருவதில்லை.

நம்முடைய உழைப்பால் நாம் உருவாக்கும் எந்தச் சொத்துக்கும் உரிய மதிப்பை நாம் அளிக்கத் தவறுவதே இல்லை. எனவே, நம்முடைய முன்னோருடைய சொத்து நமக்கு எவ்வளவு கிடைத்தாலும் நம்முடைய சொந்த உழைப்பின் பயனாக நாம் உருவாக்கும் சொத்தின் மதிப்பு நமக்கு மிக அதிகமானதாகவே தெரியும். எனவே, நமது வெற்றி, வியர்வையைச் சிந்தி உழைப்பதில்தான் இருக்கிறது.

ஆகவே, உழைப்புக்கு என்றும் உயர்வு உண்டு என்பதைச் சொல்லி பிறர் உழைப்பில் கிடைக்கும் பொருளை அனுபவிப்பதில் உள்ள இன்பத்தை விட சொந்த உழைப்பின் உயர்வில்தான் உண்மையான மன நிறைவு கிடைக்கும் என்பதை உணர்ந்து நம்பிக்கையோடு கடமைகளை நிறைவேற்றுங்கள்.

வெற்றி உங்களுக்கே !

## நீர் சுத்திகரிப்பு நிலையம்

இன்றைய தினம் எழுச்சி மிகுந்த இவ்விழாவிலே மொத்தம் 76 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பில் இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைய உள்ள 1,503 திட்டப் பணிகளுக்கு அடிக்கற்களை நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 8 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில் கன்னியாகுமரி மற்றும் சுசீந்திரம் பகுதிகளுக்கு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், 2 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பில் திருவிதாங்கோடு பேரூராட்சி பகுதியில், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் தரை மட்ட நீர்த்தேக்க தொட்டி கட்டுதல், 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பில் திருவட்டார் பேரூராட்சி பகுதிக்கு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல், 4 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பில் பூதப்பாண்டி பேரூராட்சி பகுதி மற்றும் மண்டைக்காடு, வெள்ளிமலை, தேரூர், ஆற்றூர் பேரூராட்சிகளில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்தல் போன்ற பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டியதில் நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

பொதுப்பணித் துறை நீர் ஆதாரக் கோட்டத்தின் கீழ் 21 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பெரியகாடு, குறும்பனை, சைமன் காலனி, இனையம், வாணியக்குடி, கோவளம், ஆரோக்கியபுரம் ஆகிய 7 கடலோர கிராமங்களில் தூண்டில் வளைவு, அதாவது, மரத்தாலான கடலரிப்பு தடுப்பு அரண் (Groyne – a break water built to check land erosion) அமைத்தல் – நெடுஞ்சாலைத் துறையின் கீழ் 5 கோடி ரூபாய் மதிப்பில், நாகர்கோவில் நெடுஞ்சாலை கோட்டத்திற்கு உட்பட்ட "சாலை நிதி உதவி திட்டத்தில்" திங்கள் சந்தை, புதுக்கடை சாலை ஆகியவற்றை பழுது பார்த்தல் – 56 இலட்சம் ரூபாய் மதிப்பில் தேவக்குளம், செட்டிக்குளம் சாலை – குலசேகரபுரம், மருங்கூர் சாலை மற்றும் சுசீந்திரம், வெள்ளமடம் சாலை ஆகிய இடங்களில் பாலங்களை புதுப்பித்தல் – நெடுஞ்சாலை கிராமச் சாலை கோட்டத்தின் கீழ் 9 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் 23 இடங்களில் சாலைகள் மற்றும் பாலங்களை மேம்பாடு செய்தல் – 5 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பில்




வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 1–1–2001 முதல் 31–12–2001 வரையுள்ள காலத்தில் பதிவைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு அரசாணை நிலை எண்.51, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை (எஸ்.2) துறை, நாள் : 28–4–2003இன் படி சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி மேற்படி காலத்திற்குள் புதுப்பிக்கத் தவறியவர்கள் 27–7–2003க்குள் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்துக்கு வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டையின் நகலுடன் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமோ மனு செய்து தங்களது பதிவினை புதுப்பித்துக் கொள்ளலாம்.

தேங்கம்புதூரில் புதிய துணை மின் நிலையம் அமைத்தல் – மருத்துவத் துறையின் கீழ் நாகர்கோவில், ஆசாரிப்பள்ளம், மருத்துவக் கல்லூரியில், 5 கோடி ரூபாய் மதிப்பில், 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக் கட்டடம் கூட்டுதல், 46 இலட்சம் ரூபாய் மதிப்பில், பத்மநாபபுரம் அரசு மருத்துவமனையில், விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடம் கட்டுதல், போன்ற பணிகளுக்கு, இன்று என்னால் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

3 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் கல்வித் துறையின் கீழ் 12 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் கட்டடம் கட்டுதல் – 72 இலட்சம் ரூபாய் மதிப்பில் மீன் வளத் துறையின் கீழ், 16 இடங்களில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டுதல் கிணறுகள் அமைத்தல் – 1 கோடி ரூபாய் மதிப்பில் சுற்றுலாத் துறையின் கீழ், வரவேற்பு மையம் கட்டுதல், குடிநீர் வசதி செய்தல் மற்றும் திருவள்ளுவர் சிலையில் உள் கட்டமைப்பு பணிகள் செய்தல் – 63 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஆதிதிராவிடர் மாணவ மாணவியர்களுக்கு தக்கலை மற்றும் பூதப்பாண்டியில், தங்கும் விடுதிகள் கட்டுதல் போன்ற பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டியதில் நான் மிக்க மனநிறைவு அடைகின்றேன்.

## பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

அந்த வகையில், சமுதாயத்தில் நலிந்தோருக்கும் ஆதரவற்றோருக்கும், மகளிருக்கும், அடித்தளத்து பிரிவினர்களுக்கும், தமது வாழ்க்கையில் முன்னேற உரிய உதவிகளை வழங்குவதில் எங்கள் அரசு என்றைக்கும் முன்னணியில் உள்ளது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவிலே 18 அரசுத் துறைகள் மூலம் 11,313 பயனாளிகளுக்கு மொத்தம் 5 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்படுகின்றன. அவை அனைத்தையும் உங்களுக்கு எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தினால் வழங்கப்படுகின்ற உதவிகளில் முக்கியமான ஒரு சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

முதலில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் 4 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம் குடியிருப்பு கழிவறை கட்டுதல் கடன் மற்றும் மானியத் திட்டம் – சமூக நலத் துறையின் கீழ், 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், கலப்புத் திருமணத்திற்கு நிதி உதவி, இலவச தையல் இயந்திரம் வழங்குதல், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் உதவித் திட்டம், 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல் மற்றும் மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்குதல் தாட்கோ நிறுவனத்தின் கீழ், 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் நெற் கதிர் அடிக்கும் இயந்திரம், உழவு மாடு மற்றும் கறவை மாடு வழங்குதல், வருவாய்த் துறையின் கீழ் 18 இலட்சம் ரூபாய் மதிப்பில், இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் ஓய்வு ஊதியம், விதவைகளுக்கு உதவித் தொகை, வேளாண்மை துறையின் கீழ் 10 இலட்சம் ரூபாய் மதிப்பில், விவசாயிகளுக்கு Power Tiller, தெளிப்பு நீர்ப்பாசன உபகரணங்கள் ஆகியவைகள் வழங்கப்படுகின்றன. இவை மட்டுமின்றி கல்வித் துறை, ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை, தொழில் வணிகத் துறை, வனத் துறை, மீன் வளத் துறை, ஆகிய பல்வேறு துறைகளின் சார்பாகவும் இந்த இனிய விழாவிலே பல்லாயிரக் கணக்கான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நலத்திட்ட உதவிகள் அனைத்தையும் பயனாளிகள் அனைவருக்கும் நானே எனது கரங்களாலேயே வழங்க விரும்பினாலும் அதற்கு நேரம் போதாது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, இந்த மேடையில் 15 பயனாளிகளுக்கு மட்டும் நலத்திட்ட உதவிகளை நானே வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும், இங்கேயே இப்போதே வழங்கி சிறப்பிப்பார்கள், என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உதவிகளை நீங்கள் உங்கள் வாழ்க்கைக்கு ஆதாரமாக பயன்படுத்திக் கொண்டு நீங்கள் செய்கின்ற தொழில்களில் மென்மேலும் உயர வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

இந்த விழா, சீரோடும் சிறப்போடும் நடைபெறக் காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

• • •

**புற்றுநோய் சில தகவல்கள்**

மனித உடல்களில் செல்களின் தவறான வளர்ச்சிக்கு புற்றுநோய் (Cancer) என்று அறிவியல் கூறுகிறது.
கேன்சர் என்ற லத்தீன் மொழி சொல்லுக்கு "நண்டு" என்று பொருள்.
பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதால் வெளியாகும் "டைஆக்சின்" என்ற நச்சு வாயுவினாலும் புற்றுநோய் உண்டாகிறது.


உங்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்

9 மாத சந்தா செலுத்துவீர்!

10 வது மாத சந்தா இலவசம்

மேலும்

அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

ரூ. 12,500/- மதிப்புள்ள பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!

| மாதச் சந்தா ரூ. 1 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. 2 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 3 | கூடுதல் தொகை (2+3) ரூ. 4 | அரசு தள்ளுபடி ரூ. 5 | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 6 |
|---|---|---|---|---|---|
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | : 24336346 |
| 03. | அங்கயற்கன்னி, | மதுரை | : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | : 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.

Visit us at: www.cooptex.com    Visit us at: www.tn.gov.com



பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை

தமிழரசு
R.N.I.NO.21446/70
RGN.NO.TN/PMG/(CCR)836/03-05 WPP-518

